ஸ்ரீ

உ சிவகணபதயேநம.

பராசரம், ஆசாரகாண்டம்

இரண்டாவது,

அத்தியாயம்.

மாதவீய வுரைமொழி பெயர்ப்பு.

మూ|| అతఃపరంగృహస్థస్య కర్మాచారంకలౌయుగే
కర్మసాధారణంశక్త్యా చాతుర్వర్ణ్యాశ్రమాగతమ్
తంప్రవక్ష్యామ్యహంపూర్వం పరాశరవచోయథా. ||౧||

என்பன. முதலத்தியாயத்துள் வியாசரால் வினவப்பட்ட நான்கு வருணத்தார்க்கும் பொதுச் சிறப்புத்தருமங் களினுள், பொதுத்தருமங்கள் சுருக்கியும் சிறப்புத்தருமங்கள் விரித்துங் கூறப்பட்டன. அங்ஙனம் சுருக்கப்பட்ட பொதுத்தருமம் இவ் விரண்டாவது அத்தியாயத்துள் கூறப்படுகின்றது. அல்லது, முத லத்தியாயத்துள் மறுமைப்பயனுக்கே ஏதுவாகிய தருமங்களே முன்னிட்டுக் கூறப்பட்டன. ஈண்டு இம்மைப்பயனுக்கு ஏது வாயுள்ள தருமத்தினை முன்னிட்டு விரித்துரைக்கப்படுகின்ற தென்பதுமாம். இதனுளித்தலைச் செய்யுள் இவ்வத்தியாயத்துக் கூறப்படுவனவற்றைத் தொகுத்துணர்த்துகின்றன.

(இ-ள்.) அதன் பின்னர், இக்கலியில் இல்லறத்தானுடைய கரும ஒழுக்கங்களையும், நான்குவருணத்திற்கும்ஆச்சிரமங்களால் வந்த பொதுக்கருமங்களையும், முன்னைய கற்பத்துள் பராசனர் கூறினபடியே யானும் ஆற்றலுள்ளமட்டில் கூறுகின்றேன். எ-று. காண்க.

"అతఃపరం" நான்கு வருணத்துப் பொதுத்தருமங்களைச் சுருக்கிக் கூறியபின்னர், அதனையேவிரித்துக் கூறுவதற்கிடனும் எ-று. பலநூல்களை யோதுவதற்கு ஆற்றல் சாலாதமந்தவறி வினைப்பற்றிச் சுருக்கிக் கூறப்படுதலினாலும், ஆற்றல் சான்ற

கூர்த்த வறிவினர்க்கு ஞாபகமாதலில், அவவைப்பற்றி விரிவாகக் கூறுதற்குத் தக்கவிடன் என்பதுமாம். அதனுனே ஆசிரியரும் கூறினர். வருமாறு, "సంక్షేపవిస్తరాభ్యాంహి మందోత్తమధియాంనృణాం। వస్తూఖ్యానమప్యంతఃకరణంతీక్ష్యతే" = பொருள்கள் கூறப்படுவதா மாயினும் சுருக்கவிரிவுகளானன்றே மந்தம் கூர்மை யறி ள்ளவர்களுடைய உள்ளம் திருத்திப்படுகின்றது. எ-று. இ லையேல், மறுமைப்பயனுக்கு எதுவாகிய தருமங்கள் கூறியபின் னர், சந்திரோடன்முதலிய ஆறுகருமங்களையும் மறுமைப்பய னைத்தருவதாகவே கூறப்படுதலின், இம்மைப்பயன் யாதென்ற வினுத்தோற்றியவழி, உழவுமுதலிய தருமங்களைக் கூறுவதற்கு இதுவேதக்கவிடனுகின்றது. என்பதுமாம்.

"గృహస్థస్య" எது இனி, கூறப்படும் உழவு முதலிய தரும ங்களுக்குப் பிரம்மசாரியன், இல்வாழ்வான், வானப்பிரத்தன், சந்நியாசி, இந்நால்வருக்கும் தகுதியில்லை யென்று ஐயப்பட்டு அவ்வுழவுமுதலிய தருமங்கட்குத் தக்க நிலைமையையுவடயவன் யாரொன்புழி, இல்லறத்தான் என்பது பெறக்கூறப்படுகின்றது.

"కేయుగే" = எது, கிருதம், திரேதம், துவாபரயுகங்களில் உழவுமுதலிய தருமங்களை நடத்துவதற்கு வசியனுக்கு மாத்தி ரமே அதிகாரங் கூறப்பட்ட தன்றி ஏனையவெல்லாவருணத்தி னும் உள்ளஇல்வாழ்வார்க்குக் கூறப்பட்டதில்லை. இல்வாழ்வா ராகிய வேதியராதியர்க்கும், கலியுகத்தில் அவ்வதிகார முண் டென்பது குறித்தற்கு அனுவதித்துக் கூறப்பட்டது.

"కర్మాచారం" = எது, கருமம் என்றமொழி உலகத்துள் பொருளின் புடைபெயர்ச்சிக்குப் பொதுவகையானே கூறப்படு கின்றது. ஆசாரம்என்றமொழி, நூல்களால் விதிக்கப்பட்டுள்ள நல்வினைகளின் மாத்திரத்தே கூறப்படுகின்றது. ஆகவே, இவ் வுழவுமுதலியன சென்றயுகங்களிற் கருமமாத்திரையாயும், இக் கலியில் ஆசாரமாயும் இருத்தலின் இது "கருமாசாரம்" என்னப் படுகின்றது. எனவே தொழில்வடிவாகிய வொழுக்கம். எறு. அவ்வாறே பிரமசரியமுதலிய வேறுஆச்சிரமங்களில் கருமமே யாகியும், இல்லறநிலைமையில் ஆசாரமேயாகியும்இருத்தலினுனும் அங்ஙனம் கூறப்பட்டது. என்க. கலியுகத்தில், வேள்விமுதலிய

கருமங்கள் செய்வது அருமையாக விருத்தலினாலும், பிழைப் புக்கு ஏதுவாகஉழவு முதலிய கருமங்களொருதலையாகச் செய்ய வேண்டுதலினாலும் அது ஆசாரமென்றெகூறுவது உடன்பாடா கின்றது.

"చాతుర్వర్ణ్యాశ్రమాచారం" = எது, நான்குவருணத்தாருள்ளும் சிறப்புற்றுள்ளது இல்லறம் ஒன்றுமேயாம். சூத்திரனுக்கும், மணவினை, ஐவகை வேள்விமுதலிய இல்லறதருமம் உள்ளன வன்றோ? அவையனைத்துமேயல்லாமல்மேல் ஆச்சிரமதருமங்களை க்கூறுழி விளங்கக் கூறப்படும்.

"సాధారణం" = எது, அனைவர்க்கும் பொதுவாகிய ஆச் சிரம வொழுக்கத்தினை நடத்தும்பொருட்டு வந்ததா மாதலின் யாவர்க்கும் பொதுவெனக் கூறப்பட்டது.

"పరాశర" = எது, கழிந்த கற்பத்து இருந்த விடயத்தினை யுணர்ந்து கலியுகத்திற்குத் தக்கவாறு பராசரனுர் கூறுகின்ரு ரென்பது கருத்து.

அதனையே விளங்கக் குறிப்பித்தற்கு "పూర్వం" = முன், என்று கூறப்பட்டது.

"వచ్మియథా" = எது, கழிந்தகற்பத்துள் ஆராய்ந்தெடுக்கப் பட்டபொருளினையுடையபராசரவாக்கியம் இக்கலிதருமத்து, உழ வுமுதலிய ஒழுக்கங்களில் செல்லும்படி மரபுவழி வந்ததா மாத லின் அவ்வாறே யானும் கூறுவேன். எ-று. (எனவே, உழவுமுத லிய கருமம் ஆசாரமேயாமோ? அன்ரோ? என்னும் ஐயமுற் றுக் கடாவுதல் வேண்டாவென்னுங் கருத்து.)

"శక్త్యా" = எது, மிகப்பெரியோர் விடயத்து, அடங்கியொ ழுகுமாறு குறிப்பித்தல் வேண்டுமென்னும் சான்ரோர்வழக்கினை மாணுக்கர்க்கு உணர்த்தும் பொருட்டு "ஆற்றலுள்ளவாயிற் கூறுகின்ரும்" எனக் கூறப்பட்டவாறு. எதனிடத்தும் தமது வலியின்மையைக் குறியாதவரும் கலிதருமம் நன்குணர்ந்தவரு மாகிய இப்பராசரனுருக்கு இவ்விடயத்து ஆற்றலின்மை யுண் டாதலில்லையன்ரோ? எ-று. (௧௨)

அந்தணனுக்குரிய கலிதருமம்.

మూ॥ షట్కర్మసహితో విప్రః కృషికర్మచకారయేత్. ॥౨॥

என்பது, எடுத்துக்கொண்டதருமமிதுவெனக்கூறுகின்றது.

(இ-ள்.) ஆறு கருமங்களோடுங்கூடிய வேதியன் உழவுத்தொழிலினையும் செய்வித்தல்வேண்டும். எ-று. காண்க.

"షట్కర్మసహితః" = எது, முதலத்தியாயத்துட் கூறப்பட்ட வேட்டல், வேட்பித்தல், ஓதல், ஓதுவித்தல், கொடுத்தல், ஏற்றல் என்னும் ஆறுகருமங்களும், சந்தி - நீராடல், செபம், வேள்வித்தீ, தேவபூசனை, விருந்தோம்பல், வைசுவதேவம் என்னும் ஆறுகருமங்க ளென்பதுமாம். இவற்றோடுகூடிய வேதியன் ஏவலாகிய சூத்திரரால் உழவுத்தொழில் செய்வித்தல் வேண்டும்.

வேட்பித்தல், ஓதுவித்தல் முதலியகருமம், சீவனத்திற்கு ஏதுவாகவிருத்தலின், உழவு வேறுசெய்வித்தல் எதன்பொருட்டு என்னலாகாது. கலியுகத்தில் சீவனப் பொருட்டு போதுமான பயனைத் தரத்தக்க வேட்பித்தல் முதலியகருமம் அருமையாமாதலின்.

அற்றேல், மனு, మనుః॥ "వైశ్యవృత్త్యాపిజీవంస్తు బ్రాహ్మణఃక్షత్రియోపివా। జీవహింసాప్రదామేషాం కృషింయత్నేనవర్జయేత్। కృషింసాధ్వితిమన్యంతే సావృత్తిస్సద్విగర్హితా। భూమింభూమిశయాంశ్చైవ హంతికాష్ఠ మయోముఖం" வைசியன் தொழிலால் சீவிக்கின்றவேதியனாயினும், வேந்தனாயினும், பிறவுயிர்க்குத் துன்பத்தைத் தரத்தக்க இந்த வுழவுத்தொழிலினைமுயற்சியோடும் விடவேண்டும். சிலர் உழவுத்தொழில் சிறந்ததெனநினைப்பர். ஆயின் அம்முயற்சி பெரியரால் இகழப்பட்டது. ஏனெனில் ; இரும்புமுகத்தினை யுடையமரம் = கலப்பை, நிலத்தினையும் அந்நிலத்துட்கிடக்கும் சிற்றுயிர்களையும் கொல்லுகின்றது. எ-று. என்பதனால் உழவுசெய்வித்தல் அறம் அன்றென்றே தோற்றுவதன்றோ எனின்?

அற்றன்று. என்னை? இம்மனுமொழி தானேதன்கையாற் செய்யலாகாது என்று பொருள்படுவதன்றிச் சூத்திரராற்செய்விப்பதுவமு வென்றுமறுத்தவாறு அல்லவாதலின். இங்ஙனம

ல்லாக் கால் அம்மனுமொழிக்கு முன்னெடு பின்மலைதலென்னும் குற்றந்தங்கு மென்றுணர்க. என்னை? அவரோ அவ்வுழவினைப் பின்னுடம்பட்டுக் கூறுதலின். அதுவருமாறு, మనుః॥ "ఉభాభ్యా మప్యజీవంస్తు కథంస్యాదితిచేద్భవేత్। కృషిగోరక్షమాస్థాయ జీవేద్వైశ్యస్యజీవికాం"= வேட்டல், வேட்பித்தல், இவ்விரண்டாலும் பிழைக்கலாற்ருத வனுயின் அதுவுமாம், உழவு, பசுக்காத்தல் என்னுமிவ்வசிய முயற்சியை யடைந்து, சீவிப்பதாம். எ-று. காண்க.

ஆயின். கூர்மபுராணத்துள்தானே உழவுத்தொழில்செய்ய லாமென்று உடன்பட்டுக் கூறியுள்ளது. வருமாறு, కూర్మపురాణే॥ "స్వయంవాకర్షణంకుర్యా ద్వాణిజ్యంవాకుసీదకం। తేనపాపీయసీవృత్తిః కుసీదాంతాంః వివర్జయేత్"=தானே தன்கையால்நிலத்தையுழுதொழிற் செய்தலு மாம் பண்டமாற்று = கொள்ளல்விற்றலுமாம். வட்டிவாங்கிப் பிழைத்தலோ? மிகக்கொடும்பாவ சீவனமாக விருக்கின்றதுஆத லின் அதனையொழித்தலே வேண்டும். எறு. காண்க. எனின். இவ்வுரைக்கு வட்டிவாங்கிப் பிழைத்தல் பாதகம் என்று கூற வந்ததே கருத்தாவதன்றித்தான் நேரேயுழுது பிழைக்கலாமென் பது கருத்தல்லவாம்.

அதனுனேநாரதர் கூறியவாறு. నారదః॥ "ఆపత్స్వపిచకష్టాసు బ్రాహ్మణస్యనవార్ధుషం" = மிகவருத்தமான வறுமைக்காலத்தும் வேதியன் வட்டியாற் சீவிக்கலாகாது. எறு. காண்க.

ஆயின் பிரகற்பதிதானே யுழவுசெய்யலா மென்றுடன் பட்டுக்கூறினர். బృహస్పతిః॥ "కుసీదకృషివాణిజ్యం ప్రకుర్వీతస్వయంకృతం। ఆపత్కాలేస్వయంకుర్వా న్నైనసాయుజ్యతేద్విజః" = இருபிறப்பாளன் உழு தலைச்செய்தலும், ஆபற்காலத்தில்வட்டிவாங்கலும், பண்டமாற்றி வாணிபஞ்செய்தலுமாகிய வித்தொழில் களைத்தானேசெய்யினும் பாவத்தையடையான். எறு. எனக்கூறியதென்னெனில்? அஃ தொக்கும், செய்வித்தற்கும் ஆளில்லாத சிறுமைப்பட்டவன்தான் நேரே செய்தலுமாமென்றுடம் படலாமன்றே? அக்கருத்தை "ఆపత్కాలే"=ஆபற்காலத்து என்றமொழியே தெரிவிக்கின்றது. எறு. காண்க.

அற்றேல், செய்வித்தலும்ஆபற்காலத்துவேற்றுத்தருமமே யன்றியுரிமைத்தருமமன்று, ஏனெனில். உழவுமுதலியன வைசிய

தருமமாயிருத்தலினானும். வேதியனுக்கு வேட்பித்தல் முதலியனவே முக்கியமான சீவனவழியாக விருக்கின்றதாதலினானும், என்பாயேல்; ஆபத்தின்உயர்வு தாழ்வுகளைப்பற்றி அமைத்துக் கோடல்வேண்டும். எங்ஙனமெனில் ? சிறியதோராபற் காலத்துச் செய்வித்தலே தனக்குரிய தருமமென்றுகொள்க. பெரியதோராபத்து வந்தவழித்தான் நேரேசெய்தலே தனக்குரிய தருமமாம். இல்லையேல் யுகவேறுபாடு பற்றியேனும் அமைத்துக்கொள்க. எங்ஙனமெனில் ? சென்றயுகங்களில் செய்வித்தலே ஆபற்காலத் தருமமாம். அதுவே இக்கலியிற்சிறந்த தருமமாம். என்னை ? கலிதருமநூலில் இதனையே சிறந்ததாகத் தொடங்கிக் கூறுதலின்.

உழவெருத்தின்தொகை.

இனி அவ்வுழவுசெய்வதில் உழவு எருத்தின் தொகையை ஹாரீதர் கூறினர். హారీతః॥ "అష్టాగవంధర్మ్యహలం షడ్గవంజీవితార్థినాం। చతుర్గవంనృశంసానాం ద్విగవంబ్రహ్మఘాతినాం" = எட்டுஎருதுபூட்டிய கலப்பை தருமமானது. சீவனத்தை விரும்பினவர்களுக்கு ஆறுஎருதுகள் பூட்டியதுமாம். கொடியகாதகர்க்குநான்கு எருதுபூட்டிய ஏர். பிரமகத்தி செய்வார்க்கு இரண்டெருது பூண்ட கலப்பையாம். எ-று. காண்க. (ஈண்டு, எருதுமிகுதியாயிருக்கின் உழுதற்றுன்பஞ்சிறுகி யிருக்குமென்பது கருத்து.) அவற்றுள், முதற்கூறிய விரண்டினுக்கும் ஆற்றல் சாலாமையின் விடப்பட்டுள்ளது. பின்னர்க்கூறிய விருவகையுள் முதலது முக்கிய கற்பமாயும், இரண்டாவது அநுகற்பமாயும் உள்ளன. (உ)

அவ்வெருதுகளில் விலக்கு.

మూ॥ క్షుధితంతృషితంశ్రాంతం బలీవర్దంనయోజయేత్
హీనాఙ్గంవ్యాధితంక్లీబం వృషంవిప్రోనవాహయేత్. ॥౨॥

என்பது. விலக்கத்தக்க வெருத்து வேறுபாடு கூறுகின்றது.

(இ-ள்.) பசித்தது, நீர்விடாய்ப் பட்டது, அலுத்ததுமாகிய எருதினை ஏரிற்பூட்டுவிக்க லாகாது. குறைந்த வுறுப்புக் களையுடையதனையும், நோயுள்ளதனையும், ஆண்டன்மையற்றதனையும் வேதியன் சுமப்பிக்கலாகாது. எ-று.

பசிதாகமுதலிய வுண்டாயிருப்பதனைக்குறிகளால் ஆராய்ந் தறியவேண்டுவது. குறைந்தவுறுப்பாவது முக்கியமாய்க் காலில் குறைவுபாடும், இரண்டுகெண்களிற்குறைவுபாடும், பிடரிற்குறைவு பாடுமோம். ஆண்டன்மை யற்றதெனவே வலுவற்ற தென்பது கருத்து. (௬)

உழவுக்குத்தக்கன.

మూ॥ స్థిరాంగంనీరుజంతృప్తం సునర్దంషణ్ఢవర్జితం
వాహయేద్దివసస్యార్థం పశ్చాత్స్నానంసమాచరేత్. ॥౪॥

என்பது. உழவுக்குத்தக்க எருத்தினை விதிக்கின்றது.

(இ-ள்). சோர்வற்ற வுறுப்புக்களை யுடையதும், நோயற்ற தும், திருத்தியடைந்துள்ளதும், கொழுத்து கர்ச்சிக்கின்றதும், ஆண்டன்மையுடையதுமாகிய வெருத்தினை உச்சிப்போதுவரையி ல்சுமக்கச்செய்து தொழில்நடத்தவேண்டுவது. பின்னர் அதனைக் குளிப்பாட்ட வேண்டுவது. எ-று.

"స్థిరాంగః" = எது, கால்முதலியன ஆற்றல் குறையாதது. "నీరుజః" எது, நோயற்றது. "తృప్తః" எது, பசிதாகத்தா லிளைப் பில்லாதது. "సునర్దః" எது, அங்கியரை வருத்தத்தக்க செருக் கினையுடையது. எனவே, துன்பமற்றது. "షణ్ఢవర్జితః" எது, நபுஞ்ச கத் தன்மையற்றது. எனவே ஆண்டன்மை யுடையது. வலு வுள்ளதென்பது கருத்து. "దివసస్యార్థం" எது, இரண்டியாமம். "పశ్చాత్" எது, தொழில்முடிந்தபின். "స్నానంసమాచరేత్" எது, நீராட்டவேண்டுவது. எனவே, குளிப்பாட்ட வேண்டுமென்பது கருத்து.

ஹாரீதரும் கூறினர். హారీతః॥ "స్నాపయిత్వానడుహాలం కృత్యబ్రా హ్మణాన్భోజయేత్" = எருதுகளைக் குளிப்பாட்டி, அணிசெய்து, வே தியரை யுண்பிக்கவேண்டும். எ-று. காண்க.

உழவுஎருதினை நடத்துமுறை.

எருதினைநடத்து முறைமையினை அசுவமேதத்துட் கூறப் பட்டது. ఆశ్వమేధికే॥ "వాహయేద్ధుంకృతేనైవ శాఖయావాసపత్రయా। నదండేన

నయష్ట్యా వా నపాశేనవాపునః। నక్షుత్తృష్ణాశ్రమక్రాంతం వాహయేద్వికలేంద్రియం। సుతృప్తేషుభుంజీయాత్పిబేత్పీతేషుచోదకం। అహ్నఃపూర్వంద్వియామంవా ధుర్యాణాంవాహనంస్మృతం। విశ్రామేన్మధ్యమేభాగే భాగేచాంత్యేయథాసుఖం। యాత్రాయాత్వరయానిత్యం సంక్రమోయత్రచాధ్వని। వాహయేత్తత్రధుర్యాంస్తు నసపాపేనలిప్యతే। అన్యథావాహయన్రాజ న్నిరయంయాతిరౌరవం। రుధిరంవాహయంస్తేషాం యస్తుమోహాన్నరాధమః। భ్రూణహత్యాసమంపాపం తస్యస్యాత్పాండునందన" = உங்காரசத்தமாத்திரையானே ஓட்டுதல் செய்யவேண்டும். அல்லது இலைகளோடுங்கூடிய வளாரினலாவதுஓட்டவேண்டும். பெருங்கட்டை, தடி, சிறுத்தகோல்கள், கயிறு, இவைகளா லோட்டுதல் செய்யலாகாது. ஒருக்கால்ஓட்டிய எருதையடிக்கடி யோட்டலாகாது. பசிதாகத்தினையுடை யதனையும், இளைப்படைந்த தனையும், அவயவக்கருவிகள் கெட்டுள்ளதனையும் பாரம் சுமப்பிக்கலாகாது. உழுதஎருது திருத்தியடைந்த பின்னரோ தான் புசிக்கவேண்டும். அதுநீர்குடித்தபின்னரோதானும் நீர்குடிக்கவேண்டும். உச்சிக்குமுன் இரண்டியாமப் போதளவே வேலைசெய்வித்தல் வேண்டும். சுமக்கத்தக்க அளவே பாரம் வைத்தல் வேண்டும். நடுப்பகலிலும், மாலையிலும், இரவிலும் சுமைத்தொழிலின்றிச் சுகமாக வைத்தல்வேண்டும். ஆயின், ஒருதலையான பயணவினாவினால் நாடோறும் வழிநடக்கவேண்டியதாக நேர்ந்தபொழுது, பாரஞ்சுமக்கத்தக்க நல்லவலுவுள்ளதனையாராய்ந்து இருபோதினும் வேலைசெய்விக்கலாம். அவனொருவன்மாத்திரம்பாவத்தாற் பூசப்படமாட்டான். அவ்வாறன்றி, இரண்டுகாலங்களிலும் வேலைசெய்வித்தவன் இரௌரவம் என்னும் நரகினுக்குச் செல்வன். யார் அறிவில்லாமையால் அவ்விடபச்சாதிக்கு இரத்தம்வரும்படி செய்கிறானோ அவனுக்குக் கருக்கொலை அல்லது சிசுக்கொலை செய்த பாவம்வரும். எ-று. காண்க. (௪)

உழுதஎருதை வருத்தினதற்குப் பிராயச்சித்தம்.

మూ॥ జప్యందేవార్చనంహోమం స్వాధ్యాయంచైవమభ్యసేత్
ఏకద్విత్రిచతుర్విప్రాన్ భోజయేత్స్నాతకాన్ద్విజః. ॥౫॥

என்பது, எருதைக் குளிப்பாட்டியபின் செய்வனகூறுகின்றது.

(இ-ள்.) உழவுத்தொழில் செய்விக்கும் வேதியன், செபம், தேவபூசை, ஹோமம், வேதமோதல், இவற்றை அடிக்கடி செய்

தல்வேண்டும். ஸ்நாதகவேதியருள் ஒருவர், இருவர், மூவர், நால்வர்என்றதொகையாரையுண்பித்தல்வேண்டும்.எ-று. காண்க.

எருதை வருத்தியபாவம் ஒழியும்பொருட்டுத் தனக்குச்சத்தியுள்ளவரையில் செபம், தேவபூசை முதலியவற்றைச் செய்யவேண்டும். ஒருவர் இருவர் முதலிய ஸ்நாதக பிக்ஷகர்க்குஅந்நமிடவேண்டும்.

இனி அந்தஸ்நாதக பிக்ஷகர். ஒன்பதுவகையரென மநுகூறினர். மநு:॥ "సాంతానికంయక్ష్యమాణ మధ్వగంసర్వవేదసం। గుర్వర్థంపితృమాత్రర్థం స్వాధ్యాయార్థ్యుపతాపినం" = சந்தானிகன்=சந்ததிவிருத்தியின்பொருட்டு மணம் புணரவேண்டிப் பொருள்தேட வெளிப்பட்டவன், யக்ஷியமாணன் = வேள்விசெய்யப் பொருள்வேண்டி வெளிப்பட்டவன். அத்துவகன் = தீர்த்தயாத்திரைக்கு வெளிப்பட்டுவழிநடப்போனுய் உண்டியின்பொருட்டு வந்தவன், சருவவேதசன் = தன்பொருளெல்லாவற்றையும் வேள்வியின் தக்ஷிணையாகக் கொடுத்துவிட்டு வறியனாய்ப்பொருள்வேண்டித் தேட வெளிப்பட்டவன், குருவருத்தன் = குரவனுக்குத் தக்ஷிணைகொடுக்கும்பொருட்டுப் பொருள்வேண்டிப் புறப்பட்டவன், பிதிருருத்தன் = தந்தையின் பணிவிடைப்பொருட்டுப் பொருள்தேடி வெளிப்பட்டவன், மாதுருருத்தன் = தாய்ப்பணி பொருட்டுப் பொருள்தேடவந்தவன், சுவாத்தியா யார்த்தினன் = வித்தியாப்பியாசத்தின் பொருட்டுப் பிச்சைவேண்டி வந்தவன், அல்லது படிப்போர்க்கு உண்டிவேண்டிப் பிச்சைக்குவந்தவன். உபதாபினன் = நோய் முதலியவற்றுல் துன்புற்றுவந்தவன், இவர்களனைவரையும் திருத்திசெய்வித்தல் வேண்டும். எறு.காண்க. (ரு)

விளைபொருட்பாதீடு.

மூ॥ స్వయంకృష్ణైరథాక్షేత్రై ధాన్యైశ్చస్వయమార్జితైః
నిర్వపేత్పంచయజ్ఞాంశ్చ క్రమదీక్షాంచకారయేత్. ॥ ட॥

என்பது, உழுது முயன்றுபெற்ற தானியங்களைப் பயன்படுத்துமாறு கூறுகின்றது.

இ-ள். தானுழுத நிலத்து விளைந்ததானியங்களாலும், தேடித் தந்ததானியங்களாலும், ஐம்பெரும் வேள்வியைச் செய்

தல்வேண்டும். யாக நிஷ்டையினையும் செய்வித்தல் வேண்டும். எ-று.

தானுழுதநிலத்து விளைந்த பண்டத்தாலும், ஏனையராலுழுதுபயிரிடப்பட்டதனுட்டான் தேடிவந்ததாயுள்ள பண்டத்தாலும், ஸ்மார்த்த கருமமாகிய ஐம்பெரும்வேள்வியையும், சுரௌததகருமமாகிய அக்கினிட்டோமாதி கிரதுநிஷ்டைகளையும் தான் செய்யவேண்டும். தக்கவர் விரும்பின் அவரால் செய்வித்தலும் வேண்டும். எ-று. காண்க.

கூர்மபுராணம். కూర్మపురాణే॥ "లబ్ధలాభః పితౄన్దేవాన్ బ్రాహ్మణాంశ్చాపిపూజయేత్। తేతృప్తాస్తస్యతద్దోషం శమయంతినసంశయః"=உழவால் தானியலாபத்தை யடைந்தவன், பிதிரரையும், தேவரையும், வேதியரையும் பூசிக்கவேண்டும். அவர்திருத்தியடைந்து அவனுக்கு உழவுத்தொழிலால்வந்த பாவத்தை யொழிப்பார்கள் ஐயமில்லை. எ-று. காண்க.

விற்கத்தகாதன.

உழவுத்தொழில் செய்பவன் விளைந்த எள்முதலிய தானியங்களைப் பொருளாசை கொண்டு விற்றலாகாதென்று அக்கூர்மபுராணத்துட்டானே கூறப்பட்டது. కూర్మపురాణే॥ "తిలా రసానవిక్రేయా విక్రేయా ధాన్యతస్సమాః। విప్రస్యైవంవిధావృత్తి స్తృణకాష్ఠాదివిక్రయః" எள்ளினையும், தயிர் - தேன் - நெய் - முதலிய இரதங்களையும் விற்றலாகாது. ஆயின், எள்ளொன்றே யிருந்து, வேறுதானியமில்லாது, அவ்வெள்ளினை விற்றலொழிய பிழைப்பும் தருமமும் செய்வகையில்லாதவன் எந்தஅளவைக் கருவியால் அவ்வெள்ளையளந்து கொடுப்பானோ? அதே மரக்காலால் வேண்டிய தானியங்களை அவ்வளவே மாற்றிக்கொள்ளலாம். இவ்வகையாகப் பிழைப்பதனை வேதியனுக்குக் கூறப்பட்டது. உலர்ந்த விறகு, உலர்ந்த புல்வைக்கோலையும் விற்கலாம். எ-று. காண்க.

நாரதர். నారదః॥ "అశక్తౌ జీవనస్యార్థే యజ్ఞహేతోస్తథైవచ। యద్యవశ్యంతువిక్రేయా స్తిలాధాన్యేనతత్సమాః" = வேள்விசெய்பவனும், பிழைக்கும்வகை யில்லாதவனும் ஒருதலையாக எள்ளையே விற்கும்படி நேரிட்டபோது ஏனையதானியங்களினளவாக அதனைமாற்றிக்

கொள்ளவேண்டும். எ-று. விசேடதானியம் வாங்கலாகாதென்பது கருத்து.

யாஞ்ஞுவற்கியர். యాజ్ఞవల్క్యః॥ "ధర్మార్థంతత్రవిక్రేయాస్తిలా ధాన్యసతత్సమాః" = தருமத்தைநடத்தும் பொருட்டாயின் எள்ளுக்குச் சரியளவு தானியங்களைப் பெற்றுக்கொண்டு மாறலாம். எ-று.

இரதவருக்கங்களைமாற்றிக்கொள்ளும் வகைமைமனுவாற்கூறப்பட்டது. మనుః॥ రసారసైర్నిమాతవ్యా నత్వేవలవణంరసైః। కృతాన్నంచాకృతాన్నేన తిలాన్యాయేనతత్సమాః" = ஒரு இரதத்தால் மற்ருேர் இரதத்தை மாற்றிக்கொள்ளலாம். இரதத்தால் உப்பினை மாற்றிக் கொள்ளலாகாது. பக்குவஞ்செய்த அந்நத்தை அபக்குவாந்நத்திஞல் மாற்றிக்கொள்ளலாம். எள்ளினைக் கூறிப்போந்த நியாயத்தாற் சமஞகமாற்றிக் கொள்ளவேண்டும். எ-று. காண்க.

ஆபத்தம்பர். ఆపస్తంబః॥ "అన్నేనచాన్నస్యమనుష్యాణాంచమనుష్యైర్ర‌సానాంచరసైర్గంధానాంచ గంధైర్విద్యయాచవిద్యానాం" = அந்நத்திஞல் அந்நத்தையும், மானுடரால் மானுடரையும், இரதத்தால் இரதத்தையும், வாசனைப்பண்டத்தால் வாசனைப் பண்டங்களையும், வித்தையால் வித்தைகளையும், மாற்றிக் கொள்ளலாம். எ-று. காண்க.

இரதங்களை மாற்றிக் கொள்வதிலுள்ள விகற்பங்களை வசிட்டர் கூறினர். వశిష్ఠః॥ "రాసారసైస్సమతోహీనతోవానిమాతవ్యాః" = இரதங்களை வேருேரிரதங்களால் ஏற்றக்குறைவாக மாற்றிக் கொள்ளலாம். எ-று. காண்க.

அந்நமாற்றுதலின் விகற்பத்தினைக் கௌதமர் கூறினர். గౌతమః॥ "సమేనాసమేనతుపక్వస్య"=அபக்குவப்பண்டங்களால் பக்குவவந்நத்தினை ஏறவாயினும் குறையவாயினும் மாற்றிக்கொள்ளலாம். எ-று. காண்க.

ஆயின், எள்ளினை விற்றலாமென்று மனு. మనుః॥ "కామముత్పాద్యకృష్యాంతు స్వయమేవకృషీవలః। విక్రీణీతతిలాంఛుద్ధాన్ ధర్మార్థమచిరస్థితాన్" உழவுத்தொழிலால் பிழைக்கின்றவன், அவ்வுழவில் வேண்டுமான அளவு எள்ளினை விளைவித்து, பழைமைப்படாது (புதுமையாகவே) விற்கவேண்டும். எ-று. எங்ஙனம் கூறிஞெனில்?

இவ்வுரையில் விற்கவேண்டுவது என்றவுரைக்கு வேறு தானியத்தால் மாற்றிக்கொள்ளலாமென்று சிலர் கூறுகின்றனர். மற்றுஞ்சிலர், மனிதனுக்குக் கடன்கோடல்முதலிய ஆபத்துள் வருத்தப்படுங்காலத்தில் எள்ளினையும் விற்கலாமென்றும் பொருள் கொள்கின்றனர். இவ்விரண்டனுள் பின்னதாகிய விற்றலே சிறந்ததாக விருக்கின்றது. என்னே? வசிட்டருரையும் அங்ஙனம் கருதுகின்றது. వశిష్ఠః॥ "కామంవాస్వయంకృష్ట్వా త్పాద్యతిలా న్విక్రీణీరన్"=தாமே வேண்டுமான எள்ளினை உழவுதொழிலாற் பெருக்கி விற்றுக்கொள்வர். எ-று. காண்க. இங்ஙனமன்றி அந்த மனுவசனத்திற்குத் தானியத்தால் மாற்றிக்கொள்ளவேண்டுவது என்ற பக்கத்தில் மனுவுரைக்குக் கூறியது கூறலாமென்னுங் குற்றந் தங்குமென்றுணர்க. మనుః॥ "తిలాధాన్యేనతత్సమాః" = எள்ளினை மற்றைத் தானியங்களோடொப்ப மாற்றிக்கொள்க. என்று அவ்வேறுவிதி மனுவே கூறியிருத்தலின். (ஆதலின்மேற் கூறிய வுரைக்குப்பண்டமாற்றுதல்என்பதுகருத்தல்ல என்றபடி. பண்ட மாற்றுதலை விநமயம் என்ப).

ஆயின், மனுவும் இயமனும் கூறியுள்ள வேறுரைகளாற் குறிப்பாக எள்விற்றலாகாதென்றே வெளிப்படுகின்றது. என்னே? "భోజనాభ్యంజనాద్దానా ద్యదన్యత్కురుతేతిలైః। క్రిమిర్భూత్వాశ్వవిష్ఠాయాం పితృభి స్సహమజ్జతి"=உண்டல், எண்ணெயிட்டு நீராடல், தானஞ்செய்தல், இம்மூன்று தொழிலைப்பார்க்கினும் எள்ளினல் எத்தொழிலைச் செய்தாலும் அவன் தன் பிதிரரோடு புழுவாய் நாய்மலத்துள் அழுந்துவன். எ-று. எம். "దానాభ్యంజనభోజ్యేభ్యో యదన్యత్కురుతేతిలైః। క్రిమిస్సశ్వవిష్ఠాయాం కర్తృణాంతేనపాప్మకృత్" = தானமீதல் அப்பியங்கனஞ் செய்தல், உண்டல் இவற்றினுக்கு வேருகியதொழில் எதனை யெள்ளினுற் செய்தாலும் அத்தொழிலால் பாவஞ்செய்தவனுய் மலத்துட் புழுவாகின்ருன். எ-று. காண்க. எனில்?

அது குற்றமன்று, ஏனெனில்? இவ்விரண்டுரையும் ஒரு தலையாகச் செய்யத்தக்க தருமத்திற்காயினும் வேருகிய விடயத்தைப்பற்றியதாமாதலின்.

எள்ளினை வேண்டுவனவாகிய மற்றதானியங்களால் சமமாக மாற்றிக்கொள்ள வேண்டுவது. உலர்ந்த வைக்கோல் விறகுமுத

லியவற்றை விற்பிக்க வேண்டுவது என்பனமுதலிய வேதியன் பிழைப்பின் பொருட்டான தொழில். அங்ஙனம் நாரதர்கூறினர். నారదః॥ "బ్రాహ్మణస్యతువిక్రేయం శుష్కదారుతృణాదికం" — உலர்ந்த விறகு வைக்கோல்முதலியன அந்தணனுக்கு விற்கத்தக்கனவாம். எ-று. காண்க.

ஈண்டு, உழவின்கண்ணே சம்பந்தப்பட்டு வருகின்றபாவத்திற்குப் பரிகாரங் கூறவேண்டி முதற்கண்பாவத்தை அந்நாரதர் விரிக்கின்றனர். నారదః॥ "బ్రాహ్మణశ్చేత్కృషింకుర్యా న్మహాదోషమవాప్నుయాత్" — வேதியன் உழவுதொழில் செய்தால் ஒரோ பகலினுள் தோஷத்தை யடைகின்முன். எ-று. உழவின்கண்ணே, இமிசை செய்யப்படாது ஒழிவதில்லையாதலின், எவ்வளவு முயற்சியோடு உழவுசெய்யினும் கொலைக் குற்றம் வரவே வருகின்றதென்று, உழவே கொலைச்சம்பந்தமென்ற மனுவுரைமுன்னந்தானே எடுத்துக்காட்டப்பட்டது. (௬)

உழவால்வரும்பாவம்.

మూ॥ సంవత్సరేణయత్పాపం మత్స్యఘాతీసమాప్నుయాత్
అయోముఖేనకాష్ఠేన తదేకాహేనలాంగలీ. ॥౬॥

என்பது, கூறிய குற்றத்தின் பெருமையை அளவிடுகின்றது.

(இ-ள்.) மீனைக்கொல்லும்வலைஞன் வருடம் ஒன்றில் எவ்வளவுபாவத்தைச் சம்பாதிப்பானே? அவ்வளவு பாவத்தை யிருப்புக் கொழுமுனையோடுங் கூடிய கலப்பையினல் உழுபவன் ஒரோ பகலில் அடைகின்முன். எ-று.

இரும்போடு கூடிய கலப்பைமுகத்தால் சிற்றுயிர்களுக்குச் சித்திரவதை யுண்டாகின்றதென்னுங் கருத்தால் மீன்கொலையினும் மிகுந்தபாவங் கூறப்பட்டன. (௭)

మూ॥ పాశకోమత్స్యఘాతీచ వ్యాధశ్శాకునికస్తథా
అదాతాకర్షకశ్చైవ సర్వేతేసమభాగినః. ॥౭॥

என்பது, கூறியவகையால் உழவுசெய்வோனுக்கு மாத்திரமே பாவமெனக் கூறவந்த வழி அவற்றை விலக்குவதற்குப்பாவிகளாவார் இவரொனக் கூறுகின்றது.

(இ-ள்.) வலைஞன், மீன்பிடிப்பவன், அம்பெறிகின்றவேடன், புட்படுப்போன், கொடையில்லாத வுழவுதொழிலோன், இவரனைவரும், ஒத்தபாவத்தின் பாகத்தினையுடையராம். எ-று. காண்க.

"జాలికః"=வலையைவிரித்து விலங்குமுதலியவற்றைப்பிடிப்பவன். "వ్యాధః"=மிருகங்களைக்கொன்று பிழைப்பவன். "శాకునికః" பறவையைக் கொல்வோன். "అదాతా"=களத்தில் நெற்போரடியில் வந்தவருக்கு ஒன்றுங்கொடாதவன். இவரனைவருக்கும் பாவத்துள் ஒத்தவாரும். அதனால் வலைஞர்முதலியோர் ஒப்பாகக்கூறப்பட்டனர். வலைஞர்முதலியோர்க்குப் பாவம் எவ்வாறு பெரியதோ? அவ்வாறே தானியக்கொடை செய்யாத வுழவனுக்கும் பாவம்பெரிதென்பது கருத்து. (கொடை=தானம்). (அ)

உழவுசெய்வோன்பாவபரிகாரம்.

మూ॥ వృక్షాంశ్ఛిత్వామహీంభిత్వా హత్వాతుక్రిమికీటకాన్
కర్షకఃఖలయజ్ఞేన సర్వపాపైఃప్రముచ్యతే. ॥౯॥

என்பது, உழுவோனுக்குப் பாவம்கூறி யஃதொழியுமாறு கூறுகின்றது.

(இ-ள்) மரங்களைவெட்டி நிலத்தைப்பிளந்து புழுக்களையுஞ் சிற்றுயிர்களையுங்கொன்று உழுதொழிற் செய்தவன் களத்துள் செய்யப்படும் களவேள்வியால் எல்லாப்பாவங்களினின்றும் விடப்படுகின்றான். எ-று. களவேள்வி = நெற்படுக்கும் களத்திலிடும் பிச்சைமுதலியகொடை.

வெட்டுதல், பிளத்தல், கொல்லுதல், இவைகளால் எவ்வளவுபாவம் உண்டாகின்றனவோ? அவற்றிற்கெல்லாம் களத்துள் நெல்முதலிய வற்றைத்தானஞ் செய்தல் என்னும் வேள்வியே பிராயச்சித்தமாக விருக்கின்றது.

ஹாரீதரும் அங்ஙனம் கூறினர். హారీతః॥ "భూమింభిత్వౌషధీశ్ఛిత్వా హత్వాకీటపిపీలికాన్। పునంతిఖలయజ్ఞేన కర్షకానాత్రసంశయః। యూపాయంనిహితో మేధ్యమేధిర్నామహీకర్షకైః। తస్మాత్సంప్రతివౌదద్యా త్తత్రధాన్యార్థవత్తమాం"= நிலத்தினைப் போழ்ந்து, ஒடதிகளைக் கெடுத்து, புழுக்களையும்

எறும்பினையுங் கொன்று உழவுசெய்வோர், களவேள்வியாற்சுத்தராகின்றனர். இதிலேயமில்லை. மேதிஎன்னும் பெயராயுடைய யூபத்தம்பம் உழுவோரால் அசுத்தஇடத்தில் நாட்டப்பட்டது. (எனவே கலப்பையேர்க் காலினையே யூபத்தம்பமாக வைத்து உழுதல் என்னும் வேள்வியில் புழுக்களாகிய பசுக்களைக்கொல்கின்றான். என்றபடி) ஆதலால் சோர்வற்றவனாய் நெல்முதலிய தானியப் பொருட் கொடையை அவ்வேள்வியிற் கொடுத்தல் வேண்டும். எ-று. காண்க. (கூ)

களவேள்விசெய்யாவழி வருங்குற்றம்.

మూ॥ యోనదద్యాద్ద్విజాతిభ్యో రాశిమూలముపాగతః
సచౌరస్సచపాపిష్ఠో బ్రహ్మఘ్నంతంవినిర్దిశేత్. ॥౧౦॥

என்பது, களவேள்வி செய்யாதொழியின் மஹாபாதகம் வருமெனக் கூறுகின்றது.

(இ-ள்.) நெற்போரடிக்குவந்த உழவுத்தலைவன் வேதியர் பொருட்டு விளைபயனைக் கொடுப்பதில்லையேல், அவனே கள்ளன். அவனே பாவத்துள்ளான். அவனையே வேதியனைக் கொன்றவனென்று காட்டிவிடப்படும். எ-று. காண்க.

உழுவோனுக்கு இக்களவேள்வி நித்தியமோ? காமியமோ? எனில். நித்தம் காமியமென்னும் இருவகையு மாமென்று, இருவகையுமா வலியாலும் விளங்குகின்றது. என்னை? செய்யாவிடிற் பாவம் வருகின்றதெனவே நித்தமாயிற்று. மரம்வெட்டியது முதலிய பாவங்களை யொழிக்கின்றதென் றதனாற் காமியமாயிற்று.

களவேள்வி நித்தமென்று சிவபுராணத்துட்கூறப்பட்டது. శివపురాణే॥ "అదత్వాకర్షకోదేవ యస్తుధాన్యంప్రవేశయేత్। తస్యతృష్ణాభిభూతస్య యత్పాపంతన్మహద్భవేత్। దివ్యంవర్షసహస్రంతు దురాత్మాకృషికారకః। మరుదేశేభవేద్వృక్షః పుష్పఫలవర్జితః। తస్యాంతేమానుషోభూత్వా కదాచిత్కాలపర్యయాత్। దరిద్రో వ్యాధితోమూర్ఖశ్చ కులహీనశ్చజాయతే" = உழுதொழிற் செய்வோன் யாவன் தானியங்களை யொருவர்க்கும் கொடாது தன்மனைக்கே கொண்டுபோகின்றானோ? ஆசையால் விலக்குண்ட அவனுக்கு

வரும்பாவம் பெரியதாயிருக்கும். ஓய்! உமையே! கேள்! உழவு செய்பவன் தானதருமமில்லாத துராத்மாவாக விருந்தால் தேவ ரளவையால் ஆயிரம் வருடம்வரையில் நீரற்ற பாலைவனத்தில், பூ காய் பழமற்ற மரமாகப் பிறந்து துன்புற்று ஒழிந்தபின்பு, பக்குவம்வந்தபோது மானிடயாக்கைபெற்று வறியோனும், நோயாளியாயும், மூர்க்கனும், தாழ்ந்தகுலத் துள்ளோனும் பிறக்கின்றான். எ-று. காண்க.

விளைபயனுட்கொடுக்கத்தக்க அளவை.

మూ॥ రాజ్ఞేదత్వాతుషడ్భాగం దేవానాంచైకవింశకం
త్రింశద్భాగంబ్రాహ్మణానాంకృషింకుర్వన్నదోషభాక్. ॥౧౧॥

என்பது, கொடுக்கத்தக்க தானிய அளவையைக்கூறுகின்றது.

(இ-ள்). விளைந்த மணியுள் ஆறிலொரு பங்கு அரசனுக்கு, இருபத்தொன்றில் ஒருபங்கு தேவர்க்கு, முப்பதனுள் ஒருபங்கு வேதியர்க்குமாகக் கொடுத்து உழவு செய்வோன் தன்பாவத்தை யொழிக்கின்றான். எ-று.

பழுத்துவந்த நெல்லின் முழுப்போரினை ஆறுபங்குசெய்து ஒருபங்குக்கு எவ்வளவு வருமோ? அது அரசனுக்கு இறையாகக் கொடுக்க. அம்முழுப்போரினையே இருபத்தொருபங்காக்கி அவற்றுள் ஒருபங்கைத் தேவர்க்குக்கொடுக்க. அவ்வாறே முப்பதுபங்குசெய்து ஒருபங்கை அந்தணர்க்குக் கொடுக்கவென்றுணர்க.

கூர்மபுராணத்துள்ளும் கூறப்பட்டது. కూర్మపురాణే॥ "దేవభ్యోపితృభ్యశ్చ దద్యాద్భాగైకవింశకం। త్రింశద్భాగంబ్రాహ్మణానాం కృషింకుర్వన్నదుష్యతి" = தேவர்க்கும் பிதிரர்க்கும் இருபத்தொன்றி லொருபங்கு, வேதியர்க்கு முப்பதி லொன்று, கொடுத்தவன் உழவால் வரும் பாவத்தினை யடையான். எ-று. காண்க.

பிரகற்பதி. బృహస్పతిః "రాజ్ఞేదత్వాతుషడ్భాగం దేవానాంచైకవింశకం, త్రింశంభాగంతువిప్రాణాం కృషింకుర్వన్నదుష్యతి" = இதன்பொருள் மேல் மூலத்திற்கூறியபோலாம். என்றுணர்க.

(உதாரணம் ஓர் உழவன் ஓராயிரத்து அறுநூற்று எண்பது மரக்கால் நெல் விளைவித்தால். இருநூற்றுஎண்பது மரக்கால் அரசிறைகொடுக்கவேண்டும். எண்பதுமரக்கால் தேவர்க்கும், ஐம்பத்தாறுமரக்கால்வேதியர்க்கும் கொடுக்க. ஆகமொத்தம்நானூற்றுப் பதினாறு மரக்கால்போக நின்ற ஆயிரத்து இருநூற்று அறுபத்துநான்கு மரக்காலைத் தான்பெறவேண்டுவதாகின்றது. (கக)

அந்தணனொழிந்தோரதுஉழவு.

మూ॥ క్షత్రియోపికృషింకృత్వా దేవాన్విప్రాంశ్చపూజయేత్
వైశ్యశ్శూద్రస్తథాకుర్యాత్ కృషివాణిజ్యశిల్పకం. ॥౧౨॥

என்பது. வேதியனுழவுமுறை கூறியபின் ஏனையவருணத்தார் அதனைச் செய்யுமுறை கூறுகின்றது.

(இ-ள்.) வேந்தனும் உழவுத்தொழில் செய்து தேவரையும் வேதியரையும் பூசிக்கவேண்டும். வைசியனும் சூத்திரனும் உழவினையும், வாணிபத்தினையும், சிற்பத்தொழிலினையும் அவ்வாறே செய்யவேண்டும். (எனவே செய்து தேவரையும் வேதியரையும் பூசிக்கக்கடவர். எறு. காண்க).

வாணிபமும், சிற்பமும் இக்கலியில் நான்கு வருணத்தர்க்கும் பொதுவென்று குறித்தற்பொருட்டு, ஈண்டு கூறப்பட்டன. ஆயின் வசியனுக்கு உழவு முதல்அத்தியாயத்துட்டானே கூறப்பட்டுள்ளன வாயினும் இவ்வாறு செய்தல் வேண்டுமென்னும் வகைமை தெரிவித்தற் பொருட்டு மீட்டும் கூறப்பட்டது. "తథా" என்றதனுல் வேதியனுக்குக்கூறிய உழவின் முறைமையே யேனையோர்க்குங் கூறியவாறுயிற்று. ஆயின் சூத்திரனுக்கும் உழவு முதலியவற்றினை யுடன்படுதற் கண்ணே அவற்றானே தானே அவனுக்குச் சீவனுமுண்டாமன்றே? எனின் மேற்கூறுகின்றார்.()

మూ॥ వికర్మకుర్వతేశూద్రా ద్విజశుశ్రూషయోఝ్ఝితాః
భవంత్యల్పాయుషస్తేవై నిరయంయాంత్యసంశయం. ॥౧౩॥

என்பது, கலியில் வேதியர் ஏவற்றொழிலைச் சூத்திரன் விடலாகாது, என்பதுணர்த்துகின்றது.

(இ-ள்.) சூத்திரர் இருபிறப்பாளர் பணிவிடை விடுத்துக் கொடுந்தொழிலாகிய உழவுமுதலிய தொழில்செய்தால் அற்பாயுளை யுடையவராய் நரகத்தையடைவர். இதிலையமில்லை எ-று.

ஊதியம் = இலாபம் அதிகமாகக் கிடைப்பதால் எல்லாப் பிழைப்புக்கும் காரணமா யிருத்தலின் சீவக்கொலையே வடிவாக வுடைய உழவினைமாத்திரம் செய்துவந்தால் அதுவிகருமம், என்றும் கொடுந்தொழில் என்னப்படும். சூத்திரன் வேதியன் பணி செய்தால் கிழிந்த ஆடையும் உச்சிட்ட அன்னமுமே கிடைப்பதாம். விசேடித்த ஆதியம் ஒன்றும் கிடைப்பதல்லவே யென்றெண்ணி மிகுந்த பொருளிச்சையால் உழவுமுதலிய சீவன விருத்தியுள் புகுந்து, அவற்றினையே செய்திருந்து வேதியன் பணியைவிட்டால் அந்தச்சூத்திரனுக்கு இம்மைப்பயனும் மறுமைப்பயனும் கெடுகின்றது. (கக)

மூ॥ చతుర్ణామపివర్ణానా మేషధర్మస్సనాతనః ॥௨௰॥

என்பது. நால்வருணத்திற்கும் உரைத்தபொதுவானசீவனவழியாகிய தொழிலினை முடிந்தது முடித்துரைக்கின்றது.

(இ-ள்.) நான்கு வருணத்தினர்க்கும் இத்தருமம் பழைமையானது. எ-று.

கடந்த கலியுகங்களினும் வேதியர்முதலியோர்க்கு உழவு முதலியன வுண்டென்பதனைக் குறித்தற்குப் பழைமையானதெனக்கூறப்பட்டது.

ஆயின், ஏனையமிருதிகளுட் கூறப்பட்டுள்ள முறையாகவே இந்தமிருதியுள்ளும் வருணதருமங்களைக் கூறியபின் ஆச்சிரம தருமங்களைக் கூறுவது முறைமையாம். ஆயினும் வியாசர் வினவாமையின், இவ்வாசிரியர் கூறுதொழிந்தார். அவற்றைக்கேட்போர்க்கு இன்பமாம் பொருட்டு யாங்கூறுதும். அற்றேல் முன்னைய அத்தியாயத்துட்டானே ஏன் ? கூறலாகாது எனின், ஆண்டு அஃது அதிகாரப்பட்டதன்று. ஈண்டு இவ்வத்தியாயமுதற்செய்யுளுட்டானே "வர்ணாஶ்ரமாசாரம்" என்ற தொடரினுள் "ஆஶ்ரம" = ஆச்சிரமம் என்றதனால் அதனோடியையபுபட்ட அதிகார முடைமை யுண்டாமாகலின்.

நான்காச்சிரமம்.

நான்காச்சிரமமாவன. காந்தம். స్కాంద॥ "బ్రహ్మచారీగృహస్థశ్చ వానప్రస్థోథభిక్షుకః। ఏతేక్రమేణవిప్రాణాంచత్వారఃపృథగాశ్రమాః" பிரமசரியம், கிரகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம், இந்நான்கும் முறையே வேதியர்க்கு வேறுவேறு நிலைமைகளாம். எ-று. காண்க.

மனு. మనుః॥ "బ్రహ్మచారీగృహస్థశ్చ వానప్రస్థోయతిస్తథా। ఏతేగృహస్థప్రభవా శ్చత్వారఃపృథగాశ్రమాః" மேற்கூறிய காந்தத்தின்பொருளே யிதற்குமெனக்கொள்க. ஆயின் "గృహస్థప్రభవాః" என்பதற்கு, கிரகத்தனுலானது எனப்பொருள்கொள்க. எனவேநான்கு ஆச்சிரமும் இல்லறத்தானுலாயது என்பது கருத்து.

பிரமசரியநிலைமை.

பிரமசரியன் எனவே உபநயனகருமத்தால் நல்லனுக்கப்பட்டவன். அங்ஙனமந்திரத்துட் கூறியவாறு. మంత్రః॥ "బ్రహ్మచర్యమాగాము పమానయస్వ" = பிரமசரியத்தைக் குறித்துவந்தேன் என்னை உபநயனஞ்செய்வி, எனவே, வேதத்தினை யோதும்பொருட்டு வந்தேன் என்னை அருகனுக்கிக்கொள் என்றுஆசிரியனை மாணுக்கன்பிரார்த்திப்பது. எறு. இதனுல் இருபிறப்பாளன் வேதமோதலை விரும்பி,குரவனிடத்திற்குவந்தால்,அக்குரவன்அப்பிறப்பினுல் இருபிறப்பாளனுக்கு வேதத்தையோதுந்தகுதியை உண்டாக்கும் பொருட்டுவிதிப்படி அவனைஅருகழைத்துச் சுத்திசெய்வதே உபநயநகருமமென்று கூறியவாறுயிற்று. இதற்கு" பிரமசமஸ்காரமெனவும் பெயருண்டு. ஏனெனில் ? உபநயநமென்னும் கருமம், கருப்பாதான முதலியஸ்மார்த்த கருமங்களுட்கூறப்பட்டிருத்தலின். அருகன் = சமீபித்தவன்.

அக்கருமவகை.

ஹாரீதர் அக்கருமமிருவகை யெனக்கூறினர். హారీతః॥ "ద్వివిధోహిసంస్కారో భవతిబ్రాహ్మోదైవశ్చేతి, తత్రగర్భాధానాదిఃస్మార్తో బ్రాహ్మః, పాక యజ్ఞహవిర్యజ్ఞా స్సౌమ్యాశ్చదైవాః, బ్రాహ్మేణసంస్కృత ఋషీణాం సమానతాం సాయు జ్యంగచ్ఛతి, దైవేనోత్తరేణసం స్కృతోదేవానాం సమానతాంసాయుజ్యంగచ్ఛతి"=

கருமங்கள், பிராமம்எனவும் தெய்வம்எனவும் இருவகைப்படுமென்றோ? அவற்றுள் கருப்பாதான முதலியவாக மிருதிகளுட்கூறப்பட்டகருமங்கள் பிராமம்என்று கூறப்படும். பாகவேள்வி, அவிவேள்வி, சோமசமத்தை, என்னும்கருமங்கள் தெய்வமெனப்படும். பிராமத்தினல் நன்குதிருத்தப் பட்டவன் இருடிகளோடொப்பாகுந் தன்மையும் சாயுச்சியம் = கலப்பாகும் தன்மையும்அடைகின்றான். தெய்வமென்னும் உத்தரசமஸ்காரம் = பிற்கருமத்தால் இருத்தப் பட்டவன் தேவர்களோடு ஒப்புமையும் கலப்பும்அடைவன். எ-று. காண்க. (எனவே, ஸ்மார்த்தகருமஞ்செய்தவன் இருடியர்களோடு ஒத்தவனாய் அவ்விருடியரிற் கலப்பன். சுரௌதகருமங்களைச்செய்துதேவர்களோடவ்வாறாகின்றான் என்பது கருத்து. இதனல் ஸ்மார்த்தமென்பது பிரமகருமமெனவும், சுரௌதமென்பது தேவகருமம் எனவும் இருபிறப்பாளர்க்கு இருவகைக் கருமங்களாக விருக்கின்றது என்றவாறாயிற்று. சமஸ்காரம் என்பது திருத்தல். எனவே சுத்திசெய்தல்.)

அவ்விருவகைக் கருமத்தின்றொகை.

கருப்பாதான முதலிய கருமங்களெல்லாம் கௌதமரால் முறையே கூறப்பட்டன. గౌతమః॥ "గర్భాధానపుంసవన సీమంతోన్నయన జాతకర్మ నామకరణాన్నప్రాశన చౌలోపనయనానిచచత్వారివేద వ్రతానిస్నానం సహధర్మచారిణీసం యోగఃపంచానాం యజ్ఞానామనుష్ఠాన మష్టకాన్వష్టకాపార్వణశ్రాద్ధం శ్రావణ్యాగ్రయణచైత్ర్యాశ్వయుజీ చేతిసప్తపాకయజ్ఞాస్సప్తహవిర్యజ్ఞాస్సప్తసోమసంస్థాఇత్యేతేచత్వారింశత్సంస్కారాః" = ௧ - கருப்பதானம், ௨ - பும்ஸவனம், ௩ - சீமந்தம், ௪ - சாதகருமம், ௫ - நாமகரணம், ௬ - அன்னப்பிராசனம், ௭ - சௌளம், ௮ - உபநயநம், ௯ - பிராஜாபத்தியவிரதம், ௧௰ - சௌமியவிரதம், ௧௧ - ஆக்கிநேயவிரதம், ௧௨ - வைசுவதேவவிரதம், அல்லது, நான்குவேதவிரதங்கள், ௧௩-ஸ்நாதகம், ௧௪-விவாகம். இப்பதினன்குகருமங்களும், ஐம்பெரும்வேள்வியும், அஷ்டகாசிராத்தமும், அந்வஷ்டகாசிராத்தமும், பார்வணசிராத்தமும், சிராவணியும், ஆக்கிரயணமும், சைத்திரியும், ஆசுவயுஜமும் என்னும் எழுபாக வேள்வியும், எழு அவிவேள்வியும்; எழுசோமசமஸ்தையும், என - ௧௪, ௫, ௭, ௭, ௭, ஆ - ௪௰, நாற்பது கருமங்களாகின்றன. எ-று. காண்க.

அவற்றுள், கருப்பாதானம் முதல் சூடா கருமம் வரையினும் வித்து கருப்பத்து ளிருப்பதனாலுண்டாகுங் குற்றத்தைப் போக்குவதே பயனாகவுள்ளனவாம். அதனானே யாஞ்ஞவற்கியர் சூடாகருமம்வரையினும் செய்யத்தக்க கரும திருத்தங்களைக்கூறி அவ்வவற்றினுக்கும் வேறுவேறுபயனுங் கூறினர். యాజ్ఞవల్క్యః॥ "ఏవమేనశ్శమంయాతి బీజగర్భసముద్భవం" = இங்ஙனஞ் செய்தால் பீச கருப்பத்தாலுண்டாகிய குற்றம் ஒழிகின்றன. எனவே தணிந்துவிடும். எ-று. காண்க.

இக்கருமங்களின் அதிகாரிபர்.

அதனால், பிரமசரியாச்சிரமத்தைக் கூறுதற்கு முன்னே கருப்பாதான முதலிய கருமங்கள் கூறப்படுகின்றன. அவற்றுள், கருப்பதான முதலிய கருமங்கள் இருபிறப்பாளர் செய்யவேண்டுமென யாஞ்ஞவற்கியர் கூறினர், యాజ్ఞవల్క్యః॥ "బ్రహ్మక్షత్రియవిట్ఛూద్రా వర్ణాస్త్వాద్యాస్త్రయోద్విజాః। నిషేకాద్యాశ్శ్మశానాంతాస్తేషాం వైమంత్రతఃక్రియాః" வேதியர், அரசர், வசியர், சூத்திரர் என்னு நால்வரும் வருணத்தர் என்னப்படுவர். அவருள் முதன்மூவரும்இருபிறப்பாளரென்னப்படுவர். நிஷேகமுதல், மயானம்வரையில் உள்ள கருமங்களெல்லாம் மந்திரத்தோடும் அம்மூன்று வருணர்க்கே கூறப்பட்டுள்ளன. எ-று. இதனால் மந்திரங்களற்ற அக்கிரியை சில சூத்திரர்க்குமா மென்று வெளிப்படுகின்றன.

அக்கருமத்திற்குரியகாலம்.

அக்கருப்பாதான முதலியவற்றினுக்குரிய காலங்களை யாஞ்ஞவற்கியர் கூறினர். యాజ్ఞవల్క్యః॥ "గర్భాధానమృతౌపుంసస్సవనంస్పందనాత్పురా। షష్ఠేష్టమేవాసీమంతో మాస్యేతేజాతకర్మచ। అహన్యేకాదశేనామ చతుర్థేమాసినిష్క్రమః। షష్ఠేన్నప్రాశనంమాసి చూడాకార్యాయథాకులం" = இருது காலத்தில் கருப்பாதானஞ் செய்யவேண்டும். கருவிலுள்ள பிண்டம் அசைவடைதற்கு முன்பு பும்ஸவந கருமம்செய்யவேண்டும் ஆறாவது அல்லது எட்டாவது மாதத்துள் சீமந்தம் செய்யவேண்டும். பிறந்தவுடனாவது பதினோராநாளாவது சாதகருமஞ் செய்யவேண்டும். அப்பதினோராநாளே நாமகரணஞ் செய்யவேண்டும். நாலாவது மாசத்துள் நிஷ்கிரமணம் = குழந்தையை

வெளிக்கொண்டுபோகவேண்டும். இதுவே சந்நிமிதிப்பித்தலாம். ஆருவது திங்களில் அந்நப்பிராசனம் செய்விக்கவேண்டும். பிறந் தமயிர் களைதலாகிய கேசவினை மரபின் வழக்கம் போலுமாம். எ-று. காண்க.

இருதுகாலம்.

இரஜசுவலையானதுமுதல் பதினாறுநாள் வரையிலும் இருது காலமென்னப் படுமென மநுகூறினர். మనుః॥ "ఋతుస్స్వాభావికః స్త్రీ ణాం రాత్రయష్షోడశస్మృతాః" = மாதர்க்கு இருது தேகவியற்கையா லுண்டாகின்றது. அது, இரஜசுவெளிப்பட்டது முதல் பதினாறு நாள்வரையும் என்று கூறப்பட்டது. எ-று. காண்க. (கு) பூத்த காலைபுனையிழைமடந்தை நீராடியபின் னீராறுநாளும் கருவயிற்று றாஉங் காலமாதலின் பிரியவும் பெறான் பரத்தையிற் பிரிவோன். என்பது மது.

கருப்பதானத்திற்குரியநாள்.

மநு. మనుః॥ "రాసామాద్యాశ్చతస్రస్తు నిందితైకాదశీచయా। త్రయో దశీచశేషాస్సుః ప్రశస్తాదశరాత్రయః। యుగ్మాసుపుత్రాజాయంతే స్త్రియోయుగ్మాసు రాత్రిషు। తస్మాద్యుగ్మాసుపుత్రార్థీ సంవిశేదార్తవే స్త్రియం" = இருதுவாகிய நாள் முதல் முறையேநான்குநாளும் தகுதியுடையனவல்ல. பதினொன் று, பதின்மூன்றுநாள் விலக்கப்பட்டன. மிக்கபத்துநாளும் கருப் பா தானத்திற்குத் தக்கனவாம். அவற்றுள்ளும் இரட்டை நாளா யின் ஆண்மக்கள் பிறப்பர். ஒற்றைப்பட்ட நாளாயின் பெண் மக்கள் பிறப்பர். ஆதலின், ஆண்மக்களை விரும்பினோன் இருது கால நோக்கித் தகுதியான இரட்டைப்பட்ட நாட்களில் மனைவி யோடு புணரவேண்டும். எ-று. காண்க.

பும்ஸவன காலம்.

இங்ஙனமாக இருதுகாலங்களில் கருப்பாதானஞ்செய்து, அக்கருப்பம் அசைவுஅடைவதற்கு முன்பே பும்ஸவனம் என் னும் கருமத்தைச் செய்யவேண்டும். அக்கருப்பம் இரண்டா வது அல்லது மூன்றுவது திங்களில் அசைவுறுகின்றது என பைசாவாபர் கூறினர். వైజావాపః॥ "మాసేద్వితీయేతృతీయేవాపుంసవనం"=

இரண்டாந் திங்களிலேனும் மூன்ருந்திங்களிலேனும் கரு அசைவுறுமின்றது. எ-று. காண்க.

பாரஸ்கரர். పారస్కరః॥ "మాసిద్వితీయెతృతీయెవా యదహఃపుంసానక్షత్రేణ చంద్రమాయుక్తస్స్యాత్" = இரண்டு, அல்லது, மூன்ருந்திங்களில்எந்தத்தினத்தில் ஆண்நக்ஷத் திரத்தோடு சந்திரன்கூடியிருக்கின்ருனே, அந்தத்தினம் "பும்ஸவநாநவலோபனம்" என்னுங் கருமத்தைச் செய்யவேண்டும். எ-று. "அநவலோபனம்" என்னும் கருமத்தைச் செய்யும்விதி ஆசுவலாயனர் கூறியகிருஹியபரிசிட்டமென்னு நூலுட்காண்க. பும்ஸவனம்-எது, தரித்த கரு ஆண்மகவாகவேண்டிச் செய்யும் கருமமாம் அநவலோபம். எ-து. இச்சித்த பண்டங்களைத் தந்து திருத்திசெய்தல்.

புருஷநக்ஷத்திரம்.

அத்தமுதலியன புருடநாளென்று சோதிடநூலுட் கூறப்பட்டுள்ளன. அவையாவன. அசுவனி, பூனர்பூசம், பூசம், அத்தம், அனுடம், அபிஜிது, திருவோணம், பூரட்டாதி, உத்திரட்டாதி, என வொன்பதாம். உள்ளமுடையான் முதலியநூலுள்ளுங் காண்க.

சீமந்தம்.

"சீமந்தோந்நய கருமத்திற்கு யாஞ்ஞவற்கியர் கூறியகாலத்தினும் வேருகியகாலம் சில முனிவர்களாற் கூறப்பட்டுள்ளன. அவருள். உலோகாக்ஷி. లౌగాక్షిః॥ "తృతీయెగర్భమాసేహి సీమంతోన్నయనంకార్యం" = மூன்று திங்கட்கருப்பத்துட் சீமந்தஞ் செய்தல் வேண்டும். எ-று. காண்க.

ஆபத்தம்பர். ఆపస్తంబః॥ "సీమంతోన్నయనంప్రథ మెగర్భేచతుర్థేమాసి" முதற்கருப்பம் அடைந்தபோது நாலாவது திங்களிற்சீமந்தஞ் செய்க. எறு.

பைஜாவாபர். బైజావాపః॥ "అథసీమంతోన్నయనం చతుర్థేపంచమెషష్ఠే వాపి" = நான்கு, ஐந்து, அல்லது ஆருவது திங்களிலாவது சீமந்தஞ்செய்த்ல் வேண்டும். எறு.

சாங்கியாயந கிருஹியம். సాంఖ్యాయనగృహ్యే॥ "సప్తమేమాసిప్రథమే గర్భేసీమంతోన్నయనం" = முதற்கருப்பம் ஏழாவதுதிங்களிற் சீமந்தம். எ-று.

சங்கர். శంఖః॥ "గర్భస్పందనమారభ్య సీమంతోన్నయనం యావద్వాన ప్రసవః" = பிண்டம் அசையத் தொடங்கியது முதல்பெறுகிற வரையில் சீமந்தம் செய்யலாம்.

இவ்வாறு இருடியர்வாக்கியங்களுள் ஒத்தவாறாக வுணர்த்தப்பட்டகாலத்துள் இதுதான்சிறந்ததென்று வரையறுக்கப்பட்டதோர் சிறப்புரை யில்லையாம். ஆதலின், கூறப்பட்டகாலமெல்லாம் விகற்பிக்கப்படுகின்றது. விகற்பம். எது, ஏதேனுமாமென்றவாறு.

சீமந்தகருமத்திற்குரியது.

இந்தச் சீமந்தகருமம் க்ஷேத்திரம், பிறப்பிடத்தைச் சுத்திசெய்வதாமாதலி னொருக்காலே செய்யவேண்டுமென்றி யொவ்வொரு கருப்பத்திற்குஞ் செய்யவேண்டுவதில்லையென ஹாரீதர் கூறினர். హారీతః॥ "సకృత్సంస్కృతసంస్కారాః సీమంతేనద్విజస్త్రియః" = இருபிறப்பாளர் மாதர் ஒருக்கால் சீமந்தகருமத்தால் திருத்தப்படத்தருவர். எ-று. காண்க.

தேவலர். దేవలః॥ "యాసకృత్సంస్కృతానారీ సర్వగర్భేషుసంస్కృతా" எந்தமாது ஒருக்கால் திருத்தப்பட்டனளோ? அந்தமாது எல்லாக்கருப்பத்திலும் திருத்தப்பட்டவளே யாவள். எ-று. காண்க.

இந்தச் சீமந்தகருமம் கருவின்கணுள்ள பிண்டத்திற்கே திருத்தப்பாடு என்ற பக்ஷத்தில் கருப்பமாகுந்தோறும் செய்யவேண்டுமென விஷ்ணு கூறினர். విష్ణుః॥ "సీమంతోన్నయనంకర్మ నస్త్రీసంస్కారఇష్యతే। కేచిద్గర్భస్యసంస్కారం గర్భంగర్భంప్రయుంజతే" = இந்தச் சீமந்தோந்நயநம் என்னும் கருமம் மாதராகிய க்ஷேத்திரம் = இடத்திற்குத் திருத்தமென்று உடன்படலாகாது. என்னையெனில்? சிலர் இதனைக்கருப்பத் திருத்தமென்றே யொவ்வொரு கருப்பத்திலும் செய்கின்றனர். எ-று. காண்க.

மேற்கூறிய விவ்விருவகைப்பக்கத்துள்ளும் அவரவர் கிருஹிய சூத்திரங்களுள் எவ்வாறுகூறப்பட்டுள்ளவோ? அவ்வாறு

அவரவரும் செய்துகொள்ள வேண்டுமென்றுணர்க. சீமந்தம்- எ-று. பன்றிமுள். உங்கயகம். எ-து. அம்முள்ளினுல் பாவட்டையின் மேலிழுத்தல் முதலியகருமம்.

சீமந்தம் செய்யாது பிறத்தல் விடயம்.

சத்திய விரதர். సత్యవ్రతః॥ "స్త్రీయదాకృతసీమంతా ప్రసూయేతకథంచన। గృహీతపుత్రాభివ త్పునస్సంస్కారమర్హతి" = கருப்பிணியாகிய மாது சீமந்த கருமத்தாற்றிருத்தமுறாது பிள்ளையைப் பெற்ருல், மகனைக்கையிலேந்திய அந்தமாது மீட்டும் திருத்தமுறத்தக்கவளாவள். எ-று. எனவே பின்பாவது செய்யவேண்டு மென்பது கருத்து. (இந்தச் சீமந்தகருமத்திற்குப் பிறந்தபிள்ளை பிழைத் திருத்தலே பயனுமென்று புராணங்களுட் கூறப்பட்டிருக்கின் றது). இக்கருமஞ் செய்தவிடத்துஞ் சிலர்க்குப் பிறந்தபிள்ளை பிழைத்து இல்லாமையால் அவர்கள் வெறுப்புற்று இச்சீமந்த கருமத்தினையே விட்டொழிந்தாராயினர். அவர்களைநோக்கிப் பலரும் அவ்வாறே விடலாயினர் பொருளின்மையிற் சிலர், மரணத் துன்பாற்சிலர், நாத்திகத்தாற் சிலர், இங்ஙனமாகப் பலர் பும்ஸவனம் சீமந்தம் என்னும் கருமத்தினையே விடுகின்றனர். ஆந்திரர் கன்னடர்களில் அநேகர் அவ்விருகருமகாலத்திலும் பொருள் செலவுசெய்து விழாக்கொண்டாடுவதன்றி விதிப்படி கருமஞ் செய்வதில்லை. அது அவிசாரம்போலும். அவரை வினவியவழி இதுதான் தம்மரபு ஒழுக்கமென்பர். அதனைத்தவறென் றெண்ணித் தமிழரனைவரும் பெரும்பான்மையுந் தவறாது சீமந்த கருமத்தினை யொருதலையாக நடத்துகின்றனர். நடத்துவதே நூனெறி. விட்டாற் குற்றங் கூறுதலின். குற்றமாவது, கருப்பத் திருத்தம் மில்லாது பிறந்தபிள்ளை விராத்தியனென்னும் கொடும் பெயர்பெறுதலின்.

சாதகருமம்.

சாதகருமத்திற் குரியகாலம் யாஞ்ஞவற்கியராற் கூறப்பட்டது. యాజ్ఞవల్క్యః॥ "మాస్యేతజాతకర్మచ," = திங்கள் நிரம்பிப்பிறந்த அளவில்சாதகருமம் ஆம். எறு.

விஷ்ணு. విష్ణుః॥ "జాతకర్మతతఃకుర్యా త్పుత్రేజాతేయథోదితం" குழவி பிறந்தவுடன் நீராட்டித்தன் சாகையின் கிருஹ்ய சூத்திரத்தில் விதித்தபடி சாதகருமத்தைச் செய்யவேண்டும். எறு.

சம்வர்த்தர். సంవర్తః॥ "జాతెపుత్రేపితుస్స్నానం సచేలంతువిధీయతే"—புதல்வன் பிறந்தமாத்திரத்தில் தந்தைதரித்திருக்கும் ஆடையோடு நீராடவேண்டுமென்று விதிக்கப்படுகின்றது. எ-று. காண்க.

தொப்புட்கொடி அறுப்பதற்குமுன்பு சாதகருமஞ்செய்யவேண்டுமென ஹாரீதர் கூறினர். హారీతః॥ "ప్రాఙ్నాభివర్ధనాత్పుంసొ జాతకర్మవిధీయతే। మంత్రవత్ప్రాశనంచాస్య హిరణ్యమధుసర్పిషాం"—நாபிக்கொடி அறுப்பதற்குமுன்பாகப் புருடனுக்குச்சாதகருமம் விதிக்கப்படுகின்றது. பொன், தேன், நெய், இவைகளை மந்திரத்தோடு அக்குழந்தைக் கூட்டுதலும் விதிக்கப்படுகின்றது. எ-று. காண்க. இதுவே செவ்வெண்ணெயாம்.

குழவி பிறந்தவளவில் பிறந்தசூதகம் வந்தது என்ற ஐயத்தால் கருமத்தில் அப்போது அதிகாரம் இல்லையென்று கூறலாகாது. என்னையெனில், தொப்புட்கொடி அறுப்பதற்கு முன் பிறந்த சூதகமில்லையென்று ஜைமினி கூறுதலின். జైమినిః॥ "యావన్నఛిద్యతేనాళం తావన్నాప్నోతిసూతకం। ఛిన్నేనాళేతతఃపశ్చాత్సూతకంతువిధీయతే" தொப்புட்கொடி யறுக்குமளவுஞ் சூதகம் வருவதில்லை. அறுத்தபின்பே சூதகம் விதிக்கப்படுகின்றது. எ-று. காண்க.

விஷ்ணு தருமோத்தரம். విష్ణుధర్మోత్తరే॥ "అచ్ఛిన్ననాభ్యాంకర్తవ్యం శ్రాద్ధంవైపుత్రజన్మని। అశౌచాపగమేకార్యం మధవానియతాత్మభిః"—புதல்வன் பிறந்து தொப்புள் அறுப்பதற்கு முன்பு பிதிரர்க்குச் சிராத்தஞ் செய்யவேண்டும். இல்லையேல் சூதகங் கழிந்தபின்பு நியமமாக விருந்து பிதிர் சிராத்தம் செய்யவேண்டும். எ-று. காண்க.

அந்தச்சிராத்தம் பொன்னாற் செய்யவேண்டுமென வியாசர் கூறினர் వ్యాసః॥ "ద్రవ్యాభావేద్విజాభావె ప్రవాసెపుత్రజన్మని। హేమ్నాశ్రాద్ధంప్రకుర్వీత యస్యభార్యారజస్వలా"—உபகரணப்பொருளில்லாவிடினும், வேதியர் கிடையாவிடினும், வேற்றிடஞ்சென்றிருக்கினும், புதல்வன்பிறக்கினும் மனைவி பூப்பாய்விடினும், பொன்னால்பிதிர்சிராத்தஞ் செய்யவேடும். எ-று. காண்க.

ஆதித்தியபுராணத்துள் பாகஞ்செய்த அன்னத்தால் சிராத்தஞ் செய்யலாகாதெனக் கூறப்பட்டது. ఆదిత్యపురాణే॥ "జాతెశ్రాద్ధే

నదద్యాత్తుపక్వాన్నంబ్రాహ్మణేష్వపి। యస్మాద్భాంద్రాయణాచ్ఛుద్ధిస్తేషాంభవతినాన్యథా" குழந்தை பிறந்தால்செய்யும், சிராத்தத்தில் வேதியர்க்குப்பாகஞ் செய்த அந்நத்தைக் கொடுக்கலாகாது. என்னை? அந்த வேதியர்க்குச் சாந்திராயணத்தோடு சுத்தியாகவேண்டுமே யன்றி வேறு வகையாலில்லை. எ-று. காண்க.

அந்நாளில் தனக்குஇயன்ற வளாயில் தானதருமங்களைச் செய்யவேண்டுமென ஆதித்தியபுராணத்துட்கூறப்பட்டது. ఆదిత్యపురాణె॥ "దేవాశ్చపితరశ్చైవజాతేపుత్రేద్విజన్మనాం। ఆయాంతితస్మాత్తదహః పుణ్యంపూజ్యంచసర్వదా। తత్రదద్యాత్సువర్ణంతు భూమింగాంతురగంధనం" = இருபிறப்பாளர்க்கு மகன் பிறந்தால் அவர்களுடைய தேவரும் பிதிரும்அத்தினம் வருகின்றனராதலின், அப்பகல்முழுவதும் புண்ணியகாலமாயும், பூசைக்குத்தகுதியாயு மிருக்கும், அப்போது. பொன்னும், நிலமும், பசுவும், குதிரையும், திரவியங்களும், தானஞ் செய்யப்படும். எ-று. காண்க.

சங்கர். శంఖః॥ "సర్వేషాంసకుల్యానాం చతుష్పథధాన్యహిరణ్యాదిదద్యాత్" தன் மரபினரனைவருக்கும் நாற்றெருச்சதுக்கத்தில் தானியம், பொன், முதலியவற்றைக் கொடுக்கவேண்டும். எ-று, காண்க.

இந்தத்தானதருமங்களைச் சூதகத்தின் முதற்காலத்திற்செய்யவேண்டும். வருமாறு. "ఆశౌచేతుసముత్పన్నే పుత్రజన్మయదాభవేత్। కర్తుస్తాత్కాలికీశుద్ధిః పూర్వాశౌచేనశుధ్యతి"=ஆசூசம்வந்திருக்கும்போது, புதல்வற்பேறுஉண்டாமாயின், அந்தக்கருத்தாவுக்குஅப்போதுமாத்திரம் சுத்தியுண்டாம். பின்னிருந்தஆசூசம் தடையாகமாட்டாது. எ-று. காண்க.

நாமகரணம்.

நாமகரணத்திற்கு யாஞ்ஞவற்கியர் கூறிய காலத்தினும் வேறுகாலம் மனுவால் வகுக்கப்பட்டது. మనుః॥ "నామధేయందశమ్యాంతు ద్వాదశ్యాంవాస్యకారయేత్। పుణ్యేతిథౌముహూర్తేవా నక్షత్రేవాగుణాన్వితే" பிறந்த மகவுக்குப் பத்தாநாளாயினும் பனிரண்டாநாளாயினும், புண்ணியதிதியில் நல்லநக்ஷத்திரத்தில் சிறந்தமுகூர்த்தத்தில்நாமகரணஞ்செய்யவேண்டுவது. எ-று. செய்வித்தல் வேண்டுமெனற் பாலதாய பிறவினை நிச்சுபபிரத்தியயம் அன்று. செய்யவேண்டு

மெனத் தன்வினைக்கண்வந்த நிச்சு எனக்கொள்க. என்னை? "తతస్తు నామకుర్వీత పితైవదశమేహని' "=பின்னர் பத்தாநாள் தந்தையேநாம காணம் செய்யவேண்டுமென விஷ்ணுபுராணத்துட் கூறப்படுத லின் .அல்லது, அத்தநிச்சுப்பிரத்தியயம் பிறவினைக்கண்ணேவந்த தென்றவழி தந்தையில்லாவிடினும், தகுதியற்றவனாயினும், தகு தியுடைய அன்னியாாலும் செய்விக்கலாமென்று கூறியவாறெ னக்கொள்க. நாமகரணம்=பேரிடுதல்.

சங்கர். శంఖః॥ "కులదేవతాదినక్షత్రాభిసంబంధంపితానామ కుర్యాదన్యోవా కులవృద్ధః "=குலமுறையால்வந்ததாயினும், தன்மரபு மூத்தோர தா யினும், தன்மரபு உபாசனைத்தெய்வத்ததாயினும், ஆதியென்றத னல் ஆசிரியன தாயினும், தன்னை ஆதரிப்போன் முதலியவரதா யினும், பிறந்த நக்ஷத்திரத்திரேடு தக்கசம்பந்தமுடைய எழுத் தோடுங்கூடியதும், பிறந்தமாசத்திற்குத் தக்கதுமாயுள்ள பெயர் களுள்ளொன்றைப் பிதாதரித்தல்வேண்டும். மரபின் மூத்தவர்க ளாலாயினும் தரிப்பிக்கலாம். எ-று. காண்க.

பௌடியபுராணம். భవిష్యత్పురాణే॥ "నామధేయందశమ్యాంచ కేచిది చ్ఛంతిసూరయః। ద్వాదశ్యామథవారాత్రౌ మాసేపూర్ణేతథాపరే। అష్టాదశేహనితథా వదంత్యేకాదశేపి వా "=பத்தாநாள் நாமகரணஞ் சிலபெரியர் கூறு கின்றனர். பன்னிரண்டாநாளாயினும்,இரவாயினும்,மாதநிரம்பிய வளவிலாயினும், பதினெட்டாநாட் பகலிலாயினும், பதினோரா நாளாயினும் செய்யலாமென்று சிலர் கூறுகின்றனர். எ-று. காண்க.

கிருஹியபரிசிஷ்டம். గృహ్యపరిశిష్టే॥ "జననాద్దశరాత్రేవ్యుష్టేసంవ త్సరేనామకరణం"=பிறந்ததுமுதல் பத்திராவுள்ளாயினும் வருடத் துளாயினும் நாமகரணஞ்செய்க. எ-று. காண்க. ஆகவே, நாம கரணகாலத்தை அவரவர் மரபின் வழக்கப்படிச் சான்றோர் வழக் கினைப்பற்றிக்கொள்க.

பெயரிலக்கணம்.

பெயரிடத்தக்க விலக்கணம் வருணவேறுபாட்டின்படி மனு கூறினர். మనుః॥ "మంగళ్యంబ్రాహ్మణస్యస్యాత్ క్షత్రియస్యబలాన్వితం। వైశ్యస్యధ నసంయుక్తం శూద్రస్యతుజుగుప్సితం। శర్మవద్బ్రాహ్మణస్యస్యాద్ రాజ్ఞోరక్షాసమన్వితం।

వైశ్యస్యపుష్టిసంయుక్తం శూద్రస్యప్రైష్యసంయుతం। స్త్రీణాంసుఖోద్యమక్రూరం విస్పష్టార్థంమనోహరం। మంగళ్యందీర్ఘవర్ణాంత మాశీర్వాదాభిధానవత్ " = வேதியனுக்குச் சுபத்தோடுகூடியது, வேந்தனுக்கு வலிமையைக்குறிப்பது, வைசியனுக்குப் பொருளுடைமை விளக்குவது, சூத்திரனுக்கு அடக்கத்தை யுணர்த்துவதுமாகியபெயர் தகுதியாம். அவற்றிற்குஉபபதம்=சேரத்தக்கபட்டப்பெயராவன, வேதியனுக்குச் சருமன் - எம், வேந்தனுக்கு, இரக்ஷன். எம், வைசியனுக்குப் புஷ்டியன், எம், சூத்திரனுக்குப் பிரேஷ்யன் எனவும் பொருளைத் தருகின்ற பரியாயப்பெயர்களும் தக்கவாம். மாதர்க்குக்கூற வினிமையுள்ளதும், கொடுமையற்றதும், விளங்கிய பொருளுடையதும், சுபமுடையதும், ஈற்றெழுத்து நெடிலாக விருப்பதும், ஆசிர்வாதமொழியுடையதுமாகிய பெயர் தக்கதாம். எ-று. உதாரணம். வேதியனுக்கு, ஸ்ரீசருமன், பூதேவன், எம், வேந்தனுக்கு, விக்கிரமபாலன், பலவருமன், எம், வைசியனுக்கு மாணிக்க சிரேஷ்டி, வசுபூதி, தனகுத்தன், எம், சூத்திரனுக்கு- அஹீனதாசன், தேவசேவகன், எனவும்வரும். இயமமிருதியில், தேவதத்தன், என்று வைசியனுக்குத் தத்தன் என்னுமொழியுங் கூறப்பட்டது. விஷ்ணு புராணத்தில், அந்நால் வருணத்தினர் பெயர்க்கும் முறையே சரும, வரும, குத்த, தாசஎன்னுமொழிகள் சேர்ந்துவரும் பெயராக விருத்தல் வேண்டுமென்று கூறப்பட்டது. மங்கலமுதலிய பெயர்மொழி முன்மொழியாயும், சருமமுதலியமொழிபின் மொழியாயும். இருத்தல் நன்மையது. மாதர் பெயர்க்கு உதாரணம். ஸ்ரீதாயி, சுசீலா என்பது முதலியன. மேற்கூறியவாறு தேவர்முதலிய பெயர்கள் வைப்புழி இத்தடையில்லை. அல்லதூஉம். முன்னையோர் பெயர்களும், இருடிகண் மு..லிய பெரியோர் பெயர்களும் உலகத்துட் பலவாறும். சிலது அலங்காரமாகவும், சிலதுஇலக்கணவிரோதமாயும் உள்ளன. அதனாலே தான், மரபு வழக்கப்படி, எம், பெரியோர் வகுத்தது, எம், கூறப்பட்ட.து என்றுணர்க.

பைஜாவாபர் இன்னும் சிலவகுத்தனர். బైజావాపః॥ "పితానామకరోత్యే కాక్షరంద్వ్యక్షరం త్ర్యక్షరం చతురక్షరమేవమపరిమితం వాఘోషవదాద్యమంతస్థాంతరస్థం దీర్ఘాభిష్ఠానాంతం "=தந்தை தன்சந்ததிக்கு ஓரெழுத்துடையது. அல்லதிரண்டு, மூன்று, நான்கு, இலலையேல்இன்

னும் அதிகரித்தபெயரை யிடுகின்முன். அப்பெயருள் கோஷ எழுத்து முதலிலும், அந்தஸ்த எழுத்து நடுவிலும், நெடிலும் விசர்க்கமும் கடையெழுத்தாயும் யிருக்கவேண்டும். எறு. கோஷ எழுத்தாவது, வருக்கத்துள் மூன்ருவது நான்காவது. எனவே பத்தெழுத்துக்களாம். அவையாவன, గ, ఘ, జ, ఝ, డ, ఢ, ద, ధ, బ, భ, என்பன. அந்தஸதங்கள் என்பன – య, ర, ల, వ, என்னும் இடையினம் நான்குமாம். அஷிஷ்டானம் எனவே விசர்க்கமென்னும் இருசுழியாம், அது, ః, என்பது. பெயர்க்குதாரணம். భద్రపాలః, జయదేవః, என்ருற்போல்வன.

நாமகரணப்பயன்.

நாமகாணத்தின் பயனைச் சங்கலிகிதர் கூறினர். శంఖలిఖితౌ॥ "ఏవంకృతేనామ్నికులతత్పూతంభవతి" = இங்ஙனம் நாமகரணஞ் செய்தால் அந்தச்சந்ததி பரிசுத்தமாம். எறு. காண்க.

நிஷ்கிரமணகருமம்=சந்திமிதிப்பித்தல்.

மனு. మనుః॥ "చతుర్థేమాసికర్తవ్యం శిశోర్నిష్క్రమణంగృహాత్"=நாலாவது திங்களில் குழவியைச் சந்தி மிதிப்பிக்கவேண்டும். எறு. காண்க.

அவ்விடயத்துட் செய்யப்படுவனவற்றை இயமன்கூறினர். యమః॥ "తతస్తృతీయేకర్తవ్యం మాసిసూర్యస్యదర్శనం। చతుర్థేమాసికర్తవ్యం శిశోశ్చంద్రస్యదర్శనం" = மூன்ருந்திங்களில் குழவிக்குச் சூரியனைத்தரிசிப்பிக்கவேண்டும். நான்காவது திங்களில் சந்திரனைத்தரிசிப்பிக்கவேண்டும். எறு. காண்க.

உலோகாக்ஷி. లోకాక్షిః॥ "తృతీయేర్ధమాసేదర్శనమాదిత్యస్య" = மூன்ரும் பக்கத்தில் சூரியனைப்பார்த்தலாம். எறு. காண்க. மூன்ரும் பக்கம்=நாற்பத்தைந்தாநாள்.

புராணம். పురాణే॥ "ద్వాదశేహనిరాజేన్ద్ర శిశోర్నిష్క్రమణంగృహాత్। చతుర్థేమాసివాకార్యంతదన్యేషాంచసమ్మతం" = பன்னிரண்டாநாள் குழவியை மனைக்கணின்று வெளிக்கொண்டுசென்று சந்தி மிதிப்பித்துவரவேண்டும். நான்காவது திங்களிலும் ஆமென்று சிலர் கூறி

னர். இவ்விடயத்தில் அவரவர் சாகைமரபின்படி யவரவர் நடத் செய்க. எறு. காண்க.

அந்நப்பிராசனம்.

மனு. మనుః॥ "అథాన్నప్రాశనంమాసి షష్ఠేకార్యంయథావిధి। అష్టమేవాపి కర్తవ్యం యచ్చేష్టంమంగళంకులే" = ஆருவதுதிங்களில் விதிப்படி அன்னம் உண்பிக்கவேண்டும். எட்டாவது திங்களிலும் செய்யலாம் தன்மரபின் வழக்கப்படி எது சுபமென்று விரும்பப்பட்டுள்ளதோ? அவற்றையெல்லாம் செய்யவேண்டும். எ-று. காண்க.

வேறுமிருதி. స్మృత్యంతరే॥ "పంచమాదౌతువిషమే మాస్యన్నంస్త్రీశిశోర్భవేత్" = ஐந்து முதலிய ஒற்றைப்பட்ட திங்களில் பெண்மக்களுக்கு அங்நப்பிராசனம் செய்வித்தல் வேண்டும். எ-று. காண்க.

சங்கர். శంఖః॥ "సంవత్సరేన్నప్రాశన మర్ధసంవత్సరేవా" = வருடமாகலும் அங்நப்பிராசனம் செய்யவேண்டும். ஆறுதிங்களிலும் செய்யலாம் என்பர் சிலர். எ-று. காண்க.

உலோகாக்ஷி. లౌగాక్షిః॥ "షష్ఠేమాసేన్నప్రాశనం జాతేషుదంతేషువా" ஆருவது திங்களிலாயினும் பன்முளைத்தவுடனாயினும் அங்ந மூட்டவேண்டும். எ-று. காண்க. (மூலைப்பால்வலி, தேகவலி, நோக்கி யுண்பித்தல் நலம் என்பது).

அந்நப்பிராசனஞ்செய்வகை.

மார்க்கண்டேயர். మార్కండేయః॥ "దేవతాపురతస్తస్య ధాత్ర్యుత్సంగగతస్యచ। అలంకృతస్యదాతవ్య మన్నంపాత్రేచకాంచనే। మధ్వాజ్యకనకోపేతం ప్రాశయేత్పాయసంసుతం। కృతప్రాశనముత్సంగా ద్ధాత్రీబాలంసముత్సృజేత్" = கடவுளெதிரில் குழவியை யலங்கரித்து வளர்க்குந் தாய்தொடைமீதிருத்திப் பொன், வெண்கலமுதலிய பாத்திரங்களிற்பாலோடுசமைந்த பாயசத்தையெடுத்துக்கொண்டு தேன், நெய், பொற்றுண்டத்தோடுமந்திரத்தால் அபிமந்திரித்து விதிப்படி யுண்பித்த பின்பு சிசுவைத் தொடைமீதினின்றுந் தரைமேல் விடவேண்டும். எ-று. காண்க.

ஜீவநபரீக்ஷாசகுநம்.

அங்நப்பிராசனம் செய்தபின்பு அக்குழவிக்கு சீவனவகை யெவ்வாறு கடவுளாணையுள்ளதோ? என்பதனை யறிந்துகொள்

றும் சகுனசோதனையை மார்க்கண்டேயர் கூறினர். మార్కండేయః॥ "అగ్రతో౽గ్నేః ప్రణస్యాస్య శిల్పభాండాని సర్వశః। శస్త్రాణి చైవ వస్త్రాణి తతః పశ్యేత్తు లక్షణం। ప్రథమం యత్స్పృశేద్బాల స్తతో౽బాఢం స్వయం తథా। జీవికా తస్య బాలస్య తేనైవ తు భవిష్యతి" =பின்பு அக்குழவியெதிராகச் சதுர்ப்பாடான வேலை செய்யப்பட்ட பண்டங்கள், பாத்திரங்கள், ஆயுதங்கள், ஆடைகள், புத்தகம்முதலியவற்றினை நிரவிவைத்து இலக்கண நோக்கிச்சோதிக்கவேண்டும். அவற்றுள் அக்குழவி எதனைத்தொடுகின்றதோ? அந்தச் சம்பந்தத்தொழிலே அவனுக்குப் பிழைக்கும் வகையாம். எ-று. காண்க.

சூடாகரணம்.

இயமன். యమః॥ "తతస్సంవత్సరే పూర్ణే చూడాకర్మ విధీయతే। ద్వితీయే వా తృతీయే వా కర్తవ్యం శ్రుతిచోదనాత్" = வருடநிரம்பியபின் சூடாகருமம்= மயிர்களையும் வினைவிதிக்கப்படுகின்றது. இரண்டாம்யாண்டிலாயினும் மூன்றும் யாண்டிலாயினும் வேதங் கூறியிருத்தலின் பிறந்த மயிரைக் களைதல்வேண்டும். எ-று. காண்க.

பைஜாவாபர். బైజావాపః॥ "తృతీయే వర్షే చూడాకరణం"=மூன்றும் வருடத்திற்சூடாகருமம். எ-று. காண்க.

சங்கர். శంఖః॥ ,"తృతీయే వర్షే చూడా కర్మ పంచమే వా" = மூன்றும் வருடத்திற் சூடாகருமம், ஐந்திலும்ஆகும். எறு. காண்க.

உலோகாக்ஷி. లౌగాక్షిః॥ "తృతీయస్య వర్షస్య భూయిష్ఠే గతే చూడాకరణం" = மூன்றும்வருடத்திலும் அநேகமாசங்களும் கழிந்தபின்பு சூடாகருமம் செய்யவேண்டும். எறு. காண்க.

ஆசுவலாயனர். ఆశ్వలాయనః॥ "తృతీయే వర్షే చౌలం యథాకులధర్మం" மூன்றும்யாண்டில் விதிப்படிமயிர் களைவினைசெய்ய வேண்டும். மரபொழுக்க வழக்கின்படி யாவது செய்யலாம். எறு. சௌலமென்பதும் விதிப்படி மயிர்களைதல். சூடாகருமம் என்பது குடுமிவிடுதல்.

சிகைவிடுதல்.

இருடியர் பேதங்களாற் சிகைவிடுதலின் வகைகளைஉலோகாக்ஷிகூறினர். లౌగాక్షిః॥ "దక్షిణతః కజావసిష్ఠానాముభయతో౽త్రి కాశ్యపా

నాంముండా భృగవఃపంచ చూడాఅంగిరసాంమండలార్థశిఖినాన్యే యథాకులధర్మంవా" வசிட்டசந்ததியார் வலப்பால்குடுமி, அத்திரி, காசிபர் சந்ததியார்க்கு இருபுறமும்குடுமி, பிருகுசந்ததியார் பிறந்தமயிர் முற்றுங்களைவர், அங்கிரசுசந்ததியார் ஐந்துகுடுமியுடையராவர். ஏனையர், பிறைவடிவுடையராவர். அல்லது, அவரவர் மரபு வழக்கப்படியுமாம். எ-று. காண்க. அவரவர் சாகைமுறைப்படி செய்துகொள்க. என்பது.

உபநயநமில்லாதவர்தருமம்.

ஈண்டு, சிகைவினைவாயில் கூறப்பட்ட தருமமனைத்தும் உபநயந மில்லாதவனைப் பற்றியதாம் ஆதலின், அதனோடியையுடையசில, வுபநயநமில்லாதவன், தருமங் கூறப்படுகின்றன. வருமாறு. கௌதமர். గౌతమః॥ "ప్రాగుపనయనాత్కామ చారకామవాద కామభక్షఇతి" = உபநயந மாவதன்முன் விரும்பியவாறுபோதல், செய்பவன், விரும்பியவாறுபேசுவோன், விரும்பிய புசிப்போனுகவிருப்பன். எறு. காண்க. "కామచారః" = இச்சைக்கு ஒத்த நடையையுடைவன். "కామభక్షః" = பழயது முதலிய இச்சித்த பண்டங்களைத் தின்போன். "కామవాదః" = வைதல் முதலிய கொடுமொழி கூறுவோன். என்றுணர்க.

விஷ்ணுபுராணம். విష్ణుపురాణే॥ "భక్ష్యాభక్ష్యేతథాపెయె వాచ్యావాచ్యేతథానృతె। అస్మిన్కాలెనదోషస్స్యాత్సయావన్నోపనీయతె" = உண்ணத்தகாதனவற்றை யுண்டல், குடிக்கத்தகாதன குடித்தல், பேசலாகாதனபேசல், பொய்கூறல்,இவை உபநயநத்திற்கு முன்குற்றமன்று. எ-று. இந்த இச்சித்தஉண்டி மஹாபாதகத்திற்குக்காரணமாகிய பொருளையொழித்து, சிறு குற்றங்களுக்குக் காரணமாகியவுண்ணத் தகாதனவற்றை யுண்ணும்விடய மெனக்கொள்க.

மிருதிசங்கிரகம். స్మృతిసంగ్రహే॥ "స్వేచ్ఛాకామచారభక్షోక్తి ర్మహాపాతకాదృతె"=வேண்டியபடிவேண்டியபொருளையுண்ணலாமென்றசொல் மஹாபாதகத்தை யொழித்தது. எறு. காண்க.

வசிட்டர். వశిష్ఠః॥ "నహ్యస్యవిద్యతెకర్మ కించిదామౌంజిబంధనాత్। వృత్త్యాశూద్రసమస్తావ ద్యావద్వేదేనజాయతె" = எதுகாறும் வேதமுடையனவதில்லையோ ? அதுகாறும் நடையாற் சூத்திரனேயாக விருக்

கின்றான். இரு பிறப்பாளனுக்கு உபநயந மாகும் வரையில் யாதொருகருமமும் இல்லை. எ-று. காண்க.

கௌதமர். గౌతమః॥ "యథోపపాదితమూత్ర పురీషోభవతినతస్యా చమనకల్పోవిద్యతే నబ్రహ్మోభివ్యాహరేదన్యత్ర స్వధాయానినయనాత్" — உபநயநம் ஆகும் வரையில் மலமூத்திரங்களைவேண்டிய வாறுகழிக்க. அவனுக்கு ஆசமன விதியில்லை. வேதஎழுத்தினையும் கூறலாகாது. வேண்டுமாயின் ஒவ்வோர்கால் "சுவதா" என்றமொழியினைமாத்திரம் கூறலாம். எ-று. காண்க.

வித்தியாரம்பம்.

மார்க்கண்டேயர். మార్కండేయః॥ "ప్రాప్తేతుపంచమేవర్షే హ్యప్రసుప్తేజనార్దనే। షష్ఠీంప్రతిపదంచైవ వర్జయిత్వాతథాష్టమీం। రిక్తాంపంచదశీంచైవ సౌరిభౌమదినేతథా। అనిషిద్ధేసుకాలేతు విద్యారంభంచకారయేత్। పూజయిత్వాహరింలక్ష్మీం దేవీంచైవసరస్వతీం। స్వవిద్యాసూత్రకారంచ స్వాంవిద్యాంచవిశేషతః। ఏతేషాంచైవదేవానాం నామ్నాతుజుహుయాద్ఘృతం। దక్షిణాభిర్ద్విజేంద్రాణాం కర్తవ్యంచాత్రపూజనం। గణేశంప్రథమంపూజ్య దేవీమథురమాతృకాం। ప్రాఙ్ముఖోగురురాసీనో వరుణాభిముఖం శిశుం। అధ్యాపయేత్తుప్రథమంద్విజైస్తుసుపూజితైః। తతఃప్రభృత్యనధ్యాయా న్వర్జనీయా న్వివర్జయేత్। అష్టమీద్వితయంచైవ పక్షాంతేచదినత్రయం। వర్జయేత్ప్రతిపత్పూర్వం సంధ్యాస్వపివిశేషతః" — ஐந்தாமாண்டுவருதலும்விஷ்ணுநித்திரை செய்யாத காலில் (எனவே சாதுர்மாசியமாகிய நான்குதிங்களுமொழியமற்றைதிங்கள்). ஷஷ்டி, பிரதமை, அட்டமி, சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி, பூரணை, அமாவாசை, சனிக்கிழமை, செவ்வாய்க்கிழமை, இந்த திதிவாரங்களையொழித்து நல்லோரையில்வித்தியாரம்பஞ்செய்வித்தல்வேண்டும். கணபதியையும் அக்கரமாதாவாகிய தெய்வத்தையும், விஷ்ணுவையும், இலக்குமி, பார்வதி, சரச்சுவதியையும், பூசித்து, தன்சாகையையும், தான் கற்கத்தக்கநூலினையும், அதன் இருடியையும், அபிமானி தெய்வத்தையும் குறித்து, நெய்யால் ஹோமஞ்செய்து, வேதியரைப்பூசித்து, தக்ஷிணைகள் கொடுத்து, ஆசிரியன்கிழக்குமுகமாக விருந்து, சிறுவனை மேற்குமுகமாகவிருத்தி, முதற்கண்வேதியர்முன்னிலையாற் படிப்பித்தபின் முறையே ஓதுவித்தல்வேண்டும். விடத்தக்க காலங்களையும், ஓதலாகாதகாலங்களையும், விட்டுவிடவேண்டும், இரண்டுஅஷ்டமி, இருபக்க

முடிவின் மூன்றுநாட்கள், பிரதமை, சந்திகாலங்களுமாகியவி வற்றில் படிக்கவுமாகாது படிப்பிக்கவுமாகாது. எ-று. காண்க.

உபநயநம்.

மனு. మనుః॥ "గర్భాష్టమెబ్దెకుర్వీత బ్రాహ్మణస్యోపనాయనం। గర్భాదెకాదశెరాజ్ఞో గర్భాత్తుద్వాదశెవిశః। బ్రహ్మవర్చసకామస్య కార్యంవిప్రస్యపంచమె। రాజ్ఞోబలార్థినష్షష్ఠె వైశ్యస్యార్థార్థినోష్టమె। ఆషోడశాద్బ్రాహ్మణస్య సావిత్రీనాతివర్తతె। ఆద్వావింశాత్క్షత్రబంధో రాచతుర్వింశతెర్విశః। అతఊర్ధ్వంత్రయోప్యేతె యథాకాలమసంస్కృతాః। సావిత్రీపతితావ్రాత్యా భవంత్యార్యవిగర్హితాః। నైతైరపూతైర్విధివ దాపద్యపిహికర్హిచిత్। బ్రాహ్మాన్యౌనాంశ్చసంబంధాన్నాచరెద్బ్రాహ్మణస్సహ"=கருப்பமானதுமுதல் எட்டாமாண்டினுக்குள் வேதியனுக்கு உபநயநஞ் செய்யவேண்டும். பதினொன்றில் க்ஷத்திரியனுக்கு. பனிரண்டில் வைசியனுக்கு. பிரமவொளி வேண்டிய வேதியனுக்கு ஐந்தாமாண்டு, வலிமையை விரும்பிய வேந்தனுக்கு ஆறுமாண்டு, பொருளை வேண்டிய வசியனுக்கு எட்டாமாண்டு உபநயநகாலமாம். வேதியனுக்குப் பதினாறுவயது வரையிலும், க்ஷத்திரியனுக்கு இருபத்திரண்டாண்டு வரையிலும், வைசியனுக்கு இருபத்துநான்கு வயதுவரையிலும் சாவித்திரிதெய்வம் = காயத்திரி விட்டொழிவதில்லை. அதுகாறும் உபநயந மில்லையாயின் அதன்பின் காலத்தில் உபநயநகருமங் தவறிய அம்மூவருணத்தரும் நிலைகெட்டவர்களாய் பெரியரா லிகழப்படுவர். அவரோடு ஆபற்காலத்திலும் வேதியன் எவ்வகைச் சம்பந்தமும் செய்யலாகாது. எறு. காண்க.

ஆபத்தம்பர். ఆపస్తంబః॥ "సప్తమెబ్రహ్మవర్చస కామమష్టమ ఆయుష్కామం నవమెతెజస్కామం దశమెన్నాద్య కామమెకాదశ ఇంద్రియకామం ద్వాదశెపశు కామం" = பிரமவொளியை வேண்டினவனை எழாமாண்டிலும், ஆயுளைவிரும்பினவனை எட்டிலும், ஆற்றலை விரும்பினானை ஒன்பதிலும், உண்டியை விரும்பினவனைப் பத்திலும், இந்திரியம் பொறிகளை விரும்பினவனைப் பதினொன்றிலும், பசுவைவிரும்பினானைப் பன்னிரண்டா மாண்டிலுமாக உபநயநம் செய்யவேண்டும். எறு. இது மூவருணர்க்கும் பொதுவாம்.

வருணவகைமையாற் காலநியமங்களை அவ்வாபத்தம்பர்கூறினர். ఆపస్తంబః॥ "వసంతెబ్రాహ్మణముపన యీతగ్రీష్మెరాజన్యం శరదివైశ్యం"=

வசந்தவிருதுவில் வேதியச்சிறுவனுக்கும், கிரீஷ்ம இருதுவில் க்ஷத்திரிய மகவுக்கும், சரதிருதுவில் வைசியக்குழவிக்கும் உப நயநம் செய்யவேண்டும். எ-று. காண்க.

வருணமுறைமையானே உபநயநஞ்செய்யும் வகைமையை மனுமுதலியோர் கூறினர். మను:॥ "కార్ష్ణరౌరవబాస్తాని చర్మాణిబ్రహ్మచారిణః। వసీరన్నానుపూర్వ్యేణ శాణక్షౌమావికానిచ" = கரியமான்றோல், புள்ளிமான்றோல், யாட்டின்றோல், இவற்றைநிரலே பிரமக்ஷத்திரிய வைசியபிரமசாரிகள் உத்தரீயமாகப் போர்க்கவும், சணல்நார், பட்டு, முதலிய ஆடைகளையும் போர்த்தலுமாம். எ-று. காண்க.

சங்கர். శంఖః॥ "కృష్ణరురుబస్తాజినాన్యుత్తరీయాణి" =மான்றோல், புள்ளிமான்றோல், யாட்டின்றோலே யுத்தரீயவாடையாம். எ-று.

வசிட்டர். వసిష్ఠః॥ "కార్ష్ణాజినముత్తరీయం బ్రాహ్మణస్య రౌరవగ్ంరాజన్యస్యగవ్యంబస్తాజినంవా వైశ్యస్య" = வேதியனுக்குக்கறுத்த ஆண்மான்றோல், அரசனுக்குப் புள்ளிமான்றோல், வைசியனுக்கு எருதின்றோலாயினும் யாட்டின்றோ லாயினும் உத்தரீயமாம். எ-று. காண்க.

பாரஸ்கரர். పారస్కరః॥ "ఐణేయమజినముత్తరీయం బ్రాహ్మణస్యరౌరవగ్ం రాజన్యస్యాజంగవ్యం వా వైశ్యస్యసర్వేషాంవాగవ్యం" = இதன்பொருள்மேற்கூறியவாறும். எல்லாவருணத்தர்க்கும்கோவின்றோலாமென்பது விசேடம். எ-று. காண்க.

ஆபத்தம்பர். ఆపస్తంబః॥ "వాసశ్శాణక్షౌమాజినాని కాషాయంచైకేవస్త్రముపదిశంతిశుక్లకార్పాసవస్త్రంబ్రాహ్మణస్య మాంజిష్ఠంరాజన్యస్య హారిద్రంవైశ్యస్య" = பருத்திநூலாடை, நாராடை, பட்டாடை, இவ்வாடையாயினுமாக.சிவப்புக்காவியாடையையும்சிலர்கூறுவர்.வெண்ணூலாடை வேதியனுக்கும், வெண்பட்டாடை வேந்தனுக்கும், மஞ்சளாடை வசியனுக்கும், ஆம். எ-று. காண்க.

வசிட்டர். వసిష్ఠః॥ "శుక్లమహతంవాసో బ్రాహ్మణస్యకార్పాసం మాంజిష్ఠం క్షౌమంక్షత్రియస్యపీతంకౌశేయం వైశ్యస్య" = வெள்ளையாய்க் கிழிபடாது பருத்தியாலான ஆடைவேதியனுக்காம். மஞ்சளும் சிவப்புங்கலந்ததாய் சிறிகியதாய் நாணயமுடைய பட்டாடை முதலியன

அரசனுக்கு ஆம் மஞ்சள் நிறமுடைய நாராடை வசியனுக்கு ஆம். எறு. காண்க.

அரைஞாணினைப்பற்றி மனுகூறினர். మనుః॥ "మౌంజీత్రివృత్స మాశ్లక్ష్ణా శస్త్రాఽప్రస్యమేఖలా। క్షత్రియస్యతుమౌర్వీజ్యా వైశ్యస్యశణతాంతవీ"= முஞ்சிப்புல்லினால் மூன்றிழையாகச் சேர்த்து, ஒத்தபடி மெதுவாயும் வழுவழுப்புடையதாயு முள்ள அரைஞாண் வேதியனுக்குச் சிறந்தது. வில்லுக்குக்கட்டுங் கயிறுவேந்தனுக்கு, சணல்நார் வைசியனுக்கு. எறு. காண்க.

இயமன். యమః॥ "విప్రస్యమేఖలామౌంజీజ్యా మౌర్వీక్షత్రియస్యతు। శాణ సూత్రీతువైశ్యస్య మేఖలాధర్మతస్స్మృతా। ఏతేషామప్యభావేతుకుశాశ్మాంతకబల్వజైః। మేఖలాత్రివృతాకార్యా గ్రంథినైకేనవాత్రివృత్" = முஞ்சிப்புல் லரைஞாண் வேதியனுக்கு, வின்னாணி அல்லது முறுவற்புல் அரசனுக்கு, சணல்நார் வைசியனுக்கு, தருமமாயுள்ளனவாம். இது மேகலையென்னப்படும் இவை கிடையாவழி, தருப்பை, அசுமாந்த நார்=நாணல், வைக்கோல், பல்பஜம்=சவட்டைக்கோரை என்னுமொரு வகைப்புல், இவற்றாலரைஞாண் மூன்றிழையாகச் செய்ய வேண்டும். ஒருமுடியேனும் மூன்றுமுடியேனும் இடவேண்டும். எறு. காண்க.

மனு. మనుః॥ "ముంజాభావేతుకర్తవ్యాః కుశాశ్మాంతకబల్వజైః। త్రివృతాగ్రంథినైకేన త్రిభిఃపంచభిరేవవా" = முஞ்சிப்புல் கிடையாவழி தருப்பை, நாணல், சவட்டைக்கோரை இவற்றுள் ஒன்றின் மூன்றிழையால், ஒன்று, மூன்று, ஐந்துமுடிகளிட்டு அரைஞாண் செய்யவேண்டும். எறு. காண்க.

பிரமசாரிதண்டு.

மனு. మనుః॥ "బ్రాహ్మణోబైల్వపాలాశౌ క్షత్రియోవాటఖాదిరౌ। పైలౌదుంబరౌవైశ్యా దండానర్హంతిధర్మతః" = வேதியன் வில்வக்கோலையேனு முருக்கங்கோலையேனும் தண்டமாகக் கொள்க. வேந்தன் ஆல், கருங்காலி, வைசியன் அரசு, அத்தி, இவற்றுளேதேனுமொன்றைத் தருமமாகக்கொள்க. எறு. காண்க. அரசினை. இரளியென்பாருமுளர்.

இயமன். యమః॥ "ఏతేషామప్యభావేతు సర్వేషాం సర్వయజ్ఞియాః"= அதுகிடையாவழி வேள்விக்கு உதவுகின்ற எல்லாமரக்கோடும் தக்கதாக விருக்கின்றன.

தண்டினளவு.

மனு. మనుః॥ "కేశాంతికోబ్రాహ్మణస్య దండఃకార్యఃప్రమాణతః। లలాటసమ్మితోరాజ్ఞః స్యాత్తునాసాంతికోవిశః" = சிகைவரையிலுயரமுள்ள தண்டு வேதியனுக்கு, நெற்றிவரையிலுயரமுள்ளது அரசனுக்கு, மூக்குவரையி லுயரமுள்ளது வசியனுக்குஆம். எ-று. காண்க.

கௌதமர். గౌతమః॥ "మూర్ధలలాటనాసాగ్రపరిమాణాదండాః"= மேலுரைத்தவரையே இதற்கும் என்க.

தண்டவிலக்கணம்.

மனு. మనుః॥ "ఋజవస్తేతుసర్వేస్యు రవ్రణాస్సౌమ్యదర్శనాః। అనుద్వేగకరానౄణాం సత్వచోనాగ్నిదూషితాః" = வளைவறநீண்டது, காயப்படாதது, பார்ப்பதற்கு அழகாயுள்ளது, அச்சத்தை விளையாதது, மேற்பட்டையோடுங்கூடியது, நெருப்புப்படாதது. தண்டமாம். எ-று.

கௌதமர். గౌతమః॥ "అపీడితాయూపవక్రాస్సవల్కలాః"= பிளத்தல்நசுக்குண்டல் முதலிய பீடையற்று முனையோடும் பட்டையோடும் கூடியதண்டம் சிறந்தது. எ-று. காண்க.

பூணநூல்.

மனு. మనుః॥ "కార్పాసముపవీతంస్యా ద్విప్రస్యోర్ధ్వవృతంత్రివృత్। శాణసూత్రమయంరాజ్ఞోవైశ్యస్యావికసూత్రకం"= பருத்தியால்நூற்கப்பட்டுமுப்புரியுடையமூன்றிழைகூடி மேனின்றும் கீழ்தொங்கத்தக்க பூணநூல்வேதியனுக்காம். சணல்நாராற் சமைந்ததுஅரசனுக்கு. கம்பளிக்கயிற்றூல்செய்தது வைசியனுக்கு ஆம். எ-று - கம்பளி - எது. யாட்டின்மயிர்.

பைட்டீநசி. పైఠీనసిః॥ "కార్పాసముపవీతంస్యాద్బ్రాహ్మణస్యక్షౌమేయం రాజన్యస్యావికంవైశ్యస్య" = பருத்திநூல் வேதியனுக்கு, பட்டுநூல் அரசனுக்கு, யாட்டுமயிர்நூல் வைசியனுக்கு, ஆம். எ-று. காண்க.

இங்ஙனம் கூறியபூணநூல் கிடையாவழி பசுவின்வால் மயிர் முதலியவற்ருல் செய்துகொள்ளக் கூடுமெனத்தேவலர் கூறினர். దేవలః॥ "కార్పాసక్షౌమగోవాల శణవల్కతృణాదికం। సదాసంభవతాకార్య ముపవీతంద్విజాతిభిః" = பருத்தி, பட்டு, பசுவால்மயிர், சணல், மரநார், வைக்கோல் முதலியவற்றுள் கிடைத்ததனுல் பூணநூல் செய்து இருபிறப்பாளர் எப்போதும் தரிக்கலாம்.

இருடிசிருங்கர். ఋష్యశృంగః॥ "అపివావాససాయజ్ఞోపవీత ధారణంకుర్యాత్తదభావేత్రివృతాసూత్రేణ" = ஆடையாலாயினும் பூணநூலைத்தரிக்கலாம். ஆடைகிடையாவழி மூன்றிழை நூலாலாயினும் தரிக்கலாம். எறு. ஆடை=வஸ்திரம்.

அச்சூத்திரத்தை ஒன்பதுஇழையாற் செய்கவெனத்தேவலர் கூறினர். దేవలః॥ "యజ్ఞోపవీతంకుర్వీత సూత్రేణనవతంతుకం" = ஒன்பது இழைகளையுடைய புரிகளால் = சூத்திரத்தால் பூணநூல்செய்ய வேண்டும். எறு. காண்க.

காத்தியாயனர். కాత్యాయనః॥ "త్రివృదూర్ధ్వవృతంకార్యం తంతుత్రయమధోవృతం" = நீளமாக ஒருநூலைமுறுக்கி மூன்றுவிசை மூன்று போர்வை யாகமேலேசுற்றி அதனை (எனவே அம்முப்புரியுடையதனை) பின் மூன்றுவிசை கீழ்சுற்றினுல் அது ஒன்பது இழைகளையுடைய பூணநூலாம். எறு. காண்க.

மேலே சுற்றுமிலக்கணத்தினைச் சங்கிரககாரர் கூறினர். సంగ్రహకారః॥ "కరేణదక్షిణేనోర్ధ్వం గతేనత్రిగుణీకృతం। వళితంమానవేసూత్రం శాస్త్రేఊర్ధ్వవృతంస్మృతం" = வலக்கரத்தால் முக்கால் மூன்றிழைகளை மேலே சுற்றினுல் அது நூல்களில் "ஊர்த்துவ விருத்த" மென்று கூறப்படுகின்றது. எறு. காண்க.

பூணநூலுபயோகம்.

பூணநூலுபயோகத்தைத் தேவலர் கூறினர். దేవలః॥ "గ్రామాన్నిర్గత్యసంఖ్యాయా షణ్ణవత్యంగుళీషుతత్। తావత్త్రిగుణితంసూత్రంప్రక్షాళ్యాబ్లింగకైస్త్రిభిః। దేవాగారేతథాగోష్ఠే నద్యాంవాన్యత్రవాశుచౌ। సావిత్ర్యాత్రివృతంకుర్యాన్నవసూత్రంతుతద్భవేత్। బిల్వాశ్వత్థాదియజ్ఞీయ వృక్షస్యాన్యతమస్యతు। బద్ధ్వాయాత్త్ర జీవంతుపితృభ్యోనమఇత్యథ। వామంనాపేక్షితవ్యంస్యాత్పితౄణాంతృప్తిదంహితత్। త్రిగపీ

దమేత్యరతలందే వానాంత్రిమిదంహితత్। సవ్యేమృదంగృహీంత్వాస్మిన్ స్థాపయేద్భూరితి బ్రువన్। పత్రంపుష్పంఫలంవాపి వ్యాహృతిభిశ్చనిక్షిపేత్। అభిమంత్ర్యాథభూరగ్ని శ్చేతి త్రివృత్కృయంత్రిభిః। హరిబ్రహ్మేశ్వరేభ్యశ్చ ప్రణమ్యావవధారితి" = உபவீதத்தினைச்செய்யுமுறை எவ்வாறெனின் ? ஊர்க்குவெளியில் தனித்தநல்லிடத்தில் தேவர்கோட்டத் துளாயினும், பசுக்கொட்டிலிலாயினும், யாற்றங்கரையிலாயினும், வித்தியாசாலை, ஜபசாலை. குருமட முதலிய சுத்தவிடங்களிலாயினும், சுத்தமுடைமையோடு நாற்றநல்லபருத்திநூலினைத்தொண்ணூற்றுறு அங்குலநீளமோரளவையாகக்கொண்டு முறிவுபடுதலில்லாத அந்நூலைஅவ்வளவோடுமூன்றுசுற்றுக வரும்படிசேர்த்து,வைத்துக்கொள்ளவேண்டும். அதுஒரு பூணநூலுக்குப் போதுமானதாம் அதனை வருணமந்திரத்தினுல் சலம்விட்டு நனைத்தலம்பி, சாவித்திரியோதி மறுபடி மூன்றிழையாக வரும்படி ஒரோ நீளமாக மேல்வட்டமாகவும் கீழ்வட்டமாகவும் கையிற்சுற்றிச் சேர்த்தால் அது நவசூத்திரம் = ஒன்பதிழையாம். அதனை "நவதந்து" எனவும் கூறுவர். இதுதொண்ணூற்றுறங்குலமுடைமையின் அதற்கு "ஷண்ணவதி" எனவுங்கூறப்படும். அந்தச்சூத்திரத்தினை மடித்துச்சேர்ப்பதற்கு உதவி வேண்டுமாயின் வில்வமரம், அரசமரம், முருக்கமாமுதலிய வேள்விக்குத்தக்க மரங்களில் ஒன்றனுள்மரட்டிச் சேர்த்துக் கொள்ளலாம். அவற்றுள்வலமாகச் சுற்றும்பொழுது தேவர்களைவணங்கி அம்மந்திரம்கூறவேண்டும். இடமாகச்சுற்றும்பொழுது பிதிரரைவணங்கி யம்மந்திரங் கூறவேண்டும். முதலில் நாற்றநூலினை மூன்று புரியாகச் சுற்றிக் கொண்டபின் அதனை அங்கையினுல் மூன்றுதரம் திற்றி அந்த "ஷண்ணவதி" யை வலக்காத்தால்பற்றி இடது கையிலுள்ள புனிதமாகிய மிருத்திகைக்கட்டியில் சுற்றிவைத்துப் பத்திரம், மலர், பழம் இவற்றால் "நவதந்துதேவதா" ஆவாகனஞ்செய்து பூசித்து, வியாகிருதி மந்திரங்களால் அபிமந்திரித்து, காயத்திரியாலும், வியாகிருதியாலும், உருத்திராக்கினி மந்திரங்களாலும் முச்சேர்க்கைசேர்த்து, மும்முதற்றலைவர்களையும் வணங்கி முப்புரியாக்கி யந்தப்பூணநூலை பூமிசுத்தி ஜலசுத்திமுதலிய முறைமையோடும் அபிமந்திரித்து, பிரமமுடியிட்டுப் பின்பு விதிப்படி சங்கற்பங்கூறி மந்திரமுறையோடு தரித்தல்வேண்டும். எ-று. காண்க. பிரமசூத்திரத்துட்

கூறியிருக்கும் "యజ్ఞోపవీతం" என்றதனையே கருமகாண்டத்துள் ளும் வேள்விப் பூணநூலைத் தரிப்பதற்கும் உபயோகிக்க வேண் டும். இந்த யாகப்பூணநூலுக்கும் "பிரம சூத்திரம்" என்ற பெயருமுண்டு.

பிரமகிரந்தி.

பிரமமுடியின் முறைமையைக் காத்தியாயனர் கூறினர். కాత్యాయనః॥ "త్రివృతంచోపవీతంస్యా త్తస్యైకోగ్రంధిరిష్యతే" = முப்புரிநூலினை மூன்றுசுற்றாக மடித்தால், அந்த "ஷண்ணவதிநவதந்து" "త్రివృతం" = திரிவிருதம் என்று கூறப்படும். அதுவே யாகவுபவீதமாம். அதற்கு ஒருபிரமமுடி யிருத்தல்வேண்டு மென்று உடம்படப்படுகின்றது. எறு. காண்க.

கௌதமர். గౌతమః॥ "శుద్ధక్షేత్రోత్థంకార్పాసం సమాదాయజీవభర్తృక యాసూత్రంకారితంత్రిగు ణంత్రిగుణీకృత్యైకోగ్రం ధిస్స్యాత్ప్రథమ స్తంతురోంకా రోద్వితీయోగ్ని దేవతాకస్తృతీయోనాకదైవత్యశ్చ తుర్థోవాయుదేవతాకః పంచమః పితృదైవత్యష్షష్ఠః ప్రాజాపత్యస్సప్తమో విష్ణుదైవత్యోష్టమ స్సార్వోనవమస్సర్వ శ్వార ఇతినవతంతుభిరేతచ్ఛ్రిష్టాసూత్రమాచక్షతే" = புனிதமாகிய இடத்தில் பிறந்த நல்ல பருத்தியைக் கொண்டுவந்து சுத்தமுடைய சுமங்கிலிகளால் நூல் நூற்பித்து, அதனை விதிப்படி முப்புரிசேர்த்து, பின் மறுபடியும் முப்புரியாகும்படிமடித்துஒன்பது இழையினையுடைய அந்தநூலினை ஒருபிரமமுடியிட்டு, தரித்தால் அது யாகவுபவீதம் என்னப்படும். அவ்வொன்பது இழைகட்கும் தேவதைகளாவார் முதல்பிரணவம், உ - வது. அக்கினி, ௩ - வது. சுவர்க்க தேவர். ௪ - வது. வாயு, ரு - வது. பிதிரர், ௬ - பிரசாபதி, எ - வது. விஷ்ணு, அ - வது. சூரியன், ௯ - வது. எல்லாமுடையான். எறு. காண்க.

பூணநூலளவு.

காத்தியாயனர். కాత్యాయనః॥ "పృష్ఠవంశేచనాభ్యాంచ ధృతంయద్విందతేకటిం। తద్ధార్యముపవీతంస్యా న్నాతిలంబంనచోచ్ఛ్రితం" = முதுகெலும்பின் மீதும், தொப்புளின்மீதும் விழும்படி இடைவரையும் இடது தோளிலிருந்து தொங்கியிருக்கும்படி யுபவீதத்தினைத் தரித்தல் வேண்டும். ஏறவும் ஆகாது குறையவுமாகாது. எறு. காண்க.

தேவலர். దేవలః॥ "స్తనాదూర్ధ్వమధోనాభే ర్నకర్తవ్యం కదాచన"= தனத்திற்குமேலே யிருக்கவும் நாபியின்கீழே கிடக்கவும் எப்பொழுதுஞ் செய்யலாகாது. எ-று. காண்க.

பூணூற்கணக்கு.

பிருகு. భృగుః॥ "ఉపవీతంవటోరేకం ద్వేతథేతరయోస్స్మృతే। ఏకమేవయతీనాంస్యా దితిశాస్త్రవినిశ్చయః" = பிரமசாரியனுக்கு ஒன்று, கிரகத்தன் வானப்பிரத்தனிவர்கட் கிரண்டு, சந்நியாசிக்கு ஒன்றுமாகப் பூணூலிருக்கவேண்டும் என்று நூன்முடிபு. எ-று. காண்க. இந்த அளவு எப்பொழுதுந் தரித்திருக்கவேண்டுவதனைக்குறித்தது. காமியத்தை விரும்பினவனுயின் பலபூணூலினைத் தரிக்கலாம். "బహూనివాయుష్కామస్య"=ஆயுளை விரும்பினவனுக்குப் பலவுபவீதங்கள். என்று தேவலர் கூறியிருக்கின்றனர். எ-று. காண்க.

பூணூல் தரிக்குங்காலம்.

பிருகு. భృగుః॥ "సదోపవీతినాభావ్యంసదాబద్ధశిఖేనచ। విశిఖోవ్యుపవీతీచ యత్కరోతినతత్కృతం। మంత్రపూతంస్థితంకాయే యస్యయజ్ఞోపవీతకం। నోద్ధరేచ్ఛత తత్ప్రాజ్ఞో యదీచ్ఛేచ్ఛ్రేయఆత్మనః। సకృచ్చధారణాత్తస్య ప్రాయశ్చిత్తీభవేద్ద్విజః"= இருபிறப்பாளன எப்பொழுதும் பூணூலுடையவனுயும் குடுமியை முடிந்தும் இருக்கவேண்டும். குடுமியும் பூணூலுமில்லாது செய்யும் கருமமெல்லாம் வீணும். மந்திரத்தாற் புனிதஞ் செய்யப்பட்ட பூணூலினைச் செல்வப்பேற்றை விரும்பிய அறிவன் நீக்கிவிடலாகாது. சிறுபோது தரியாவிடினும் பிராயச்சித்தம் உடையவனுவான். எ-று. காண்க.

தேவலர். దేవలః॥ "సూత్రంసలోమకంచేత్స్యాత్తతఃకృత్వా విలోమకం। సావిత్ర్యాదశకృత్వోద్భి ర్మంత్రితాభిస్తదుక్షిపేత్। విచ్ఛిన్నంవాప్యధోయాతం భుక్త్వానిర్మితముత్సృజేత్"= பூணூலுள் மயிர்சேர்ந்தால் அம்மயிரை வாங்கி எறிந்து,சாவித்திரி மந்திரத்தால் பத்துதரம்மந்திரித்தநீரை அதன்மேற் றெளிக்கவேண்டும். அறுந்ததனையும், கீழேவிழுந்ததனையும், உண்டபின் செய்ததனையும் விட்டுவிட வேண்டும். எ-று. காண்க.

பூணூற்குப்பழுது வந்தவழி.

மனு. మనుః॥ "మేఖలామజినందండ ముపవీతంకమండలుం। అప్సుప్రాస్యవినష్టాని గృహ్ణీతాన్యానిమంత్రవత్"=மேகலை=அரைஞாண், தோல், தண்டு,

உபவீதம், கரகம் = நீர்க்கரகம், இவற்றுள்பழுது பட்டதனை நீரிலெறிந்து புதியதனை மந்திரவிதிப்படி தரித்தல்வேண்டும். எ-று. எனவேபுதியது வந்தபின் பழையதனை விடுக. என்றபடி.

பிரமசாரியன்தருமம்.

மனு. మనుః॥ "ప్రతిగృహ్యేప్సితందండ ముపస్థాయచభాస్కరం। ప్రదక్షిణం పరీత్యాగ్నిం చరేద్భైక్షంయథావిధి" = தண்டினைக்கொண்டபின் உபநயநமுடையவனான பிரமசாரி காயத்திரி மத்திரத்தின் மாகா வாக்கியார்த்தமாகிய சூரியனை உபஸ்தானஞ்செய்து (எனவே சூரியனே தானென்று அபேதஅனுசந்தானமாக மந்திரங்களால் சேவித்து) அக்கினியைச்சேவித்து வலம்வந்து பின்பு பிக்ஷைக்குப்புறப்படவேண்டுவது. இத்தொழிலனைத்தினையும் விதிப்படி நடத்தவேண்டும். எ-று. காண்க.

தீயைவணங்கல்.

மனு. మనుః॥ "దూరాదాహృత్యసమిధ స్సన్నిదధ్యాద్విహాయసి। సాయంప్రాతశ్చజుహుయా త్తాభిరగ్నిమతంద్రితః" = சேய்மைக்கணிருந்து சமித்துக்களைக் கொண்டுவந்து, நிலத்தின்மேல் வையாது மேலிடத்தில் வைத்திருந்து, காலையிலையில் அந்தச்சமித்துக்களைத் தீயினிடத்துச் சோர்வின்றி ஹோமஞ்செய்யவேண்டும். எ-று. காண்க. இக்கருமத்திற்குச் "சமிதாதானம்" என்று பெயராம். சிலர் அக்கினிகாரிய மெனவும் கூறுப.

சமித்துக்கோல்.

பைஜாவாபர். బైజావాపః॥ "పురాస్తమయాత్ప్రాగుదీచీం దిశంగత్వాఅహింసన్న రణ్యాత్సమిధ ఆహరేచ్ఛుష్కా బ్రహ్మవర్చసకామ ఆర్ద్రాస్స్వన్నాద్యకామ ఉభయీరుభయకామః" = சூரியன் அஸ்தமான மாவதற்கு முன் வடக்கேனும் கிழக்கேனும் சென்று, இமிசைசெய்யாது சமிதைகளைக்கொண்டு வரவேண்டும். பிரம வொளியை விரும்பினவன் உலர்ந்த சமிதைகளையே தரவேண்டும். உண்டிமுதலியவற்றினை விரும்பினோன் பச்சை சமிதைகளைக் கொண்டு வரவேண்டும். இருவகை யினையும் விரும்பினோன் அவ்விருவகைச் சமித்துக்களையுந் தரவேண்டும். எ-று. சமித்து = ஹோமத்திற்குரியவிறகு.

சமித்தினிலக்கணம்.

காத்தியாயனர். కాత్యాయనః॥ "నాంగుష్ఠాదధికాకార్యా సమిత్స్థూలతయా క్వచిత్। నముక్తాత్వచాచైవ నసకీటానపాటితా। ప్రాదేశాన్నాధికాన్యూనా తథా నస్యాద్విశాఖికా। నసపర్ణానిర్వీర్యా హోమేషుతువిజానతా। ఏకోర్ణాపదళాప్రహ్రస్వా వక్రాససుషిరాకృశా। దీర్ఘాస్థూలాఘుణైర్జుష్టా కర్మసిద్ధివినాశికా" = பெருவிரற் கனத்திலுக்கு மிக்கதாகாது. மேற்பட்டை போக்கலாகாது. புழுக்கடி. சொத்தையாகாது. சூடுண்டதாகாது. ஓர் ஒட்டை நீளமுள்ளதாகவேண்டும். கவர்கிளையுடையதாகாது. கனுவற்றதாகாது. பழையதாகாது. பிளந்ததாகாது. நடுவடுப் பட்டதாகாது, சிறியதும் முருடுமாயுள்ளதாகாது. புழுமுதலியவற்றால் துளைபட்டதாகாது. கனமற்று இலேசானதாகாது. அதிகநீளம் அறச்சிறிது மிகப்பெரிது முதலிய குற்ற மற்றிருத்தல் வேண்டும். இது சமித்துக்களினிலக்கணமாம். தோஷமுடையசமித்து, கருமசித்தியைக்கெடுத்துவிடும். எ-று. காண்க.

சமித்துக்களின்வகை.

வாயுபுராணம். వాయుపురాణే॥ "పాలాశ్యస్సమిధః కార్యాః ఖాదిర్యస్తదలాభతః। శమీరోహితకాశ్వత్థా స్తదలాభేర్కవేతసౌ" = முருக்கஞ் சமிதை கொள்க. இல்லையேல் கருங்காலி. அல்லது, வன்னி. "உரோகிதகம்" = செம்மரம். (சிவப்பு நாயுருவி வழக்கத்துள்ளிருக்கின்றது.) அரசு. கிடையாவழி, எருக்கு. அல்லது, "வேதசம்" நீர்க்குளவஞ்சியையேனுங்கொள்க. எ-று. எதுவுங் கிடையாவழிதருப்பையால் செய்வது வழக்கத்துள்ளிருக்கின்றது.

தீக்காரியஞ்செய்யாவழி.

ஆரீதர். హారీతః॥ "పురా జగ్రాహ వై మృత్యుర్హింసయన్బ్రహ్మచారిణం। అగ్నిస్తం మోచయామాస తస్మాత్పరిచరేచ్చ తం" = முன்னாளில் மிருத்தியுதெய்வம் ஒருபிரமசாரியை இமிசைசெய்து பிடித்துக் கொண்டது. அக்கினிஅவனை விடுவித்தது. ஆதலின், பிரமசாரிஅக்கினியைப் பூசிக்கவேண்டும். எ-று. காண்க. இக்கதையைக் கூறியதனால் அக்கினியைவணங்காவழிமிருத்தியு வுண்டாமென்பது கருத்து.

பிக்ஷைவிதி.

பிச்சை யெடுக்கும் வகையை யாஞ்ஞவற்கியர் கூறினர். యాజ్ఞవల్క్యః॥ "బ్రాహ్మణేషు చరేద్భైక్ష మనింద్యేష్వాత్మవృత్తయే। ఆదిమధ్యావసా

శేషు భవచ్ఛబ్దోపలక్షితా। బ్రాహ్మణక్షత్రియవిశాం భైక్షచర్యాయథాక్రమం"=வேதியன், பழிப்பற்ற வேதியரிடத்துத் தன்சீவனத்தின் பொருட்டுப் பிச்சையேற்றுஉண்ணவேண்டும். வேதியன் "பவதிபிக்ஷாந்தேஹி" "எனவும், க்ஷத்திரியன் பிக்ஷாம்பவதிதேஹி" எனவும், வைசியன் "பிக்ஷாந்தேஹிபவதி" யெனவும்கூறிப்பிச்சையேற்கவேண்டுவது. எ-று. காண்க. வேதியன், வேதியர்களிடத்துப்பிச்சையேற்க என்றதனால் அவ்வவ்வருணத்தாரும் தத்தம் வருணத்தாரிடத்தே பிச்சையேற்கவேண்டுமென்ற வாறுயிற்று.

வியாசர். వ్యాసః॥ "బ్రాహ్మణక్షత్రియవిశ శ్చరేయుర్భైక్షమన్వహం। సజాతీయగృహేష్వేవ సార్వవర్ణికమేవవా"=பிரமக்ஷத்திரியர் வசியர் தம்வருணத்தர் மனையிடத்தே பிச்சை யேற்றல் வேண்டும். எல்லா வருணத்தர்மனையிலாயினுமாக. எ-று. காண்க.

ஆபற்காலபச்சைவிதி.

எல்லா வருணத்து மென்றது ஆபற்காலத்தினைப் பற்றியதென பௌடிய புராணத்துட் கூறப்பட்டது. భవిష్యత్పురాణే॥ "చాతుర్వర్ణ్యంచరేద్భైక్షమలాభేకురునందన" = பிச்சைகிடையாவழி நான்குவருணத்தும் பிச்சையேற்றலாம். எ-று. காண்க.

பிச்சைவிலக்கு.

ஆபற்காலத்துள்ளும் சூத்திரனல் பக்குவப்படச் சமைத்த பண்டங்களைப் பெறலாகாதென அங்கிரசு கூறினர். అంగిరాః॥ "ఆమమేవాదదీతాస్మా దవృత్తావేకరాత్రికం। ఆమంపూయతిసంస్కారై ర్ధర్మ్యంతేభ్యఃప్రపంచితం। తస్మాదామంగ్రహీతవ్యం శూద్రాదప్యంగిరోఽబ్రవీత్" = பிழைப்பில்லாவழிப்பகன் முழுதும் பட்டினிகிடந்து, அன்றிரவுக்குப் போதுமான அளவு "ఆమమేవ"=வல்சி=வேகாத பச்சையரிசி முதலியவற்றினை மாத்திரமே சூத்திரனற்பெறலாம். அந்த வல்சி திருத்தஞ் செய்யப்பட்டால் சுத்தமாய் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுப் புண்ணியக்கருவியாகின்றது. ஆதலின், சூத்திரனற் பெறவேண்டி வந்தவழியும், அந்த வல்சியையே பெறவேண்டும். எ-று. எனவே சமைத்தன பெறலாகாது எனத்தேற்றேவகாரத்தால் பொருள்படுகின்றது.

ஆபற்காலமில்லாவழிப்பிச்சைவிதி.

ஆபற்கால மில்லாவிடத்து, எனவே, சென்றிடத்துப் பிச்சைபிறக்குங் காலத்துட்டன் வருணத்தரிடத்தும், தக்கோர்மனை தேடி அங்குபிச்சையேற்கவேண்டுமெனமனுகூறினர். మనుః॥ "వేదయజ్ఞైరహీనానాం ప్రశస్తానాంస్వకర్మసు। బ్రహ్మచార్యాహరేద్భైక్షం గృహేభ్యః ప్రయతోన్వహం" = பிரமசரியன் வேதங்களாலும், வேள்வியாலும் தங் கருமத்துள் குறைவுபடாத உத்தமர்கள்மனைக்கணின்றும் நாடோறும் சோர்வின்றிப் பிச்சையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். எ.று. காண்க.

பிச்சைக்குரியவிடம் மனு கூறினர். మనుః॥ "గురోఃకులేనభిక్షేత నజ్ఞాతికులబంధుషు। అలాభేత్వన్యగేహానాం పూర్వంపూర్వంపరిత్యజేత్। సర్వంవాపిచరేద్గ్రామం పూర్వోక్తానామసంభవే। నియమ్యప్రయతోవాచ మభిశస్తాంచవర్జయేత్" = ஆசிரியன்மனை, ஞாதியர் மனை, சுற்றத்தினர் மனை பிச்சை புகலாகாது. ஏனையோர் வீடுகிடையாவழி, முற்கூறிப்போந்த நிடேதங்களை ஒவ்வொன்ருக விடப்படும். யாருங்கிடையாவழி; ஊர் முற்றும் பிச்சைபுகலாம். முயற்சியோடும் மௌனத்தோடும் பிறாற் பழிக்கப்படும் மனையைவிட்டுப் பிச்சை யேற்கவேண்டும். எனவே, தானுள்ளவூரில் கிடைக்கத்தக்க தகுதியுள்ள தன் வருணத்தார் மனையில் பிரமசாரியாகிய இருபிறப்பாளன் பிச்சைச் சோறுபெற்றுப் புசிக்கவேண்டும். அப்படிப்பட்டது கிடையாவழிச் சுற்றத்தினர் மனைக்குப்போகலாம். அதுவுமில்லாவழி ஞாதியர் மனைக்குப்போகலாம். அதுவும் பெருவழி ஆசிரியன் மனையாம். எதுவுங்கிடையாவழி ஊர் முழுதும் பிச்சைகொள்க. ஆயின் பழிக்கப்பட்டார் மனைக்குச் செல்லலாகாது. எ.று. காண்க.

ஆயின். "మాతరంవాస్వసారంవా మాతుర్వాభగినీంనిజాం। భిక్షేతభిక్షాంప్రథమం యాచైనంనవమానయేత్ ॥ తదుపనయనాంగ భిక్షావిషయం" = தாயையேனும், உடன்பிறந்தாளையேனும், அன்னையோ டுடன்பிறந்தாளையேனும் முதற்பயிக்கம் இரத்தல்வேண்டும். எந்தமாது பிச்சையில்லையென்று தன்னை யவமானஞ்செய்யாளோ? அவளை முன் சென்றிரத்தல்வேண்டும்; என்ற இப்பொருளுடைய அவ்வுரை

யென்னெனில் உபநயநகருமத்திற்கு அங்கமாயுள்ள முதற் பிச்சையைப்பற்றிக் கூறப்பட்டது எனக்கொள்க.

பிச்சையளவு.

அந்தப்பிச்சை தான்உண்ணுமளவே தரவேண்டும். விசேடமாகத்தந்தால் குற்றம்வருமென இயமன் கூறினர். యమః "ఆహార మాత్రాదధికం నక్వచిద్భైక్షమాహరేత్। యుజ్యతేస్తేయదోషేణ కామతోధికమాహరన్" தான் உண்பதற்கேனும் அதிகமாக எங்கும் பிச்சை யேற்றலாகாது. இச்சையால் அதிகம் பெற்றுவந்தவன் திருடினவன் பாவத்தைப்பெறுவன். எறு. காண்க.

பிச்சைச்சோற்றினுபயோகம்.

கொடுவந்த அந்தப்பிச்சைச் சோற்றினைக் குரவனிடத்துக் கொடுத்துப்பின், அவர்ஆணையைப் பெற்றுப்புசிக்க வேண்டுமென மனுவும் இயமனும் கூறினர். మనుయమౌ॥ "సమాహృత్యాపితద్భైక్షం యావదర్థమమాయయా। నివేద్యగురవేశ్నీయా దాచమ్యప్రాఙ్ముఖశ్శుచిః" = பிச்சைச்சோற்றினைக் கொடுவந்து வஞ்சிப்பின்றிப் பாதி குரவனுக்குக் கொடுத்து, அவர் கட்டளைபெற்று, ஆசமித்து, கிழக்குமுகமாகவிருந்து பரிசுத்தனய் உண்ணவேண்டும். எறு. காண்க.

குரவன் நேரிடாவழி அவர் பன்னிமுதலியோர்க்குத் தரவேண்டுவது என்று கௌதமர் கூறினர். గౌతమః॥ "నివేద్యగురవేనుజ్ఞాంతతోభుంజీతసన్నిధౌ। గురోరభావేతద్భార్యా పుత్రసబ్రహ్మచారిణాం" = கொண்டுவந்தபிச்சைச் சொற்றினைக் குரவனுக்கு அறிவித்து அவராணை பெற்றுக்கொள்க. அவரில்லாவழி, அவர்பன்னி, அல்லது, அவர் மகன், அல்லது, ஒருங்குகற்ற ஒருசாலை மாணுக்கர்கட்காயினும் தெரிவித்துப்பின் புசிக்கக்டவன். எறு. காண்க.

பிச்சைச்சோற்றின் சமஸ்காரம்.

குரவனல் கட்டளைபெற்ற பிச்சைச் சோற்றினைச் சுத்தமாக்கிக்கொண்டு புசித்தல் வேண்டுமென யாஞ்ஞவற்கியர் கூறினர். యాజ్ఞవల్క్యః॥ "కృతాగ్నికార్యోభుంజీత వాగ్యతోగుర్వనుజ్ఞయా। ఆపోశనక్రియాపూర్వం సత్కృత్యాన్నమకుత్సయన్" = அக்கினிகாரிய முடித்துக் குரவனருள்பெற்று வாய்பேசாது, அன்னத்தினைச் சுத்தமாக்கிப்பழியாது, ஆபோசனம்பெற்றுப்புசிக்கவேண்டும். எறு. காண்க.

ஹாரிதர். హారీతః॥ "భైక్షముపకల్పితంపర్య గ్నికృతమాదిత్యం దర్శితంగురవేని వేదితమనుజ్ఞాతమమృతసమ్మితం మాహారస్త్వ్యదశ్నాతి బ్రహ్మచారీబ్రహ్మసిద్ధిమవాప్నోతి"= வேண்டுமளவான பிச்சையன்னம் கொடுவந்து தீயைவலம் புரிந்துவைத்து, சூரியனுக்குக்காட்டிநிவேதனம் செய்து, குரவனுக்கு அர்ப்பித்து வணங்கிக்கட்டளை பெற்றால் அப்பலியன்னம் அமுதத்தோடொப்பெனப் பெரியர் கூறுவர். அதனைப் புசித்ததனால் பிரமசாரியன் வேதத்துள் உண்மை ஞானத்தைப் பெறுவன். எ-று. காண்க.

கௌதமர். గౌతమః॥ "సాయంప్రాతరభిపూజితమనిందన్భుంజీత"=காலைமாலை அக்கினி, சூரியன், குரு இவர்கள் பூசையைச்செய்து, பலியன்னத்தைப்பழுது கூறாது புசிக்கவேண்டும். எறு. காண்க.

பிரமசாரியுண்டி நியமம்.

பிரமசாரியன் ஒருபோதுண்டி யுண்ணுதலை மனுவிலக்கினர். మనుః॥ "భైక్షేణవర్తయేన్నిత్యం నైకాన్నాదీభవేద్వ్రతీ। భైక్షేణవ్రతినోవృత్తి రుపవాససమాస్మృతా। వ్రతవద్దేవదైవత్యే పిత్ర్యేకర్మణ్యథర్షివత్। కామమభ్యర్థితోఽశ్నీయా ద్వ్రతమస్యనలుప్యతే"=பிரமசாரிய விரதமுடைய மாணி நாடோறும் பலியுண்டியை, யுண்ணுதலினால் சீவித்திருக்க வேண்டும். ஒற்றைப்போதுண்டிருத்தலாகாது. பிரமசாரியனுக்குப் பிச்சைசோறுண்டி பட்டினிவிரதத்தோ டொத்தது. பிரமசாரியன் தேவகருமத்தில்தேவரோபோலும், பிதிர்கருமத்தில்இருடியேபோலும், வேண்டுமளவும் ஐயமேற்றுண்ணவேண்டும். அவ்வுணவால்அவன் விரதத்திற்குக் குறைவுண்டாவதில்லை. எறு. காண்க.

அப்பிச்சைசெய்யாமை.

மனு. మనుః॥ "అకృత్వాభైక్షచరణమసమిధ్యచపావకం। అనాతురస్సప్తరాత్రమవకీర్ణివ్రతంచరేత్"=பிரமசாரி ஆதுரமென்னும் குற்றமில்லாவழி (எனவே, நோய் முதலியஇடையூறில்லாத காலத்தில் என்றபடி) பயிக்கம் புகாமலும் அக்கினி யுபாசனை செய்யாமலும் எழு நாள்வரையிலும் விட்டிருந்தால், விரதநிலை கெட்டவன் செய்து கொள்ளத்தக்க "அவகீர்ணிப்பிராயச்சித்தம்"செய்துகொள்ள வேண்டும். எறு. காண்க.

பிரமசாரியன் தருமம்.

உபநயனஞ் செய்யப்பட்ட வனுடைய ஒழுக்கங்களை இயமன் கூறினர். యమః॥ "దండంకమండలుంవేదం మౌంజీంచరశనాంతథా। ధారయేద్బ్రహ్మచర్యంచ భిక్షాన్నాశీగురావసన్" = தண்டு, கமண்டலம், முஞ்சியரைஞாண், இவற்றைத் தரித்துக் குரு மனையிலிருந்து கொண்டு பலிச்சோறு ஏற்றுப்புசித்து, வேதத்தைத்தரித்துப் பிரமசரிய விரதத்தை யனுட்டித்தல் வேண்டும். எ-று. வேதம். என்பது ஈண்டுத்தருப்பைக் கற்றை.

இதுவுமது. "మేఖలామజినందండ ముపవీతంచనిత్యశః। కౌపీనంకటిసూత్రంచ బ్రహ్మచారీచధారయేత్" = முஞ்சி யரைஞாண், மான்றோல், தண்டு, பூணநூல், கோவண அரைஞாண், இவற்றைப்பிரமசாரி தரித்தல் வேண்டும். எ-று: காண்க. முஞ்சியரைஞாண்வேறு, கோவணந் தரிக்கும் நூல் அரைஞாண் வேறு எனக்கொள்க.

மனு. మనుః॥ "అగ్నీంధనంభైక్షచర్యా మధశ్శయ్యాంగురోర్హితం। ఆసమావర్తనాత్కుర్యాత్కృతోపనయనోద్విజః" = உபநயநஞ் செய்யப்பட்ட விருபிறப்பாளன் குருவின் மனையிலிருக்கும்பொழுது சமாவருத்தனகாலம் வரும்வரையில் நாடோறும் அக்கினிபூசை, சமித்துக்கள்தருதல், பலியேற்றுண்டல், தரைமேற்படுத்தல், குரவன் குறிப்பின்படியொழுகல் இத்தருமங்களைச் செய்யவேண்டும்.எ-று.

சுமந்தர். సుమంతుః॥ "బ్రహ్మచర్యంతపోభైక్షం సంధ్యయోరగ్నికర్మచ। స్వాధ్యాయోగురువృత్తిశ్చ చరేయుర్బ్రహ్మచారిణః" = பிரமசாரியர்கள்பிரமசரியவிரதத்தையும், தவத்தையும், பலிச்சோறுண்டலையும், இருவகைச்சந்தியிலும் அக்கினிகாரியத்தினையும், வேத மோதலையும், குரவன் பணிவிடையையும், விடாது செய்துவருவர். எ-று. காண்க.

குரவனிடத்தொழுகும்ஒழுக்கம்.

குருபணிதிறத்தினை வியாசர் கூறினர். వ్యాసః॥ "జఘన్యశాయీ పూర్వంస్యా దుత్థాయీగురువేశ్మని। యచ్చశిష్యేణకర్తవ్యం యచ్చదాసేనవాపునః। కృతమిత్యేవతత్సర్వం కృత్వాతిష్ఠేతపార్శ్వతః। కింకరస్సర్వకారీచ సర్వకర్మసుకోవిదః। అభుక్తవతినాశ్నీయా దపీతవతినోపిబేత్। నతిష్ఠతితథాసీత నాసుప్తేప్రసుపేత్తథా" = பிரம

சரியன் குருவீட்டில் வசிக்குங் காலத்தில், இரவில் எல்லாரும் படுத்தபின் படுத்து முன்னெழுக. சிடன் பணிமுற்றுஞ்செய்க. அடிமைசெய்யத் தக்கனவற்றையும்செய்க. எத்தொழிலைக் கூறி னும் செய்துவிட்டுப் பின்தெரிவித்துப் பக்கத்துவந்துநிற்க. எது செய்யவேண்டுவதோ என்று எதிர்ப்பார்த்து நிற்கவேண்டும். எல்லாப் பணிவிடைகளையும் செய்பவனாயும், எல்லாத் தொழி லினும்வல்லனாயுமிருத்தல்வேண்டும். குரவன் உண்ணுமுன் தான் உண்ணலாகாது. குடிப்பதற்குமுன் குடிக்கலாகாது. இருப்ப தற்குமுன் இருக்கலாகாது. படுக்குமுன் படுக்கலாகாது. எ-று. காண்க.

விசுவாமித்திரர். విశ్వామిత్రః॥ "తద్భార్యాపుత్రయోశ్చైవ వృద్ధానాంధ ర్మశీలినాం। శుశ్రూషాసర్వథాకార్యా ప్రణామాదిభిరవచ" =குருமனைவிக்கும், குருபுத்திரனுக்கும், தருமந்தவறாத விருத்தர்கட்கும், நமஸ்கார முதலிய வற்றோடு பணிவிடைகளை எப்பொழுதும் செய்ய வேண்டும். எ-று. காண்க.

பிரமசாரிக்குவிலக்கு.

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యః॥ "మధుమాంసాంజనోచ్ఛిష్ట శుక్తస్త్రీ ప్రాణిహింసనం। భాస్కరాలోకనాశ్లీల పరివాదాంశ్చవర్జయేత్" = தேன், யாடு முதலியவற்றின் ஊன், நெய்முதலிய பூச்சு, கண்ணுக்குமை, குரவனை யொழித்தேனையர் எச்சில், நிட்டூரமொழி, பெண்போ கம், சிவக்கொலை, உதயாத்தமன காலத்தில் சூரியனைநோக்கு தல், பொய்யுரையாடல், பிறர்குற்றம் கூறல், ஆதிஎன்றதனால், சந்தனம், பூ, பாக்குவெற்றிலை முதலியவற்றினையும் ஒழித்தல் வேண்டும். எ-று. காண்க.

மனு. మనుః॥ "వర్జయేన్మధుమాంసంచ గంధంమాల్యంరసాన్ స్త్రియః। శు క్తానియానిసర్వాణి ప్రాణినాంచైవహింసనం। అభ్యంగమంజనంచాక్ష్ణో రుపానచ్ఛత్రధా రణం। కామంక్రోధంచలోభంచ నర్తనంగీతవాదనం। ద్యూతంచజనవాదంచ పరివాదంత థానృతం। స్త్రీణాంచప్రేక్షణాలంభ ముపఘాతంపరస్యచ। ఏకశ్శయీతసర్వత్ర నరేత స్స్కందయేత్క్వచిత్" = தேன், ஊன் = மாமிசம், சந்தனம், வாசனைப் பண்டங்கள், பூக்கள், அலங்காரப்பண்டங்கள், பூமா லை, தித்திப்புமுதலிய அறுசுவைகளையும் அனுபவிக்கலாகாது.

பெண் புணர்ச்சியாகாது. புளித்தகாடி முதலிய மதத்தோற்ற நீரினைத் தொடலாகாது. செருக்குண்டாக்கும் பண்டங்களைப் புசிக்கலாகாது, சீவக்கொலை செய்யலாகாது. எண்ணெய் பூச லாகாது. மையிடலாகாது. செருப்பு அணியலாகாது. குடை பிடிக்கலாகாது. விடயத்தில் அதிக விச்சை வைக்கலாகாது. கோவமாகாது. உலோபஞ் செய்யலாகாது. கூத்துப் பார்த் தலாகாது. சங்கிதம்வாத்திய முதலிய கேட்கலாகாது. சூதாட லாகாது. வம்புபேசலாகாது. பிறர்பழி கூறலாகாது. பொய்பேச லாகாது. போகவாசையால் மாதரைப்பார்க்கலாகாது. தொட லாகாது.பேசலாகாது. பிறர்க்குக்கெடுதி செய்யலாகாது. தாழ்ந் தபடுக்கையிற் றனியேபடுத்தல் வேண்டும். எப்போதும் சுக்கி லத்தை வேண்டுமென்று விடுத்தலாகாது. எ-று. காண்க.

இயமன். యమః॥ "ఖట్వాసనంచశయనం వర్జయేద్దంతధావనం। స్వపేదేకః కుశేష్వేవ నరేత్సస్కందయేత్క్వచిత్" = கட்டிலிற் படுக்கலாகாது. ஆச னங்களின் மீதிருத்தலாகாது. மெத்தைகொட்டை பரப்பிப்படுக் கலாகாது. பல்விளக்கலாகாது. தருப்பைமீது தான் தனியே படுக்கவேண்டும். எங்கும்இரேதசுவை வெளிப்படுத்த லாகாது. எ-று. காண்க.

குருவுச்சிட்டப்பிரசாதம்.

கூர்மபுராணம். కూర్మపురాణే॥ "నాదర్శంచైవమీక్షేత నాచరేద్దంతధావనం। గురూచ్ఛిష్టంభేషజార్థం ప్రయుంజీతనకామతః" = கண்ணாடி பார்த்த லாகாது. பல்விளக்கலாகாது. நோய் வந்தால் பரிகாரத்தின் பொருட்டுக் குரவன் எச்சிலை மருந்தாகப் புசித்தல்வேண்டும். வேண்டும்போ தெல்லாம் புசிக்கலாகாது. எ-று. காண்க.

ஆபத்தம்பர். ఆపస్తంబః॥ "పితుర్జ్యేష్ఠస్యచభ్రాతురుచ్ఛిష్టంభోక్తవ్యం" = பிதாவின் எச்சில், மூத்ததமையன் எச்சில் புசித்தல் வேண்டும். எ-று. காண்க.

குரவன்மகன் எச்சில் புசித்தலாகாது என மனு கூறினர். మనుః॥ "ఉత్సాదనంచగాత్రాణాం స్నాపనోచ్ఛిష్టభోజనే। నకుర్యాద్గురుపుత్రస్య పాదయోశ్చావనేజనం। అభ్యంజనంస్నాపనంచగాత్రోత్సాదనమేవచ। గురుపత్న్యానకార్యాణి కేశానాంచప్రసాధనం" = உடம்புதேய்த்தல், பரிசித்தல், நீராட்டுவித்

தல், எச்சிலெப்புசித்தல், கால்கழுவல், இவைபோன்ற பணிகளைக் குரு புத்திரனுக்குச் செய்யலாகாது. எண்ணெய் தேய்த்தல், நீராட்டல், உடம்புதேய்த்தல், மயிர்கோதல், இவற்றினைக் குரு மனைவிக்குத்தானுஞ் செய்யலாகாது. அவராற்றான் செய்வித்துக் கொள்ளுதலு மாகாது எ-று. காண்க.

பிரமசரியவிரதகால அளவு.

யாஞ்ஞுவற்கியர். యాజ్ఞవల్క్యః॥ "ప్రతివేదంబ్రహ్మచర్యం ద్వాదశాబ్దానిపంచవా। గ్రహణాంతికమిత్యేకే కేశాంతంచైవషోడశే" = ஒவ்வோர் வேதத்திற்கும் பன்னிரண்டு பன்னிரண்டு யாண்டு, அல்லதுஐவைந்தி யாண்டாகவாயினும் பிரமசரிய விரதம் செய்யவேண்டும். முழுவதுங்கற்கும் வரையிலெனச்சிலர் கூறுவர். "కేశాంతం"= கேசாந்தம் என்பது, கோதானமென்னுங் கருமம் பதினாறாமாண்டிற் செய்யவேண்டும். எ-று. காண்க.

கௌதானிக கருமகாலம்.

மநு. మనుః॥ "కేశాంతఃషోడశేవర్షే బ్రాహ్మణస్యవిధీయతే। రాజన్యబంధోర్ద్వావింశే వైశ్యస్యద్వ్యధికేతతః" = கேசாந்தமென்னும் கருமம் பதினாறாமாண்டில் வேதியனுக்கு விதிக்கப்படுகின்றது. க்ஷத்திரியனுக்கு இருபத்திரண்டாம்யாண்டிலும் வைசியனுக்கு இருபத்துநான்காம் யாண்டிலுமாம். எ-று. காண்க.(கேசாந்தகருமம் என்பது பிரமசரிய விரதத்தின்பொருட்டு அதிகமாகத் தரித்திருந்தசிகைமயிர்களைத் தீக்ஷை விடுகையென்னு மந்திர விதிப்படி க்ஷௌரம் செய்வித்தல். இதனைக்கௌ தானிககருமம். எனவும் கூறுவர். "దో" என்றபகுதிக்கு அவகண்டனம் என்பது பொருள். "గో" என்பதுமயிர். ஆகவே கோதானம் என்பது மயிர்களைதலாம்).

இயமன். యమః॥ "ద్వాదశవర్షాణిచతుర్వింశతిమేవవా। షట్త్రింశతంవావర్షాణి ప్రతివేదంవ్రతంచరేత్" = பன்னிருயாண்டு, அல்லது, இருபத்துநான்கி யாண்டு, இல்லையேல், முப்பத்தாறி யாண்டு, ஒவ்வொரு வேதத்திற்கு விரதங்களை அனுட்டிக்க வேண்டும். எ-று. இதுவேதத்தைப் பெறும்கருத்தாற் கூறியது.

மனு. మనుః॥ "షట్త్రింశదాబ్దికం చర్యం గురౌ త్రైవేదికం వ్రతం। తదర్ధికం పాదికం వా గ్రహణాంతికమేవ వా" = குருவின் மனையில் முப்பத்தாறு வருடம்மூன்று வேதவிரதங்களை யனுட்டித்தல் வேண்டும். அதிற் பாதி, அல்லது நான்கிலொருபங்கு, இல்லையேல், முற்றும்பெறு மளவாயினுமாம். எ-று. காண்க.

இங்ஙனமாகக் கூறப்பட்ட இலக்கணங்களை யுடைய பிரம சாரியர் இருவகைப்படுவர். அவருள், ஒருவன் "உபகுர்வாணன்" எனவே, உபகாரஞ்செய்துகைம்மாறுபெறுபவன். ஏனையன் "நைட் டிகன்" அனுட்டானமுடையோன். இவருள், உபகுர்வாணனது தரு மங்கூறியவாறுயிற்று. இனிநைட்டிகனைப்பற்றிக்கூறப்படுகின்றது.

நைட்டிகப்பிரமசாரியன் ஒழுக்கம்.

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యః॥ "నైష్ఠికో బ్రహ్మచారీ తు వసేదాచార్యసన్నిధౌ। తదభావేఽస్య తనయే పత్న్యాం వైశ్వానరేఽపి వా" = நைட்டிகப் பிரம சாரியாயின் ஆசிரியன் சந்நிதிக்கண்ணே யிருத்தல்வேண்டும் அவரில்லாவழி, அவரது மகனிடத்தேனும், மனைவியிடத்தே னும், ஒருவருமில்லாவழி வேள்வித்தீயிடத்தேனுமிருந்து பணி செய்து கிடக்கவும். எ-று. காண்க.

மனு. మనుః॥ యది త్వాత్యంతికో వాసో రోచేతాస్య గురోః కులే। యుక్తః పరిచరేదేనమాశరీరవిమోక్షణాత్। ఆచార్యే తు ఖలు ప్రేతే గురుపుత్రే గుణాన్వితే। గురుదారే సపిండే వా గురువద్వృత్తిమాచరేత్। ఏతేష్వవిద్యమానేషు స్థానాసనవిహారవాన్। ప్రయుంజానోఽగ్నిశుశ్రూషాం సాధయేద్దేహమాత్మనః" = இந்த பிரமசாரிக்குத் தன் னுயுள் முடிவு வரையிலும் குருமனைக்கட்டானே இருத்தல் வேண்டுமென்னும் சுவை தோன்றினல் தேக முடிவு வரையி லும், அக்குரவனை யடைந்து உத்தமனுய்ப் பணிசெய்திருக்க வேண்டும். குரவனிறந்தால் குரு புத்திரருள் யார் குணவானே அவனிடத்திருக்கலாம். அவனில்லாவழி, குருபத்தினியிடத்தில். அவளில்லாவழி, அவரது நெருக்கமுள்ள தாயாதியிடத்தில் இருந்துகுரவனிடத்தி லொழுகியவாறு ஒழுகவேண்டும். யாரு மில்லாவழி, இடம், ஆசனம், மனை, முதலியகுரவன் பொருளை யடைந்து வேள்வித்தீயோம்பி, தன்தேகத்தைமுடித்துக்கொள்ள வேண்டும். இது, நன்னடையுடைய வேதியனுகிய குருமுதலி யோர் விடயம். எ-று. காண்க.

இதுவுமது. "నాబ్రాహ్మణేగురౌశిష్యో వాసమాత్యంతికంవసేత్। బ్రాహ్మణే వాననూచానే కాంక్షన్గతిమనుత్తమాం" = நற்கதிவிரும்பிய மாணுக்கன் வேதியனல்லாத குரவன் பணிசெய்து, அவ்வளவுகாலம்வரையி லிருக்கலாகாது. அந்தணகுரவனே யாயினும், வேதத்தை முற்றும் முறையே ஓதாத மரபில்வந்த குரவனிடத்திலும் அவ்வாறு இருத்தலாகாது. எறு. காண்க.

வசிட்டர். వశిష్ఠః॥ "బ్రహ్మచర్యంచరేన్నిత్య మాశరీరవిమోక్షణాత్" = தேகம் ஒழியும்வரையில் பிரமசரிய விரதத்தினை அனுட்டிக்க வேண்டும். எறு. "ఆచార్యేచప్రేతేఽగ్నిం పరిచరేత్" = குரவனிறந்தால், வேள்வித்தீயினை யோம்பி யிருத்தல்வேண்டும். எறு. காண்க.

குருபணிவிடை யிலக்கணம்.

இதுவுமது. "సంయతవాక్చతుర్థషష్ఠాష్టమకాలభోజీభైక్షం గుర్వధీనో జటిలః శిఖాజటోవాగురుంగచ్ఛంత మనుగచ్ఛేదాసీనం వానుతిష్ఠేచ్ఛయానశ్చే దాసీత హోమాధ్యాయీ సర్వసంబంధివేది ఖట్వాశయనదంత ప్రక్షాళనాంజనాభ్యం జనవర్జనా స్త్రీం త్రీరహ్నస్యభ్య పేయాదపః" = பொறிவழிபோகா மனத்தினையுடையனுய் ஒழுக்கத்தோடு ஒருபகலின் எட்டுப் பாகத்தில் நான்கு, ஆறு, எட்டாவது, காலத்துள் ஒன்றில் பிச்சைச்சோறுண்டு, குரவனுக்குக் கீழ்ப்பட்டவனுய், மயிர்கழித்தல், செய்யாது சிகையைச் சடையாகச்செய்து குருநடந்தால் பின்னடந்தும், அவரிருந்தால் தான் கைகட்டி யெதிர்நின்றும், அவர்படுத்தால்தானிருந்தும், பேசுவித்தவழிபேசியும், அக்கினிகாரியத்தினையும் வேதமோதலையும் விடாதுசெய்து, எல்லாப்பற்றுக்களையும் விட்டு, ஏனையர் தருப்பையையும், இருப்பிடத்தினையும் விட்டு, கட்டிலின்மீது படுக்காது, பல்விளக்காது, எண்ணெய் முழுக்கின்றி, விருப்பந்தராத கடுமொழி கூருது, பெண்புணர்ச்சியின்றிப் பகலில் முக்கால் நீராடவேண்டும். எறு. காண்க.

வேள்வித்தீயோம்பல்.

வேள்வித்தீயோம்புதலைச் சங்கலிகிதர், இயமன் கூறியுள்ளனர். శంఖలిఖితయమాః॥ "యజ్ఞియాస్సమిధఆహృత్య సమ్మార్జనోపలేప నోద్ధ- ధనసమూహన సమింధనపర్యగ్నికరణపరిక్రమణోపస్థానహోమమన్త్రైశ్చ నమస్కారా

విధివదగ్నిం పరిచరన్నాగ్నిమధితిష్ఠేన్న పదాభ్యంతర్నైన ముఖేనోపధమేన్నాపశ్చాదగ్నిం చయగపధ్ధారయేన్నాజీర్ణ భుక్తోచ్ఛిష్టోవాధ్యాదధ్యా దివ్యవిశుద్ధైర్నవిద్యేశుద్ధైరాజ్యైరహ రహరగ్నిమింధాదామంత్ర్య గచ్ఛేదాగత్యనివేద యిత్వన్మనాశ్వరీరో పరమాంతే బ్రహ్మణ స్సాయుజ్యం గచ్ఛతి” — வேள்விக்குத்தக்க சமித்துக்களைக் கொண்டு வருதல், வேள்விச்சாலையை அலகிட்டு மெழுகிக்கோலமிடுதல், தீவளர்த்தல், சிதறிக்கிடக்கும் சமித்துமுதலியவற்றைச் சேர்த்து வைத்தல், எரியச்செய்தல், பார்வைக்குற்றமுதலிய நீக்கி இரக்ஷையாகும்படி செய்யும் “பரியக்கினிகரணம்” அக்கினியைச் சூழக் கட்டுதல், நின்று பிரார்த்தித்தல், ஹோமம், தோத்திரம், பணிதல் முதலியவற்றைத் தனித்தனி அதனதன் மந்திரத்தோடும் அக்கினியை யோம்புதல் செய்யவேண்டும். அத்தீயின்மீது உட்காரலாகாது. கால் நீட்டலாகாது. அந்தநெருப்பை வெளிப்படுத்தலாகாது. வாயால் ஊதலாகாது. அக்கினியை முதுகின்புறமாக்கி உட்காரலாகாது. நீரோடும் வைத்தலாகாது. ஆகாரம் சீரணமாகாமுன் எச்சிலோடு அத்தீயைத் தொடலாகாது. சுத்தமா யோம்புதல்வேண்டும். இன்னும் அவ்வேள்விச் சம்பந்தமுடைய நெய் முதலிய ஹோமத்திற் குரியதாய் வேதத்தாற் கூறப்பட்ட அந்தந்த அவிப்பொருள்களால் நாடோறும் தீயை வளர்த்தல்வேண்டும் (எனவே, சுத்தமாய நெல்லுமி, உலர்ந்த பசுஞ்சாணம், உலர்ந்த அரசங்கோடு, முதலியவற்றோடு வளர்த்தல்). ஓம்புங்காலத்தில் புறம்போகவேண்டி யிருந்தால் அவ்வக்கினி தெய்வத்தின் முன் மந்திரமுறையோடு விண்ணப்பித்துக் கொண்டுபோக வேண்டும். வந்தபோதும் அவ்வண்ணமே வரவை விண்ணப்பித்துப் பின்பு கருமந் தொடங்கவேண்டும். இவ்வண்ணமாகத் தீயோம்புவோன் தேகமுடிவில் பிரமத்தோடு கலப்பான். எ-று. காண்க.

இத்தீயோம்பலின் பயன்.

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యః॥ “అనేనవిధినాదేహం సాధయన్విజితేంద్రియః। బ్రహ్మలోకమవాప్నోతి నచేహాజాయతేపునః;” — இவ்விதியால் தன் தேகத்தை நற்பயன்செய்து கொண்ட புலம் வென்றவனாகிய அவன் பிரமலோகத்தைப்பெறுவன். மீள இங்கு பிறப்பதில்லை. எ-று. காண்க.

குருபணிவிடையின் பயன்.

மனு. మనుః॥ "ఆసమాప్తేశ్శరీరస్య యస్తుశుశ్రూషతే గురుం। సగచ్ఛత్యంజసావి ప్రో బ్రహ్మణస్సద్మశాశ్వతం" = தேகாந்தம் வரையில் யார் குருபணி விடை செய்திருப்பானே அந்தவேதியன் விரைவில் என்றும் கெடாத பிரமலோகத்தை யடைகின்றான். எ-று. காண்க.

அற்றேல், தேகாந்தம்வரையில் நைட்டிகப் பிரமசாரியாக வே யிருத்தல்வேண்டும் என்னும் கொள்கையை யுடன்படும் பக்ஷத்தில் இல்லறவொழுக்கம் பூண்பவரோயில்லை யாவர் எனில்? அங்ஙனமு மன்று. என்னை? விருப்பமுடையோன் இல்லறவொ ழுக்கம் பூணலாமாதலின்.

இல்லறவேது.

ஜாபாலி. జాబాలిః॥ "యదిగృహమేవకామ యేతతదాయావజ్జీవ మగ్ని హోత్రంజుహుయాత్" = கிரகத்தாச் சிரமத்தை விரும்புவானாயின் தன் வாழ்நாள் வரையில் வேள்வித்திக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கலாம். எ-று. காண்க.

நைட்டிகப்பிரமசரிய நிலைமைக்குரியார்.

அங்கு சிலர் இந்த நைட்டிகப்பிரமசாரியா யிருப்பது அங் கப்பழுதுள்ளவர்களைப் பற்றிக் கூறியது. குற்றமற்றவரனைவரும் போதுமான காலம்வரையில் பிரமசரியத்தினை அனுட்டித்துப் பின் கிரகத்தனாகவேண்டும் என்று கருதி நைட்டிகப் பிரமசரிய நிலைமை அங்கப்பழுதினர் பாலதென்று விஷ்ணு மிருதிவாக்கியத் தினைக் கூறுகின்றனர். విష్ణుః॥ "కుబ్జవామనజాత్యంధ క్లీబపంగ్వార్తరోగిణాం। వ్రతచర్యాభవేత్తేషాం యావజ్జీవమసంశయం" = குறுகிய அவயவங்களை யுடையவன், குள்ளமேயானவன், பிறவிக்குருடன், நபுஞ்சகன், முடவன், நோயாளி, மற்றும் பலவிதப்பட்ட தீராநோயினர் ஆகிய இவரனைவரும் உயிருள்ளவரையில் பிரமசரிய நிலைமையிற் றானே இருப்பர். இதிலையமில்லை. எ-று. காண்க.

ஆயின் அந்தவிஷ்ணு வுரைக்கு அங்ஙனம்அங்கப்பழுதுடை யவர்களே நைட்டிகப் பிரமசரியஞ் செய்யவேண்டு மென்பது நியமமல்ல அவர்க்கு நன்மையைத் தரும் என்பது கருத்து. அவ்

வாறன்றி அந்த நைட்டிகப் பிரமசரியம் அவ்வங்கவினர் பால தேயாமென்னில், வல்லவனும் விரும்பினால் இல்லறத்தா னாதலு மாம் என்று வுரைக்குமுரானும். விருப்பமில்லாத ஆற்றலுடைய வன் நைட்டிகப்பிரமசாரியாக விருக்கலாமன்றோ?

பிரமசாரிய நிலைமைக்காயினும் ஏனையஎல்லா நிலைமையும் இச்சையா லுண்டாவன என்று சிட்டரானும் கூறப்பட்டது. వశిష్ఠః॥ "చత్వారఆశ్రమాబ్రహ్మచారిగృహస్థపరివ్రాజ కాస్తేషాంవేదమధీయాతవేదా న్వాచీర్ణ బ్రహ్మచర్యోయమిచ్ఛేత్తమావసేత్" = பிரமசரியன், இல்லறத்தான், வானப்பிரத்தன், சந்நியாசி, எனவே பிரமசரியமுதலிய நான்கு நிலைமை யுள்ளன. அவற்றுள் முதலில் தன்சாகை வேதத்தினை யோதல்வேண்டும். பின்பு எல்லாவேதங்களையும் முறையே ஓத லுமாம். பிரமசரியவிரதமான பின் எந்த நிலைமை வேண்டினும் அதிற் புகலாம். எறு. காண்க.

பௌடிகபுராணம். భవిష్యత్పురాణే॥ "గార్హస్థ్యమిచ్ఛన్ భూపాలకు ర్యాద్దారపరిగ్రహం। బ్రహ్మచర్యేణవాకాలం నయేత్సంకల్పపూర్వకం। వైఖానసోవాపిభవే త్పరివ్రాడథవేచ్ఛయా" = இல்லற வொழுக்கத்தை விரும்புவோன் மணம் புரிதல்வேண்டும். அஃதில்லையேல், அப்பிரமசரிய வொ ழுக்கத்தோடுதானே தன்காலத்தினைக் கழித்துவிடலாம். இல் லையேல் இச்சையானால், வைகாநசன்= வானப்பிரத்தனு மாக லாம். முத்திவிரும்பி னவனாயின் சந்நியாசியும் ஆகலாம். எறு. காண்க.

ஆதலால், இல்லற வொழுக்கம் இச்சையுடையவனுக்கே என்று துணியத் தக்கது. பிரமசரியம் அவ்வாறானதல்ல தொடக் கத்திற்றானே யுண்டாவது. முடிவுவரையிலும் இருக்கினும் இருக் கலாம். இதுஏனைய நிலைமைகளைப்போல் சிலர்க்காயினும் தவறு வதல்லவாம். இருபிறப்பாள ரனைவர்க்கும்சிலகாலமாயினும் அனு ட்டானம் செய்யத்தக்கதேயாம். அந்தப்பிரமசரியத்துள் தேகாந் தம் நைட்டிகப் பிரமசாரியாய் இருப்பதும் நிடேதமல்ல. இருந் தால் நன்மையேயாம்.

பிரமசரியவொழுக்க முற்றிற்று.

இல்லறவொழுக்கம்.

ஸ்நாதகம்.

பின்பு, இல்லற வொழுக்கத்தைக் கூறுவான் றொடங்கி, அதற்குமுன் அதற்குரிய அதிகாரத்திற்குக் காரணமாகிய ஸ்நாதகம்என்னும் கருமத்தினைக் கூறுகின்றது. அதுயாஞ்ஞ வற்கியராற் கூறப்பட்டது. యాజ్ఞవల్క్యః॥ "గురవే తు వరం దత్త్వా స్నాయీత తదనుజ్ఞయా। వేదం వ్రతాని వా పారం నీత్వా హ్యుభయమేవ వా" = குரவனுக்கு அவன்வேண்டும்பொருளைத் தக்ஷிணையாகக்கொடுத்து அவர்கட்டளையால் ஸ்நாதகம் (வேதமோதலின் முடிவில் பிரம ராச்சியபட்டாபிடேகம் போல்வது) செய்து கொள்ளவேண்டும். வேதமுற்றும்ஓதி, ஒரு வேதத்திற்காயினும் பலவேதத்திற்காயினும் விரதங்களை யனுட்டிக்கவேண்டும். வேதவிரதம் ஸ்நாதக மிரண்டினையும் செய்து கொள்ளலாம். எறு. காண்க.

குருதக்ஷிணை.

ஆண்டு குருவேண்டி யதனைத் தக்ஷிணையாகக் கொடுப்பதை மனுவால் கூறப்பட்டது. మనుః॥ "న పూర్వం గురవే కించిదుపకుర్వీత ధర్మవిత్। స్నాస్యంస్తు గురుణాజ్ఞప్తః శక్త్యా గుర్వర్థమాహరేత్। క్షేత్రం హిరణ్యం గామశ్వం ఛత్రోపానహమంతతః। ధాన్యం వాసాంసి శాకం వా గురవే ప్రీతిమావహేత్" = தருமத்தினையுணர்ந்தவன் தன்னாசிரியனுக்கு முன்பாகச் செய்யத்தக்க வுபகாரம் யாதொன்றும் இல்லை. ஸ்நாதக விரதத்தினைச்செய்து கொள்ள விரும்பியபோது, குரவனுல் கட்டளையிடப்பெற்று, குரவனுக்கு வேண்டியபொருளைக் கொண்டுவந்து கொடுக்க வேண்டும். நிலம்=விளைகழனி, பொன், பசு, குதிரை, குடை, மிதியடி, தானியம், வஸ்திரம், இலைக்கறிவகையாயினும் குரவனுக்கு விருப்பமுள் ளதனைக் கொடுக்கவேண்டும். எறு. காண்க. இது வரமெனவும்படும். இவ்வரப்பொருளை கொடுப்பது குரவனுக்குப் பிரீதியுண்டாம் பொருட்டன்றி வேதவிலைப்பொருட்டன்று. என்னை? வேதத்திற்கு இணையான விலைப்பொருள் யாண்டும் இல்லை. என்றுணர்க.

சுருதி. శ్రుతిః॥ "యద్యప్యస్మా ఇమామద్భిః పరిగృహీతాంధనస్య పూర్ణాందద్యాత్ ఏవతతో భూయః" = இந்தவையம் நிரம்பத் தனத்தை நிரப்பி நீரோடு தாரைவார்த்துக் குரவனுக்குக் கொடுத்தாலும் வித்தை இரணம் பெரியதாகவே யிருக்கின்றது. எ-று.

தாபநீயசுருதி. తాపనీయశ్రుతిః॥ "సప్తద్వీపవతీభూమి ర్దక్షిణార్థంనకల్పితా" எழுதீபங்களோடுங் கூடிய இந்தவையமும் குருதக்ஷிணைக்குப் போதாவாம். எ-று. காண்க.

ஹாரீதர். హారీతః॥ "ఏకమప్యక్షరంయస్తు గురుశ్శిష్యేనివేదయేత్। పృథివ్యాంనాస్తితద్ద్రవ్యం యద్దత్వాహ్యనృణీభవేత్" = எந்தக்குரவன் ஒருஎழுத்தினையாயினும் மாணாக்கனுக்குத் தெரிவித்தானோ அந்தமாணாக்கன் அந்தக்குரவனுடையகடனைக்கழித்துக்கொள்வதற்குப்போதுமான திரவியம் இவ்வுலகத்துளில்லை. எ-று. காண்க.

ஸ்நாதகவகை.

" వేదవ్రతానివా " என்ற பன்மையீற்றினால் ஸ்நாதகம் மூன்று வகையுள்ளனவென்று குறித்தவாறுயிற்று. அவற்றுள், வேதத்தினைமாத்திரம் முடிப்பது முதலாவது. விரதத்தினைமாத்திரம் முடிப்பது இரண்டாவது. இரண்டினையு முடிப்பது மூன்றாவது விரதமென்ற மொழியாலீண்டுகிருஹிய சூத்திரத்துள் பிரசித்தமாகக் கூறப்பட்டுள்ள உபநயநவிரதம், சாவித்திரிவிரதம், வேதாப்தவிரதம், ஆரணியகவிரதம், இவைகள் உத்தேசிக்கப்பட்டது.

ஹாரீதர். హారీతః॥ "త్రయస్స్నాతకాభవంతి విద్యాస్నాతకోవ్రతస్నాతకోవిద్యావ్రతస్నాతకఇతి" = வித்தியாஸ்நாதகன், விரதஸ்நாதகன், வித்தியாவிரதஸ்நாதகன், என்று ஸ்நாதகர் மூவகைப் படுகின்றனர். எ-று. காண்க.

வேதத்தை முடித்து. எனவே அதன்பொருளை யுணர்ந்து என்றபடி கூர்மபுராணத்துள் கூறப்பட்டது. కూర్మపురాణే॥ "వేదంవేదౌతథావేదాన్ వేదాన్వాచతురోద్విజః। అధీత్యచాధిగమ్యార్థం తతస్స్నాయాద్ద్విజోత్తమః" = இருபிறப்பாளன் ஒன்று, அல்லதுஇரண்டு, அல்லது மூன்று, அல்லது நான்கு வேதங்களையும் ஓதி அதன் பொருளினையுணர்ந்தபின்பு ஸ்நாதகவிரதம் செய்யவேண்டும். அங்ஙனம்

செய்தவனே இருபிறப்பாளருட்சிறந்தோனாவன். எ-று. காண்க. ஸ்நாதககருமத்தினைச் செய்துகொள்ளும் வகை அவரவர் இருஷிய சூத்திரத்துள் விளங்கக்கூறப்பட்டுள்ளது.

ஸ்நாதககருமம்.

ஸ்நாதககருமம் கூர்மபுராணத்துள் கூறப்பட்டது. కూర్మపురాణే॥ "యజ్ఞోపవీతద్వితయం సోదకంచకమండలుం। ఛత్రంచోష్ణీషమమలం పాదుకే చాప్యుపానహౌ। రౌక్మేచకుండలే వేదం కృత్తకేశనఖశ్శుచిః। స్వాధ్యాయేనిత్యయుక్తస్స్యాద్బహిర్మాల్యంచధారయేత్। శుక్లాంబరధరోనిత్యం సుగంధః ప్రియదర్శనః। నజీర్ణమలవద్వాసా భవేద్వైవిభవేసతి। నరక్తముల్బణంచాన్య ధృతంవాసోనకుండికాం"= இரண்டு முப்புரிநூல், நீர் நிறைந்தகரகம், குடை, வெள்ளை நிறமுடையதலைப்பாகை, பாதுகை, பாதரக்ஷை, பொற்குண்டலம், தருப்பைக்கட்டு, இவற்றைத்தரித்தல் வேண்டும். தகுதியான காலங்களில் தலைமயிர் நகங்களைந்துகொண்டு சுத்தனாக விருத்தல் வேண்டும். எப்போதும் வேதமோதுதலில் சேர்ந்திருக்கவேண்டும். வெளிப்படப் பூமாலை சூடலாம். வெள்ளாடையை யெப்பொழுதும் தரிக்கவேண்டும், நல்லசந்தனம் பூசவேண்டும். பார்வைக்கு விரும்பத்தக்கவனாக விருக்கவேண்டும். அனுகூலித்திருந்தும், கிழிந்ததும் அழுக்கடைந்ததுமாகிய ஆடையை உடுக்கலாகாது, சிவந்த வாடை, இடம்பவாடை, கறுத்த ஆடை, தைத்த ஆடை, கந்தை முதலிய ஆகாது. எ-று.

ஸ்நாதககருமம் முற்றிற்று.

விவாஹவிடயம்.

மனு. మనుః॥ "గురుణానుమతస్స్నాత్వా సమావృత్తోయథావిధి। ఉద్వహేతద్విజోభార్యాం సవర్ణాంలక్షణాన్వితాం"=இருபிறப்பாளன் ஆசிரியனால் கட்டளையிடப் பெற்றுவந்து விதிப்படி ஸ்நாதக விரதஞ்செய்து பின்பு தன்சாதியுள் இலக்கணம் அமைந்தமாதினை மனைவியாக மணம் புணரவேண்டும். எ-று.

யாஞ்ஞுவற்கியர். యాజ్ఞవల్క్యః॥ "అవిప్లుతబ్రహ్మచర్యో లక్షణ్యాం స్త్రియముద్వహేత్। అనన్యపూర్వికాంకాంతా మసపిండాంయవీయసీం। అరోగిణీంభ్రాతృమతీ మసమానార్షగోత్రజాం" = பிரமசரியவிரதங் கெடாதுள்ளவன் அகம் புறம் என்னும் இருவகையிலக்கணங்களையுமுடையவளும், நபும்ஸகம் = அலிக்குறியில்லாதவளும், தானம் வாங்குதலிலாயினும், அனுபவிப்பதிலாயினும் வேறொருவனால் பெறப்படாதவளுமாகிய மாதினை மணத்தல் செய்யவேண்டும் மணம்செய்துகொள்வோன் கண்ணுக்கும் மனத்துக்கும் களிப்பினைத் தருபவளும், இருவகைப்பட்ட பிண்டசம்பந்த மில்லாதவளும், தன்னிலும் வயதினிளையவளும், தீரா நோயில்லாதவளும், சகோதரனையுடையவளும், தன்கோத்திரத்துட்பிறவாதவளும், பிரவரக்கலப்புகணக்கலப்பு இல்லாதவளுமாகிய மாதினை மணஞ்செய்யவேண்டும். எ-று. காண்க.

கந்நிகையிலக்கணம்.

மனு. మనుః॥ "అవ్యంగాంగీంసౌమ్యనామ్నీం హంసవారణగామినీం। తనులోమకేశదశనాం మృద్వంగీముద్వహేత్స్త్రియం" = அவயவக் குறைவில்லாதவுருவமுடையவளும், சாந்தமானபெயரையுடையவளும், அன்னம் போலும் யானைபோலும் அழகிய நடையையுடையவளும், சிறுகிய உரோமபந்திகளையுடையவளும், மிகப்பருத்து இராதகூந்தலையுடையவளும், மெல்லிய பல்வரிசைகளை யுடையவளும், மிருதுவாகிய உறுப்புக்களை யுடையவளும் ஏனையவெளியிலக்கணங்களுமுடையவளுமாகிய மாதினைமணம்புரியவேண்டும். எ-று. காண்க.

விலக்கத்தக்க கன்னிகை.

மனு. మనుః॥ "నోద్వహేత్కపిలాంకన్యాం నాధికాంగీంనరోగిణీం। నాలోమికాంనాతిలోమాం నవాచాటాంనపింగళాం। నర్క్షవృక్షనదీంనామ్నీం నాంత్యపర్వతనామికాం। నపక్ష్యహిప్రేష్యనామ్నీం నచభీషణనామికాం" = கபிலை = சிவப்பரிசிறமுடையவள். அதிகமான அங்கமுடையவள் (எனவே, ஆறுவிரல் முதலியவாக வுடையவள். அல்லது தன்னங்கத்தினும் மிக்க அங்கமுடையவள் என்பது) தீராநோயுடையவள். முற்றும் உரோம பந்தியில்லாதவள். மிகுந்த வுரோமபந்தியுடையாள். வெடிப்போடும் நிந்தை கூறுவோள். பிங்களை=நெருப்பு

வண்ணமுடையவள். நக்ஷத்திரத்தின்பெயர், மரங்களின்பெயர், நதிகளின்பெயர் இவைகளையுடையவள். அந்தியை=மிலேச்சப் பேருடையவள். மலையின்பெயருடைவள். பறவைப்பெயர், பாம் பின்பெயர், அடிமையின்பெய ரிவைகளையுடையவள். அச்சத் தை யுண்டுபண்ணும் பெயருடையவள் இவர்களை மணம் புணர லாகாது. எ-று. காண்க.

விஷ்ணுபுராணம். విష్ణుపురాణే॥ "నశ్మశ్రువ్యంజనవతీం నచైవపురుషాకృతిం। నఘర్ఘరస్వరాంక్షామాం తథాకాకస్వరాంనచ। నానిబద్ధేక్షణాంతద్వ ద్వృత్తాక్షీం నోద్వహేద్బుధః। నవామనాంనాతిదీర్ఘాం నోద్వహేత్సంగతభ్రువం। నచాతిచ్ఛిద్రదశనాం నకరాళముఖీంనరః" = மீசையின் குறியுடையவள். ஆண்வடிவ முடையவள். எந்திரம் விசிறுற்போலும் குறுகுறுத்த சத்த முடையவள். தரித்திர வியல்புடையவள். அல்லது, மிகவிளைத்த வுடம்பினையுடையவள். காக்கைக்குரலுடையவள். குரூரமான கண்ணையுடையவள். அல்லது கெட்ட தோஷமுடையவள். அல் லது ஒவ்வாத இமையுடையவள் என்பதுமாம். உருண்டுசுழல் விழியுடையவள். அறக்குள்ளமானவள். மிக வுயரமுள்ளவள். இருபுருவமும் சேர்ந்தவள். மிகப்பெருத்தும் துளைபட்டும் உடை ந்தும் இடைவெளியாயும் உள்ள பல்லுடையவள். மிக விரிந்து பயங்கரமான முகமுடையவள். இவர்களையும்புணரலாகாது. எ-று.

வெளிப்படா வியலறிய.

ஆசுவலாயன கிருஹியசூத்திரம். ఆశ్వలాయనగృహ్యసూత్రే॥ దక్షయానితానివేదితవ్యాని పూర్వస్యాంరాత్రౌ గోష్ఠవేదికా కితవస్థాన ప్రాదక్షిణక్షేత్ర చతుష్పథశ్మశానేభ్యో మృత్తికాంగృహీత్వాష్టౌ పిండాన్కృత్వా "ఋతమగ్రేప్రథమం జజ్ఞే ఋతేసత్యం ప్రతిష్ఠితం। యదియంకుమార్యభి జాతాతదియమిహ ప్రతిపద్యతాం యత్సత్యంతద్దృశ్యతాం" ఇతిపిండానభిమంత్ర్య కుమారీంబ్రూయాదేషా మేకంగృహాణేతి-తత్రానుక్రమేణ ప్రథమపిండస్పృష్టౌ ధాన్యవతీభవతి, ద్వితీయేపశుమతీ, తృతీయేగ్నిహోత్రపరా, చతుర్థేవివేకినీ, చతురానర్వజనార్చనపరాచ, పంచమేరోగిణీ, షష్ఠేవంధ్యా, సప్తమేవ్యభిచారిణీ, అష్టమేవిధవాభవేదితి" = வெளிப்பட அறியக் கூடாத விலக்கணப் பயனைச் சகுனத்தால் அறிந்துகொள்ள வேண்டுமாதலின், கன்னிகையைநிச்சயஞ்செய்வதற்குமுன்னிர வில், பசுக்கொட்டில், தெருத்திண்ணை, வஞ்சகர் கள்ளராதிய

நிருப்பிடம், நீர்மடுக்கரை, பயன்படாத வுவர்நிலம், பயிர்விளைநிலம், நாற்றெருக்கூடும் சதுக்கம், மயானம் இவ்வெட்டிடங்களினின்றும் மண்கொண்டுவந்து, எட்டுஉருண்டைசெய்து வைத்தல் வேண்டும். பின்பவற்றை ("உண்மைமுதலிலேயுள்ளது. முதல் அது வெளிப்பட்டுத் தோன்றிற்று. அதில் சத்தியம் வைக்கப்பட்டது. இக்கன்னிகை நல்லவளாகப் பிறந்திருந்தால் அதனையிங்கே பொருந்தப்பொருந்துக. அல்லது, நம்பிக்கை யுண்டாக்குக. எது சத்தியமோ அது காணப்படுமோக.") என்றபொருளுடையதாக மேற்கூறப்பட்ட மந்திரத்தைக் கூறி அம்மண்ணுருண்டையைஅபிமந்திரித்து,இவற்றுள்ஒன்றினைஎடுத்துவரும்படி அந்தக் கன்னிகையை ஏவவேண்டுவது. அக்கன்னி வரிசையாக வைத்திருக்கப்பட்ட அம்மண்ணுருண்டையில் முதலாவதைத் தொட்டால் தானியமுடையளாவள். இரண்டாவதேல் பசுவுடையவளாம். மூன்றுவதானல் அக்கினிஹோத்திர பத்தியுடையவளாம். நான்காவதெனில் வெகு புத்தி யுடையவளாய் எல்லாரையும் பூசிப்பாளாம். ஐந்தாவதாயின், நோயுடையளாவள். ஆறுவதைப்பரிசித்தால், மலடியாம். ஏழாவதே என்றல் வியபசாரி. எட்டாவது தொடின் கைம்பெண்ணுவள். என்றுணர்க. எ-று.

மாதர்மறு மணமறுப்பு.

மேற்கூறிய யாஞ்ஞவற்கிய மிருதி "అనన్యపూర్వికాం" = முன்வேறுகணவனைப் பெற்றிராதவள் என்று கூறலின் "పునర్భూః" இரண்டாமுறை மணம்புணரத்தக்க கன்னிகை விவாகத்திற்குத் தக்கவளாகாள் என்று விலக்கப் பட்டவாறுயிற்று. அதற்குத் தக்கபடி வேறுபிரமாணங்களும் கருதுகின்றன. அவைவருமாறு.

காசிபர். కాశ్యపః॥ "సప్తపౌనర్భవాఃకన్యా వర్జనీయాఃకులాధమాః। వాచాదత్తామనోదత్తా కృతకౌతుకమంగళా। ఉదకస్పర్శితాయాచ యాచపాణిగృహీతకా। అగ్నింపరిగతాయాచ పునర్భూఃప్రసవాచయా। ఇత్యేతాఃకాశ్యపేనోక్తా దహంతికులమగ్నివత్" = வாக்குத்தானஞ் செய்யப்பட்டவளும், மனம் ஒத்துக்கொடுக்கப் பட்டவளும், கங்கணந்தரித்து நிச்சயஞ்செய்யப்பட்டவளும், நீர்த் தாரைவார்த்துத் தானஞ் செய்யப்பட்டவளும், பாணிக்கிரஹண கருமமாகிய கைப்பற்றுவித்தல் செய்விக்

கப்பட்டுக் கொடுக்கப்பட்டவளும், திவலங்வந்து சத்தபதியென்னும் கருமஞ் செய்யப்பட்டவளும், கணவனைப்புணர்ந்து மகவைப்பெற்றவளுமாகிய இவ்வெழுவகைப் பெண்களும் மறுபடியும் மணம் புணரநேர்ந்தால் பௌனர்ப்பவர்கள் என்னும் பெயரைஅடைவர்கள். அவர்களைமணம் புரிந்தால் குலந்தாழ்ந்து கெட்டுவிடும். மணம்புணர்ந்தவன் குலத்தைநெருப்புப் போலச் சுட்டுவிடுகின்றனர்கள். ஆதலால் அந்தமாதரை மணம்புரியலாகாது விட்டுவிட வேண்டுமென்று காசிபராற் கூறப்பட்டது. எறு. காண்க. சத்தபதிஎன்பது அரிசிபரப்பி எழுவரைகீறித் தம்பதிகளின் உரிமைப்பொருட்டு தெய்வசாக்ஷிகுறித்து மந்திரம்கூறி எழுவிசை பெண்பாதத்தால் மிதிப்பித்தல். இதுவே இப்போது அம்மி மிதித்தலாக வழங்குகின்றது.

போதாயனர். బౌధాయనః॥ "వాగ్దత్తామనోదత్తాగ్నిం పరిగతాసప్తమంపదం నీతాభుక్తాగృహీతగర్భాప్రసూతాచేతి సప్తవిధాపునర్భూస్తాం గృహీత్వానప్రజాంనధర్మంవిందతి" = வாக்குத்தானஞ் செய்யப்பட்டவள், மனத்தாற் கொடுக்கப் பட்டவள், அக்கினியில் பிரதான ஹோமஞ் செய்யப் பட்டவள், சத்தபதி = ஏழடிவைப்பிக்கப்பட்டவள், கணவனின்பம் துய்த்தவள், கருப்பந்தரித்தவள், மகவைப்பெற்றவளெனப் புனர்ப்பூஎன்னு மாதர்எழுவகைப் படுவர். அவர்களைமணம்புணர்ந்தவன், தகுதியானசந்ததியையாவது தருமத்தையாவது அடைவதில்லை. எறு. காண்க.

நாரதர். నారదః॥ "కన్యైవాక్షతయోనిర్యా పాణిగ్రహణదూషితా। పునర్భూఃప్రథమాసైయా పునస్సంస్కారమర్హతి" = பூத்தலையடையாமல் கந்நிகையாகவே யிருப்பினும் பிறனொருவனை மணந்தபின் மீட்டும் மற்றொருவனைமணம் புணரநேர்ந்தவழி அந்தமாதும்புனர்ப்பூஎன்னுங்குற்றமுடைய மாதரேயாவள். எறு. காண்க.

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యః॥ "అక్షతాచక్షతాచైవ పునర్భూస్సంస్కృతాపునః" = பூவாமலேயிருந்தாலும், பூத்திருந்தாலும், கணவனால் அனுபவிக்கப் படாவிடினும், அனுபவிக்கப் பட்டாலும் வேறொருவனுக்கு மீட்டும்மணம் புரிவிக்கப்படின் புனர்ப்பூ என்னுங்குற்ற முடையவளே யாவள். எறு. காண்க.

மேற்கூறிய யாஞ்ஞவற்கிய மிருதியில், "కాంతాం" = மனம் புணர்வோனுக்கு மனத்துக்கும் கண்ணுக்கும் களிப்பைத்தருபவள்என்று கூறப்பபட்டது. அதனனேஆபத்தம்பரும் கூறினர். ఆపస్తంబః॥ "యస్యాంమనశ్చక్షుషోర్నిబంధస్తస్యామృద్ధిః" = எந்தமாதினிடத்துமனத்திற்கும் கண்ணுக்கும் நல்ல சம்பந்தமுண்டாகின்றதோ அந்த மாதினிடத்துச் செல்வப்பெருக்கம் உண்டாம். எறு. காண்க.

சபிண்டர்விசாரம்.

எனவே, விவாகத்திற்குரிய முறைமரபு விசாரித்தல்.

மேல் "అసపిండాం" = சபிண்டியாகாதவள். எனவேசபிண்டியானவள் விவாகத்திற்குக் கூடாதென்பதுகருத்து. சமானமாகிய பிண்டமுடையவள் சபிண்டி என்னப்படுவள். அங்ஙனமாகாதவள்அசபிண்டி என்னப்படுவள். சபிண்டத் தன்மை ஏழுதலைமுறைக்கு முடிவுபடுவது. அவருள், ஒருவன் பிண்டத்தைக் கொடுப்போன். இவன்பிண்ட தாதாவாம். அவன்தந்தை, பாட்டன், மூத்தப்பன் = பாட்டன்தந்தை, பிண்டத்தைப் பொருந்துவோர். இம்மூவரும் பிண்டபாகர் என்னப்படுவர். நான்காம்பாட்டன், ஐந்தாம்பாட்டன், ஆறும்பாட்டன் இம்மூவரும் லேபபாகர் என்னப்படுவர். எனவேபிண்ட சம்பந்தமுடையவர்கள். அங்ஙனம் மச்சபுராணத்துட் கூறப்பட்டது.

மச்சபுராணம். మత్స్యపురాణే॥ "లేపభాజశ్చతుర్థాద్యాః పిత్రాద్యాః పిండభాగినః। పిండదస్సప్తమశ్చైవ సాపిండ్యంసాప్తపూరుషం"=நாலாம்பிதிர்முதல் மூவர், லேபபாக்குகள் என்னப்படுவர். எனவேசம்பந்தத்தைப் பொருந்தினவர் என்றபடி. தந்தைமுதல் மூவர்பிண்ட பாக்குகள் என்னப்படுவர். எனவேபிண்டத்துள் பாகத்தை யுடையவர்கள். ஏழாவதாவான் பிண்டத்தைக் கொடுப்போன். இவ்வேழு புருடர்வளாயிலும் சபிண்ட சம்பந்தமுண்டு. எறு. காண்க.

மார்க்கண்டேய புராணம். మార్కండేయపురాణే॥ "పితాపితామహశ్చైవ తథైవప్రపితామహః। పిండసంబంధినో హ్యేతే విజ్ఞేయాః పురుషాస్త్రయః। లేపసంబంధినశ్చాన్యే పితామహపితామహాత్। ప్రభృత్యుక్తాస్త్రయస్తేషాం యజమానస్తుసప్త

షః। ఇత్యేషమునిభిఃప్రోక్తః సంబంధస్సాప్తపూరుషః" = தந்தை, பாட்டன், மூத்தப்பன் இம்மூருவம்பிண்ட சம்பந்தமுடையவர்களென்றறியப்படுவர். பாட்டனுடைய பாட்டன்முதல் மூன்றுபுருடரும் லேபசம்பந்த முடையவர்களாம். இவ்வறுவருக்கும் தலைவன் ஏழாவதாவான். இவ்வாறு, ஏழுபுருடர்களையுடைய இந்தச்சபிண்டசம்பந்தம் முனிவர்களால் கூறப்பட்டது. எ-று. காண்க.

நிர்வியாப்பியசாபிண்டியம்.

மேற்கூறிய மிருதிவசனங்களால் அவ்வேழு புருடர்களில் ஒருபிண்டகருமத்தில் ஒருவனுக்குப் பிரவேசமுண்டா யிருந்தாலும் அது சபிண்ட சம்பந்தத்திற்குக் காரணமாகின்றது. எங்ஙனமாயின், தேவதத்தன் என்னும் பெயருடைய ஒருவனுக்குத் தனது தந்தையோடு ஆறுதலை முறைவரையில் பெரியோர்களோடு சபிண்டசம்பந்தம் உண்டாகின்றது. அவ்வாறே அவன் மகன் முதல் ஆறுதலைமுறைவரையில் சிறியோர்களோடும் சபிண்டமுண்டாகின்றது. இவ்வாறன்றி, ஒருபுருடனுக்கு ஓரோவரிசையில் மேல்நின்றோர் அறுவர் கீழ்நின்றோர் அறுவர் இவர்களோடு சபிண்டசம்பந்த முள்ளதென்று கூறவேண்டும். ஆயின், இந்த பக்ஷத்தில் அண்ணன், தம்பி, பெரியதந்தை, சிறியதந்தை, பாட்டன் சகோதரர், முதலிய ஞாதியரோடும் தனக்கும் சபிண்டசம்பந்தம் இல்லாமை நேரிடுமே எனெனில்? மேற்கூறிய பிரமாண வாக்கியங்களில் கூறப்பட்டுள்ள கணக்கில் ஏனையர் சேர்ந்தனரில்லையன்றோ? என்ற வினாவந்தவழி, அங்ஙனமன்று. குறிக்கப்பட்ட தேவதத்தனோடு சேர்ந்த கருமத்திற்குக் கலப்பு இவ்விடத்தில் பிரமாணவுரைகள் கூறவந்த கருத்தினுக்கு விடயமாக விருக்கின்றது. தேவதத்தன் செய்கின்ற கருமத்தில் யார் சம்பந்தப்படுவதில்லையோ? அவர்கள் நடுவே யாரேனும் ஒருவன் தன்பிதா சகோதரர்கள், பாட்டன் சகோதரர் முதலிய ஞாதிகள் செய்யும் கருமத்தில் பிரவேசித்தால் போதுமானதாக விருக்கின்றது. அந்த ஞாதியரோடு தனக்குச் சபிண்டசம்பந்தம் உண்டாயவாறாயிற்று. இவ்வாறே மனைவியர்க்கும் கணவன்செய்யும் பிண்டதானகருமத்தில் ஒத்த கருத்தாவாந் தன்மையுடைய ளாதலின் சபிண்டசம்பந்த முண்டாயிருக்கின்றது. இப்படிப்பட்ட சம்பந்தம் நிர்வியாப்பிய சாபிண்டியம் என்னப்படும்.

அவயவசாபிண்டியம்.

வேறு சிலர் அவயவசபிண்டத்தைக் கூறுகின்றனர். அது வருமாறு. ஒத்ததொருபிண்டம்(எனவே தேகவுறுப்புக்கள்கலப்பு யாருக்குண்டோ? அவர்கள் சபிண்டர் என்னப்படுவர். அவருள், மகனுக்கு நேரே பிதாவுடம்பின் அவயவ சம்பந்தத்தால் தந்தையோடு சபிண்டம். அவ்வாறே பாட்டன் முதலாயினரோடும் தந்தை முன்னிலையாக அவர்கள் தேகவுறுப்புக்களினல். இவ்வாறே நேராகத் தாயுடம்பின் உறுப்புச் சம்பந்தத்தால் தாயினேடும் மாதாமகன்=தாயைப்பெற்ற பாட்டன் முதலாயினரோடும், தாய் உடம்பின் உறுப்புச்சம்பந்த முன்னிலையில் அவர்கள் தேக அவயவசம்பந்தத்தால்,அவ்வாறே, தாயோடுபிறந்தவர்களோடும் அத்தாய் மரபு பாட்டனேடும்தேகசம்பந்தத்தால். அவ்வாறே,தந்தையோடு பிறந்தவர்களோடும் பாட்டனேடும் தேக சம்பந்தத்தால். அவ்வாறே, கணவனேடு ஒருடம்பிற்குத் தான் காரணமாதலால் மனைவிக்கும், அவ்வாறே சகோதரர்களின் மனைவியர்க்கும் ஒருடம்பினல் உண்டாகிய தத்தம்கணவரோடு தங்கள் ஒருடம்பிற்குக் காரணமாதலின். இங்ஙனம் அங்கங்கு நேரோயாயினும் பரம்பரையிலாயினும் ஒருடம்பினுடைய அவயவசம்பந்தம் உண்டாயிருப்பவ ரனைவர்க்கும் சபிண்டசம்பந்தம் ஒன்றுக்கொன்று நிச்சயிக்கவேண்டும்.

கூறப்பட்ட இவ்விருவகையாகிய சபிண்டசம்பந்தம் எந்தக் கன்னிகைக்கில்லையோ அவள் "அசபிண்டா" என்னப்படுவள். அவளை மணம் புரியவேண்டுவது.

அங்ஙனமாயின் யாண்டும் மணம்புரிவதற்குத்தக்க கந்நியே யில்லாது ஒழியும். எங்ஙனமெனில்? எல்லாவிடங்களிலும் இந்தச்சபிண்ட சம்பந்தத்தை யெவ்வாருயினும் சம்பந்தப்படுத்தக் கூடுமானதாம். ஏனெனில்? எல்லாரும் சிருட்டி கருத்தாவின் சரீரசம்பந்தம்பற்றிப் பிறந்தவர்களென்னு மதனை ஒழிக்கலாகாது "బహుస్యాం ప్రజాయేయేతి" = பலமன்பதையாகப் பிறப்பேன் என்று சிருட்டிகருத்தா சங்கற்பித்ததாகச் சுருதியால் விளங்குகின்றது, அந்தநியாயத்தினல் மனிதரனைவரும் சகோதரரோ யாகின்றனர். எனில்? மன்பதை = மக்கள்கூட்டம்.

அதுகுற்றமன்று. என்னை? விசேடமின்றி எல்லார்க்கும் பொதுவாகச் சம்பந்தப்படுகின்ற இந்தச் சபிண்டம் ஏழுதலைமுறைக்குஅல்லது ஐந்துதலைமுறைக்குச் சுருங்கிவிடுகின்றது. (எனவேமுடிந்து விடுகின்றது) அதன்பின் சபிண்ட சம்பந்தம்விட்டொழியும்.

சபிண்டசம்பந்தகால வரையறை.

கௌதமர். గౌతమః॥ "పిండనివృత్తిస్సప్తమే పంచమేవా" = பிண்ட சம்பந்தம் ஏழாந்தலைமுறையிலாவது ஐந்தாந்தலைமுறையிலாவது விட்டொழிகின்றது. என்று. காண்க.

யாக்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యః॥ "పంచమాత్సప్తమాదూర్ధ్వం మాతృతః పితృతస్తథా" = தாய்மரபின் ஐந்தாந்தலை முறைமுதல்சபிண்ட சம்பந்தம்ஒழிகின்றது. தந்தைமரபில் ஏழாந்தலைமுறை கழிந்தளவில் சபிண்டசம்பந்தம் ஒழிகின்றது. என்று. காண்க.

மனு. మనుః॥ "సపిండతాతుపురుషే సప్తమేవినివర్తతే" = புருடசந்ததியில்ஏழாந்தலைமுறையில் சபிண்டசம்பந்தம் விட்டொழிகின்றது. என்று. காண்க.

கூடத்தகணனம்.

மேற்கூறிப்போந்த வரைகளால் அடியிற்கூறு மாறுகின்றது. என்னை? கூடத்தன், எனவேமூல புருடன். தந்தைக்குச் சம்பந்தப்பட்ட பக்ஷத்தில் (எனவே, தந்தைமரபில்) ஒருமாதினும் ஒருபுருடனும் உண்டாகியகன்னிகைக்கும் மணமகனுக்கும்மணமாக வேண்டிய காலத்தில் அவ்விருவர்க்கும் மூலபுருடனாகியகூடத்தன் ஒன்றுஅவன் மகனேனும் மகளேனும்இரண்டு, அவர்கள் மக்கள்மூன்று, இவ்வாறுகக் கணக்கிட்டு மணமகள் வரையிலும் நோக்குங்கால் ஏழுதலைமுறை கடந்ததிருக்கும் பக்ஷத்தில் அந்தமணமகள் மணமகனுக்கு மணம்புரிதலுண்டாம். சபிண்ட தோஷமில்லை. தாய்பக்ஷத்தில் கூடத்தன் முதலாக அவன்மகன் முதலிய தலைமுறைகளைக் கணக்கிட்டுவரும்வழி மணமகள் மணமகனுடைய தாய்ஐந்தாந்தலைமுறையளாயின் அந்த மணமகள் மணமகனுக்குச் சபிண்டசம்பந்தம் ஒழிந்துபோ

வதால் மணம் புரிவதற்குக் குற்றமில்லை. எனவே பிதா பக்ஷத்தில் எட்டாந்தலைமுறைக் கன்னிகையும் தாய்பக்ஷத்தில் ஆறுவதுகன்னிகையும் மணமகனுக்கு விவாகசம்பந்தஞ் செய்வதற்குத் தக்கவள் என்று விளங்குகின்றது.

அங்ஙனமாக, விஷ்ணுபுராணம், విష్ణుపురాణే॥ “పంచమీంమాతృపక్షాత్తు పితృపక్షాత్తుసప్తమీం। గృహస్థఉద్వహేత్కన్యాం న్యాయ్యేనవిధినానృప”= கிரகத்தனாக வேண்டினவன் தந்தைபக்கத்தில் ஏழாம்கன்னிகையையும் தாய்பக்கத்தில் ஐந்தாம் கன்னிகையையும் வழக்கினொழுக்கப்படி மணம்புரிய வேண்டும் என்றவுரை மேற்கூறிய யாஞ்ஞவற்கியர் உரைக்கு மாறுபாடாதலின் விஷ்ணு புராணவுரையில் ஐந்தாவதனை ஏழாவதனை யென்று விளங்கக்கூறி (கடந்தவளை) என்றசொல்லை வருவித்து உரையை முடித்துக்கொள்க – அங்ஙனம் செய்தால் ஆறுவது ஏழாவது ஆவாளை மணஞ்செய்து கொள்ளவேண்டும் [என்றபடி கருத்தாகின்றதாகலின்பிரமாண வுரைகள் ஒன்றற்கொன்று முரணுதலில்லை யாகின்றன.

இங்ஙனம் வருவித்துக் கொள்ளாவிட்டால் மரீசி. మరీచిః॥ “పంచమేసప్తమేచైవ యేషాంవైవాహికక్రియా। క్రియాపరాఅపిహితేపతితాః శూద్రతాంగతాః”= ஐந்தாந் தலைமுறையிலும் ஏழாந் தலைமுறையிலும் யாருக்கு விவாகமுறை நடக்கின்றதோ? அவர்கள்நற்கருமமே செய்பவராக விருக்கினும் சூத்திரத் தன்மையை அடைகின்றனர்· என்றவுரைக்கும் முரணுதலுண்டாம்.

ஆயின், பைட்டீனசியென்னும் இருடியிரண்டு கற்பத்தினையும் கூறியுள்ளனர். పైఠీనసిః॥ “పంచమాన్మాతృతః పరిహరేత్సప్తపితృతః పరిహరేత్। త్రీన్మాతృతః పంచపితృతోవా”=தாய்முதல்ஐவரை விடவேண்டும் தந்தைமுதல் எழுவரை விடவேண்டும். அல்லது, தாய்முதல் மூவரைவிட வேண்டும். தந்தைமுதல் ஐவரை விடவேண்டும். எறு. ஈண்டு, அல்லது, என்றுதொடங்கிய இரண்டாங்கற்பம், ஒவ்வாத சாதியைக் குறித்தது.

அதனானே சங்கரும்கூறினர். శంఖః॥ యద్యేకజాతాబహవఃపృథక్క్షేత్రాఃపృథగ్జనాః। ఏకపిండాఃపృథక్శౌచాఃపిండస్త్వావర్తతేత్రిషు,”=ஒருவனால்

வேறு வேறு க்ஷேத்திரங்களில் வேறு வேறு மக்கள் பலர் பிறந்தால் அவரனைவரும் ஒருபிண்டத்தாலே பிறந்தவராயினும் வேறு வேறு ஆருசமுடையவர்களா யிருக்கின்றார்கள். பிண்டமானால் மூன்று தலைமுறைவரையிலும் தொடர்ந்து வருகின்றது. எ-று. எனவே யாருக்குத் தந்தை ஒருவன். தாய்மார் வேறு வேறு சாதியாராக விருக்கின்றாரோ? அவரனைவரும் தாயர் பேதம் பற்றி அசமானசாதியர் என்னப்படுவர். அங்ஙனமாயினும் தந்தையொருவனுமாதலின்அவர்களுக்குச் சபிண்ட சம்பந்தமுண்டு. அது, மூன்று தலைமுறை கழிந்தால் ஒழிந்து விடுகின்றது.

அங்ஙனமாயின், பிதிர் பக்ஷத்திலும் மூன்று தலைமுறையோடு தானே சபிண்டம் தப்பி விடுதலால் தந்தைமுதல் ஐவரை விட வேண்டுமென்பது விரோதிக்கும் ஆகவேமேற்கூறிய "பைட்டீனசிவாக்கியம்" தன் சாதியாருள்ளே தானே கூறிய கணக்கினுக்காயினும் அதிக தலைமுறை கூடாதென விலக்குகின்றதென்று கூறப்படுமே. அல்லது, அதனையும் வேறோர் அநுகற்பம் எனினுமமையும். அந்தப்பக்கத்தில், "మాతృతఃపితృతస్తథా"= என்ற வுரையின் சத்தத்தினால் = ஒலியினால் பீசமுடையவனையும்சேர்த்து உரை கூறவேண்டும்.

அங்ஙனம் கௌதமருங்கூறினர். గౌతమః॥ "ఊర్ధ్వం సప్తమాత్పితృబంధుభ్యో బీజినశ్చ మాతృబంధుభ్యశ్చ పంచమాత్" = தந்தையின் சுற்றமுதலாகப் பீசமுடையவனைத் தொட்டு ஏழாந் தலைமுறையானுக்குப்பின்பும்தாய்ச் சுற்றமுதல் ஐந்தாந்தலை முறையானுக்குப் பின்பும்சபிண்ட சம்பந்தம் ஒழியு மென்பதுகருத்து.

பீசி=வித்துடையவனிலக்கணம்.

கௌதமர். గౌతమః॥ "యోని యోగాత్పుత్రముత్పాద యతిసబీజీ"= யார் நியோகத்தால்புதல்வனைப்பெறுவிக்கின்றானோ அவன், பீசி= வித்துடையான் எனப்படுவன், எ-று. உதாரணம். சத்தியவதியின் நியோகத்தினால் விசித்திரவீரியன், சித்திரவீரியன் இவர்களுடைய க்ஷேத்திரம் = மனைவியரிடத்து வேதவியாசர் திருதராட்டிரன், பாண்டு, இவர்களைப் பிறப்பித்தனர். ஆதலின் வியாசர் பீசியென்னப்படுவர். நியோகம் = செலுத்தல்.

தந்தை மரபு சுற்றம்.

வேறுமிருதி. స్మృత్యంతరే॥ "పితుఃపితృష్వసుః పుత్రాఃపితృమాతృష్వసుస్సుతాః। పితుర్మాతులపుత్రాశ్చ విజ్ఞేయాఃపితృబాంధవాః"=தந்தைக்கு நல்லத்தைமக்கள், தந்தைக்குத் தாயுடன் பிறந்தவள்மக்கள், தந்தைக்கு நல்லம்மான் மக்கள், தனக்குப்பிதா மரபுசுற்றத்தினர். என்னப் படுவர். எறு.

தாய் மரபு சுற்றம்.

மிருதிசங்கிரகம். స్మృతిసంగ్రహే॥ "మాతుఃపితృష్వసుః పుత్రామాతుర్మాతృష్వసుస్సుతాః। మాతుర్మాతులపుత్రాశ్చ విజ్ఞేయామాతృబాంధవాః"=தாய்க்கு நல்லத்தைமக்கள். தாய்க்குத்தாயுடன் பிறந்தவள்மக்கள், தாய்க்குநல்லம்மான்மக்கள் தாய்மரபு சுற்றமென்றறிக. எறு. காண்க.

ஆயின்சபிண்ட விடயத்தில் முதலிற் கூறப்பட்ட்வுரை 'అసపిండాం,"=என்றதுகூறத்தக்கதன்று என்னை? பின்கூறப்படும் "అసమానార్షగోత్రజాం," = என்ற வாக்கியத்திறைலேயே சபிண்ட சம்பந்தவிவாகத்தை மறுக்கப்படுகின்றது ஆதலின். எனவே, வாக்கியங்களுக்குக் கூறியது கூறலென்னும் குற்றம்வருகின்றதென்பதுகருத்து. எனில்? உண்மை எந்தக் கன்னிகை மணமகனுக்குத் தந்தையின் கோத்திர முடையவ ளல்லாதவளேயாயினும்தாய்க்குச்சபிண்டியளே யாயினும் அக்கன்னிகை மணம்புணர்வதற்குத்தக்கவள் என்று கூறத்தக்கது.

அங்ஙனமனுவுங் கூறினர். మనుః॥ "అసపిండాచయామాతు రసగోత్రాచయాపితుః। సాప్రశస్తాద్విజాతీనాం దారకర్మణిమైథునే" = எந்தக்கன்னிகைமணமகன் தாய்க்குஅசபிண்டி? "చ" என்றதனுல் அசகோத்திரையோ? எந்தக்கன்னி மணமகன் பிதாவுக்குஅசகோத்திரையோ? "చ" என்றதனுல் அசபிண்டியோ? அந்தக்கன்னிகை இருவர் கூட்டத்தா லாகத்தக்க விவாககருமத்தில் இருபிறப்பாளருக்கு உடன்படத் தக்கவள் என்று கணக்கிடப்பட்டது. எறு.

அற்றேல், ஈண்டு தாயைக்குறிப்பதற்குப்பயனில்லை. ஏனெனில்? தந்தையின் கோத்திர சபிண்டத் தன்மை கூடாதென விலக்கியதனுனே தாயின் சபிண்ட கோத்திரத்தினையும் உடன்

படலாகாதென்று பொருள் படுகின்றது. தந்தையின் கோத்திர சபிண்டத்திற் காயினும் தாய்க்குப்பிண்ட கோத்திரம் வேறில்லை. எனெனில் ? ఏకత్వంసాగతాభర్తుః పిండగోత్రేచసూతకే। స్వగోత్రాద్భ్రశ్యతే నారీవివాహాత్సప్తమేపదే" = மாது பிண்டம், கோத்திரம், சூதகம், இம்மூன்றிலும் விவாகத்தில் சத்தபதிகருமம் நிறைவேறுதலினால் கணவனோடு சேர்ந்து விடுகின்றனள். என்று பிரமாண மொழி யுள்ளவே, என்றால் ?

அங்ஙனமன்று, காந்தருவம் முதலிய விவாகத்துள் கன்னியாதானமே யில்லையாதலின், ஆண்டு பிதிர்கோத்திர சபிண்டம் உண்டாகாதன்றோ. என்னை ?

மார்க்கண்டேயம். మార్కండేయపురాణే॥ బ్రాహ్మ్యాదిషువివాహేషుయా యూఢాకన్యకాభవేత్। భర్తృగోత్రేణకర్తవ్యాతస్యాః పిండోదకక్రియా। గాంధర్వాదివివాహేషు పితృగోత్రేణధర్మవిత్"—பிராமியம்முதலிய மணவிதிப்படி கன்னிகைக்கு விவாகமாயிருந்தால் அந்தக்கன்னிகைக்குப் பிண்டோதகமுதலிய கிரியை நடக்கும்படிநேரிடின் தருமமுணர்ந்தவன் அக்கன்னிகையின் கணவன் கோத்திரத்தினாலே நடத்தவேண்டும். கன்னிகைக்குக் காந்தருவமுதலிய மணம்நேர்ந்திருந்தால் அவளுக்குப் பிண்டோதகமுதலியன அவளுடைய தந்தைகோத்திரத்தால் நடத்தவேண்டும் என்றது காண்க.

அம்மான் மகளை மணம்புரிதல்.

மேற்கூறிய பிரமாணத்தின் வழக்கினாலே அம்மான்மகளை மணம்புணர்தலின் வழக்கையும் அகலவொழிக்கப் பட்டது. எங்ஙனமெனில்? அம்மான்மகளை மணம்புணர லாகாதென்ற பிரமாணவாக்கியங்களனைத்தும் காந்தருவம் முதலிய விதிப்படி மணம் புணரப்பட்ட கன்னிகைகளைக் குறித்தது. என்எனில் ? ஆண்டு, கன்னியாதான முதலியமுறை சபிண்ட சம்பந்தம் தவிரிருத்தலில்லை. அம்மான்மகளை மணம் புணரலாம் என்னும் சுருதிமிருதி உலகவழக்குகள் முதலியன பிராமியம் முதலிய மணவிதிப்படி மணம்புணரப்படும் கன்னிகைகளைக் குறித்தது. என்னை ? ஆண்டு, தானத்தினால் சபிண்டம் ஒழிந்து போகின்றது. எறு. காண்க.

அம்மான்மகள்மணத்தின்விலக்கு.

சாதாதபர். శాతాతపః॥ "మాతులస్యసుతామూఢ్వామాతృగోత్రాం తథైవచ। సమానప్రవరాంచైవ ద్విజశ్చాంద్రాయణంచరేత్" = அம்மான் மகளை யாயினும் தாயின்பிறப்புக் கோத்திர கன்னிகைகளை யாயினும், தன்னெடொத்த பிரவரமுடைய கோத்திரத்திற் பிறந்த கன்னிகைகளையேயாயினும் இருபிறப்பாளன் மணம் புணர்ந்தால் சாந்திராயண விரதஞ் செய்தல்வேண்டும். எ-று. காண்க.

பைட்டீநசி. పైఠీనసిః॥ "పితృమాతృష్వస్రు దుహితరోమాతులస్య సుతా ధర్మతోభగిన్యస్తా వర్జయేదితి విజ్ఞాయతే"=தந்தையோடு பிறந்த மாதர்க்கும்தாயோடுபிறந்த மாதர்க்கும் அம்மானுக்கும் மகண்மையானவர் தனக்குத் தருமப்படி தங்கையர்களாகவே யிருக்கின்றனர். அவர்களை மணம்புணரலாகாதுஎன்றுஉணரத்தக்கதுஎ-று.காண்க.

சுமந்து. సుమంతుః॥ పితృపత్న్యస్సర్వామాతరస్త ద్భ్రాతరో మాతులాస్త ద్దుహితరశ్చ భగిన్యస్తదపత్యాని భాగినేయాస్స్యథాన్యథాసంకరకారిణ్యః" = தந்தை மனைவியர் யாவரும் தனக்குத்தாயாம். அவர்கள் சகோதரர் அனைவரும் தனக்கு நல்லம்மானேயாவர். அவர்கள் பெண்மக்களனைவரும் தனக்கு உடன் பிறந்தவரோ யாவர். அவர்கள் பெண்மக்களும் தன் சகோதரிகளின் பெண்களே யாவரென்று எண்ணவேண்டுவது. வேறெண்ணில் சாங்கரியதோஷஞ்செய்தவரோ யாவர். எ-று. காண்க.

வியாசர். వ్యాసః॥ "మాతుస్సపిండా యత్నేనవర్జనీయా ద్విజాతిభిః"= இருபிறப்பாளர் தங்கள் தாயின் சபிண்டரைத் தாம் மணம்புணர்தலை முயற்சித்தும் ஒழித்தல் வேண்டும். எ-று. காண்க.

அற்றேல், விசேடமொன்று மில்லாமலே இவ்வாறுவிலக்குகின்ற இந்த வுரைகளை வேறோர் சிறிய விசேடம்பற்றி நிடேதிக்கவந்தனவென்று எங்ஙனம் கூறப்படுமெனில்?

இவ் வுரைகளெல்லாம் பொதுவுரையாக வேறுவிசேடவுரை உண்டாயிருத்தலின் அங்ஙனம் முடிவு கூறுகின்றாம். எங்ஙனமெனில்?

மனு. మనుః॥ "పైతృష్వసేయీంభగినీం స్వస్రీయాంమాతురేవచ। మాతుశ్చ భ్రాతురాప్తస్య గత్వాచాంద్రాయణంచరేత్। ఏతాస్తిస్రస్తు భార్యార్థే నోపయచ్ఛేత బుద్ధిమాన్"—நல்லத்தைமகளும், தாயின் உடன்பிறந்தவள் மகளும், ஆத்தனுகிய அம்மான் மகளுமாகிய சகோதரியரை மணம் புணர்ந்தால் அந்தக்குற்றத்தை யொழிக்கும்படி சாந்திராயண விரதத்தை அனுட்டிக்கவேண்டும். ஆதலின் இம்மூவகை மாதரையும் அறிவுடையோன்மணம் புணரலாகாது. எ-று காண்க. இவ்விடத்து "భగినీ—பகினீ," என்றமொழி நல்லத்தைமகள் முதலியோர்க்கு விசேடம். "ఆప్తస్య", என்றமொழி அம்மானுக்கு விசேடம். "స్వాం", என்றமொழியை வருவித்துரைக்கவும் ஆப்தன் எனவே சமீபித்தவனுகிய சபிண்டன், காந்தருவமுதலிய விவாகவிதியால் மணம்புணரப்பட்டதாயின் உடன்பிறந்தோனுகிய அம்மான் என்று பொருள் படுகின்றது. நல்லத்தைமகள் என்புழியும் சபிண்டசம்பந்தம் விட்டொழியா திருக்கும்காந்தருவ முதலிய விதியோடு மணம்புணரப்பட்ட நல்லத்தைக்கு மகள்என்று கூறுவதற்குக் கருதியவாறுகப் பொருள் படுகின்றது. அங்ஙனமாயின். அவள்மகளுக்கு "భగినీ" = உடன்பிறந்தவள் என்ற விசேடணம் ஏற்கின்றது. அங்ஙனமில்லையேல், பிரமம்முதலிய மணத்தில் சபிண்ட சம்பந்தம் ஒழிந்துபோயிருத்தலால் அப்படிப்பட்ட அத்தையினுடைய மகளுக்கு "భగినీ," என்ற சொல் விசேடணமாகச் சம்பந்தம் அடுக்கமாட்டாது. இதேவழக்குத் தாயின் உடன்பிறந்தவளுடையமகள் விடயத்திலும் கொள்ள வேண்டுவது, ஆதலின் "భగినీం", "ఆప్తస్య"என்ற விவ்விரண்டு மொழிகளோடு சேர்ந்திருக்கும் மனு வுரையின் ஆற்றலால் விசேடிக்கப்படா துரைக்கப்பட்ட விலக்குரைகளை விசேட விடயத்திற்றுனே பின்னெடுத் துரைத்து முடிக்கின்ரும்.

ஆயின், இவ்வாறுகவே நோக்குமிடத்து பிரம முதலிய மணத்துள் சபிண்டம் தப்புவதால் "భగినీ" என்றசொல் அந்த நல்லத்தை முதலியோர் பெண்களுக்கு விசேடணமாக இயைபுபெறு தொழிகின்றது. இதே வழக்குத்தாய் விடயத்தில் நல்லம்மான் மகளைத்தான் மணம் புணர்வது வடநாட்டுச்சில சிட்டராகிய பெரியோரால் நிந்தித்து ஒழிக்கப்பட்டுள்ளது.

ஆயினும், தென்னாட்டினராகிய சிட்டரால் அனுட்டிக்கப் பட்டுள்ளவிடயத்தில் அம்மான்மகளை மணஞ்செய்து கொண்டவாறு போலத்தாயின் உடன்பிறந்தவளுடையமகளையும் மணம்புணர்தலாமன்றோ? அந்தப்பக்ஷத்தில் அவ்வாறுஏன் மணம்புணரலாகாதுபுணர்த லாமேஎனில்?

அங்ஙனமன்று. சிட்டரால் விலக்கப்பட்டிருத்தலின், அந்தவிலக்குப் பிரமாணவுரையைக் கற்பித்தலுங்கூடும். எங்ஙனமெனில்?

பெரியர் எதனை விலக்கியுள்ளனரோ? அதனைக்கொள்ளலாகாதென்று யாஞ்ஞவற்கிய மிருதிகூறுகின்றது. యాజ్ఞవల్క్యః "అస్వర్గ్యంలోకవిద్విష్టంధర్మమప్యాచరేన్నతు" = சுவர்க்கப்பயனில்லாததும் "உலகவழக்" கென்னும் சான்றோராட்சி யில்லாதது மாகிய கருமம் தருமமாயிருப்பினும் அதனை அனுட்டிக்கலாகாது. எறு. காண்க.

ஆயின், அம்மான்மகளை மணம்புரிதல் வடநாட்டின் கண்ணுள்ள பெரியர் யாவராலும் விலக்கப்பட்டுள்ளது. தென்னாட்டின்கணுள்ள சிட்டரால் அனுட்டிக்கப்படுகின்றது. ஆதலின், வடநாட்டாருடைய ஆசாரம்நிந்திக்காமலே யுள்ளதன்று.

என்னை? தென்னாட்டி லுள்ளவர்க்கே வேண்டுகோளால் செய்வதாமாயிற்றென்று ஏன் கூறலாகாதெனின்? அங்ஙனமன்று. விதிநூலையும், விலக்கு நூலையும், நன்காராய்ந்து சோதித்த பெரியோரே உடன்பட்டுச் செய்கின்றாராதலின், அப்படிப்பட்ட அம்மான்மகள் மணம்போலத்தாயுடன் பிறந்தவளின்மகளை மணம்புணர்தலும் தக்க தல்லவாம். விலக்கப்படாதுள்ள பெரியர் வழக்கத்தினால் விலக்கப்பட்டுள்ளது. எனவே, அம்மான்மகளின் மணத்தைச் சிலர் உடன்பட்டனர். தாயுடன் பிறந்தவளின் மகள் மணத்தை அனைவரும் விலக்கினர். இவ்வேறுபாட்டால் அது ஒத்த வழக்கன்று.

அதுநிற்க. யாவரும் உடன்பட்ட விடயமன்றோ? கொள்ளத்தக்கது. சிலரோ யுடன்பட்ட அம்மான்மகளின் மணத்திற்குச் சிலராட்சி வழக்கு வலியேயன்றி நூலால் விதிக்கப்பட்டுள்ள

வலியென்னுள்ளது எனில்? விசேடநூலளவையும் உள்ளது. என்னை?

அம்மான்மகள் மணவிதிப்பு.

அம்மான்மகள் மணத்தை விதித்தசுருதி. மந்திரவருணங்கள். இருக்கு. ఋగ్వేద॥ "ఆయాహీన్ద్ర పథిభిరీళితేభిర్యజ్ఞమిమంనోభాగధేయంజుషస్వ।తృప్తాంజుహుర్మాతులస్యేవయోషాభాగస్తే పైతృష్వసేయీవపామివ,"= இந்திரனே! துதிக்கப்பட்டவழியால் எங்களுடையவேள்வியைக் குறித்துவருக. வந்து எங்களால் கொடுக்கப்பட்ட வுனதுபாகத்தைப்பெற்றுக்கொள்க. இந்தவேள்வியில் இருத்துவிக்குகளால் நெய்முதலிய கொண்டு சுத்தம்பெறத் திருத்தி வைக்கப்பட்ட "வபையை" உன்னைக்குறித்து, ஹோமமுன்னிலையில்கொடுக்கின்றனர். (இவ்விடத் திரண்டுதிருட்டாந்த முள்ளன. எங்ஙனமெனில்?) எவ்வாறு, அம்மான்மகள் தௌஹித்திரன் பாகத்துக்கு வருகின்றாளோ? எனவே எவ்வாறு மணம்புணரத்தக்கவளாகின்றனளோ? அவ்வாறு. மற்றும், எவ்வாறு, அத்தைமகள் பௌத்திரனுடைய பாகத்துக்கு வருகின்றாளோ? அவ்வாறு. இந்த வபையென்னும் பாகமும் உன்பாகத்திற்கு வருகின்றது. பாகம்= பங்கு.

சுருதி, வாஜசநேயம். శ్రుతిః॥ వాజసనేయకే॥ తస్మాత్సమానాదేవ పురుషాదత్తాచాద్యశ్చజాయతే ఉతతృతీయేసంగచ్ఛావహైచతుర్థే సంగచ్ఛావహాఇతి" சமானமுடைய புருடனினின்றும் அனுபவிப்பவனும், அனுபவிக்கப்படுவதும், பிறக்கும். அவ்வளவே யன்று. மூன்றாவதனுள் கூடுகின்றோம். நான்காவதனுள்ளும் சேருகின்றோம். எ-று. எனவே, சமானன் என்பது. ஓரேமூலபுருடனினின்றும்-எ-று. "అత్తా" = உன்பவனும், "అద్యః" = உண்ணப்படுவதும், எனவே மணமகன், மணமகள் என்னுமிருவரும் பிறக்கின்றனர். அவரிருவரும், ஒருவர்க்கொருவர் உரிமையோடு சங்கற்பிக்கின்றனர். எங்ஙனமெனில்? மூன்றாந்தலை முறையி லாயினும், நான்காந்தலைமுறையி லாயினும் சேருவோம். எனவேமணம் புணர்வோம். எ-று. இதன்உதாரணம் கூடத்தகனை விசாரத்துள் விரித்துரைக்கப் பட்டுள்ளது.

இந்தச்சுருதி அருத்தவாத மன்றோ? அருத்த வாதத்திற்குத் தன்னுரையில் பிரமாண மில்லையே யெனில்? ஆம்அருத்தவாத மே,ஆயினும் பிரமாண முடிவுகளோடு முரணுத லில்லாமையானும்,தன்னுரையில் பிரமாண விரோதத்தைக் காட்டும் மறுப்புவிதி வாக்கியங்களுக்குக் காந்தருவமுதலிய விவாகவிதிகளால் தாயின் சபிண்டசம்பந்த நிவர்த்தியில்லாத பெண்ணைக்குறித்த தென்ற உடன்பாட்டுவிதிகற்பனையா யிருத்தலாலும், அருத்த வாதத்திற்குத்தன்னுரையினும் சுருத்துவாதிக்கப் படுவதன்று·இந்தவிசாரத்தைமேல் உரைத்துள்ள அருத்தவாத விவகாரத்தில் கூறப்பட்டிருக்கின்றது. ஆதலின் முரணுதலில்லாத அருத்தவாதத்தால் அனுவதிக்கப்பட்டிருத்தலின், உபரிதாரணம்=விதியைக்கற்பித்த வாறேபோல அம்மான்மகளின் மணவிதியையும் கற்பிப்பதற்குக் கூடுமாகின்றது. விதியைக்கற்பித்தல் எவ்வாறெனில்?

விதிகற்பிக்குமாறு.

பிரேதாக்கினி ஹோத்திர பிரகரணத்தில் சுருதி கூறுகின்றது. ప్రేతాగ్నిహోత్రేశ్రూయతే॥ "అధస్తాత్సమిధంధారయన్ననుద్రవేదుపరిహిదేవేభ్యోధారయతి"=அவ்விடத்துப் பிதிர்சம்பந்தமாகிய அவிசுக்குக் கீழ் மந்திரத்தோடு சமித்துக்களை வைப்பதற்கு விதித்து, இந்தவாக்கியத்தின் சேடத்தில், சமித்துக்களை அவிசுவின்மேல் வைப்பதைத் தேவகருமத்தில் சுருதிகூறிற்று, அன்றோ?

இந்தச்சுருதி அருத்தவாதமோ? அல்லது விதிவாதமோ? என்பது சமுசயம்.

அவற்றுள், அவிசுவினுக்குக்கீழ் சமித்துக்களைவைத்தல் வேண்டும் என்றவிதிக்குத் துதிவடிவமாக அதனோடு ஓரே வாக்கியத் தன்மை கிடைத்தலால் அது அருத்தவாத மென்பது பூருவபக்ஷம்.

பிரசித்தமாகிய பொருளையன்றோ அனுவாதம் செய்து, அதனால்துதிப்பது ஒத்தப்படியாகின்றது. மேலேசமித்துக்களை வைப்பதோ? யாண்டும் வழக்கமுடைய தல்லவாதலின், அதற்குஇது துதியென்பது பொருந்தாது. ஆகலின் அருத்தவாதமாக

லாற்ருது. அதுவேறுவாக்கியமென்று உடன்பட்ட விடத்தும் அபூர்வார்த்தமானது; (அபூர்வம் = அதிர்ஷடம்=புண்ணியம்.) எனவே தருமத்தை உண்டுபண்ணுவதாம் ஆதலின் அதுவிதியாகவே யிருத்தல்வேண்டும். ஆகலின், அதுவிதியென்றே சித்தாந்தம்.

மேற்கூறிய அதிகாணத்தில், ஹோமஞ்செய்த அவிசின்மேல் சமித்துக்களை வைப்பது புண்ணியகரமாதலின் சமித்துக்களைவைக்கவேண்டும் என்றவிதியைக் கற்பித்து இருப்பதுபோல இவ்விடத்தும், எனவே, மேற்கூறிய சுருதியிலும் ("తృతీయేసంగచ్ఛావహై") அம்மான்மகளை மணம்புணர்தல் புண்ணியகரமாதலின் மணம்புணரவேண்டும் என்பது விதியே யென்று கற்பிக்கப்படுகின்றது.

ஆதலின், இந்த அம்மான்மகளை மணம்புணர்தல் வேதத்துள்ளும் விதிக்கப்பட்டுள்ள வாருயிற்று.

இனி மிருதிகளோ? பிரமம் முதலிய மணங்களில் சபிண்ட சம்பந்தம் தப்புவதால் அம்மான்மகளை மணம் புணர்வதற்கு முரணில்லாதபடி இயைபுசெய்து வழிகாட்டப்பட்டது. ஆகலின் மிருதி சம்மதமும் பெற்றவாருயிற்று.

சான்ருேர் வழக்காயின், தென்னுட்டின்கணுள்ளவர்களுள் விலக்கொன்றுமை மேற்கூறப்பட்டுள்ளது.

இங்ஙனமாகச் சுருதி, மிருதி, சான்ருேர் வழக்கு என்னும் மூன்றின் ஆற்றலால் அம்மான்மகளின் மணம் மாத்திரம் பிரமாணமாக ஏற்படுகின்றது.

மற்றுஞ் சிலர், ஆசுரம் முதலிய மணத்துள்ளும் தேய வேறுபாட்டால் அம்மான்மகளை மணம் புணர்தல் தரும சம்மதமானதென்று நிச்சயிக்கின்றனர். அன்றியும் நூலளவையும் கூறுகின்றனர். வருமாறு.

தக்ஷிணேத்தரதேசாசாரபேதம்.

போதாயனர். బౌధాయనః॥ "పంచధావిప్రతిపత్తిర్దక్షిణతఅనుపనీతేన భార్యయాసహభోజనం పర్యుషితభోజనం మాతులదుహితృపితృష్వస్సృదుహితృపరిణయనమితిఅథోత్తరత ఊర్ణావిక్రయశ్శీధుపాన ముభయతోదద్భిరభ్య వహారఆయుధీయకం

సముద్రయానమిత్యర ఇతరస్మిన్ముద్రవ్యస్తూష్యత ఇత్యరఇతరస్మిన్దేశే ప్రామాణ్యాత్ "= மஹாவிருடியர், அந்தந்தநாட்டினைப் பற்றித்தக்கப்படி ஆசாரத்தினை அளவுசெய்துள்ளனர். ஆதலின், தென்னாட்டில் ஐந்து ஒழுக்க வழக்கமும், வடநாட்டில் ஐந்து ஒழுக்க வழக்கமும்கூடுமா கூடாதாவென்று ஆராய்ந்துவிதித்து, உடன்பட்டுள்ளனர். தென்னாட்டில் உபநயநமில்லாத சிறுவனோடு சமபந்தியிற் புசித்தல்-க, தன்மனைவியோடு தான் சமபந்தியிற் புசித்தல்-உ, பழயதுண்டல்-ங, அம்மான் மகளை மணம்புணர்தல் - ச, நல்லத்தைமகளை மணம்புணர்தல்-ரு, இவ்வைந்தும் நல்லஒழுக்கவழக்கமேயாம். அவ்வாறே,வடநாட்டில்,பட்டு, கம்பலமிவற்றைவிற்றல்-க, புகைபிடித்தல்-உ, பற்களால் கடித்துத்தின்று கையலம்பாமை ங, ஆயுதங்களைக் கையிற்பிடித்தல்-ச, கடலின்மேற் கலத்திற் சேறல்-ரு, இவ்வைந்தும் நல்லொழுக்க வழக்கமேயாம். தென்னாட்டினன் வடநாட்டாசாரத்தை அனுட்டித்தாலும், வடநாட்டினன் தென்னாட்டு ஆசாரவழக்கினைச் செய்தாலும் குற்றமடைவன். ஆயின், தென்னாட்டவன் வடநாடுசென்று அங்கிருக்கும்போது அவ்வடநாட் டொழுக்கத்தைச் செய்யினும், வடநாட்டினன் தென்னாட்டைந்து, அங்கிருந்து தக்ஷிணாசாரத்தைச் செய்யினும் குற்ற மடைவதில்லை. எ-று. காண்க.

தேவலர். దేవలః॥ యస్మిన్దేశేయఆచారోన్యాయదృష్టస్సుకల్పితః। సతస్మిన్నేవ కర్తవ్యోదేశాచారస్స్మృతోభృగోః। యస్మిన్దేశేపురేగ్రామేత్రైవిద్యనగరేపివా। యోయత్రవిహితోధర్మస్తంధర్మంనవిచాలయేత్ " = எந்தநாட்டில் எந்த ஆசாரம் வழக்கு நோக்கம்பற்றி யாராய்ந்து முன்னோரால் விதிக்கப்பட்டுள்ளதோ? அந்த வழக்கு அந்தத் தேசத்தே அனுட்டிக்கப்படும். தேயவொழுக்கமே சிறந்ததென்று பிருகு முனிவரும் உடன்பட்டனர். ஆதலின் எந்த நாட்டிலாயினும், எந்தப்பட்டணத்துளாயினும், எந்த ஊரிலாயினும், எந்த அரசநகரத்துளாயினும் இருபிறப்பாளராகிய மூன்று வருணத்தரும் உள்ள இடங்களில் மூன்று வேதங்களையும் நன்குணர்ந்த பெரியர் எந்த ஆசாரத்தினை விதித்து அனுட்டித்து வருகின்றனரோ? அவ்விடத்து அது தருமமாகவே யிருக்கின்றது. அந்தத் தருமத்தை அசைத்தலுமாகாது. எ-று. எனவே கெடுக்கலாகாது என்றபடி.

முன்னோர்க்கும் பின்னோர்க்குமுள்ள வேறுபாடு.

ஆ!! சான்றோர் ஒழுக்கவழக்கமே அளவையென்று கூறுமிடத்துத் தன் மகளையும் தான் மணம் புரிதல்கூடும். எங்ஙனமெனில்? பிரஜாபதியாகியபிரமன் அங்ஙனம்செய்தனர். என்னை? சுருதி. శ్రుతిః॥ "ప్రజాపతిర్వైస్వాం దుహితరమభ్యధ్యాయత్"=பிரமன்யாருமறியத் தன் மகளாகிய கலைமாதினைத்தானே இச்சையாலெண்ணினர். எ-று. அங்ஙனமிருப்ப யாம் ஏன்? அவ்வாறு செய்யலாகாதெனில், அது பொருந்தாது. என்னை?

"నదేవచరితంచరేత్" = தேவர்கள் சரிதம்போல மானிடர் செய்யலாகாது. என்ற நியாயமுண்டு. அதனானே போதாயனரும் கூறினர். బౌధాయనః॥ "అనుష్ఠితంనయద్దేవైర్మునిభిర్యదనుష్ఠితం। నానుష్ఠేయం మనుష్యైస్తదుక్తంకర్మసమాచరేత్" = தேவர்களால் எது அனுட்டிக்கப்பட்டதோ? முனிவரால் எது அனுட்டிக்கப்பட்டதோ? அவையெல்லாம் மானிடரால் அனுட்டிக்கப்பட மாட்டாது. எது விதிக்கப்பட்டதோ? அந்தக்கருமமேசெய்யப்படும். எ-று. காண்க.

அங்ஙனமாதலின், பிராம முதலியமணங்களுக்கு விடயம் வகுத்தலினாலும் தேயபேதநூல்களுக்கு விடயங்களை வகுத்தலினாலும் அம்மான்மகளை மணம்புணர்தல் "అసపిండాం," சபிண்டியாகாதவளை மணம்புரிதல் வேண்டும் என்றதுமுதலாக மேற்கூறிய நூலினானே பிரசித்தமாகின்றது. (எனவே அம்மான்மகள் சபிண்டியல்லள் என்று சித்தாந்தமான வாறாயிற்று).

மணம்புரிதல்விதி தொடக்கத்தில் யாஞ்ஞவற்கிய மிருதியால், "యవీయసీం" = சிறியவளை மணம்புணர வேண்டுமென்று கூறியது, வயதினளவையாலும், தேகஅளவையாலும், தன்னினும் சிறியவளா யிருப்பவளை மணம்புரிய வேண்டு மென்பது கருத்து.

மணத்திற்குரியபருவ அளவு.

மனு. మనుః॥ "త్రింశద్వర్షోవహేత్కన్యాం హృద్యాంద్వాదశవార్షికీం। త్ర్యష్టవర్షోష్టవర్షాంవాధర్మే సీదతిసత్వరః" = முப்பது வயதுடைய ஆண்மகன், பன்னிரு யாண்டுடைய கன்னிகையை மணம்புணர

வேண்டுவது. இருபத்து நான்கியாண்டுடையவன். எட்டுவருடமு டையாளை மணம்புரியலாம். அதற்குமேற் பட்டால் தருமத்தில் துன்பமுறுகின்றனன். எறு. காண்க.

பிரகஸ்பதி బృహస్పతిః॥ త్రింశద్వర్షో దశాబ్దాంతు భార్యాంవిందేతనగ్నికాం। ఏకవింశతివర్షోవా సప్తవర్షామవాప్నుయాత్" முப்பது வருடமுடையவன் பத்தி யாண்டுடையவளையும், இருபத்தொன்பது வருடமுடையவன் ஏழாண்டுடையவளையும் மணம் புணர்க. எறு. காண்க.

விஷ்ணுபுராணம். విష్ణుపురాణే॥ "వర్షైరేకగుణాంభార్యా ముద్వహే త్త్రిగుణస్స్వయం"—ஒருபங்கு வயதுடைய கன்னிகையை மூன்று பங்குவயதுடைய மணமகன் மணம்புணர்க. எறு.

" అరోగిణీం "భ్రాతృమతీం"—எந்தநோய்க்கு அவிழ்தம் புரிந் தாலும் குணப்படுவதாக வைத்தியர்கள் உடன்படுத லில்லையோ? அப்படிப்பட்ட க்ஷயரோகம் முதலிய பெரியநோய் இல்லாதவ ளாகச் சோதித்து மணம்புரிக.

"భ్రాతృమతీం"—முன்பிறந்தோ னேனும் பின்பிறந்தோனே னும்உடையவளை மணம்புரிதல் வேண்டும். என்றதனுனே புத் திரிகைஎன்னும் சங்கையால் ஒழிக்கப்படுகின்றது. அதனுனே, மனுவுங்கூறினர். మనుః॥ యస్యాస్తునభవేద్భ్రాతా నవిజ్ఞాయేతవాపితా। నోపయ చ్ఛేతతాంప్రాజ్ఞః పుత్రికాధర్మశంకయా "—எந்தக்கன்னிகைக் குடன்பிறந்த வனில்லையோ? தந்தையும் அறியப்படானே? அந்தக் கன்னிகை யைஅறிவுடையோன் புதல்வி என்னும்தருமமுடையவளோ? அல் லவோ?என்னும்ஐயத்தால்மணம்புரியலாகாது.எறு. காண்க. என வே,எந்தக் கன்னிகையின் பிதா அக்கன்னிகையைத் தனக்குமக ளாகச்செய்து கொள்ளும் கருத்தினை யுடையவனே? அல்லவோ? என்னும் முடிபை மணமகனறியாமல் மணம்புரிய லாகாது. கன்னிகைக்கு உடன்பிறந்தவர்க ளிருந்தால் அந்தச் சந்தேகம் பிறத்தலுக்கு இடனில்லை. எந்தவிடத்து, அப்படிப்பட்ட ஐய மில்லையோ, அப்படிப்பட்ட கன்னிகை சகோதர ரில்லாதவளே யாயினும் அவளைமணம் புரிதலுண்டாம் என்பதுகருத்து. தந்தை யறிப்படானே? என்பது, மணமகனேடு உடன்பாடு செய்து கொள்வ தில்லாமலே தந்தை தன்மனத்துள்ளே எண்ணிக்

கொண்ட மாத்திரையாலே அக்கன்னிகை புத்திரியே யாகின் ருள் என்றுணரவேண்டும். ஆகலின் தந்தைகருத் தறியாவிட்டால் என்பதுகருத்து.

அங்ஙனம் கௌதமர்கூறினர். గౌతమః॥ "అభిసంధిమాత్రాత్పుత్రికేత్యేకేషాం తత్సంశయాన్నోపయచ్ఛేదభ్రాతృకాం" = சங்கற்ப மாத்திரை யானே கன்னிகை புத்திரிகையாகின்ருள். எனவே, மகள், மகனே யாகின்ருள் என்றுசிலர் கருத்து. ஆதலின், அந்தஐயத்தால் உடன்பிறந்தார் இல்லாத கன்னிகையை மணம்புரிய லாகாது என்றபடி.

மனு. "మనుః॥ అపుత్రో౽నేనవిధినా సుతాం కుర్వీతపుత్రికాం। యదపత్యంభవేదస్యాం తన్మమస్యాత్స్వధాకరం"=புதல்வரில்லாதவன் அவ்விதியால் மகளை மகனைப்போலச் செய்துகொள்க. எங்ஙனமெனில்? இக்கன்னி கையிடத்து என்னசந்ததி பிறக்கின்றதோ? அதுஎனக்குப்பிதிர் கருமத்தால் திருத்தி செய்வதாம் என்று நினைப்பது. எ-று. காண்க.

புதல்வனில்லாதான் மகள், மகனே யாவள்.

மணமகனேடு உடன்பாடு செய்துகொண்ட பக்ஷத்தில் கன் னிகையைப் புத்திரிகையாகச் செய்துகொள்வது வெளிப்பட வுணரப்படுகின்றது. அவ்வாறுடன்பாடுசெய்துகொள்வது வசிட் டரால் கூறப்பட்டது. వసిష్ఠః॥ "అభ్రాతృకాంప్రదాస్యామి తుభ్యంకన్యా మలంకృతాం। అస్యాంయోజాయతేపుత్రస్సమే పుత్రోభవిష్యతి" = உடன்பிறந் தவரில்லாத விக்கன்னிகையை அலங்கரித் துனக்குத்தானஞ் செய்கின்றேன். இவளிடத்து எந்தமகன் பிறக்கின்ருனே? அவன் எனக்குமகனும் எ-று. காண்க. సమేపుత్రోభవేదితి॥ என்பது உம்பாட மாயின், அவனே நமக்குப்புத்திர ஞகின்ருன். எ-று. காண்க.

இவ்வெண்ணத்தோடு தானஞ் செய்யப்பட்ட கன்னிகை காந்தருவ முதலிய மணத்தால் மணம்புணரப்பட்ட கன்னிகை யேபோல் தந்தையோடு சபிண்ட சம்பந்தத்தையும் சகோத்திர சம்பந்தத்தையும் அடைந் திருக்கின்ருளே யல்லாது அச்சம் பந்தம் அவளுக்கு விட்டொழிவதில்லை.

அதனுனே லோகாக்ஷி கூறுகின்றனர். శ్లో॥ "మాతా మహస్యగోత్రేణమాతుః పిండోదకక్రియాం। కుర్వీతపుత్రికాపుత్ర ఏవమాహప్రజాపతిః"= மகளுடைய மகன் தன்தாய்க்கு மாதாமகன் = தாய்மரபுபாட்டன் கோத்திரத்தால் எள்ளுநீர் பிண்டகருமமுஞ் செய்யவேண்டும் என்று பிரஜாபதி கூறினர். எறு. காண்க.

ஆதலால், கன்னிகை அவள்தந்தைக்கு மகன்போலிருப்பளோ? அல்லளோ? என்னும் ஐயமுடையவனும், தனக்கு மகனை வேண்டினவனுகவும் இருக்கும் மணமகன், உடன்பிறந்தவர்களையுடைய கன்னிகையையே மணம்புணர வேண்டுமென்பது கருத்து.

கோத்திரப்பிரவர நிச்சயம்.

"అసమానార్షగోత్రజాం"=ஒத்தஇருடிப் பிரவரமுடைய கோத்திரத்தில் பிறந்தவளல்லாதிருக்கும் கன்னிகையை மணம்புணர வேண்டுவது. "ఆర్ష=ஆர்ஷம்", என்பது இருடிசம்பந்தமாகிய பிரவரம். இதுகோத்திரத்தை விருத்திசெய்யத்தக்க முதல்வராகிய முனிவரினின்றும் வேறுகோத்திரத் தினின்றும் வேறுபாட்டை புணர்த்தும் முனிவர் கணமாக விருக்கின்றது. எங்ஙனமெனில்? கோத்திரத்திற்குத் தலைவராகிய பரத்துவாசருக்கு வியாவர்த்தகர். எனவே அங்கியமாயுள்ள வேறுபாட்டை நினைப்பிக்கும் ஞாபகர்களாவார், அங்கிரசுவும், பிரகற்பதியுமாம் ஆதலின் ஆங்கிரசு, பாரகஸ்பத்திய, பாரத்துவாசர் என்னும் மூன்று முனிவர்களின் பிரவரமுடைய பாரத்துவாஜ கோத்திரமுடையவன் நான் என்றுவாக்கிய பிரயோகம் செய்கின்றனர். பிரவரம்=சிரேட்டம். பிறவுமன்ன. கோத்திரம் எனவே வமிசபரம்பரை என்பதுவழக்கு.

எந்தக்கன்னிகைக்கு மணமகனேடு ஒரேபிரவர மாயினும் ஒரேகோத்திரமாயினும் ஒத்திருப்பதோ? அக்கன்னி அந்த மணமகனுக்குப் புணரத்தக்கவளல்லள். மணமகள் மணமகனிருவருக்கும் பிரவரஒருமையாவது கோத்திர வொற்றுமையாவதுஇல்லாதிருக்கின் அவர்கட்கு மணம்புணர்தலாம். சிலவிடங்களில் கோத்திரம் வேறுபட்டிருக்கினும் பிரவர வொற்றுமை யுண்டாவதுண்டு. எங்ஙனமெனில்?

பிரவரவொருமைவருமாறு.

"యాజ్ఞవల్క్యవాధూలశౌనకానాం భిన్నగోత్రాణాం భార్గవవీతహవ్యాసావేతసప్రవరైక్యాత్" = யாஞ்ஞுவற்கிய கோத்திரம், வாதூளகோத்திரம், மௌனக கோத்திரம், இம்மூன்றும் வேறுவேறுகோத்திரமேயாயினும் இவற்றிற்கு, பார்க்கவர், விதஹவ்வியர், அசாவேதசர் என்னு மூன்று இருடிபிரவரர்களும் கலந்துவருகின்றனராதலின் பிரவரவொருமை யுண்டாயிருக்கின்றன. ஆதலின், அக்கோத்திர முடையவர்களுள் ஒருவர்க்கொருவர் மணவினைச் சம்பந்தமாகாது, என்ற இவைபோல்வனவற்றை யுணர்த்தும் பொருட்டு "అసమానార్షగోత్రజాం" என்று கூறப்பட்டது.

சிலவிடங்களில் பிரவரபேத மிருந்தாலும் கோத்திரவொருமைமாத்திர மிருப்பதுமுண்டு. வருமாறு, ஆங்கிரசர், அம்பரீஷர், எவ்வனுசுவர் என்னும் மூன்று இருடிபிரவரர்களை யுடைய கோத்திரம் ஒன்று. மாந்தாத்துரு, அம்பரீஷர், எவ்வனுசுவர், இம்மூன்று இருடிபிர வரமுடைய கோத்திரம் ஒன்று. இவ்விரண்டினுள் முதலாவதற்கு ஆங்கிரசப் பிரவரம். இரண்டாவதற்கு மாந்தாத்துரு பிரவரம். இவ்வாறு பிரவர வேறுபாடு இருந்தாலும் இவ்விரண்டும் எவ்வனுசுவ கோத்திரமேயாதலின் கோத்திர வொருமைக்குற்றம் உண்டாயிற்று. ஆதலின் அக்கோத்திரத்தா ரொருவருக் கொருவர் மணவினைச் சம்பந்தங் கூடாது. இவைபோன்றனவற்றைக்கருதி. "అసమానార్షగోత్రజాం" என்று கூறப்பட்டது.

கோத்திர முதல்வராகிய முனிவர்கள்.

கோத்திரங்களை யுண்டாக்கிய முனிவர்களில் சிறந்தவர்களாக எட்டுமுனிவர்கள் மிகப்புகழ் பெற்று விளங்குகின்றனர். அவர்கள், சத்த முனிவர்களும் எட்டாவார் அகத்தியருமாம். வருமாறு.

போதாயனர். బోధాయనః॥ "జమదగ్నిభరద్వాజ విశ్వామిత్రాత్రిగౌతమాః। వసిష్ఠకశ్యపాగస్త్యా మునయోగోత్రకారిణః। ఏతేషాంయాన్యపత్యాని తాని గోత్రాణిమన్వతే" = ஜமதக்கினி, பாத்துவாஜர், விசுவாமித்திரர், அத்

திரி, கோதமர், வசிட்டர், கசியபர், அகத்தியர், இந்தமுனி வர்கள் கோத்திரங்களைச் செய்தவர்கள். இவர்களுடைய மக்கள்யார்யாரோ? அவரவர்கள் வமிசபரம்பரைகோத்திரங்களென்று பெரியர்கள் கூறுகின்றனர். எறு. காண்க.

கணகோத்திரம்.

மேற்கூறிய எட்டுமூல கோத்திரத்தில் அவாந்திரகோத்திர வேறுபாடுகள் ஆயிரமாயிர மாகவுள்ளன. அவற்றுள், கணகோத்திரங்கள் நாற்பத்தொன்பதுள்ளன. என்று போதாயனர்கூறினர். బోధాయనః॥ "గోత్రాణాంచసహస్రాణి ప్రయుతాన్యర్బుదానిచ। ఊనపంచాశదేతేషాం ప్రవరాఋషిదర్శితాః" = கோத்திரங்களில் சிறந்த கோத்திரம் ஆயிரம். அவற்றுட் பிறந்தன முப்பதினுயிரங் கோத்திரம், அவற்றுள், ஒருஅர்ப்புதம்=ஆயிரம்கோடி கோத்திரம். இவ்வாறுவமிச பரம்பரைகள் பலவாக விருக்கின்றன. அவற்றுள், கணப்பிரவர கோத்திரம் நாற்பத்தொன்பதே என்றுமுனிவர்களால் குறிக்கப்பட்டுள்ளன. எறு. காண்க.

அயுதம், பிரயுதம், அர்ப்புதம், முதலிய எண்ணினை யுணர்த்துஞ் சொற்களுக்குப் பலஎன்பதே உட்கருத்து.

இந்தப்பிரவரத்திற்கு அந்தப்பிரவரம் ஒத்ததாக விருக்கின்றது. இந்தக்கோத்திரத்திற்கு அந்தக்கோத்திரம்ஒத்ததாகவே யிருக்கின்றது என்பதும், இந்தப்பிரவரத்திற்கு அந்தப்பிரவரம் ஒத்ததல்ல; இந்தக்கோத்திரத்திற்குஅந்தக்கோத்திரம் ஒத்ததல்ல என்பதும், இந்தக்கணம் அந்தக்கணத்துள் சேர்ந்ததோ? அன்றோ? இந்தவிரண்டு கணங்களும் ஒன்றோ? வேறோ? என்னும் விடயமுமாகஉணரத்தக்கன பலவுள்ளன. இதனைக்குறித்த பிரவர கண்டங்களும் பிரவர நியமங்களும் என்றகோத்திர வுணர்ச்சி நூல்கள், போதாயனர், காத்தியாயனர், விசுவாமித்திரர், கருக்கர், முதலிய முனிவர்களால் கூறப்பட்டுள்ளன. ஆண்டுஎனையவிவரங் களைக்காண்க. நூல்விரிவஞ்சி விடுத்தவாறன்றிப் பிறிதன்று. கோத்திர விசாரத்தை நன்றாகச் செய்யவேண்டுமென்றி விடலாகாது. ஏனெனில்? கோத்திர வொருமை வந்தாலும் பிரவர வொருமைவந்தாலும் மஹாதோஷம் கூறப்பட்டுள்ளன.

கோத்திரப்பிரவரவொருமைக்குற்றம்.

போதாயனர். బౌధాయనః॥ "సగోత్రాంచేదమత్యోప యచ్ఛేన్మాతృవదే నాంబిభృయాత్"=ஒரேகோத்திர முடைய கன்னிகையை அறியாதுமணம்புரிந்தால் அவளைத்தாயைக் காப்பதுபோலும் காக்கக் கடவன். எ.று. காண்க.

சாதாதபர். శాతాతపః॥ "పరిణీయసగోత్రాంతు సమానప్రవరాంతథా। కృత్వాతస్యాస్సముత్సర్గ మతికృచ్ఛ్రంవిశోధనం"=ஒத்தகோத்திர முடையவளையேனும் மணம்புரிந்தால் அவளை விட்டொழித்து, "அதிகிருச்சிரம்" என்னும்பிராயச்சித்தம் செய்துகொண்டால் அப்பாவம் ஒழியும். எ.று. காண்க.

ஆபத்தம்பர். ఆపస్తంబః॥ సమానగోత్రప్రవరాం కన్యామూఢ్వోపగమ్యచ। తస్యాముత్పాద్యసంతానం బ్రాహ్మణ్యాదేవహీయతే"=கோத்திர வொற்றுமை பிரவர வொற்றுமையுடைய கன்னிகையை மணம்புணர்ந்து சேர்ந்துமக்களைப் பெற்றவன் வேதியத்தன்மையினின்றே ஈனனாய்விடுகின்றான். எ.று. காண்க. எனவே, வேதியன் அங்ஙனம் செய்தால்சாதிகெட்டவனாகவே ஆய்விடுகின்றான்என்பதுகருத்து. "ஈன" என்றது அவனுக்குப்பின் பிராயச்சித்தமில்லையென்பதனை யுணர்த்துகின்றது).

கன்னிகையிலக்கண முற்றிற்று.

கன்னியின் குல குற்றங்கள்.

கன்னிகையி னிலக்கணத்தினை யாராய்ந்தாற் போலவே, அக்கன்னிகையின் குலத்தினையும் சோதிக்க வேண்டும். குலம் என்பதுவமிசம். வருமாறு.

மநு. మనుః॥ "మహాంత్యపిసమృద్ధాని గోజావిధనధాన్యతః। స్త్రీసంబంధేద శైతానికులానిపరివర్జయేత్। హీనక్రియంనిష్పురుషం నిశ్ఛందోరోమశార్శసం। క్షయ్యా మయావ్యపస్మా రిశ్విత్రికుష్ఠికులానిచ" = பெரியோர்கள் வமிசத்திற் பிறங்

தவளேயாயினும், பசுக்கள், ஆடு, பொன், நெல்முதலிய இவை களாற்குறைவு அற்றவளேயாயினும், மணத்திற்குப் பெண் கொள்ள வேண்டுவதாயின் பத்துவகை வமிசங்களையும் ஒழித் துக்கொள்க. அவையாவன. சிரௌதஸ்மார்த்த கருமங்களில் லாதகுலம், ஆண்மக்க ளனைவரும் இறந்தொழியப் பெண்பாலார் மாத்திரமேயுள்ள குலம், வேத மோதாதமரபு, கொடியமயிர் நிரம்பியதேகமுடையது, மூலநோயுடையது, கயநோயுடையது, நோய்ச் சுபாவமுடையது, பித்துடையது, சந்திரரோகம் = வெண்குட்ட முடையது, குட்டநோயுடையது, என்ற இப்பத்து வமிசத்திலும் கன்னிகையைக் கொள்ளலாகாது. எறு. காண்க.

இயமன். యమః|| "చతుర్దశకులానీమాన్య వివాహ్యానినిర్దిశేత్ |, ఆనాహ్వైయం బ్రాహ్మణానామృత్విజాంచైవవర్జయేత్ | అత్యుచ్చమతిహ్రస్వంచఅతివర్ణంవివర్జయేత్ | హీనాం గమతిరిక్తాంగ మామయావికులానిచ | శ్విత్రికుష్ఠికులాదీనాం కుర్యాద్విపరివర్జనం | సదా కామికులంవర్జ్యం రోమశానాంచయత్కులం | అపస్మారికులంయచ్చ యచ్చపాండుకులం భవేత్" = இருடிபிரவரம் தெரியாதவள், இருத்துவிக்குத் தொழி லானே சீவிக்குமவர்கள்மாது, மிகவும்உயர்ந்து நீண்டவள், அறக்குட்டை யானவள், அதிகநிறமுடையவள், அங்கப்பழு துள்ளவள், வற்றினஉடம்பினை யுடையவள், நோய் கொண்ட இயற்கை யுடையவள், வெண்குட்ட முடையவள், குட்டரோக முடையவள், எப்பொழுதும் புணர்ச்சிமே லிச்சைவைத்த காமி யானவள், மிகுந்தஉரோமமுடையவள், சுபாவந்தவழிய மயக் கவியாதி யுடையவள், பைத்தியம் பிடித்தமரபில்வந்தவள், பாண் டுநோய் கொண்ட மரபில் வந்தவள் இப்பதினான்கு கன்னிகை களையும் மணம் புரியலாகாது. எறு. காண்க.

இச்சோதனையின்பயன்.

ஹாரீதர், హారీతః|| "కులానురూపాహిప్రజాస్సంభవంతి"=குலத்தோடு சம்பந்தமுடைய உருவமுடைய மக்கள்பிறப்பர். எறு. காண்க.

புராணசாரம். పురాణసారే|| మాతులాన్భజతేపుత్రః| కన్యకాభజతే పితౄన్ | యథాశీలాభవేన్మాతా తథాశీలాభవేత్సుతా" = புதல்வன் அம்மா னைப்போல்வன். பெண்தந்தையை யொக்கும். தாய்எந்தக்குணத் தினையுடையவளோ ? மகள் அந்தக் குணத்தினையுடையாளாம்.

எ-று. காண்க. ("பால்நோக்கிப் பசுக்கொள்க தாய்நோக்கிப்பெண் கொள்க.என்றஉலக வழக்குமது)

மனு. మనుః॥ "పితుర్వాభజతేశీలం మాతుర్వోభయమేవవా। నకథంచన దుర్యోనిః ప్రకృతింస్వాంవిముంచతి" = மக்கள்தந்தையி னியற்கையையேனும் தாயினியிற்கையையேனும் இரண்டையுமேனும் பொருந்தி யிருக்கும். எவ்வாறாயினும், வித்து, நிலம் இவற்றின்கணுள்ள குணவியற்கையை அதன்கணுண்டாம்பயிர் பொருந்தா தொழிவதில்லை. எ-று. காண்க. ஆதலால், தாழ்ந்தகுல மென்பதைச் சோதித்துவிடவேண்டும்.

பெண்கொள்ளத்தக்கமரபு.

யாஞ்ஞவல்கியர். యాజ్ఞవల్క్యః॥ "దశపూరుషవిఖ్యాతా చ్ఛ్రోత్రియాణాంమహాకులాత్" = பத்துத்தலைமுறை வரையிலும் புகழ்பெற்றுடைய பெரியமரபிலிருந்து பெண்கொள்ள வேண்டும். எ-று. எனவேதாய்மரபில் ஐந்துதலைமுறையும் தந்தைமரபில் ஐந்துதலைமுறையுமாகிய பத்துத்தலைமுறைவரையினும் உத்தமர்களென்றுசொல்லப்பட்டிருக்க வேண்டும் என்பது. பெருங்குலமென்பது, சந்ததிவிருத்தி, பசுவிருத்தி, முதலிய செல்வமுடையது.

மனு. మనుః॥ ఉత్తమైరుత్తమైర్నిత్యం సంబంధానాచరేత్సహ। నినీషుఃకులముత్కర్షమధమానధమాంస్త్యజేత్ "=தன்குலத்தைஉயர்ந்த நிலைமைக்குக் கொண்டு வரவேண்டுமென்னும் எண்ணமுடையவன் தன்னைப் பார்க்கினும் சிறந்தவரா யுள்ளவர்களோடு சம்பந்தம் செய்துவரவேண்டும். தாழ்ந்துதாழ்ந்துள்ளவர்களை விட்டொழித்து வரவேண்டும். எ-று. காண்க.

உயர்ந்தோராவார்.

மனு. మనుః॥ "విశుద్ధాదికర్మభిశ్చైవ శ్రుతిస్మృతినిదర్శితైః। అవిప్లుతబ్రహ్మచర్యామహాకులసమన్వితాః। మహాకులైశ్చసంబంధా మహత్వేనవ్యవస్థితాః। సంతుష్టాస్సజ్జనహితాస్సాధవస్సమదర్శినః। లోభరాగద్వేషమత్సర మానమోహాదివర్జితాః। అక్రోధనాస్సుప్రసాదాశ్చ కార్యాస్సంబంధినస్సదా" = சுருதிமிருதிகளிற் கூறப்பட்டுள்ள நற்கருமங்களால் நல்லசுத்தமடைந்துள்ளவர்கள், பிரம

சரியவிரதங்கெடுத்துக் கொள்ளாதவர், பெரியமரபுடையவர்கள், பெருமரபோடு சம்பந்தஞ் செய்தவர்கள், எப்போதும் களிப்புடையவர்கள், நல்லோர்க்கு நன்மை செய்பவர், சாதுவான வியற்கையுடையவர்கள், சமமான நோக்க முடையவர்கள், உலோபம், பேராசை, கெட்டஇச்சை, பொறுமையில்லாமை, தானென்னும் அகங்காரம், அறியாமை முதலியதீக்குண மில்லாதவர்கள், நல்லநகைமுகம்=இன்முகமுடையவர்கள், இப்படிப் பட்டவர்களைத் தனக்குச்சம்பந்தியாகச் செய்துகொள்ளவேண்டும். எறு. காண்க.

தாழ்ந்தோர்.

மநு. మనుః॥ యేస్తేనాగపిశునాగ్లీబాయేవానాస్తికవృత్తయః। వికర్మణాచ జీవంతోపకృతా కృతయస్తథా। ప్రబద్ధవైరాశ్శూరైర్యే రాజకిల్బిషిణస్తథా। బ్రహ్మస్వాదననిత్యాశ్చకదర్యాశ్చవిగర్హితాః। అప్రజాయేషువంశేషు స్త్రీప్రజాప్రసువస్తథా। పతిఘ్న్యశ్చసువాసిన్య స్తాశ్చయత్నేనవర్జయేత్ " = கள்ளர், கோளர், நபுஞ்சகர், நாத்திகபுத்திசெய்கையுடையவர், பழிக்கத்தக்க தொழிலால் சீவிப்பவர்,விகாரமாகிய வடிவமுடையவர்கள், சூரரோடு தீராப்பகையுடையவர்கள், அரசனுக்கு விரோதமான காரியஞ்செய்தவர்கள், வேதியனுடைமையையே தின்பவர், உலோபிகள், பழிப்பட்டவர்கள், மலட்டுச்சுபாவ முடையோர்கள், பெண்களையே பெறுவோர்கள், கணவனிறக்கு மரபு பெண்களேபிறக்கும் மரபு முடையவர்கள், இவைபோல்வன வெல்லாம் அதமகுலம் = தாழ்ந்தகுலமாம். இவற்றை முயற்சியோடும்விட்டொழிய வேண்டும். எறு. காண்க.

மணமகனிலக்கணம்.

கௌதமர். గౌతమః॥ విద్యాచారబంధుశీలలక్షణసంపన్నాయదద్యాత్"= கல்வி, ஒழுக்கம், சுற்றமுடைமைத்தன்மை, நல்லியற்கை, இலக்கணம் இவ்வைந்தினையும் குறைவின்றி நல்லதாக வுடையவனுக்குக் கன்னிகையைத் தரவேண்டும். எறு.

மணமகன்குணசோதனை.

இயமன். యమః॥ "కులంచశీలంచవపుర్యశశ్చవిద్యాంచవిత్తంచ సనాథతాం చ। ఏతాన్గుణాంస్సప్తపరీక్ష్య దేయాకన్యాబుధైశ్శేష మచింతనీయం" = குலமரபு,

நல்லியற்கை, தேகவழகு, புகழ், கல்வி, பொருள், காக்குந் தலைவன், இவ்வேழும் நன்கமைந் திருக்கவேண்டும். அறிந்தோர்கள் இதனுண்மையைச் சோதித்துப்பின் பெண்கொடுக்கவேண்டும். ஏனையவிலக்கணங்களைப்பற்றி ஆராய வேண்டுவதில்லை. எ-று. காண்க.

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యః॥ ఏతైరేవగుణైర్యుక్తః సవర్ణశ్శ్రోత్రియో వరః। యత్నాత్పరీక్షితఃపుంస్త్వే। యువాధీమాన్జనప్రియః ” = பெண்ணுக்குக் கூறிய இலக்கணத்தோடும், இந்தவிலக் கணத்தோடும் கூடியவனும், தன்சாதியானும், வேதமுணர்ந்தவனும் ஆண்டன்மையிலே முயற்சியோடு பரீக்ஷிக்கப் பட்டவனும், இளமைப்பருவமுடையவனும், அறிவுடையோனும், யார்க்கும்விருப்ப மானவனுமாகியமணமகன் சிறந்தோன். எ-று.

ஆண்டன்மைசோதிக்கும்வகை.

நாரதர். నారదః॥ “యస్యాప్సుప్లవతేబీజం హ్లాదిమూత్రంచఫేనిలం। పుమాంస్స్యాల్లక్షణైరేతైః విపరీతస్తుషణ్డకః” = யாருடையவித்து சலத்தில் மிதக்குமோ? கட்டுப்பட்டதாக விருக்குமோ? மூத்திரம்நுரை கட்டுவதாக விருக்குமோ? அவனேயாண்மகனும். இந்தவிலக் கணங்கள் விபரீதமாக விருக்குமாயின் அவன் நபுஞ்சக னென்னப்படுவன். எ-று.

சண்டர்வகை = நபுஞ்சகபேதம்.

நாரதர். నారదః॥ “చతుర్దశవిధశ్శాస్త్రే షణ్ఢోదృష్టోమనీషిభిః। చికిత్స్యశ్చాచికిత్స్యశ్చ తేషాముక్తోవిధిఃక్రమాత్। నిసర్గషణ్ఢోవధ్రశ్చ పక్షషణ్ఢస్తథైవచ। అభిశాపాద్గురోరోగా ద్దేవక్రోధాత్తథైవచ। ఈర్ష్యాషణ్ఢశ్చసేవ్యశ్చ వాతరేతాముఖేభగః। ఆక్షిప్తోమోఘబీజశ్చ శాలీనోన్యాపతిస్తథా ” = பிறப்பிற்றலேயே கோசபீசங்கவில்லாதவன், நிசர்க்கஷண்டன். பீசமுடைந்தவன், வத்திரசண்டன். பதினைந்துநாள் மாதரால் உபசரிக்கப்பட்டு ஒருநாள் புணரவல்லவன், பக்ஷசண்டன். குரவர்கள் சாபத்தால் நபுஞ்சகனானவன், அபிசாபசண்டன். நோயால் நபுஞ்சகனானவன், இருக்கணசண்டன். தேவர்கள் கோவத்தால் நட்டப்பட்டவன், தெய்விகசண்டன். ஈரிஷையான் = பொறாமையால் புருடத்தன்மையையடைபவன், அழுக்காற்றுச்சண்டன். மாதர்களே வலியவந் துப

சரித்தாற் புணர்வோன், சேவியசண்டன். வாயுவினல் சுக்கிலம் வற்றிப்போனவன், வாதரோதசன் என்னும் சண்டன். முகத்திற் புருடசத்தியடைந்து யோனிக்குழியில் இல்லாதவன், முகேபக சண்டன். சுக்கிலத்தை விடாதிருந்ததால் பின்னில்லாமற் கெட்டவன், ஆக்ஷித்தசண்டன். போகசத்தியுண்டாயிருந்தும் கருத்தரிக்கும் பிசமில்லாதவன், மோகபீசசண்டன். பருவமில்லாமையாலாயினும் விசேடப் புணர்ச்சியாலாயினும் ஆண்டன்மை யற்றவன், சாலினசண்டன். தன்மனைவியிடத்தொழிய ஏனையமாதரிடத்து ஆண்டன்மையுண்டானவன், அந்நியாபதி சண்டன். எனச் சண்டர் பதினன்குவகையர். இவர்களைச் சோதித்துக்கொள்ளவேண்டும். எறு. காண்க.

கன்னியாதானத்திற்குரியவன்.

நாரதர். నారదః॥ "అపత్యార్థం స్త్రియస్సృష్టాః స్త్రీక్షేత్రంబీజినోనరాః। క్షేత్రంబీజవతేదేయం నాబీజీక్షేత్రమర్హతి" = மக்களைப் பெறும்பொருட்டே மாதரைப் படைக்கப்பட்டது. ஆதலால், பெண்கள்க்ஷேத்திரம் = நிலம் என்னப்படுவர். ஆடவர் = புருடர். வித்தினையுடையவர் எனப்படுவர். நிலத்தை வித்துடையவனுக்கேகொடுக்கவேண்டும். வித்தில்லாதவன் நிலத்தைப் பெறத்தக்கவனல்லன். எறு.

நபுஞ்சகனை ஒழித்ததுபோலவே மற்றும் விடத்தக்க மணமகனைக் காத்தியாயனர் வகுத்தனர். కాత్యాయనః॥ "దూరస్థానామవిద్యానాం మోక్షధర్మానువర్తినాం। శూరాణాంనిర్ధనానాంచనదేయాకన్యకాబుధైః" = தூரதேயத்திருப் பவனுக்கும், கல்வி யில்லாதவனுக்கும், முத்தித்தருமம் = வைராக்கியவிரதத்தை அனுட்டிப்பவ னுக்கும், சூரனுக்கும், பொருளில்லாதவனுக்கும் அறிந்தவன் கன்னிகையைக்கொடுக்க லாகாது. எறு. காண்க.

கன்னியாதானத்திற்குத்தக்கவர்கள்.

மனு. మనుః। "ఉత్కృష్టాయాభిరూపాయ వరాయసదృశాయచ। అప్రాప్తామపితాంతస్మైకన్యాందద్యాద్విచక్షణః" = உத்தமன் = நன்னிலையி லுள்ளவன், அல்லது, உயர்குலமுடையவன், அழகுடையவன், நல்ல குண முடையவன், தக்கவன், இப்படிப்பட்ட மணமகனுக்கு மணம்புணரத்தக்க கன்னிகையை அறிவுடையோன் கொடுத்தல் வேண்டும். எறு. காண்க.

போதாயனர். బౌధాయనః॥ "దద్యాద్గుణవతే కన్యాం నగ్నికాం బ్రహ్మచారిణే। అపి వా గుణహీనాయ నోపరుంధ్యాద్రజస్వలాం" = தருதியையுடைய பிரமசாரிகிடைத்தால் ஆடைகட்டாது உலாவும் சிறுகன்னியேயாயினும் கொடுக்கவேண்டும். அவள் பூப்படையும் பருவமடைகிற பக்ஷத்தில் நகாதவனுக்காயினும் கொடுத்துவிடவேண்டுவது அல்லாமல் மணம்புரியாது மனையில்வைத் திருக்கலாகாது. எ-று.

ஆனல், போதாயன வுரைக்குமாறாக மனுவுரை கூறுகின்றது. మనుః॥ "కామమామరణాత్తిష్ఠే ద్గృహే కన్యర్తుమత్యపి। నచైవైనాం ప్రయచ్ఛేత్తు గుణహీనాయ కర్హిచిత్" = கன்னிகை பூத்தாளேயாயினும் சாமளவும் இச்சையின்படிமனையிலிருக்கலாமேயன்றி அக்கன்னிகையை எவ்வாறாயினும் குணமில்லாதவனுக்குக் கொடுக்க லாகாது. எ-று. இந்தவுரைக்குக் கருத்தென்னெனில் குணமுடையோன் கிடைக்கும்பக்ஷத்தில் குணமில்லாதவனுக்குக் கொடுக்கலாகாது. என்பது.

அஃதென்னை ? குணமில்லாதவனுக்குக் கொடுக்கவே லாகாது என்றேகூறுநும், இல்லையேல் "నోపరుంధ్యాద్రజస్వలాం என்ற போதாயனவுரையின் அநுகற்பத்திற்கு விடயமில்லையாய் முடியும். ஆனல், குணமுடையவன் கிடையாவழி பூத்தகன்னிகை மனைக்கண்ணே யிருக்கலாம். என்றமனுவுரைக்குத் தன்னுரைக் கூற்றளவிற் கருத்தல்ல. ஆனல், பூத்தவளை மனைக்கண் வைத்த லாகாதென்ற போதாயன வுரைக்குமாறு கோடலில்லையாம்.

பூத்தற்குமுன்னமேமாதர்க்குமணம்.

அதனுனே வசிட்டரும் கூறினர். వసిష్ఠః॥ "ప్రయచ్ఛేన్నగ్నికాం కన్యా మృతుకాలభయాత్పితా। ఋతుమత్యాం హి తిష్ఠంత్యాం దోషః పితర మృచ్ఛతి" = பூக்கும்பருவம் வருமே என்னும் அச்சத்தோடு நாணம் பிறப்பதற்கு முன்பாகவே தந்தை தன்கன்னியை ஓர் மணமகனுக்குக் கொடுத்தல்வேண்டும். மகள்மணமின்றிப் பூத்திருந்தால் அந்தக் குற்றம் தந்தையை யடைகின்றது. எ-று.

மாதர்க்குக்கணவர்நால்வர்.

சம்வர்த்தர். సంవర్తః॥ "కామకాలే తు సంప్రాప్తే సోమో భుంక్తే తు కన్యకాం। రజఃకాలే తు గంధర్వో వహ్నిస్తు కుచదర్శనే। తస్మాదుద్వాహయేత్కన్యాం యావన్నర్తుమ

ద్భవేత్ " = மாதர்க்கு மனத்தில் காமம்பிறக்கும் வயதுவந்தால் அவர்களைச்சோமன் என்னுந்தேவதை அனுபவிக்கின்றான். இருதுகாலம்வந்தால் கந்தருவன் அனுபவிக்கின்றான். முலைதோன்றிலால் அக்கினி அனுபவிக்கின்றான். ஆதலின் பூப்பதற்குமுன் கன்னிகைக்கு மணம்புரிவித்தல் வேண்டும். என்று. காண்க.

இங்ஙனம் சுருதிமந்திர பிரசினத்துள்ளும் கூறிற்று. வருமாறு. "సోమః ప్రథమో వివిదే గంధర్వో వివిద ఉత్తరః। తృతీయో௨గ్నిష్టే పతిస్తురీయస్తే మనుష్యజాః। సోమో దదద్గంధర్వాయగంధర్వో దదదగ్నయే। రయించపుత్రాంశ్చాదాదగ్నిర్మహ్యమథో ఇమాం" = இது மணமகன் கன்னிகையைப்பற்றிக் கூறு மந்திரமாம். மனத்திற்கும் பெண்டன்மைக்குஞ் சந்திரன் தலைவன். அவன் முதலில் உன்னைத் தான்பெறலாமென்று எண்ணியிருந்தான். பின்பு பூத்தற்குத் தலைவனாகிய கந்தருவன் தனக்குக் கிடைக்குமென்று எண்ணினான். அதன்பின் யௌவனத்திற்குத் தலைவனாகிய அக்கினி தனக்குக் கிடைக்குமென்று எண்ணினான். மனத்தில் காமம்பிறப்பதற்கு முன்னமே நான் மணம் செய்கின்றேனாதலின் சந்திரன் தன்எண்ணத்தைக் கந்தருவனுக்குக் கொடுத்துவிட்டான். அவன் அக்கினிக்குக் கொடுத்தான். அந்த அக்கினி எனக்குக்கொடுத்தான் மாதுக்கு முதற்கணவன் சந்திரன். இரண்டாங்கணவன் கந்தருவன். மூன்றாங்கணவன் அக்கினி. நாலாங்கணவன் மனிதன். (எனவே ஐந்தாவானில்லை என்பதுகருத்து). சந்திரன் ஒருமாதின் புத்தியாலுண்டாகத்தக்க "రయి" = இல்லறவொழுக்கத்தின் கருவியாகிய பொருண் முதலியவற்றையும், இராஜசுவுக்குப் பயனாகத் தக்க பிள்ளைகளைப் பெறும் அதிகாரத்தையும் கந்தருவனுமாக அக்கினிக்குக் கொடுத்தார்கள். பின்பு அக்கினி அவற்றோடு இங்குன்னை எனக்குக் கொடுத்துவிட்டான். (எனவே சந்திரகந்தருவ அக்கினிசம்மதியாக உன்னை மணம் புணர்கின்றேன். ஆதலின், இனி அத்தேவரும் கணவராகார்கள். நான் ஒருவனே கணவனென்று நீ நிச்சயித்து அந்த நம்பிக்கையின் பொருட்டுப் பிரமாணவிலக்கணமாக என்கையி லுன்கையையிட்டுப் பாணிக்கிரகணம்செய்துகொள் என்ற கருத்தினைமேல் மந்திரத்திற்கு இருக்குவேத "கிலபரிசிஷ்டம்" என்னும் பாஷியத்தில் எழுதி யிருக்கின்றனர்.அதன்மேல் வருவதே பாணிக்கிரகண மந்திரமாம்.

கன்னிகையிலக்கணம்.

"కన్యా" = கன்னிஎன்பதற்கு நாணமுதலிய குறிகளில்லாத வயதினையுடைய மாது என்பதுபொருள். என்னை? புராணசாரம். పురాణసారే॥ "యావన్నలజ్జితాంగాని కన్యాపురుషసన్నిధౌ। యోన్యాదీనివగూహేత తావద్భవతికన్యకా" = எதுகாறும் நாணத்தோடு புருடன் சமீபித்த

காலத்தில் தன்னுடைய அற்றங்களை மறைப்பதில்லையோ? அது காறும் கன்னிகை என்னப்படுவள். எனவே, காம முள்ளத்துத் தோன்றும்வரையும் கன்னிகை. எறு. அற்றம் = மறைக்கத்தக்க விடம்.

சங்கிரககாரர். సంగ్రహకారః॥ "యావచ్చేలం న గృహ్ణాతి యావత్క్రీడతి పాంసుభిః। యావద్దోషం న జానాతి తావద్భవతి కన్యకా" = எதுவரையும் ஆடையை விரும்பாளோ? எதுவரையும் மண்தூசில் விளையாடுவளோ? எதுவரையில் குற்றமறியாளோ? அதுவரையும் கன்னிகையாகவிருக்கின்றாள். எறு.

அந்தத்தானப்பயன்.

பருவவிசேடத்தால் கன்னிகாதானஞ் செய்தவனுக்குள்ள பயன் விசேடத்தினை மரிசி கூறினர். మరీచిః॥ "గౌరీం దదన్నాకపృష్ఠం వైకుంఠం రోహిణీం దదత్। కన్యాం దదద్బ్రహ్మలోకం రౌరవం తు రజస్వలాం" = கௌரியாயிருப்பாளைக் கொடுத்தவன் "నాకపృష్ఠం" சிறந்தசுவர்க்கப் பேற்றையடைவன். உரோகிணியா யிருப்பவளைக் கொடுத்தவன் வைகுந்தத்தினைப் பெறுவன். கந்நியிலக்கண முடையவளைக் கொடுத்தவன் பிரமலோகத்தை யடைவன். பூத்தவளைக்கொடுத்தவன் இரௌரவம் என்னும் நரகத்தை யடைகின்றான். எறு. காண்க.

கௌரிமுதலியோரிலக்கணம்.

கௌரிமுதலிய மொழிப்பொருள் இயமனால் கூறப்பட்டது. యమః॥ "అష్టవర్షా భవేద్గౌరీ నవవర్షా తు రోహిణీ। దశవర్షా భవేత్కన్యా అత ఊర్ధ్వం రజస్వలా" = எட்டுவயதுடையவள் கௌரிஎன்னப்படுவள். ஒன்பதுவயதுடையவள் உரோஹிணி என்னப்படுவள். பத்துவயதுடையவள் கந்நிஎன்னப்படுவள். அதன்மேல் பூத்தவள் என்னப்படுவள். எறு.

சம்வர்த்தர். సంవర్తః॥ "అష్టమే తు భవేద్గౌరీ నవమే నగ్నికా భవేత్। దశమే కన్యకా ప్రోక్తా ద్వాదశే వృషలీ స్మృతా" = எட்டாம்வயதிற் கௌரியாவள். ஒன்பதாம்வயதில் நக்கினிகை எனப்படுவள். பத்தாம்வயதிற் கன்னிகையாம். பன்னிரண்டாம்வயதில் விருஷலி எனநினைக்கப்படுவள். எறு. காண்க.

கன்னியாதானஞ்செய்யத்தக்கவன்.

முக்கியகற்பம் அநுகற்பம் என்னும் வேறுபாட்டால் கொடுப்போருள்ளே யுள்ள விசேடத்தினை நாரதர் கூறினர். నారదః॥ "పితాదద్యాత్స్వయంకన్యాం భ్రాతావానుమతేపితుః। మాతామహోమాతులశ్చ సకుల్యోబాంధవస్తథా। మాతాత్వభావేసర్వేషాం ప్రకృతౌయదివర్తతే। తస్యామప్రకృతిస్థాయాం కన్యాందద్యుస్స్వజాతయః। యదాతునైవకశ్చిత్స్యాత్ కన్యారాజానమావ్రజేత్" தந்தையானவன் தன்மகளைத்தானே தானஞ்செய்ய வேண்டும். இதுவே முக்கியகற்பமாம். தந்தைகட்டளை யானல் தமையனுவதுசெய்யலாம். தாயைப்பெற்ற பாட்டனுயினும், அம்மானுயினும், தன்மர புடையவன் = ஞாதியாயினும், சுற்றத்தினராயினும் கந்நியாதானஞ் செய்யவேண்டும். அவர்களு ளொருவருமில்லாவழித் தாய் அப்போதிருந்தால், (எனவே, மனைக்குத்தலைவியாகவிருந்தால் என்பது. அல்லது, அறிவுடையவளா யிருந்தால் என்பதுமாம்) அந்தத்தாய் கந்நியாதானம் செய்யவேண்டும். அந்தத்தாய் அப்போதில்லாவிட்டால், தன்வருணத்தாரேனும் கந்நியாதானஞ் செய்யவேண்டும். எப்போது ஒருவராயினும் கன்னியாதானஞ் செய்தற்கில்லாமற் போவரோ? அப்போது, அக்கன்னிகை தன்னைத்தக்க மணமகனுக்குக் கொடுப்பிக்கும்படி அரசனிடத்திற்குப் போகவேண்டும். ஏறு, அரசன் காவலனுதலால் தந்தைபோல்வன் என்பது கருத்து.

கன்னியாதானஞ் செய்யாதவன்குற்றம்.

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యః॥ "పితాపితామహోభ్రాతా సకుల్యో జననీతథా। కన్యాప్రదఃపూర్వనాశే ప్రకృతిస్థఃపరఃపరః। అప్రయచ్ఛన్ సమాప్నోతి భ్రూణహత్యామృతావృతౌ। గమ్యంత్వభావేదాతౄణాం కన్యాకుర్యాత్స్వయంవరం" = தந்தை, பாட்டன், அண்ணன், ஞாதி, தாய், என்னு மிவருள் முதலுரைத்தவனில்லாவழி, "ప్రకృతిస్థః" = சுபாவத்துள்ளவன் (எனவே நல்லறிவோடிருப்பவன்) மற்றையன் கந்நியாதானஞ் செய்யவேண்டும். அவ்வாறே ஏனையர் விடயத்தும் இவ்வாறு கன்னியாதானஞ் செய்யத்தக்க அதிகாரமுடையவன் தானஞ்செய்யாவிட்டால் அக்கன்னிஆகும் ஒவ்வொரு மாதவிடாயினும் கருவழித்தகுற்றத்தை யடைவன். கொடுப்பா ரொருவரு மில்லாவழி,

கன்னிகைதான் மணம்புரியத்தக்க மணமகனைத்தானே தேடிக் கொள்ளலாம். எ-று. (புணரத்தக்கவன். எ-து. தன்குலம் முதலிய குணமுடையவன்.)

சுவயம்வரணம்.

நாரதர். నారదః॥ "సవర్ణమనురూపంచ కులశీలబలశ్రుతైః। సహధర్మంచరే త్తేన పుత్రాంశ్చోత్పాదయేత్తతః" = தன்வருணத்தனும், மரபு, இயற்கை, ஆற்றல், தகுதிஅல்லது கல்விஇவைகளால் தனக்குஒத்துள்ளவனுமாகிய மணமகனைச்சேர்ந்து, அவனோடுதருமத்தை அனுட்டிக்க வேண்டும். அவனால் மக்களையும் பெறவேண்டும். எ-று. காண்க.

சுவயம் வரணகாலம்.

பூப்பு உண்டாகாவிட்டால் மேற்கூறியபடி நடத்தல்வேண்டும். மணமின்றிப் பூத்தால் தந்தைமுதலிய தலைவர்களிருப்பினும் சிலகாலம்வரையினும் தந்தை கட்டளையை எதிர்நோக்கி யிருந்தும், தந்தை வெறுத்தவழி அக்கன்னிதானே கணவனைத் தேடிக் கொள்ளலாம். அங்ஙனம் போதாயனர் கூறினர். బోధాయనః॥ త్రీణి వర్షాణ్యృతుమతీ కాంక్షేత పితృశాసనం। తతశ్చతుర్థే వర్షేతు విందేత సదృశం పతిం। అవిద్యమానే సదృశే గుణహీనమపి శ్రయేత్" = பூப்படைந்த கன்னிதந்தையின் கட்டளையை மூன்றுவருடம் வரையில் எதிர்பார்க்க வேண்டுவது. பின்புநாலாம் யாண்டில் தனக்குச்சரியான கணவனையடையலாம். சரியான மணமகன் கிடையாவழி குணமில்லாதவனையேனும் அடையவேண்டுவது. எ-று.

மனு. మనుః॥ "త్రీణి వర్షాణ్యుదీక్షేత కుమార్యృతుమతీ సతీ। ఊర్ధ్వంతు కాలాదేతస్మా ద్విందేత సదృశం పతిం" = கன்னி பூப்படைந்தால் மூன்றுவருடம் வரையில் எதிர்பார்த்திருக்க வேண்டும். அதற்குப்பின் தனக்குச் சரியானகணவனை யடையலாம். எ-று. காண்க.

சுவயம்வரத்திறம்.

மனு. మనుః॥ "అదీయమానా భర్తార మధిగచ్ఛేద్యది స్వయం। నైనః కించిదవాప్నోతి నచయం సాధిగచ్ఛతి" = மேற்கூறிய காலம்வரையில் ஒருமணமகனுக்குக் கொடுக்கப் படாமலிருக்கும் கன்னிகைதானே சுதந்

தாமாகக்கணவனை யடைந்தால் அக்கன்னி சிறிதேனும்பாவத்தையடையாள். பயத்தினையு மடையாள்- எ-று. காண்க. இதனால் குறிப்பினால் அக்கன்னி எந்தக்கணவனை யடைவளோ? அவனும்பாவத்தை யடைவதில்லை என்பதுகருத்து.

மேற்கூறிய மனுவுரைக்குச் சிறிதுமுரணாக விஷ்ணுகூறினர். శ్లో॥ "ఋతుత్రయముపాస్యైవ కన్యాకుర్యాత్స్వయంవరం" = மூன்று இருதுவை விட்டுக் கன்னிகை சுவயம்வரம் = தானே கணவனைத் தேடிக்கொள்க. எ-று. இது குணமுடையவனான மணமகன் கிடைக்கும்பக்ஷத்தில் மூன்றுதிங்களை எதிர்பார்த்தலே போதுமென்பது கருத்து.

கன்னிஎன்பதன் விசாரம்.

வினா. ஆனால், மூத்தமகளிடத்துக் கந்நியென்னும் மொழியெவ்வாறு வழங்கப்பட்டது. "దశవర్షాభవేత్కన్యా" = பத்துவருடமுடையவளே கந்நிகை என்று இயமன் கூறியுள்ளனர் அன்றோ? பத்தாவதியாண்டில் பூப்பு உண்டாவதில்லை யாமாதலின், இருதுவடைந்தமாதுக்குக் கந்நியென்னும் பெயருண்டாக மாட்டாது. எனில்.

விடை. இதுகுற்றமன்று, கௌரி, உரோகிணி, என்ற மொழிகளைப்போலவே கந்நியென்ற மொழியும் இயமன்பரிபாஷையாகக் கூறியதன்றிப் பொருளுண்மைக் கருத்தினைப் பற்றிக் கூறியவாறன்று. ஆதலால், கந்நிஎன்ற மொழிக்குப் பத்துவயதுடையவள் என்பதல்ல கருத்து. அந்தப்பரிபாஷை பயன்கூறுவதுமுதலியவற்று ளுபயோகப் படுகின்றது ஆகலின் வழங்குதல் செய்யத்தக்கது. அப்பயனை "కన్యాందద్బ్రహ్మలోకం"=கந்நியாதானஞ் செய்தவன்பிரம லோகத்தினையடைவன். என்றுமேலேதானேகூறப்பட்டது. உலகவழக்கின் கணுள்ள கந்நியென்னுமொழி மணம் புணராத பெண்மக்களுக்கு வழங்குகின்றதென்பது. இங்ஙனம் உடன்பட்டவிடத்து நூல்களிற்பலவிடங்களிலும் கூறப்பட்டுள்ள கந்நியென்னு மொழியெல்லாம் போற்றப் படுகின்றது. போற்றல்= காத்தல்.

என்னை? ஆநுசாசநீக பருவத்தில், அஷ்டவக்கிரோ பாக்கியானத்தில் முதிர்ந்தவயதுடைய மாதுஒருத்தியைக் கந்நிஎன்ற

மொழியால் உபசரித்துக் கூறப்பட்டது. భారతే॥ "కౌమారం బ్రహ్మచర్యం వా కన్యైవాస్మిన్న సంశయః" = கௌமார வயதினை யுடையவளே யாயினும் பிரமசரியம். (எனவே) மணமில்லாவழிமாது கன்னியாகவே யிருக்கின்றாள். ஐயமில்லை. எ-று. காண்க.

இனிச் சல்லிய பருவத்துள்ளும் முதுமகளைக் கன்னியெனநாரதர் கூறினர். భారతే నారదః॥ "అసంస్కృతాయాః కన్యాయాః కుతో లోకాస్తవానఘ" = பாவமற்றவனே! உன்கன்னி மணமேயில்லாமலிருக்கப் புண்ணியஉலோக மெங்குள்ளது. எ-று. காண்க.

உமாமகேச்சுர சம்வாதத்துள்ளும் கூறப்பட்டது. ఉమామహేశ్వరసంవాదే॥ "ఋతుస్నాతాపియా కన్యా సా కన్యేత్యభిధీయతే" = இருதுஸ்நாநஞ்செய்தவளானாலும் அவள்சுத்தமுடையவளானால் (விவாகமில்லாதவள்) கன்னியென்று கூறப்படுகின்றாள். எ-று. காண்க.

"అసంస్కృతాయాః" என்றமொழி விவாகமில்லாதவளுக்குப் புண்ணியவுலக மில்லையென்று கூறப்பட்டுள்ளது. அதுமுறையல்ல. எனெனில்? மணமில்லாவிடினும் பிரமவாதினியாயுள்ள மாதர்க்குஉபநயநம் அத்தியயன முதலியவற்றால் புண்ணியவுலகம்உண்டாம்.

அதனைஹாரிதர் கூறினர். హారీతః॥ "ద్వివిధాః స్త్రియో బ్రహ్మవాదిన్యస్సద్యోవధ్వశ్చ తత్ర బ్రహ్మవాదినీనాముపనయనమగ్నీన్ధనం స్వగృహే భిక్షాచర్యేతి। సద్యోవధూనాముపస్థితే వివాహే కథంచిదుపనయనమాత్రం కృత్వా వివాహః కార్య ఇతి" = பிரமவாதினி, சத்தியவது, என்றுமாதர் இருவகைப்படுவர். அவருள், பிரமவாதினியர்க்கு உபயநயநகருமமும், அக்கினிகாரியமும், தன்மனையில் பிச்சைசெய்வதும் தக்கது. சத்தியவதுக்களுக்கு மணம் அடுத்தபோது எவ்வாறாயினும் உபநயநமாத்திரம்செய்து பின்மணஞ்செய்க. எ-று. காண்க.

அங்ஙன மன்று, அந்தவிதி கற்பவேறுபாடுபற்றிக் கூறப்பட்டது அன்றி இக்காலத்திற்கு ஒத்ததன்று. என்னை? அக்கால பேதத்தினை இயமன் கூறினர். యమః॥ "పురాకల్పే కుమారీణాం మౌంజీబంధనమిష్యతే। అధ్యాపనం చ వేదానాం సావిత్రీవచనం తథా। పితా పితృవ్యో భ్రాతా వా నైనామధ్యాపయేత్పరః। స్వగృహే చైవ కన్యాయా భైక్షచర్యా విధీయతే।

వర్జ్జ మజినంచీరం జటాధారణమేవచ "=முன்கற்பத்தில் கன்னிகைகட்கு, முஞ்சிஅரைஞாண் தரித்தல் (உபநயநவிரதக் குறியாகமுஞ்சிப் புல்லால்செய்த அரைஞாண்தரித்தல்) உடன்படப்பட்டது. அவ்வாறே தந்தையாயினும், அவனோடு பிறந்தவர்களாயினும், தன் தமையனாயினும் வேத மோதுவித்தல், சாவித்திரி மந்திரத்தைச் செபிக்கச்செய்தல் உடன்பாடாம். இந்தக்கந்நிகையை அந்நியர் ஓதுவித்தலாகாது. அக்கன்னிகைக்குத் தன்மனைக்காட்டானே பிச்சைகொண்டு புசித்தலும் விதிக்கப்படுகின்றது. மான்றோலும், நார்மடியும், சடைதரிப்பதும், ஒழிக்கவேண்டும். எறு. காண்க.

అష్టవర్షాభవేద్గౌరీ " என்றது முதலிய, நூல்களால் மாதர்க்கு மணம் புணருங்காலங் கூறப்பட்டதாயிற்று.

மணவகைகள்.

இனிமணத்தின் வேறுபாடு கூறப்படுகின்றன. அவற்றினை மனுகூறினர். మనుః॥ "చతుర్ణామపివర్ణానాం ప్రేత్యచేహహితాహితాన్। అష్టావిమాన్సమాసేన స్త్రీవివాహాన్నిబోధత। బ్రాహ్మోదైవస్తథైవార్షః ప్రాజాపత్యస్తథాసురః। గాంధర్వోరాక్షసశ్చైవ పైశాచశ్చాష్టమోమతః "= நான்குவருணத் தார்க்கும் இறந்தபின்னும், இம்மையினும் இன்பமாயும் துன்பமாயுமுள்ள பொதுவகையான மாதர்மணவினையை புணரின்,பிரமம்.௧, தெய்வம். ௨, ஆரிடம். ௩, பிராஜாபத்தியம். ௪, ஆசுரம். ௫, காந்தருவம்.௬, இராக்ஷசம். ௭, பைசாசம். ௮, எனவறிக.எறு.காண்க.

மணவினையிலக்கணம்.

இவற்றிற்கு முறையே யிலக்கணங்களை மனுவே கூறினர். మనుః॥ "ఆచ్ఛాద్యచార్చయిత్వాచ శ్రుతశీలవతేస్వయం। ఆహూయదానం కన్యాయా బ్రాహ్మోధర్మఃప్రకీర్తితః"=ஆடையால் அணிசெய்து பூசைசெய்து, வேதமுதலிய கலைகளையோதி யிருத்தலும், நல்லொழுக்கமும் உள்ளமணமகனைத் தான்வலிதில்அழைத்துவந்து கன்னிகையைத் தானஞ்செய்தல் பிரமமணமென்று பெரியரால்சொல்லப் பட்டது. எறு.

தெய்வமணம்.

இதுவுமது. "యజ్ఞేతువితతేసమ్యగృత్విజేకర్మకుర్వతే। అలంకృత్యసుతాదానం దైవంధర్మంప్రచక్షతే "= பெரியவேள்வியினிடத்து, நன்முகவினை

முடித்த இருத்துவிக்குக்கு அணிசெய்து மகளைக் கொடுப்பது தெய்வமணத்தின் தருமமென்று பெரியர் கூறுகின்றனர். எ-று.

ஆரிடமணம்.

இதுவுமது. "ఏకంగోమిథునంద్వేవా వరాదాదాయధర్మతః। కన్యాప్రదానంవిధివ దార్షోధర్మస్సఉచ్యతే" = ஒருபசுவும், ஒருஎருதும், அல்லது, இரண்டுபசுவும், இரண்டெருதும், அப்போதைக்குத்தான்செய்யும் வேள்விமுதலிய தருமவிருத்தியின் பொருட்டு, மணமகனிடத்திற்பெற்றுக் கொண்டு, பின்பு, அதனை அக்கன்னிகைக்கே கொடுத்துவிட வேண்டுமென்னும் எண்ணத்தோடுவிதிப்படி கந்நியாதானஞ் செய்வதே ஆரிடமணத்தின் தருமமென்று கூறுவர். எ-று.

பிராஜாபத்தியமணம்.

இதுவுமது. "సహోభౌచరతాంధర్మ మితివాచానుభాష్యచ। కన్యాప్రదానమభ్యర్చ్య ప్రాజాపత్యోవిధిస్స్మృతః" = நீவிரிருவரும் தருமத்தினையனுட்டிக்கவென்று, கந்நியாதானஞ் செய்யுங்காலத்தில் சொன்மாத்திரையினுடன் பாடுசெய்து பின்பூசித்து மணமகனுக்குக் கந்நியாதானஞ்செய்வது பிராஜாபத்தியவிவாஹ விதியென்று மிருதிகளாற் கூறப்பட்டது. எ-று.

ஆசுரமணம்.

இதுவுமது. "జ్ఞాతిభ్యోద్రవిణందత్వా కన్యాయైచైవశక్తితః। కన్యాప్రదానంస్వాచ్ఛంద్యా దాసురోధర్మఉచ్యతే" = கந்நிகையினுடைய தந்தை முதலிய ஞாதியர்க்கும், கந்நிகைக்கும் தன்சத்தியுள்ள மட்டில் பொருளைக் கொடுத்துத் தன்மனம் போனவழியே விதிநியமம் இல்லாமல் கந்நிகையைக் கொண்டுபோவது ஆசுரமணத்தின் மரபென்று கூறப்படுகின்றது. எ-று.

காந்தருவமணம்.

இதுவுமது. ఇచ్ఛయాన్యోన్యసంయోగః కన్యాయాశ్చవరస్యచ। గాంధర్వస్సతువిజ్ఞేయో మైథున్యఃకామసంభవః" = கந்நிகையும், மணமகனும் ஒருவர்க்கொருவர் மனமொத்து இச்சையால், ஆலிங்கன முதலிய புணர்ச்சி யுண்டானால் அது காந்தருவமணமாம். அந்தமணம்

இருவர்காமத்தால் உண்டாதலின் இணைவிழைச்சினுக் கிதவானது. எ-று. என்றதனால் அவர்களுக்கு மணவினைக்கு முன்னமே மெய்யுறுபுணர்ச்சி நிகழ்ந்திருக்கினும் குற்றமில்லை யென்பது கருத்து.

அரக்கமணம்.

இதுவுமது. "హత్వాఛిత్వాచభిత్వాచ క్రోశంతీంరుదతీంగృహాత్। ప్రసహ్యకన్యాహరణం రాక్షసోవిధిరుచ్యతే" = அடித்தும், வெட்டியுங், வேறு செய்தும், இரைச்சலிட்டும் அழுதுகொண்டு மிருக்குங் கந்நிகையை மனையிலிருந்து வலிமைசெய்து கொண்டுபோவது இராக்கதமணத்தின் விதியென்று கூறப்படுகின்றது. எ-று. (இங்கு அடித்தல் வெட்டுதல் முதலியன இராக்கதமணத்தி லுண்டாயிருத்தல் வேண்டுமென்பது கருத்தல்ல. வலிமையால் பிறரை மதியாது ஒழித்துக் கந்நிகையைக் கொண்டுபோதல் என்பது கருத்து. ஆனால், எப்போதும் கொள்ளைகொண்டுபோவோ னுடைய வல்லமை அதிகமாக விருக்கின்றதென்பது அறிந்து, அக்கன்னிகையின் தந்தை முதலியோர் சும்மாது பார்த்துக்கொண்டு இருப்பார்களாயின் அடித்தன்முதலியன அவசியமல்ல. ஒருவேளை, கந்நிகையின் சார்பானவர்கள் பகைமைகொண்ட தடைநேர்ந்தவழி அடித்தன் முதலிய வலிமை செய்யவேண்டுவது என்று குறிப்பால் வெளிப்பட்ட விடயத்தினை மநு அநுவதித்தாரல்லது. கந்நிகையின் சார்பினரை அடித்தவர்களை நாசஞ்செய்து அந்தோ! ஐயா! அந்தோ! அத்தாவென்று கூச்சலிட்டுக்கொண்டு, அழுது கொண்டிருக்கப்பட்ட கந்நிகையையே கொண்டுபோக வேண்டுமென்பது கருத்தல்ல. வேண்டுமானால், அவ்வாறுயினும் செய்து கொண்டுபோகலாம் என்பது கருத்து. இதனால் கந்நிகைக்கு இச்சைக் கருத்திருக்கலாகா தென்றவாறுயிற்று. அதனாலன்றே? இராக்கதமணம் காந்தருவமணத்தினும் வேறுயது).

பைசாசமணம்.

இதுவுமது. "సుప్తాంమత్తాంప్రమత్తాంవా రహోయత్రోపగచ్ఛతి। సపాపిష్ఠోవివాహానాం పైశాచశ్చాష్టమోధమః" = உறக்கத்தால் மெய்மறந்தவளையாயினும், குடிவெறியால் அறிவு மயங்கினவளை யாயினும், ஒழுக்கத்தைக் காத்துக்கொள்ள மாட்டாத பித்துடையவளை

யாயினும், இரகசியதானத்தில் இணைவிழைச்சிற்பொருந்துவது, பாவத்திற்குக் காரணமாயும் மணங்களுள்மிக விழிந்ததாயுமுள்ளபைசாச விதியானது எட்டாவதாம். எ-று. காண்க.

நாரதர். నారదః॥ "బ్రాహ్మస్తుప్రథమస్తేషాం ప్రాజాపత్యస్తథాపరః। ఆర్ష స్త్వాథదైవశ్చగాంధర్వశ్చాసురస్తథా। రాక్షసోనంతరస్తస్మాత్పైశాచశ్చాష్టమోమతః" முதலாவது பிரமமணம், பின்பிராஜா பத்தியமணம், அதன்பின் ஆரிடமணம், அப்பால் தெய்வமணம், மேல்காந்தருவ மணம், அப்புறம் ஆசுரமணம், அடுத்தது அரக்கமணம், எட்டாவது பைசாசமணமாம். எ-று. இங்ஙனம் முறைசெய்து கூறினர்.

வருணங்களுக்குரியமணம்.

வருணமுறைமையால் மணத்தின் நியமங்களை மனுகூறினர். మనుః॥ "షడానుపూర్వ్యావిప్రస్య క్షత్రస్యచతురోవరాన్। విట్ఛూద్రయోస్తుతానేవ విద్యాద్ధర్మ్యానరాక్షసాన్"—வேதியனுக்கு முறையே முதற்கணிருந்து அறுவகைமணமும் தருமமாகவே யிருக்கின்றன. ஆசுரம்முதல் பைசாசம்வரையில் நான்குமணமும் க்ஷத்திரியனுக்கு உரியதாகின்றது. இராக்கதமொழிந்த மற்றையன வைசியனுக்கும் சூத்திரனுக்கும் தக்கவாகின்றது. எ-று.

ஸ்மிருதிசங்கிரகம். స్మృతిసంగ్రహే॥ "చత్వారోబ్రాహ్మణస్యాద్యాశ్శస్తాగాంధర్వరాక్షసౌ। రాజ్ఞస్తథాసురోవైశ్యే శూద్రేచాంత్యస్తుగర్హితః" = வேதியனுக்கு முதற்கூறிய நான்குமணங்களும் தகுதியானது. அரசனுக்குக்காந்தருவமும் இராக்கதமும்தக்கன. ஆசுரம் வைசியனுக்கும் சூத்திரனுக்கும் தக்கது. பைசாசம்யார்க்குந் தக்கதல்ல. எ-று. காண்க.

வேறுமணங்கூடாத விடத்துவேதியனொழிய ஏனையமூவர்க்கும் பைசாசமணமுமாம் என்று சம்வர்த்தர் உடன்படுகின்றனர். సంవర్తః॥ "సర్వోపాయైరసాధ్యాస్స్యాత్ స్వకన్యాపురుషస్యయా। చౌర్యేణాపివివాహేన సావివాహ్యారహఃస్థితా" = ஆண்மகனுக்குத்தக்க கன்னிகை எவ்வகை முயற்சியாலும் கைகூடா விட்டால் இரகசியவிடத்தி லிருக்கப்பட்டஅக்கன்னிகை களவினலாயினும் மணம்புரியத்தக்கவளாம். எ-று. காண்க.

மணவேறுபாட்டின்பயன்.

பிரமம்முதலிய மணத்திற்குப்பயனை மனுகூறினர். మనుః॥ "దశపూర్వాన్పరాన్వంశ్యా నాత్మానంచైకవింశకం। బ్రాహ్మీపుత్రస్సుకృతకృ న్మోచయేదేనసఃపితౄన్। దైవోఢాజస్సుతశ్చైవ సప్తసప్తపరావరాన్। ఆర్షోఢాజస్సుతస్త్రీంస్త్రీ న్షట్షట్కాయోఢజస్సుతః। బ్రాహ్మాదిషువివాహేషు చతుర్ష్వేవానుపూర్వశః। బ్రహ్మవర్చస్వినఃపుత్రా జాయంతేశిష్టసమ్మతాః। రూపసత్వగుణోపేతా ధనవంతోయశస్వినః। పర్యాప్తభోగాధర్మిష్ఠా జీవంతిచశతంసమాః। ఇతరేషుతుశిష్టేషు నృశంసానృతవాదినః।జాయంతేదుర్వివాహేషు బ్రహ్మధర్మద్విషస్సుతాః" = பிரமவிதியால் மணம்புணர்ந்த மாதின் மகன் புண்ணியஞ்செய்தவனாய்த் தனக்குமுன் பத்துத்தலைமுறைப்பிதிரரையும்தனக்குப்பின் பத்துத்தலைமுறைமரபினரையும் இருபத்தோராவதாவானாகிய தன்னோடும் பாவத்தினின்றும் விடுவிக்கின்றான். தெய்வமணம் புணர்ந்த மாதரின்மைந்தன் முன்னும் பின்னும் ஏழேழ்வரையும், ஆரிடமணம் புணர்ந்தவள் புதல்வன் மும்மூவரையும், பிராஜாபத்தியமணம் புணர்ந்த மகடூஉப்புதல்வன் அவ்வாறு தலைமுறையவரையும் பாவத்தினின்றும் விடுவிக்கின்றான். பிரமமுதலிய நான்குமணத்திலும் நிரலேபிரமவொளி யுடையவர்களும், பெரியர்கள் விரும்பத்தக்கவர்களும், உருவம், வலிமை, குணமிவற்றோடுகூடியவர்களும், பொருள், புகழுடையவர்களும், போதுமானபோகமும் தருமமுமுடையவர்களுமாகிய நன்மக்கள்பிறந்து நூறுவருடம் பிழைத்திருப்பார்கள். (எனவே நெடுநாள் சீவிப்பரென்பது) ஏனைய பழிப்புற்ற மணங்களில், காதகர், பொய்கூறுவோர், பிரமவிரோதிகள், தருமவிரோதிகள் ஆகும் மக்கள் பிறப்பர். எறு. காண்க.

உடன்பட்ட நான்குமணங்களிலும் முதலாவது சிறந்தது. ஏனைய வொன்றற் கொன்று தாழ்ந்தது என்று போதாயனர் உரையுமுள்ளது. బోధాయనః॥ "తేషాంచత్వారఃపూర్వేబ్రాహ్మణస్య తేష్వపిపూర్వఃపూర్వఃశ్రేయానితరేషా ముత్తరోత్తరఃపాపీయాన్" = அவற்றுள் முன்னைய நான்குமணமும் வேதியனுக்குயர்ந்தன. அவற்றுள்ளும் ஒன்றற்கொன்றுமுன்னதேசிறந்தது. ஏனையநான்கனுள். ஒன்றற்கொன்று தாழ்ந்துபாவமுள்ளதாகின்றது. எறு.காண்க.

அற்றேல், ஆசுரம்போல ஆரிடமும் பாவமுடையது. என்னை? அதுவும்விலையால் வந்ததேயாம். அதனானே கசியபர் கூறி

னர். కశ్యపః॥ "క్రయక్రీతాతుయానారీ నసాపత్నీవిధీయతే। నసాదైవేనసాపిత్ర్యే దాసీంతాం కశ్యపోబ్రవీత్" = விற்றவரிடத்தில் வாங்கப்பட்ட மாது (எனவேவிலை கொடுத்துப்பெற்றவள்) மனைவியென்று கூறப்படுவதில்லை (எனவே, தருமகரும யோக்கியதையுடைய மனையாள் என்னும்பெயர்க்குத் தக்கவளல்லள்) அந்தமாதுதேவர்கருமத்திலும் பிதிர்கருமத்திலும் யோக்கிய முடையவளல்லள். அவளைத் தாசியென்று கசியபர் கூறினர். எ-று. காண்க.

மனு, ஆரிடமணம், விலைகொடுத்து வாங்குவதேயாதலின் அதுவும் தருமமல்லவென்னுங் கருத்தினராயினர். మనుః॥ "పంచానాంతుత్రయోధర్మ్యా ద్వావధర్మ్యౌస్మృతావిహ। పైశాచశ్చాసురశ్చైవ నకర్తవ్యౌకదాచన" = ஐந்தில் மூன்று தருமமானது இரண்டு அதருமமானது என்று இங்குகூறப்பட்டன. பைசாசமும், ஆசுரமும் எப்போதும் செய்யத்தக்கவல்ல. எ-று. எனவேபிரமம் முதல் ஆசுரம்வரையிலான ஐந்துமணத்துள் பிரமம், தெய்வம், பிராஜாபத்தியம், என்னும்மூன்றுந் தருமமானவை. என்னை? அவற்றுள்விலைப் பெறுஇல்லாமையின். ஆரிடமும்ஆசுரமுமாகியவிரண்டும் அதருமம், என்னை? அவைவிலைக்குப் பெறப்பட்டனவாதலின். அவ்விரண்டினுள்ளும் ஆசுரம் பைசாசம்போலும் ஆபற்காலத்துள்ளும் எனவேவேறுபெண் இடையாவழியும் செய்யத்தக்கதல்ல. என்பதென்னெனில்?

அங்ஙனமன்று. "పంచానాం" என்றமனுவுரை பிறர்மதங்கூறுமுகமாக வந்ததன்றித் தன்மதங்கூறிய வாறன்று. ஆயின், இங்ஙனம் என்பொருள் கொள்ளவேண்டுமெனில்? அம்மனுவே பிற்கூறுவதனுள் ஆரிடமணத்து மணமகனிடத்திலிருந்து பசுவையும் எருதையும்பெறுவது கன்னிகைக்கு விலைபோலாம். என்றகருத்து பிறர்மதமென்று தாமே அனுவாதஞ் செய்துஅதனை மறுத்தனர். என்னை?

మనుః॥ "ఆర్షేగోమిథునంశుల్కం కేచిదాహుర్మృషైవతత్। అల్పోప్యేవంమహాన్వాపి విక్రయస్తావదేవసః" = ஆரிடமணத்தில் மணமகனிடத்தினின்றும் பெறும்பசுவும் எருதும் கந்நிகைக்கு விலையாக விருக்கின்றதெனச் சிலர் கூறுவர். அதுபொய்மையேயாம். விலைகூறலென்பது குறைவாக வாயினும் மிகுதியாகவாயினு மிருக்கலாம். ஆரிட

மணத்துள் வாங்குவதும், அப்படியேயாம். எ-று. காண்க. எனவே அந்தப்பசுவிடபங்களை வாங்குவது விலைவாங்குவதாகக் கூறலாகாது. ஏனெனில்? அதனிடத்து விலையாகுமிலக்கணமில்லை. இவ்வளவு என்னும் எல்லையில்லாததன்றே? சுற்கம்=கிரயத்தில் அப்படிப்பட்ட தன்மை காணப்படுகின்றது. கிரயத்துக்குக் கருவியானதுவேவிலை. தேயத்தைப்பற்றி யாவதுகாலத்தைப் பற்றியாவது விலையேறுவதும் குறைவதும்உண்டு. ஆரிட மணத்துள்ளாயின் வாங்கத்தக்கது இவ்வளவே என்னுநியமம் உண்டாயிருக்கின்றது. அதுஏறுதலும் குறைதலு மாகாது. ஆதலால், விலைக்கு வாங்குவது அல்ல வாதலின் அந்தமணம் தருமமானதேயாம்.

அதனானே தேவலர்கூறினர். దేవలః॥ "పూర్వేవివాహాశ్చత్వారో ధర్మ్యాస్తోయప్రదానకాః। అశుల్కా-బ్రాహ్మణానాం చ తారయంతికులద్వయం"=கூறிய எண்வகைமணத்துள், முதனான்கும், நீரோடு கந்நியாதானமுடையனவாயும், சுற்கம் = விலையற்றதாயும், உள்ளவாதலின் வேதியர்க்குத்தக்கன. இரண்டுகுலத்தாரையும் எனவே கொடுத்தோன் மரபு, ஏற்றோன்மரபு, அல்லது தாய்மரபு, தந்தைமரபு, அல்லது முன்சந்ததி, பின்சந்ததியவர்களைப்பாவத்தினின்றுங்கடப்பிக்கின்றது. எ-று. காண்க.

காந்தருவமுதலிய மணத்துள் ஏழடிவைத்தலென்னும் சத்தபதிகருமம் உள்ளதலைமை ஹோமம்இல்லாமையின் அந்தக்கணவனுக்குப் பதித்தன்மையும், அந்தமாதுக்குப் பத்தினித்தன்மையும் இல்லைஎன்று சங்கிக்கலாகாது. ஏனெனில்? கந்நிகையைப் பெறுவதற்குமுன் அக்கருமம் இல்லாவிடினும் பின்பு உண்டாகின்றது. அதற்குப் பிரமாணம்.

தேவலர். దేవలః॥ "గాంధర్వాదివివాహేషు పునర్వైవాహికోవిధిః। కర్తవ్యశ్చత్రిభిర్వర్ణైః సమర్థేనాగ్నిసాక్షికః" = மூன்றுவருணத்துள்ளும் வல்லவனுயுள்ளவன் காந்தருவம்முதலிய மணம்புரிந்தபோது, மீட்டும்தீமுன்பாக மணவினைக் கருமத்தை முடித்துக் கொள்ள வேண்டும். எ-று. காண்க.

கிருஹியபரிசிஷ்டம். గృహ్యపరిశిష్టే॥ గాంధర్వాసురపైశాచ వివాహారాక్షసశ్చయః। పూర్వంపరిగ్రహస్తేషాం పశ్చాద్ధోమో విధీయతే" = காந்தருவம்,

ஆசுரம், பைசாசம், இராக்கதம் என்னுமிந்த மணங்களில் முதற் கன்னேமாதனைப்பெற்றபின்ஹோமம்விதிக்கப்படுகின்றது. எ.று.

ஹோமமில்லாமணம்.

ஹோமம் செய்யாவிடின் மனைவியாதலில்லை யெனவசிட்டரும் போதாயனருங்கூறினர். వసిష్ఠబోధాయనౌ॥ "బలాదపహృతాకన్యా మంత్రైర్యదినసంస్కృతా। అన్యస్మైవిధివద్దేయా యథాకన్యాతథైవసా" = வலிமையாற்கொண்டு வரப்பட்ட கன்னிகைக்கு மந்திர ஸமஸ்காரம் இல்லாவிட்டால் அக்கன்னிகையின் தானுதிகார முடையவன், உத்தமனுன வேருெரு மணமகனுக்கு அவளைவிதிப்படி தானஞ் செய்யவேண்டும். ஹோமமின்றிக் காந்தருவமுதலிய மணம்நடந்திருந்தாலும் அந்தமாது கன்னிகை யெவ்வாறே? அவ்வாறேயாவள். எ.று, ஆதலால் காந்தருவமுதலிய மணங்களிலும் சத்தபதிகருமம்உண்டாதலால்அந்தப்புருடன்கணவனேயாகின்றுன். அந்தமாது மனைவியாகின்றுள் என்பதுகருத்து.

கன்னியாதானம் ஆமாறு.

பிரமம்முதலிய மணத்துள் கூறப்பட்டதானம் ஒருமுறையேயல்லது பலதரம் செய்யலாகாது என்று யாஞ்ஞவற்கியர் கூறினர். యాజ్ఞవల్క్యః॥ "సకృత్ప్రదీయతేకన్యా హరంస్తాంశ్చోరదండభాక్" = கந்நிகை ஒருமுறை கொடுக்கப்படுகிறுள். கொடுக்கப்படாத கந்நிகையை வவ்விக்கொண்டு சென்றவன் கள்ளனைப்போல சிக்ஷிக்கப்படுவன். எ.று. காண்க.

மனு. మనుః॥ "సకృదంశోనిపతతి సకృత్కన్యాప్రదీయతే। సకృదాహదదామీతి త్రీణ్యేతానిసకృత్సకృత్" = தாயபாகம் ஒரு முறையேவரும், கந்நியாதானம் ஒருமுறையே செய்யவேண்டும். கொடுக்கின்றேன் என்னும் வாக்குத்தானம் ஒருமுறையே செய்யவேண்டும். இம்மூன்றினையும் ஒவ்வொரு தரமேசெய்தலாம். எ.று. இங்கு ஒவ்வொருமுறையென்றவடுக்கு இரண்டாம்றைசெய்யலாகாதென்பதனையுணர்த்துகின்றது.

இந்தமனுவுரை குற்றமற்றமணமகனைக் குறித்துக் கூறியது. என்னே? அங்ஙனம் நாரதவாக்கியமு முள்ளது. నారదః॥ "దత్వా

కాంతాయయదికన్యాం వరాయనదదాతితాం। అదుష్టశ్చేద్వరోరాజ్ఞా సదండ్యస్తత్రచోరవత్" = அழகியமணமகனுக்குத் தன்கன்னிகையைக் கொடுத்தபின் மறுபடியும் கொடா தொழிந்தால், அம்மண மகனுக்குப் பழுது இல்லாவிடின் கொடுத்தபின் கொடாதொழிந்தவனைக் கள்ளனைப்போல் அரசன் தண்டித்தல் வேண்டும். எ-று. இதனால் மேற்கூறிய யாஞ்ஞவற்கிய மொழிக்கும் இதேபொருள் கூற வேண்டும். ஆனால்இது, உச்சர்க்கவிதியாமோ ? எனின். அன்று எனயாஞ்ஞவற்கியர் கூறினர். యాజ్ఞవల్క్యః॥ "దత్తామపిహరేత్పూర్వాచ్ఛ్రేయాంశ్చేద్వరఆవ్రజేత్" = முதலிற் கொடுக்கப்பட்ட கன்னிகையேயாயினும் பின்புஅம்மண மகனிலும் சிறந்தவேறொருவன் கிடைத்தால் அக்கன்னிகையை மீட்டும் வவ்விக் கொள்ளலாம். எ-று. காண்க.

வெளவலாகாமை.

மேற்கூறிய யாஞ்ஞவற்கிய மொழி, வாக்குத்தானத்தைக் குறித்தொழிய கிரியாதானத்தைக் குறித்ததல்ல. யாருக்குமுதலில்வாக்குத்தானம் செய்திருப்பனோ ? அவனிடத்தில் குற்றம் வெளிப்பட்டு அவனிலும்சிறந்தவன் கிடைத்தபோது முதல்வாக்குத்தானத்தைவிட்டுச் சிறந்தவனுக்குக் கொடுக்கலாம். அப்படிப்பட்டவன் கிடையாத பக்ஷத்தில் முதலில்வாக்குத் தானத்தையும் தப்புவிக்கலாம். வாக்குத்தானஞ் செய்திருந்தபோதிலும், பாவிக்குக்கொடுத்தலாகாது. எப்படிப்பட்டவனுக்கு ஆயினும் கிரியையோடு முழுமையும் கொடுத்துவிட்ட பின்புஅதனைத் தப்புவித்தல் செல்லாது, அங்ஙனம்கௌதமரும் கூறினர். கௌதமர். "ప్రతిశ్రుతామప్యధర్మసంయుక్తాయవరాయనదద్యాత్"=வாக்குத்தானஞ் செய்யப்பட்டிருந்தாலும் பாவஞ்செய்த வரனுக்குக் கொடுக்கலாகாது. எ-று.

மணமகன்குற்றம்.

மணமகன்குற்றத்தைக் காத்தியாயனர் கூறினர், కాత్యాయనః। 'ఉన్మత్తఃపతితఃకుష్ఠీ తథాషణ్ఢస్సగోత్రజః। చక్షుశ్శ్రోత్రవిహీనశ్చ తథాపస్మారదూషితః। వరదోషాస్తుయేహ్యేతే కన్యాదోషాఃప్రకీర్తితాః" = பித்துக்கொண்டவன், நிலைகெட்டவன், குட்டமுடையவன், நபுஞ்சகன், தன்கோத்திரத்துட்பிறந்தவன், குருடன், செவிடன், உணர்ச்சி கெட்டவன்,

வெளிப்பண்ட முன்போன், என்னுமவரெல்லாம் குற்றமுடையவ ர்களாகக்கூறப்பட்டது. எறு. எனவே, குற்றமுடைய மணமக னுக்குக் கொடுக்கலாகாது. குற்றமுடைய கந்நிகையையும் பெற் றுக்கொள்ளலாகாது என்பதுகருத்து.

மாதர்மறுமணவிதி.

ஒருகால் தானம்கொடுத்து மறுபடியும் வேறொருவனுக் குக் கொடுக்கலாகாது என்னின், மாதர் ஒருமணமான பின்பு தக்க நிமித்தமுண்டானபோது, வேறொருவனுக்கு மறுபடியும் மணஞ்செய்விப்பதற்கு விதியில்லைஎனில்? உண்டு. அதனையிய மன், சாதாதபர் கூறினர். యమశాతాతపౌ॥ "వరశ్చేత్కులశీలాభ్యాం నయుజ్యేతకథంచన। సముద్ధృత్యతుతాంకన్యాం బలాదపహరేద్యది। పునర్గుణవతేదద్యాదితి శాతాతపోబ్రవీత్। హీనస్యకులశీలాభ్యాం హరన్కన్యాంనదోషభాక్।నమంత్రాఃకారణం తత్ర నచకన్యానృతంభవేత్" = மணமகன் மரபு, ஒழுக்கம், தகுதியாயு டையவனல்லனென்று அறிந்தவழி, அந்தக்கன்னிகை பூப்பதற் குள் எவ்வகையாகவாவது அவனை யொழிப்பித்து,வலிமையாலா வதுஅவனைக்கொண்டுவந்து குணமுடையனுகிய வேறொருவனுக் குமறுபடியும் தானஞ்செய்யவேண்டுமென்று சாதாதபர்கூறினர். குலமும் ஒழுக்கமும் குறைந்த மணமகனிடத்திருந்து கன்னிகை அபகரித்தவனுக்குக் கொடுத்ததைப் பெற்றுக்கொண்ட தென் னும் குற்றமில்லை. அப்படிப்பட்டவிடயத்தில் வெளவாமலிருப் பதற்கு மந்திரங்காரணமாக மாட்டாது. எனவே முறையே முற் றிய மணம்புரிந்ததாயிற்றே யென்னும் தடையில்லை. அவ்விடயத் தில் கொடுத்தேனென்று சொல்லி மறுபடியும் இல்லைஎன்பத னல் பொய்யுரைத்த குற்றமுமில்லை என்றியமன் கூறினர். எ-று காண்க.

காத்தியாயனரும் கூறினர். కాత్యాయనః॥ "సతుయద్యన్యజాతీయః పతితః క్లీబ ఏవ వా। వికర్మస్థస్సగోత్రోవాదాసో దీర్ఘామయోపివా॥ ఊఢాపిదేయాసాన్యస్మై సప్రావరణభూషణా" = அந்தமணமசன் வேறுசாதியானுகவாயினும் கருமமில்லைகெட்டவ னுகவாயினும், நபுஞ்சகனுகவாயினும், தாழ்ந் ததொழிலி லிருப்பவனுகவாயினும், தன்கோத்திரத்துட் பிறந்தவ னுகவாயினும், ஒருவனிடத்தில் அடிமையாக்கப்பட்டவனே யாயி னும், நீராதநோயினையுடையவ னுகவேயாயினும் இருப்பதுணர்ந்

தால், அக்கன்னிகைக்குக் கொடுத்த ஆடையாபரணத்தோடும் அவளை வேறு ஒருவனுக்குக்கொடுத்துவிடவேண்டுவது. எ-று.காண்க.

விருத்தபாராசரர். వృద్ధపరాశరః॥ "నష్టేమృతేప్రవ్రజితే క్లీబేచపతితేపతౌ। పంచస్వాపత్సునారీణాం పతిరన్యోవిధీయతే" = மாதர்க்குக் கணவனிறந்தாலும், செய்திதெரியாமல் நெடுங்காலங் தேசாந்தரம்போயிருந்தாலும், சந்நியாசம் பெற்றுக்கொண்டாலும், நபுஞ்சகனானாலும், சாதியைக் கெடுக்கத்தக்கதாக கருமநிலைதவறினவனானாலும், இவ்வைவகை யாபற்காலத்திலும் வேறுகணவன் விதிக்கப் படுகின்றான். எ-று. (இது மனுவுரையென்று சிலபாடம் வழங்குகின்றது).

மறுமணவிலக்கு.

மேற்கூறிய மிருதியுரைகள் வாக்குத்தத்த மானபின் சத்தபதியென்னும் கருமம் நடப்பதற்குள், மணமகன் குற்றமறிய வந்தவிடத்து, அக்கன்னிகையை மற்றொருவனுக்குக் கொடுத்துவிடலாமென்னுங் கருத்துடையனவன்றி மாதர்க்குமறு மணத்தினையே விதித்தவாறன்று. ஏனெனில்? "తస్మాన్నైకా ద్వౌపతీ విందతే" = ஒருமாது கணவரிருவரை அடைவதில்லையென்றுவேதங்கூறுகின்றது. "సకృత్కన్యాప్రదీయతే" என்ற மனுமிருதியும் இரண்டாவது மணத்தை விலக்குகின்றது. ஆதலின் மறுமணத்திற்கு நூற்கருத்தேயில்லை. ஆனால், பிதிர்மேதத்தில் கணவனோடு உடன்கட்டை யேறுவதற்குச் சிதாரோகணம் = கட்டைமேலேறும் பதிவிரதையைப்பற்றி உனக்குக் காமம் உண்டாயிருந்தால் இந்த இறந்தகணவனை விட்டு வேறு கணவனை மணம் புரிந்துகொள். என்று மந்திரம் கூறுதலின் மறுமணம் வேத சம்மதமென்று சிலர் கூறுவர். அது அந்த மாதினுடைய பதிவிரதமுடைய மனத்தினது, நிறையை அளப்பதற்குக்குக் கூறப்பட்டதாம். ஆகலின் வேதத்திற்கு மாதர் மறுமணத்திற் கருத்தில்லை. மேலும், முதற்கணவனுடையசிராத்தம்கெட்டுப்போகின்றது. குலகோத்திரங்களின் கலப்புக் குற்றத்திற்கும் காரணமாகின்றது. பெரியோர்வழக்குமில்லை. ஆதலால், மறுமணம் நூலுடன் பாடன்று. அன்றியும் மேற்கூறியதோஷங்கள் உடையவனாகவே யிருந்தாலும் கணவனைத் தெய்வமாக வெண்ணிப் பணிவிடை செய்திருக்கவேண்டுமென்று கற்பியலுட் கூறப்பட்டு மிருக்கின்றது. அவள் வேறுகணவனை மணம்

புணர்ந்தால் அவளிடத்தில் குண்டரும், கோளகரும், பௌனர்ப் பருவமான மக்கள் பிறப்பாரன்றித் தருதியானமக்கள் பிறப்ப தில்லை. ஆயின், அப்படிப்பட்ட சந்ததியாருக்குத் தருமகருமமும் கதியும் கோத்திரமும்நூல்கள்கூறுதலின். எனையயுகங்களில் சிலர் அவ்வாறு மறுமணம் நடத்தியுள்ளதாய்ப் புராண கதைகளினு லும் தெரியவருகின்றதே யெனில்? அந்தமுறை, சிலர்க்கு மாத் திரம் ஆபற்காலத்தில் விலக்குண்ணுமே யிருக்கலாமன்றி யிந்த யுகத்துக் கடாதென்று கலிவர்ஜியத்துள் நிஷேதிக்கப் பட் டது. கலியில் ஒழிக்கத்தக்க வெல்லாம் இக்கலிமுதலில் ஸ்ரீதா மன் முதலிய முனிவர்கள் செய்த நிபந்தனையன்றித் தக்கபிரமா ணமில்லையென்று சங்கிக்கலாகாது. "ధర్మజ్ఞసమయః ప్రమాణం"=என் று ஆபத்தம்பஸ்மிருதி, பெரியோர் வழக்கத்தினையே விதியாக்கு கின்றது. "ఊఢాయాః పునరుద్వాహం జ్యేష్ఠాంశం గోవధం తథా। కలౌపంచనకుర్వీత భ్రాతృజాయాంకమండలుం"=மணம்புணர்ந்த மாதுக்கு மறுமணமா தல், தமையன் தம்பி தாய் பாகப்பிரிவில் மூத்தவனுக்கு மிகுதி யாகப் பங்குகொடுப்பது, வேள்வியின்பொருட்டு ஆவினைவதைத் தல், தமையனிறந்தபின் அவன் மனைவியைத் தம்பி அநுபவித் தல்,மனைவியைவிடுத்துச்சந்நியாசம்பெறுவது,இவ்வைந்து கரும மும்கலியுகத்துள்செய்யலாகாதென்று,ஆதித்தியபுராணமும்கூறு கின்றது. ஆனால் அவற்றுள் சந்நியாசத்தை மாத்திரம் சிலபெரிய ரொன்பார் உடன்பட்டவாறு. மாதர் மறுமணமும் என் உடன்பட லாகாதெனின்? சுருதியினிடத்துச் சந்நியாசத்தினை விதித்தபடி யல்லாமல் விலக்கியதில்லை. மறுமணம் விலக்கப்பட்டதன்றி யா ண்டும் விதித்ததில்லை. அல்லதூஉம், மறுமணத்தைவிதித்த இய மன், சதாதபர், காத்தியாயனர் விருத்தபராசர்களின் உரைக்குக் கருத்தென்னெனில்? கன்னிகைக்கு விலைகொடுத்து நிச்சயிக்கப் பட்ட மணமகனுக்கும், வாக்குத்தத்த நிச்சயமான மணமகனுக் கும், குற்றமுண்டென்று உண்மையாகத் தெரியவரின் அவனை யொழித்து வேறு ஒருவனுக்குக் கொடுக்கலா மென்பதேயாம். அதனை மேற்கூறுதும். அதுநிற்க.

குற்றமுடையகன்னிகையைக் கொடுத்தோன்விடயம்.

யாராயினும் கந்நிகைக்குண்டா யிருக்குங்குற்றத்தைக்கூறு மலே ஒருமணமகனுக்குக் கொடுப்பானாயின், அவனை அரசன்

தண்டிக்கவேண்டுவது என்றுநாரதர் கூறினர். నారదః॥ "యస్తుదోషవతీంకన్యామనాఖ్యాయప్రయచ్ఛతి। తస్యకుర్యాన్నృపోదండంపూర్వసాహసచోదితం" யார்குற்றமுடைய கன்னிகையைத் தெரிவிக்காமல் தானஞ்செய்கின்றனோ? அவனுக்கு அரசன்பூருவ சாகசதண்டத்தை விதிக்கவேண்டுவது. எ-று. பூருவசாகசதண்ட மென்பது, தலைமைக்குற்றத்திற்குரிய தண்டனை. அதுமேல் பிராயச்சித்த காண்டத்துள்வரும்.

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యః॥ "అనాఖ్యాయదదద్దోషం దండ్యఉత్తమసాహసం" = குற்றத்தைத் தெரிவிக்காமல் தானஞ்செய்தவனுக்குமுதற் குற்றத்திற்குச்செய்யுந் தண்டனையைச் செய்யவேண்டும். எ-று. காண்க.

கன்னிகைக்குற்றம்.

கன்னிகைக் குற்றம் நாரதரால் குறிக்கப்பட்டது. నారదః॥ "దీర్ఘకుత్సితరోగార్తా వ్యంగాసంస్పృష్టమైథునా। దుష్టాన్యగతభావాచ కన్యాదోషాఃప్రకీర్తితాః" = தீராநோயுடையவள், கொடியபீடை யுடையவள், தேகப்பழுதுள்ளவள், இணைச்சம்பமுடையவள், எனவேவேறொருவனுக்கு நிச்சயமானவள், இருதந்தையர்க்குப்பிறந்தவள் அல்லது வியபிசாரிமகள் என்பனவுமாம். வலியவனால் நோக்கப்பட்டுள்ளவள், நேரோ வேறொருவனிடத்து இச்சையைவைத்திருப்பவள், இவர்கள் குற்றமுடைய கன்னிகையொனப்படுவர். எ-று. காண்க.

விலக்கத்தக்ககன்னிகைகுற்றவிடயம்.

மனு. మనుః॥ "విధివత్ప్రతిగృహ్యాపి త్యజేత్కన్యాంవిగర్హితాం। వ్యాధితాంవిప్రదుష్టాంవా ఛద్మనాచోపపాదితాం" = தன்வருணத்திற்கு விதித்தமுறைப்படி மணஞ்செய்திருந்தாலும் அக்கன்னிகை சத்தபதியாகிய அம்மி மிதிப்பதற்குள், பழிக்கப்பட்டவள், எனவே கெடுதியான சுழி, கெடுதியானசாமுத்திரிகம், கெடுதியான சாதகம், கெடுதியானசகுனம் மிவற்றல் கைம்பெண்மை யுண்டா மென்னும் கெடுதிக்குறி யுடையவளாய் அறிந்தோரால் மிகப்பழிக்கப்பட்டவள்என்பது. தீராநோயுடையவள், பூத்தவள்ளள்பது முதலிய அபவாதமுடையவள், அங்கப்பழுது முதலியவற்றை மறைத்து வைத்துத் தானஞ் செய்யப் பட்டவள், என்பது தெரியவரின்

அவளைவிட்டுவிடவேண்டுவது. எ-று. எனவேவிவாகம்முற்றும்முடிந்திருப்பதில்லையாதலின்விட்டாற் குற்றமில்லையென்பதுகருத்து.

விலக்கத்தகாதவர்விடயம்.

நாரதர். నారదః॥ "నాదుష్టాందూషయేత్కన్యాం నాదుష్టందూషయేద్వరం। దోషేసతినదోషస్స్యాదన్యోన్యంత్యజతోర్ద్వయోః" = குற்றமற்ற கன்னியின்மேற் குற்றங் கூறலாகாது. குற்றமற்ற மணமகன் மேலுங் குற்றம் கூறலாகாது. குற்றமிருந்தபக்ஷத்தில் குற்றங்கூறுவது குற்றமேயல்ல. பெண் புருடனையாவது, புருடன் பெண்ணையாவது விடுவதற்கு விடத்தக்கவரிடத்து உண்மையாகவே குற்றமிருத்தலே நிமித்தம். எத்திறத்தும் குற்றமின்றி விடலாகாது. இருந்துவிட்டால்குற்றமில்லையென்பதுகருத்து. இதுவும்சத்தபதிகருமமாகிய அம்மிமிதிப்பதற்குள்ளென்றுணர்க. என்னை? அக்கருமம் ஒன்றினாற்றான் மனையாள் என்னுந்தன்மை நிரம்புகின்றது.

மனைவினைமுற்றுகை.

மனு. "పాణిగ్రహణమంత్రైస్తు నియతందారలక్షణం। తేషాంనిష్ఠాతువిజ్ఞేయా విద్వద్భిస్సప్తమేపదే" = பாணிக்கிரகண கருமம் = நீரொடு கைப்பற்றற்றொழில், அதற்குச் சம்பந்தப்பட்ட பிரதான ஹோமகருமம் இவைகளாலேயே மனைவியாகுமிலக்கணம் தவறுதது. அந்த மந்திரங்களினும் கெடாதமுழுநிறைவு சத்தபதிகருமத்தில் உண்டாகின்றது. என்று அறிவுடையோ ருணர்வர். எ-று.

இயமன். యమః॥ "నోదకేననవాచావా కన్యాయాఃపతిరిష్యతే। పాణిగ్రహణసంస్కారాత్ పతిత్వంసప్తమేపదే" = நீர் விட்டுத் தானஞ்செய்தவனாலாயினும், வாயால் தானஞ்செய்தவனாலாயினும், கன்னிகைக்குக் கணவன் நிச்சயமானது என்று உடன்படுவதில்லை. பதித்தன்மை என்பது—கணவனாகவேண்டுமென்பது பாணிக்கிரகணமானபின்பு சத்தபதியென்னுங் கருமத்தினிடத்து நிலைநிறுத்தப் படுகின்றதென்னும் உடன்படாகின்றது. எ-று.

மணத்தின்பின்னும்கன்னித்தன்மைநிற்குங்காலஎல்லை.

பாணிக்கிரகணகருமம் ஆவதற்குமுன் மணஞ்செய்துகொண்டேயிருப்பவனிறந்தாலும் அந்தமாதுக்குக் கன்னித்தன்மை

கெட்டுப்போவதில்லை. இதனை வசிட்டர்கூறினர். వసిష్ఠః॥ "అద్భిర్వాచా దత్తాయాం మ్రియతేవాదవరోయది। నచమంత్రోపనీతాస్యాత్ కుమారీపితురేవసా" = நீரோலாயினும் வாக்கினாலாயினும் தானஞ் செய்யப்பட்ட கன்னிகைக்கு மணமகனிறந்தானாயின் அந்தக்கன்னிபாணிக்கிரஹணகருமமில்லாதவளா யிருந்தால்பெற்றவனுக்கு மகளாகவேயிருப்பள். எ-று. எனவே அவனுக்கவள் மனைவியல்ல ளென்பது கருத்து. இப்படிப்பட்ட கன்னிகைக்கு அப்போதே மணஞ் செய்வதும் ஏனையயுகவேறு பாட்டின்கண்ணதாம் என்றுணர்க. என்னை?

ஒப்புக்கொண்டமணமகன்விலக்குவிடயம்.

உடன்பாட்டு நிச்சயமானபின்பு மணமகன் அன்னியதேசம் போய்விட்டால்நடத்தவேண்டியமணத்தைக்குறித்துக்காத்தியாயனர்விசேடவிதிகூறினர். కాత్యాయనః॥ "వరయిత్వాతుయఃకశ్చిత్ ప్రణశ్యేత్పురుషోయదా। తదాసమాస్త్రీనతీత్య కన్యాన్యంవరయేద్వరం" = யாரேனும் ஒரு புருடன் கன்னிகையை ஒப்பி வாக்கு நிச்சயம் செய்துகொண்டு தேசாந்தரம் போயிருந்தால் அப்போது அக்கன்னிகை மூன்று வருடம்எதிர்பார்த்துப்பின் வேறு மணமகனை யுடன்படவேண்டுவது. எ-று. காண்க.

நாரதர். నారదః॥ "ప్రతిగృహ్యతుయఃకన్యాం వరోదేశాంతరంవ్రజేత్। త్రీనృతూంస్తుసమతిక్రమ్య కన్యాన్యంవరయేద్వరం" = யாராவது கந்நிகையைப் பெற்றுக் கொள்கிறேன் என்றுஒப்புக் கொண்டாவது, தானம் வாங்கியபின்பாவதுதேசாந்தரம்போய் விடுவானாயின்,அந்தக்கன்னிகை யாறுமாதங் கழித்தபின் வேறொருவனை மணஞ்செய்துகொள்ளவேண்டுவது. எ-று. எனவே அதுவரையில் அவன்வரவையெதிர் பார்க்கவேண்டுவது என்பதுகருத்து.

சுற்கம்கொடுத்தவன்இறந்துபோன விடயம்.

கன்னிகையின் பொருட்டுச் சுற்கம் கொடுத்தபின் மணமகனிறந்துபட்டாற் செய்வகை மனுகூறினர். మనుః॥ "కన్యాయాందత్తశుల్కాయాం మ్రియేతయదిశుల్కదః। దేవరాయప్రదాతవ్యా యదికన్యానుమన్యతే" = பெண்ணின் பொருட்டுச் சுற்கத்தைக் கொடுத்தபின், அந்தமணமகன் மரணத்தை யடைந்தால் அந்தக் கன்னிகையுடன்பட்ட பக்ஷத்தில் அவனுடன்பிறந்த இளையவனுக்கே கொடுத்துமணஞ்

செய்யவேண்டுவது. எ-று. சுற்கம் = முலவிலை = பரியம்என்பன வொருபொருட்கிளவி.

சுற்கம்கொடுத்தவன்தேசாந்தரம்சென்றவிடயம்.

சுற்கம்கொடுத்தவன் தேசாந்தரம் போய்விட்ட பக்ஷத்திலா வகையைக் காத்தியாயனர் கூறினர். కాత్యాయనః॥ "ప్రదాయశుల్కంగచ్ఛేద్యః కన్యాయాఃస్త్రీధనంతథా। ధార్యాసావర్షమేకంతు దేయాన్యస్మైవిధానతః" = யாராவது கன்னிகையின் பொருட்டுச் சுற்கமாயினும் சீதனத்தை யாயினும்கொடுத்து அந்நியதேசத்திற்குப் போய்விடுவானாயின் அவன்வரவைப்பற்றி யொருவருடம்வரையில் அவன்மனைவியே யாகும்பொருட்டு எதிர்பார்த்திருந்து அதுவரையில் அவன்வரா விட்டால் அவளை வேறொருவனுக்கு விதிப்படி கொடுத்து விட வேண்டுவது. எ-று.

இப்படிப்பட்ட வேறுபாடுகளெல்லாமிருத்தலின் இவைக ளனைத்தையும் வாக்குத்தத்தத்தின்பின்சத்தபதியாவதற்குள், மா ணம், தேசாந்தரம்போதல், முதலியதோஷம் உண்டானால்அவ ளைமற்றொருவனுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று கூறியத னுள்ளடங்கும்.

வாக்குத்தத்தம்பெற்றவர்பலர்வந்தால்.

காத்தியானர். కాత్యాయనః॥ "అనేకేభ్యోహిదత్తాయామనూఢాయాంతు తత్రవై। సర్వాగతేషుసర్వేషు లభతేప్రథమోవరం। అథాగచ్ఛేత్పరోఢాయాం దత్తం పూర్వవరోలభేత్" = ஒருவனுக்கு வாக்குத் தத்தஞ்செய்து, அவன் கிடையாமல், மற்றொருவனுக்குச்செய்ய, இவ்வாறே பலர்க்கு வாக்குத்தத்தஞ் செய்திருக்கினும், யாருக்காயினும் மணம்முடி வாவதற்குள், முதலில்யார்க்கு வாக்குத்தத்தஞ் செய்யப்பட்ட தோ? அவன்வந்தால் அவனேகந்நிகையை யடைகின்றான். மற் றொருவனுக்கு மணவினைமுடிந்து விட்டவிடயத்தில் முதலாவான் தான் கொடுத்திருக்கும் சுற்கப்பொருளை மாத்திரமே பெறுவான். எ-று. சாங்க.

மணமகனுக்குச்சிறந்தமணம்.

"లక్షణ్యాంస్త్రియముద్వహేత్" = நல்ல விலக்கணமுடைய பெண் ணைமணஞ்செய்ய வேண்டுமென்று மேற்கூறப்பட்டுள்ளனவற்

ளுள், மணம் புரியத்தக்க கன்னிகை யிருவகைப் படும், ஒருத்தி தன்வருணத்தினள், மற்றொருத்தி அந்நியவருணத்தினள், என. அவருள் முதலிற் கூறப்பட்டவளே சிறந்தவள். என்பதனை மனுகூறினர். మనుః॥ "సవర్ణాగ్రేద్విజాతీనాం ప్రశస్తా దారకర్మణి। కామతస్తుప్రవృత్తానా మిమాస్స్యుః క్రమశో౽వరాః."—முதலில் ஸ்நாதகவிரத முடித்துக்கொண்டவனுக்கு முதல்மணத்தில் அக்கினிகாரிய முதலியகருமம் சித்திக்கும்பொருட்டுத் தன்னோடு ஒத்த வருணத்தினையுடையபெண் மணஞ்செய்துகொள்வதற்குத்தக்கவளாகின்றனள். எனவே, வேதியனுக்குவேதியமாது, அரசனுக்குஅரசகன்னிகை, வைசியனுக்கு வைசியப்பெண் சிறந்தோளென்பதுகருத்து. இவ்வாறுதருமசித்தியின்பொருட்டு முதலில்தன் வருணத்தாளாகிய மாதினைமணம் புரிந்துபின்பு, காமத்தால்போக விச்சையுண்டானவிடத்தில் தன்னினும்தாழ்ந்த வருணமாதர் மணம்புணரத் தக்கவராவர். எ-று. எனவே, வேதியனுக்கு க்ஷத்திரிய வைசிய சூத்திர மாதரும், அரசனுக்கு வைசியசூத்திர மாதரும், வைசியனுக்குச் சூத்திர மாதும் காமத்தின் பொருட்டு மணக்கத் தக்கவராவர் என்பது கருத்து.

தாழ்ந்தவருணத்தியமாதர்மணம்.

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యః॥ "తిస్రోవర్ణానుపూర్వ్యేణ ద్వేతథైకా యథాక్రమం। బ్రాహ్మణక్షత్రియవిశాం భార్యాస్వాశూద్రజన్మనః" = இன்பத்தின் பொருட்டெனவும், புதல்வரின் பொருட்டெனவும், தருமத்தின் பொருட்டெனவும் மணம்புரிதல் மூவகைப்படும், அவற்றுள், காமத்தை விரும்பினவனுயிருந்து புதல்வனைப்பெற்றபின் யாராயினும், மனைவியிறந்த பின்னர் வேறு ஆச்சிரமத்திற்குச் செல்ல அதிகாரி = தகுதியுடையவ னல்லாமையால் இல்லற தருமத்தினையே விரும்பினவ னுயினும், அவன்மணத்தின் முறைமையை இந்தவுரை தெரிவிக்கின்றது. தன் வருணத்துள்ளே மணத்தல் சிறந்தது. தன்னினு மிழிந்த வருணத்தில் மணம்செய்வது, இரண்டாம்பக்ஷம். தன்னிற்சிறந்த வருணத்துமணம் புரியவேலாகாது. என்பதுமுறையாகவே, ஈண்டு இரண்டாம் பக்கத்தினைக் கூறுகின்றார். என்னை? வேதியனுக்கு மூவருணமாதர், அரசனுக்கு இருவருணமாதர், வைசியனுக்கு ஓரோவருணமாது என, வருணமுறைமைபற்றி இரண்டாம்பக்க மணத்திற்குரியகன்னியர்

ஆம். சூத்திரனுக்குத்தன் சாதிமாது ஒருத்தியே யாமாதலின் இரண்டாம்பக்ஷ மென்பதேயில்லை. எனவே, வேதியனுக்கு வேதியமாதே சிறந்தவள். அநுகற்பம். அவன்காமியாயினும், மேற்கூறிய ஆபத்துள்ளகப்பட்டுக் கிரகத்த நிலைமையை மாத்திரம் விரும்பினுலும் அவனுக்கு அரசகன்னிகை இரண்டாம் பக்கம். கிடையாவழி வைசியப்பெண் அனுகற்பம். அதுவும் கிடையாவழி சூத்திரமாதும் அனுகற்பமாம். பிறவுமன்ன.

மனு. మనుః॥ "శూద్రైవ భార్యా శూద్రస్య సా చ స్వా చ విశః స్మృతే। తే చ స్వా చైవ రాజ్ఞశ్చ తాశ్చ స్వా చాగ్రజన్మనః" = சூத்திரனுக்குச் சூத்திரமாதொருத்தியேமனைவியாம். வைசியனுக்குச் சூத்திரசாதிமனைவி தன் சாதி மனைவியுமென இருவராம். வேந்தனுக்குச் சூத்திரவைசிய மாதோடு தன் சாதிமனைவியு மெனமூவர். வேதியனுக்கு, அம் மூவருணத்தினரோடுதன்சாதிமாதுமெனமனைவியர்நால்வர். எ-று.

நாரதர். నారదః॥ "బ్రాహ్మణస్యానులోమ్యేన స్త్రియోऽన్యాస్తిస్ర ఏవతు। శూద్రాయాః ప్రాతిలోమ్యేన తథాన్యే పతయస్త్రయః। ద్వే భార్యే క్షత్రియస్యాన్యే వైశ్యస్యైకా ప్రకీర్తితా। వైశ్యాయా ద్వౌ పతీ జ్ఞేయా వేకోऽన్యః క్షత్రియాపతిః" = தன்னினும் தாழ்ந்தவருணத்தில் மணம்புணர்வது அனுலோமவிதியாம். தன்னினும்உயர்ந்த வருணத்தில் மணம்புணர்வது பிரதிலோமவிதியாம். பெண்களுக்கு அனுலோமவிதியாகாது. பிரதிலோமவிதியாம். புருடர்க்குப் பிரதிலோம விதியாகாது. அனுலோமவிதியாம். அங்ஙனம் வேதியனுக்கு அனுலோமமாதர் மூவருணத்தர். சூத்திரமாதுக்குப் பிரதிலோமபுருடர் மூன்றுவருணத்தர். அவ்வாறே, வேந்தனுக்கிருவர் மனைவியர். வைசியனுக்கு ஒருத்தி. வைசிய கன்னிகைக்கு இருபுருடர் க்ஷத்திரிய கன்னிகைக்கொருவன்தக்கவனும். எ-று.

வசிட்டரும் பாரஸ்கரரும். వసిష్ఠపారస్కరౌ॥ "తిస్రో బ్రాహ్మణస్య వర్ణానుపూర్వ్యేణ ద్వే రాజన్యస్య ఏకా వైశ్యస్య సర్వేషాం శూద్రామప్యేకే మంత్రవర్జం" = வருணமுறையால் வேதியனுக்கு மனைவியர்மூவர். வேந்தனுக்கிருவர். வைசியனுக்கொருத்தி. சூத்திரனுக்குத் தன்சாதியுளொருத்தியே மந்திரமின்றி. எனவே இருபிறப்பாளர் மூவரும் சூத்திரமாதினையும், சூத்திரன் சூத்திரமாதினையும் மணம்புரியும் போது மந்திரவிதியில்லை யென்பதுகருத்து.

பைட்டீநஸி. పైఠీనసిః॥ "అలాభేకన్యకాయాఃస్నాతకంవ్రతంచరేదపి వా క్షత్రియాయాంవాపుత్ర ముత్పాదయేత్శూద్రాయాంవా" = வேதியன்தன்சாதி கன்னிகைகிடையாவழி ஸ்நாதகப்பிரம சாரியாகவே யிருத்தல் வேண்டும். அல்லது, அரசகன்னிகை யிடத்தாயினும் முடிவுக்கு வைசியமாதினிடத்தாயினும், எதுவும் கிடையாவிடிற் சூத்திர மாதினிடத்தாயினும் புதல்வனைப்பெற வேண்டுமெனச் சிலர் கூறுகினர். எ-று. எனவே, தம்மதமன்று பிறர்மதங்கூறியவாறு.

இருபிறப்பாளர் மூவர்க்கும்சூத்திரகந்நி மனைவினை.

விஷ்ணு. విష్ణుః॥ "ద్విజస్యభార్యాశూద్రాతు ధర్మార్థంనభవేత్క్వచిత్। రత్యర్థమేవసాతస్య రాగాంధస్యప్రకీర్తితా" இருபிறப் பாளனுக்குச் சூத்திரகன்னிகைமனைவியானல் தருமமுண்டாகாது. காமத்தாற்குருடனானவனுக்குப்போகநிமித்தமாகவே அதுஉண்டாகின்றதென்று கூறப்பட்டது. எ-று. காண்க.

இவ்வாறு சிலர்மதத்துள் இருபிறப்பாளர்க்கு உத்தமமாதர்கிடையாதஆபற்காலத்தில் காமவின்பமொன்றேபயனாகவுடையசூத்திரகன்னிகையின்மந்திரமில்லாதமணம் அற்பகுற்றமுடையதாதலின் உடன்படப் பட்டது. ஏனையர்மதத்துள், அந்தணன் அரசனிருவர்க்கும் சூத்திரமாதின் புணர்ச்சியே கூடாது என் படுதது துணிவு. ஒருகால் நேரிட்டாலும் மணம் ஆகவேயாகாது. என்று கூறப்பட்டது.

மனு. మనుః॥ "నబ్రాహ్మణక్షత్రియయో రాపద్యపిహితిష్ఠతోః। కస్మింశ్చిదపివృత్తాంతే శూద్రాభార్యోపదిశ్యతే। హీనజాతిస్త్రియంమోహా దుద్వహంతోద్విజాతయః। కులాన్యేవనయంత్యాశు ససంతానానిశూద్రతాం। శూద్రావేదీపతత్యత్రే రుతథ్యతనయస్యచ। శౌనకస్యసుతోత్పత్త్యా తదపత్యతయాభృగోః। శూద్రాంశయనమారోప్య బ్రాహ్మణో యాత్యధోగతిం। జనయిత్వాసుతంతస్యాం బ్రాహ్మణ్యాదేవహీయతే" = வேதியனும் வேந்தனும் இல்லறநிலைமையை வேண்டியபோது தன்சாதியுள் எவ்வளவு முயன்றுங் கன்னிகை கிடையாவிடின் சூத்திரகன்னிகையை மணம்புணரலாமோ எனிற் கூடாது. ஏனெனில்? எந்தப் பெரியோர்களுடைய பழயகதையிலும் சூத்திரகன்னிகை இருபிறப்பாளனுக்கு மனைவியாயிருந்ததாகக் கூறப்பட்டதில்லை. சிருட்டிமுறையைப்பற்றி வருணமுறைமையால் அனுலோமமண

விதி விதிக்கப்பட்டதாகலின் இந்த விலக்கு பிரதிலோமவிதியால் மணத்தைக் குறித்ததென்று அறியத்தக்கது, அந்தண னரசனிருவர்க்கே யாகாதென்று மறுத்தது. அவர்கட்குப் பாவமதிகமாக வுண்டாமென்பதேயன்றி இருபிறப்பாளர் மூவர்க்கும்சூத்திரகன்னிகை யாகாதென்றே மேற்கூறப்படும். அந்தணனரசன் வசியன் தத்தஞ் சாதிமாதரை மணந்திருந்தவழியும் நாலுணர்ச்சியின்றித் தாழ்ந்த சாதியான சூத்திரமாதினை மணம்புரிந்தால் அவளிடத்தில் பிறக்கும் புதல்வர்போர் முதலியமரபுகள் விந்துச் சிறந்ததேயாயினும் இடத்தாழ்ச்சியால் சூத்திரத்தன்மையையே யடைகின்றனர். சூத்திரமாதினை மணம்புணர்ந்த இருபிறப்பாளன் குலங்கெடுகின்று னென்பது அத்திரியின்மதம். உதத்தியர் குமாரரான கௌதமருக்கும் இதுவேகருத்து. இங்கு இருபிறப்பாளன் வேதியன்மாத்திரமென்பது கருத்து. எனவே. வேந்தர் வசியர் சூத்திரமாதினை மணந்ததனுனே குலங்கெடுவதில்லை. சூத்திரமாதினிடத்து வேந்தன் புதல்வனைப்பெற்றுல் குலங்கெடுகின்றுன் என்பது சௌநகர்மதம். அனேகம் சூத்திரமாதரிடத்து, அனேகம்மக்களைப் பெற்றுல் வைசியன் குலங்கெடுகின்று னென்பது பிருகுமதம். வேதியன் தன்சாதிமாதினை மணம்புணராமலே ஊழ்வினைவலியால் நண்புண்டாய் சூத்திரமாதினை மணம்புரிந்து புணர்ந்தால் நரகத்தினையும் தாழ்ந்தபிறப்பினையும் அடைகின்றுன். அவளிடத்து மக்களைப்பெற்றுல் வேதியத் தன்மையைத் தாழ்த்திவிடுகின்றுன். எ-று. காண்க.

மனு. ஙகூ॥ "వృషలీఫేనపీతస్య నిశ్వాసోపహతస్య చ। తస్యాం చైవ ప్రసూతస్య నిష్కృతిర్న విధీయతే" = சூத்திரமாதின் அதரபானஞ் செய்தவன், அவளோ டொருபடுக்கையிற் படுத்து அவளது சுவாசம்மேல் விழக்கிடந்தவன், அவளிடத்திற் பிறந்த மக்களையுடையவன் என்னுமிவர்களுக்குப் பிராயச்சித்தத்தால் சுத்தம் விதிக்கப்படுவதில்லை. எ-று. எனவே, ஆபத்தினையடைந்த காமமுடையவனும் சூத்திரமாதினைப்புணர்வதற்கு விதியில்லையாதலின், இருதுகாலப் புணர்ச்சியின் விலக்கு அனுவாதிக்கப்பட்ட வாறுயிற்று.

அச்வமேதபருவத்துள்ளும் கூறப்பட்டது. అశ్వమేధే॥ "శూద్రాయాం బ్రాహ్మణాదుత్పన్నం సహస్రైర్జాయతే ద్విజః। కృత్వా పునర్భవేద్విప్రః పతితో స్త్రీమైథునతః। మాతృపితృకులస్నేహపాపాత్ కామమోహితః। అథ గంగాం వ్రజేద్వి ప్రయతః ప్రాయశ్చిత్తం ధ్రువం"

சூத்திரயோனியில் விழுந்த இருபிறப்பாளன் வித்து, ஆ!! ஆ!! என்ற துன்பசத்தக்குறியைக் காட்டிமலக்குழியில் விழுந்தேன் என்று துக்கப்பட்டுக்கொண்டு, காமத்தாலறிவின்றி என்னைக் கீழ் விழச்செய்த இந்தப்பாவிவிரைவில் தாழ்ந்த பிறப்பிற்குப்போகக் கடவன் என்று சபித்துப் பின்தான் விழுகின்றது என்பது நிச்சயம். எ-று. காண்க.

அற்றேல், "శూద్రస్యోదాగ్రజన్మనః" என்றவுரையால் சூத்திர சாதிமாதினுக்கும் வேதியனுக்கும் மணம் மனுவானே யுடன்படப் பட்டதன்றோ? மீட்டும்அவரோ "నబ్రాహ్మణక్షత్రియయోః" என்றதனால் சூத்திரமாதின்மணம் அந்தணரரசர்க் காகாதென விலக்கினர். ஆதலின், "வியாஹதி" = முன்னொடு பின் மலைதல் என்ற குற்றம் அம்மனு மிருதிக்குண்டாவதில்லையோ வெனின்? அற்றன்று. மேற்கூறிய பிரம்மத வேறுபாடு பற்றியாயினும் யுகபேதம் பற்றியாயினும் இரண்டுமொழியும் ஒத்தனவேயென்று வழுவமைதி கூறப்படும்.

அதனானே, யாஞ்ஞவற்கியரால் மதவேறுபாடு விளக்கப்பட்டது. యాజ్ఞవల్క్యః॥ "యదుచ్యతే ద్విజాతీనాం శూద్రాద్దారోపసంగ్రహః। నత న్మమమతంయస్మాత్తత్రాయంజాయతే స్వయం" = இருபிறப்பாளருக்குச் சூத்திரனாற் கந்நிகையை மனைவியாகப் பெறுவது தக்கதென்று சொல்லப்படுவது என்மதமன்று. ஏனெனில்? அந்தமாதினிடத்துத் தானே பிறக்கின்றானாதலின், தானே சூத்திரனாகப் போய்விடுகின்றான். எ-று.

அநுசாசனிகபருவத்தும் கூறப்பட்டது. అనుశాసనికే॥ "అప త్యజన్మశూద్రాయాం నప్రశంసంతిసాధవః। శయ్యర్థమపిశూద్రాస్యాన్నత్వేవ హిజనైః" சூத்திரமாதினிடத்தில் மக்களைப்பெறுதலைப் பெரியருடன்படுவதில்லை. இன்பத்தின் பொருட்டும் சூத்திரமாது இருபிறப்பாளனுக்குமனைவினை யாகலாகாது என்றுவேறு சிலர்கூறுவர். எ-று. காண்க.

யுகபேதத்தாலாகிய ஏற்பாடு மற்றொருமிருதியில் விளக்கப்பட்டது. స్మృత్యంతరే॥ "అసవర్ణాసుకన్యాసు" என்றுதொடங்கி "కలౌయు గేష్వమానధర్మా స్వర్జ్యానాహుర్మనీషిణః" என்று முடித்த கலியொழிப்பின்விதி முதலத்தியாயத்துட்டானே கூறப்பட்டுள்ள தாண்டுணர்க.

கலியொழிப்பின் தகுதி.

கலியிலொழிக்கத்தக்கதின் ஏற்பாடுசிலர் செய்தகட்டுப் பாடேயன்றி யதுபிரமாண வலியுடையதல்ல. மிருதி நூலுடையாரனைவர்க்கும் அஃதுடன் பாடாயிருக்கின் வரையறுத்து என்? கூறலாகாது எனக்கடாவுதல்மாபன்று. அவர்க்கும் அஃது டன்பாடென்பது மனுமுதலிய மிருதிகளில் அவ்வவ்விடங்களிற் கூறியுள்ளன வாற்ருல் விளங்கவுரைத்தவாருயிற்று.

அவ்வேற்பாடு, காணப்பட்ட பிரமாணக் கருவிகளேமூலமாகவுண்டா யிருக்கின்றன. ஆருசவிதியில், வேற்று வருணஆருசவிடயத்தைக் காணின்விளங்கும்.

தன்வருண மாதரையும் புறவருணமாதரையும் மணம்புணரும் விதிமனுவாற் கூறப்பட்டது. మనుః॥ "పాణిగ్రహణసంస్కారః సవర్ణాసూపదిశ్యతే। అసవర్ణాస్వయం జ్ఞేయో విధిరుద్వాహకర్మణి। శరః క్షత్రియయాగ్రాహ్యః ప్రతోదో వైశ్యకన్యయా। వాసోదశాశూద్రయాతు వర్ణోత్కృష్టస్యవేదినః" = வருணங்களிலுயர்ந்த மணமகனுக்குத் தன்சாதிமாதரிடத்தே பாணிக்கிரகணகருமம் உபதேசிக்கப் படுகின்றது. அந்நிய சாதிமாதரிடத்துமணவினையோ வெனில்? க்ஷத்திரியமாது அம்புபிடித்தும், வசியசாதிமாது தாற்றுக்கோலைப்பிடித்தும், சூத்திரமரபின்மாது ஆடையின் முன்றனைபிடித்தும் மணஞ்செய்யவேண்டும். எ-று.

சங்கலிகிதர். శంఖలిఖితౌ॥ "ఇషుంగృహ్ణీతరాజన్యా ప్రతోదంవైశ్యాదశాం తం శూద్రాబ్రాహ్మణస్య వర్ణాయాః పాణింగృహ్ణీయాత్" = அரசகன்னிகை பாணத்தைப்பிடிக்கின்ருள். வைசியகன்னிகை பிரதோதம்=தாற்றுக்கோலைப் பிடிக்கின்ருள். சூத்திரமாது முன்றனை முனையைப் பிடிக்கின்ருள். வேதியன் தன்சாதிகன்னிகையின் கையைப் பிடிக்கவேண்டுவது. எ-று.

பைட்டீநசி. పైఠీనసిః॥ "స్వాంగుష్ఠంబ్రాహ్మణ్యాః పాణిం గృహ్ణీయాత్। క్షత్రియాయాశ్శరంప్రతోదం వైశ్యాయాశ్శూద్రాయావస్త్రదశాం" = அந்தணகன்னிகையின் பெருவிரலோடு கூடிய கையைப் பிடிக்கவேண்டும். அரசகன்னிகையின் பாணத்தைப் பற்றவேண்டுவது. வைசியகன்னிகையின் தாற்றுக்கோலைப் பிடிக்கவேண்டும். சூத்திரமாதின் முன்றனையைப் பற்றிக்கொள்ள வேண்டுவது. எ-று.

இதுவுமது. "పరిక్రమోంబ్రాహ్మణస్యోగ్నే రాజన్యవైశ్యయో రాచార్యపరిక్రమః" = வேதியனுக்குத் தீவலம் வருதலும், அரசனுக்கும் வசியனுக்கும் ஆசிரியனை வலம் வருதலும், விவாகத்தின்பிரதானஹோமத்தில் விதியாகவிருக்கின்றது. எ-று. காண்க.

புணர்ச்சிநியமம்.

மணம் புரிந்தவன் மனையாளைப் புணருநியமம் மனுகூறினர். మనుః॥ "ఋతుకాలాభిగామీస్యాత్స్వదారనిరతస్సదా। పర్వవర్జ్యంవ్రజేచ్చైనాంతద్వ్రతోరతికామ్యయా" = பூத்தநாள்முதல் பதினாறுநாள் கருப்பந்தரித்தற்குத் தகுதியாகிய இருதுஎன்று சொல்லப்படுகின்றது. ஒவ்வொருமாசத்துள்ளும் இருதுகாலத்துள் சந்ததியை விரும்பினவனாய் மனைவியைச் சேரவேண்டுவது. இது விதியாகவிருக்கின்றது. இந்தப்புணர்ச்சித் தன்மனைவியினிடத்தேயாம். எனவே வேறிடத் தாகாதென்பது கருத்து. அந்த இருதுகாலத்துள்ளும் பருவதிதிகளைவிடுத்தல் வேண்டும். இதுவேகணவன் விரதம்.எனவே, இதனைக் கடக்கலாகா தென்பதுநியமம். மாசத்துள் இருதுகாலம்அதிகரித்துப் போனாலும், மனைவி விரும்பியபோது, சந்ததியைவிரும்பாமலே சாதாரணமாகப் போகவிச்சையால் அவளைப் புணர்தல் வேண்டும். எ-று. காண்க.

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యః॥ "షోడశర్తునిశాఃస్త్రీణాం తస్మిన్యుగ్మాసుసంవిశేత్। బ్రహ్మచార్యేవపర్వాణ్యాద్యాశ్చతస్రశ్చవర్జయేత్" = மாதர்க்கு பூத்ததுமுதல் பதினாறுநாள் இருதுகாலம், அவற்றுள் பகற்போதிற் காமம் தடைபடுத்தப்பட் டிருத்தலின் இழிந்ததேயாம். இரவே, புணர்ச்சிக்குரியது அவற்றுள் இரட்டைநாளிரவில் புணர்தல் வேண்டும். ஏனெனில்? அது ஆண்மக்கள் பிறப்பதற்குத் தக்கதென்பது கருத்து. இதனால் ஒற்றைநாளிரவுகூடா தென்னும் நிடேதம் தோன்றுகின்றது. ஆயின் அங்ஙனமன்று. பெண்மக்கள் பிறப்பதற்குத் தக்கது என்னும் அச்சத்தினால் கூறப்பட்டது. இருதுவான நாள்முதல் நான்கிரவும்விட்டுப் பிரமசாரி யாகவேயிருத்தல்வேண்டும். எ-று. காண்க.

பகற்புணர்ச்சிவிலக்கு.

அதர்வணவேதம். అధర్వణశ్రుతిః॥ "ప్రాణంవాఏతేప్రస్కందంతి యేది వారత్యాసంయుజ్యంతె బ్రహ్మచర్యమేవతద్య ద్రాత్రౌరత్యాసంయుజ్యంతె" = யார்

பகலிற்புணர்ச்சி செய்கின்றானோ? அவன்தன்னுயிரைப் போக்கடித்துக் கொள்ளுகின்றான். இரவின்மாத்திரமே புணர்தல்பிரமசரிய விரதமாகவே யிருக்கின்றது. எ று.

சங்கலிகிதர். శంఖలిఖితౌ॥ "నార్తౌ దివా మైథునం వ్రజేత్" — இருதுகாலத்தும் பகற்புணர்ச்சி செய்யலாகாது. எ று.

"ఋతుకాలాభిగామీ" என்றுமேற்கூறிய மனுவுரையால் இரண்டு நியமம்அறிதல் வேண்டுவது. இருதுகாலத்தில் புணர்ச்சியொருதலையாகச் செய்தலே வேண்டுமென்றி யொழிக்கலாகாது. என்பது ஒருநியமம். இருதுகாலத்து மாத்திரமே செய்யவேண்டுமென்றி மற்றையகாலத்துள் செய்யலாகா தென்பது ஒருநியமம்என்க.

இதனைத்தேவலர் கூறினர். దేవలః॥ "స్వయం దారానృతుస్నాతాం స్వస్థ స్సన్నోపగచ్ఛతి। భ్రూణహత్యామవాప్నోతి గర్భం ప్రాప్తం వినాశయేత్" = மனைவிபூப்பினையடைந்து நீராடியிருக்கையில் தான் துன்பமற்றவனாகவிருந்தும் தருமத்திற்குடன்படாதவனாய்ச் சுதந்தர உணர்ச்சி= அகங்காரத்தால் யார் மனைவியோடு புணராது விடுகின்றானோ? அவன் சிசுக்களைக் கொலைசெய்த பாவத்திற்குப் போகின்றான். கிடைக்கத்தக்க கருப்பத்தினையும் பாழ்படுத்துகின்றான். எ று.

போதாயனரும் கூறினர். బోధాయనః॥ "త్రీణివర్షాణ్యృతుమతీం యో భార్యాం నాధిగచ్ఛతి। సతుల్యం భ్రూణహత్యాయా దోషమృచ్ఛత్యసంశయం। ఋతౌ నోపైతి యోభార్యా మనృతౌ యశ్చగచ్ఛతి। తుల్యమాహుస్తయోర్దోషమయోనౌ యశ్చసించతి" = யார் இருதுவான தன்மனைவியை மூன்றுவருடம் வரையில்புணராமல் விடுகின்றானோ? அவன் கருவையழித்த மஹாபாதகத்தையடைகின்றான். இதுநிச்சயம். யார் இருதுகாலத்தில்மனைவியைப்புணர்வதில்லையோ? அவனும், இருதுவல்லாத காலத்திற் சேர்வனோ? அவனும், யார்தன்னதல்லாதஅந்நியயோநியில்தன்சுக்கிலத்தைவிடுவனோ? அவனும் ஆகிய மூவரும் ஓரே பாவத்தினையுடையவர்களாம். எ று.

புணரலாகாதநாள்.

"పర్వవర్జం" என்றுமேற்கூறப்பட்டமனுவுரையிலுள்ளபருவமென்றமொழி இலக்கணையால் கெடுதியான திதிவாரநக்ஷத்திரங்களையுமுணர்த்துகின்றது. இங்ஙனம்விலக்கப்பட்டநாளாவது, அமா

வாசை, பூரணை. அவற்றுள் மாதரைப் புணரலாகாதென்றுவேதத்தால் விலக்கப்பட்டது. శ్రుతిః॥ "నామావాస్యాయాంచపౌర్ణమాస్యాంచస్త్రియముపేయాద్య ఉపేయాన్నిరింద్రియస్స్యాత్" = அமாவாசையிலும் பூரணையிலும்மாதரைப் புணரலாகாது. புணர்ந்தால் இந்திரியமற்றவனுவன். எ-று. காண்க.

வேருகிய விலக்குநாள், அட்டமிமுதலியனவாம். அவற்றை மனுகூறினர். మనుః॥ "అమావాస్యాష్టమీచైవ పౌర్ణమాసీచతుర్దశీ। బ్రహ్మచారీభవేన్నిత్యమప్యృతౌస్నాతకోద్విజః" = அமாவாசை, அட்டமி, பூரணை, சதுர்த்தசி, "చ" என்றதனுல் சூரியசங்கிரமணகாலம் இந்தநாள்களில் இல்லறத்தான் தன்மனைவிக்கு இருது நாளேயாயினும் தான் பிரமசாரியாகவேயிருத்தல் வேண்டும். எ-று.

இருதுநாளிரவு பதினுறிலும் ஆறுநாளாகா தென்பதை மனுகூறினர். మనుః॥ "తాసామాద్యాశ్చతస్రస్తు నిందితైకాదశీచయా। త్రయోదశీచశేషాస్తు ప్రశస్తాదశరాత్రయః" = அப்பதினுறு இரவினுள்ளும் முதனுன்கிரவும் பதினேராநாளிரவும், பதின்மூன்ரு நாளிரவும்விலக்கப்பட்டன. மிக்கபத்திரவும் சிறந்தன. எ-று.

விலக்கப்பட்ட நக்ஷத்திரங்கள் யாஞ்ஞவற்கியரால் குறிக்கப்பட்டன. యాజ్ఞవల్క్యః॥ "ఏవంగచ్ఛంస్త్రియంక్షామాం మఘాంమూలంచవర్జయేత్" = அற்பஉண்டி முதலியவற்றுல் தேகத்தினை யிளைக்கச்செய்து கொண்டிருக்கும் மனைவியை மேற்கூறியவிதிப்படி புணர்வோன், மகம், மூலம், என்னும் இரண்டு நக்ஷத்திரங்களையும் ஒழித்து விடவேண்டும். எ-று.

சந்தானபேதத்தின்காரணம்.

பிரகற்பதி. బృహస్పతిః॥ "స్త్రియాశ్శుక్లేధికేస్త్రీస్యాత్పుమాన్పుంసోధికే భవేత్। తస్మాచ్ఛుక్లవివృద్ధ్యర్థం స్నిగ్ధమన్నంచభక్షయేత్। లఘ్వాహారాంస్త్రియంకుర్యాదేవంసంజనయేత్సుతం" = மாதர்க்குச் சுக்கில மதிகமானுல் பெண்மக்களும், புருடனுக்குச் சுக்கில மதிகமானுல் ஆண்மக்களும் பிறப்பர். ஆதலின், புருடன், இனிமைச்சுவையுள்ள ஆகாரங்களைச் சுக்கில விருத்தியின் பொருட்டுப் புசித்தல்வேண்டும். "చ" என்றதனுல் சிரணத்திவலிமையைப் பாதுகாத்து, சுக்கில விருத்திக்கு ஏதுவாகிய மதுரமாயும் சிறுதுவர்ப்பு, அல்லது

பயின், அல்லது அமுத்தம், செழுமையுமுள்ளதும் சுவையுடைய தும் விலக்கப்படாததுமாகிய நல்ல ஆகாரங்களைக் காலமுறைப் படித்தக்கவாறு புசித்துத் தன்னுடம்பில் சுக்கிலதாதுவை வலிவு செய்துகொள்ள வேண்டுமென்பது கருத்து. மாதர் அற்பமான வுண்டியுடையவர்களாகச் செய்யவேண்டுவது. எனவே, நோயில் லாமைக்கும், இன்றியமையாத சுகத்திற்கும் குறைவில்லாமலும், காமம் அதிகமாகாதபடியாயும், சுக்கிலம் புருடனிலும் சிறிது குறைபடும்படியாயும் ஆகாரமுறையை ஏற்பாடுசெய்து வைத் தல்வேண்டும். இவ்வாறு, சோர்வின்றி நடப்பவன் ஆண்மக்களை யேபெறுவன். எ-று.

"உண்டிசுருங்குதல் பெண்டியர்க்கழகு" என்ற ஒளவை யார் கருத்து மிதுவென்றுணர்க.

மனு. మనుః॥ "పుమాన్పుంసోధికే శుక్లే స్త్రీభవత్యధికే స్త్రియాః। సమేపుమాన్పుంస్త్రియౌవా క్షీణేల్పేచవిపర్యయః" = புருடனுக்குச் சுக்கில மதிக மானல், ஆண்மக்களும், மாதுக்குச் சுக்கிலமதிகமானல் கருபெ ண்மகவும், இரண்டும் ஒத்தால் கருஅலியும்பிறக்கும். இருவர்க்கும் குறைந்தால் மேற்கூறியவற்றிற்குவேருகவுண்டாம். எ-று.

பஞ்சபருவம்.

சங்கிராந்திகாலமும் பஞ்சபருவத்துட் சேர்ந்ததாமாதலின் புணர்ச்சிக்காகாது என்பது விஷ்ணுபுராணத்துட் கூறப்பட்டது. విష్ణుపురాణే॥ "చతుర్దశ్యష్టమీచైవ హ్యమావాస్యాచపూర్ణిమా। పర్వాణ్యేతానిరాజేంద్ర రవిసంక్రాంతిరేవచ। తైల స్త్రీమాంససంభోగీచ సర్వేష్వేతేషువైపుమాన్। విణ్మూత్ర భోజనంనామ ప్రయాతినరకంనృప" = கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி, கிருஷ் ணஅட்டமி, பூரணை, அமாவாசை, சூரியன் வேறு இராசிக்குச் செல்லுவதாகிய சங்கிரமணம் என்னும் இவ்வைந்தும் பருவகால மாம். இவற்றுளெல்லாம், புருடன் எண்ணெய்பூசுவது, பெண் களைப் புணர்வது, மாமிசங்களைப் புசிப்பதுமாகிய இவைகளைச் செய்தால் மலமூத்திரங்களைப் புசித்தவனுகின்றான். எ-று.

புணர்ச்சிக்குத்தகாதவிடங்கள்.

விஷ்ணுபுராணம். విష్ణుపురాణం॥ "చైత్యచత్వరతీర్థేషు నచైవచచతుష్పథే। నైవశ్మశానోపవన సలిలేషుమహీపతే। గచ్ఛేద్వ్యవాయంమతిమా న్నాతోచ్చార

ட్టీభిః" = பாழ்மண்டபம், மனைமுற்றம், மேல்மாளிகையி னிலாமுற்றம், நாற்றெருக்கூடும் சதுக்கம், மயானம், ஊர்வெளிச் சோலை, நீர்நிலை யிவற்றுள்ளே அறிவுடையோன் மாதரைப்புணர லாகாது. மூத்திரங் கட்டுப்பட வைத்திருந்து கழித்துவந்தவ னும் புணரலாகாது. எ-று. காண்க.

பிறனில்விழைதலின் விலக்கு.

"స్వదారనిరతస్సదా" என்று மேல்கூறிய மனுவுரையால் பிற னில்லாளைப் புணர்தலாகாதென்ற கருத்தாகின்றது. இதுவும் அங்கே கூறப்பட்டது. పరదారాన్నగచ్ఛేత్తు మనసాపికథంచన। పరదారరతిః పుంసా ముభయత్రాపిభీతిదా। ఇతిమత్వాస్వదారేషు ఋతుమత్సుబుధోవ్రజేత్"= பிற னொருவன் இல்லாளைமனத்தாலும் புணரலாகாது. பிறன்மனை யாளைப் புணர்தல் புருடர்க்கு இம்மை மறுமையிரண்டினும் அச் சத்தை விளைவிக்கின்றது,"என்பதுணர்ந்து அறிவையுடையோன் தன்மனைவி பூத்தநாளில் சுகத்தை யனுபவித்தல்வேண்டும். எ-று.

புணரலாகாதமாதர்.

வேறுமியவிலக்கத்தக்கார் குற்றங்களும் ஆண்டேகுறிப்பிக்க பட்டன. "నస్నాతాంతుస్త్రియంగచ్ఛే న్నాతురాంనరజస్వలాం। నానిష్టాంనప్రకుపితాం నప్రశస్తాంనరోగిణీం। నాదక్షిణాంనాన్యకామాం నాకామాంనాన్యయోషితం। క్షుత్క్షామాంనాతిభుక్తాం వాస్వయంచైతైర్గుణైర్యుతః। స్నాతస్సగ్గంధధృక్ప్రీతో వ్యవాయంపురుషోవ్రజేత్" = நீராடிக்கொண்டிருப்பவள், அன்றேபூத்து நீராடின வள், அச்சமும் அவசரமுமுடையவள். பூத்திருப்பவள், தனக்கு விருப்பமில்லாதவள், தன்னை விரும்பாதவள், வெகுளிகொண்ட வள், தன்னிலுயர்ந்த குலமுடையவள், நோயுடையவள், மிகத் தாழ்ந்தவள், அல்லது தகுதியற்றவள், அல்லது தாராளமான மனமில்லாதவள், வேறு ஒருவனிடத்தில் கருத்தை வைத்தவள், அல்லது இச்சையில்லாதவள், அந்நியன்மனைவி, பசியால்வருந்து வோள், மிகுமுண்டிதின்று இளைப்புற்றவள், இப்படிப்பட்டவர்க ளோடு புருடன் புணரலாகாது. தான் இக்குற்ற மில்லாதவனாய்க் குணமுடையவனா யிருந்து, நீராடி சந்தனம் பூ பூசிமுடித்து விருப்பமுள்ள மனமுடையவனாய் மாதரைப்புணர்தல் தக்கது. எ-று. காண்க.

மாதரிருதுவாகுங்காரணம்.

"ఋతుస్స్యాత్," என்று மேற்கூறிய மனுமொழி சுரௌதமாகிய விரதத்தை ஞாபகத்திற்குத் தருகின்றது. அதனைச் சுருதி கூறுகின்றது. శ్రుతిః॥ "స స్త్రీషంసాదముపాసీదదస్యై బ్రహ్మహత్యాయైతృతీయం ప్రతిగృహ్ణీతేతి తా అబ్రువన్వరంవృణామహా ఋత్వియాత్ప్రజాం విందామహై కామమావిజనితోస్సంభవామేతి తస్మాదృత్వియాత్స్త్రియః ప్రజాం విందంతే కామమావిజనితోస్సంభవంతి వారేవృతగ్ హ్యాసాం తృతీయం బ్రహ్మహత్యాయై ప్రత్యగృహ్ణంత్సామలవద్వాసా అభవత్" = இந்திரன் விச்சுவரூபன் என்னும் புரோகிதனைக் கொன்றதனால் வந்த பிரமகத்தியை அங்கையால் வாங்கி, ஒருவருடம் சுமந்திருந்து உலகிற் பழிப்புக் கஞ்சினவனாய் அந்தப் பிரமகத்தியை மூன்றாகப் பங்கிட்டு முதற்பாகத்தினை மண்ணுக்கும், இரண்டாம் பாகத்தினை மரங்களுக்கும், வரத்தினோடு கொடுத்து, மூன்றாவது பாகத்தைக் கொடுப்பதற்கு பெண்களிடத்திற்கு வந்தான். அந்தமாதர், இருது காலத்தில் புருடசையோகத்தால் சந்ததியை யடைதல் வேண்டும், பின்மகப்பேறு ஆகும் வரையிலும், இருது வாகாதகாலத்திலும் இச்சையுள்ளபடிஎல்லாம் புருடனோடு சேரவேண்டும். என்றுவரத்தினை இச்சித்துவேண்டிக் கொண்டார்கள். இந்திரனால் அந்தவரத்தினை யடைந்து, அப்பிரமகத்தியின் மூன்றாவது பாகத்தினைப்பெற்றுக் கொண்டார்கள். அந்தப்பாகமே இரஜஸ்வலையின் சோணிதம்= இரத்தவடிவமாயிற்று. அதுமுதல் மாதந்தோறும் பருவமுடைய பெண் மலத்தையுடைய ஆடை யுடையளாயினள். எ-று. காண்க.

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యః॥ "యథాకామీభవేద్వాపి స్త్రీణాంవరమనుస్మరన్।స్వదారనిరతశ్చైవస్త్రియోరక్ష్యాః యతస్స్మృతాః"=இந்திரன் மாதர்க்குக் கொடுத்திருக்கும் வரத்தினைஞாபகஞ் செய்துகொண்டு தன்னுடைய மனைவியைப் பிரியாதிருந்து, (எனவே, வேறுமாதரை விரும்பாது) அவளது காமத்தினைப்போலத் தானுங்காமமுடையவனாய் இருதுவல்லாத காலத்திலும் இருக்கலாம். ஏனெனில்? மாதர்காக்கப்படத்தக்கவராகவிருக்கின்றார்கள். எனவே, கணவன் தன் இச்சைப்படி யுடன்படத்தக்கவனாயும் வேறுமாதரை விரும்பாதவனாயும் இருந்தால் அந்தமாதுக்கு வியபசாரக்குற்றம் உண்டாகாதென்பது கருத்து. இது நியமவிதியாகவும் இருக்கின்றது. எ-று. காண்க.

பிரகற்பதி. బృహస్పతిః॥ "ఋతుకాలాభిగమనం పుంసాంకార్యంప్రయత్న తః। సదైవవాపర్వవర్జ్యం స్త్రీణామభిమతంహితత్"=கணவன் தன்மனைவியின் இருதுகாலத்தில் முயற்சியோடும் புணர்ச்சிசெய்ய வேண்டுவது. பருவகாலங்களை யொழிக்க வேண்டுவது. இருதுவல்லாத காலத்திலும் புணரலாம். அது மாதர்க்கு விருப்பமானதேயாம். எறு.

மாதர்புணர்ச்சியின்வேறுவிதி.

"ఋతుకాలాభిగమనం" என்றதற்குச் சிலர், மக்கள் பிறக்குந்துணையும் மனைவி யிருதுகாலங்களில் ஒருதலையாகப் புணர்தலே வேண்டும். புதல்வன் பிறந்தபின் அந்தநியமம் வேண்டுவதில்லை என்று கூறுகின்றனர். அங்ஙனம் பிரமாணமும் கூர்மபுராணம் கூறுகின்றது. కూర్మపురాణే॥ "ఋతుకాలాభిగామీస్యా ద్యావత్పుత్రోభిజాయతే" எப்போது புதல்வன் பிறப்பானோ அதுவரையிலும் இருதுகாலம் வந்தபோதெல்லாம்மனைவியோடுபுணரவேண்டுவது.எறு.காண்க.

புதல்வர்ப்பேற்றின்காரணம்.

பிதிரர்களின் கடனைக்கழிக்கும் பொருட்டன்றோ புதல்வனைப்பெறுவது. இங்ஙனம்வேதம் கூறுகின்றது. శ్రుతిః॥ "జాయమానోవై బ్రాహ్మణః స్త్రిభి ఋణవాజ్జాయతే బ్రహ్మచర్యేణర్షిభ్యో యజ్ఞేనదేవేభ్యః ప్రజయాపితృభ్యఏష వాఅనృణోయఃపుత్రీయజ్వా బ్రహ్మచారివాసీ" = வேதியன் பிறக்கும்போதே மூன்று கடனையுடையவனாகப் பிறக்கின்றான். அவற்றுள், பிரமசரிய விரதத்தால் முனிவர்கடனைத் தீர்த்தல் வேண்டும். வேள்வியால் தேவர்கடனை யொழித்தல்வேண்டும். மக்களைப்பெறுதலால் பிதிரர்கடனைத் தீர்த்தல்வேண்டும். புதல்வனைப்பெற்றவன், வேள்விசெய்தவன், பிரமசரிய முடையவன் யாரோ? அவனே கடனற்றவனாவன். எறு. காண்க.

மந்திரவருணம். మంత్రవర్ణః॥ "ఋణమస్మింత్సనయతి హ్యమృతత్వంచగచ్ఛతి। పితాపుత్రస్యజాతస్య పశ్యేచ్చేజ్జీవతోముఖం" = தந்தை தனக்குப் பிறந்து பிழைத்திருக்கும் மகன்முகத்தைப் பார்த்தால் பிதிரர்கடனையும் ஒழிக்கின்றான். முத்தியையும் அடைகின்றான். எறு.

பிதிரர்கடனொழிவுஎல்லையின்விதி.

அங்ஙனம், இக்கடன் தீர்த்தலாகிய விடயம் ஒரோபுதல்வனைப்பெறுதலானே யுண்டாகின்றது. அவ்வளவிலே மக்களையு

டையவனுதலின். அங்ஙனம் மனுவுங்கூறினர். మనుః॥ "జ్యేష్ఠేనజాతమాత్రేణ పుత్రీభవతిమానవః। పితౄణామనృణశ్చైవ సతస్మాత్సర్వమర్హతి। యస్మిన్నృణం సన్నయతియేనచానన్త్యమశ్నుతే। సఏవధర్మజఃపుత్రః కామజానితరాన్విదుః"=மூத்த மகன் பிறந்த அளவிற்றானே ஒருவன் மக்கட்பேறுடையவனுகின்றான். பிதிர்கடனையும் தீர்த்தவனுவன். அந்தத்தந்தையானவன் அம்மூத்த மகனுனே யெல்லாப் பயனையும் புகழையும் பெறத்தக்கவனுகவிருக்கின்றான். மூத்தமகனே பிதிர்கடனைச்செலுத்திவிடுகின்றான். அவனுனேபிதா எல்லாச்சுகத்தையும் அடைகின்றான். அவனேதருமத்தின் பொருட்டுப் பிறந்தமைந்தன். ஏனையர்களைக்காமத்தாற் பிறந்தவர்களாகப் பெரியர்கொள்வர் எ-று.

பலபுதல்வராதலைப்பற்றியது.

அற்றேல் பலமக்களைப் பெறுதல் வேண்டுமென்று சிலவிடங்களிற் சுருதிகூறுகின்றது. என்னை? శ్రుతిః॥ "ఇమాంత్వమింద్రమీఢ్వస్సుపుత్రాగ్ంసుభగాంకృణు। దశాస్యాంపుత్రానాధేహి పతిమేకాదశంకృధి"=இது மணமகன் இந்திரனைப்பிரார்த்திக்கும் மந்திரம். (இதன்பொருள்) இந்திரனே! நீர் என்னுல் துதிக்கப்பட்டவராய்த் தயவுசெய்து என்மனைவியாகிய இவளை நல்ல புதல்வரை யுடையவளாயும், நல்லபகம் (எனவே செல்வம், காமம், புகழ், முதலியன. அல்லது, நன்மங்கலத்தோடு கூடியிருக்கை) உடையவளாகவும் செய்க. இந்தமாதினிடத்துப் பத்துப்புதல்வரைத் தோற்றுவித்திடுக. பதினோராவதாவானைக் கணவனேயாக்குக. எ-று. காண்க.

சுருதி. శ్రుతిః॥ "క్రీడంతౌపుత్రైః" = இது சிராத்தஞ்செய்ததலைவனை, உண்டவேதியர் வாழ்த்தும் மந்திரம். (இ-ள்) தம்பதிகளே!! மக்களோடு ஆடுபவராகுக. எ-று.

இதுவுமது. "రయించపుత్రాంశ్చాదాత్" இது மணவினையில் மணமகன் கூறுமந்திரம் (இ-ள்) அக்கினி எனக்குப்பொருளினையும் மக்களையும் கொடுத்தார். எ-று.

இவ்வாறு வேதமொழிகளுள் பலபுதல்வரைப்பெறவேண்டுவதாக வுணர்த்துகின்ற தென்னெனில்? ஆம், உண்மையே. இது விதியன்று. பிறவெனின்? பலபுதல்வர் உண்டாயிருத்தல் நல்லதாக விருக்கின்றதென்னும் புகழ்ச்சி மொழியாக விருக்கின்றது.

ஆகலின், புதல்வனைப் பெறுதவனே மனைவியின் எல்லாஇருது காலங்களிலும் அவளோடு புணர்ந்து வரவேண்டும் என்பதுசிலர் மதம். இதனை வேறுசிலர் உடன்படுதலில்லை.

பலபுதல்வரைப்பெறுதலின்விதி.

ஆயின், புதல்வனையுடையவனுதலும், கடனற்றவனுதலும், ஒரு புதல்வனுனே யுண்டாகின்றதாமாயினும், பலபுதல்வரும் வேண்டுமென்று எண்ணுவதற்கும் விதிமொழியுள்ளது. சுருதி. శ్రుతిః॥ "ఏవముత్పాద్యగామినం తస్మాన్నమత్వమేకోఽసీ తిహకౌషీతకిః పుత్రమువాచరశ్మీంస్త్వంప ర్యావర్తయబహవో వై తేభవిష్యంతి ॥ ఇతిసామవేదే" = கௌஷீதகி என்ற இருடிதான் சூரியமண்டலம் ஒன்றனையே உபாசனைசெய்து சாமகானஞ்செய்து, அந்தக்கருமத்தின் பயனுக வொருபுதல்வனைப் பெற்று, அவனேடு, நான் இந்தச்சூரியன் ஒருவனையே தியானித்துச் சாமகானஞ்செய்தேன் அந்தப்பிழையால் எனக்கு நீயொரு மகனேபிறந்தாய். (ஒரோபுதல்வ னுண்டாயிருப்பது சிறந்ததல்ல வென்பது கருத்து) ஆதலால் நீபலபுதல்வருண்டாம் பொருட்டு உபாசனைக் காலங்களில் கிரணங்களைமாற்றி மாற்றித் தியானிப்பாயாக அதனுல் உனக்குப்பலபுதல்வர் உண்டாவர். எறு. காண்க.

ஒற்றைப்புதல்வன்புதல்வனல்லன்என்பது.

மஹாபாரதம். మహాభారతే॥ "అపత్యంచమమైవైకం కులేమహతిభారత। అపుత్రతైకపుత్రత్వ మిత్యాహుర్ధర్మవాదినః। చక్షురేకంచపుత్రశ్చ అస్తినాస్తిచభారత। చక్షుర్నాశేతనోర్నాశః పుత్రనాశేకులక్షయః। అనిత్యతాంచమర్త్యానాం మత్వాశోచామిపుత్రక। సంతానస్యావినాశంతు కామయేభద్రమస్తువః" = இப்பெருத்த குலத்தில் எனக்கு ஒரோபுதல்வனுள்ளான். ஒரோபுதல்வனிருப்பது மக்களில்லாமையே போலுமென்று தருமவாதிகள் கூறுகின்றனர். ஒற்றைக்கண்ணும்ஒருமகனும் இருந்ததுமன்று இல்லாததுமன்று. அக்கண்ணெழிந்தால் தேகம்போனுற்போலும், அப்புதல்வனெழிந்தாற் குலமேபோனது போலுமாமென்று, உணர்ந்து துன்பப்படுகின்றேன். மகனே!! சந்ததியழியாம லிருக்கும்படிவேண்டுகின்றேன். உனக்கு நன்மையேயுண்டாகுக. எறு. காண்க.

மக்களாற்கடனில்லாமை.

அற்றேல், மூத்தமகனெருவனுனே பிதிரர்கடன் ஒழிந்துபோக; வேறேமக்களைப்பெறுதல் பயன் அற்றது எனில்? அற்

றன்று. மக்களனைவரும் கடனின்றி யிருப்பதற்குக் காரணர்களாக விருக்கின்றனர். எங்ஙனமெனில்? புதல்வன் பிறந்தவுதனுனே தந்தைக்குக்கடனொழி வுண்டாதலில்லை யன்றோ? பிறவெனின், நன்ருக உபதேசிக்கப்பட்டுத் திருத்தமுற்று, அப்புதல்வன், நூலுடம்பாடாகியநல்லொழுக்கத்தில்நடந்தபின்பே தந்தைக்குக்கடன் முற்றும் ஒழிகின்றது.

புதல்வனைநல்வழியிற்றிருத்தலின்விதி.

அதனுலே வாஜசநேய பிரமாணம் = சுக்கில யஜுர் வேதத்துள் புத்திரனைத் திருத்த வேண்டு மென்னும் விதி விதிக்கப்பட்டது. వాజసనేయశ్రుతిః॥ "తస్మాత్పుత్రమనుశిష్టం లోక్యమాహు స్తస్మాదేనమనుశాసతి యదనేన కించిదక్ష్ణయాకృతం భవతి తస్మాదేనం సర్వస్మాత్పుత్రో ముఞ్చతి తస్మాత్పుత్రో నామ స పుత్రేణైవాస్మిన్లోకే ప్రతితిష్ఠతి" = "சம்பிரதிபத்தி" என்னும்] கருமம் ஒன்று விதிதுள்ளது. எப்போது, தந்தைக்கு மரணசமயம் நேரிடுகின்றதோ? அப்போது, புதல்வனையழைத்து வேதமோதலிலும், வேள்வியிலும், உலகமுயற்சியிலும், எதுஎது செய்யத்தக்கதாக வுள்ளதோ? அவற்றையெல்லாம் தெரிவித்து, அவன் சுதந்தரத்தில் கொடுத்துவிடவேண்டும். அதற்குச் சிறிது மந்திரவிதியும்உள்ளது.இதுவேசம்பிரதிபத்திஎன்னும்கருமமாம். அந்தச்சம்பிரதிபத்தியென்னும் கருமத்திற்குத்தந்தையால் திருத்தப்பட்டவன் யாரோ? அவனே அதிகாரி = தகுதியுடையவனுன புத்திரனும். ஆதலால், அவ்வாறு திருத்தப்பட்ட மகனையே மறுமையில் இன்பஞ்செய்யும் மகனுகப் பெரியோர் கூறுவர். அதனுனே தந்தை மக்களுக்கு சிக்ஷைவடிவாகிய கட்டளைகளைச் செய்வர். அங்ஙனம், கட்டளையிடப்பெற்ற மகன்தன்தந்தையால் நூலுடன் பாடான கருமம் யாதாயினும் சிறிதுமாறுகச் செய்யப்பட்டிருந்தால், அப்பாவத்தில் நின்றும் தான் நூலுடன்பாட்டுக் கருமம் நன்ருகச் செய்பவனுயிருத்தலால், தப்புவிக்கின்றுன். ஆக, புத்து என்னும் பெயரையுடைய நரகத்தி னின்றும் பயமுண்டாகாதபடி தந்தையைக் காப்பவன் ஆதலின், அம்மகன் புத்திரன் என்னும் பெயர் உடையவனுய் விளங்குகின்றுன். அந்தத்தந்தையும், தாவிறந்தாலும் மகன்வடிவாகிய தன்னுடம்பினுனே இவ்வுலகத்து நால்நெறியைக் கடவாமல் கரு

மங்களைச்செய்து கொண்டிருக்கின்றான். எ-று. "தம்பொருளென் பதம்மக்களவர்பொரு டந்தம்வினையான்வரும்." எனவும் "தந் தைமகற்காற்றுநன்றி யவையத்து முந்தியிருப்பச்செயல்." என வும்வரும்தேவர்குறளும், "சிதலைதினப்பட்ட வாலமரத்தை,மதலை யாய்மற்றதன்வீழூன்றி யாங்குக், குதலைமைதந்தைக் கட்டோன் றிற்றான்பெற்ற, புதல்வன் மறைப்பக்கெடும். எனவும், "செந் நெல்லாலாய செழுமுளைமற்றுமச், செந்நெல்லேயாகி விளைதலா லந்நெல், வயனிறையக் காய்க்கும் வளவயலூர, மகனறிவு தந் தையறிவு." எனவும்வருநாலடியுமிக்கருத்தினவே எனக்கொள்க.

இங்ஙனமாகப் பலபேர் நடுவேதான் கட்டளையிட்டபடி நிறைவேற்றுதற்கு அறிவு சாலாமை முதலிய தடைமிகவுண் டாதலின் யாரோனு மொரு புதல்வனுக்கு அவ்வாறு கிடைக் கின்றது. பலபேர்க்கு விதித்தால் அவ்வாறு சரியாக நடப்பது, யாரோனு மொருவனுக்கே அன்றி அனைவர்க்கு முண்டாவது அரிது. அதனால், மூத்தோனேயாயினும் இளையோனேயாயினும் யார் அவ்வாறு நடக்கின்றனனோ? அவனே தந்தைக்குக் கடனில் லாமற் போவதற்குக் காரணமானவன். அதனானே புராணத் தினும் கூறப்பட்டது. పురాణే ॥ "ఏష్టవ్యాబహవఃపుత్రాయద్యేకోపిగయాం వ్రజేత్"=பலபேர் புதவல்வர்கள் வேண்டுமென்று நினைத்தல் வேண்டும். ஒருவனாயினும் "கயை" என்னும் தலத்திற்குச் சென்று பிதிரர் கடன்செய்வன். எ-று. "దశాస్యాంపుత్రానాధేహి" என்றது முதலிய மந்திரங்களும் பலபுதல்வர் உண்டாகவேண் டும் என்னும் விதியை வலியுறுத்தல் செய்கின்றது. "కామజాని తరాన్" என்று மேற்கூறப்பட்டமொழி, தந்தையால் விதிக்கப் படாமலிருக்கும் தகுதியற்ற புதல்வனைப்பற்றிக் கூறியது. ஆத லின், புதல்வன் பிறந்தபின்பும் மனையாளுக்கு இருதுகாலம் வந்த போதெல்லாம் அவளுடன் புணரவேண்டுமென்பதே துணிவு.

மனைவியர்பலராய்அவரனைவர்க்குமிருதுஒத்தவழி.

பலமனைவியர்க்கும் ஒரேகாலத்தில் பூப்புண்டாயின் செய் வகையைத்தேவலர்கூறினர். దేవలః॥ యుగపదృతుతీర్థానాం విప్రాదిక్రమశో వ్రజేత్ । రక్షణార్థమపుత్రాంవా గ్రహణక్రమశోపివా." ஈண்டு, "తీర్థ=தீர்த்தம் என்பது இருதுகாலம். அதுபலவாக ஒரே காலத்தி னேர்ந்தால்

வேறு சாதி மனைவியர்களைச் சாதி முறைமையைப்பற்றி புணர வேண்டுவது. தன்சாதி மாதர்களிடத்து மணத்தின் முறைமை யைப்பற்றிச் சேரவேண்டும். அவருள், ஒருத்திமக்களற்றவளும் மற்றொருத்தி மக்களை யுடையவளுமாயிருந்தால், இல்லாதவ ளோடு முதலிற் புணரவேண்டுவது. எ-று. காண்க.

சாதிவேறுபாட்டாலிருதுவிற்புணர்ச்சிநாள்.

இருதுகாலத்திலும் சாதிபேதத்தால் புணர்ச்சிக்குத் தக்க காலம் குறைக்கப்பட்டதனைத் தேவலர்கூறினர். దేవలః ॥ "బ్రాహ్మణ్యా ద్వాదశాహం స్యాత్ క్షత్రియాయా దశాహం । ఏతాన్ స్మృత్యృతూనాం విధియం తేనుష్ఠా నతః" — அந்தணமாதினுக்குப் பன்னிருநாள் கருத்தரிக்குங் கால மென்று வேதங்கூறிற்று. ஏனையர்க்குச் சாதி முறையைப்பற்றி பத்து, எட்டு, ஆறு, நாள்கள் முறையாக விதிக்கப்படுகின்றது. எ-று. இங்குவேதியமாதாயின் முதல் நான்குநாளாகாது. அரச மாதாயின் ஆறுநாளாகாது. வைசிய வைசியமாதாயின் எட்டு நாளாகாது. சூத்திரமாதாயின் பத்துநாளாகாது. என்று, பிரம கத்திக் கலப்பின் ஏற்றக்குறைவுபற்றிக் கூறப்பட்டதாகக்கருத்து.

பூத்தநாலாநாட்புணர்ச்சி.

பூத்தநாலாநாள் மனைவியோடுபுணர்வது, விகற்பமாகவேயி ருக்கின்றது. என்னை? ஹாரீதர் விதித்தனர். வியாசர் விலக்கினர். ஆதலின். ஹாரீதர். హారీతః ॥ "చతుర్థేహని స్నాతాయాం యుగ్మాసు గర్భాధానం" நான்காவதுநாள் இருது ஸ்நாநம் செய்தபின், இரட்டை நாள் இரவில் கருப்பாதானம் விதிக்கப்படுகின்றது.

வியாசர். వ్యాసః ॥ "చతుర్థేహని గర్భస్స్యాత్ సోల్పాయుషః ప్రసూయతే" அப்பூத்தமாதினை நான்காவதுநாளிற் புணரலாகாது. புணர்ந்த வன் அற்பாயுளுள்ள பிள்ளைகளைப் பெறுகின்றான்.

இவ்விகற்பத்தின் முடிவுஎங்ஙனமாமெனின்? "உதிதானுதித" ஹோமம்போல அமைத்துக் கொள்ளவேண்டும். எனவே, நான் காநாள் இரஜசுவின் சேடமின்றிமுற்றும் நின்றுவிட்டால் புணர லாம். இல்லையேல், புணர்ச்சிகூடாது.

இக்கருத்தினை மனுவுங்கூறினர். "రజస్యుపరతేసాధ్వీస్నానేనస్త్రీ రజస్వలా" = இராஜசுவலையினையுடையமாது, சோணித முண்டாவதுநின்றால், நீராடலால் அநுகூலித்தவளாவாள். எனவே, கருப்பாதானமுதலிய செய்யத்தக்க கருமங்கட்குத் தக்கவளாவள் என்பது. நீராடலாற்றூனே யுதவாள். எறு. காண்க.

புணருநாட்பயன்.

நாள் வேறுபாட்டால் புணர்ச்சியில் பயன்வேறுபடுதலை, இலிங்கபுராணத்துட்கூறப்பட்டது. లింగపురాణే ॥ చతుర్థేసానగమ్యాహ్ని గంతాల్పాయుశ్ప్రజాయతే । విద్యాహీనంవ్రతభ్రష్టంపతితంపారదారికం। దారిద్ర్యార్ణవమగ్నంచ తనయంవాప్రసూయతే । కన్యార్థినైవగంతవ్యా పంచమ్యాంవిధివత్పునః । షష్ఠ్యాంగమ్యామహాభాగ సుపుత్రజననీభవేత్ । సప్తమ్యాంచైవకన్యార్థీగచ్ఛేత్తైవప్రసూయతే । అష్టమ్యాంసర్వసంపన్నంతనయంసంప్రసూయతే । నవమ్యాందారికార్థంస్యాద్దశమ్యాపండితంతథా । ఏకాదశ్యాంతథానారీంజనయత్యేవపూర్వవత్ । ద్వాదశ్యాంధర్మతత్త్వజ్ఞంశ్రౌతస్మార్తప్రవర్తకం। త్రయోదశ్యాంతథానారీంవర్ణసంకరకారిణీం। జనయత్యంగనాంయస్మాన్నగచ్ఛేత్సర్వయత్నతః । చతుర్దశ్యాంయదాగచ్ఛేత్సుపుత్రజననీభవేత్ । పంచదశ్యాంచధర్మజ్ఞం షోడశ్యాంజ్ఞానసాగరం" = தன் மனைவிபூத்த நாலாவது நாள் அவளைத் தான் புணரலாகாது. செய்தால் தான் அற்பாயுளுடையவனவன். கல்வியில்லாதவன், விரதங்கெட்டவன், சாதித்தொழில் ஒழுக்கம் கெட்டவன், பிறன் மனையாளைப் புணரும் பாவஞ்செய்பவன், வறுமைக்கடலில் முழுகினவன் முதலியவராகும்மக்களைப்பெறுவன், நல்ல புதல்வியைப் பெறவேண்டுமென்னும் எண்ணமுடையவன், ஐந்தாநாளிரவில் விதிப்படி புணரவேண்டும். ஆறாநாளிரவுஆயின், நல்ல புதல்வருண்டாம். ஏழாளிரவாயின் பெண்பிறக்க வேண்டுமென்னும் எண்ணத்தோடு புணர்ந்தாலதுவேயுண்டாம். எட்டாநாளிரவிலாயின், எல்லாம் நிரம்பிய புதல்வனைப் பெறுகின்றான். ஒன்பதாநா ளிரவாயின் பெண்பிறக்கும். பத்தாநாளிரவாயின் புலவனானமகன் பிறப்பன். பதினோராநாளிரவில் புலமையையுடையவளைப் பெறுவன். பனிரண்டாநாளிரவில் எல்லாத்தருமங்களின் உண்மையையுமுணர்ந்து, சுரௌதஸ்மார்த்த கருமங்களை வழுவாது நடத்து மைந்தனைப்பெறுவன். பதின்மூன்றாநா ளிரவாயின் சாதி சங்கரம்= சாதிகெடுதியைச்செய்யும் பெண்ணைப் பெறுவனாதலின், எந்த

முயற்சியாயினுஞ்செய்து அன்றிரவு மனைவியோடு புணரலாகாது. பதினொன்காநாளிரவேல், மாதுருபத்தியுடைய நல்ல மதலைபிறப்பன். பதினேந்தாநாளிரவில் தருமமுணர்ந்த மகளைப்பெறுவன். பதினாறுநாளிரவில், முற்றறிவனான தநயனைப் பெறுவன். எ-று. காண்க. "నిందితైకాదశీ" என்று மனுவால் பதினோராநாளிரவு விலக்கப்பட்டது. அதற்குக்காரணம். "మందపుత్రమధర్మజ్ఞం" என்று இலிங்கபுராணத்துட் கூறப்பட்டது. இதனால் மிக அறிவுள்ள மகன் பிறக்கலாகாதென்பது மனுவின் கருத்தாகத் தோன்றுகின்றது.

ருதுநாளினும் புணரலாகாதவிலக்கு.

இருதுநாளிற் புணர்ச்சி செய்யாவிட்டால் எந்தக்குற்றம் கூறப்பட்டதோ அதற்கு ஒழிபை வியாசர் கூறினர். "వ్యాధితో బంధనస్థో వా ప్రవాసేష్వథ పర్వసు । ఋతుకాలేపి నారీణాం భ్రూణహత్యాం ప్రముచ్యతే । వృద్ధాం వంధ్యామవృత్తాం చ వర్జయన్ముచ్యతే భయాత్" = நோயாளனும், சிறையலிருப்பவனும், அந்நியநாட்டின்கணுள்ளவனுமானாலும் பருவநாளாகவிருந்தாலும், மனையாளுக்கு இருதுகாலமானாலும்புணராதொழிந்த அந்தப்புருடன் கருவைக்கெடுத்த பாவத்தினாற் பிடிக்கப்படாதவனாகின்றான். அன்றியும், வயதுதளர்ந்தவள், மலடி, ஒழுக்கங்கெட்டவள், சாப்பிள்ளை பெறுபவள், பூப்பற்றவள், பூவாமலேயிருப்பவள், பலமக்களைப் பெற்றவள் முதலியராகிய மனைவியரைப் புணராதொழிந்த தலைவன் அச்சத்தினின்றும் விடப்படுகின்றான். எ-று. எனவே புணராதகுற்றமில்லையென்பது.

மேற்கூறிய வகையாகத் தக்க காரணமிருந்தால் இருதுகாலத்தில் புணர்ச்சி ஒருதலையாகச் செய்யத் தக்கதல்ல. அக்காரணங்களில்லாவிட்டால் புணர்ச்சி ஒருதலையாகவே செய்தல் வேண்டும். எங்ஙனமாயினும் எல்லாவகையாலும் மனைவிக்குக் காமக்குற்றம் வாராதபடி அவளைக் காக்கவேண்டுவது.

மாதரின் மதிப்பு.

மனு. మనుః ॥ పితృభిర్భ్రాతృభిశ్చైతాః పతిభిర్దేవరైస్తథా । పూజ్యాభూషయితవ్యాశ్చబహుకల్యాణమీప్సుభిః । యత్రనార్యస్తుపూజ్యంతె రమంతేతత్రదేవతాః । యత్రైతాస్తునపూజ్యంతె సర్వాస్తత్రాఫలాఃక్రియాః । శోచంతిజామయోయత్ర వినశ్య

త్యాశుతత్కులం । నశోచంతితుయత్రైతా వర్ధతేతద్ధిసర్వదా । జామయోయానిగేహాని శపంత్యప్రతిపూజితాః । తానికృత్యాహతానీవవినశ్యంతిసమంతతః । తస్మాదేతాస్సదాపూజ్యా భూషణాచ్ఛాదనాశనైః । భూతికామైర్నరైర్నిత్యం సత్కారేషూత్సవేషుచ" = தந்தையராலும், உடன்பிறந்தார்களாலும், கணவராலும், மைத்துனர்களாலும், அவர்கள் நன்மையை விரும்புவோர்களாயிருந்தால் மாதர் உபசரிக்கத் தக்கவராகவும், அணிசெய்யத்தக்கவராகவும் இருக்கின்றார்கள். (எனவே, மணம்புரியுங்காலத்தில் மணமகன் ஆபரணங்களையணிவதேசாலாது. கன்னிகையின் தந்தை முதலியோரும் அப்போதும் பின்னும், உண்டி முதலியவற்றாலுபசரித்து ஆடையணி முதலியவற்றாலுங் கன்னிகையை உபசரிக்கவேண்டுவது. இங்ஙனம் பெண்மகளையுபசரிப்பவர்க்குச் செல்வமுண்டா மென்பதுகருத்து). எந்தக்குலத்தில் தந்தை முதலியோர் புதல்வியர் முதலிய மாதரை உபசரிக்கின்றார்களோ? அக்குலத்தில் தெய்வவருளுண்டாம் எந்தக்குடியில் மாதர் உபசரிக்கப்படமாட்டாரோ? அந்தக்குடியில் தெய்வ அருளில்லாமையால் வேள்விமுதலிய கிரியைகள் எல்லாம் வீணாகின்றன என்று இழிவுரை கூறப்பட்டது. எந்தமரபில் "జ్యామి" என்ற மாதர்கள் துன்பப்படுகின்றார்களோ அந்தமரபு விரைவில் கெடுகின்றது. அவர்கள், எங்கேதுக்கமடையமாட்டார்களோ? அங்கே பொருள் முதலிய செல்வம் எப்போதும் விருத்தியாகின்றது. "ஜியாமி" என்ற மாதர் உபசரிக்கப்படாதவர்களாய் எந்த மனையை வைகின்றார்களோ? அந்த மனை மந்திரவாதியர்களால் சூனியஞ் செய்யப்பட்டதுபோல முற்றும் அழிந்துவிடுகின்றது. ஆதலின். செல்வத்தை விரும்புவோர், எல்லா உபசாரகாலத்திலும், பெருநாள்களிலும், ஜியாமி என்னும் பெண்களை, உண்டி, ஆடை, ஆபரணங்களால் உபசரித்துக் களிக்கச்செய்யவேண்டும். எறு. காண்க. (ஜியாமியென்பது,) அண்ணன் தம்பி முதலியோர் எனச் சிலர் கூறினர். தமக்கை தங்கை எனச். சிலர் கூறுவர் என்பது மாதவர் எழுதினது. புதிதாக மணஞ்செய்யப்பட்ட பெண், மகள், மருமகள் முதலியவர் என்று, மேதாதிதி என்ற வுரையாசிரியரும், கோவிந்தராயர் என்னும் உரையாசிரியரும்எழுதினர். குல்லூகபட்டர்செய்த மனுவர்த்த முத்தாவளி என்னும் உரையால், மனைத்தலைவனுல் விருத்தி யடைவிக்கத்தக்க மாதர்.

எனவே தமக்கை தங்கை, அடுத்த ஒத்த பிண்ட ஞாதியர்பெற்ற மாதர், மனைவி, மகள், மருமகள், முதலியவர் என்று குறிக் கப்பட்டது. நிகண்டுகளில். "జామిస్స్వసృకులస్త్రియోః" = உடன் பிறந்தமாது, குலமகள் இவ்விருவர்க்கும் ஜியாமி என்னும்பெய ருள்ளதென்று கூறப்பட்டது. ஆகவே எத்திறத்தும் தன்குலத் திற் பிறந்தமாது, தன்குலத்தில் வந்துசேர்ந்த மாது என்னு மிவர்கள் ஜியாமி என்ற மொழிக்குப் பொருளாவ ரென்பது கருத்து.)

தலைவன் தலைவி யொருமை.

மனு. మనుః ॥ "సంతుష్టో భార్యయాభర్తా భర్త్రాభార్యాతథైవచ। యస్మిన్నేవకులేనిత్యం కల్యాణంతత్రవైధ్రువం" = மனைவியால் கணவன் களிப்பினை யடைந்தவனும், மனைவியும் கணவனால் களிப்பினை யடைந்த வளாயும் எப்போதும் எக்குலத்தி லிருப்பாரோ? அக்குலத் தில் மங்கலமுண்டாகும். இதுயாவரு மறிந்தபடி தவறாதது. எ-று. காண்க.

மாதரை உபசரிக்கவேண்டும் என்ற மொழி, கெட்ட ஒழுக்க மில்லாத மாதரைக் குறித்ததென்றுணர்க. தீயொழுக்கமுடைய மாதர்க்கு உயிரோடு சிவிக்கும் அளவான உண்டி ஆடைகொடுக்க வேண்டும்.

ஒழுக்கங்கெட்ட மாதரை நடத்தும்விதி.

யாஞ்ஞவற்கியர் கூறுகின்றார். యాజ్ఞవల్క్యః ॥ "హృతాధికారాంమలినాం పిండమాత్రోపజీవినీం। పరిభూతామధశ్శయ్యాంవాసయేద్వ్యభిచారిణీం" = எந்தமாதுவியபிசாரஞ் செய்கின்றாளோ? அவளை மனைக் கண்ணே ஏவலர்முதலிய யார்மேலும் அதிகாரமற்றவளாயும், எண்ணெய் முழுக்கு, மை, நல்லஆடை, ஆபரணம் இல்லாதவளாயும், உயிர்தரிப்பதற்குப் போதுமான ஆகாரத்திற்கு உரியவளாயும், இழிவுரைகளா லிழித்துக் கூறப்பட்டவளாயும், நிலத்தின்மேற் படுத்துக் கிடப்பவளாயும், செய்துவைத்துத் தன்மனையிற்றானே வேறுவைத்திருக்க வேண்டுவது. இந்தத்தண்டனை யவளுக்குவை ராகம் உண்டாம் பொருட்டேயன்றி சுத்தத்தின் பொருட்டன்று அதற்குவேறு பிராயச்சித்தம் கூறப்பட்டது. எ-று. காண்க.

மறுமணம்புணர்ந்தவன்முன்னையவளைப்பற்றி.

மணம்புரியப்பட்ட கற்புடைமனைவி யெவ்வாறு காக்கப் படுவளோ? அவ்வாறேதன்னின் வேறொருத்தியை மணம்புரியும் படி செய்துகொண்ட முதல்மனைவியும் பாது காக்கப்படுவள். என யாஞ்ஞவற்கியரோ கூறினர். యాజ్ఞవల్క్యః॥ "అధివిన్నాపిభర్తవ్యా మహాదేనోన్యథాభవేత్" = அதிவேதனம் = வேறொருத்தியை மணம் புணர்வது. அதற்குக்காரணமான குற்றமுடைய முதல் மனைவி அதிவிந்நை எனப்படுவள். அவளையும், உணவாடைகளாற் பாது காவாது விடலாகாது. விட்டாற் பெரும்பாவமாம். எ-று.

புருடன் இரண்டாவது ஒருத்தியை மணம் புணர்வதற்கு ஏதுவாகிய குற்றம் யாஞ்ஞவற்கியரானே கூறப்பட்டது. యాజ్ఞవల్క్యః॥ "సురాపీవ్యాధితాధూర్తావంధ్యార్థఘ్న్యప్రియంవదా । స్త్రీప్రసూశ్చాధివేత్తవ్యా పురుషద్వేషిణీతథా" = கள்குடிப்பவள், தீராநோ யுடையவள், தூர்த்தை = எது கூறினும் ஒவ்வாதவள், மலடி, பொருளையழிப் பவள், அன்புஇன்றி நிட்டூரமொழி கூறுவோள், பெண்மக்களை யேபெறுவோள், கணவனுக்கு எல்லாத்தொழிலாலும் துன்பமே விளைப்பவள், இங்ஙனம் முதல் மனையாளிருந்தால் கணவன்மறு மணம்புரியலாம். எ-று. கள்குடிப்பது மறுமணம் புரிவதொன் றற்கே காரணம்அன்று. விட் டொழிப்பதற்கும் ஏதுவாம். "త ఘాంమహాపాతకే" = மஹா பாதகஞ்செய்தால் அவளை யொழித்தே விடவேண்டும் என்று கூறப்பட்டது. "స్త్రియోర్థంహిశరీరస్యయస్యభార్యా సురాంపిబేత్" = யாருடைய மனைவிகள் குடிப்பளோ? அவன்அவளை யொழித்து விடுவதே யன்றித் தன்னுடம்பின் பாதுகாப்பின் பொருட்டுமறுமணமும் புரிதல்வேண்டும். ஆனால், விலக்கப்பட்ட முதல்மனைவியை உண்டியாடையால் பாதுகாத்தல் வேண்டும்.

அதனானே மனுவுங்கூறினர். మనుః॥ "మద్యపాసప్రవృత్తాచ ప్రతికూలా చయాభవేత్ । వ్యాధితాచాధివేత్తవ్యా హింస్రార్థఘ్నీచసర్వదా" = கட்குடிசெய்பவள், தன்னுமைமறுத்து நடப்பவள், தீராநோயுடையவள், பிறரைத் துன்பஞ்செய்யும் இயற்கையை யுடையவள், பயனைக்கெடுப்பவள், பொருளையழிப்பவளுமாக மனைவியிருந்தால் அவளைத் தண்டிக்கும்பொருட்டுச் சக்களத்தியுண்டாம்படி கணவன் வேறொருத்தியை மணம்புரியலாம். எ-று.

முதல்மனைவியைவிலக்கும்வகை.

பிரம புராணத்துள்ளும் கூறப்பட்டது, బ్రహ్మపురాణే ॥ "ధర్మ విఘ్నకరీంభార్యాం వ్యభిచారిణిరోగిణీం । త్యజేద్ధర్మస్యరక్షార్థం కటుకాంచాప్రియవాదినీం । న త్యజేదధివేదేత నభోగం నవివర్జయేత్" — தருமத்திற்கு இடையூறு செய்பவள், கற்பில்லாதவள், பிருநோயுடையவள், கடுமொழியுடையவள், இப்படிப்பட்ட மனைவியைத் தருமத்தினைக் காத்தற்பொருட்டு விட்டுவிடவேண்டுவது. ஆயின்முற்று மொழிக்கலாகாது. அவளைவிட்டு வேறு ஒருத்தியை மணம்புரிந்து, முதல் மனைவிக்கு உண்டி யாடைகொடுத்தல்வேண்டும். வியபசாரம், கட்குடியில்லையாயின் போகத்தையும் விடலாகாது. எறு. காண்க.

மறுமணத்திற்குக்காலவெல்லை.

ஒருமனைவிக்கு மேல் வேறொருத்தியை மணம்புரிவதற்கு முதல் மனைவியினிடத்தில் காணப்பட்ட குற்றத்தைச் சிலநாள் சோதிக்க வேண்டுமென்று எல்லையை மனுகூறினர். మనుః ॥ "వంధ్యాష్టమేధివేద్యాబ్దే దశమేతుమృతప్రజా । ఏకాదశేస్త్రీజననీ సద్యస్త్వప్రియవాదినీ"= மலடியை ஏழுவருடம்வரையில் பார்த்து எட்டாம்வருடத்திலும், சாப்பிள்ளை பெறுபவளை ஒன்பதுவருடம் சோதித்துப் பத்தாமாண்டிலும், பெண்களையே பெறுபவளைப் பத்தியாண்டு நோக்கிப் பதினோராமாண்டிலும், கடுமொழிகூறி வாது செய்பவளையுடனேயும் விட்டொழித்து வேறு ஒருத்தியை மணம் செய்ய வேண்டும்.

மறுமணத்திற்குமுதல்மனைவியுடன்பாடு.

முதல்மனைவிதனக்குஇதமானவளாயிருந்தால்இரண்டாவது மணம்புணருங்கால்முதல்மனைவியையுடன்படுத்திஅவ்வுடன்பாடு பெறவேண்டும். மனு. మనుః ॥ "యారోగిణీస్యాత్తుహితాసంపన్నాచైవశీలతః। సానుజ్ఞాప్యాధివేత్తవ్యా నావమాన్యాచకర్హిచిత్" — எவள் தீரா நோயுடையவளாவளோ? அவள் தனக்கு இதமானவளும் நல்ல இயற்கையிற் குறைவற்றவளுமா யிருந்தபக்ஷத்தில் கணவன் அவள் சம்மதத்தினைப்பெற்றுப் பின்பே வேறொருத்தியை மணம்புணரலாமன்றி முதல்மனைவியை எவ்வகையாலும் அவமானஞ்செய்யலாகாது. எறு. காண்க.

மனைவி யிருக்கும்போது வேறுஒருத்தியை மணம்புரிவது இருவகைப்படும். அவற்றுள் ஒன்று தருமத்தின்பொருட்டு. மற்றொன்றுகாமத்தின் பொருட்டு. மக்களைப்பெறுதற் பொருட்டு முதலிய தருமப்பொருட்டு மறுமணம் புணர்வதாயின் முதல் மனைவிக்கு மேற்கூறிய குற்றங்களுண்டா யிருத்தல் வேண்டும். குற்றமில்லாவழி கூடாது. காம விச்சையாலாயின் முதல்மனைவிக்குமேற்கூறிய குற்றமிருக்க வேண்டுவதில்லை. ஆனால் முதல் மனைவி இரண்டாவது மனைவிக்குச் சரியாகக்களிப்புறவைத்தல் வேண்டும். அங்ஙனம் வேறுமிருதிகளிற் கூறப்பட்டது. స్మృత్యంతరే ॥ "ఏకాముత్క్రమ్య కామార్థ మన్యాం లబ్ధుం య ఇచ్ఛతి । సమర్థస్తోషయిత్వార్థైః పూర్వోఢామపరాం వహేత్" ஒருமனைவிக்கு அதிகமாக காமத்தின் பொருட்டுவேறொருத்தியைச் செய்துகொள்வதற்கு யார்விரும்புகின்றானோ? அவன்முதலில் மணம்புணரப் பட்டவளை மகிழ்ச் செய்விக்கவல்லவனானால் மற்றொருத்தியையும் மணம்புணரலாம் என்று. காண்க.

மனைவி சீவன விடயம்.

ஒருவன்மனைவிக்குக் களிப்பைத்தரத்தக்க சீவனத்தைத்தானாகக்கொடாதவனானால் அரசன்அவனால் கொடுப்பிக்க வேண்டுவது. அதனை யாஞ்ஞவற்கியர் கூறினர். యాజ్ఞవల్క్యః ॥ "ఆజ్ఞాసంపాదినీం దక్షాం వీరసూం ప్రియవాదినీం । త్యజన్దాప్యస్తృతీయాంశమద్రవ్యో భరణం స్త్రియాః కணவனாணைப்படி யொழுகுபவளும், பணிவிடைகளில் மிகுவல்லவளும், ஆண்மக்களைப் பெற்றவளும், தரும கருமங்களுக்குத் துணையா யிருப்பவளும், இன்மொழி கூறுபவளுமாகிய மனைவியைவிடுவானானால் அந்தமாதுக்குஅவன்பொருளுள்மூன்றிலொருபங்கு கொடுப்பிக்கவேண்டும், அவன்பொருளில்லாதவனானால் உண்டியாடை முதலிய போஷணை கொடுப்பிக்க வேண்டுவது. என்று. காண்க.

மூத்தமனைவிவெளிப்பாடுபற்றி.

மூத்தமனைவி பொருளான்மகிழ்ச்சி யடையாதவளாயினும், மற்று எவ்விதத்தாலாயினும் மனையைவிட்டு வெளிப்போவதைப்பற்றி மனுகூறினர். మనుః ॥ అధివిన్నాతు యా నారీ నిర్గచ్ఛేద్రుషితాగృ

షేత్ । సాసద్యస్సన్నిరోద్ధవ్యా త్యాజ్యావాకులసన్నిధౌ" = கணவன்மற்றொருத்தியைமறுமணம் புரிந்தபின் மூத்தமனைவி பகைகொண்டவளாய் மனையிலிருந்து வெளிப்பட்டுப் போகும்குறிப்பு அறிந்தவுடனே வெளிப்போக வொட்டாது தடைசெய்து வைத்தல்வேண்டும். அல்லது, விட்டொழிதல் வேண்டும். விடுதல் என்பது தாய் மனைக்கனுப்புதல். எ-று. காண்க.

மனைவியர்பலரையும்நடத்தும்வகை.

மாதரையுண்டி முதலியவற்றாலும் ஆடையாபரணங்களாலும் மகிழ்ச்சிசெய்விக்க வென்று கூறப்பட்டதன்றோ அவ்விடயத்தில்மனைவியர் பலரையுடையவன் செய்வகையை மநுகூறினர். మనుః ॥ "యదిస్వాశ్చాపరాశ్చైవవిన్దేరన్యోషితోద్విజాః । తాసాంవర్ణక్రమేణస్యాత్ జ్యేష్ఠ్యంపూజాచవేశ్మచ" = இருபிறப்பாளர் தமதுசாதிமனைவியரையும் வேறுசாதி மனைவியரையும் அநுபவிப்பார்களாயின், அவருள்சாதிமுறைபற்றி மூத்தமனைவி மனையில் பூசிக்கத்தக்கவளாம் - எ-று. காண்க.

பலமனைவியருள்தருமாதிகாரமுடையவர்.

இதுவுமது. "భర్తుశ్శరీరశుశ్రూషాం ధర్మకార్యంచనైత్యకం । స్వాస్వైవకుర్యాత్సర్వేషాం నాస్వజాతిఃకథంచన" = கணவனுடைய உடம்பின் பாதுகாப்பினையும், தருமகாரியத்தினையும், நித்தகருமத்தினையும், அனைவருள்ளும் தன்சாதி மனைவியே செய்யவேண்டும். எவ்வகையானும் வேறுசாதி மனைவிசெய்யலாகாது. எ-று. காண்க.

பலமனைவியரும் ஒரேசாதியர்களாக விருப்பதனைப் பற்றி யாஞ்ஞவற்கியர் வகுத்துக்கூறினர். యాజ్ఞవల్క్యః ॥ "సత్యామన్యాంసవర్ణాయాం ధర్మకార్యంనకారయేత్ । సవర్ణాసువిధౌధర్మ్యే జ్యేష్ఠయానవినేతరా" = தன்சாதி மனைவியிருக்கும்போது வேறுசாதி மனைவியால் தருமகாரியஞ்செய்விக்கலாகாது. அத் தன்சாதி மனைவியர் பலராயின் மூத்தவளொழிய இளையவள் செய்யலாகாது. எ-று. காண்க.

இருபிறப்பாளர்க்குச்சூத்திரமனைவி விடயம்.

தன்சாதிமனைவி யிருந்தால் என்றதனால் இல்லாவழி வேறுசாதிமனைவியரால் தருமகாரியஞ் செய்விக்கலாம் என்னும்பொரு

ளாகின்றது. ஆயின், சூத்திரமாதும் இருபிறப்பாளனோடுதரு மத்தையனுட்டிக்கலாமே என்றவழி ஆகாது. ஏனெனில்? வசிட்டருரை அதனை விலக்குகின்றது. వశిష్ఠః॥ "కృష్ణవర్ణాయారమణాయైవనా నధర్మాయ" = சூத்திரசாதிமாது, போகத்தின் பொருட்டன்றித் தருமத்தின் பொருட்டன்று. எ-று. காண்க.

இளையவள் தருமஞ்செய்யவேண்டுழி.

தன்சாதிமனைவியர் பலராயவழித் தருமப் பொருட்டாகிய வினைகளை அநுட்டிக்க வேண்டின், மூத்தவளொழிய நடுமனைவிக்கும், கடைமனைவிக்கும் விதிக்கலாகாது. கணவன்மூத்த மனைவிக்குக்கூறவேண்டும். அவள் இளையவர்களுக்கு விதிக்கவேண்டும். அங்ஙனம் போதாயனர் கூறினர். బౌధాయనః॥ "ఏకైకామేవసాన్నాయ మేదకైకాం గార్హపత్యమీక్షయేదేకైకామాజ్యంపర్యేక్షయేత్" = ஒவ்வொருத்தியையே அக்கினி காரியத்திற்குப் பால்கறக்கும்படி செய்விக்க வேண்டுவது. ஒவ்வொருத்தியையே காருகபத்திய வேள்வியை நோக்கிப் பாதுகாத்துவரச் செய்யவேண்டும். ஒவ்வொருத்தியையே நெய்யைப் பார்த்துக்கொள்ளச் செய்யவேண்டும். எ-று.

மனைவியர் அனைவர்க்கும்தருமவுரிமை.

காத்தியாயனர். కాత్యాయనః॥ ఏకైకయావినాకార్యంనాధానంధార్యయా ద్విజైః। అకృతంతద్విజానీయా త్సర్వానాన్వారభంతియత్" = இருபிறப்பாளர் ஒவ்வொரு மனைவியானே தருமகாரியம் செய்வித்தலால் எல்லா மனைவியரும் தொடங்கிச் செய்யார்கள் ஆகையால் ஒருத்தியால் செய்யப்பட்ட அக்கருமம் செய்யாததாகவே முடியும், எ-று. ஆதலின் அனைவரும் செய்யவேண்டு மென்பதுகருத்து.

மூத்தவள்தருமவுரிமையுடைமை.

சிலர் இவ்விடயத்தில். "జ్యేష్ఠయాసవినేతరా" என்றயாஞ்ஞுவற்கியர் மொழிக்கு வேறு விதமாகப் பொருள் கூறினர். அஃதாவது, மூத்த மனைவியுடனேதான் கணவன் தருமஞ் செய்யவேண்டும். ஏனையர் செய்யலாகாது. என்பது. அதற்குஎடுத்துக் காட்டாக விஷ்ணு மொழியினையும் கூறுகின்றனர். విష్ణుః॥ అగ్నిహోత్రాదియజ్ఞేషు నద్వితీయాసహాచరేత్।అన్యథానిష్ఫలంతస్య స్త్రీష్వైరక్రతుశతైరపి" = வேள்வித்

நிக்கருமமுதலியவற்றில் இரண்டாமனைவி கணவனோடு இருந்து தருமநடத்தலாகாது. முத்தமனைவியோடிருந்தே செய்யவேண்டும். அங்ஙனமல்லாக்கால், நூறு வேள்விகளைத் திருத்தமாகச் செய்தாலும் அவனுக்குப் பயனில்லையாய்முடியும். எ-று. இந்த வுரைமேற்கூறிய போதாயனமொழிக்கும் காத்தியாயனமொழிக்கும் முரணுயிருத்தலின் உடன்பட்டுக் கொள்ளத் தக்கதன்று. ஆயின் விஷ்ணுமொழியின் கருத்து என்னெனில்? முத்தமனைவி தன்சாதியாகவும் இரண்டாமனைவி வேறுசாதியாகவும் இருந்த வழி முத்தவள்செய்யலாம், இளையவள் செய்யலாகாது என்று விதித்தவாறெனக்கொள்க. அல்லது, வேள்வித்திக்காரியம் கிடைத்திருக்கும்போது யார் மணம் புரியப்பட்டவளோ அவளைக் குறித்தாயினுமெனக் கொள்ளப்படும்.

வேள்வித்தீ கெடுதியடைந்தால் மறுபடியும் ஆதானஞ் செய்துகொள்ள வேண்டியவழி இரண்டாவது மனைவிக்குரிமை வருதலின் அக்கினி காரியமுதலிய கருமங்களில் இளையமனைவியர்க்கும் முத்த மனைவிபோலவே கணவனோடு தரும நடத்துவதற்குத் தகுதியுண்டு. அதுவிடயத்துச் சிலவிசேடங்களைக் காத்தியாயனர்கூறினர். కాత్యాయనః॥ "అగ్నిహోత్రాదిశుశ్రూషాంబహుభార్యస్సవర్ణయా। కారయేత్తద్బహుత్వే చ జ్యేష్ఠయా గర్హితా నచేత్। తథావీరసువామాసాంమాజ్ఞాసంపాదినీవయా। దక్షాప్రియంవదాశుద్ధాతామత్రవినియోజయేత్। దినక్రమేణవాకుర్యాద్యథాజ్యైష్ఠ్యమశక్తితః।విభజ్యసహవాకుర్యాద్యథాజ్ఞానమశక్తితః" = பல மனைவியரையுடையவன் தன் சாதி முத்தமனைவி பழிக்கப்படாதவளானல் அவளானே வேள்வித்திக் கருமப் பணிவிடைகளைச் செய்விக்க வேண்டும். அவள் பழிக்கப்பட்டவளாயின், புதல்வரைப்பெற்றவிளையாள்கையா லதனைச் செய்விக்கவேண்டும். மக்களைப்பெற்றவர் பலரானல் அவருள் தன் கட்டளையை மறுக்காத நற்குணமுடையவளால்செய்வித்தல்வேண்டும். நாள்தோறும் ஒருத்தியே கருமப்பணிசெய்யச் சத்தியற்றவளானல் அப்போது, நாள்வட்டத்தினல் முத்தாள் முதலியவரை முறைவட்டமாகத் தினமொருத்தி செய்யும்படி விதித்தல்வேண்டும். ஒருநாளாயினும் ஒருத்தியே யெல்லா வேலைகளையும் செய்யாவிட்டால் அப்போது, ஏனையமனைவியர் அனைவரும் அந்தத்தொழில்களை அவரவர் அறிவினளவாகப்பங்கிட்டுச்செய்து முடித்தல்வேண்டும். எ-று.காண்க.

காத்தியாயனர் கூறியமொழி விஷ்ணுமொழியோடு ஒத்த கருத்தினையுடையதாம். என்னை? விஷ்ணு. శ్లో॥ "ప్రథమాధర్మపత్నీస్యాద్ద్వితీయారతివర్ధినీ । దృష్టమేవఫలంతత్ర నాదృష్టముపపద్యతే" = முதல் மனைவி தருமப்பொருட்டுவந்த மனைவியாகவிருக்கின்றாள். இரண்டாமனைவி இச்சையை விருத்திசெய்பவள். அவளிடத்தில் பயன் வெளிப்பட்ட மாத்திரையதன்றி அதிட்டப் பயனுண்டாகாது. எ-று. எனவே, இரண்டாவது மனைவியால் சந்ததியும்போகமும் வெளிப்படுவதன்றிப் புண்ணியமுண்டாகா தென்பதுகருத்து.

மணவிதி முற்றிற்று.

சாதிவேறுபாடு.

பின்னர், தன் சாதியில்மணம், வேறு சாதியில் மணம் என்று கூறிப்போந்த ஞாபகத்தால்வந்த அநுலோமசாதியரையும், பிரதிலோமசாதியரையும் வழக்கினுள் வழங்கப்படும்பெயரை அறிவதன்பொருட்டுச் சாதி வேறுபாட்டினை வகுத்துக் கூறுகின்றாம்.

நாற்பெருங்குலமாமாறு.

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యః॥ "సవర్ణేభ్యస్సవర్ణాసుజాయంతేహిసజాతయః । అనింద్యేషువివాహేషుపుత్రాస్సంతానవర్ధనాః" = மணம் புரிந்தவன் சாதியிற்பிறந்த கன்னிகை அம் மணமகனுக்கு மணமானால் அவ்விருவர்க்கும் பிறந்த சந்ததிகுலத்தினை விளக்குஞ் சாதியர் என்னப்படுவர். எ-று. தாய் தந்தையரோடு ஒத்த சாதியிற்பிறந்த மக்களென்பதுகருத்து.

மனு. మనుః॥ "సర్వవర్ణేషుతుల్యాసుపత్నీష్వక్షతయోనిషు । ఆనులోమ్యేన సంభూతాజాత్యాజ్ఞేయాస్తఏవతే" = எல்லா வருணத்துள்ளும் பூத்தலையடையாத ஒத்த சாதி மனைவியரிடத்து அநுலோம விதியாற் பிறந்தவர்கள், சாதியால் அவர்களே யென்றுணரத்தக்கது. எ-று. (எனவே பிராமண தம்பதியர்களால் பிறந்தவன் பிராமணன். அரசதம்பதியாற் பிறந்தவன் க்ஷத்திரியன். வைசியதம்பதியராற் பிறந்தவன் வைசியன். சூத்திரதம்பதியராற் பிறந்தவன் சூத்திரன். என்பதுகருத்து. தம்பதி = மனைவியும் கணவனும்.

தேவலரும். దేవలః ॥ బ్రాహ్మణ్యాం బ్రాహ్మణాజ్జాతస్సంస్కృతో బ్రాహ్మణో భవేత్ । ఏవం క్షత్రియవైశ్యాశ్చ స్వస్వస్వయోనిజాః"—அந்தணமாதினிடத்து அந்தணனால் விதிக்கு மாறுபாடின்றிப் பிறந்தவனாய் உபநயன கருமஞ் செய்யப்பட்டிருந்தால் அவன் அந்தணனேயாவன். அவ்வாறே, தத்தம்மால் தத்தஞ்சாதி மனைவியரிடத்துப்பிறந்த க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களும் ஆவர் என்று உணர்க. எ-று. இந்நால்வரும் சுசாதிமனைவியரிடத்து அனுலோம விதியாற்பிறந்த வுத்தமசாதியர்களாம். இவர்கட்கே சசாதியர் என்ற பெயருமாம். தலைவனுக்குத் தலைவி யொத்தசாதியாகவிருந்தால் அது ஒத்த சாதியேயாம். ஆகவே அனுலோம மாமாறு என்னையெனின்? வித்தினும் நிலம் உயர்ந்த தாகாமையே (எனவே ஒத்ததாக வாயினும், தாழ்ந்ததாக வாயினும் இருக்கின் என்பது) அனுலோம விதியாம். ஒத்த சாதியுள்ளும் வித்துச் சிறிது உயர்ந்த தாக வேண்டுமெனில்? பருவம் சிறிது முதிர்ந்திருத்தலேசாலு மென்றுணர்க.

போலிச்சாதியாருவன.

வேற்றுச்சாதி மனைவியரிடத்து அனுலோமமாகப் பிறந்த சாதியரை மநுகூறினர். మనుః ॥ "స్త్రీష్వనంతరజాతాసు ద్విజైరుత్పాదితాన్సుతాన్ । సదృశానేవతానాహుర్మాతృదోషవిగర్హితాన్" = இருபிறப்பாளர் மூவரும் தமதுசாதியினும் தாழ்ந்தசாதி மாதரிடத்துப் பெற்ற மக்கள் தந்தையினு மிழிந்து, தாய்ச்சாதிச் சம்பந்தப்பிறப்புடையாராதலின் தந்தைசாதியோ டொப்பாகார். தாய்ச் சாதியோ டொப்பர். அநுலோமத்தாற் பிறந்தவர்களாதலிற் சுத்தமுடையவர்களுமாவர். தந்தைசாதிக்குச் சிறிது தாழ்ந்தமையால் தந்தைச்சாதிபோலும் சாதியையுடையவர் ஆவர்கள் என்றுணர்க. எ-று. மணவினைவிதிதவறாது அரசமாதினிடத்து அந்தணனுக்குத் தருமத்தோடும் பிறந்தவன். அந்தணனையொத்த க்ஷத்திரியனும். அவ்வாறே வைசிய மாதினிடத்துப் பிறந்தவன் அந்தணன் போன்றவசியனும். சூத்திர மாதினிடத்திற் பிறந்தவன் அந்தணனையொத்த சூத்திரனும். அதனானே சதிருசசாதி, "எம், "போலிச்சாதி, "எம், "மயங்கியமரபு" எனவும்கூறுப. ஏனையர்மூவர்க்கு மிவ்வாறே எனக்கொள்க.

போலியவொன மேற்கூறியசாதியர் அறுவர்க்கும் பெயரை யாஞ்ஞவற்கியரும் நாரதரும்கூறினர்.యాజ్ఞవల్క్యః ॥ విప్రాన్మూర్ధావసిక్తోహి క్షత్రియాయాంవిశఃస్త్రియాం । అంబష్ఠశ్శూద్ర్యాంనిషాదోజాతఃపారశవోఽపి వా" ॥ నారదోఽపి ॥ "వైశ్యాశూద్ర్యోస్తురాజన్యాన్మాహిష్యోగ్రౌసుతౌస్మృతౌ । వైశ్యాత్తుకరణశ్శూద్ర్యాం విన్నాస్వేషవిధిఃస్మృతః"= அந்தணனுக்கு அரசமாதினிடத்தில்பிறந்தவன் "மூர்த்தாவசித்தன்"-க. வைசியமாதினிடத்தில்பிறந்தவன் "அம்பஷ்டன்." உ. "சூத்திரமாதி னிடத்தில் பிறந்தவன் "நிஷாதன்" அல்லது "பாரசவன்" ௩. எ-று. இம்மூவரும் அந்தணன்வித்து. அரசனுக்கு வைசியமாதினிடத்திற் பிறந்தவன் "மாஹிஷியன்" க. சூத்திரமாதினிடத்திற் பிறந்தவன் "உக்கிரன்." உ. இவ்விவரும் அரசவித்தினுக்குப் பிறந்தவர்களாம். வைசியனுக்குச் சூத்திரமாதினிடத்திற் பிறந்தவன் "கரணன்." க. இவ்வொருவனும் வைசியனுக்குப் பிறந்தவன். ஆக அறுவர். இவர்கள் முறையே மணம் புணர்ந்த மாதரிடத்தில் தருமமாகவே கணவனுக்குப் பிறந்தவர்களாம்.

வேதியனுக்குமூவர், அரசனுக்கிருவர், வைசியனுக்குஒருவனாகஅறுவர்என்று மேற் கூறப்பட்டவர்களையே "அபசதர்"என்னும்பெயரால் இழிந்தசாதியராக மனுகூறினர். మనుః ॥ "విప్రస్య త్రిషువర్ణేషునృపతేర్వర్ణయోర్ద్వయోః। వైశ్యస్యవర్ణేచైకస్మిన్ షడేతేఽపశదాస్స్మృతాః" அந்தணனுக்கு மூவருணத்தும், வேந்தனுக்கிருவருணத்தும் வைசியனுக்கு ஒருவருணத்தும்பிறந்த இவ்வறுவரும் "அபசதர்" எனவே தாழ்ந்தசாதியர் என்று கூறப்பட்டனர். எ-று. எனவே தந்தையினும் தாழ்ந்தவர் என்பதுகருத்து.

அற்றேல்; மூர்த்தாவசித்தன்முதலியராகமேற்கூறிய அறுவரும்வேறுசாதியார் அன்று. அவர்அனுலோமவிதியாற் பிறந்தவராதலின், தாய் சாதியினுட்டாமே சேரத்தக்கவர் என விஷ்ணு கூறினர். విష్ణుః ॥ "సమానవర్ణాసుపుత్రా స్సవర్ణాభవంతి । అనులోమజాస్తుమాతృసవర్ణాఃప్రతిలోమజాస్త్వార్యవిగర్హితాః" = சாதிகள்மூவகைப்படும். அவை சமசாதி, அனுலோமசாதி, பிரதிலோமசாதி எனவரும். அவற்றுள், ஒத்தசாதித் தாய்தந்தையராற் பிறந்தவர் தந்தையோடு சமசாதி என்னப்படுவர். அனுலோமத்தாற் பிறந்தவர் தாயோடு சமசாதியாவர். பிரதிலோமத்தாற் பிறந்தவர் தாய்

தந்தையர் சாதியிலும் குறைவுபட்டுப் பெரியாரால் பழிக்கப்பட்ட நீசசாதி = தாழ்ந்த சாதியாவர்.

சங்கர். శంఖః ॥ క్షత్రియాయాం బ్రాహ్మణేనోత్పన్నః క్షత్రియో వైశ్యాయాం క్షత్రియాద్వైశ్యః శూద్రాయాం శూద్రఏవ ” = அரசமாதினிடத்தில் அந்தணனால் பிறந்தவன் க்ஷத்திரியன். வைசியமாதினிடத்து அரசனுக்குப் பிறந்தவன் வைசியன். சூத்திரமாதினிடத்தில் வைசியனுக்குப் பிறந்தவன் சூத்திரனே யாம். எ-று. ஆகவே மேற்கூறப்பட்ட விஷ்ணுசங்கர் உரைகளால் அநுலோமவிதியாற் பிறந்தவர்க்குத் தாய்மரபு அன்றி வேறு சாதியில்லை என்றுகின்றதே என்னின்?

அற்றன்று. அந்த உரைகளுக்குத் தாயின் சாதிக்குத் தக்க கருமத்தினை அவர்கள் அனுட்டிக்கவேண்டுமென்று பொருள் கூறவேண்டுமென்றித் தாய்ச்சாதியினும் அவர்க்கு வேறு சாதியில்லை என்று பொருள்கூறலாகாது. அங்ஙனமல்லாக்கால் உயர்ந்த வித்தூன்டானது விளும். நல்லது. இடம் தாழ்ந்த சாதியானதால் வித்து உயர்ந்த சாதியாகவும் அதனைக் குறைத்து இடச்சாதியோடு சமன்செய்கின்றது என்றபக்ஷத்தில் அவ்வாறே இடம் தாழ்ந்ததாக விருப்பினும் சிறந்த வித்துச் சந்ததியை ஏன்கொடு வரலாகாது? ஆதலின் மூர்த்தாவசித்தன் முதலிய அறுவரும் தந்தைச் சாதியினும் தாழ்ந்தவர். தாய்ச்சாதியினும் சிறந்தவர் ஆகிய வேறு சாதியராக விருக்கின்றனரன்றி அவர் தாழ்ந்த சாதியர் அல்லரென்பதாம்.

அற்றேல் தேவலர், அநுலோமரை வேறு கூறினர். = దేవలః ॥ “ బ్రాహ్మణాత్క్షత్రియాయాం తు సవర్ణో నామ జాయతే । క్షత్రియాచ్చైవ వైశ్యాయాం జాతోంబష్ఠ ఇతి స్మృతః ” = அந்தணனால் அரசமாதினிடத்தில் சவரணன் “பிறக்கின்றான். க்ஷத்திரியனால் வைசியமாதினிடத்தில் அம்பஷ்டன் பிறக்கின்றான். எ-று. இது மேற்கூறிய யாஞ்ஞவற்கியமொழிக்கு மாறாகின்றதே யெனில்?

இது குற்றமன்று. என்னே? ஒருசாதியுட்டானே “மூர்த்தாவசித்தன்,” “சவருணன்” என்னும் இரண்டுபெயரை விகற்பித்து ஒருசாதிக்கேகூறினர். அம்பஷ்டன் முதலியபேர்

உண்டாவதற்கும் இடனும். ஆயின், ஒருசாதிக்கே விகற்பத்தால் அநேகம்பெயர் கூறுவதற்கு எடுத்துக்காட்டில்லையென வினவலாகாது. என்னே? ஒருசாதியினுள்ளே நிஷாதன், பாரசவன் என்று விகற்பத்தால் மனுதேவலர்யாஞ்ஞுவற்கியர் கூறியமொழிகள் மேற்கூறப்பட்டுள்ளன. ஆதலின் மாறுகொளலன்று.

அனுலோமசாதி வேறுபாடு முற்றிற்று.

பிரதிலோமசாதிவகை ஆறுவன.

மனு. మనుః ॥ క్షత్రియాద్విప్రకన్యాయాం సూతోభవతిజాతితః । వైశ్యాత్ మాగధవైదేహౌరాజఃప్రాంగనాసుతౌ । శూద్రాదాయోగవఃక్షత్తాచండాలశ్చాధమో నృణాం । వైశ్యరాజన్యవిప్రాసుజాయంతేవర్ణసంకరాః । ఆయోగవశ్చక్షత్తాచచండాలశ్చాధమోనృణాం । ప్రాతిలోమ్యేనజాయంతేశూద్రాదపసదాస్త్రయః"=க்ஷத்திரியனால் அந்தண கன்னிகையினிடத்துச் சிறிது தாழ்ந்தவனாகிய "சூதன்" பிறக்கின்றான். வைசியனால், அரசகன்னியிடத்து "மாகதனும், "வேதியகன்னி யிடத்தில் "வைதேகனும் "பிறக்கின்றனர். இவர்கள்சாதாரணமாக இழிந்தவர். சூத்திரனால் வைசியகன்னியிடத்தில் "ஆயோகவனும், "க்ஷத்திரிய கன்னியிடத்தில் "க்ஷத்தாகவும், "வேதியகன்னி யிடத்து மனிதருள் அதமனாகிய "சண்டாளனும்" பிறக்கின்றான். சூத்திரனாற் பிறந்த இம்மூவரும் மிகத்தாழ்ந்தவரோ யாதலின் சாதிக்கலப்புச் செய்பவராம். சூதன் முதல் சண்டாளன் வரையும் பிரதிலோமசாதியார் அறுவரும் படிப்படி தாழ்ந்த சாதியராம். எறு.

தேவலர். దేవలః ॥ "శూద్రాదాయోగవఃక్షత్తాచండాలఃప్రతిలోమజాః। వైశ్యాయాంక్షత్రియాయాంచ బ్రాహ్మణ్యాంచయథాక్రమం । తథైవమాగధోవైశ్యాజ్జాతోవైదేహకస్తథా । బ్రాహ్మణ్యాంక్షత్రియాజ్జాత స్సూతోజాత్యానకర్మణా" = இதன்பொருளும் மேல் மனுமொழிப்பொருளே எனக்கொள்க. ஆயின் இவர்கள் சாதியால் நீசரன்றித்தொழிலாலன்று. எனச் சிலர் பொருள்கூறுகின்றனர். சூதன் ஒருவனும் அங்ஙனமாவனென்று சிலர் கூறுவர். என்பது விசேடம்.

யாஞ்ஞவற்கியரும் கூறினர். யாஜ்ஞவல்க்ய:॥ "ப்ராஹ்மண்யாம் க்ஷத்ரியாத் ஸூதோ வைஶ்யாத்வைதேஹகஸ்ததா । ஶூத்ராஜ்ஜாதஸ்து சண்டால: ஸர்வதர்மபஹிஷ்க்ருத: । க்ஷத்ரியா மாகதம் வைஶ்யாச்சூத்ராத்க்ஷத்தாரமேவ ச । ஶூத்ராதாயோகவம் வைஶ்யா ஜநயாமாஸ வை ஸுதம்" = இதன்பொருளும் மேன் மனுமொழிப்பொருளே யாம். சண்டாளனுக்கு யாதொரு தருமமுமில்லை என்பதே. "ஆயோகவன்" என்னும்பெயர் "ஆபோகவன்" எனவும் விகற்பிக்கப்பட்டது.

சங்கரசாதியர்.

வருணங்களினுடைய அனுலோமவகையாலும் பிரதிலோம வகையாலும் பிறந்த சாதிக்கு ஒன்றற்கொன்று கலப்புண்டானதனுல் பிறந்தவர்கள் "சுவபாகன்=சுவபசன்," "புல்கசன்," "குக்குடன்," முதலியசாதிவிசேடங்கள்பலவாகவுள்ளன. அந்த சாதியையும் அவற்றின் தோற்றமுறைகளையும், அவரொழுக்கங்களையும் புராணசாரத்துள் விரித்துக்கூறினும் ஆண்டுணர்க, (இது மாதவாசிரியருரை,)

உத்தமாதமசாதியின் வகைகள்.

சாதிகளுள்பொதுவாக உயர்ச்சி தாழ்ச்சியினைத் தேவலர் கூறினர். தேவல:॥ "ஶ்ரேஷ்டா: ஸவர்ணஜா ஜ்ஞேயா: ஶ்ரேஷ்டாஶ்சைவாநுலோமஜா: । அந்தராளா பஹிர்வர்ணா நிக்ருஷ்டா: ப்ரதிலோமஜா:" = அந்தச்சாதியருள் சுத்தசாதியர்நால் வரும் உத்தமவகுப்பினு ளுள்ளவர்களாம். அனுலோம சாதியர் அவற்றினும் தாழ்ந்தசாதியி லுள்ளவர்களாம். "பகிர்வருணம்" எனவே இவர்க்குப் புறம்புள்ளவர், அல்லது, "அந்தராளர்" அவ்வனுலோம சாதியர்க்கும் பிரதிலோம சாதியர்க்கும் நடுவுள்ளவர்களாம். பிரதிலோமசாதியர் நிலைமைகெட்ட தாழ்ந்த சாதியிலுள்ளவராம். எறு. காண்க.

அந்தராளசாதியர் வகை.

வேற்றுமையான தோற்றமுடையராகிய வேற்றுக் குறியுடைய புருடர்மாதர் புணர்ச்சியாற்பிறந்தவர் அந்தராளசாதியாராம். அவர் அனுலோமத்தாற் பிறந்தவரொன்றும் பிரதிலோமத்தாற் பிறந்தவரொன்றும் இருவகைப்படும். அவருள்,

அநுலோமத்தாற் பிறந்தசாதியர் சுத்தசாதியரினும் தாழ்ந்தவர்களேயாயினும் அச்சாதியை விட்டுப்புறம் போகாமல் சேர்ந்தாரைப்போலவே யிருப்பர். ஆதலின் அவரை அக்கூட்டத்துள் பிறந்தவர்களாகவேகருதவேண்டும். தாயோடொத்தபிரதிலோமப் பிறப்பினையுடைவர்கள் சாதிக்குப்புறம்பான வர்களாயிருத்தலின் நிலைமை கெட்டவராகவும், மிகத்தாழ்ந்தவராகவு மிருக்கின்றனர்.

அதமசாதியும் உத்தமசாதியும்.

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యః॥ "అసత్సంతస్తు విజ్ఞేయాః ప్రతిలోమానులోమజాః" = பிரதிலோம சாதியர் இழிந்தோர். அனுலோமசாதியர் உயர்ந்தவர். என்றுணரற்பாலர். எ-று.

சாதிமாறுதல்.

எங்காயினும் தாழ்ந்தசாதியரும் உத்தமசாதிய ராதலுமுண்டு. அதனை யாஞ்ஞவற்கியரே கூறினர். యాజ్ఞవల్క్యః॥ "జాత్యుత్కర్షో యుగేజ్ఞేయ స్సప్తమే పంచమేపివా" = சாதியினுடைய வுயர்வு ஏழாந்தலைமுறையிலாயினும், ஐந்தாந்தலைமுறையிலாயினும் அறியத்தக்கது. எ-று. கூடத்தமான மாதர் புருடரிருவரையுந்தொடங்கிக் கணக்கிட்டு வருகையில் ஐந்தாந்தலைமுறையிலாயினும் ஆறாந்தலைமுறையிலாயினும், அல்லது ஏழாந்தலைமுறையிலானும் அநுலோமமாகச்சேர்ந்த ஆண்பெண்கூட்டத்தில் உத்தமசாதிபிறக்கின்றது.

தாழ்ந்தசாதி யுயர்வது.

புருடன் வேதியன், பெண்சூத்திரச்சி, அந்தத் தம்பதிகள் கூடத்தர்=மூலபுருடர். இது முதற்கூட்டம். அவரால் அம்பஷ்ட கன்னிகை பிறக்கின்றாள். அவள் சூத்திரமாதினும் சிறந்தவள். அவளுக்கு வேதியன் கணவனானால் இரண்டாம் கூட்டம். அவர்களுக்குப் பிறந்தமாதும் அந்தணனும் கூடில் மூன்றாங் கூட்டமாம். அவ்விருவர்க்குப் பிறந்த கன்னி வேதியனைப் புணர்தலே நான்காங்கூட்டம். அவர்வழிமாதும் அந்தணனுங்கூடுவது ஐந்தாங்கூட்டம். அக்கூட்டத்திற் பிறந்தவளும் அந்தணனும் சேர்வது ஆறாவதுகூட்டம். அங்குபிறந்த மகளும் வேதியனும்

கூடில் ஏழாங்கூட்டம். அவ்வேழாங்கூட்டத்தாராம் பிறக்குஞ் சந்ததி தந்தையோடொத்த வேதியனே யாகின்ருன். இங்கு முதற்கூட்டத்தில் உண்டாகிய சூத்திரமாதி னிழிவு, ஏழுதலை முறைவரையில் படிப்படி குறைக்கப்பட்டு ஒழிந்துபோகவே அந்தமாதர் பரம்பரைக்கு முறைமுறையே சிறப்புமை உண்டாய் எட்டாந் தலைமுறையில் சூத்திரமாதின் சந்ததி வேதியன்புணர்ச்சி யால் அந்தணசாதியாகவே மாறிவிடுகின்றது. [இது "[illegible]" என்ற யாஞ்ஞவற்கிய மொழியின் கருத்து.

வைசியமாது, அந்தணன் புருடன். அத் தம்பதியர் மூல புருடர். அவளாலும், அம்பஷ்டையென்னும் கன்னி பிறக்கின் ருள். அவளுக்கு அந்தணன் கணவனுனல் அது இரண்டாம். அவ்வாறே வேதியனுற் பிறந்த மாதர்க்கு வேதியனே கொழுந னுனல் ஆருந்தலைமுறையிற் பிறந்த ஏழாவது சந்ததி அந்தண சாதியே யாம்.

அரசகன்னி, அந்தணகணவன், மூலபுருடர். இவர்களால் மூர்த்தாவ சித்தையென்று மாதுபிறக்கின்றனள். அவளைவேதி யன்புணர்ந்தா லிரண்டாம்கூட்டம். அவ்வாறே ஐந்தாங்கூட்டத் திற்பிறந்தசந்ததி அந்தணனேயாம்.

இது. "[illegible]" என்றுவிகற்பமாகக் கூறப்பட் டது. இவ்விகற்பத்தின் காரணம் புருடனுக்கு மாதுஒருபடி தாழ்ந்தஇரண்டாஞ் சாதியாயின் அங்கிருந்து புருடசாதிதவருது அந்தப்பெண்பரம்பரைக்குக் கணவர் நேர்ந்துவந்தால் ஐந்தாந் தலைமுறையில் முதற்புருடனே டொத்தசந்ததி பிறக்கின்றது. புருடனுக்கு மூன்ருஞ்சாதி மாதானுல் அங்கிருந்து ஆருந்தலை முறையில் கணவனே டொத்த சாதிபிறக்கும். நாலாஞ்சாதி மாதானுல் அவரால் ஏழாந்தலைமுறையில் உத்தமசாதியேயாய் விடுகின்றது. தலைவனுக்குந்தலைவிக்குநடுவேஒருசாதிவிட்டிருந்தா ல்அது" ஏகாந்தரதாம்பத்தியம்" = ஒன்றுவிட்ட இருவர்கூட்டம் என்னப்படும். இரண்டுவிட்டால் திவியந்தரதாம்பத்தியமாம். முதற் சுத்தமாவதற்கு ஐந்தாந்தலைமுறை. இரண்டாவது சுத்த மாவதற்கு ஏழாந்தலைமுறைவரையினும் காலமாகின்றது. அங் ஙனமானுல் சூத்திரமாது வைசியபுருடன், அல்லது, வைசிய

மாது அரசகணவன், இவர்களாலும் ஐந்தாந்தலைமுறையில் உத்தம சாதி பிறக்கின்றது. அவ்வாறே, சூத்திரமாது க்ஷத்திரிய கணவனிவர்களால் ஆருந்தலைமுறையில் உத்தமசாதி பிறக்கின்றதென் றுணர்க.

உயர்ந்தசாதி தாழ்ந்தசாதியாவது.

யாண்டாயினும், சிலவிடங்களில் உத்தமசாதியாரும் அதம சாதியாராவ துண்டு. அதனை யாஞ்ஞவற்கியரும் கூறினர். யாஜ்ஞவல்க்ய: ॥ "[illegible]"= வேதியன் முதலிய நான்கு வருணத்தருக்கும் முறையே விதிக்கப்பட்ட இன்றியமையாத விருத்தி = சீவனத்தொழில்களாகிய வேட்பித்தல், உலகோம்பல், உழவு பசுக்காத்தல், இருபிறப்பாளர் பணி முதலியன அவர்களாபற்காலத்தில் (எனவே, கிடையாவழி) ஒருவன் றெழில் ஒருவனுக்கு மாகமாறுதலுண்டு. அந்த ஆபத்து ஒழிந்த பின்பு அந்த வேறுபாட்டினை யொழித்துவிட்டு முன்போலத் தத்தந்தொழிலில் முயலவேண்டுவதேவழக்கு. அவ்வாறின்றி, ஆபத்தொழிந்த பின்பும், அந்த வேற்றுக் கருமத்தை விடாவிட்டால் அவன்மகன், பேரன், முதலிய பரம்பரையாரும் அந்த அந்நியத்தொழிலை விடமாட்டார்கள். அப்பொழுது முன் கூறியபடியே ஐந்து, ஆறு, எழாந்தலைமுறையிற் பிறந்த சந்ததி அந்த விருத்திக்குத்தக்க சாதியோடு ஒத்த சாதியாகின்றது. எறு.

தொழிற் கலப்பு.

எங்ஙனமெனில். வேதியன் சூத்திரவிருத்தியாற் பிழைத்து மக்களைப்பெற்றால், அவரும் அச்சூத்திர விருத்தியானே பிழைப்பவராவர், அங்ஙனம் அப்பரம்பரை அவ்வாறே விருத்தியாகவே படிப்படி சாதி குறைந்தேவந்து எழாந்தலைமுறையிற் பிறந்த சந்ததிமுழுவதும் சூத்திரசாதியே யாகின்றது. அங்கிருந்துமீட்டும் உத்தமவிருத்தியால் ஜீவனம் செய்யத்தொடங்கிப் படிப்படி விருத்தியடைந்தால் எழாந்தலை முறையில் மீட்டும்வேதியனே ஆவான்என்பது அருமையாம். என்னை ? அறுவது எளியது, மீட்டுஞ்செவ்வனல் அரியது. கடன்சேருவதெளிமை, ஆஸ்தி சேருவதுஅருமை. படைத்தலரிது, அழித்தலெளிது, என்பன

போல். இவ்வாறே க்ஷத்திரியன் சூத்திரவிருத்தியால் சீவிக்கத் தொடங்கின், ஆறுந்தலைமுறையில் சூத்திரசந்ததியாம். வைசியன் ஐந்தாந்தலைமுறையிலாம் என்றுணர்க.

“பூர்வவச்சாதரோத்தரம்” என்ற அந்த யாஞ்ஞவற்கியமொழியின் கருத்து. என்னெனில்? “அதரோத்தரம்” என்பதில் கருத்து விசேடமன்றி, மொழிப்பொருள் விசேடமன்று. என்னே? சாதிக்கலப்பில் பிரதிலோமத் தன்மையெப்படி யிழிந்ததும், அநுமலோமத் தன்மை சிறந்ததுமான வாறேபோலத் தொழிற்கலப்பாலும் என அறியத்தக்கது. ஆயின், க்ஷத்திரியனுக்கு ஆபற்காலம் வந்தவழியும் வேட்பித்தல் முதலிய வேதியன்றொழில் இழிந்ததே யாம். “நகதாசிஜ்ஜ்யாயஸீம்” எப்போதைக்கும் தன் சாதிக்காயினும் மேல் வருணத்தார்க்குரிய சீவனத்தொழிலைத் தான் விரும்பலாகாது என்று வசிட்டரால் விலக்கப்பட்டது. க்ஷத்திரியனுக்கு ஆபற்காலத்துள் பசுக்காத்தல் உழவுமுதலிய வைசியன் றொழிலால் சீவிப்பது சிறந்தது. “அஜீவம்ஸ்ஸ்வதர்மேணாநந்தராம் பாபீயஸீம் வ்ருத்திமாதிஷ்டேத” தனக்குரிய தொழிலால் சீவிக்கமாட்டாத ஆபத்தை யடைந்தவன் தனக்குக் கீழ்ப்பட்ட சாதியினுடைய பாவமான சீவனவிருத்தியை அனுட்டிப்பர் என்று வசிட்டரால் ஆபற்காலதருமம் விதிக்கப்பட்டது.

சாதிக் கலப்பின் வகை.

“பூர்வவச்சாதரோத்தரம்” என்றயாஞ்ஞவற்கியமொழிக்குக்கருத்து. கலப்புமூன்று வகைப்படும். அவை. வருணசங்கரம்=சாதிக்கலப்பு, சங்கிரணசக்கரம்=கலவைக்கலப்பு, அவ்விருமைக்கலப்பு, எனவாம். அவற்றுள், உயர்ந்தசாதிக்கும் தாழ்ந்தசாதிக்கும்ஆண் பெண் புணர்ச்சியுண்டாவது, சாதிக்கலப்பாம். அவராற் பிறந்த “மாகிஷியன் “ என்பவனுக்கும் “ கரிணீ “ என்பவளுக்கும் புணர்ச்சி யுண்டாமாயின் அது சங்கிரணசங்கிரம் = கலவைக்கலப்பாம். சாதிக்கலப்பானவர்க்கு ஆண்பெண்கூட்டம் உண்டானல்வருண சங்கிரணசங்கரம் = சாதிக்கலவைக் கலப்பு என்னப்படும். எனவும் பொருள்கூறுவர். எனவே, வேதியனல் மூர்த்தாவசித்தன் பிறப்பனென அநுலோமத்தால் சாதிக்கலப்பின் சந்ததி கூறப்பட்டது. அந்தணமாதினிடத்தில் க்ஷத்திரியனற் சூதன்

பிறப்பனென்று பிரதிலோமத்தால் சாதிக்கலப்பும் மரபும் கூறப்பட்டது. மாகிஷியசாதி ஆனால் கரணசாதி மாதினிடத்தில் இரதக்காரன் பிறப்பனெனவே சங்கிரணசங்கர சந்ததிபிறக்கின்றது.

ஈண்டு. "அதரோத்தரம்" என்றதனால் சாதிக்கலவைக் கலப்பினால் பிறந்தவர்கள் குறிப்பிக்கப் படுகின்றனர். "அதர" = கீழோர். எனவே, பிரதிலோமமாகப்பிறந்தவர். என்க. "உத்தர"= மேலோர். எனவே அநுலோமமாகப்பிறந்தவர். என்க. என்னை? மூர்த்தாவசித்த சாதிப்பெண்ணையும், கலவைச்சாதிப்பெண்ணையும், உயர்ந்தசாதிப்பெண்ணையும் உள்ள மாதினிடத்தில், வேந்தன், வைசியன், சூத்திரனுமாகிய தாழ்ந்தோரால் பெறப்பட்ட சந்ததியார் "அதர" கீழோர் எனப்படுவர். நிஷாத சாதியையாகியும், சங்கிரணசாதியையாகியும், தாழ்ந்த சாதியையாகியும் உள்ள மாதினிடத்தில் வேதியன், வேந்தன், வைசியன், என்ற உயர் வருணத்தாரால் பிறந்தவர்கள் "உத்தர" மேலோர் என்னப்படுவர். ஆதலின் அந்தக்கீழோரும் மேலோரும் ஆவர் என்பதுபொருள். (இது முடிந்தது முடித்தல்) "பூர்வவத்"= முன்போலவே என்றதனால் "அஸத்ஸந்தஸ்து விஜ்ஞேயா:" = என்ற யாஞ்ஞவற்கிய மொழிப்பொருளையே "அதிதேசத்தால்"=மொழிப்பொருடந்து முடித்தலால், ஈண்டு கொள்ளப்படுகின்றது. எனவே முற்கூறிவந்ததனால், சாதிக்கலப்பிற் பிறந்தவர்களும், கலவைக் கலப்பினாற்பிறந்தவரும், பிரதிலோமப் பிறப்பினரானால், எவ்வாறு 'அஸந்த:'=மேலோரன்றோ? எனின். நிலைகெட்டவரோ? அவ்வாறே சாதிக்கலவைக் கலப்பினாற்பிறந்தவரும் அநுலோமத்தாற் பிறந்தவர்களானால், "ஸந்த:" = உயர்ந்தோரென்றும், பிரதிலோமத்தாற் பிறந்தவராயின் தாழ்ந்தவரென்றும் உணர்க.

வருண ஆபாசமும் சாதி ஆபாசமும்.

மேற்கூறப்பட்ட மூவகையாகிய கலப்பிலும் சாதிக்கலப்பாற் பிறந்தவர்கள், சாதிக்கலவைக் கலப்பாற் பிறந்தவர்கள் என்னும் இவ்விருவகை வேறுபாட்டாற் பிறக்கும் சாதிவேற்றுமைகள் அறுபதாம். கலவைக் கலப்பென்னும் பேதத்தால் பிறக்கும் சாதி வேற்றுமைகள் பலவாம். அவைபல மிருதிகளிலும்

கூறப்பட்டன. స్మృత్యంతరే ॥ "ప్రాతిలోమ్యానులోమ్యేన వర్ణాస్వర్ణైస్సవర్ణతః । వర్ణాన్వర్ణేషుజాయంతే తత్ప్రతిమాత్మసంకరాః" = பிரதிலோமத் தாலும் அநுலோமத்தாலும் வருண முடையவர்களால் பிறந்தவர்கள் பன்னிருவர். (எனவே, அநுலோமத்தார் அறுவர். சூதன், வை தேகன், சண்டாளன், மாகதன், க்ஷத்தா, ஆயோகவன் எனப் பிரதிலோமர் அறுவர்.) இப்பன்னிருவரோடும் ஒவ்வொன்றற் கும் சுத்தமாகிய நால்வருணத்தாலும் உண்டாகும் சந்ததிச் சாதிநாற்பத்தெட்டு. இவ்விரண்டுங்கூட அறுபதாம். எறு. இவை வருணாபாசசாதி என்னப்படும். அவை வருமாறு, மூர்த்தாவசித்தன், அம்பஷ்டன், நிஷாதன், மாஹிஷியன், உக்கிரன் கரணனென்னும் ஆறு அநுலோம சாதியாலும் பிறக்கும் இரு பத்துநான்கு சாதியாம். அவை, மூர்த்தாவசித்தனால், க்ஷத்திரிய வைசியசூத்திர மாதரிடத்தில் அநுலோமத்தால் மூன்றுசாதியும் அந்தண மாதினிடத்துப் பிரதிலோமமாகவே யொருசாதியும் பிறக்கின்றன. ஆகநான்கு. அவ்வாறே அம்பஷ்டனுக்கு அநு லோமத்திரண்டு. பிரதிலோமத்திரண்டு நிஷாதனுக்கு அநு லோமம் ஒன்று, பிரதிலோமம் மூன்று. மாஹிஷியனுக்கு அநு லோமத்திரண்டு. பிரதிலோமத்திரண்டு. உக்கிரனுக்கு அநு லோமத்தொன்று பிரதிலோமத்துமூன்று. கரணனுக்கு அநு லோமத் தொன்று பிரதிலோமத்து மூன்று. ஆக இருபத்து நான்கு. இவ்வாறே பிரதிலோமவருணாபாசம்இருபத்துநான்கு. அம்மூலமாகிய அநுலோமமாறும் பிரதிலோமமாறும் கூட அறுபதாயிற்று. இவைகளால் பெறப்பட்ட சந்ததி ஆபாச மான = வேற்றுமைப் பட்டசாதியின் இலக்கம் அளவற்றதாகின் றன. அறுபதுசாதியாலும் நான்குசாதியிலும் இருநூற்று நாற் பதுஆபாச சாதிதோன்றுவன. அவற்றால் அந்நான்கிலும் தொள் ளாயிரத்து அறுபதுசாதி வெளிப்படுகின்றன. அவற்றாலவ் வாறே மூவாயிரத்து எண்ணூற்று நாற்பதுசாதி பிறக்கின்றன. இம்முறையேயேனும் அறிக. அல்லது. அறுபதுசாதியால் வேறு வேறு ஒவ்வொருசாதியுள்ளும் அவ்வறுபது சாதியைப்போல வேமூவாயிரத் தறுநூறுசாதிபிறக்கின்றன. அவைஒவ்வொன்றும் அவ்வறுபதுசாதி யுள்ளும்கலந்து, இருபத்தோராயிரத்துஅறு நூறுசாதிபிறக்கும். இம்முறையே பலவாகவிளையும் என்றுணர்க.

வேறுவேறு சாதிகளின் ஆண்பெண் புணர்ச்சியாலே யாயினும், தொழின்முயற்சியா லாயினும் கலப்பாகிப் பிறந்துவரும் கலப்புச்சாதி பலவாதலாலும் அவற்றுள் நெடுங்காலம் உயர்ந்ததே சம்பந்தப்பட்டுவருதலால் தாழ்ந்தது உயர்ந்ததும், உயர்ந்தது தாழ்ந்தது மாதலாலும் உலகப்படைப்பானதுமுதல் இதுவரையும் மூலபுருடர்களாகிய பலசாதியர்களின் சந்ததிக் கலப்பினால் அவைவேறுவேறாஎந்தெந்தச்சாதியாக ஏற்பட்டுவந்தது இப்பொழுது எந்தச்சாதியாகக் காணப்படுகின்றனவோ? இவைகளின்சரியான மூலம், மரபு, சாதிமுறைமை நிலைபெறச்செய்வது யார்க்கும் அமையாது. தொடக்கத்தில் சுத்தமாகிய நான்குசாதியே தோன்றினவாதலின் இப்போது உலகத்துள் காணப்பட்டுவரும் பலசாதிபேதமும் அந்நான்கனுட்டானே சேர்ந்தனவென்று எளிதாகக் கூறலாயிற்று. அதனால் உலகத்துள்ள மானுடரனைவரும் உத்தமராகவே சாதாரணமாகக் கொள்ளக் கிடந்தனர். அவருள்ளும் நல்லொழுக்கம் நற்குணமிவைகளைப் பற்றி யுத்தமசாதி யிலக்கணம் யாண்டாயினும் வெளிப்படக் காணுதொழியாது. ஆயினும் உலகவழக்காலும், ஒழுக்கவழக்காலும் உணர்ந்தளவில் சிலதல்லமுறையின் பிறப்புத்தொழின் ஞாபகத்தாலும், சுற்றத்தினர், குருமாணுக்கர்மரபு, சமயக்கொள்கை, உண்டியுடைமுதலிய சுத்தாசுத்த வேறுபாடு, குடியிருக்கு நாடுமுதலியவற்றாலும் அவரவர்சாதி உயர்ந்ததோ? தாழ்ந்ததோ? தானேயேற்படுகின்றது. தருமநூல்கள் இன்னசாதிக்கு இன்னதருமம் எனவும் கருமம்எனவும் வகுத்தலின் அவற்றவற்றை அந்தச்சாதியாரேகொள்ளக்கடவர். அவற்றவற்றின்நியமங்களை அங்கங் குள்ளவர்களாகிய, அறிவு, தொழில், வயதிவற்றினால்முதிர்ந்தோராற் செய்யப்படுவதே துணிவாம்.

சாதித்தொழில்.

அந்தந்தச் சாதியின்றொழில் முதலியவற்றினை புராணசாரத்துட் காண்க வென்று உரையாசிரியர் விடுத்துச் சென்றமையின் அதனைச்சிறிது அறிய விரும்புவோர் வேண்டுகோளின்பொருட்டு வெளிப்பட்ட சில சாதித் தொழிலினை "மன்வர்த்தமுத்தாவளி" முதலிய நூல்களையாராய்ந்து அவற்றுள்ளும் சிறிதே சுருக்கமாக விதனடியிற் குறிப்பிக்கப்படும்.

அவை வருமாறு.

உயர் நால்வருணத் தவர்தொழில் மேலே கூறப்பட்டன. இனி தாழ்ந்த சாதியினையும் அவற்றின் பயனையும் மனுமிருதி பத்தாவதத்தியாயத்துட் கூறியவாறு சிறிது எடுத்தீண்டு கூறப்படும்.

சாதிப்பெயர்.	தாய் தந்தையர் சாதி.	அவர்கள் செய்யுந் தொழில்.
ఆభీరః — ஆபீரன் ...	அந்தணனும் அம்பஷ்டமாதும்	மூவினம் மேய்ப்பவன்.
ధిగ్వణః — திக்குவணன்.	ஆயோகவியும், அந்தணனும்	எருவிற்போன்.
మాగధః — மாகதன் ...	வயியனும், அரசமாதும்.	புகழ்வோன்.
వైదేహః — வைதேகன்.	வையியனும், அந்தணமாதும்	இறந்தஜெந்துக்களை விற்பவன்.
సూతః — சூதன்... ...	அந்தண மாதும், அரசனும்	தேரோட்டுவோன்.
పుల్కసః — புற்கசன்...	சூத்திர மாதும், நிஷாதனும்	சக்கிலியன்.
కుక్కుటకః — குக்குடகன்.	நிஷாத மாதும், சூத்திரனும்	கோழிப் பந்தயம் விடுவோன்.
క్షత్తా — க்ஷத்தா... ...	வைசிய மாதும், சூத்திரனும்	இரண சிகிச்சை செய்வோன்.
శ్వపాకః — శ్వపచ — சுவபாகன் — சுவபசன்...	உக்கிரமாதும், அரசனும்	நாயைத்தின்போன்.
వేణః — வேணன் ...	அம்பஷ்டியும் வைதேகனும்	
భూర్జకంటకః — பூர்ஜகண்டகன்... ఆవంత్యః — ஆவந்தியன். వాటధానః — வாடதானன்... పౌష్పధః — பௌஷ்பதன்... శైఖః — சைகன்... ...	இவரனைவருக்கும் அந்தணமாதும் விராத்தியனுமாம்	இவரனைவரும் இழிதொழில் புரியும் வேதியராம். தேயபேதத்தாற்பெயர் மாறுபட்டன. இவர்கள் மந்திரக்காரருமாவர்.
ఝల్లః — சல்லன் ... మల్లః — மல்லன் ... ... నిచ్ఛివిః — நிச்சிவி ...	அரசமாதும் விராத்தியனை க்ஷத்திரியனும்.	நிலத்தில் ஆகரங்களைகண்டுபிடிப்போர், மல்லயுத்தஞ் செய்வோர் - ஜெட்டியெனவும் படும்.

சாதிப்பெயர்.	தாய் தந்தையர் சாதி.	அவர்கள் செய்யுந் தொழில்.
నటః = நடன்		கூத்தாடி.
కరణః = கரணன் ...		ஊர்க் கணக்கு எழுது வோன்.
ఖసః = கசன்		
ద్రవిడః = திரவிடன் ...		
సుధన్వా = சுதன்வா...	வைசியமாதும் விராத்தியவைசியனும்	
ఆచార్యః = ஆசாரியன்...		பண்டிதன் அல்லது உபாத்தியாயன்
కారూశః = காருசன்...		வாணிபஞ் செய்வோர்.
విజన్మా = விஜன்மன் ...		
మైత్రః = மைத்திரன்...		
సాత్వతః = சாத்துவதன்.		
సైరింధ్రీః = சைரிந்திரன்...	ஆயோகவியும் தசியுஎன்பவனும்	மயிர்ச்சிக்கறுத்தல், உடற்கோலமெழுதல், தேய்த்தல் முதலிய பணித்தொழில், தேவர்பிதிரர் மருந்து கருமத்தில் மிருக முதலியவற்றைக் கொல்லுதல்.
మైత్రేయః = மைத்திரேயன்...	ஆயோகவியும், வைதேகனும்	வைகறையில் மணியசைத்து அரசனைத்துயிலுணர்த்தி இன்சொல் லுரைப்பது.
మార్గవః = దాశః = కైవర్తః = மார்க்கவன் = தாசன் = கைவர்த்தன்	ஆயோகவியும், நிஷாதனும்	இம்மூவரும் முறையே வேட்டை யாடுவோர், ஓடஞ் செலுத்து

சாதிப்பெயர்.	தாய் தந்தையர் சாதி.	அவர்கள் செய்யுந் தொழில்.
		வோர். மீன் பிடிப் போருமாம்.
మార్గవ — மார்க்கவி ...	௸	இறந்தவ ராடையைப் பெற்றுடுப்பது. எச்சிலுண்பது.
కారావరః — காராவரன்	வைதேகமாதும், நிஷாதனும்	தோல்பதஞ்செய்பவன்.
పాండుసోపాకః — பாண்டு சோபாகன்... ...	வைதேகியும், சண்டாளனும்	மூங்கல் விற்போன்.
ఆహిండికః — இண்டிகன்.	வைதேகியும், நிஷாதனும்	சிறைச்சாலை வெளிப்புறம் காப்பவன்.
సోపాకః — சோபாகன்.	புற்கசியும், சண்டாளனும்	அரசனாணையால் மரண தண்டனை செய்வோன்.
అంత్యావసాయీ — அந்தியாவசாயி	நிஷாதமாதும், சண்டாளனும்	சுடுகாடு காப்போன்.
పౌండ్రకః — பௌண்டரிகன்...	இப் பன்னிருவரும் அந்தந்த நாட்டிற் பிறந்த அரசசாதியர்	கிரியைநிலை கெட்டமையாற் சூத்திரரானவர்கள்.
ఓడ్రః — ஔட்டிரன்.		
ద్రావిడః — திராவிடன் ...		
కాంభోజ — காம்போசன் ...		
యవనః — யவனன் ...		
శకః — சகன்		
పారదాః — பாரதன் ...		
అపహ్లవాః — அபக் லிலாவன்...		
చీనాః — சீனன்... ...		
కిరాతాః — கிராதன்...		
దరదాః — தாதன் ...		
ఖశాః — கசன்		

சாதிப்பெயர்.	தாய் தந்தையர் சாதி.	அவர்கள் செய்யுந் தொழில்.
దస్యుః = தசியவன் ...	நால்வருணத்துள் யாராயினுமாம்	ஆரிய பாஷையை விடுத்து மிலேச்ச பாஷையை விவகரிப்போர்.
సూతః = சூதன்... ...	,,	குதிரைச்சாரதியாம்.
అంబష్ఠః = அம்பஷ்டன்.	,,	முள்ளெடுத்துக் காயமாற்றுவோன்.
వైదేహకః = வைதேஹகன்...	,,	அந்தப்புரம் காப்போனும் அங்கே வேண்டும் பண்டந்தருவோனும்.
మాగధః = மாகதன் ...	,,	வழிக்கடை விற்போன்.
నిషాదః = நிஷாதன்...	,,	வேடன்.
ఆయోగవః = ஆயோகவன்...	,,	விறகு வெட்டுவோன்.
మేద, అంధ్రి, చంచు, మద్గు, மேதன், அந்திரன், செஞ்சு, மத்துகு.	இவருள் - செஞ்சுவுக்கு வைதேகியும், வேதியனுமாம் ... ... மத்துகுவுக்கு-வந்தியும், வேதியனுமாம் ...	இவரால் வரும் காட்டுப் பசுக்களைக் கொல்வோர்.
క్షత్తా = க்ஷத்தா	,,	ஒட்டன்=எலிவளைதோண்டுவோன்.
ఉగ్రః = உக்கிரன் ...	,,	பாம்பு பிடிப்போன்.
పుల్కసః = புற்கசன்...	,,	பெருச்சாளி பாம்பு முதலிய வளைச்செந்துக்களைப் பிடிப்போன்.
ధిగ్వణః = திக்குவணன்.	,,	தோல்வேலை செய்வோன்.
పాదుకాకృత్ = பாதுகிருது...	,,	பாதரக்ஷை தைப்போன்
తైలికః = தைலிகன் ...	,,	எண்ணெய் விற்போன்.
రజకః = இரஜகன் ...	,,	ஏகாலி = ஆடையொலிப்போன்.

சாதிப்பெயர்.	தாய் தந்தையர் சாதி.	அவர்கள் செய்த் தொழில்.
తున్నవాయః = துன்னவாயன்...	,,	தையல்வேலை செய்வோன்.
తంతువాయః = தந்துவாயன்...	,,	ஆடை நெய்வோன்.
స్వర్ణకారః = சவர்ணகாரன்...	,,	பொன்கொல்லன் = தட்டான்.
తక్ష = தக்ஷன்	,,	தச்சன் = மரவேலைசெய்வோன்.
వేనః = வேணன் ...	,,	கட வாத்தியஞ் செய்வோன்.
శైలూషః = சைலூஷன்.	,,	வேடங் கட்டி யாடுவோன்.
శౌరేయః = சௌரேயன்...	,,	சான்றான் = கள் விற்போன்.
రంగాజీవీ = இரங்காசிவி.	,,	ஓவியன் = சித்திரமெழுதுவோன்.
నాపితః = நாவிதன் ...	,,	மயிர் வினைஞன் = க்ஷவரஞ் செய்வோன்.
కులాలః = குலாலன் ...	,,	வேட்கோவன் = மட்பாண்டஞ் செய்வோன் = குயவன்.
శాకునికః = சாகுநிகன்.	,,	சகுனங்கூறுவோன்.
అప్సరసః = அப்சரஸ ...	,,	தேவதாசியர்.

பிறவுமன்ன. இவற்றின் மூலங்களை ஆராயப்புகிற் சிலமிகவு மிழிந்த வாகின்றன. இப்போது அவ்வத்தொழில் செய்வாரை நோக்குங்கால் ஒழுக்க முதலியவற்றாற் சிறந்தோராயும் சிலர் காணப்படுகின்றனர். ஆதலின் இவ்வளவில் விடப்பட்டது.

இனி இல்லறதருமம், உபாகருமம்.

விவாகமான பின்பு நடத்தத்தக்க ஐம்பெரும் வேள்வி முதலியவற்றினையுஞ் சோமயாகம் வரையிலுள்ள செய்கருமங்களையும் நித்த கருமத்துள் அறுவகைக் கருமத்தினையும் கூறியவிடத்தே கூறியுள்ளன மாதலினீண்டுகூறாது ஒழிக்கப்பட்டன. அவற்றுள் கூறுதொழிந்த இல்லற தருமத்தினை மாத்திரம் கூறுகின்றாம்.

சிராவணஹோமம்.

உபா கருமவிதியை யாஞ்ஞவற்கியர் கூறினர். యాజ్ఞవల్క్యః "అధ్యాయానాముపాకర్మ శ్రావణ్యాంశ్రవణేనవా । హస్తేనౌషధిభావేవా పంచమ్యాం శ్రవణస్యతు"—வேதமோதத் தொடங்குமுறைமையை, சாந்திரசிராவணமாதப் பூரணையிலாயினும், திருவோண நக்ஷத்திரம் கூடிய திதியிலாயினும், அஸ்தநக்ஷத் திரத்திலாயினும், செய்யத்தக்கது. ஏதேனும் ஒருசிராவணமாதம் = ஆவணிமாதத்தில் ஓடதிகள் = பயிர்கள் உண்டாவ தில்லையாயின், அடுத்தபாத்திரபதம் = புரட்டாசிமாதத்தில்வரும்மேற்குறித்தநாள்களிலும்செய்யலாம். எ-று.

வசிட்டர். వసిష్ఠః ॥ అథాతస్స్వాధ్యాయోపాకర్మ శ్రావణ్యాం పౌర్ణమాస్యాంప్రోష్ఠపద్యాంవా" = பின்னர், வேதங்களின் உபாகருமம் திருவோணநாளின் சம்பந்தமுடைய பூரணையிலாயினும் பூரட்டாதிநாளின் சம்பந்தமுடைய பூர்ணமாசியையிலாயினும் செய்யலாம். எறு. காண்க.

மனு. మనుః ॥ "శ్రావణ్యాంప్రోష్ఠపద్యాంవా ప్యుపాకృత్యయథావిధి । యుక్తశ్ఛందాంస్యధీయీత మాసాన్విప్రోర్ధపంచమాన్" = வருடந் தொடங்கி நாலரை மாதமாகலும் ஆவணிப்பூரணை, அல்லது, புரட்டாசிப் பூரணையுள், வேதியன் விதிப்படி வேதவுபாகருமம் செய்யவேண்டும். எறு. அல்லதூஉம். ஆவணிப்பூரணையிலேனும் புரட்டாசிப் பூரணையிலேனும் உபாகருமம் செய்துகொண்ட பின்பு நாலரைத் திங்களாகும் வரையில் வேதமோதிக் கொண்டிருக்கவேண்டும். என்றவாறுமாம்.

உபாகருமகாலத்தடைப்பரிகாரம்.

எப்போது, ஆவணிபுரட்டாசி மாசங்களில் மேற்கூறிய காலத்திற்குக் குருஅத்தமனம், சுக்கிரன் அத்தமன முதலிய

தடைகளுண்டாமாயின், அப்போது, ஆஷாடம்=ஆடிமாதத்திற் செய்யவேண்டும். அவ்வாறு கூர்மபுராணத்துட் கூறப்பட்டது. కూర్మపురాణే॥ "శ్రావణస్యతుమాసస్యపౌర్ణమాస్యాంద్విజోత్తమాః। ఆషాఢ్యాంప్రోష్ఠపద్యాంవా వేదోపాకరణంస్మృతం" = ஆவணிப் பூரணையிலாயினும் ஆடிமாசத்திலாயினும், புரட்டாசி மாசத்திலாயினும் வேதத்தின் உபாகருமம் கூறப்பட்டது. எ-று.

போதாயனர். బోధాయనః। శ్రావణ్యాంపౌర్ణమాస్యామాషాఢ్యాంవో పాకృత్యతైష్యాంమాఘ్యాంవోత్సృజేత్" = ஆவணியிலேனும் ஆடியிலேனும்பூரணையில் உபாகருமஞ் செய்துகொண்டு, புஷியம் = தை மாசத்திலாயினும், மாகம் = மாசியிலேனும் உத்சர்ச்சன கருமஞ் செய்யவேண்டும். எ-று. உத்சர்ஜனம்=ஓதலை ஒழித்தல்.

மூன்றுவேதத்திற்கு முரியகாலம்.

அம்மூன்று மாதங்களிலும் பூரணை, திருவோணம், அத்தம் இம்மூன்றும் முறையேயஜுசு, இருக்கு, சாமம்என்னு மூன்று வேதங்களையும் உபாகருமஞ் செய்வதற்குச் சிறந்தகாலமென்று விதிக்கப்பட்டது. அதனைக்கோபிலர் கூறினர். గోభిలః॥ "పర్వణ్యుదయగేసూర్యే శ్రావణ్యాంతైత్తిరీయకాః। బహ్వృచాశ్శ్రవణర్క్షేతుహస్తర్క్షే సామవేదినః" ஆவணிமாதப் பூரணையில் உதயபருவகாலத்தில் யஜுர்வேதிகள் உபாகருமம்செய்வர். திருவோணத்தில் இருக்குவேதிகள் செய்வர். அத்தநாளில் சாமவேதிகள் செய்வர். எ-று.

கார்க்கியர். గార్గ్యః॥ "పర్వణ్యుదయగేసూర్యే శ్రావణ్యాంతైత్తిరీయకాః। బహ్వృచాశ్శ్రవణేసూర్యే గ్రహసంక్రాంతివర్జితే" = கிரகணமும் சங்கிரமணமும்இல்லாத பக்ஷத்தில் ஆவணிமாதப் பூரணையுதய பருவத்தில் யஜுர்வேதிகள் உபாகருமஞ் செய்கின்றனர். அப்படிப்பட்ட திருவோணநாளில் இருக்குவேதியர் செய்வர். எ-று.

உபாகருமத்திற்கு உதயபருவநியமம்.

கார்க்கியர். గార్గ్యః॥ "శ్రావణీపౌర్ణమాసీతుసంగవాత్పరతోయది। తదా త్వౌదయికీగ్రాహ్యానాన్యా త్వౌదయికీభవేత్" = ஆவணி பூரணசங்கமகாலத்திற்கு முன்றாயின் அது உதயபருவமென்று கூறப்படுகின்றது. அங்ஙனம் அல்லாக்கால் உதயகால பருவமாகாது. எ-று. எனவே,

குறித்த திதி நக்ஷத்திரங்கள் சூரியோதயந்தொட்டு மத்தியான்னம்வரையி லிருத்தல்வேண்டு மென்பதுகருத்து.

திருவோணத்தின் அமைதி.

சிராவண ஹோமத்திற்குத் திருவோணநாள் உதயகாலத்தி லிருக்க வேண்டுமென்று அந்வய வியதிரேகிகளால் வியாசர். குறிப்பித்தனர். వ్యాసః ॥ శ్రవణేనతుయత్కర్మ హ్యుత్తరాషాఢసంయుతే । సంవత్సరకృతోఽధ్యాయ స్తత్క్షణాదేవనశ్యతి । ధనిష్ఠాసంయుతేకుర్యా చ్ఛ్రావణంకర్మయద్భవేత్ । తత్కర్మసఫలంజ్ఞేయ ముపాకరణసంజ్ఞితం" = உத்திராட நாளோடும் கூடிய திருவோணத்தில் உபா கருமஞ்செய்தால் வருடஞ்செய்த அத்தியயனப்பயன் கணத்தில் அழிந்துவிடுகின்றது. ஆதலால், அவிட்ட நக்ஷத்திரத்தோடும் கூடிய திருவோணத்தில் உபாகருமஞ்செய்ய வேண்டுவது. அந்தக்கருமம்பயன்பெறும். எ-று. காண்க. எனவே, சூரிய உதயகாலத்தில் திருவோணநாளிருத்தலே வேண்டுமென்பது கருத்து.

உபாகருமத்திற்குக்கிரகண சங்கிராந்திநியமம்.

மேற்கூறியகருக்கருரையில்கூறப்பட்ட "గ్రహసంక్రాంతివర్జితే" என்றதற்கு அக்கருக்கரேபிறிதுவிதி கூறியிருக்கின்றனர். "అర్ధరాత్రాదధస్తాచ్చేత్సంక్రాంతిర్గ్రహణంతథా । ఉపాకర్మనకుర్వీత పరతశ్చేన్నదోషకృత్" = பாதிராவினுக்குமுன்பாகச் சூரியசங்கிரமணமாயினும் சந்திர கிரகணமாயினும்வந்தால் அன்று உபாகருமஞ் செய்யலாகாது. பின்னுயிற்குற்றமில்லை. எ-று.

பலமிருதி. స్మృత్యంతరే ॥ "యత్రార్ధరాత్రాదర్వాక్చేద్గ్రహస్సంక్రాంతిరేవచ । నోపాకర్మతదాకుర్యా చ్ఛ్రావణ్యాంశ్రవణేపిచ" — எந்த ஆவணிமாதப் பூரணையிலாயினும் திருவோணத்திலாயினும் உபாகருமஞ்செய்வதாயின், அன்று, பாதிராத்திரியாவதற்கு முன் கிரகணமாவது சங்கிராந்தியாவதுவரிற் செய்யலாகாது. எ-று.

உபாகருமத்திற்கு மாசவிலக்கும் விதியும்.

பலமிருதி. స్మృత్యంతరే ॥ "వేదోపాకరణేప్రాప్తే కుళీరేసంస్థితేరవౌ । ఉపాకర్మనకర్తవ్యం కర్తవ్యంసింహసంయుతే" = வேதவுபாகருமஞ் செய்வதா

யின் சூரியன் கற்கடக ராசியிலுள்ள போதாகாது. சிங்கத்திலிருக்கும்போதாம். எ-று.

மேற் கூறிய வாக்கியங்களால் உபாகருமத்திற்குச் சிங்கமாசமும் சிராவண மாசமும் சிறந்தன. சங்கிரமணத்தினைக் கூறியதால் அதிக மாச மாகாதென்ற கருத்தாகின்றது. கிரகணம், சங்கிராந்தி, குருமூடம், சுக்கிரமூடம், அங்காரகன்மூடம், அதிசமாசம், சேர்ந்தபோது சிராவணத்தினைவிட்டு, பாத்திரபதம் = புரட்டாசியிற் செய்யவேண்டும். ஆகலிற் கர்க்கடக மாசங்கூடாது. கன்னியாமாசமும் ஆகாதென்பது சிலர் மதம். சிராவணம், பாத்திரபதமாசங்களிலும் மேற்கூறிய தடைசேர்ந்தால் ஆஷாடத்திலும் செய்யலாம். பயிர் முளையாவிட்டால் செய்யலாகாதென்பது. பஞ்சகாலத்தினைக் குறித்ததன்றி அவ்வூரிலில்லாவிடினும் அத்தேயத்தான் தோன்றியிருக்கினும் சாலும். கர்க்கடகமாசத்தது ளாகாதென்னும் விலக்குப் பிரமசாரிக்கு முதலுபாகருமத்தைக்குறித்தது என்று சிலர் அநுட்டிக்கின்றனர். பிரமசாரியர் அனைவர்க்கு மாகாதென்று பின்னுஞ் சிலர் அநுட்டிக்கின்றனர். கிரகத்தனுக்குக் கர்க்கடகமாசம் விலக்கல்லவென்று மற்றுஞ் சிலர் கொள்கின்றனர். சிங்கமாதத்திற்குத் தடையுண்டானுல் கர்க்கடக மதியாயினும் குற்றமில்லை என்றுடன்படப்பட்டுள்ளது. அது முதலுபாகருமமாசத்திற்கே யாகாதென்பது சிலர் மதம். இவ்வகைமையெல்லாவற்றினையும் ஏனைய விதிநூல்களும் மிருதியுமுணர்ந்தவர்கள் அவ்வச்சாகை பேதத்திற்கு ஒத்தபடி பிரமாணவுரைகளால் விசாரித்துள்ளனர்.

வேதவுபாகருமத்திற் கதிகாரிகளாவார்.

வினு. இனி, உபாகருமம் பிரமசாரியன் தருமமாக விருக்கின்றது. "𑌉𑌪𑌾𑌕𑍃𑌤𑍍𑌯𑌾𑌧𑍀𑌯𑍀𑌤" = உபாகருமஞ்செய்து பின் வேதமோதல்வேண்டும். என்பதனுல்,குருவால் சீடன் வேதத்தினைப் பெற்று ஓதுவதற்கு உபாகருமம்அங்கமென்று தோன்றுகின்றது. அப்படிப்பட்ட அத்தியயனம். பிரமசாரியனுக்கன்றிக் கிரகத்தனுக் கல்ல. என்னை? "𑌵𑍇𑌦𑌮𑌧𑍀𑌤𑍍𑌯 𑌸𑍍𑌨𑌾𑌯𑌾𑌤𑍍" = வேதமோதி ஸ்நாதக விரதஞ்செய்க என்றலின் ஸ்நாதக விரதஞ் செய்வதற்கு முன்பாகவே வேதமோதல் தக்கதென்பது போதருகின்றது. ஸ்நாதக விரதமானபின்பேமணம். மணமுடிந்தவனன்றோ? இல்லறத்தான். அந்த இல்லறத்தானுக்குக் "கிரகணுத்தியயனம் = பெற்றோதல் இல்லையா மாகலினும், முதலில்லாதவனுக்குச் சினை = அங்கம் உண்டாதலில்லை யாகலினும்உபாகருமம் இல்லறத்தானுக்கும்தருமம் என்று எங்ஙனம்கூறப்படும்? எனில்.

விடை, அது குற்றமன்று. கிரகத்தனுக்கும் பெற்றோது தலில் அதிகாரமுண்டு. அதனாலே, "అధీయీత" என்ற மொழியை வருவித்துக்கொண்டு சௌனகர் கூறினர். శౌనకః ॥ "సమావృత్తో బ్రహ్మచారికల్పేనయథాన్యాయమితరజోమోపేతాఇత్యేకే" = எந்த நியமத்தால் பிரமசாரி வேதமோதவேண்டுமோ? அந்த நியமத்தானே ஸ்நாதகப் பிரமசாரியனும் ஓதல் வேண்டும். ஸ்நாதகப் பிரமசாரியாகாத ஏனைய பிரமசாரிகள் விதி வழக்கப்படி ஓதுதல் செய்வர். அவ்வாறே கிரகத்தனும் பிரமசாரியைப்போலவே நியமத்தோடு கூடினவனாய் ஓதல்வேண்டும். எ-று. காண்க.

ஆனால், ஸ்நாதகப்பிரமசாரிக்கும், கிரகத்தனுக்கும் பெற்று ஓதுவதனுள்உரிமை, "వేదమధీత్యస్నాయాత్" என்று மேலெடுத்துக் காட்டியமொழிக்கு முரணும் என்று சங்கிக்கலாகாது. அவ்வுரை வித்தியா ஸ்நாதகனைக் குறித்தது. அதனாலே, "వేదవ్రతానివాపారం నీత్వాహ్యుభయమేవవా" = என்று, மூன்றுபக்ஷமும் வேதமோதும் விதி கூறுமுகத்து விரித்துரைக்கப்பட்டது. உபாகருமம் இல்லறத்தான் தருமமென்று உடன்பட்ட விடத்து, மனு, யாஞ்ஞவற்கிய மிருதிகளில் உபாகருமத்தினை இல்லறத்தானொழுக்கங் கூறுமிடத்துக் கூறியிருப்பதே போதுமான சான்றும். இக்கருத்தினை ஆசிரியர், தொல்காப்பியனார். "ஓதல் பகையே தூதிவை பிரிவே. எம், அவற்றுள், ஓதலுந் தூது முயர்ந்தோர் மேன. என்பவாற்றானும், இறையனார். "ஓதல் காவல் பகை தணிவினையே வேந்தற் குற்றுழி பொருட்பணி பரத்தையென், றாங்கவ்வாறே யவ்வயிற்பிரிவே. என்றதனானு முணர்க.

உபா கருமத்துட் செய்யத்தக்கன.

உபா கருமத்துட் செய்யத் தக்கனவற்றை கார்ஷ்ணாஜனி கூறினர். కార్ష్ణాజనిః ॥ "ఉపాకర్మణిచోత్సర్గే యథాకాలంసమేత్యచ । ఋషీన్దర్భమయాన్కృత్వా పూజయేత్తర్పయేత్తతః" உபாகருமத்திலாயினும், உத்சர்ஜன கருமத்துளாயினும் நூல்களால் விதிக்கப்பட்ட காலத்தில் வந்து, தருப்பையால் இருடிகளை யமைத்துப் பூசித்தல் வேண்டும். பின்பு தருப்பணம் செய்யவேண்டும். எறு. காண்க.

போதாயனர். బోధాయనః ॥ "గౌతమాదీనృషీన్సప్త కృత్వాదర్భమయాన్పునః । పూజయిత్వాయథాశక్తి తర్పయేద్వంశముద్ధరన్" கௌதமர் முதலிய

சத்தவிருடிகளைத்தருப்பையாலமையச்செய்துசத்தியுள்ளமட்டில் பூசித்து மாவினை மேலெடுத்து விளக்குவோனுய்த் தருப்பணம் செய்யவேண்டும். எ-று.

ஆபத்தம்ப கிருகிய சூத்திரத்துள். ఆపస్తంబగృహ్యసూత్రే ॥ ఉపాకరణేసమాపనేచఋషిర్యఏకప్రజ్ఞాయతేసదసస్పతిర్ద్వితీయః" = உபா கருமத்திலும், உத்சர்ஜனத்திலும் யார்தன் சாகையாொன்றுணாவருகின்றனரோ? அவர்களையும், சதசஸ்பதி முனிவரையும் பூசித்தல் வேண்டும். எ-று. "சந்தோஹோமம்" முதலியவற்றினை அவரவர் சூத்திரத்துள் விரித்துக் கூறப்படுதலின் ஆண்டுணர்க.

உத்சாஜனம்.

உத்சர்ஜன கருமத்தினை யாஞ்ஞுவற்கியர் கூறினர். యాజ్ఞవల్క్యః ॥ "పౌషమాసస్యరోహిణ్యామష్టకాయామథాపివా । జలాంతేఛందసాంకుర్యాదుత్సర్గంవిధివద్బహిః" = புஷியம்=தைமாசத்துள் உரோகிணிநாளிலாயினும் அட்டமியிலாயினும் ஊருக்கு வெளியில் நீரருகே விதிப்படி. வேதமோதலை விடுதல் வேண்டும். எ-று.

மனு. మనుః ॥ "పుష్యేతుఛందసాంకుర్యాద్బహిరుత్సర్జనంద్విజః । మాఘశుక్లస్యవాప్రాప్తే పూర్వాహ్ణేప్రథమేஅహని" = இருபிறப்பாளன் தைமாசத்துள் ஊர்க்குவெளியில் வேதமோதலைத் தவிர்க்குங் கருமத்தினைச் செய்தல்வேண்டும். மாகம் = மாசிமாசத்தில் வளர்பிறைப் பிரதமை உச்சிப்போதினுள்ளாயினுமாகலாம். எ-று. காண்க. ஆவணிமாசத்துள் உபாகருமஞ் செய்தால் தைமாத வளர்பிறை பிரதமை, அட்டமி, திரயோதசியிலாவது, புரட்டாசியில் உபாகருமஞ்செய்திருந்தால் மாசி வளர்பிறைப் பாட்டியமியிலாயினும் ஓதலைச் செய்யவேண்டுமென்னும் விகற்பவிதி விதிக்கப்பட்டது.

பின் ஓதற்குரியகாலம்.

உச்சர்ச்சன கருமத்தைச்செய்து, வேதமோதுதலை விட்டாலும், மறுபடியும் உபாகருமம் செய்துகொள்வதற்குள் ஓதத்தக்ககால விசேடங்களை மனுகூறினர். మనుః॥ "అతఊర్ధ్వంతుఛందాంసి శుక్లేషునియతఃపఠేత్ । వేదాంగానిచసర్వాణి కృష్ణపక్షేషుసంపఠేత్" = உச்சர்ச்சனமானபின்பு சுக்கிலபக்ஷத்தில் வேதங்களை நியமத்தோடு

ஓதவேண்டும். கிருஷ்ணபக்ஷத்தில் அவ்வேதத்தின் அங்கநூல்களையும், ஏனையவெல்லாவற்றினையும் நன்ருக வோதவேண்டும். எறு.

கூர்மபுராணம். కూర్మపురాణె ॥ ఛందాంస్యూర్ధ్వమతోఽభ్యస్యే చ్ఛుక్లపక్షేషువై ద్విజః । వేదాంగానిపురాణాని కృష్ణపక్షేషువై తథా " = இருபிறப் பாளன் உச்சர்ச்சனம் செய்தபின்னர், வளர்பிறையில் வேதங்களையும், தேய்பிறையில், அங்கநூல்களையும் புராணங்களையும் ஓதல்வேண்டும். எறு. காண்க.

ஒழிபு.

சுருதி. శ్రుతిః ॥ " యత్స్వాధ్యాయమధీయీత " = முன் இடையூறுண்டாமே என்னும் அச்சத்தால் விரைவில் ஓதிமுடிக்கவேண்டுமென்னும் எண்ணமுடையவன், உச்சர்ச்சனம் செய்யத்தக்க காலத்திற் செய்யாதுவிட்டு, மறுபடியும் உபாகருமம் வந்தபோது, அதற்குச் சிறிதுபோது முன் செய்யவேண்டும். எறு. காண்க.

உபாகரும வுச்சர்ச்சன சிறப்பு.

உபாகருமத்தின் உச்சர்ச்சன பயனைக்காத்தியாயனர் சிறப்பித்தனர். కాత్యాయనః ॥ " ప్రత్యబ్దంయదుపాకర్మసోత్సర్గంవిధివద్ద్విజైః । క్రియతె ఛందసాంతెన పునరధ్యయనంభవేత్ । అయాతయామైశ్ఛందోభిర్యత్కర్మక్రియతెద్విజైః క్రీడమానైరపిసదాతత్తేషాంసిద్ధికారణం " = ஒவ்வொருவருடத்திலும் இருபிறப்பாளர் உபா கருமத்தினையும் உச்சர்ச்சன கருமத்தினையும் செய்வதனுல், மறுபடியும் வேதமோதலுக்கு அதிகார முண்டாகின்றது. அங்ஙனம் செய்துவந்தால் அவ்வேதம் பழைமைப்படுவதில்லை. புதிய வேதத்தினுல் விளையாடிக்கொண்டே ஒருகருமத்தினைச் செய்யினும் அது அவர்களுடைய சித்திக்குக்காரணமாகின்றது. எறு. சித்தி = பயன்.

இருபிறப்பாளன்வசித்தற்குரிய விடயம்.

ஏனைய பொதுத்தருமங்களும் கூர்மபுராணத்துட் கூறப்பட்டன. కూర్మపురాణె ॥ " నాధార్మికైర్వృతెగ్రామెనవ్యాధిబహులేభృశం । నశూద్రరాజ్యేనివసెన్నపాషండజనైర్వృతె । హిమవద్వింధ్యయోర్మధ్యం పూర్వపశ్చిమయోశ్శుభం । ముక్త్వాసముద్రయోర్దేశం నాన్యత్రనివసేద్ద్విజః । కృష్ణోవాయత్రచరతి మృగోనిత్యం

స్వధావకః । పుణ్యాస్థనిష్ఫ్రతానద్యస్తత్రవానివసేద్ద్విజః" = பாவிகள் மிகுந்திருக்கிறவூர், நோய்மிகுந்தவிடம், சூத்திரஅரசும் சூத்திரர்நாடு மானதலம், பாஷண்டர் மிகுந்துள்ளதேயம், இவைகளில்இரு பிறப்பாளன் வாசஞ் செய்யலாகாது. வடக்குஇமயமலை, தெற்கு விந்தமலை, கிழக்குமேற்குக் கடலெல்லை, இவ்வெல்லையி னடுவே கல்விட மொழியமற்று எவ்விடத்தும் நிலைமையாக வாசஞ்செய் யலாகாது. அல்லது, எங்காயினும் இயற்கையாகக்கறுத்த மானி னங்கள் உலாவும் இடமாக விருக்கவேண்டும். புண்ணியநதிகள் ஓடிக்கொண்டிருக்க வேண்டும். அவ்வளவேபோதும். அங்காயி னும் இருபிறப்பாளன் குடியிருக்கவேண்டும். என்று. காண்க.

பிரமசாரிஇல்லறத்தானியற்கைத்தருமம்.

கூர்மபுராணம். కూర్మపురాణే ॥ "పరస్త్రియంనభాషేతనాయాజ్యంయాజయేద్బుధః । నదేవాయతనంగచ్ఛేత్కదాచిచ్చాప్రదక్షిణం । నవీజయేద్వావస్త్రేణ నచ వాయుంచవర్జయేత్ । నైకోధ్వానంప్రపద్యేత నాధార్మికజనైస్సహ । ననిందేద్యోగినస్సిద్ధాన్వ్రతినోవాయతీంస్తథా" = பிறன்மனைவியோடு பேசலாகாது. தகாதவனுக்கிறந்த கருமத்தினைச் செய்விக்கலாகாது. நீசனுக்குப் புரோகிதன் ஆகலாகாது. எப்போதும் தேவர்கள் கோயிலில் அப்பிரதக்ஷிணம் செய்யலாகாது. ஆடையால் காற்றேழவிசிக் கொள்ளலாகாது. கூட்டத்தினை யொழித்துவிட வேண்டும். தனி வழிநடக்கலாகாது. தீயர்களோடு வழிப்போகலாகாது. சிவயோகி சித்தபுருடர், நோன்பொழுக்க முடையவர்கள், நீத்தோர், பெரியோர், இவர்களைப் பழிக்கலாகாது. என்று.

மனு. మనుః ॥ "దేవతానాంగురోరాజ్ఞః స్నాతకాచార్యయోస్తథా। నాక్రామేత్కామతశ్ఛాయాంబభ్రుణోదీక్షితస్యచ । క్షత్రియంచైవసర్పంచబ్రాహ్మణంచబహుశ్రుతం । నావమన్యేతవైభూష్ణుః కృశానపికదాచన । ఆమృత్యోశ్శ్రియమన్విచ్ఛేన్నైనాంమన్యేతదుర్లభాం। సత్యంబ్రూయాత్ప్రియంబ్రూయాన్నబ్రూయాత్సత్యమప్రియం। ప్రియంచనానృతంబ్రూయాదేషధర్మస్సనాతనః । నాతికాల్యంనాతిసాయంనాతిమధ్యంగతేరవౌ। నాజ్ఞాతేనసమంగచ్ఛేన్నైకోనవృషలైస్సహ । హీనాంగానతిరిక్తాంగాన్విద్యాహీనాన్వయోధికాన్ । రూపద్రవిణసంపన్నాఞ్జాతిహీనాంశ్చనాక్షిపేత్ । వైరిణంనోపసేవేతసహాయమపివైరిణః । అధార్మికంతస్కరంచపరస్యైవతుయోషితం" = தேவர்கள், குரவர், அரசர், ஸ்நாதகப் பிரமசரியர், ஆசிரியர், தாடிமீசை வளர்த்

துள்ளயோகியர், நிஷ்டை யுடையவர்கள், சந்நியாசர், மற்றைப் பெரியோர் இவர்கள் நிழலைக்காலால் மிதித்தலாகாது. க்ஷத்திரியனையும், பாம்பினையும், கற்றவேதியனையும், மிகநொந்தவனையும், மிக இளைத்துள்ளவனையும், தான்விருத்தி யடையவேண்டும் என்னும் எண்ணமுடையவன் அவமதிக்கலாகாது. தான்சாந்துணையும் செல்வத்தினையே தேடவேண்டும். இனி அது எனக்குண்டாக மாட்டாதென்னும் நிராசை யடையலாகாது. தான்நல்லனவே செய்துவரிற் கடவுளருளால் அது, எப்போதாயினு முண்டாம். மெய்யே கூறவேண்டும். யாவர்க்கும் இனிமையாவதனையே கூறவேண்டும். உண்மையாகவே யிருக்கினும் இனிமையில்லாததனைக்கூறலாகாது. இனிமையாயுள்ளபொய்யினையுங்கூறலாகாது. இது முன்னையோர்கண்டஅழியாத் தருமம். அதிகாலையிலும், அதிமாலையிலும், நடுவுச்சியிலும் வழித்திரியலாகாது. தெரியாதவனோடுபோகலாகாது. தனித்துஒருவனாகச் செல்லலாகாது. நீசர், சூத்திரரிவர்களோடு போகலாகாது. தேகப்பழு துள்ளவர்களையும் மிக்கதேகஉறுப்பு உடையவர்களையும், கல்வியில்லாதவர்களையும், வயது முதிர்ந்தவர்களையும், அதிக அழகுள்ளவர்களையும், மிகுந்த பொன்னுடையவர்களையும், சாதியொழுக்க மற்றவர்களையும், "ச" என்றதனாற் குருபமுடையவர்களையும், வறியவர்களையும், வலிமையில்லாதவர்களையும், மிகுந்தவலியவர்களையும், மறுத்தல் முதலியது செய்யலாகாது. பகைவனையும், அவன் துணையாவானையும், தருமமில்லாதவனையும், பாவியையும், கள்ளனையும், பிறன்மனையாளையும், அடுத்து நம்பிப்பழகலாகாது. எறு. காண்க.

மார்க்கண்டேயர். మార్కండేయః॥ "అసత్ప్రలాపమనృతంవాక్పారుష్యంచవర్జయేత్ । అసచ్ఛాస్త్రమసద్వాద మసత్సేవాంచపుత్రక । నమ్లేచ్ఛభాషాంశిక్షేతనపశ్యేదాత్మనశ్శకృత్ । నాధితిష్ఠే చ్ఛకృన్మూత్రం కేశభస్మకపాలికాం । తుషాంగారాస్థిశీర్ణాని రజ్జువస్త్రాదికానిచ । వర్జయేన్మార్జనీరేణుంనాపేయంచపిబేద్ద్విజః" = கெடுதியான கூச்சல், மரபுதவறியமொழி, பொய்யுரை, வசையுரை சொல்லலாகாது. கொடிய சாத்திரங்கள், கொடியவாதுகள், நீசரைச் சேவித்த லிவற்றினையொழித்து விடவேண்டும். மிலேச்ச பாஷைகளைப் பழக்கஞ் செய்யலாகாது. தன்மலத்தினைத் தான்பார்க்கலாகாது, மலம், மூத்திரம், மயிர், சாம்பல், ஓடு, உமி, கரி,

எலும்பு, மண்டையோடு, இவற்றினை மிதிக்கலாகாது. எந்தவுயிர்களின் தலைமேலும் கால்வைத்தலாகாது. கயிறு, ஆடை முதலிய வற்றின்மீதும் உட்காரலாகாது, மிதிக்கவு மாகாது, அலகு = தொடைப்பத்தில் எழும் துகள் மேற்படலாகாது. தொடலாகாத அசுத்தமுடைய இரசங்களையேனும், செலத்தினையேனும் குடிக்கலாகாது, “ ” என்றதனல், விழுப்பு, எச்சில்முதலிய வற்றினையொழித்துவிட வேண்டும். எ-று. காண்க.

பொதுத்தருமத் திரட்டின்சுருக்கம்.

மனு. మనుః ॥,, యేనాస్యపితరోయాతాయేనయాతాఃపితామహాః। తేనయాయాత్సతాంమార్గం తేనగచ్ఛన్నరిష్యతి। యత్కర్మకుర్వతోఽస్యస్యాత్పరితోషోఽంతరాత్మనః। తత్ప్రయత్నేనకుర్వీత విపరీతంతువర్జయేత్ ” = தந்தை, பாட்டன்முதலிய தன் முத்தோர் எந்தவழி நடந்தனரோ? அந்த மார்க்கத்திற்ருனு நடப்பவனுக விருந்தால் குற்றத்தை யடையமாட்டான். ஆயின், ஒருதலையாகத் தான் எத்தொழிலைச் செய்தால் தன்மனத்திற்கு, ஐயமும், பயமும், உண்டாகாமல் களிப்புண்டாமோ? அந்தத் தொழிலை முயற்சியோடும் செய்யவேண்டும். அங்ஙனம் அல்லாததனை விட்டுவிடவேண்டும். எ-று. காண்க.

வானப்பிரத்தன் தருமம்.

இனி வானப்பிரத்தநிலைமை விதிக்கப் படுகின்றது. வினு. சிலர் கிரகத்த நிலைமையினும் சிறந்ததாகப் பிறிதொரு நிலைமையைவிரும்புவ தில்லை. அங்ஙனம் பிரமாணவுளாயுங் காட்டுகின்றனர். கௌதமர். గౌతమస్మృతిః ॥ ఐకాశ్రమ్యంత్వాచార్యాః ప్రత్యక్షవిధానా ద్గార్హస్థ్యస్య ” = குரவர்கள் கண்கண்ட வேதத்துள் கிரகத்த நிலைமையொன்றே விதிக்கப்பட் டிருத்தலின், இல்லறம் ஒன்றேநன்னிலைமையது வேறு இல்லையென்று எண்ணுகின்றனர். இருக்குவேதமுற்றினும், “ ஒத்துரு, ” என்னும் இருத்துவிக்குவின் கருமங் கூறுகின்றது. யஜுர்வேத முழுவதும் “ அத்துவரியு ” என்னும்இருத்துவிக்கின்தொழிலைவிளக்குகின்றது. சாமவேதம், “ உற்

காதுரு" என்னும் இருத்துவிக்குவின் கருமத்தினை விதிக்கின்றது. இவ்விருத்துவிக்குகள் மூவரும் இல்லறத்தினரன்றோ? வேதத்துள் வெளிப்பட இல்லறத்தான்செய்யும் கருமத்தினையே கூறுகின்ற தெனப்பொருள் துணிந்து கூறப்படும். வேறு ஆச்சிரமங்களைப்பற்றி யாண்டும் வேதவிதி காணப்படுவதில்லை. அங்ஙனமாதலி னன்றோ? "యావజ్జీవమగ్నిహోత్రంజుహుయాత్" என்றமறைமொழி ஒருவன்ஆயுண் முழுவதையும் இல்லறவொழுக்கத்தின் கட்டானே செலுத்து விக்கின்றது. ఏతద్వైజరామర్యంసత్రం యదగ్నిహోత్రంజుహుయాద్వ్యాహ్య నాస్త్రాన్ముచ్యతెమృత్యునావ" என்ற சுருதியும் அவ்வாறே கூறுகின்றது. அங்ஙனமாயின் பிரமசரியாச்சிரமத்தை எங்ஙனம் உடன் படலாமென்று வினாவலாகாது. என்னை? நைட்டிகப் பிரமசரியனும், இல்லறத்தானோடு சேர்ந்தோனாக வெண்ணப் படுகின்றான். பிரமசாரியாகாவழி யில்லறவொழுக்க மில்லாமையின் கிரகத் தாச்சிரமத்திற்குப் பிரமசரியவிரதம் உபகரிப்பதாகவே யிருக்கின்றது. அவ்வளவன்றி அதுவேறு ஓராச்சிரம மாவதன்று. ஆகவே எங்ஙனமாயினும் கருமஞ் செய்பவனொன் றுடன்படப்பட்ட பிரமசாரி வானப்பிரத்தன்இவர்கள் நிலைமையே இங்ஙனம் ஆச்சிரம மில்லையாகவிருக்க, எல்லாக்கருமத்தினையும் ஒழித்த சந்நியாசி நிலைமை என்னென்று கூறுவது. ஆகலின்கிரகத்த நிலையொன்றே ஆச்சிரமம் என்பது ஆரியர்கள்கருத்து. "இல்லறமல்லது நல்லற மல்லஎம், அறனெனப் பட்டதேயில் வழக்கை" 'எனவும் கூறியதுமதுவன்றோ? எனின்.

விடை! அற்றன்று. ஈண்டுகூறப்படுவது. என்னையெனில்? நான்காச்சிரமத்தினுக்கும் வேதங்களில் வெளிப்பட்ட விதியுள்ளதென்பது. அங்ஙனம் ஜாபால சாகையார் கூறுகின்றனர். சுருதி. శ్రుతిః॥ బ్రహ్మచర్యంసమాప్యగృహీభవేద్గృహాద్వనీభూత్వాప్రవ్రజేత్ ॥" = பிரமசரிய விரதத்தினை முடித்துக்கொண்டு இல்லறத்தானாகவேண்டும். பின்னங்கிருந்து வானப்பிரத்தனாய் அப்பால் சந்நியாசியாதல்வேண்டும். எறு. ஆசிரியர்கள் கருத்தோ சுக்கிலத்தினை விடாதுபற்றி நைட்டிகப் பிரமசாரியாக விருத்தன்முதலிய ஆச்சிரமத்துள் காமிக்கு அதிகாரமில்லையென்று கருதி அவனுக்கு வேறு ஆச்சிரமமில்லை கிரகத்தநிலையொன்றே தக்கதென்று

கூறினரென்று கூறினல் பெரியர் மொழிக்கு முரணுவதில்லை. முறையே நான்காச்சிரமமும் வேதத்தானே விதிக்கப்பட்டிருக்குமாக, எல்லா மறைமொழியுள்ளும் இல்லற வொழுக்க மொன்றே கூறப்பட்டது என்பதுமுறையன்று. என்னே ? வானப்பிரத்தனுக்கும் மனைவியிருத்தலால் வேள்வித்தியுள்ளது. நைட்டிகப் பிரமசரியனுக்கோ வெனில்? " బ్రహ్మచార్యాచార్యకులవాసీతృతీయో ఽత్యన్తమాత్మానమాచార్యకులేఽవసాదయన్ " என்று சாமவேதத்துட் கூறப்பட்டுள்ளது. (இச்சுருதியுரைமேல் நைட்டிகப்பிரமசரிய விதியுட்கூறப்பட்டது) உபகுர்வாணப் பிரமசாரிதருமம் எல்லாச் சாகையுள்ளும் உபநயந விதிகூறியவிடத்துள் வெளிபெறக் கிடந்தன. சந்நியாசியின் ஒழுக்கமோ உபநிடதங்களுள் வெளியாம் ஆதலின் " యావజ్జీవమగ్నిహోత్రం జుహుయాత్ " என்றுமேல் கூறியசுருதி காமியாயுள்ளவனைப் பற்றி வேறுஆச்சிரமம் அவனுக்கு விதிக்கலாகாமையின் இல்லறவொழுக்க மொன்றனையே கூறியதாமன்றி அவ்வளவானே வேறு ஆச்சிரமமே யில்லையென்று மறுத்தற்கமையாது. உத்தரமீமாம்ஸையுள் நன்குக வாராய்ச்சி செய்து நான்கு ஆச்சிரமங்களையும் கூறப்பட்டுள்ளது. "அஃதும் பிறன் பழிப்பதில்லாயினன்று. "என்பதுமது. வெனவுணர்க.

வானப்பிரத்தனுமாறு.

நிருத்த முறையே கூறப்பட்ட வானப்பிரத்த நிலைமையை யாஞ்ஞுவற்கியர் விதந்துகூறினர். యాజ్ఞవల్క్యః ॥ " సుతవిన్యస్తపత్నీకస్తయా వానుగతో వనం । వానప్రస్థో బ్రహ్మచారీ సాగ్నిస్సోపాసనో వ్రజేత్ " = வானப்பிரத்தனுவோன் தான்பிரமசரியனுகவே யிருத்தல்வேண்டுமாகலின் மனைவியிருத்தலாற் பயனில்லையாதலின், அவளையோம்புகவென்று புதல்வரிடம் நிறுத்தித்தான் காடுசெல்லவேண்டும். அல்லது, அந்தமனைவியும் பிரமசரிய நிலைமையுடையவளாய்க் கணவன்பணிபுரிந்து நிற்கவிரும்பின் அவளோடும் அடவிசெல்லுக அங்ஙனம், " வைதாகம், "கார்க்கியம் ,, என்னும் இரண்டு வேள்வித்தியோடும் பாதுகைதரித்து வனம்புகுக. எ-று. காண்க.

மனைவியைப் புதல்வர்பால் விடுத்துப்போவ தாமாயின் வேள்வித்தியைத் தன்னுள், சமாரோபணம் = நன்குகவேற்றி வைத்தல். எனவேவிதிப்படிக்கு உள்ளொடுக்கிக் கொண்டுசெல்ல

வேண்டுமென்றுசாகலேயர்கூறினர். శాకలేయః ॥ "అపత్నీకస్సమారోప్య ప్రాణేష్వగ్నీన్ప్రవ్రజేద్గృహాత్"—மனைவியற்ற வேதியனும் அவ்வேள்வித்தீயைத்தன்னுள்ளொடுக்கிக்கொண்டுமனை விடுத்துச்செல்லுக.எ-று.

வானப்பிரத்தன்வேள்வித்தீ விதி.

அங்ஙனம் செல்வோன், வனம்புக்குவைகானச சூத்திரத்துட்கூறிய வழியாக வேள்வித்தீயினை அமைத்துக் கொள்ள வேண்டுமென வசிட்டர்கூறினர். వసిష్ఠః ॥ " వానప్రస్థోజటిలశ్చీరాజినవాసానఫాలకృష్టమధిగచ్ఛేదకృష్టమూలఫలం సంచిన్వీతోర్ధ్వరేతాఃకుశాశయోదద్యాదేవన ప్రతిగృహ్ణీయాదూర్ధ్వం పంచభ్యోమాసేభ్యశ్శ్రావణకేనాగ్ని మాధాయాహితాగ్నిర్వృక్షమూలికోదద్యాద్దేవపితృమనుష్యేభ్యస్సగచ్ఛేత్స్వర్గమానంత్యం " = வானப்பிரத்தன் சடைதரித்து, மரவுரி, மான்தோல் தரித்து, உழுதாயினும், தோண்டுதல் செய்தாயினும் பயனையடையாது, உழவு முதலியவின்றித்தானாகப் பழுத்துள்ள கிழங்கு பழமுதலிய வற்றினைத் தேடியுண்டு, சுக்கிலத்தினைக் கிழ்விடாமல் இரவுப் போதொன்றிற்றானே படுத்து, கொடையேசெய்து, பிறர்பால் ஒன்றும் பெற்றுக் கொள்ளாது ஐந்துதிங்களும் கழித்த பின்பு, சிராவணத்தில் வேள்வித்தீயை ஆதானஞ்செய்து அதனைக்காத்துக்கொண்டு மரத்தடியில் குடியிருந்துகொண்டு, தேவர், இருடியர், தென்புலத்தார் = பிதிரர், விருந்தின ரிவர்களுக்குஉபகரித்துக்கொண்டு வரவேண்டும். எனவே ஐம்பெரும் வேள்விகளையும் நடத்திவரவேண்டும். அவன், முதல் முடிவற்றமேலுலகத்தையடைவன். எ-று. காண்க. சிராவணம், எனவே, தவஞ்செய்வார் தருமத்தினைக் கூறும்வைகானசநூல்.

வானப்பிரத்தன் மறுத்தவூண்.

மனு. మనుః ॥ " సంత్యజ్యగ్రామ్యమాహారం సర్వంచైవపరిచ్ఛదం। పుత్రేషు భార్యాంనిక్షిప్య వనంగచ్ఛేత్సహైవవా" = ஊரிற்பிறந்தவுண்டிகளையொழித்து எல்லாக்கருவிப் பண்டங்களையும் விடுத்து, மனைவியைப்புதல்வரிடம் விடுத்தாயினும், உடன் அழைத்துக்கொண்டாயினும், காட்டுக்குச் செல்லவேண்டும். எ-று.

வானப்பிரத்த நிலைமைக் குரியகாலம்.

இல்லறத்தான், காடுசெல்லத்தக்க காலத்தினை இயமன்கூறினர். యమః ॥ "ద్వితీయమాయుషోభాగముషిత్వాతుగృహేద్విజః। తృతీయమాయుషో

భాగంగృహమేధీవనేవసేత్ । ఉత్పాద్యధర్మతఃపుత్రానిష్ట్వాయజ్ఞాంశ్చశక్తితః । దృష్ట్వా పత్యస్యచాపత్యంబ్రాహ్మణోఽరణ్యమావిశేత్ " = இருபிறப்பாளன், தான் இல்லறத்தில் தன்னுடைய ஆயுளின் இரண்டாம் கூற்றினைக்கழித்து விட்டு மூன்ருவதுபாகத்தில் வனத்துள் வாழக்கடவன். தருமமாக மக்களைப்பெற்று, ஆற்றலுள்ளவளையில் வேள்விகளைச்செய்து தன் மகனுக்குப் புதல்வருண்டாகப் பார்த்துப் பின்பு வேதியன் வனம்புகவேண்டும். எ-று. ஈண்டு மூலத்துள் பிராமணன் என்பது உபலக்கணத்தால் உயர் மூவருணர்க்கும் பொருள் படுகின்றது. என்னை? இவ்வுரைத் தொடக்கத்தில் " ద్విజః " = துவிஜ: என்று தொடங்கியுள்ளது. இங்குள்ள இருபிறப்பாளர் என்பது மூவருணத்து இல்லறத்தினர்க்கும் பொதுச்சொல்லாக விருக்கின்றது.

மனுவுங்கூறினர். మనురపి ॥ " గృహస్థస్తుయదాపశ్యేద్వలీపలితమాత్మనః। అపత్యస్యైవచాపత్యంతదారణ్యంసమాశ్రయేత్ " = இல்லறத்தான் தன்னுடம்பில் திரைந்த தோலினையும் நரைத்த வுரோமங்களையும், மகனுக்கு மகனையும் எப்போது பார்ப்பானே? அப்போது காட்டினையே அடைதல்வேண்டும். எ-று.

சங்கலிகிதரும். శంఖలిఖితావపి॥ " పుత్రానుత్పాద్యసంస్కృత్యవేదమధ్యాప్య వృత్తింవిధాయదారైస్సంయోజ్య గుణవతిపుత్రేకుటుంబమావేశ్యకృతప్రస్థాన లింగోవృత్తి విశేషానుక్రమేత్యఋషీర్యాయావరాణాంవృత్తిముపాస్యవనమాశ్రయేదుత్తరాయణే పూర్వపక్షే " = புத்திரரைப்பெற்று உபநயநச் சடங்கு முடித்து வேதமோதுவித்துப் பிழைப்புவகை யேற்படுத்தி மணம்புணர்த்தி நற்குணமுடையவனுகிய மைந்தனிடத்து, குடும்ப பாரத்தை வைத்து, வெளிப்படும் எண்ணத்தோடு சிறந்த சிவனமார்க்கத்தை முறையே விடவேண்டுவது. உயர்ந்தோருடைய ஒழுக்கத்தினை யடுத்துணர்ந்து, உத்தராயணம் வளர்பிறையில் ஆரணியத்தினை யடையவேண்டும். எ-று. இது, மணம்புரிந்தவன் செய்யத்தக்க வகையென்றுணர்க. மணமில்லாதவழிப் பிரமசாரியே யானலும் வானப்பிரத்த நிலைமைக் குரியவனுகவே யிருக்கின்றான். என்றுணர்க.

அங்ஙனம் வசிட்டரும் கூறினர். వసిష్ఠః॥ " చత్వారఆశ్రమాబ్రహ్మచారిగృహస్థవానప్రస్థపరివ్రాజకాస్తేషాంవేదమధీత్య వేదౌవావేదాన్వావిశీర్ణ బ్రహ్మచర్యోయమిచ్ఛేత్త

మావసేత్ ”—பிரமசரியம், கிரகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம், என்னும் நான்கும் ஆச்சிரமமாம். வேதமோதியுணர்ந்து பிரமசரிய விரதத்தினை யனுட்டித்துப்பின்பு எந்த ஆச்சிரமத்தினை விரும்பினும் அதனை யனுட்டிக்கலாம். எ-று.

ஆபத்தம்பர். ఆపస్తంబః ॥ “ చత్వారఆశ్రమాగార్హస్థ్య మాచార్యకులం మౌనంవానప్రస్థం ” = நான்கு ஆச்சிரமங்கள், மனைக்கண்ணே யிருப்பது, ஆசிரியன் மனைக்கண்ணே யிருப்பது, மோனநிலையிலிருப்பது, காட்டிலிருப்பது, என்று தொடங்கி, “ యత్కామయేత తదారభేత ” = எதனைவேண்டுகின்றானே அதனைத் தொடங்குவன். என்று முடித்தனர். எ-று.

வானப்பிரத்தன் கருமம்.

காட்டினை யடைந்தவன் செய்யத்தக்கனவற்றை யாஞ்ஞவற்கியர் கூறினர். యాజ్ఞవల్క్యః ॥ “అఫాలకృష్టేనాగ్నీంశ్చపితౄన్దేవాతిథీనపి । భృత్యాంశ్చతర్పయేచ్ఛ్మశ్రుజటాలోమభృదాత్మవాన్” = ஏராலுழுதல் செய்யப்படாது விளைந்துள்ளன (கீரை, காய், கிழங்கு, செந்நெல்,) முதலியவற்றால், வேள்வித்தீயையும், பிதிரரையும், தேவரையும், விருந்தினரையும், பணிசெய்வோரையும் பலகாலும் திருத்திசெய்வித்தல்வேண்டும். சடைகளையும், மயிர்களையும். தரித்திருத்தல் வேண்டும். ஆன்மநிலையனா யிருத்தல்வேண்டும். எ-று. ஆன்மா என்பது, “ఆత్మాజీవేధృతౌదేహేస్వభావేపరమాత్మని” = சிவன், பொறுத்தல், தைரியம், உடம்பு, இயற்கை, கடவுள், என்பனவாம்.

மனு. మనుః ॥ “మున్యన్నైర్వివిధైర్మేధ్యైశ్శాకమూలఫలేనవా । ఏతైరేవమహాయజ్ఞాన్నిర్వపేద్విధిపూర్వకం” = பலவகைப்பட்ட முனிவர்களின் சுத்தவுண்டியாய (இலைக்கறி, கிழங்கு, காய், கனி) இவைகளானே விதிப்படி ஐம்பெரும் வேள்விசெய்ய வேண்டுவது. எ-று.

பிரமசாரியனுக்கும், மனைவி யிழந்தவனுக்கும், அக்கினியில்லாமையால் அவர்கள் வானப்பிரத்த நிலைமையை யடைந்தால் அக்கினியை எவ்வாறுதிருத்தி செய்விக்கக் கூடுமென்று சங்கிக்கலாகாது. என்னையெனில், அவர்க்கும் வைகானச நூலில் கூறப்பட்டிருக்கும் ஓர்வகை வேள்வித்தியுண்டு. என்றறிக.

ஏரால் உழுதலைச் செய்யாமலே கிடைக்கத்தக்க நீவார நெல்முதலியவற்றினால் புரோடாசஞ் செய்யவேண்டுமன்றோ? ஆயின், "వ్రీహిభిర్యజేత" — நெல்லால் வேள்விச்செய்ய வேண்டுவது. என்றசுருதிக்கு வாதையுண்டாம் என்று கடாவலாகாது. என்னை? காட்டில் ஏராலுழாமல் பிறக்கும் நெல்லுமுண்டு ஆதலின், உழுதுபயிரிடாமல் தானேவிளையும் நெல்முதலியவற்றினால் "வைதானிகாக்கினியில்" கருமங்களைச்செய்ய வேண்டுவது.

அங்ஙனம் மனுகூறினர். మనుః॥ "వైతానికంచజుహుయాదగ్నిహో త్రంయథావిధి । దర్శమస్కన్దయన్పర్వ పౌర్ణమాసంచయోగతః । ఋక్షేష్ట్యాగ్రయణంచైవ చాతుర్మాస్యానిచాహరేత్ । ఉత్తరాయణంచక్రమశోదాక్షస్యాయనమేవచ । వాసంత శారదైర్మేధ్యైర్మున్యన్నైస్స్వయమాహృతైః । పురోడాశాంశ్చరూంశ్చైవ విధివన్నిర్వ పేత్పృథక్" — "వైతానికం" — காருஹபத்தியமென்னும் குண்டத்திலிருக்குமதை, ஆகவனியம், தக்ஷிணாக்கினி என்னும் குண்டங்களிலும், விஹாரம்செய்து (இருக்கச்செய்தல்) வைத்தல் "వితానం விதானம்" என்னப்படும். அதனிடத் துண்டாகும் அக்கினிஹோத்திரம். "வைதானிகம்" என்னப்படும் அதனைச்சாத்திர முறைப்படி அனுட்டானஞ்செய்யவேண்டுவது. "தரிசம்" என்பது அமாவாசையாகம், இதுசுரௌதத்தில் "தரிசேஷ்டி என்னப்படும். ஸ்மார்த்தத்தில் "அமாவாசியாதாலிபாகம்" என்னப்படும். "பௌர்ணமாசம் என்பது, பௌர்ணமி தினத்திற்குச் செய்ய வேண்டிய வேள்விஎனவே இஷ்டிஸ்தாலிபாகம். இவைகள் "தரிசபூர்ணமாசம் என்னப்படும். இவற்றினை அவ்வவற்றின்காலம் நேர்ந்தபோது விடாது செய்யவேண்டும். "நக்ஷத்திரேஷ்டி", "ஆக்கிரேயணம்" (எனவே புதுத்தானியங்களாற் செய்யத்தக்க இஷ்டி) அவ்வாறே, "சாதுர்மாசியயாகம், உத்தராயணயாகம், தக்ஷிணாயனயாகம்", என்னுஞ்சுரௌத கருமங்களும் செய்யத்தக்கனவாம். வசந்தருதுவிற் பிறந்தனவாகவும், சரதிருதுவிற் பிறந்தனவாகவும், சுத்தமுடையன வாகவும், வேள்விக்கு அங்கங்களானவையாகவும், முனிவருண்டிக்குத் தக்கனவாகவும் உள்ள நீவாரம்முதலிய காட்டுத் தானியங்களைத்தானே கொண்டுவந்து அவற்றால் புரோடாசங்களையும். (வேள்விக்குத்தக்க மாப்பண்டங்களையும்) சருவினையும் (ஹோமத்திற்குத்தக்க அன்னங்களையும்) விதிப்படிவேறுவேறு சமைத்து உபயோகிக்க வேண்டும்.

எறு. நீவாரம் = செந்நெல். சாலிநெல்லென்பாருமுண்டு. முனிவர் உண்டிஎன்பது. உழுதுபயிரிடாது விளைந்தன. மேத்தியம்= சுத்தம்.

சேகரிக்கத்தக்கபண்டத்தளவு.

தேடிவைக்கத் தக்கபண்டம் இவ்வளவு என்பதனை யாஞ்ஞுவற்கியர் கூறினர். యాజ్ఞవల్క్యః॥ "అహ్నోమాసస్యషణ్ణాంవాతథాసంవత్సరస్య వా । అర్థస్యసంచయంకుర్యాత్కృతమాశ్వయుజేత్యజేత్" = ஒவ்வொரு தினத்திற்கு எவ்வளவுபண்டம் வேண்டுமோ அவ்வளவே யாயினும், ஒருதிங்களுக்குப் போதுமான அளவேயாயினும், அல்லது, ஆறுதிங்களுக்கே போதுமளவாயினும், முடிவில் வருடத்திற்குப் போதுமான அளவாயினுமகத் தானிய முதலியபண்டங்களைச் சேர்த்து வைத்துக் கொள்ளவேண்டும். வருடமுடிவிற் சிறிது மிருத்திருக்கு மாயின், ஆசுவீஜ (ஐப்பசி) மாசத்தில் அதனை விட்டுவிட்டுப் புதியதைச் சேகரித்துக் கொள்ள வேண்டுவது. எறு. ஈனவே, மிகுதியாகச் சேர்த்துவைப்பதில் அவா வைக்கலாகாதென்பதுகருத்து. இதனால், மிகவறியனாயிருந்தால் செல்வச்செருக்கு உண்டாகாது மனம்பொறுமை யுடையதாய்ச்சத்துவகுணத்தோடு, தேவபூசைக்கு அனுகூலமாமென்பது போதருகின்றது. இது சந்நியாசத்திற்கு அடுத்த நிலையாதலால் சிறிதுவைராக்கியமும் உண்டாயிருத்தல் வேண்டுமென்பது இந்நிலையின் ஒருதலையான துணிபாம்.

விஷ்ணு. విష్ణుః॥ "మాసనిచయస్సంవత్సరనిచయోవా సంవత్సరనిచయీ పూర్వంనిచయమాశ్వయుజ్యాంజహ్యాదితిసంత్యజ్యతతో నూతనంసంచినుయాత్" =மாசத்திற்கு வேண்டுமளவான பண்டஞ்சேர்த்து வைப்பவனாயினும், வருடத்திற்குச்சேர்த்து வைப்பவனேயாயினுமாகலாம். ஆனால், வருடத்திற்குப் போதுமான அளவைக்கு மேலிருந்தால், அவ்வருடம்முடிவதற்குள்ளாகவே ஐப்பிசிமாசத்தில் அதனைச்செலவு செய்து விடவேண்டும். அங்ஙனம் விட்டபின்பு புதியதைச்சேர்த்து வைத்தல்வேண்டும். அல்லது, அறுத்துச்சேர்த்துக்கொள்ள வேண்டும். எறு.

மனு. మనుః॥ "త్యజేదాశ్వయుజేమాసేమున్యన్నంపూర్వసంచితం । జీర్ణానిచైవవాసాంసిశాకమూలఫలానిచ । సద్యఃప్రక్షాళకోవాస్యాన్మాససంచయికోపివా । షణ్మాస

నిచయోవాస్యాత్సమానిచయఏవవా" = முன் தேடிவைத்த முனிவருணவை, ஐப்பசிமாசத்தினுட்டானே செலவுசெய்து விடவேண்டும். ஆடை, கறி, காய், கனி, கிழங்கு, முதலிய வெவற்றினைச் சேர்த்து வைத்திருக்கினும் செலவுசெய்து விடவேண்டும். அப்போதைக்கப்போது தேடி, அன்றன்றே செலவுசெய்து கைகழுவுவோனாகவாவது, ஒருதிங்களுக்குச்சேர்த்துவைப்பவனாகவாவது, ஆறு திங்களுக்குச் சேர்ப்பவனாகவாவது, வருடத்திற்குச் சேர்ப்பவனாகவாவது ஆகலாம். எறு. காண்க.

வானப்பிரத்த ரொழிக்கத் தக்கன.

அவற்றுள், ஒழிக்கத் தக்கனவற்றை மனுகூறினர். మనుః॥ "వర్జయేన్మధుమాంసంచ భౌమానికవకానిచ । భూస్తృణంశిగ్రుకంచైవ శ్లేష్మాతకఫలాని చ । నఫాలకృష్టమశ్నీయాదుత్సృష్టమపికేనచిత్ । నగ్రామజాతాన్యార్తోపిమూలానిచ ఫలానిచ"=தேன், ஊன், மண்ணிற் பிறந்த குடைக்காளான், பூஸ்திருணி=ஓர்வகைஇளம்புல், இது மாளவதேயத்துள்ளதோர் இலைக்கறியென்று குல்லூகபட்டர். உரையெழுதினர். (சிக்குரு) முருங்கை, (சிலேஷ்மாதகம்) நறுவிலி, இவற்றை விட்டுவிடவேண்டும். உழுதநிலத்திற் றோற்றியபண்டங்களைநிலத்துக்குடையவன்விரும்பிக்கொடுத்தாலும் புசிக்கலாகாது. யாராலாயினும் விட்டுவிடப்பட்டதாயிருக்கினும் அந்தப்பண்டங்களைத்தின்னலாகாது. உழாத பூமியிலும் கொடி, செடி, வேர், கிழங்கு, பழம், இவை ஊரினுள் விளைந்தனவாயிருந்தால் எவ்வளவு பசியுடையானாயினும் தொடலாகாது.எறு. "కవక=கவகம்" - என்பது,சத்திராகம்=குடையையொத்த வடிவமுடையது. ஆனவே குடைக்காளான். என்று குல்லூகபட்ட ருரையெழுதினர். "கவகம்," "கோசிங்குவை," எருதின் நாவினையொத்தது. இதுவனசரர் உண்டியில் வழக்கமாயுள்ளது என்று மேதாதிதி என்பவர் உரையெழுதினர். அது நிகண்டில் கிடைக்கவில்லை. இயமஸ்மிருதியில் இதனைச் "சத்திராகம்" என்று கூறப்பட்டுள்ளது. இந்தக்காளான் நிலத்திற் பிறந்தால் தின்னலாகாது. மரத்திற் பிறந்தனவற்றைத் தின்னலாமென்று, கோவிந்தராயர் என்னுமுரைகாரர் எழுதினர். இருபிறப்பாளன், கவகத்தினைத் தின்னலாகாதென்று பொதுவகையாகவே மனுவிலக்கினர். நிலத்திற் பிறந்தனவாயினும் மரங்களிற் பிறந்தனவாயினுமாக, இருபிறப்பாளர் அந்தச்சத்திராகத்தைத்

தின்றால் பிரமகத்திதோஷம் வருமென்று இயமஸ்மிருதி கூறுகின்றது. இதனால், குடைக்காளானைச் சூத்திரர் முதலியோரும் காட்டு மனிதரும் உண்டு வருவதாகத் தோற்றுகின்றது.

வானப்பிரத்தன் தவநியமம்.

வானப்பிரத்தன் செய்யத்தக்க தவத்தின்முறையை யாஞ்ஞாவற்கியர் கூறினர். యాజ్ఞవల్క్యః ॥ "దాన్తస్త్రిషవణస్నాయీనివృత్తశ్చ ప్రతిగ్రహాత్ । స్వాధ్యాయవాన్దానశీలస్సర్వసత్వహితేరతః । దన్తోలూఖలికఃకాలపక్వాశీ వాశ్మకుట్టకః। శ్రౌతస్మార్తఫలస్నేహైఃకర్మకుర్యాత్తథాక్రియాః। చాన్ద్రాయణైర్నయేత్కాలంకృచ్ఛ్రైర్వావర్తయేత్సదా। పక్షేగతేపివాశ్నీయాన్మాసేవాహనివాగతే। స్వపేద్భూమౌశుచీరాత్రౌదివసంప్రపదైర్నయేత్ । స్థానాసనవిహారైర్వాయోగాభ్యాసేనవాతథా । గ్రీష్మే పంచాగ్నిమధ్యస్థోవర్షాసుస్థణ్డిలేశయః। ఆర్ద్రవాసాస్తుహేమన్తేశక్త్యావాపితపశ్చరేత్" =பொறிகளை யடக்கினவனாய் முக்காலு நீராடிப்பிறர்பால் வாங்குதலையொழித்து வேதமோதிப் பிறர்க்குக்கொடுக்கு மியல்பினனாய் எல்லாவுயிர்களிடத்து மிதத்தினையே கருதி, உரல் உலக்கைமுதலிய வெளிக்கருவிகளை வேண்டாது நெல் முதலியவற்றின்கணுள்ள உமிமுதலியவற்றை பற்களால் போக்கிக்கொண்டு அந்தந்தக்காலங்களில் தானே பழுத்துக் கிடைக்கத்தக்க இலந்தை, பாலா, இங்குதி, முதலிய பழங்களையுண்டு குற்றிக்கொள்ளத்தக்கதனை கல்லாற்குற்றி யெடுத்து, இலுப்பைக்கனிமுதலிய சுத்த கனிகளாலுண்டாகும் நெய்முதலிய சிக்குகளினால் சுரௌதஸ்மார்த்த கருமங்களையும், உண்டி, நெய் முழுக்காட்டு முதலியவைகளையும் நிறைவேற்றிக்கொண்டு எப்பொழுதும் சாந்திராயண முதலிய விரதத்தாலாயினும் கிருச்சிர வுபவாச முதலிய விரதத்தாலாயினும் தன் பொழுதைக் கழித்துக்கொண்டு நாளுக்கொரு விசையாவது, பக்ஷத்திற் கொரு விசையாவது, திங்களுக்கு ஒருவிசையாவது ஆகாரங் கொள்ளவேண்டுவது. இராவில் சுத்தனாய் நிலத்தின்மேல் படுக்கவேண்டும். பகலில் கால் முழுவதும் நிலத்தின்மேற்படாது கால்விரன்மேனின்று பொழுதைக்கழிக்கவேண்டும். அல்லது, தவத்திற்குத்தக்க இடம், மெதுவானஆசனம், உறைவிடம், இவற்றாலாகும் யோகப்பயிற்சியாலாயினும் இருக்க வேண்டும். உடலளவு வலியவா யிருக்கின் வேனிலில், ஐந்தீ = பஞ்சாக்கினி நடுவில்நின்றும், மழைகாலத்தில், மணற்றரைமீதுபடுத்தும், குளிர்காலத்தில் ஈரவுடையை

யுடுத்தும்உடம்புறுநோயைப் பொறுத்துத்தவஞ் செய்யவேண்டு வது. எ-று. இதுவே எண்வகைப்பக்கத்துத் தாபதநிலையாம். வரு மாறு. ஐயனாரிதனார்வெண்பாமாலை, வாகைப்படலம், தாபதவா கை, எ-று – தாபதமுனிவர் தவத்தோடு முயங்கி யோவுதலவியா வொழுக்குரைத்தன்று. வ-று – நீர்பல்கான் மூழ்கிநிலத்தசைஇத் தோலுடையாச்-சோர்சடை தாழ்ச்சுடரோம்பி-யூரடையாக்-கான கத்தகொண்டு கடவுள் விருந்தோம்பல் வானகத்துய்க்கும் வழி. என்பதுமது. "உற்றநோய் நோன்றலுயிர்க் குறுகண்செய்யா மை. யற்றேதவத்திற் குரு." என்றார் தேவர்.

விஷ்ணு. విష్ణుః ॥ "వాయుపుష్పాశీఫలాశీమూలాశీశాకాశీపర్ణాశీవాయుప క్వాన్నమేకాన్నంసకృద్భక్షయేత్" = காற்றினு லுதிர்ந்தபூ, பழம், வேர், இலை, சருகு, காற்று, பக்குவமான மற்றையவுணவுள் ஏதேனும் ஒன்றையொருதரமே யுண்டிருக்க வேண்டுவது. எ-று. காண்க.

கூர்மபுராணம். కూర్మపురాణే ॥ "ఏకపాదేనతిష్ఠేతమరీచీన్వాపిబేత్సదా । పంచాగ్నిర్ధూమపోవాస్యాదూష్మపస్సోమపోథవా । పయఃపిబేచ్ఛుక్లపక్షేకృష్ణపక్షేచగో మయం । శీర్ణపర్ణాశనోవాస్యాత్కృచ్ఛ్రైర్వావర్తయేత్సదా । అథర్వశిరసోధీత్యవేదాంతా భ్యాసతత్పరః । యమాంత్సేవేతసతతంనియమాంశ్చాప్యతంద్రితః । జితేంద్రియోజితక్రోధ స్తత్త్వజ్ఞానవిచింతకః । బ్రహ్మచారీభవేన్నిత్యంనపత్నీంప్రతిసంశ్రయేత్ । యస్తుపత్న్యాసమం గత్వామైథునంకామతశ్చరేత్ । తద్వ్రతంతస్యలుప్యేతప్రాయశ్చిత్తీయతేద్విజః । నక్తంచా న్నంసమశ్నీయాద్దివావాహృత్యశక్తితః । చతుర్థకాలికోవాస్యాత్సద్వాచాష్టమకాలికః । చాంద్రాయణవిధానైర్వాశుక్లేకృష్ణేచవర్తయేత్ । పక్షేపక్షేసమశ్నీయాద్యవాగూంక్వథి తాంసకృత్ । పుష్పమూలఫలైర్వాపికేవలైర్వర్తయేత్సదా । స్వాభావికైస్స్వయంశీర్ణైర్వైఖానసమతేస్థితః" = ஒற்றைக்காலினால்நிற்பது, சூரியகிரணங்களையுண்டு நிற்பது, ஐந்தீப்புகையுண்பது, வெப்பத்தையுண்டு இருப்பது, சந்திரகிரணங்களைப் புசித்திருப்பது, வளர்பிறையிற் பாலுண் டிருப்பது, தேய்பிறையில் ஆப்பி (பசுவின்சாணம்) உண்பது, உதிர்ந்த சருகுண்பது, கிருச்சிரோபவாச விரதஞ்செய்வது, அதர்வ சிரசு என்னும் வேதத்தினையோதுவது, வேதாந்தங் களைப்பயில்வது, இயமநியமமுதலியயோகங்களைப்பயில்வது, ஐம் பொறிகளையு மடக்குவது, தத்துவ ஞானங்களையுணர்வது, எப் பொழுதும் பிரமசாரியாகவேயிருப்பது, மனைவியோடு புணர்ச்சி செய்யலாகாது, சேர்ந்து காமவின்ப நுகர்ந்தால் விரதக்கேடும்

கழுவாயுமுண்டாம். இரவின் கண்ணே யொரோபொழுதுண்டல், பகற்போ தொருக்காலேயுண்டல், நித்தமும் நாலாம் யாமத்தி லுண்பது, சாயுங்காலவுண்டி, நான்குதினத் தொருமுறை யுண்டல், சாந்திராயணநோன்பு, வளர்பிறையுண்டியொழித்தல், தேய்பிறையில் உண்டியொழித்திருப்பது, பக்ஷத்தொருமுறை யுண்டிருத்தல், கொதித்த கஞ்சியை யொருமுறையே குடித்திருப்பது, தானே பழுத்துதிர்ந்துகிடைத்த, பூ, கனி, இவைகளால் பிழைத்திருப்பது என்னு மிவ்விரதங்க ளெல்லாவற்றினையும் வைகானச மதங்களிலிருக்கும் வானப்பிரத்த இருடிகள் ஒவ்வொன்றாக அனுட்டிக்கவேண்டுவது. எ-று. இந்தநோன்பின்முனிவர் முருகாற்றுப்படை, "சீரைதைஇயவுடுக்கையர்சீரொடு, வலம்புரி புரையும் வானரைமுடியினர், மாசறவிமைக்கு முருவினர்மானி, னுரிவைதைஇயவூன்கெடுமார்பினர், என்பெழுந் தியங்கும்யாக்கையர் நன்பகற், பலவுடன்கழிந்த வுண்டியரிகலொடு, செற்ற நீங்கிய மனத்தினர் யாவதும், கற்றோ ரறியாவறிவினர் கற்றோர்க்குத், தாம் வரம்பாகிய தலைமையர்காமமொடு, கடுஞ்சினங்கடிந்த காட்சியரிடும்பை, யாவதுமறியா வியல்பினர்மேவரத், துனியில் காட்சி முனிவர் முற்புக: என்றவராம். இவர் சூரியன் வெம்மை தாங்கி முன்செல்வோர். இதனை, நச்சினார்க்கினிய ருரையானும், அருணோபநிடத பாடியத்தானு முணர்க.

அக்கினியைப் பூசிப்பதில் ஆற்ற லில்லாதவனைப் பற்றி யாஞ்ஞவற்கியர் கூறினர். యాజ్ఞవల్క్యః॥ అగ్నీనప్యాత్మసాత్కృత్వావృక్షవాసోమితాశనః। వానప్రస్థోగృహేష్వేవయాత్రార్థంభైక్షమాచరేత్। గ్రామాదాహృత్యవైగ్రాసానష్టౌభుంజీతవాగ్యతః" = வேள்வித்தீயையும் தன்னுள்ளே யொடுக்கிக்கொண்டு விட்டுவிட்டு மரத்தடியிலிருந்து உண்டியைச் சுருக்கி வானப்பிரத்தன் இல்லறத்தாராகிய தாபதரிடத்து (வானபிரத்தரிடத்து) தன்காலங்கழித்தற் பொருட்டுப் பிச்சையேற்க வேண்டுவது. அல்லது, ஊரின்கணிருந்தாயினும எட்டுக்கவளங் கொடுவந்து மௌனமாக உண்ணவேண்டும். எ-று.

மனுவும், మనురపి॥ "అగ్నీనాత్మనివైతానాంత్సమారోప్యయథావిధి। అనగ్నిరనికేతస్స్యాన్మునిర్మూలఫలాశనః। అప్రయత్నస్సుఖార్థేషుబ్రహ్మచారీధరాశ్రయః। గృహమేధిషుచాన్యేషుద్విజేషువనవాసిషు। గ్రామాదాహృత్యవాశ్నీయాదష్టౌగ్రాసాన్వనేవసన్।

ప్రతిగృహ్య పుటేనైవ పాణినా శకలేన వా । ఏతాశ్చాన్యాశ్చ సేవేత దీక్షా విప్రో వనే వసన్ । ఆసాం మహర్షిచర్యాణాం త్యక్త్వాన్యతమయా తనుం । వీతశోకభయో విప్రో బ్రహ్మలోకే మహీయతే” = வைதாநிகத்தீயினை மந்திரவிதியோடு தன்னுள்ளடக்கிக்கொண்டு வெளித்தீ யில்லாதவனாய் உறைவிடமில்லாதவனாய் மோனத்தோடு வேரையும் பழங்களையுந் தின்பவனாய் இன்பப் பயன் பொருட்டு முயற்சி யில்லாதவனாய் பிரமசாரிய விரதத்தோடு நிலத்தையடுத்து, வேறான இல்லறத்தாரும் இருபிறப்பாளருமாகிய தாபதரிடத்தாயினும் அல்லது ஊரின்கணிருந்தாயினும் எட்டுக்கவளச்சோறு ஏற்றுவந்துநின்று காட்டிலிருக்க வேண்டுவது. இலையாலேனும், அங்கையாலேனும், ஓட்டினாலேனும் பிச்சைபெற வேண்டுவது. காட்டிலிருக்கும் வேதியன் இவற்றையும் இன்னுமுள்ள ஏனைய நோன்புகளையும் அனுட்டிக்கவேண்டுவது. முனிவர்களுடைய ஒழுக்கங்களில் யாதானுமொன்றினால் தேகத்தைவிட்டுத் துன்பமும் அச்சமுமில்லாத வேதியன் பிரமலோகத்தில் பெருவிழாக்கோள் பெறுவன். எறு. காண்க.

அற்றேல், எட்டுக்கவளத்தை ஏற்கவேண்டுமென விதிக்கின் “ఆరణ్యవాసినః” = அடவியின் கண்ணிருப்போர்க்கு பதினாறு. என்றமொழி முரணுறும். என்னின், அங்ஙனமன்று, ஆற்றலுடையாற் கவ்வெட்டே போதும் அஃதில்லாதவன் பதினாறு பிடிஏற்றலாம் என்றுகருத்துக் கொளின் ஒக்குமென்க.

எல்லா வனுட்டானங்களையும் ஆற்றலில்லாதானைப் பற்றி யாஞ்ஞவற்கியர் கூறினர். యాజ్ఞవల్క్యః॥ “వాయుభక్షః ప్రాగుదీచీం గచ్ఛేద్వావర్ష్మసంక్షయాత్” = காற்றினைப் புசித்து வடகிழக்கு முகமாக (ஈசானதிசைமுகமாக) நடத்தல்வேண்டும். எறு.

கூர்மபுராணம். కూర్మపురాణే॥ “మహాప్రస్థానికం వాసౌ కుర్యాదనశనం తు వా। అగ్నిప్రవేశమన్యద్వా బ్రహ్మార్పణవిధౌ స్థితః” = நோற்றற்குச் சத்தியற்ற வித்தாபதன் தன்யாக்கையைப் பிரமத்திற்கு நிவேதிக்கும் விதிக்கண்ணிலைத்தோனாய் “மஹாபிரத்தானம்” என்னும் வடதிசை நோக்கியேனும் செல்க. இல்லையேல் பட்டினிகிடக்க. அல்லாக்கால், தீக்கணேனும் விழ்ந்தொழிக. மற்றெத்திறத்தேனும் எனவே கங்கைக்கட் டேகத்தை விடுத்தேனு மொழிக. எறு. எனவே அஃது நியமமாதலின் ஆன்மகத்திற்குற்ற மில்லென்பது கருத்து.

வானப்பிரத்த நிலைமைப்பயன்.

தாபதநிலைமையின் பயனைக்கூர்மபுராணம். கூறிற்று. కూర్మ పురాణే॥ "యస్తుసమ్యగిమమాశ్రమం శివంసంశ్రయతే శివపుంజనాశనం। తాపహర్తృ సదమైశ్వరం పరంయాతియత్ర జగతోస్యసంస్థితిః" = மங்கலமாகவும் அமங்கலத் தொகுதியை யழிப்பதாயுமுள்ள விந்நிலைமையை நன்கு நோற்பவன், எல்லாப்பூதங்களு நிலைபெற் றுள்ளதோர் பொருளாகவும், துன்பங்க ளெல்லாவற்றினையும் ஒழிப்பதாயும் சிறந்ததாகவுமுள்ள கடவுள் திருவடியைப் பெறுவன். எ-று.

வானப்பிரத்தநிலைமை முற்றிற்று.

சந்நியாச ஆச்சிரமம்.

இனிநாலாவது ஆச்சிரமம் விதிக்கப் படுகின்றது. மனு. మనుః॥ "వనేషువిహృత్యైవం తృతీయంభాగమాయుషః। చతుర్థమాయుషోభాగం త్యక్త్వాసంగాన్పరిత్యజేత్" = ஒருவன் தன்னாயுளின்மூன்றாவதுபாகத்தைக் காட்டிலின்பமாகக்கழித்து, நாலாவதுபாகத்தை யடைந்துபுறப் பற்றுக்களையெல்லாம் ஒழித்துவிடவேண்டும். எனவே சந்நியாசியாதல்வேண்டும். எ-று.

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యః॥ "వనాద్గృహాద్వాకృత్వేష్టిం సర్వవేదసదక్షిణాం। ప్రాజాపత్యాంతదంతే తానగ్నీనారోప్యచాత్మని। అధీతవేదోజపకృత్పుత్రవానన్నదోగ్నిమాన్। శక్త్యాచయజ్ఞకృన్మోక్షే మనఃకుర్యాత్తునాన్యథా" = காட்டிலிருந்தாயினும் மனையி லிருந்தாயினும் முற்று மொழித்துச் செல்ல வேண்டினோன், "సర్వవేదసం" = தனக்குள்ள பொருளெல்லாவற்றினையுமறிந்தீதல். என்னும் தக்ஷிணையையுடைய வேள்வியைச் செய்து, பின்பு பிரஜாபதியையே தெய்வமாகவுடைய பிராஜாபத்திய வேள்வியைச்செய்து முடிவில் அந்தத்தீயைத் தன்னுள்ளே அடக்கிக்கொள்ள வேண்டுவது. வேதமோதி, மந்திரங்களைச்செபித்து, மக்களை யுடையவனாய் அன்னதானஞ் செய்து வேள்வித்தீயோம்பி, சத்தியுள்ளவனாயில் வேள்விகளைச்செய்து பின்புமனத்தை முத்தியில்வைக்க வேண்டுமென்றி வேறுவகையா

வில்லை. எ-று. இங்கு ஆச்சிரமங்கள் நான்கு என்ற கருத்தால் மனத்தினை முத்தியில்வைக்க வேண்டுமென்று கூறப்பட்டது. ஆச்சிரமங்கள் மூன்றினையுஞ் சேர்த்தகருத்தால் மனைக்கணிருந் தாயினும் காட்டிலிருந்தாயினு மென்று பிறர்மதமாகக் கூறப் பட்டுள்ளது. ஆனால், சாதாரணமாக நான்கு ஆச்சிரமங்களையும் சேர்ந்தகருத்தினைக் கொண்டு சந்நியாசமானபின்பும் வானப்பிரத் தாச்சிரமஞ் செய்யலாமன்றோ? எனின் அங்ஙனமன்று பிரமசாரி யம்முதலிய நான்கு ஆச்சிரமத்துள்ளே வரிசையாக மேலே மேலேயேறுதற்கு மாத்திரம் முறைதவறுதுள்ளது. அவ்வாறே ஜாபால சாகையை யுடையவர்கள் ஆச்சிரமங்களில் மேலேறு வதனையுடன் படுகின்றனர்.

ஜாபாலசுருதி. జాబాలశ్రుతిః॥ "బ్రహ్మచర్యంసమాప్యగృహీభవేత్, గృహా ద్వనీభూత్వాప్రవ్రజేత్" — பிரமசாரிய நிலைமையை முடித்துக் கிரகத்த னாதல்வேண்டும், அந்த வில்லறத்திலிருந்து, வானப்பிரத்தனாகிச் சந்நியாசஞ் செய்தல்வேண்டும். எ-று.

இவ்வாறே மேல் நிலையிலிருந்து கீழ்நிலைக்கு இறங்குதல் சுருதியுள் யாண்டும் கூறப்பட்ட தில்லையோவெனில்? இல்லை. அல்லதூஉம் இறங்கலாகாதென தக்ஷஸ்மிருதியில் விலக்கப்பட் டுள்ளது. దక్షః॥ త్రయాణామానులోమ్యంస్యాత్ప్రాతిలోమ్యంనవిద్యతే। ప్రాతిలోమ్యేనయోయాతిసతస్మాత్పాపకృత్తమః। యోగృహాశ్రమమాస్థాయబ్రహ్మచారీభవేత్పునః। నయతిర్నవనస్థశ్చసర్వాశ్రమవర్జితః"—மூன்று ஆச்சிரமத்தி னும்மே லேறுவதொழியக் கீழிழிவதில்லை. பின்னுக்கு வந்தவன் மிகு பாவஞ் செய்தவனும். இல்லறத்தான் பிரமசாரியானாலும் சந்நி யாசி வானப்பிரத்தனானாலும் அவன் ஒரு நிலைமையும் இல் லாதவனாய் விடுவான். எ-று. எனவே, இல்லறத்தான் எவ்வா றேனும் இழிந்துமீட்டும் பிரமசாரியானால் அவன் "ஆரூடபதி தன்" — ஏறிவிழுந்தவன் — நிலைதவறினவன், ஆதலால், எல்லா ஆச்சிரமத்திலிருந்தும் புறங்கழிக்கப் பட்டவனாவன். அதனால் "వనస్థః" "வநஸ்தன்" என்பது முதலிய மொழிகளால் கீழ் இழியத்தக்க வேறுபாடுகள் செய்யலாகாது. இங்ஙனம் பின் திரும்பலாகாது என்றவிடயம் உத்தரமீமாம்ஸை. ௩-வது. அத். கூறப்பட்டுள்ளது. ஈண்டு, "వనాద్గృహీవా" என்ற யாஞ்ஞ வற்கிய மொழியால் காட்டுகின்ற விகற்பம் "బ్రహ్మచర్యాద్వా"

என்று பொருள் தரத்தக்கது. ஆகலான் பிரமசாரியாக விருக்கினும், இல்லறத்தானாக விருக்கினும் வானப்பிரத்தனாக விருக்கினும், சந்நியாசியாவதற்கு உரியவனாகலாம் என்பது கருத்தாம்.

சந்நியாச காலம்.

தனது முற்பிறப்பிற்செய்த புண்ணியம் ஈண்டு பழுத்து வருதலால். இளமையிற்றானே வைராகமுண்டாகுமாயின் அப்பொழுதே மணமில்லாத, பிரமசரிய நிலைமையிலிருந்துஞ் சந்நியாசியாகலாம். ஜாபாலசுருதி கூறுகின்றது. జాబాలశ్రుతిః॥ "యది వేతరథా బ్రహ్మచర్యాదేవ ప్రవ్రజేద్గృహాద్వా వనాద్వా" அங்ஙன மல்லாக்கால் வேறு விதமாகப் பிரமசரியத்திருந்தே நீத்தலுமாம். இல்லறத்திருந்தும் வானப்பிரத்தத்திலிருந்தும் நீத்தலாம். எ-று. (நீத்தல்= பற்றுவிடுதல்) ஈண்டுமுதலில் வைராகமில்லாத இளையோனைப் பற்றி நான்கு பங்கினுள்ளே வரிசையாக அனுட்டானஞ்செய்ய வேண்டுமென்றுகூறிப் பின்பு வைராகமுடைய மைந்தனைப்பற்றி "యది వా" என்று வேறொருவகையும் விதிக்கப்பட்டது. "ఇతరథా" வேறுவிதமாக. எனவே, இளமையிற்றானே வைராகமுடையோனாகிய என்னும் பொருட்டு.

மணம் புணராதவனுக்குச் சந்நியாசம் தக்கதுமாம் என்று நரசிங்கபுராணத்துள்ளும் கூறப்பட்டது. నృసింహపురాణే॥ "యస్యైతాని సుగుప్తాని జిహ్వోపస్థోదరం శిరః। సన్న్యసేదకృతోద్వాహో బ్రాహ్మణో బ్రహ్మచర్యవాన్" = பிரமசரிய வேதியன் மணம்புணராது விட்டால், நமக்கு ஆண்குறி, வயிறு, தலை, இந்நான்கும் நன்றாகக் காக்கப்படும் பக்கத்தில் சந்நியாசஞ் செய்யலாம். எ-று.

அங்கிரசுவும் கூறினர். అంగిరాః॥ "సంసారమేవం నిస్సారం దృష్ట్వా సారదిదృక్షయా। ప్రవ్రజత్యకృతోద్వాహః పరం వైరాగ్యమాశ్రితః। ప్రవ్రజేద్బ్రహ్మచర్యేణ ప్రవ్రజేచ్చగృహాదపి। వనాద్వా ప్రవ్రజేద్విద్వా నాతురో వాథ దుఃఖితః" = இந்தச் சமுசாரம் பசையற்றது என்று மெய்யுணர்ந்து இதன் முடிவறியும் கருத்தோடு சிறந்த வெறுப்பினைப்பற்றினவன் மணம் புரியாமலே துறக்கின்றான். ஆதலால் பிரமசரிய நிலைமைக்கணிருந்தும் துறக்கலாம். இல்லறத்தினின்றும் துறக்கலாம். வானப்பிரத்தத்தினின்றும் துறக்கலாம். அறிவுடையோனும், சாநாளடுத்ததென்றுஉணர்ந்தவனும்சாதற்குவிரும்பினோனும் "ఆతురః=

ஆதுரன்" என்னப்படுவென். பெருத்தநோய், மிருத்தகள்ளர்பயம், புலிமுதலிய விலங்கின் பிடைமுதலிய துன்பமுடையவன். இவ ரனைவரும் அப்போதே துறவு அடைவர். எ-று.

ஆதுரசந்நியாசம்.

மஹாபாரதம். మహాభారతే॥ "ఉత్పన్నే సంకటే ఘోరే చోరాహివ్యాఘ్రసంకటే। భయభీతస్య సన్న్యాసమంగిరా మునిరబ్రవీత్। ఆతురాణాం చ సన్న్యాసే న విధిర్నైవ చ క్రియా। ప్రైషమాత్రం సముచ్చార్య సన్న్యాసం తత్ర పూరయేత్" = கொடுமை யான இடையூறு நேர்ந்தவிடத்தும், கள்ளர்பாம்பு புலிமுதலிய இடையூறு நேர்ந்தபோதும், பெரும்பயம் உண்டானபோதும், அச்ச மடைந்தவனுக்கும் சந்நியாசம் தக்கதென்று அங்கிரோ முனிவர்கூறினர். இவ்வகைப்பட்ட ஆதுரர்கள் சந்நியாசம்பெ றுகையில் அதற்கோர் விதியாயினும் நிவர்த்தி கருமமாயினும் இல்லையாம். "ప్రైషమంత్రం" = பிரோஷமந்திரத்தினை "மாத்திரம் கூறிச்சந்நியாசத்தினை அவ்விடத்து முடித்துக்கொள்ள வேண் டும். எ-று.

கடனைத் தீராதவனுக்குப் பற்றறுதி யில்லையென்ற பூருவபக்ஷம்.

ஆயின், பிரமசரியத்திருந்தே துறக்கலாமென்ற பக்ஷத்தில், மனுவுரைக்கு முரணுண்டாகின்றது. ஆதலின் அங்ஙனம் புரிய லாகாது. మనుః॥ "ఋణాని త్రీణ్యపాకృత్య మనో మోక్షే నివేశయేత్। అనపాకృత్య మోక్షం తు సేవమానో వ్రజత్యధః। అధీత్య విధివద్వేదాన్ పుత్రానుత్పాద్య ధర్మతః। ఇష్ట్వా చ శక్తితో యజ్ఞైర్మనో మోక్షే నివేశయేత్। అనధీత్య గురోర్వేదాననుత్పాద్య తథాత్మజాన్। అనిష్ట్వా చైవ యజ్ఞైశ్చ మోక్షమిచ్ఛన్ వ్రజత్యధః" = மூன்று கடனையும் தீர்த்து மனத்தைமுத்தியில் செலுத்தவேண்டுவது. தீர்க்காமலே முத்தி வழியை யனுட்டிப்பவன் கீழ் நிலைக்குப் போகின்றான். விதிப் படிவேதமோதி, தருமத்தோடு ஒழுகி, மக்களைப்பெற்று, ஆற்ற லுள்ளவாயில் வேள்விகளைச்செய்து, பின்புவீட்டு நெறியில் விருப்பங் கொள்ளவேண்டும். குரவனையடுத்து வேதமோதா மலும், பிதிரர் பொருட்டுப் புதல்வரைப் பெறாமலும், வேள்வி யால் தேவரைப்பூசியாமலும் வீடுசேர விரும்புவோன் கீழ்விழு வான். எ-று.

முக்கடன்.

முக்கடனும் சுருதியாற் கூறப்பட்டது. శ్రుతిః॥ " జాయమానో వై బ్రాహ్మణస్త్రిభిర్ ఋణవాఞ్జాయతే బ్రహ్మ చర్యేణర్షిభ్యో యజ్ఞేన దేవేభ్యః ప్రజయాపి తృభ్య ఏష వా అనృణో యః పుత్రీయజ్వా బ్రహ్మచారివాసీ " = பிறக்கும்பொழுதே வேதியன் மூன்றுகடனையும் உடையவனாகவே பிறக்கின்றான். பிரமசரிய விரதத்தினைச்செய்து இருடிகளுக்குக் கொடுக்கத்தக்க கடன்ஒன்று. வேள்வியால் தேவர்கட்குக் கொடுக்கத்தக்க கடன் ஒன்று. புதல்வரால் பிதிரர்கட்குச் செலுத்தத்தக்ககடன்ஒன்று. யார்புதல்வரைப் பெற்றவனோ? யார்வேள்விகளைச் செய்தவனோ? யார் பிரமசரியாக விருப்பவனோ? அவனன்றோ கடனற்றவன். எ-று. சுவர்க்கம்புகுவிக்கும் " பிதிர்யாநம் " என்ற கருமமார்க்கமும் கடனைத்தீராமலே கிடைப்பதில்லையாகவே வீட்டுநெறியெவ்வாறு கைகூடும்.

அதனானே வேதத்துள் மந்திரபாகமுங் கூறுகின்றது. మంత్రవర్ణః॥ " అనృణా అస్మిన్ననృణాః పరస్మిగ్ం స్తృతీయే లోకే అనృణాస్స్యామ। యే దేవ యానా ఉత పిత్యయాణాస్సర్వాన్పథో అనృణా అక్షీయేమ "=இவ்வுலகத்துள் கடனற்றவர்களாவோம். அவ்வுலகத்துள் கடனற்றவர்கள் ஆவோம். மூன்றாவதுலகத்தில் கடனற்றவர்கள் ஆவோம். தேவர் மார்க்கமெதுவோ? பிதிரர் வழியெதுவோ? எல்லா மார்க்கத்திலும் கடனற்றவர்களாய்க் குறைதலற்றிருக்கின்றோம். எ-று. இது அவ்வாறு எங்களை அனுக்கிரக்கவேண்டுமென்று அக்கினியைப் பிரார்த்திக்கும் மந்திரமாம்.

வேதத்துள் பிராமணபாகமும் அங்ஙனம் கூறுகின்றது. బ్రాహ్మణం॥ "సర్వాల్లోకాననృణోఽనుసంచరతి "=கடனற்றவன்எல்லாவுலகத்திலும் நன்றாக வுலாவிவருகின்றான். எ-று. காண்க. எனில்? அங்ஙனமன்று.

சடுதித் துறவு சித்தாந்தம்.

மேற்கூறிய வுரைகளெல்லாம் பிரமாணங்களேயாம். அவை வெறுப்பினை யடையாதவனைப் பற்றிய தடை கூறினவைகளே யன்றி வெறுப்பை யடைந்தவனுக்கு அத்தடை யொன்றுமில்லையாம். அதனானே பற்றறுதி யுடையவன் சந்நியாசம் பெறு

தற்குப்போது போக்கலாகாதென்று ஜாபாலசுருதி கூறுகின்றது. 𑌜𑌾𑌬𑌾𑌲𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃॥ "𑌯𑌦𑌹𑌰𑍇𑌵 𑌵𑌿𑌰𑌜𑍇𑌤𑍍𑌤𑌦𑌹𑌰𑍇𑌵 𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍" எப்பகலில் வெறுப்பினையடைகின்றானோ அப்பகலிற்றானே துறக்கவேண்டும். எறு. பலகாலும் நிலைநிலையாமையின் ஆராய்ச்சிமிகுதியால் வெறுப்பு முதிர்ந்து அகப்புறப் பற்றுக்களில் முற்றும் அறுதியுண்டாய் மனத்திப்பட்டதனாற் கோட்பட்டவனொருவன் தன் பற்றுப் பொருண் முற்றும் விட்டொழித்து வெளிப்படு மாறுபோல் வெளிப்படுதலேயே அப்பகற்றுறவு என்றது.

மேல்வினா.

அற்றேல், மேற்கூறியவாறு பிரமசரிய முதலிய மூன்று நிலைமையினும் ஒத்ததருமத்தை யனுட்டிப் பவர்கள் அவ்வவ் வாச்சிரமத்திருந்துந் துறத்தலாமென்று தோன்றுகின்றது. அங்ஙனமானால் ஸ்நாதகவிரதஞ் செய்தவனும் மனைவியை யிழந்தவனும் யாதொருநிலைமையு மில்லாதவர்களாக விருக்கின்றனர். ஆகவே, அவர்க்கும், ஆச்சிரமமுடையவருள்ளும்யாதேனுமோர்தடையால் செய்யத்தக்க தருமவொழுக்கங்களை முறையே யனுட்டியாதவர்க்கும், வைராக முண்டானாலும் துறவு கூடாதன்றோ? எனின்?

விடை.

அங்ஙனமன்று. அவர்கட்கு நேரே சுருதியானே சங்கியாசம் விதிக்கப்படுகின்றது. 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃॥ "𑌅𑌥 𑌪𑍁𑌨𑌰𑌵𑍍𑌰𑌤𑍀 𑌵𑍍𑌰𑌤𑍀 𑌵𑌾 𑌸𑍍𑌨𑌾𑌤𑌕𑍋𑌽𑌸𑍍𑌨𑌾𑌤𑌕𑍋 𑌵𑍋𑌤𑍍𑌸𑌨𑍍𑌨𑌾𑌗𑍍𑌨𑌿𑌕𑍋𑌽𑌨𑌗𑍍𑌨𑌿𑌕𑍋 𑌵𑌾 𑌯𑌦𑌹𑌰𑍇𑌵 𑌵𑌿𑌰𑌜𑍇𑌤𑍍𑌤𑌦𑌹𑌰𑍇𑌵 𑌪𑍍𑌰𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍" = பின்புமீட்டும் விரதமில்லாதவனேயாயினும் விரதமுடையவனே யாயினும் விரதஸ்நானஞ்செய்தவனே யாயினும், அக்கினி தவறினவனே = அக்கினி ஹோத்திரத்தை நடத்தாதவனேயாயினும் எந்தப்பகலில்வெறுப்புத்தோற்றுமோ அப்பகலேதானே துறக்கவேண்டும். எறு.

விதுரன்வானப்பிரத்தனுதியர்துறவு.

இயமன். 𑌯𑌮𑌃॥ "𑌪𑍁𑌨𑌰𑍍𑌦𑌾𑌰𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌭𑌾𑌵𑍇 𑌮𑍃𑌤𑌭𑌾𑌰𑍍𑌯𑌃 𑌪𑌰𑌿𑌵𑍍𑌰𑌜𑍇𑌤𑍍। 𑌵𑌨𑌸𑍍𑌥𑌾𑌶𑍍𑌰𑌮𑌿𑌣𑍋 𑌵𑌾 𑌪𑌰𑌂 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇𑌤𑍍" = மனைவியிழந்தவன் மறுமணம் புரியாதுவிடின் சங்கியாசம் பெறவேண்டுவது. வானப்பிரத்தனுயினும் பாவத்தைப் போக்கடித்துச் சிறந்த மார்க்கத்தினை

யடையவேண்டுவது. எ-று. சிறந்தமார்க்கமென்பது சந்நியாசம். விதுரன் = மனைவியிழந்தவன்.

வேதவிரத ஸ்நானஞ்செய்தவன் விதுரன்முதலி யவர்கள் பின்னிலைமைக்கும் முன்னிலைமைக்கும் நடுவின்க ணுள்ளனர். அவருள் எந்தநிலைமையிலும் விருப்பமில்லாவனுக்குச் செபம், உபவாசவிரதம், தீர்த்தயாத்திரை முதலிய கருமத்தால் மனச் சுத்தனாய் மூத்திநிலைமையில் அதிகார முண்டாகின்றது என்று மீமாம்ஸை மூன்றாவது அத்தியாயத்துள் கூறப்பட்டது. அவர்க்குநிலைமையின்றி யிருந்தால் தருமங்குறைந் திருந்தாலும் இல்லையே யென்னுங் கவலையொன்றாயினு மிருந்தால் அதற்குத்தக்க பிராயச்சித்தம் செய்து கொள்வதால் துறவில் அதிகாரம் உண்டாகின்றது. அங்ஙனம்பலமிருதி கூறுகின்றது.

స్మృత్యంతరే॥ "యేచసంతానజాదోషా యేచస్యుఃకర్మసంభవాః। సన్యాసస్తాన్ దహేత్సర్వాంస్తుషాగ్నిరివకాంచనం" = சந்ததியாலுண்டாம் குற்றமெதுவோ, கருமத்தாற்பிறக்குங் குற்றமெதுவோ? அவைகளையெல்லாம் துறவு, உமித்தீப்பொன்னைச் சுட்டாற்போலும், சுட்டுவிடுகின்றது. எ-று.

மனு. మనుః॥ "మృదస్తోయైశ్చశుధ్యంతే నదీవేగేనశుధ్యతి। రజసాస్త్రీమనోదుష్టా సన్యాసేనద్విజోత్తమః" = மண், நீரால் சுத்தியாகின்றது. யாறு வெள்ள மோடுதலாற் சுத்தியாகின்றது. மனத்தில் வியபசார தோஷமுடைய மாது மாதவிடாயால் சுத்தமாகின்றாள். இருபிறப்பாளருட்சிறந்தவன் சந்நியாசத்தினாற் சுத்தனாகின்றான். எ-று.

வேதியனொருவனே துறவுக்குரியவனெனன்பவர் மதம்.

இங்ஙனம் சிலர் வேதியனொருவனுக்கே சந்நியாசத்துரிமையுள்ளது அன்றி வேந்தனுக்கும் வைசியனுக்குமில்லை என்று கூறிச் சுருதியைக்காட்டுகின்றனர் வருமாறு சுக்கிலயஜுர்வேதம், பிராமணம், శ్రుతిః॥ వాజసనేయకబ్రాహ్మణే॥ "ఏతంవైతమాత్మానంవిదిత్వాబ్రాహ్మణాః పుత్రైషణాయాశ్చవిత్తైషణాయాశ్చలోకైషణాయాశ్చవ్యుత్థాయాథభిక్షాచర్యంచరంతి" வேதியன் இங்கு தன்னறிவை அவ்வறிவாக நன்கு வெளிபெறவுணர்ந்து, புதல்வரிடத்துள்ள இச்சையையும், பொருளினிடத்துள்ள விச்சையையும், உலகத்துள்ள விச்சையையும், விட்டொ

மித்து வெளிப்பட்டெழுந்து பின்னர் பிச்சையேற்கும்நோன் பினை யடைகின்றான். எ-று.

மனுவும் முதலிலும் முடிவிலும் பிராமணன் என்ற மொழியையே எடுத்துக்கூறினர். வருமாறு. మనుః॥ "ఆత్మన్యగ్నీంత్సమారోప్య బ్రాహ్మణఃప్రవ్రజేద్గృహాత్। ఏషవోఽభిహితో ధర్మో బ్రాహ్మణస్య చతుర్విధః ఇత్యుపసంహారః" = அக்கினியைத் தன்னுள்ளடக்கிக் கொண்டு வேதியன் துறக்கவேண்டுவது. என்று தொடங்கி, சந்நியாசத்தைக்கூறி வேதியனுடைய நால்வகைப்பட்ட ஆச்சிரமங்களையும் இது விதுவென்றுகூறினர். எ-று.

நாரதர். నారదః॥ "ప్రథమాదాశ్రమాద్వాపి విరక్తోభవసాగరాత్। బ్రాహ్మణోమోక్షమన్విచ్ఛన్ త్యక్త్వాసంగాన్పరివ్రజేత్" = வெறுத்தவேதியன் முதலாச்சிரமத்தே யிருந்தாயினும் சமுசார சமுத்திரத்தினின்றும் முத்தியைவிரும்புவன். சமுசாரத் துன்பங்களைநினைத்து உலகத் தொடக்கினை விட்டொழிப்பன். எ-று.

யோகயாஞ்ஞவற்கியர். యోగయాజ్ఞవల్క్యః॥ "చత్వారోబ్రాహ్మణస్యోక్తాఆశ్రమాశ్శ్రుతిచోదితాః। క్షత్రియస్యత్రయఃప్రోక్తా ద్వావేకోవైశ్యశూద్రయోః" வேதியனுக்கு நான்குநிலைமை வேதத்தாற் கூறப்பட்டன. வேந்தனுக்கு மூன்று, வைசியனுக்கு இரண்டு, சூத்திரனுக்கு ஒன்று. எ-று.

வாமனபுராணம். వామనపురాణే॥ "చత్వారఆశ్రమాశ్చైతే బ్రాహ్మణస్యప్రకీర్తితాః। గార్హస్థ్యంబ్రహ్మచర్యంచవానప్రస్థంత్రయోఽశ్రమాః। క్షత్రియస్యాపికథితాయఆచారాద్విజస్యహి। బ్రహ్మచర్యంచగార్హస్థ్యమాశ్రమద్వితయంవిశః। గార్హస్థ్యముచితంత్వేకంశూద్రస్యక్షణమాచర" = இந்நான்கு ஆச்சிரமங்களும் அந்தணனுக்குக் கூறப்பட்டுள்ளன. சந்நியாசமொன்றொழிய மூன்றும்அரசனுக்கு. பிரமசரியமும்இல்லறமும் வேளாண் வாழ்க்கையனுக்கும்இல்லறமொன்றேசூத்திரனுக்கும். தக்கதாம். எ-று.

மேல்வினா. சூத்திரனுச்சிரமமில்லாமை.

சூத்திரனுக்கு ஆச்சிரமமேயில்லை. "చత్వారఆశ్రమాస్తేషు శూద్రస్తునార్హతి" = நான்காச்சிரமமுள்ளன அவற்றுள் ஒன்றனுக்காயினுஞ் சூத்திரன் உரியனல்லன் என்று விலக்கப்பட்டுள்ள

தாக, எவ்வாறு சூத்திரனுக்கு இல்லறமிலமையையுடன்படலாம். எனில்?

விடை. சூத்திரனுக்கு ஆச்சிரமமுண்டு.

கூறுதும். மேற்கூறியவிலக்கு மொழிக்கு வேதமந்திரத்தோடு சூத்திரனுக்கு மணமாகாது என்பது கருத்தேயன்றி மந்திரமில்லாத விவாகத்திற்குத் தடையில்லை. அங்ஙனமல்லாக்கால் மணவிதியில் சூத்திரனைப்பற்றி விதிக்கப்படுவதாக எடுத்துக் கூறியுள்ள மொழிகட்கும், ஐம்பெரும்வேள்வி, இல்லறதருமம் இவற்றுளெல்லாம் சூத்திரனுக்கு அதிகாரமுண்டென்று கூறும் மொழிகளுக்கும் மாறுகொளலுண்டாம். ஆதலின், சூத்திரனுக்கு இல்லறவொழுக்க முள்ளது.

சந்நியாசமோ? வேதிய னொருவனுக்கேதக்கது. அதனானே மற்றொருமிருதியில் காவியாடை, தண்டு, கமண்டலம் முதலிய சந்நியாசக்குறிகளை வேந்தன், வேளாண்வாழ்க்கையன் தரிக்கலாகாதென்று மறுக்கப்பட்டுள்ளன. பலமிருதி. „స్మృత్యంతరే॥ "ముఖజానామయం ధర్మో యద్విష్ణోర్లింగధారణం। బాహుజాతోరుజాతానా మయం ధర్మో న విద్యతే" = விஷ்ணு குறிகளைத்தரிக்கும் இந்தச் சந்நியாசிதருமம் விராட்புருடன் முகத்திற்பிறந்த வேதியனுக்கன்றி, தோளிற்பிறந்த வேந்தனுக்கும், தொடையிற் பிறந்த வுழவாளனுக்கும் இல்லை. என.

மூவருணர்க்கும் சந்நியாசமுண்டென்பவர் மதம்.

மற்றுஞ்சிலர், மூவருணத்தார்க்கும் சந்நியாசவுரிமை யுண்டென்பர். வேதமோதிய இருபிறப்பாளனுக்கு ஒருமிக்கவாகவும் வேறுவேறாகவும் அவ்விருவகையு மென்னும் விகற்பமாகவும் நான்கு ஆச்சிரமமும் பலமிருதிகளினும் விதிக்கப் பட்டுள்ளன. அதனானே யாஞ்ஞவற்கியர் சந்நியாசங் கூறுமிடத்தில் "துவிஜ" (இருபிறப்பாளன்) என்றமொழியை எடுத்துக்கூறினர். యాజ్ఞవల్క్యః॥ "సన్నిరుధ్యేంద్రియగ్రామం రాగద్వేషౌ ప్రహాయ చ। భయం హిత్వా చ భూతానా మమృతీభవతి ద్విజః" = இருபிறப்பாளன், இந்திரியங்களின் கூட்டத்தினைத்தடுத்துவைத்து, காமக்குரோதங்களை விட்டுத்தன்னாற் பிறி

தொருயிர்க்கும் பிறிதொன்றாற்றன்னுயிர்க்கும் அச்சமுண்டாக் காதவனானல் முத்தியையடைந்தவ னாகின்றான். எ-று.

மற்றொருமிருதி கோட்டினைப்பற்றிப் பசுவினையீர்த்து வந்தாற்போலுஞ் சந்நியாசத்தினை யீர்த்துவந்து மூவருணர்க்கும் தருமியாமென்று விதித்துவிடுகின்றது. பலமிருதி. స్మృత్యంతరే॥ "యదాత్రయమపాకృత్య నిర్మమోనిరహంకృతః। బ్రాహ్మణఃక్షత్రియోవాథ వైశ్యోవాప్రవ్రజేద్గృహాత్" = வேதியனாயினும் வேந்தனாயினும் வேளாண்வாழ்க்கையனேயாயினும், முக்கடனையுங்கழித்து, யான் எனது என்னும் பற்றுக்களை யொழித்து, இல்லறத்தினின்றும் துறந்துபோக வேண்டும். எ-று.

கூர்மபுராணம். కూర్మపురాణే॥ "అగ్నీనాత్మనిసంస్థాప్య ద్విజఃప్రవ్రజితో భవేత్। యోగాభ్యాసరతఃశాంతో బ్రహ్మవిద్యాపరాయణః। ఇతిద్విజగ్రహణాత్కృతం" இருபிறப்பாளன் தன்வேள்வித்தீயைத் தன்னுட்டானே அடக்கிக்கொண்டுசந்நியாசியாய்யோகப் பயிற்சியில்விருப்பமுடையோனாய் இளைத்து, பிரமஞானமேமேலான நிலைமையென்றுணர்ந்து விரும்பினேனவன். எ-று.

சந்நியாசசித்தாந்தம்.

மேற்கூறிய விருதிறத்தரும் எடுத்துக்காட்டிய உரையளவைகளெல்லா வற்றிற்கும் ஒத்தமுடிபு கூறவேண்டுவதொருதலையாமன்றோ ? கூறுதும். அரசன், வைசியனுக்குத் துறவுகூடாதென்னும் உரை, தண்டு, காவி, என்னும் குறியாகாதென்றே விலக்கியவாறன்றி வேறல்ல. அங்ஙனம், "ముఖజానామయంధర్మో" என்றுஎடுத்துக்கூறியவுரையேவிதிக்கின்றது. போதாயனரும்கூறினர். బోధాయనః॥ "బ్రాహ్మణానామయంధర్మో యద్విష్ణోర్లింగధారణం। రాజన్యవైశ్యయోర్నైవ శూద్రాణామపినేష్యతః" = வைணவக்குறிகளைத்தரிக்கும் இந்தச்சந்நியாசிதருமம் வேதியனுக்குத்தக்கது. அதனிடத்துக்குறிகளைத்தரிப்பது வேந்தன், வேளாண்முயற்சிய னிவர்க்காகாதென்று ஆத்திரேயமுனிவர் கூறினர். எ-று. இதனால் வேதியர்க்குச் சந்நியாசநிலைமையும், தண்டு காவிமுதலிய குறிகளும் தக்கன. வேந்தனுக்கும் வைசியனுக்கும் ஆச்சிரமந் தக்கது வேடம் கூடாது. சூத்திரனுக்கு ஒன்றுமாகாது. என்றவாறாயிற்று.

சந்நியாசம்வேண்டினேன் கருமம்.

சந்நியாசியாகத்தக்கவன் பொருளையெல்லாந் தக்ஷிணையாகக் கொடுத்துப் பிரஜாபதியைத் தேவதையாகவுடைய வேள்வியைச் செய்யவேண்டும் என மனுகூறினர். మనుః॥ "ప్రాజాపత్యాంనిరూప్యేష్టిం సర్వవేదసదక్షిణాం। ఆత్మన్యగ్నీన్సమారోప్యబ్రాహ్మణఃప్రవ్రజేద్గృహాత్" = வேற்றுப்பொருளினைத் தக்ஷிணையாகவுடைய பிராஜாபத்தியதேவதாகமாகிய இஷ்டியைச்செய்து அக்கினியைத் தன்னுள்ளடக்கிக்கொண்டு வேதியன் இல்லறத்திருந்து துறக்கவேண்டும். எறு.

அங்ஙனமில்லையேல், அக்கினிதேவதாகமான இஷ்டியைச் செய்யவேண்டும் அதுவேதத்தாற் கூறப்பட்டது. శ్రుతిః॥ "అత్రైకే ప్రాజాపత్యామిష్టింకుర్వంతితథానకుర్యా దాగ్నేయీమేవకుర్యా దగ్నిర్హిప్రాణఃప్రాణమేవైతయాకరోతి" = பின்னர்ச் சிலர் பிராஜாபதியையே தெய்வமாகவுடைய வேள்வியைச் செய்கின்றனர். அங்ஙனஞ் செய்யலாகாது. அக்கினியைத் தெய்வமாக வுடைய இஷ்டியையே செய்யவேண்டுவது. அக்கினிபிராணன் அன்றோ. இவர்கள் அந்த வேள்வியால் பிராணனையே செய்கின்றனர். எறு.

இங்ஙனம், சுருதிக்கும் மிருதிக்கும் பொருள் மாறுபாடு வருதலின் துணிபு எது வெனில்? அக்கினிகளைத் தன்னுள்ளே அடக்கிக்கொண்டு என்று பல அக்கினிகளை விதித்தலால் ஆகிதாக்கினியாயிருப்பவன் பிராஜாபத்தியேஷ்டியையே செய்யவேண்டும். அக்கினி ஆதானஞ்செய்து கொள்ளாதவனுக்கு ஸ்மார்த்தாக்கினி யொன்றே யிருத்தலால் அவன் அக்கினியைத் தெய்வமாகவுடைய ஆக்கினேயேஷ்டியைச் செய்யவேண்டும். ஏனெனில்? அந்தச்சுருதியின் வாக்கியசேடத்தில் "అగ్నిమాజిఘ్రేత్" அக்கினியை மூடிப்பார்க்க வேண்டும் என்று ஒரே தீயைக்கூறியிருத்தலின் அந்தச்சுருதி ஒருதீயையேயுடைய அநாகிதாக்கினியாயிருப்பவனைப் பற்றிக்கூறியது.

அந்தஇஷ்டியைச் சிராத்தமுதலியவை செய்தபின்பு செய்யவேண்டுவது. அங்ஙனம், நரசிங்கபுராணங் கூறுன்றது. నృసింహపురాణే॥ "ఏవంవనాశ్రమేతిష్ఠం స్తపసాదగ్ధకిల్బిషః। చతుర్థమాశ్రమంగచ్ఛేత్సన్న్యస్యవిధినాద్విజః। దేయంపితృభ్యోదేవేభ్య స్స్వపితృభ్యోపియత్నతః। దత్వాశ్రాద్ధమృషిభ్యశ్చ

మమాత్యాగ్న్యుపస్థాత్మని। ఆగ్నేయీం వైశ్వానరీం కృత్వా ప్రాజాపత్యామథాపివా। అగ్నీంస్స్వాత్మని సంస్థాప్య మంత్రవత్ప్రవ్రజేద్ద్విజః" — இங்ஙனமாக வனச்சிரமத்திலிருக்கும் வேதியன் தவத்தினால் பாவத்தைச் சுட்டொழித்து விதிப்படி துறந்து நான்காமாச்சிரமத்திற்குப்போகவேண்டும். அப்பொழுது தென்புலவாணர்க்கும், தன்பிதிருக்கும், இருடிகளுக்கும், மானுடர்க்கும், தனக்கும் சிரத்தையோடும் திருத்திபாகங்களைக் கொடுத்து, ஆக்கினேயேஷ்டியையேனும் பிராஜாபத்தியேஷ்டியையேனும் செய்து, அக்கினியை யாவது அக்கினிகளை யாவது தன்னுள்ளொடுக்கிக் கொண்டு மந்திரவிதிப்படி சந்நியாசம் பெறவேண்டும். எ-று. இவையெல்லாம் கிரமசந்நியாசத்தின் முற்கிரியையாம்.

எண்வகைச்சிராத்தம்.

போதாயனர். బోధాయనః॥ "దైవమార్షం తథా దివ్యం పిత్ర్యం మాతృకమానుషం। భౌతికం చాత్మనశ్చైవ అష్టౌ శ్రాద్ధాని నిర్వపేత్"=தெய்வம், ஆரிடம், திவ்வியம், பிதிரியம், மாதுருகம், மானுடம், பௌதிகம், ஆன்மசிராத்தம் எனமுறையே யெட்டுச்சிராத்தம் செய்தல்வேண்டும். எ-று.

கிருச்சிரவிரதம்.

சொல்லப்பட்ட சிராத்தங்களுக்குமுன் தகுதியை யடையும் பொருட்டுக் கிருச்சிரவிரதஞ் செய்யவேண்டும் என்பதனைக் காத்தியாயனர் கூறினர். కాత్యాయనః॥ "కృచ్ఛ్రాంస్తు చతురః కృత్వా పావనార్థమనాశ్రమీ। ఆశ్రమీ చైకకృచ్ఛ్రం తేనాసౌ యోగ్యతాం వ్రజేత్" = ஆச்சிரம மில்லாதவன் தான்பரிசுத்தனும் பொருட்டு நான்கு கிருச்சிரங்களைச்செய்யவேண்டும். ஆச்சிரமமுடையவனாயின் ஒருகிருச்சிரஞ் செய்யவேண்டும். அதனால் தகுதியை யடைந்தவனாவன். எ-று.

சிராத்தத்தின் பின்பு இஷ்டிக்கு முன்செய்யும் கருமம்.

சிராத்தமானபின்பு இஷ்டிக்குமுன் செய்யத்தக்கவற்றைப் போதாயனர் கூறினர். బోధాయనః॥ "కృత్వా శ్రాద్ధాని సర్వాణి పిత్రాదిభ్యో యథావిధి। వాపయిత్వాథ కేశాది స్నాత్వాయాస్నాత్వకామతః। త్రీన్దండానంగుళిస్థూలాన్ నైవ గవాస్థ్యర్థసమ్మితాన్। ఏకాదశనవద్వ్యౌ చతుస్సప్తాన్యపర్వకాన్। సత్వక్కాన్ వ్రణాం

త్వాసన్యాసం త్వమసన్నితసర్వకాన్। వెష్టితాన్కృష్ణగోవాలరజ్జ్వాతుచతురంగులాన్। ఏకో వాథావృశోదండోగోవాలరహితోభవేత్।కుశకార్పాససూత్రైర్వా హేమసూత్రైరథాపి వా। కుశైర్గ్రథితంశిక్యంషట్పద్మాకారసమన్వితం। షట్పాదంపంచపాదంవా ముష్టిద్వయవిదారితం। ఏకైకంపీతమప్యష్ట ముభయద్వాదశాంగులం। ద్విగుణంత్రిగుణంవాపి సర్వతోష్టాంగులంతువా। ప్రాదేశమాత్రంవాసూత్రం కార్పాసైర్నిర్మితమవ్రణం। చండాలాద్యస్పృష్టంచైవ త్ర్యన్ఋతంజలపవిత్రకం। గృహీతంమంత్రవత్తద్వ త్సశిక్యంచకమండలుం। దారవంవైణవంవాపి మృదలాబుమయంతువా। పాత్రంశిలామయంతామ్ర పర్ణాదిమయమేవవా। చతురశ్రంవర్తులంవా ప్యాసనంచారవంశుభం। కౌపీనాచ్ఛాదనంవాసనికంథాంశీతనివారిణీం। పాదుకేచాపిశౌచార్థే దశమాత్రాడదాహృతాః। ఛత్రంపవిత్రంసూత్రంచ త్రిష్టబ్ధంతథాజినం। పక్షాణిచాక్షసూత్రంచ మృత్ఖనిత్రకపాలికాః। యోగవట్టంబహిర్వాస ఇత్యేతాఏకవింశతిః। తాసాంపంచాధికానిత్యా దశవాసర్వతోపివా। గృహీత్వైమాఅథాగత్య దేవాగారేగ్నివేశ్మని। గ్రామాంతేగ్రామసీమాంతే యద్వాశుచిమనోహరే। ఆజ్యంపయోదధీత్యేత త్త్రివృద్వాజలమేవవా। ఓంభూరిత్యాదినాప్రాశ్య రాత్రించోపవసేత్తతః। ఏతావతైవవిధినా భిక్షుఃస్యాదాపదిద్విజః। అథాదిత్యస్యాస్తమయాత్పూర్వమగ్నిన్విహృత్యసః। ఆజ్యంచగార్హపత్యేతు సంస్కృత్యైతేనచస్రువా। పూర్ణయాహవనీయేతు జుహుయాత్ప్రణవేనతత్। బహ్వన్నాధాన (బ్రహ్మాన్వాధాన) మేతత్స్యాదగ్నిహోత్రేహుతేతతః। స్థిత్వాతుగార్హపత్యస్య దర్భానుత్తరతోత్రతు। పాత్రాణిసాదయిత్వాథ బ్రహ్మాయతనఏవతు। స్తీర్ణేషుదర్భేష్వాసీత త్వజినాంతరితేషువా। జాగృయాద్రాత్రిమేవైతాం యావద్బ్రాహ్మముహూర్తకః। ఏతామవస్థాంసంప్రాప్య మృతోప్యానంత్యమశ్నుతే। అగ్నిహోత్రంస్వకాలేచ హుత్వాప్రాతస్తనంతతః। ఇష్టింవైశ్వానరీంకుర్యా త్ప్రాజాపత్యమథాపివా"=

பிதிரர் முதலியோர்க்கு எட்டுச்சிராத்தத்தினையும் வேறுவேறு செய்து, பின்பு தலைமயிர், மீசை, நகம், உரோம முதலியவற்றினைக் களைந்து, இந்த மாதுருகைகளை (நியாச எழுத்துக்களை) புரோக்ஷிக்க வேண்டும். விரற்பருமனுடையதாய் நிலத்தினின்றுந் தலையளவு வுயரமுடையதாய் உள்ள மூன்று மூங்கற்றண்டத்தினை யெடுத்துக்கொள்க, அவற்றிற்குப் பதினொன்று, பத்து, ஒன்பது, இரண்டு, மூன்று, நான்கு, ஏழு, அல்லாதகணுக்களும், மேற் பரணியும் அமைந்திருக்கவேண்டும். புழுக்கடித் துளை முதலிய குற்றமில்லா திருத்தல்வேண்டும் கோணலின்றி செவ்வனே யிருத்தல்வேண்டும். ஒத்து நன்றாக விளங்கும் கணுக்களினவாகவேண்டும். அவற்றிற்கு வேறுவேறு மேல் நால் நால் விரல் நீளத்தில் காராம்பசுவின் வால் மயிர்க்கயிற்றால் சுற்றியிருத்தல்

வேண்டும். ஓரோதண்டு பிடிக்கும்பக்ஷத்தில் பசுவின்வால் மயிரில்லா திருத்தல்வேண்டும். தருப்பைமுறுக்கிய கயிறு அல்லது பஞ்சுநூற்கயிறு, பட்டுநூல் இவற்றுள் யாதானு மொன்றினல் தாமணாவடிவாகக் கைவல்லவராற் பின்னலிடப்பட்ட உறியொன்று அது இரண்டுபிடி யளவான வுயரமுடையதும், ஆறு, அல்லது, ஐந்துகாலுடையதுமா யிருத்தல்வேண்டும். அதற்கு மயிர் சேராமல் சுத்தமாக மஞ்சணிற நூலினல் இருபத்துநான்கு அங்குலமுடைய, அல்லது, இருபுறமும் பன்னிரண்டு பன்னிரண்டு அங்குலமுடைய, அல்லது அதற்கு இரண்டத்தனை மூன்றத்தனையுடைய, அல்லது, எல்லாப்புறமும் எவ்வெட்டு அங்குலமுடைய அல்லது, ஓரொட்டை நீளமுடைய சூத்திரத்தைக் கட்டவேண்டும். அது, பருத்தியால் நூற்றுவலுவுள்ள கயிருக விருத்தல் வேண்டும். நீசராதியோர் செய்ததாகவிருத்தலாகாது. ஒருவேளை நீசனே செய்ததாக விருந்தால் நீரில்நனைத்து மந்திரத்தால் சுத்தி செய்துகொள்ளவேண்டும்அந்தவுறியில்கமண்டலத்தைவைத்துக் கொள்ளவேண்டுவது. (கமண்டலம்=நீர்க்காகம்). அக்கமண்டலம், மரம்-மூங்கல்-மண்-சுரைக்காய்-அல்லது, அகல் செம்பு இலை இவற்றுள் ஒன்றினுற் சமைந்திருக்கவேண்டும். அன்றியும், சதுரமாகவேனும், வட்டமாகவேனும் மரத்தாற்செய்த நல்ல பீடமொன்று. அன்றியும், கோவணம், போர்வையாடை, குளிரை நீக்கும் கவந்தி (கந்தை) பாதுகை, யிருத்தல்வேண்டும். அவற்றினுடைய சுத்தத்தைக் குறித்துப்பத்து எழுத்துக்கள் கூறப்பட்டன. குடை, தருப்பை பவித்திரம், முப்புரி பூணநூல், மான்றோல், விசிறி, செபமாலை, மண், மண்வெட்டி, ஒடு, யோகதண்டு, வெளிச்சிரை (சிரை-ஆடை) இவ்விருபத்தொருகருவிகளு மிருத்தல்வேண்டும். இவற்றுள்,தண்டு, கமண்டலம், பீடம், போர்வை, பாதுகை. இவ்வைந்தும். நித்தமாம். மேற்பட்டன அநித்தமாம். வேண்டுமாயின் பத்துமிருக்கலாம். இல்லையெல் எல்லாமு மிருக்கலாம். இவற்றையெல்லாம் கொண்டுவந்து, தேவபூசை யறையிலாயினும், வேள்வியறையிலாயினும், ஊர்க்கு வெளியிலாயினும், ஊரெல்லைக்கணுயினும், அல்லது சுத்தமாகிய வெவ்விடத்திலாயினும் இருந்து நெய், பால், தயிர் மூன்றினையுங் கலந்தாயினும் அல்லதுசுத்த நீரையாயினும் பிரணவத்தாலும் வியாஹிருதி

மந்திரத்தாலும் சிறிதுகுடித்து அன்றிரவு உண்டியில்லாது அங்கு இருத்தல்வேண்டும். இவ்வளவுவிதியோடு ஆபத்தில் இருபிறப்பாளன் சந்நியாசி யாகின்றான். பின்புமுறையே சந்நியாசியாக வேண்டினவன், ஆபத்தில்லாவிடத்துச் சூரியாத்தமன மாவதன் முன் மூன்றுதீயினையும்வளர்த்து, காருபத்தியத்தீயில், நெய்யைத் திருத்தஞ்செய்து, சிரவம்என்னும் பாத்திரத்தில் நிரப்பி, ஆகவனீயம் என்னும் தீயில் அதனைப்பிரணவத்தால் ஹோமஞ்செய்யவேண்டுவது. அது "பிரமோதன ஆதானம்." ஆகின்றது. அக்கினிஹோத்திர ஹோமம் ஆனபின்பு காருகபத்தியத்தீயினுடைய வடதிசைக்கணாயினும், பிரமன்என்னு மிருத்துவிக்கு இருக்குமிடத்தாயினும் இருந்துகொண்டு தருப்பையின்மீது பாத்திரங்களைவைத்து, தருப்பையா லதனை மீட்டும் மூடிப்பின்பு நிலத்திற் பரப்பிய தருப்பைமீதேயாயினும் அதன்மேல் மான்றோலையிட்டாயினும் உட்கார்ந்திருந்து அன்றிரவெல்லாம், எனில் பிராமீ முகூர்த்தம்வரும் வரையிலுறங்காதிருத்தல்வேண்டும். இந்தஅவத்தையையடைந்தவன் இறந்தாலும்அளவற்றபயனையடைகின்றான். விடியற்காலமான பின்னர்தக்கபொழுதில் அக்கினிஹோமத்தைச் செய்து அக்கினிதேவதாகமான இஷ்டியையாயினும் பிரஜாபதி தேவதாகமாகிய இஷ்டியை யாயினும் செய்யவேண்டும். எறு. காண்க.

சாவித்திரிபிரவேசம்.

நெய்முதலியவற்றைக் குடித்தபின்பு அக்கினிஹோத்திரம் செய்வதற்கு முன்பாகச் சாவித்திரி பிரவேசத்தினைச் செய்ய வேண்டும். அதுபோதாயன தருமத்துட் கூறப்பட்டது. 𑌬𑍌𑌧𑌾𑌯𑌨𑌧𑌰𑍍𑌮𑌃॥ "𑌓𑌂𑌭𑍂𑌸𑍍𑌸𑌾𑌵𑌿𑌤𑍍𑌰𑍀𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌾𑌮𑍀𑌤𑍍𑌯𑌾𑌦𑌿" = பிரணவத்தோடு முதல் வியாஹிருதி மந்திரத்தினைக் கூறி சாவித்திரியிற் புகுகின்றேன், என்று காயத்திரி மந்திரத்துள் முதற்பாதத்தினைக் கூறவேண்டும்.பின்பு, பிரணவம், இரண்டாம் வியாஹிருதி, காயத்திரியிரண்டாம்பாதம். அதன்பின்பு, பிரணவம் மூன்றாவது வியாஹிருதி காயத்திரிமூன்றாம்பாதம், அப்பால், மூன்று வியாஹிருதியோடும் சாவித்திரியிற் புகுகின்றேன். என்றுகூறி முழுக்காயத் திரியைக் கூறவேண்டும். கால் – அரை - முற்றும் என்னும் முறையால்தன்னையெல்லா வுலகவாசகமாகிய வியாஹிருதிகளோடு எங்குங்கலந்

தெல்லாவேத வுள்ளமாகிய காயத்திரி யென்னும் சிற்சத்தியுடை யபிரமசொருபமாகிய பிரணவமென்னும் சாவித்திரி பரதேவதை யினிடத்தில் புகச்செய்து ஐக்கியானுசந்தானத்தால் அக்கரவடிவ முதலே சாவித்திரி பிரவேசமென்னும் நிவிருத்திகருமம். இதன் மாமிரகசியமெல்லாம் குருமுகத்தாலுணர்க.

பிரேஷமந்திரங்கூறல்.

இங்ஙனம் இஷ்டியைமுடித்து, தீயைத் தன்னுள்ளடக்கிப் பிரேஷமந்திரத்தினை யுச்சரிக்கவேண்டும். இதனைக் காத்தியாய னர் கூறினர். కాత్యాయనః॥ "అత్మన్యగ్నిం సమారోప్య వేదిమధ్యస్థితో హరిం। ధ్యాత్వా హృత్పద్మమధ్యస్థం గురుణా ప్రైషమీరయేత్" = தீயைத் தன்னுளொடுக்கி வேதிகையின் நடுவேநின்று உள்ளத்தில் கடவுளைத்தியானித்துக் குரவனிடத்துக் கட்டளையைப்பெற்றுப் பிரேஷமந்திரத்தைத் தினைக் கூறவேண்டும். எ - று.

அபயதானம்.

பின்னர் பிரேஷமந்திரத்தை யுச்சரித்து அபயதானஞ் செய் தல்வேண்டும். இதனைக் கபிலமதத்தினுட் கூறப்பட்டது. కాపిల మతే॥ "విధివత్ప్రైషముచ్చార్య త్రయస్త్రయశ్చ మన్ద్రతః। అభయం సర్వభూతేభ్యో మత్త స్స్వాహేత్యపో క్షిపేత్। తతో దణ్డాదికం గృహీత్వాథ బహిర్వ్రజేత్" = விதிப்படி பிரேஷ மந்திரத்தினை மூன்றுதரம் மெதுவாகவும், மூன்று தரம் உரத்தும் உச்சரித்து எல்லாவுயிர்களுக்கும் என்னால் பயமுண்டாகாதிருக்கவென்னும் பொருளுடைய மந்திரத்தினைக் கூறி சுவாஹாகாரத்தொடு ஹோமஞ்செய்ததாக நீரையள்ளி நிலத்தின்மேல்விட்டு, தண்டு, உறி, முதலியவற்றினை யெடுத்துக் கொண்டு பின்வெளிப்பட்டுப்போக வேண்டும். எ - று.

தண்டுமுதலியவற்றினுக்குமந்திரவிதி.

தண்ட முதலிய வற்றிற்குப் போதாயனர் மந்திரம்வகுத்தனர் బోధాయనః॥ "సఖా మే గోపాయేతి దణ్డం గృహ్ణీయాద్గురుణార్పితం। యేన దేవాః పవిత్రేణ త్యక్త్వాత్మానం పవిత్రకం। యదస్య పారే రజసశ్శుక్రమిత్యభిశిక్యకం। వ్యాహృతిభిస్తథా పాత్రమథ కాషాయమిత్యపి। యదాస్య వాసోదధ్యాయం తచ్ఛంయోరుపవీతకం। ఏతద్గృహీత్వా నిష్క్రమ్య స్వగృహాత్ గన్ధాంధవాం స్త్యజేత్। నిష్క్రమ్యాన్యత్ర గత్వైవ ప్రవ్రజేత్ సర్వసత్త్వ

ణ'' — "స్థూణా" — என்ற மந்திரத்தோடு குரவன் கொடுத்த தண்டினைக்கொள்ள வேண்டும். "యేనదేవాఃపవిత్రేణ" என்ற மந்திரத்தால் ஜலபவித்திரத்தினைப் பெறவேண்டும். "యదస్యపారే, రజసశ్శుక్రం" என்ற மந்திரங்களால் உறியினை யெடுத்துக்கொள்ள வேண்டும். வியாஹிருதிகளால் கமண்டலத்தைக் கொள்ளவேண்டுவது. "యువాసువాసాః" என்ற இருக்குவேதமந்திரத்தினால் கோவணாந்தரிக்க வேண்டும். "తచ్ఛంయోః" — என்ற மந்திரத்தால் மூன்று பூணநூல் அணியவேண்டும். பின்பு வெளிப்பட்டு, ஊரையும், உறவினரையும் விட்டொழியவேண்டுவது. ஆசையற்றவனய்வேற்றிடஞ் சென்று துறவு நிலைமைக்குரிய விரதத்தோடு எப்போதைக்கும் சீவித்திருத்தல்வேண்டும். எ-று. இந்த நீர்ப் பவித்திரமுதலியவெல்லாம் நால்வகைப்பட்டுள்ளசந்நியாசிகளில் முதலாவானுடையதும் இரண்டாவானுடையது மாகக்குறித்த தென்றுணர்க.

சன்னியாசியர்பேதம்.

ஹாரீதர். హారీతః॥ "చతుర్విధాభిక్షవస్స్యుఃప్రోక్తాస్సామాన్యలింగినః। తేషాం పృథక్పృథగ్జ్ఞానం వృత్తిభేదాత్కృతంచతత్। కుటీచకోబహూదకో హంసశ్చైవతృతీయకః। చతుర్థఃపరహంసశ్చసంజ్ఞాభేదైఃప్రకీర్తితాః"—குடீசகன், வெகூதகன் ஹமிசன், பரமஹமிசன் எனச் சந்நியாசியர் நால்வகைப்படுவர். இந் நால்வகைப் பிச்சையேற்போர்க்கும் சந்நியாசக் குறிகள் ஒத்தேயுள்ளன. ஆனல், அவருள் அறிவும், ஒழுக்கமும்வேறு வேருகவிருத்தலின் சந்நியாசத்தன்மையும் வேறுபட்டே யிருக்கின்றது. எ – று.

அவ்வச்சந்நியாசத்திற்குரியர்.

அவற்றுள், அதிகாரிவிசேடம் புராணத்துட்கூறப்பட்டது. పురాణసారే॥ 'విరక్తిర్ద్వివిధాప్రోక్తా తీవ్రాతీవ్రతరేతిచ। సత్యామేవతుతీవ్రాయాంన్యసేద్యోగీకుటీచకః। శక్తోబహూదకేతీవ్ర తరాయాంహంససంజ్ఞితే। ముముక్షుఃపరమహంసేసాక్షాద్విజ్ఞానసాధనః'. — தீவரம் அதிதீவரம்எனவைராகம் இருவகைப்படும். தீவரவைராகமுடையயோகி சந்நியாசம் செய்து குடீசகனுகின்றுன். அதிதீவரவைராக முடையவன் துறந்து வெகூதகன் ஆகின்றுன். வைராகம்பழுத்து முத்தி விருப்ப

முடையவன் அமிசனுகின்முன். நேரே பிரமஞானமாகிய சாதன முடிந்தவன் பரம அமிசனுகின்முன். எ - று.

குடீசகனெழுக்கம்.

அவருள், குடீசகன் விருத்தியைப் பிரஜாபதிகூறினர். ప్రజాపతిః॥ "కుటీచకో నామస్వగృహే వర్తమానః శుచిరకలుషః అగ్నిహోత్రిము భిక్షాంభుంజానోఽప్యసకృత్ కామక్రోధలోభమోహాహంకారవర్జిత ఆత్మానుగ్రహంకురుతే" = குடீசகன் என்பவன், தன்மனைக்கட்டானே யிருந்து, சுத்தமாகக் குற்றமற்றவனுய், அகிதாக்கினியுடையாரிடத்தில் பிச்சை யேற்றுண்டு, காமக்குரோதமில்லாதவனுய், உலோபம், மோகம், அகங்காரங்களை விட்டு, தன்னுயிரைத்தான் காத்துக்கொள்பவனும். எ - று.

விருத்தபாராசரர். వృద్ధపరాశరః॥ "కుటీచకానామపుత్రాదిభిః కుటీం కారయిత్వా కామక్రోధలోభమోహమదమాత్సర్యా దీన్హిత్వా విధివత్సన్యస్య సంకృత్వా త్రిదండజల పవిత్రకాషాయవస్త్ర ధారణశౌచాచమనజపస్వాధ్యాయ బ్రహ్మచర్యాధ్యయనతత్పరాః పుత్రాదేవ భిక్షాకాలేఽన్నం యాత్రామాత్రముపయుంజానాస్తస్యాం కుట్యాం నిత్యం వసంత ఆత్మానం మోక్షయంతి" = குடீசகர் என்பவர் புதல்வர்முதலியோரால் பன்னசாலை (தழையாலுறைவிடம்) செய்வித்துக்கொண்டு, காமக்குரோதமுதலிய குற்றங்களையொழித்து, விதிப்படி இஷணுத்திரயம் (மூவாசைகளையும்) விட்டு முக்கோல், நீர்ப்பவித்திரம், காஷாயவாடைதரித்துக்கொண்டு, சௌசசுத்தி, ஆசமனம், செபம், பாராயணம் பிரமசரியவிரதம், வேதாந்த மோதல், இவற்றிலே பற்றுடையவர்களாய்ப் பிச்சைக்காலத்தில் தன்மகனுலே தானே தன்போக்களவிற்குச் சோற்றினையேற்றுண்டு, அந்தப்பன்னசாலையில் எப்பொழுதும் இருந்துகொண்டு தன்னைவிடுதலைச்செய்துகொள்பவராம். எ-று.

ஸ்கந்தபுராணம். స్కాందపురాణే॥ "కుటీచకస్తుసన్యస్య స్వేస్వేసద్మని నివృతః। భిక్షామాదాయ భుంజీత స్వబంధూనాం గృహేఽథవా। శిఖీయజ్ఞోపవీతీస్యాత్ త్రిదండీ సకమండలుః" = குடீசகன், துறந்துநாடோறும் தன்மனையிற்றானே பிச்சை யேற்றுப் புசிக்கவேண்டும். அல்லது தன் சுற்றத்தினர் மனைக்கணேனுமாகலாம். குடுமி, பூணூல், முக்கோல், கரகம் உடையவனு யிருத்தல்வேண்டும். எறு.

குடீசக சந்நியாசம் அசத்தனைப்பற்றியதாமாகலின் மனைக் காட்டானே யிருப்பது ஒத்தவாறேயாம். அங்ஙனம் போதாயனர் கூறினர். బౌధాయనః॥ "కుటీచకాఃపరివ్రజ్య స్వేస్వేసద్మనినిత్యశః। భిక్షామాదాయ బంధుభ్యోభుంజతేశక్తిసంక్షయాత్" = குடீசகர் துறவுதீக்ஷையடைந்து, நாடோறும் ஆற்றல்குறைதலால், சுற்றத்தினராற் பிச்சைபெற் றுண்கின்றனர். எ-று.

வெகூதகன்ஒழுக்கம்.

வெகூதகன் ஒழுக்கத்தினை ஸ்கந்தர்கூறினர். స్కందః॥ "బహూదకస్తుసన్న్యస్య బంధుపుత్రాదివర్జితః। సప్తాగారంచరద్భైక్ష మేకాన్నంచపరిత్యజేత్। గో వాలరజ్జుసంబద్ధం త్రిదండంశిక్యముద్ధృతం। జలపాత్రంపవిత్రంచ ఖనిత్రంచకృపాణికాం। శిఖాంయజ్ఞోపవీతంచ దేవతారాధనంచరేత్" = வெகூதகன் துறந்து சுற்றத்தினராலும் புதல்வன் முதலியோராலும் கைவிடப்பட்டவனாய் ஏழுமனையில் பிச்சையேற்க வேண்டுவது. ஒருவரோயிட்ட சோற்றினையொழித்து விடவேண்டும். ஆனின்வால் மயிர்க்கயிறு கட்டியமுக்கோலையும், உறிதாங்கிய நீர்க்கரகத்தினையும், பவித்திரத்தினையும், மண் வெட்டியையும், சுரிகையையும், குடுமியையும், பூணநூலினையும், வைத்துக்கொண்டு தேவர்பூசை செய்யவேண்டும். எ-று.

விருத்தபராசரர். వృద్ధపరాశరః॥ "తత్రబహూదకానామ త్రిదండకమండలు పద్మపవిత్రపాత్రకాషాయవస్త్రధారణ వేదాంతార్థావబోధకా స్సాధువృత్తేషు బ్రాహ్మణగృహేషుభైక్షచర్యాంచరంత ఆత్మానం మోక్షయంతే" = அவருள் வெகூதகர் என்பவர், முக்கோல், நீர்க்கரகம், பதுமம், பவித்திரம், பாத்திரம், காஷாயவஸ்திரம் இவைகளைத்தரித்து, உபநிடதங்களின்பொருளினை யாராய்ந்து, நல்லொழுக்கமுடைய வேதியர் மனையில்பிச்சையேற்றுண்டு தன்னை வீடுபெறுவிக்கின்றனர். எ-று.

பிதாமகன். పితామహః॥ "బహూదకస్సవిజ్ఞేయ సర్వసంగవివర్జితః। బంధువర్గేనభిక్షేత స్వభూమౌనైవసంవిశేత్। నిశ్చలస్థానుభూతశ్చ సదామోక్షపరాయణః। న కుర్యాన్నోదకేసంగం కుర్యాద్ధ్యానైకచేతసా। నాగారేనాసనేనాన్నే నాస్తరేనాత్రిదండకే। స్వమాత్రాయాంనకుర్యాద్వై రాగందండాదికేయతిః"= எல்லாப்பற்றுக்களையும் விட்டவனெவனோ அவனே வெகூதகனாவன். சுற்றத்தினரிடத்துப் பிச்சையேற்றலாகாது. தனது நிலத்திலிருக்கலா

காது. மனம் நிலைத்துக்கற்றுணாக விருத்தல்வேண்டும். எப்போதும் விட்டினைமேலான நிலையாகவுடையவனாகவேண்டும். பன்னசாலை, நீர்க்கரகம், ஆடை, மனை, காடு, சோறு, இடம், படுக்கை, முக்கோல், முதலியவற்றில் மனத்துள் பற்றுவைத்தலாகாது. துறவி, தனக்கு என்று முக்கோல் முதலியவற்றுள் வேட்கை வைத்தலாகாது. எ-று.

அமிசனெழுக்கம்.

அமிசன் என்னும் சந்நியாசியின்செய்கை ஸ்கந்தபுராணத்துட் கூறப்பட்டது. స్కాందపురాణే॥ "హంసశిక్యమండలుంశిక్యం భిక్షాపాత్రంతథైవచ। కంథాంకౌపీనమాచ్ఛాద్య మంగవస్త్రంబహిఃపటం। ఏకంయష్టిణమంసాదం ధారయేన్నిత్యమాదరాత్। దేవతానామథదేన కుర్యాద్ధ్యానంసమర్చయేత్" = அமிசன்என்னும்துறவி, நீர்க்கரகம், உறி, பிச்சைக்கலன், கவந்தி, கோவணம், அரையாடை, மேலாடை, போர்வை, ஒற்றைமுங்கற்றண்டு இவ்வளவினையுந் தரித்து, அன்போடு தேவர்களைப் பேதஞ்செய்யாமல் தியானஞ்செய்து பூசிக்கவேண்டும். எ-று.

விஷ்ணு. విష్ణుః॥ "యజ్ఞోపవీతందండంచ వస్త్రంజంతునివారణం। తావాన్పరిగ్రహఃప్రోక్తో నాన్యోహంసపరిగ్రహః" = உபவீதம், தண்டு, ஆடை, உயிர்களைத்தடுப்பது, அமிசனுக்கு இவ்வளவேகருவிகள் வேறு ஆகாது. எ-று.

பிதாமகன். పితామహః॥ "హంసస్త్రిదండోమోక్షైషీ భిక్షుర్మోక్షపరాయణః। నిత్యంత్రిషవణస్నాయీ త్వార్ద్రవాసాధరేత్సదా। చాంద్రాయణేనవర్తేత యతిధర్మానుసారతః। వృక్షమూలేవసన్నిత్యం గుహాయాంవానదీతటే" = அமிசன் மூன்றுவதாவான், விடுபேற்றினைவிரும்பிப் பிச்சையேற்போனாய், நித்தமும்முக்காலும் நீராடி யெப்பொழுதும் ஈரவுடையுடையவனாய், துறவியின் ஒழுக்கவிதிப்படி சாந்திராயணவிரதத்தினால் பிழைத்து, நாடோறும் மரத்தடி, அல்லது, குகை, ஆற்றங்கரைகளிவற்றின்பாலிருத்தல் வேண்டும். எ-று.

போதாயனர். బోధాయనః॥ "హంసాఃశిక్యకమండలుంశిక్యం దండపాత్రాణిబిభ్రతః। గ్రామైకరాత్రాశ్చ నగరేపంచరాత్రకాః। త్రిషవణస్నాయినోపవాసాశ్చ పక్షమాసోపవాసినః। కృచ్ఛ్రసాంతపనాద్యైశ్చ యజ్ఞోపవీతవస్త్రధరాః" = அமிசன் என்னுந்துறவி, நீர்க்கரகம், உறி, தண்டு, பலியோடு இவைக

ஊத்தரித்து, ஊருக்கருகேயுள்ள குளக்கரையில் ஒருஇராத்திரி பட்டணத்துள் ஐந்திரவு, வாசஞ்செய்து, மூன்றிரவு, ஆறிரவு, பதினைந்துநாள், ஒருதிங்கள், இவ்வாருக உபவாச விரதமிருந்து கிருச்சிரவிரதம், சாந்தபனவிரதம் முதலியவேள்வியால் வற்றிய வுடம்பினையுடையனுய் இருத்தல்வேண்டும். எ-று.

பரமஹமிசன்செய்கை.

பரமஹமிசன் விருத்தியைக் காந்தத்துட் கூறப்பட்டது. స్కాందపురాణే॥ "కౌపీనాచ్ఛాదనంవస్త్రం కంథాంశీతనివారిణీం। అక్షమాలాంచగృహ్ణీయా ద్వైణవందండమవ్రణం। మధూకరమథైకాన్నం పరహంసస్సమాచరేత్। పరహంసస్త్రిదండంచ రజ్జుంగోవాలనిర్మితాం। శిఖాంయజ్ఞోపవీతంచ నిత్యకర్మచవర్జయేత్"= கோவணத்தினை மறைக்கத்தக்கவாடை, குளிரைப்போக்கும் கவந்தி, அக்கமணிமாலை, துளையற்ற தொருமூங்கற்றண்டு, இவைகளைக்கைக்கொண்டு பரமஹமிசன் வண்டின்செய்கையொத்த பிச்சையையாயினும், ஒரேமனையிற்பிச்சையையாயினும் உண்ணவேண்டும். முக்கோல், பசுவாலினுற்சமைந்தகயிறு, குடுமி, பூணநூல், நித்தகருமம் இவைகளை முற்றுந்துறக்க வேண்டுவது எ-று. காண்க.

பரமஹமிசனுக்குச்சாதியில்லென்ற பூருவபக்கம்.

இங்குசிலர் சிரத்தைக் குறைவினுல், சந்தியாவந்தனம் காயத்திரிசெபம்,சிகை,பூணநூல்இவைகளைவிடுதலை யுடன்படாதவராய் மேல்விலக்கப்பட்ட பரமஹமிசநிலையை மிகவும் விரோதிக்கின்றவராய்ச் சிலபிரமாண மொழிகளையுங் காட்டுகின்றனர். அவைவருமாறு.

ஹாரிதர். హారీతః॥ "చత్వారఆశ్రమాస్స్యేతే సంధ్యావందనవర్జితాః। బ్రాహ్మణ్యాదేవహీయంతే యద్యప్యుగ్రతపోధనాః" = இந்நால்வகைப்பட்ட நிலைமையரும் அரியதவச்செல்வமுடையராயினும் சந்தியாவந்தனம் விட்டவராதலின் வேதியத்தன்மையினின்று மிழிந்தவராகின்றனர். எ-று.

போதாயனர். బోధాయనః॥ "అనాగతాస్తుయేపూర్వా మనతీతాంతుపశ్చిమాం। సంధ్యాంనోపాసతేవిప్రాః కథంతేబ్రాహ్మణాస్స్మృతాః" = பூர்வசந்திவரு

தற்குமுன்னும் பச்சிமசந்தி (மேற்றிக்குச்சந்தி) கழிவதற்குமுன்னும் எந்தவேதியன் சந்தியாவந்தனஞ் செய்வதில்லையோ அவன் வேதியனென்று எவ்வாறுகூறப்படுவன். எ-று.

பலமிருதி. స్మృత్యంతరే॥ "సాయంప్రాతస్సదాసంధ్యాం యోవిప్రోనోపాసతే। కామంతంధార్మికోరాజా శూద్రకర్మసుయోజయేత్"—எந்தவேதியன் காலைமாலை சந்தியாவந்தனஞ்செய்வதில்லையோ அவனைத்தருமமுடைய அரசன் (சூத்திரர் கருமத்துள் சேவகத்தொழிலில்) செலுத்த வேண்டுவது. எ-று.

மனு. మనుః॥ "సావిత్రీపతితావ్రాత్యా భవంత్యార్యవిగర్హితాః" = சாவித்திரி மந்திரத்தினை விட்டவர்கள் திருத்தஞ்செய்யாத நிலைமை கெட்டவர்களாய்ப் பெரியாரிகழப்படுவர். எ-று.

அத்திரி. అత్రిః॥ "యజ్ఞోపవీతంసర్వేషాం ద్విజానాంముక్తిసాధనం। పరిత్యజంతియేమోహాత్తేనరానరకగామినః" = இருபிறப்பாளருக்குப் பூணநூல் முத்திகாரணமாம். அஞ்ஞானத்தாலதனை யொழித்தவர் நரகத்தினை யடைவர். எ-று.

பதுமபுராணம். పద్మపురాణే॥ "శిఖాయజ్ఞోపవీతేన త్యక్తేనాసౌకథంద్విజః" குடுமிபூணநூல் விட்டவன் எவ்வாறு இருபிறப்பாளனுவன். எ-று. என்றால்.

மேல் சித்தாந்தம்.

அங்ஙனமன்று. மேலெடுத்துக்கூறியவுரைகளெல்லாம் பரமஹம்சனையொழிய ஏனையர்களைப்பற்றியனவாம். எங்ஙனமெனில் பரமஹம்சநிலைமை மிகவும் வழக்கத்தின்பால்வந்த சுருதியால் தெரியவருதலின் அதனை மாற்றிக்கொள்வதற்கு யாவராற்கூடும் அங்ஙனம் ஜாபாலசுருதி கூறுகின்றது. జాబాలశ్రుతిః॥ "పరమహంసానామసంవర్తకారుణిశ్వేతకేతు దూర్వాసఋభునిదాఘ జడభరతదత్తాత్రేయరైవతకప్రభృతయోఽవ్యక్తలింగా అవ్యక్తాచారాఅనున్మత్తా ఉన్మత్తవదాచరంతి" =பரமஹம்சன் எனவே, சம்வர்த்தகர், ஆருணி, சுவேதகேது, தூருவாசன், இருபு, நிதாகன், சடபரதன், தத்தாத்திரேயன், இரைவதகன் முதலியோர் குறிப்புவெளிப்படுத்தாதவர்களாய் வெளிப்படாத ஒழுக்கமுடையராய்ப் பித்தில்லாதவர்களேயாகியும் பித்தரைப்போலும் ஒழுகுகின்றனர். எ-று.

அவர்களுக்குச் சிகைமுதலியன வொழித்தலும், மெய்யுணர்வு முதலியதருமங்களும் அந்தச்சுருதியுட்டானே கூறப்பட்டுள்ளன. జాబాలశ్రుతిః॥ "దండంకమండలుంశిక్యం పాత్రంజలపవిత్రం శిఖాంయజ్ఞోపవీతం చేత్యేతత్సర్వం భూస్స్వాహేత్యప్సు పరిత్యజ్యాత్మానమన్విచ్ఛేత్ యథారూపధరోనిర్ద్వంద్వో నిష్పరిగ్రహస్తత్త్వ బ్రహ్మమార్గేసమ్యక్సంపన్నశ్శుద్ధమానసఃప్రాణసంధారణార్థం యథోక్తకాలేవిముక్తో భైక్షమాచరన్నుదరపాత్రేణలాభాలాభయోస్సమో భూత్వాశూన్యాగార దేవ గృహతృణ కూటవల్మీకవృక్షమూల కులాలశాలాగ్నిహోత్ర నదీపులినగిరికుహరకందరకోటరనిర్ఝరస్థండిలేష్వనికేతవాసప్రయత్నో నిర్మమశ్శుక్లధ్యానపరాయణోధ్యాత్మనిష్ఠోశుభకర్మనిర్మూలనపరస్సన్యాసేనదేహత్యాగంకరోతిస పరమహంసోనామేతి"= தண்டு, கரகம், உறி, பலிபாத்திரம், நீர்ப்பவித்திரம், குடுமி, பூணநூல், முதலியவைகளையெல்லாம் "భూస్స్వాహా" என்ற மந்திரங்கூறி நீரில்விட்டுத் தன்னைத்தேடவேண்டும். எப்படியுள்ளதோ அப்படிப்பட்ட வுருவமுடையவனாய், குளிர்ச்சி, வெப்பம், இன்பம், துன்பம், நல்லது, கெட்டது, என்பனமுதலிய இருமைத்துன்பமில்லாதவனாய், ஏற்பதொன்று மில்லாதவனாய், உண்மையானபிரமவாராய்ச்சிவழியில்நன்றானசெல்வமுடையவனாய்ச் சுத்தமானமனமுடையவனாய் உயிரைத்தரித்திருப்பதன்பொருட்டு விதித்தகாலத்தில் நிட்டையைவிட்டு நீர்க்கரகத்தால் பிச்சையேற்று, கிடைத்தவழியும் கிடையாவழியும் ஒத்த எண்ணமுடையவனாய்ப் பாழ்மனை, தேவர்கோட்டம், வைக்கோற்போர், புற்று, மரத்தடி, குயவன் மட்குடஞ்செய்யுமிடம், வேள்விச்சாலை, யாறு, மணற்குன்று, மலைக்குகை, சுருங்கையிடம், மரப்பொந்து, அருவிக்கால், மண்மேடுமுதலியவற்றிற் படுத்துக்கிடந்து உறைவிடம் வேறின்றி, நிலையானவிடமொன்றுமில்லாமலும் முயற்சியொன்றுமின்றி எனது என்னும்பற்றொழித்து வாலிய பொருளை நினைத்திருப்பதே மேலான நிலைமையாகவுடையனாய்த் தன்னுள்ளே நிட்டையமைந்தவனாய் பாவவினைகளையெல்லாம் வேர்பறித்தெறிவதே கருத்தானவனாய் சந்நியாசத்தோடு யார் தேகத்தைவிடுவானோ அவன் பரமஹம்சன் என்னப்படுவன். எ-று. வாலிய—எது, வெள்ளையாகிய. எனவே, களங்கமற்ற, எனவுணர்க.

அதேசுருதியில், சனகருக்கும் யாஞ்ஞவற்கியருக்கும் நடந்த வாதுகூறுமிடத்துப் பூணநூல் விடுதலை மறுத்துப்பின் உடன்பாடு கூறப்பட்டது. జాబాలశ్రుతిః॥ "పృచ్ఛామిత్వా యాజ్ఞవల్క్యయజ్ఞోపవీ

కథం బ్రాహ్మణ ఇతి, సహోవాచ యాజ్ఞవల్క్య ఇదమేవాస్య తద్యజ్ఞోపవీతంయ ఆత్మా" = ஓ! யாஞ்ஞவற்கியரோ! உம்மைவினவுகின்றேன். எக்கியோபவீதம் இல்லாதவன் எங்ஙனம் வேதியனாவான் என, அந்த யாஞ்ஞவற்கியர் கூறுவர். இவனுக்கு ஆன்மா யாவனே அவனே எக்கியோபவீதம் (பூணூல்) ஆம். எ-று. காண்க.

ஆருணிசுருதியிலும் இப்பரமஹமசத்தி விலைமைவிரித்துக் கூறப்பட்டுள்ளது. ఆరుణిశ్రుతిః ॥ "ఆరుణిః ప్రజాపతేర్లోకం జగామ తంగత్వోవాచ భగవన్ కర్మాణ్యశేషతః స్సృజామీతి తగ్ం హోవాచ ప్రజాపతిస్తవ పుత్రాన్భ్రాతౄన్బన్ధ్వాదీఞ్శిఖాం యజ్ఞోపవీతంయాగం సూత్రంస్వాధ్యాయంచ భూర్లోకభువర్లోక స్వర్లోక మహర్లోక జనలోకతపోలోక సత్యలోకంచాతలవితల సుతలతలాతల మహాతలరసాతల పాతాళబ్రహ్మాణ్డంచ విసృజేద్దణ్డమాచ్ఛాదనంకౌపీనంపరిగ్రహేచ్ఛేషంవిసృజేద్బ్రహ్మచారీగృహస్థో వానప్రస్థోవా లౌకికాగ్నీను దరాగ్నౌ సమారోపయేద్గాయత్రీంచ స్వవాచాగ్నౌ సమారోపయేదుపవీతంభూమావప్సువావిసృజేత్కుటీచరో బ్రహ్మచారీ కుటుంబం విసృజేత్పవిత్రం విసృజేత్పాత్రం విసృజేద్దణ్డాన్లోకాగ్నీన్ విసృజేదితిహోవాచాత ఊర్ధ్వమమన్త్రవదాచరేదూర్ధ్వగమనం విసృజేత్ త్రిసంధ్యాదౌ స్నానమాచరేత్సర్వేషు వేదేష్వారణ్యమావర్త యేదుపనిషదమావర్తయేత్" = ஆருணியென்பவன் பிரமலோகத்தையடைந்து பிரமனைவினவினன். எல்லாக் கருமங்களையும் நான் எதனால்விடுவேன்என்று. அவனுக்குப் பிரமன் கூறினன். உன்புதல்வரையும், அண்ணன் றம்பியரையும், சுற்றத்தினர் முதலியோரையும், குடுமி, பூணூல், வேள்வி, சூத்திரம், (நூல்) வேதம், பதினான்குலகம், பிரமாண்டமிவைகளையும் விடவேண்டும். தண்டு, கோவணம், கவந்தி, கைப்பெற்றுப்பிறவற்றையெல்லாம் விடவேண்டும். பிரமசாரியாயினும், இல்லறத்தானாயினும், வானப்பிரத்தனேயாயினும், உலகத்தினையும் தீயினையும், தன்வயிற்றினுள்ள தீயிலும், காயத்திரியை இயற்கையால் அக்கினியினிடத்தும், அடக்கிக்கொண்டு உபவீதத்தினை நிலத்திலேனும், நீரிலேனும், விடவேண்டுவது. குடீசகன் பிரமசாரியாகக் குடும்பத்தை விடவேண்டும். விப்பிரத் தன்மையையும், பாத்திரத்தினையும், தண்டினையும், உலகத்தினையும், அக்கினியையும், விடவேண்டும் என்று. பின்பு இவ்வாறன்றேகூறினர், அதன்மேல் மந்திரபடனத்தினானே கருமங்களெல்லாவற்றினையும் செய்துகொள்ளவேண்டும். பின்புதிரிதலை யொழிக்கவேண்டும். முச்சந்தியிலும் நீராடல் வேண்டும். எல்லாக்கடவுளரிடத்தும்

சேவித்தலை அடிக்கடிசெய்துவரவேண்டும். உபநிடதங்களை அடிக்கடிபயில வேண்டும். எ-று. காண்க.

மைத்திராவருணசுருதி. మైత్రావరుణశ్రుతిః॥ "ఇంద్రస్యవజ్రోసివార్త్రఘ్న ణవాన్దక్షిణపాణౌ ధారయేదేకంవాయద్యేకం తదుపశిఖంవపనంకృత్వా విసృజ్యయజ్ఞో పవీతం"—"ఇన్ద్రస్యవజ్రోసి" என்றமந்திரத்தால் மூன்றுமுங்கற்கோலை வலக்கரத்தாற் பற்றவேண்டும். ஒன்றனையே தரிப்பதாயின் குடுமியையமழித்துப் பூணநூலையொழித்து. எ-று.

பிப்பலாதசாகைச்சுருதி. పిప్పలాదశాఖోపనిషత్॥ "సశిఖంవపనంకృత్వా బహిస్సూత్రంపరిత్యజేత్। యదక్షరంపరంబ్రహ్మ తత్సూత్రమితిధారయేత్। సూచనాత్సూత్రమిత్యాహుః సూత్రంనామపరంపదం। తత్సూత్రంవిదితంయేనసవిప్రోవేదపారగః। యేనసూత్రమిదంప్రోతం సూత్రేమణిగణాఇవ। తత్సూత్రంధారయేద్యోగీ యోగవిత్తత్వదర్శనః। బహిస్సూత్రంత్యజేద్విద్వాన్ యోగముత్తమమాస్థితః। బ్రహ్మభావమిదంసూత్రంధారయేద్యస్సచేతనః। ధారణాత్తస్యసూత్రస్య నోచ్ఛిష్టోనాశుచిర్భవేత్। సూత్రమంతర్గతంయేషాంజ్ఞానయజ్ఞోపవీతినాం। తేవైసూత్రవిదోలోకే తేచయజ్ఞోపవీతినః। జ్ఞానశిఖినోజ్ఞాననిష్ఠాజ్ఞానయజ్ఞోపవీతినః। జ్ఞానమేవపరంతేషాం పవిత్రంజ్ఞానముచ్యతే। అగ్నేరివశిఖానాన్యా యస్యజ్ఞానమయీశిఖా। సశిఖీత్యుచ్యతేవిద్వాన్ నేతరేకేశధారిణః। కర్మణ్యధికృతాయేతు వైదికేబ్రాహ్మణాదయః। ఏభిర్ధార్యమిదంసూత్రం క్రియాంగంతద్ధివైస్మృతం। శిఖాజ్ఞానమయీయస్య ఉపవీతంతుతన్మయం। బ్రాహ్మణ్యంసకలంతస్య ఇతిబ్రహ్మవిదోవిదుః। ఇదంయజ్ఞోపవీతంతు పరమంయత్పరాయణం। విద్వాన్యజ్ఞోపవీతీస్యా ద్విజ్ఞాస్తంయజ్ఞవిదః" — குடுமியோடு க்ஷவரம்செய்துகொண்டு வெளியிலிட்ட பூணநூலைக்கழற்றியெறியவேண்டுவது. நாசமற்றபிரமமெதுவோ அது சூத்திரம் (நூல்) என்றுதரிக்கவேண்டும். சத்தியத்தைக் காட்டுதலினாற் பரமபதமே சூத்திரமெனப்படும். அந்தச் சூத்திரத்தினையறிந்தவனேவேதமுடிபுணர்ந்தவன். நூலில்மணிகளைக்கோத்தாற்போலும் எதனலிவ்வுலகு கோக்கப்பட்டுள்ளதோ அந்த நூலினை யோகமுணர்ந்து தத்துவத்தினைநோக்கும் யோகிதரித்தல்வேண்டும். அறிவறிந்து மேலான யோகத்தினை அனுட்டித்திருப்பவன் வெளிச்சூத்திரத்தினை யொழிக்கவேண்டும். பிரமபாவனையாகிய இந்தச் சூத்திரத்தினை யறிவுடையோன் தரிப்பன். அந்தச் சூத்திரத்தினைத் தரிப்பதனல் எச்சில் அசுத்தங்கலவாது. யாவனொருவனுள்ளே யிந்தஞானசூத்திர முண்டாயிருக்குமோ? அவனே சூத்திரமுணர்ந்தவனும் உபவீத முடையவனு

மாம். அவனுக்கு ஞானமே குடுமி, ஞானமே அழிவற்ற செல்வம் (கிட்டை) ஞானமே பூணநூல், ஞானமேமேலானது, ஞானமே சுத்தமானது, ஞானுக்கினியே குடுமியல்லாது வேறல்ல. யார்குடுமி ஞானமயமானதோ அவனே குடுமியை யுடையோன். மயிர் சுமந்திருக்கும் ஏனையரல்லர். வைதிக கருமத்தில் அதிகரிக்கப்பட்ட வேதியர்முதலியோரால் கரும அங்கமாகிய வெளிப்பூணநூல் தரிக்கத்தக்கது. ஞானமயமாகிய குடுமியும் ஞானமயமான பூணநூலு முடையவன் முற்று நிரம்பிய அந்தணைத்தன்மை யுடையோனும் என்று பிரம முணர்ந்தவர்க ளறிவார்கள். இந்த வுபவீதமேசிறந்த மேலான நிலைமையாக விருக்கின்றது. ஞானமேவேள்வி, ஞானமுடையோனே சோமயாஜி என்றுணர்வர். எ-று.

வியாசமிருதி. వ్యాసస్మృతిః॥ "యజ్ఞోపవీతంకర్తాంగం వదంత్యుత్తమబుద్ధయః। ఉపకుర్వాణకాత్పూర్వం యతోలోకేనదృశ్యతే। యావత్కర్మాణికురుతే తావదేవాస్యధారణం। తస్మాదస్యపరిత్యాగః క్రియతేకర్మభిస్సహ। అగ్నిహోత్రవినాశేతు జుహ్వాదీనియథాత్యజేత్। యథాచమేఖలాదీని గృహస్థోక్రిమవాంఛయా। పత్నీయోక్త్రంయథాపత్న్యంతే సోమాంతేచయథాగ్రహాన్। తద్వద్యజ్ఞోపవీతస్య త్యాగమిచ్ఛంతియోగినః" =மேலானஅறிவினையுடையோர் பூணநூலினைக் கருமஅங்கமென்று கூறுகின்றனர். கருமம் உபகாரம்செய்வது. அதற்குமுன் உலகத்தில் உபவிதம்காணப்படுகிறதில்லை. கருமம்செய்துகொண்டிருக்கும்வரையில் இவ்வுபவிதத்தினைத்தரிக்கவேண்டும். ஆதலால் கருமத்தோடு இதுவும்விடப்படும். அக்கினிஹோத்திரம் முடிவினையடையும்போது ஹோமபாத்திரங்களை யெவ்வாறுவிட்டுவிடுவானோ? இல்லறவிச்சையால் முஞ்சிப்புல்லரைஞாண் முதலியவற்றினை யெவ்வாறுவிடுவானோ? பத்தினிக்குக்கட்டிய "యోక్త్రం" யோக்திரம்என்னும் தருப்பைக்கயிற்றினை இஷ்டிக்கருமமுடிந்தபின்பு எவ்வாறு ஒழித்துவிடுவானோ? சோமயாகமுடிவில் கிரகம்என்னும் மரப்பாத்திரங்களை எவ்வாறுவிடுவானோ? அவ்வாறே சந்நியாசயோகமுடையவர்கள் உபவிதத்தையொழிப்பதனை விரும்புகின்றனர். எ-று.

விசுவாமித்திரன். విశ్వామిత్రః॥ "అథాపరంపరివ్రాజకలింగంసర్వోకఃసరి మోహమోకసత్యాన్నృతే సుఖదుఃఖేవేదానిమం లోకమనుంచపరిత్యజ్యా త్మానమన్విచ్ఛేచ్చ

ఖాయజ్ఞోపవీతకమండలు కపాలానాంత్యాగీ" = பின்பு மற்ருெருவகைச் சந்நியாசக்குறியுள்ளது. அதுதான், சிலர் எல்லாவற்றினையும் விடுதலெனவுடன்படுகின்றனர். மெய், பொய், சுகம், துக்கம், வேதம், இம்மை, மறுமை எல்லாவற்றினையும் விட்டொழிந்துத் தன்னைத்தேடவேண்டுவது. குடுமி, பூணநூல், கரகம், பலியோடு, இவற்றையும் விட்டொழித்தவன். எ - று. "மற்றுந்தொடர்ப்பாடெவன்கொல் பிறப்பறுக்கலுற்ருர்க்குடம்புமிகை" என்பதுமது.

போதாயனர். బోధాయనః॥ "అథఊర్ధ్వంయజ్ఞోపవీతం మంత్రమాచ్ఛాదనంయష్టి యశ్శిక్యంజలపవిత్రంకమండలుం పాత్రమిత్యేతానివర్జ యిత్వాత్రైకందండమాదత్తేసఖామాగోపాయేతి" = அதன்பின்னர், பூணநூல், மந்திரம், ஆடை முக்கோல், உறி, நீர்ப்பவித்திரம், கரகம், பலியோடு, இவற்றைவிட்டொழித்து "సఖామాగోపాయ" = நண்பனுயென்னைக்காத்திடுஎன்னும் மந்திரம்கூறி ஒரு கோலை வாங்கிக் கொள்ளுகின்ருன். எ – று.

புலமிருதி. స్మృత్యంతరే॥ "యదాతువిదితంతత్త్వ త్పరంబ్రహ్మసనాతనం। అథైకదండంసంగృహ్య ఉపవీతంశిఖాంత్యజేత్," = எப்பொழுது, அழிவற்ற பிரமதத்துவம் = மெய்ப்பொருளுண்மையாகக் காணப்படுகின்றதோ அப்பொழுது, ஒரு தண்டினைமாத்திரம் பிடித்துப் பூணநூல் குடுமியைக்களைதல் வேண்டும். எ – று.

ஈண்டுச்சிலர். பூணநூலினைவிடும்படி விதித்தபிரமாணவுரைகள் பழய பூணநூலினை யொழித்தற்பொருட்டாக வெழுந்ததென்று கூறுவர் அங்ஙனம் மிருதியுரையும் உண்டு. స్మృతిః॥ "నఖానికృత్యపురాణవస్త్రం యజ్ఞోపవీతంకమండలుం చత్యక్త్వానవానిగృహీత్వా గ్రామంప్రవిశేత్" = நகம்களைந்து பழைமைப் பட்ட உடுக்கை, பூணநூல், கரகமிவற்றினை யொழித்துவிட்டுப்புதியதனை யெடுத்துக்கொண்டு ஊரினுட்புகுதல் வேண்டும். எறு. எப்போதானுல் முக்குடிநீர் அங்கமானபூணநூல் இல்லாமற்போமோ அப்பொழுது, வேதியத்தன்மையா லீனப்படுகின்ருன் ஆதலால் பரமஹமிசனுக்கும் பூணநூல் உண்டென்று கூறுவர்.

ஆயின், அதுமுறையன்று. எடுத்துக் காட்டியமிருதி வெகூதகன் முதலியசந்நியாசியர் களைப்பற்றியது. "నయజ్ఞోపవీతంనాచ్ఛాద

सर्वाणि वस्त्राणि परमहंसः" = பரம ஹம்சனானதுறவி பூணநூலினையும் ஆடையையும் அனுபவித்தல் செய்யான் என்று நேரேசுருதி கூறுகின்றது. மேலும் "अयज्ञोपवीती शौचनिष्ठः कामकं त्रिदण्डं गृह्णीत" = பூணநூலில்லாதவனாய் மிகவும் சௌசத்தில் பற்றுடையனாய் ஒரு முக்கற்றண்டினைப் பெற்றுக்கொள்வது. என்று மற்றொரு சுருதி கூறுகின்றது.

மேல் வினா.

வெளிப்பூணநூ லில்லாமலே ஆசமன முதலிய கருமமுண்டாகாதேதென்று கூறின்.

விடை.

அங்ஙனமன்று. கௌஷீதகிப்பிராமணமென்னும் சுருதியில் வினாவிடைகளால் அது விளங்கக் கூறப்பட்டுள்ளது. कौषीतकि श्रुतौ॥ "कथमस्य यज्ञोपवीतं कथं चास्योपस्पर्शनम्" = இவனுக்குப் பூணநூல் என்! குடுமி என்! ஆசமனம் எவ்வாறு என்று. (இதுவினா) इदमेवास्य यज्ञोपवीतं यदात्मध्यानं विद्या शिखा" = தன்னை எண்ணியறிதலாகிய விதுவே யிவனுக்குப் பூணநூல். அறிவே குடுமி. (என்பன முதலிய விடை).

பிப்பலாதசுருதி. पिप्पलादश्रुतौ॥ "ब्राह्मण्यं सकलं ज्ञानमयशिखायज्ञोपवीतिनस्तस्य सकलम्" = அறிவுமயமான குடுமி பூணநூலுடையவனுக்குவேதியத் தன்மைமுற்றுநிரம்பியது. எ-று.

பூர்வபக்ஷம்.

சிலர் பரமஹம்சனுக்கும் முக்கோலிருக்கவேண்டுமெனக் கூறுகின்றனர். அதற்குப் பிரமாணமொழிகளையும் காட்டுகின்றனர். வருமாறு. தக்ஷர். दक्षः॥ "क्रमेणैवाश्रमे" = எல்லாஆச்சிரமங்களுக்கும் முறையே இலக்கணங் கூறிவந்து முக்கோலினால் துறவியாகின்றனென்று துறவு நிலைக்கு இலக்கணம்கூறி. "यस्यैतल्लक्षणं नास्ति प्रायश्चित्ती न चाश्रमी" = யார்க்குஇந்த விலக்கண மில்லையோ அவன் பிராயச்சித்தமுடையவனாவான். ஆச்சிரம மில்லாதவனுமாவன் என்றும், முக்கோலில்லாதவன் சந்நியாசியே யல்லவென்று விலக்கினர்.

ஹாரீதரும், தத்தாத்திரேயரும், பிதாமகனும் கூறினர். హారీతదత్తాత్రేయపితామహాః॥ "వృత్తిభేదేన భిన్నాశ్చ నైవలింగేన తద్విజాః। లింగంతు వైష్ణవం తేషాం త్రిదండం సపవిత్రకం। శిఖాస్యాచ్ఛ్రుతా హి కేచిత్ కేచిన్ముండాశ్చ భిక్షుకాః। చతుర్థా భిక్షవో విప్రాః సర్వేప్యేవ త్రిదండినః" = குடீசகன்முதலிய நால்வகை யிருபிறப்பரும் ஒழுக்கவேறுபாட்டால் வேறுவேருக விருக்கின்றன ரன்றிக் குறிகளால் வேறுபடுதலில்லை. குறியாவது. பவித்திரத்தோடு மூங்கல் முக்கோலர் சிலர். குடுமியுடையவர்கள் சிலர், முண்டித்தவர்களாகிய நால்வகைச் சந்நியாசிவேறிய ரணைவரும் முக்கோலினரே. எ-று.

ஒற்றைத்தண்டினை விதித்தவுரைகளோ முக்கோல் கிடையாவழி கூறப்பட்டது. அங்ஙனம் மேதாதிதிகூறினர். మేధాతిథిః॥ "యావన్నస్యాత్త్రిదండో హి తావదేకేన పర్యటేత్"= முக்கோல் கிடைக்கு மளவும் ஒற்றைத்தண்டினேடு முலாவல்வேண்டும். எ-று.

ஹாரீதர். హారీతః॥ "నష్టే జలపవిత్రే వా త్రిదండే వా ప్రమాదతః। ఏకంతు వైణవం దండం పాలాశం బైల్వమేవ వా। గృహీత్వా విచరేత్తావ ద్యావల్లభ్యేత్త్రిదండకం" = ஜலபவித்திரந்தவறினும், மறதியால் முக்கோல் தவறினும் ஒற்றை மூங்கற்கோலாவது, முருக்கங்கோலாவது, வில்வக்கோலாவது பெற்றுக்கொண்டு முக்கோல் கிடைக்கும் வரையில் திரிதல் வேண்டும். எ-று.

சித்தாந்தம்.

இங்கு கூறப்படுகின்றது. பரமஹம்சனுக்கு ஒரேதண்டு இருக்கவேண்டுமென்னும் சிறந்தசுருதி மிருதிகள், மேல் எம்மாலெடுத்துக் கூறப்பட்டதன்றே? ஆயினும் மேதாதிதி, ஹாரீதர், இவ்விருவரால் ஏகதண்டம் அனுகற்பமாக்கப்பட்டதே யெனில் அது வெகூதகன் முதலிய சந்நியாசிகளைக் குறித்தபடியாம். பரமஹம்சனுக்கானலோ ஏகதண்டம் அனுகற்பமன்று. முக்கியமானதேயாம். அங்ஙனம் வியாசர் கூறினர். వ్యాసః॥ "త్రిదండస్య పరిత్యాగ ఏకదండస్య ధారణం। ఏకస్మిన్ దృశ్యతే వాక్యే తస్మాత్తస్య ప్రధానతా" = முக்கோலினை யொழிக்கவேண்டுவது. ஒரு தண்டினைத் தரித்தல் வேண்டுவது. இவ்விருபொருளும் ஒரே வேதமொழியுட்டானே காணப்படுதலின் ஒரு கோலே சிறந்த தாகின்றது. எ-று.

"సర్వైవత్రిదండినః" = எல்லாரும் முக்கோலினை யுடையவர்கள் என்றது, வாக்குத்தண்டம், மனத்தண்டம், காயத்தண்டம், என்னு மிவற்றைக்குறித்தவாறன்றி மூன்று விறகுகளைக் குறித்ததே அதன்கருத்தன்று. அங்ஙனம் மனுகூறினர். మనుః॥ "వాగ్దండోఽథమనోదండః కర్మదండస్తథైవచ। యస్యైతేనియతాదండా త్రిదండీతిసఉచ్యతే। త్రిదండమేతన్నిక్షిప్య సర్వభూతేషుమానవః। కామక్రోధౌతుసంయమ్య తతస్సిద్ధింనియచ్ఛతి"= வாக்கினைத் தண்டித்தல், மனத்தினைத் தண்டித்தல், தொழிலைத் தண்டித்தல் என்னு மிம்மூன்றும் யார்க்குத் தவறாது உண்டாயிருக்குமோ அவன் முத்தண்ட முடையவன் என்னப்படுகின்றான். மனிதன் எல்லாவுயிர்களிடத்தும் இம்மூன்று தண்டங்களையும் வைத்துக் காமக்குரோதங்களை நன்றாகத் தண்டித்துத் தவத்தின் சித்தியை யடைகின்றான். எ-று.

தக்ஷரும் கூறினர். దక్షః॥ "వాగ్దండోఽథమనోదండః కర్మదండస్తథైవచ। యస్యైతేనియతాదండా త్రిదండీతిసఉచ్యతే"=வாக்கு, மனம், தொழில்இம்மூன்றினையும் தண்டிப்பது யார்க்குண்டோ அவனே திரிதண்டியென்னப்படுவன். எ-று.

திரிதண்டவடிவம்.

அந்த மூன்று தண்டத்திற்கும் வடிவத்தினைத் தக்ஷரே கூறினர். దక్షః॥ "వాగ్దండేమౌనతాప్రోక్తా కర్మదండస్త్వనీహతా। మానసస్యతుదండస్య ప్రాణాయామోవిధీయతే" = மோனமாக இருப்பதே வாக்குத்தண்டம். ஆசையற்றிருப்பதே தொழிற்றண்டம், பிராணயாமமே மனோதண்டம். எ-று.

"పరమపరమహంసస్తు తుర్యాఖ్యఃత్రిదండధృత్। యమైశ్చనియమైర్యుక్తోవిష్ణురూపీ త్రిదండభృత్" = இயமத்தாலும் நியமத்தாலும் கூடினவனாய் மூன்று தண்டத்தினையும் தரித்து விஷ்ணுவடிவ முடையவனாகிய பரமஹம்ச சந்நியாசி சிறந்ததுரிய னென்னும் பெயரையடைவன் (எனவேமுடிவானவன்) என்றுவேதங் கூறிற்று. இவ்வாறென்று பிதாமகராற் கூறப்பட்டுள்ளஇவ்வுரையும்மேற்கூறிய வகையானே வாக்குத்தண்ட முதலியவற்றினைக் குறித்தகருத்துடையது.

"లింగంయజ్ఞోపవీతం త్రిదండం" = என்றவுரை மூன்றுவிறகினைக் கூறியதன்றோவெனில் ? அதுவும்வெகூதக சந்நியாசிவிடயத்தில் கருத்துமுற்று முடையதாக விருக்கின்றது.

“వృత్తిభేదవశేనాస్య నైవలింగేనభిద్యతేః” என்றவுரையால் வெகூதகர்க்கும், ஹமிசருக்கும், பரமஹமிசருக்கும் தண்டத்தின்குறியில் வேறுபாடில்லை யென்று காணப்படுகின்றதே யெனில்? யார் வெகூதக சந்நியாசியேயாயினும் ஒவ்வோரிரவில் ஒவ்வொருவூரிலேயிருக்கவேண்டுமென்றஹமிசவிருத்தியையனுட்டிப்பனோஅவன்முயற்சியால் ஹமிசத் துறவியாக விருக்கின்றான். அந்தவெகூதகனே வேதாந்தங்களைக்கேட்டல் முதலிய பரமஹமிசன் செய்கையைத்தொட்டு நிற்பானாயின் அவன் செய்கையால் பரமஹமிசத்துறவியே யாகின்றான் என்ற கருத்தாகின்றது. அங்ஙனமல்லாக்கால் சிறந்தோரான ஹமிசருக்கும் பரமஹமிசருக்கும் ஓரோதண்டு இருக்க வேண்டுமென்று விதிப்பதென்று மேலெடுத்துக் கூறப்பட்ட மொழிகளுக்கெல்லாம் இலக்கியமில்லாதொழியும். ஆதலால்பரம ஹமிசனுக்கு ஓரோதண்டமென்பது. சித்தாந்தமாகின்றது.

பூருவபக்ஷம்.

ஆயின், பரம ஹமிசோப நிடதத்திலும் ஏக தண்டமே சிறந்ததெனக் கூறிற்றில்லை. கோவணமும், ஆடையும், உடற்காப்பின்பொருட்டு உலோகோபகாரமாகத் தரிக்கவேண்டுமென்றி அவர்க்குஅவைசிறந்ததல்ல. பிறவெனின்? “నదండంనశిఖాంనాచ్ఛాద నంచరతిపరమహంసః” = பரமஹமிசன் தண்டினையும், குடுமியையும், ஆடையையும் அனுபவிப்பதில்லை. என்ற தென்னெனின்.

சித்தாந்தம்.

ஆம். அஃதுடன் படத்தக்கதே, அறிவனாகியபரம ஹமிசனுக்கும் வெளிப்பட்டவிறகினால் பயனில்லையாமாதலின் அவனுக்குத்தண்டு என்பது இல்லவேயில்லை. இதனானேவாக்கிய சேடத்தில் அறிவேஅவனுக்குத் தண்டமென்று கூறப்பட்டது. “జ్ఞాన దండోధృతోయేన సైకదండీసఉచ్యతే” = அறிவென்னுங்கோல் யார் கையிற் பற்றியுள்ளானோ? அவன் ஏகதண்டியென்று கூறப்படுகின்றான். எ-று.

மூங்கற்றண்டினைத் தரிப்ப தானலோ ஞானத்தைத்தேடுகின்ற பரமஹமிசனுக்குத் தக்கதாம். ஆயின் அறிவுமுதிர்ந்தபரம

ஹமிசர் சிலர். அறியவிரும்பிய பரமஹமிசர் சிலர். என்று பரமஹமிசர் இருவகையாகவிருப்பதற்குப் பிரமாணமில்லையென்றும் விறுவலாகாது. நேரே சுருதிப்பிரமாணமே யுள்ளது. வாஜசநேயப்பிரமாணத்தில் உணர்க. వాజసనేయబ్రాహ్మణే॥ "ఏతంవై తమాత్మానం విదిత్వా బ్రాహ్మణాః పుత్రైషణాయాశ్చ విత్తైషణాయాశ్చ లోకైషణాయాశ్చ వ్యుత్థాయాథ భిక్షాచర్యం చరంతి" — வேதியன் இந்தவழியினை அந்தவழிவாக வுணர்ந்து மூவாசைகளையுங் கெடுத்து, பிச்சைத்தொழிலைக் கைக்கொள்வன். எ-று. இம்மொழிவித்துவத்து சந்நியாசத்தின் விதி. (எனவே அறிவன் துறவென்பது.)

சுருதி. శ్రుతిః॥ "ఏతమేవం విదిత్వా ముని ర్భవతి ఏతమేవ ప్రవ్రాజినో లోకమిచ్ఛంతః ప్రవ్రజంతి" — அந்தவான்மாவை இங்ஙனமுணர்ந்து முனியாகின்றான் அவனையேயறிய வெண்ணித்துறவியுலகை விரும்புகின்றவன் சந்நியாசி யாகின்றான். எ-று. இவ்வுரையில் வித்துவத்து சன்னியாசமும் விவிதிஷு சந்நியாசமும் விளக்கப் பட்டன. விவிதிஷு சந்நியாசம் = அறியவிரும்பினோன் துறவு.

சுருதி. శ్రుతిః॥ "ఏతత్సర్వం భూస్స్వాహేత్యప్సుపరిత్యజ్యాత్మానమన్విచ్ఛేత్" — இவற்றையெல்லாம் "భూస్స్వాహా" = என்று நீரில் விடுத்துத் தன்னைத் தேடவேண்டுவது. எ-று. இந்த ஜாபாலமொழியில் முக்கோல் முதலியவற்றினை விடுவதாகவிருக்கும் விவிதிஷு பரமஹமிசாச்சிரமம் கூறப்பட்டது.

சுருதி. శ్రుతిః॥ "న్యాస ఇతి బ్రహ్మ என்றதுமுதல்" "న్యాస ఏవాత్యరేచయత్" என்றவரையில் வேள்வித்தீ, வேள்வி, தானம், தவம் முதலியவற்றை யெல்லாம் இகழ்ந்து பரமஹமிசாச் சிரமத்தை விதித்து பிரமத்தை யறியவிரும்பிய விவிதிஷுவாகிய அப்பரமஹமிசனுக்கு "ఓమిత్యాత్మానం యుంజీత" = என்று ஆன்மாவைக்கூட்டவேண்டுமென்று ஆன்மவித்தையில் அதிகாரத்தைக்குறிப்பித்தது. இது கிருஷ்ணயஜுர்வேதம் இறுதிப்பிரசினத்துளுள்ளது.

ஆதலால் பரமஹமிசசந்நியாசம் இங்ஙன மிருவகைப்பட்டுள்ளன. அவற்றுள் செய்யக்கடவனவாகிய தொழிலொன்றுமில்லாதவித்துவத்து பரமஹமிசனுக்குத்தண்ட முதலியதொன்றும் வேண்டாமென்பது மேற்கூறிய சுருதி மிருதிகளின் கருத்து.

உணர்ந்தோனியல்பு.

பகவற்கீதை. భగవద్గీతా॥ "యస్త్వాత్మరతిరేవస్యా దాత్మతృప్తశ్చమానవః। ఆత్మన్యేవచసంతుష్ట స్తస్యకార్యంనవిద్యతే" = யாவன் தன்னிலே இன்பமுடையவனோ? தன்றனேதிருத்தி யடைபவனோ? தன்னுள்ளே தானே களிப்பவனோ? அவனுக்குச் செய்யக்கடவதாகிய வினையொன்றில்லை. எ-று இதனானே அறிந்ததுறவிக்கு எல்லாவினையுமில்லாதொழிதல் உண்மையாகின்றது.

தக்ஷர். దక్షః॥ "నాధ్యేతవ్యంనవక్తవ్యం నశ్రోతవ్యంకదాచన। ఏతైస్సర్వైస్సునిష్పన్నో యతిర్భవతినాన్యథా" = என்றும் ஓதத்தக்கதில்லை. கூறத்தக்கதில்லை. கேட்கத் தக்கதில்லை. இவைகளெல்லாவற்றானும் துறவியாக விருக்கின்றானன்றிவேறல்லன். எ-று. எனவே ஓதல்முதலிய தொழிலெல்லாவற்றிற்கும் துறவே பயனென்பது கருத்து.

பலசுருதி. స్మృత్యంతర॥ "జ్ఞానామృతేనతృప్తస్య కృతకృత్యస్యయోగినః। నైవాస్తికించిత్కర్తవ్య మస్తిచేన్నసతత్వవిత్" = ஞானமென்னும் அமுதத்தாற் றிருத்தியடைந்தோனாதலின் செய்யக்கடவனவெல்லாஞ் செய்து முடித்துக்கொண்ட யோகிக்குச் செய்யக் கடவதொன்றும் இல்லையே இல்லை. இருந்தால் அவன் தத்துவம் (உண்மை)உணர்ந்தவன் அல்லன். எ-று.

வெகுருசப்பிராமணம். బహ్వృచబ్రాహ్మణే॥ "ఏతద్ధస్మవైతద్వి ద్వాగ్ంస ఆహుఋషయఃకావషేయాఃకిమర్థావయమధ్యేష్యామహేకిమర్థా వయంయక్ష్యామహే"= கௌஷேயர் என்னும் வித்துவானான முனிவர் இதனையன்றோ கூறுகின்றனர். என்னை பயனுடையராய் யாம் ஓதுகிற்போம்? என்னை பயன்கருதி வேள்விசெய்கிற்போம் என்று. எ-று.

அறியவேண்டிய விருப்பமுள்ள விவிதிஷு-சந்நியாசிக்காயின், வேதாந்தங்கேட்டல், சிந்தித்தல் முதலிய தொழில் செய்யக்கடவதுள்ளவாமாகலின் அவற்றிற் குதவியாகத் தண்டுதரித்தல் முதலிய சன்னியாச நிலைமை நியமங்கள் நியாயமாகவே யுள்ளது.

பூர்வபக்ஷம்.

ஆயின், ஞானமில்லாதவனுக்குத் தண்டமேயாகாதென்று வேதமே கூறுகின்றது. ஞானம் கையுறப்பெற்றவனுக்கும் தன்

டாற் பயனில்லையென்பது தாம்கூறிய பிரமாணத்தாற் போந்தது. ஆகவே தண்டு யாவர்க்கு மாகாதன்றோ? சங்நியாசிக்குத் தண்டுவேண்டுவதாக விதியுள்ளதே. விறகுதண்டம் ஆகாதென்று வேதம் என்கூறிற்று? வருமாறு. உபநிடதம். శ్రుతిః॥ "కాష్ఠదండం ధృతో యేన సర్వాశీ జ్ఞానవర్జితః। సయాతి నరకాన్ ఘోరాన్ మహారౌరవసంజ్ఞకాన్"= விறகுதண்டத்தினைப் பற்றிக்கொண்டு எல்லாவிடங்களிலும் எல்லாப்பொருளினையும் தின்பவனுன அறிவற்ற துறவிமஹாரௌரவம், இரௌரவம் என்னும் பெயரினையுடைய அச்சந் தருநாகத்தினை யடைகின்முன். என்றது, என்னெனில்.

சித்தாந்தம்.

இதுவமுவன்று. வித்தை. என்றது அறிவையும், விவிதிஷா – என்பது ஞானவிருப்பத்தினையும் விட்டு வயிறுவளர்த்தற் பொருட்டே யொருதண்டத்தினை யார் கையிற்பிடிக்கின்முனே? அவனைப்பற்றி அந்தவிலக்குக்கூறப்பட்டது. அதனுனே, "సర్వాశీ" எல்லாவிடங்களிலும் எல்லாவற்றினையும் தின்பவன் என்று அவ்வுபநிடதத்துட்டானே அவனுக்கு அடைசேர்த்துக் கூறப்பட்டது. மிருதியுள்ளும். స్మృతావపి॥ "ఏకదండం సమాశ్రిత్య జీవంతి బహవో నరాః। నరకే రౌరవే ఘోరే కర్మత్యాగాత్పతంతి తే" =பலபேர் ஒற்றைத்தண்டத்தினைப்பற்றி வயிறுவளர்க்கின்றனர். கருமத்தினை விட்டதனுல் அவர்கள் பெரும்பயங் தரும் நரகத்தில் விழுகின்றனர். எறு. காண்க. இவ்வாறு நரகத்துள் விழ்வதும் ஒத்தவாறுகின்றது. என்னை? துறவுஞானத்தின் பொருட்டன்றிப் பிழைப்புக்கல்லவன்றே. புறம்பாகிய முங்கற்கோல மென்னும் சங்நியாசக்குறியிருந்ததேயாயினும் பாவத்தினையொழிக்கும்உள்ளத்தண்டம்இல்லாமையால் அந்தச்சங்நியாசம் பயன்றராது. என்றுணர்க. இதுவே கூடாவொழுக்கம் என்பது.

முக்கோற்பயன்.

தண்டம் பாவத்தினை யொழிக்குமென்பதனைக் காளிகாபுராணத்துட் குறிக்கப்பட்டது. కాళికాపురాణే॥ "వైణవా యే స్మృతా దండా లింగమాత్రప్రబోధకాః। లింగవ్యక్త్యై వధార్యాస్తే నపునర్ధర్మహేతవః। కాయజా యే బుద్ధిత్రిత్వం స్వాంతాం పాపప్రమోచకాః। జితేంద్రియైర్యతిభిః క్రోధైర్ధార్యా వైరత్యదర్శిభిః"=

மூங்கற்றண்டு குறிப்பினைமாத்திரம் உணர்த்துகின்றது. சன்னியாசியென வுணர்த்தும்பொருட்டு அதனைத் தரித்தல்வேண்டுமென் றிஅவை தருமத்திற்குக் காரணமாகாது. பொறிபுல னடக்கிக் கோவத்தைக்கடிந்து, தத்துவத்தினை நாடுவோர், உடம்பினுட் பிறந்து மனிதர்பாவங்களை யொழிக்குந் தண்டத்தினைத் தரித்தல் வேண்டும். எ-று. எனவே, தேகத்துட்பிறக்கும்முத்தண்டம், பொறியடக்கல், மனமடக்கல், சொல்லடக்கல், என்பனவாம். பாவத்தை யொழித்தலால் அத்தண்டினைத் தரிப்பதே துறவிக்குச்சிறந்த தருமம் என்பது கருத்து.

மேற்பூருவபக்கம்.

ஆயின், திரிதண்டமில்லா தொழியினு மொழிக. திரிதண்டமாவது, ஏகதண்டமாவது, எதுவாயினு மென்ற விகற்பம் சில மிருதிகளுட் கூறப்படுகின்றது. ஆதலின் பரமஹமிசருக்கும் முக்கோலாகுமன்றே. என்னை ? விஷ்ணு, போதாயனர். విష్ణుబోధాయనౌ॥ "ఏకదండీభవేద్వాపి త్రిదండీవాభవేన్మునిః" = முனியெனவே சன்னியாசியொருதண்டுடையவனாகவாவது, மூன்றுதண்டமுடையனாகவாவது இருக்கவேண்டுவது. எறு.

சௌநகரும். శౌనకోఽపి॥ "అథ కాషాయవాసాస్సఖామాగోపాయేతి త్రిదండమేకదండం వాగృహ్ణీతి" = பின்பு காவியாடையுடையவன் "సఖామాగోపాయ" = நண்பனாக வென்னைக்காத்திரு என்னும் மந்திரத்தோடு முக்கோலினையாவது, ஒருகோலினையாவது தரிக்கின்றான். எ-று.

அசுவமேதபருவத்துள், ఆశ్వమేధికే భగవద్వచనం॥ "ఏకదండీ త్రిదండీ వా శిఖీ ముండిత ఏవ వా। కాషాయమాత్రసారోఽపి యతిః పూజ్యో యుధిష్ఠిర" = ஒரு கோலுடையவனாயாவது, முக்கோலுடையவனாயாவது, குடுமியுடையவனாயாவது, மழித்துக்கொண்டவனாயாவது, காவியாடையொன்றே திறம்பாதுடையவனாயாவது இருப்பினும் துறவியென்று கூறப்பட்டவன் அருச்சனைசெய்யப்படுபவனும் தருமராஜனே. எறு. இது கண்ணன் கூறியது.

சித்தாந்தம்.

ஆம். சந்நியாசநிலைமைக்கு முக்கோலேனும் ஒருகோலேனும் கூடுமென்னும் விகற்பம் நிலைபெற்றதே. அதனால் பரமஹமி

சருக்கும் முக்கோல்உண்டென்றவாறுகாது. ஏனெனில்அவர்க்கு முக்கோல் விலக்கப்பட்டுள்ளன. அதனைப்பற்றி அவர்க்கும் முக்கோலாமென்னும் உரைகளுக்கு மனோவாக்குக்காய தண்டங்கள் என்பதே கருத்தென்று மேற் சித்தாந்தப் பட்டிருக்கின்றது. அந்தப்பக்கத்திற் புறத்துள்ள முக்கோலே பயனில்லை யாயிற்றே முக்கோலாவது ஒருகோலாவது என்றவிகற்பமெங்ஙன முண்டாமெனில்? துறவியர் நால்வகையராக விருத்தலின் அவருள்சிலர்க்குமுக்கோல், சிலர்க்குஒருகோல் ஆமென்று உடன்படலாயிற்று அவ்வாறில்லையேல் மேற்கூறியசுருதி மிருதிக ளெல்லாவற்றிற்கும் இலக்கியமில்லையாய் முடியுமாதலின் குடீசகர்க்கும், வெகூதகர்க்கும் முக்கோல் தக்கன. ஹம்சனுக்கும் பரமஹம்சனுக்கும் ஒற்றைக்கோலேதக்கது.இந்நான்கினிடத்தும்முறையேஒன்றினுக்கொன்று உயர்ந்தது என்று சித்தாந்தமாகின்றது. இதனால் மேல் எடுத்துக்கூறப்பட்ட வுரைகளுக்கெல்லாம் பொருளும்கருத்தும் பயனும்பெற்றவாறுகின்றது. எனவேநியாயத்தால்நிரம்புகின்றது.

துறவிதருமம்.

சந்நியாசிதருமங் கூறப்படுகின்றது. போதாயனர். బౌధాయనః॥ "ఉషఃకాలే సముత్థాయ శౌచం కృత్వా యథావిధి। దన్తాన్విమృజ్య చాచమ్య పర్వవర్జ్యం యథావిధి। స్నాత్వాచాచమ్య విధివ త్తిష్ఠన్నాసీనఏవవా। బిభ్రజ్జలపవిత్రం వా పృథు సూత్రం కరద్వయే। తద్వత్పవిత్రం గోవాలైః కృతమఘనాశనం। ఉదయే విధివత్సంధ్యాముపాస్య త్ర్యక్షరం జపేత్। మిత్రస్యచర్షణీత్యాద్యైః ఉపస్థాయ పవిత్రిభిః। పూర్వవత్తర్పయిత్వాథ జపేత్సమ్యక్సమాహితః" = விடிதற்கு ஐந்து நாழிகை முன்பாக வெழுந்து விதிப்படி சௌசம் செய்துகொண்டு, பற்றுலக்கி ஆசமனஞ் செய்து பருவகால மொழிய ஏனையநாளில் நீராடி விதிப்படி ஆசமனஞ்செய்து நின்றாயினும் இருந்தாயினும் நீர்ப்பவித் திரத்தைத்தரித்து, அக்கமாலைதரித்து, இரண்டு கையிலும் பாவ கருமத்தை நாசஞ்செய்யும் பசுவால்மயிராலியற்றப்பட்ட பவித்திரத்தைக் கையிற்கொண்டு உதயகாலத்தில் விதிப்படி சந்தியா தேவதையைஉபாசித்துமூன்றெழுத்தினையுஞ்செபிப்பவனாய்"மித்ரஸ்யசர்ஷணீ" என்பதுமுதலிய பவித்திர மந்திரங்களால் உபஸ்தானஞ் செய்து முன்போலத் தருப்பணஞ்செய்து பின்புசமாதிபெற்றவனாய் நன்றாய்ச் செபிக்கவேண்டும். எ-று.

மனு. మనుః॥ "ఏకఏవచరేన్నిత్యం సిధ్యర్థమసహాయకః। సిద్ధిమేకస్యసంపశ్య న్నజహాతినహీయతే" = துணையில்லாமலே ஒருவனுகத் திரிபவனுக்குக் காமக்குரோதமென்னுந் தடைகளுண்டாவ தில்லையாதலின் ஆன்மஞான சித்தியுண்டாகின்றதென்று நிச்சயஞ் செய்கொண்டவன் அந்தச்சித்தியை விடுவதில்லை. எனவே அந்தச்சித்தியில் இடையூறில்லாமலே ஒழுகினவன் அச்சித்தியால் குறைவுபடுதலில்லை. அன்றியும் அதன் அக்கரையையும் அடைகின்முன். எ-று.

சந்நியாசியினிருப்பு.

எப்போது, இரண்டாவதானேனும் மூன்றுவதானேனும் துணையாகத்திரிவானே? அப்போது விருப்புவெறுப்பு உண்டாவதால் மேற்கூறிய சித்தியிற் கீழ்விழுகின்முன். அதனுனே தக்ஷரும் கூறினர். దక్షః॥ "ఏకోభిక్షుర్యథోక్తస్తు ద్వావేవమిథునంస్మృతం। త్రయోగ్రామస్సమాఖ్యాత ఊర్ధ్వంతునగరాయతే। నగరంహినకర్తవ్యం గ్రామోవామిథునంతథా। ఏతత్త్రయంప్రకుర్వాణః స్వధర్మాచ్చ్యవతేయతిః। రాజవార్తాహితేషాంచభిక్షావార్తాపరస్పరం। స్నేహపైశున్యమాత్సర్యం సన్నికర్షాన్నసంశయః" = துறவிதனியனுகவிருந்தால் அவன்பிச்சையோன் என்பதேஒத்தது. அவனேடுமற்றொருவன்கூடில். ஆண்மகனும் மனைவியும்போலு மெனக்கூறுவர். மூவர்சேர்ந்தால் ஓர் ஊர் என்னப்படும். அவற்றிற்கு மேலிட்டது பட்டணமேயாம். பட்டணமாக்கிக் கொள்ளலாகாது அல்லவா? ஊருமாகாது. சமுசாரமுமாகாது. இம்மூன்றுகப்பெருக்கிக் கொள்ளும்துறவி தன்னுடைய தருமத்தி னின்றும் தவறுவன். ஏனெனில்? ஒருவரோடு ஒருவர்சேர்ந்தால் இராஜகாரியம், பிச்சைச்செய்தி, ஒருவரோடொருவர்நட்பு, உலோபம், பொறாமை முதலியகுற்றங்க ளுண்டாகின்றன சந்தேகமில்லை. எ-று.

துறவிதுணைகொள்ளுங்காலம்.

எப்போது, வேதமுடிவுகளைக்கேட்டல்முதலியதிருவுடைமையில்லாமையால் ஆன்மஞானத்தைச் சித்திசெய்து கொள்வதில், தான்வலியற்றவனுக விருக்கின்றுனே? அப்போது, அங்ஙனம் சத்தியுடையமற்றொருவனேடு திரியவேண்டும். அங்ஙனம் சுருதி கூறிற்று. శ్రుతిః॥ "వర్షాసుధ్రువశీలోఽష్టౌ మాసానేకాకీయతిశ్చరేద్వావాచరేత్" = கார்காலம் நான்குதிங்களிலும் துறவிஓரிடத்திலேயே நிலையாக

நின்றிருப்பவனாய், எட்டுத்திங்களில் தனியே ஒருவனாகத்திரிதல் வேண்டும். இருவராகவும் திரியலாம். எ-று,

எல்லாவுயிர்க்கும் இதனையேசெய்து ஒருவனாகத் திரிதல் வேண்டும் அதனை யாஞ்ஞவற்கியர் கூறினர். యాజ్ఞవల్క్యః॥ "సర్వభూతహితశ్శాంతస్త్రిదండీసకమండలుః। ఏకారామఃపరివ్రజ్యభిక్షార్థంగ్రామమాశ్రయేత్" எல்லாவுயிர்க்கும் இதவானவனாய், சாந்தமுடையனாய், முக்கோலுடையனாய், தனியனாயின்புறுபவனாய், அல்லது, ஒன்றினிடத்தேயின் புறுபவனாய், துறவுபூண்டு, பிச்சையின்பொருட்டு ஊரினுட்புகவேண்டும். எ-று. எல்லாவுயிர்க்கும் இதஞ்செய்தலென்பது துன்பஞ் செய்யாதிருப்பதன்றி யுபகரித்தலேயன்று. "హింసానుగ్రహయోరనారంభీ" துறவிதுன்பத்தையேனும்அநுக்கிரகத்தையேனும் செய்ய முயல்வதின்று, என்று கௌதம மிருதியுட் கூறுதலின். "உற்றநோய்நோன்றலுயிர்க் குறுகண் செய்யாமையற்றே தவத்திற்குரு". என்பதுமது.

அதனானே, உயிர்க்குறுகண் செய்யாமை முதலியவற்றினை அத்திரி கூறினர். అత్రిః॥ "అహింసాసత్యమస్తేయం బ్రహ్మచర్యాపరిగ్రహౌ। భావశుద్ధిర్హరేర్భక్తిస్సంతోషశ్చార్జవం। ఆస్తిక్యంబ్రహ్మసంస్పర్శ స్స్వాధ్యాయస్సమదర్శనం। అనాత్మకత్వమదీనత్వం ప్రసాదస్స్థైర్యమార్దవే। సస్నేహాగురుశుశ్రూషా శ్రద్ధాక్షాంతిర్దమశ్శమః। ఉపేక్షాస్థైర్యమాధుర్య తితిక్షాకరుణాతథా। హ్రీస్తథాజ్ఞానవిజ్ఞానే యోగోలఘ్వశనంధృతిః। స్నానంసురార్చనంధ్యానం ప్రాణాయామోబలిస్స్తుతిః। భిక్షాటనం జపస్సంధ్యా త్యాగఃకర్మఫలస్యచ। ఏషసధర్మోవిఖ్యాతోయతీనాం నియతాత్మనాం "= உயிர்க்கூறு செய்யாமை, வாய்மை கூறல், களவு செய்யாமை, பிரமசரியநோன்பு, பிறர்பால்ஏற்றல் செய்யாமை, மனச்சுத்தம், திருமாலுக்கன்பு, களிப்பு, சுத்தமுடைமை, செவ்வனேநிற்றல்= கோணாமை, கடவுணம்பிக்கை, பிரமத்தைப்பரிசித்தல், உபநிடதமோதல், சமனாகப்பாவித்தல், தன்னைமதித்துக் கொள்ளாமை, தான் ஏழையென்றிரங்காமை, மனங்களங்க மறநிற்றல், அசையாவுணர்ச்சி, மெதுவானமனம் = தயாளமனம், நண்பனாய்நிற்றல், குரவன்பணி, சிரத்தை, விடாப்பற்றுடைமை, பாவத்தை யொழித்தல், உட்கரணங்களை யடக்கல், புறக்கரணங்களை யடக்கல், உலக விடயத்தில் பற்றின்மை, மனங்கலங்காமை, இனிமையாக நிற்றல், பொறுமை, தயவு, நாணம், தபம், ஞானம், பேரறிவு,

யோகம், சுருங்கிய வுண்டி, இழுத்துப் பிடித்துத்தாங்கல், நீராடல், கடவுட்பூசை, தியானம், பிராணுயாமம், பலியீதல், துதி, பிச்சைபுகல், செபம், சந்திகாலங்களின் உபாசனை, கருமப்பயனையொழித்தல், இவை நியமவிரதமுடைய துறவியர்க்கு வெளிப்பட்டுள்ள வுரியதருமமாம். எ-று.

சந்நியாசதீக்ஷை செய்துகொண்டு தருமமுணரும்வரையில் ஆசிரிய னிடத்துத்தானே யிருத்தல் வேண்டும். அதனையிலிங்க புராணங்கூறிற்று. లింగపురాణె॥ "ఆశ్రమత్రయముత్సృజ్య ప్రాప్తస్యపరమాశ్రమం। తతస్సంవత్సరస్యాంతె ప్రాప్యజ్ఞానమనుత్తమం। అనుజ్ఞాప్యగురుంచైవ చరెద్ధిపృథివీమిమాం। త్యక్తసంగోజితక్రోధో లఘ్వాహారోజితెంద్రియః। పిధాయబుద్ధ్యాద్వారాణి ధ్యానైకమనాభవెత్" = மூன்றுச்சிரமங்களையும் விட்டு உயர்ந்த ஆச்சிரமத்தை யடைந்தவன்வருடமுடிந்தபின்பு குருவினிடத்துச்சிறந்த ஞானத்தை யடைந்து, குருவின் ஆணைபெற்று இவ்வுலகிற் றிரிய வேண்டும். கூட்டத்தையொழித்து, சினத்தைவென்று, சுருங்கிய வுண்டியை யுடையனுய்ப் பொறிகளைச் செயித்து உணர்ச்சி யாற்றுளைகளை யடக்கித் தியானத்தால் ஒன்றினிடத்தே பற்றுடையனுதல் வேண்டும். எ-று.

மச்சபுராணத்தும். మత్స్యపురాణెపి॥ "గురోరపిహితెయుక్త స్సతుసంవత్సరంవసెత్। నియమెష్వప్రమత్తస్తుయమెషుచసదాభవెత్। ప్రాప్యచాంతెతతశ్చైవ జ్ఞానయోగమనుత్తమం" = குரவன் உவக்கும்படி நடந்துவருட மிருத்தல்வேண்டும். துறவியொழுக்கத்தினும் பொறிகளை யடக்கலிலும் எப்போதைக்கும் மறவாதிருத்தல்வேண்டும். முடிவிற்சிறந்த ஞானயோகத்தினை யடைந்து, தருமத்திற்கு மாறுபாடில்லாமல் இவ்வுலகிற் றிரிதல்வேண்டும். எ-று. ஈண்டுவருடமென்பது தக்க காலம் வரையிலென்று பொருளைத் தருகின்றது. அதனுல் ஞான முண்டாம்வரையில் ஆசிரியனிடத் திருக்கவேண்டும். குருவினிடத்தேயிருத்தல் ஞானமடைதற்பொருட்டே யாமாதலின்.

துறவிதிரியுங்காலம்.

உலகுவலம் வருதலின் விசேடம் கண்ணுவர் கூறினர். కణ్వః॥ "ఏకరాత్రంవసెద్గ్రామె నగరెపంచరాత్రకం। వర్షాభ్యోన్యత్రవర్షాసు మాసాంశ్చచతురోవసెత్" = ஊரினுள்ளோரிரவு, நகரங்களில் ஐந்திரவு, வாசஞ்

செய்யலாம். இவ்விதி மழைக்காலமல்லாத காலங்களில், எனக் கொள்க, மழைக்காலத்தில் நான்கு திங்கள் காலும் ஓரேயிடம் பற்றி நிற்றல்வேண்டும். எ-று.

மச்சபுராணத்தும். మత్స్యపురాణే॥ "అష్టౌమాసాన్విహార స్స్యాద్యతీనాం సంయతాత్మనాం। ఏకత్ర చతురో మాసాన్ వార్షికాన్నివసేత్పునః। అవిముక్తప్రవిష్టానాం విహారస్తు న విద్యతే। న చ తేషాం భయం తత్ర దృష్టం శాస్త్రం పురాతనం" = ஐம்புலன வித்த துறவியர்க்கு எட்டுத்திங்கள் திரிதலாம். மழைக்காலம்நான்கு திங்களும் ஓரிடம்பற்றி நிற்றல்வேண்டும். காசிக்கண்ணே சென்றிருப்பவர்க்கு வேறெங்கும் திரிதல்வேண்டா. ஏனெனில். ஆண்டுறுவோர்க்கு மறுபிறப் பில்லாமையால். அங்ஙனம் பண்டைய நூல் குறித்தவாறு. எ-று.

துறவியர்சதுர்மாசமும் ஓரிடம்பற்றி நிற்றலின்பயன்.

மேதாதிதிகூறினர். మేధాతిథిః॥ "సంరక్షణార్థం జంతూనాం వసుధాతలచారిణాం। ఆషాఢాదీంశ్చతుర ఆమాసాన్ కార్తికాద్యతః। ధర్మార్థ్యజలసంపన్నే గ్రామే నివసేత్పునః" = நிலத்திற்றிரியும் உயிர்களை யோம்புதற் பொருட்டு, துறந்தவன், ஆடித் திங்கண்முதல் கார்த்திகைத் திங்கள் வரையில் நான்குதிங்களும் அறமும் நீரும் குறைபடாத ஊரருகே நிற்றல்வேண்டும். எ-று.

நீத்தோரொழுக்கின் விதிவிலக்கு.

மற்றுஞ் சிலவிலக்கத்தக்கனவும் கொள்ளத்தக்கனவு மான கருமங்களைச் சுருக்கி அம்மேதாதிதியே கூறினர். మేధాతిథిః॥ "శ్రద్ధయా పరయా యుక్తః పరమాత్మపరాయణః। స్థూలసూక్ష్మశరీరాభ్యాం ముచ్యతే వశవర్త్యసౌ" = சிறந்தபற்றுடையனாய் பரமான்மாவே யுயர்ந்த கதியெனவுடையவனாய், பத்தினையும், ஆறினையும் உணர்ந்தவன், தூலசூக்குமவுடம்பினால் விடப்படுவன். எ-று.

துறவிகொள்ளத்தக்கன.

இதுவுமது. "త్రిదండం కుండికాం కంథాం భైక్షభాజనమాసనం। కౌపీనాచ్ఛాదనం వాసః సంగ్రాహ్యపరిగ్రహేత్" = முக்கோல், குண்டிகை, கவந்திகை, பலியோடு, ஆசனம், கோவணம் போர்வைக்காடை, இவ்வாறினையும் கொள்ளலாம். எ-று.

துறவியொழிக்கத்தக்கன.

இதுவுமது. స్థావరంజంగమంబీజం తైజసంవిషమాయుధం। షడేతానినగృహ్ణీయాద్యతిర్మూత్రపురీషవత్"=அசையாப்பொருள், இயங்குபொருள், விதை, ஒளியுடையவை, விடம், ஆயுதம், இவ்வாறினையுங்கொள்ளலாகாது. மலமூத்திரங்களைவிட்டாற்போலும் விட்டொழிக. எ-று.

துறவிசெய்யலாகாதன.

இதுவுமது. "రసాయనంక్రియావాదం జ్యోతిషంక్రయవిక్రయా। వివిధానిచ శిల్పాని వర్జయేత్పరదారవత్" = மருந்து சோறுமுதலியன பக்குவஞ் செய்தல், இரதவாதம், அல்லது, தொழிலில் வழக்கு, ஆரூடம் சாதகம் சகுனமுதலிய சோதிடம், பொருளைவாங்கல் விற்றல், பலவகைப்பட்ட சிற்பத்தொழில், இவ்வாறினையும் அந்நியன்மனைவியை வெறுத்தாற்போலும் விடுக. எ-று.

துறவிசெய்யத்தக்கன.

இதுவுமது. భిక్షాశనంజపస్స్నానం ధ్యానంశౌచంసురార్చనం। కర్తవ్యాని షడేతాని సర్వదానృపదండవత్" = பிச்சையேற்றே யுண்டல், செபம், ஸ்நாநம், தியானம், சுத்தம், கடவுட்பூசை, இவ்வாறினையும் என்றைக்கும் அரசனாணையை நடத்துவதுபோலும் நடத்துக. எ-று.

துறவிநோக்கலாகாதன.

இதுவுமது. "నటాదిప్రేక్షణంద్యూతం ప్రమదాస్సుహృదంతథా। భక్ష్యంభోజ్యముదక్యాంచ షణ్ణపశ్యేత్కదాచన" = நட்டுவன் முதலியோரும், சூதாடும் மாதரும், நட்பினரும், உண்ணத்தக்க நற்பொருளும், பூப்பானவளும் இவ்வாறினையும் எப்பொழுதும் பார்த்தலாகாது. எ-று.

துறவிதங்கலாகாதவிடம்.

இதுவுமது. "స్కంధావారేఖలేసార్థే పురేగ్రామేవసన్గృహే। నవసేద్యతిర్వేట్సు స్థానేష్వేతేషుకర్హిచిత్" = சேனைதங்கும்பாடி, நெற்களம், திரவியசாலை, நகரம், ஊர், பிறர்குடி யிருக்கும் மனை, இவ்வாறிடங்களிலும் துறவி எப்பொழுது நிற்றலாகாது.

துறவி நினைக்கலாகாதன.

இதுவுமது. "రాగం ద్వేషం మదం మాయాం దంభం మోహం పరాత్మసు। షడేతాని యతిర్నిత్యం మనసాపి న చింతయేత్" = விருப்பு, வெறுப்பு, செருக்கு, வஞ்சகம், மேற்பிலுக்கு, மோகம், இவ்வாறினையும் துறவிமனத்தாலு நினையலாகாது. எ-று.

துறவினைக்கெடுப்பன.

இதுவுமது. "మంచకం శుక్లవస్త్రం చ స్త్రీకథా లౌల్యమేవ చ। దివాస్వాపం చ యానం చ యతీనాం పతనాని షట్" = கட்டில், வெள்ளாடை, மாதர்சரித்திரிச்சை, பகலுறக்கம், ஊர்தி, இவ்வாறும் துறவுநிலைகெட்டவாதற்குரியன. எ-று.

துறவிசிந்திக்கத்தக்கன.

இதுவுமது. "సంయోగం చ వియోగం చ వియోగస్య చ సాధనం। జీవేశ్వర ప్రధానానాం స్వరూపాణి చింతయేత్" = தனக்கு உடல்முதலியபிரபஞ்சத்தொடர்புவந்தவாறும், அதுபோமாறும், அங்ஙனம்விடுமுபாயமும், சிவன்னிலைமையும், ஈச்சுரன்னிலைமையும், மூலப்பகுதியின்னிலைமையும் ஆகிய இவ்வாறினையும் துறவிசிந்தித்தல்வேண்டும். எ-று.

துறவிக்குக்கட்டாவன.

இதுவுமது. "ఆసనం పాత్రలోపశ్చ సంచయశ్శిష్యసంగ్రహః। దివాస్వాపో వృథాజల్పో యతేర్బంధకరాణి షట్" = ஒரோயிடத்திருப்பது அல்லது ஆசனம், பாத்திரமில்லாதொழிதல், ஏதேனும் ஒரோபொருளைச்சேர்த்துவைத்தல், மாணக்கனைச்சேர்த்தல், பகலுறங்கல், வீண்வார்த்தையாடல். இவ்வாறுந் துறவிக்குப் பந்தங்களாம். எ-று. கட்டு=பந்தம்=சிறை.

துறவியின்ஆசனச்சிறை.

இதுவுமது. "ఏకాహన్పరతో గ్రామే పంచాహన్పరతః పురే। వర్షాభ్యోన్యత్ర వర్షాసు మాసాంస్తు చాతుర్మాస్యకం" = மழைக்காலமல்லாவழி ஊரில் ஒருதினத்திற்கதிகமாயும். பட்டணங்களில் ஐந்து நாளைக்கதிகமாயும் வாசஞ்செய்வதே துறவிக்கு ஆசனச்சிறையாம். எ-று.

துறவிகலமில்லாச்சிறை.

இதுவுமது. "ఉక్తానాంయతిపాత్రాణా మేకస్యాపినసంగ్రహః। భిక్షోర్భైక్షభుజశ్చాపి పాత్రలోపస్సఉచ్యతే" = துறவிக்குத் தகுதியென்று கூறப்பட்ட ஒருபாத்திரத் தினையாவது வைத்துக் கொள்ளாமல் பிச்சைச் சோற்றினையுண்பது பாத்திரலோபச்சிறையாம். எ-று.

துறவிக்கு இருப்புள்ளசிறை.

இதுவுமது. "గృహీతస్యత్రిదండాదే ర్ద్వితీయస్యపరిగ్రహః। కాలాంతరోపభోగార్థం సంచయఃపరికీర్తితః" = தண்டத்தினைக் கைக்கொண்ட பின் இனியெப்போதைக் காயினுமாகவென்று மற்றொருகோலினைத் தேடிவைத்தலே துறவிக்குச்சஞ்சயம் = இருப்புவைத்தற்சிறையாம். எ-று.

துறவியின்மாணுக்கர்கூட்டச்சிறை.

இதுவுமது. "శుశ్రూషాలాభపూజార్థం యశోర్థంవాపరిగ్రహః। శిష్యాణాం నతుకారుణ్యా త్సస్నేహశ్శిష్యసంగ్రహః" = தான் கூறியவாறு ஒழுகித் தனக்குப் பணிசெய்து ஆதாயமுண்டுபண்ணி உபசரிப்பதன் பொருட்டும் புகழ்ப்பொருட்டும் மாணுக்கரைச் சேர்ப்பதன்றி யவரிடத்துள்ள தயவானில்லைபோல் மாணுக்கரைச் சேர்ப்பது துறவிக்குச்சிறையாம். எ-று.

துறவிபகலுறக்கச்சிறை.

இதுவுமது. "విద్యాదివాప్రకాశత్వా దవిద్యారాత్రిరుచ్యతే। విద్యాభ్యాసేప్రమాదోయః సదివాస్వాపఉచ్యతే" = அறிவுடைமையே பகல், அறிவின்மையேயிரவு, அவ்வறிவினை மறத்தலே பகலுறங்குதலாம். எ-று

துறவிவீண்வார்த்தையாடுதற்சிறை.

இதுவுமது. "ఆధ్యాత్మికీంకథాంముక్త్వా భైక్షచర్యాంసురస్తుతిం। అనుగ్రహప్రశ్నప్రశ్నౌ వృథాజల్పోఽన్యఉచ్యతే" = தன்னுள் ளிருக்கும் ஆன்மாவின் சரிதத்தைவிட்டுப்பிச்சைச்செய்தி, தேவதுதி, அநுக்கிரகஞ்செய்யும் வினவிடைக ளிவையெல்லாம் வீண்வார்த்தை யென்னப்படும். எ-று.

துறவிக்குமுத்தி எதுவானவிலக்கணம்.

இதுவுமது. "అజిహ్వష్షణ్డకః పంగు రంధో బధిర ఏవచ। ముగ్ధశ్చముచ్యతే భిక్షు షడ్భిరేతైర్నసంశయః" நாவில்லாதவன், பேடி, முடவன், குருடன் செவிடன், கயவன், என்னப்படுந்துறவி இவ்வாறு குணத்தால் முத்தனுவன் ஐயமில்லை. எ-று

இதுவுமது. ఇదంమృష్టమిదంనేతి యోశ్నన్నపినసజ్జతి। హితంసత్యంమితంవక్తి తమజిహ్వంప్రచక్షతే" = உண்ணும்போதே இதுநற்சுவையுண்டி யிது அல்லவென்று உணராதவனும், இதவாகவும் உண்மையாகவும் சிறிதாகவும் பேசுவோனும் யாரோ அவன் நாவில்லாத்துறவி யாம். எ - று.

இதுவுமது. "అద్యజాతాంయథానారీం తథాషోడశవార్షికీం। శతవర్షాంచ యోదృష్ట్వా నిర్వికారస్సషండకః" அப்போது பிறந்த பெண்எவ்வாறே அவ்வாறே பதினறு வயதுடையாளையும், நூறுண்டு சென்றுளை யும் யார் நோக்கி விகாரமடையானே அவனே பேடியாம். எறு.

இதுவுமது. "భిక్షార్థమటనంయస్య విణ్మూత్రకరణాయచ। యోజనాన్నపరంయాతి సర్వథాపంగురేవసః" பிச்சையின்பொருட்டும், சலமலங்களை யொழிப்பதற்கும் திரிவதன்றி விசேடம் வேறு திரியாதும் பயணம் நேர்ந்தபோது ஒரு காதத்தின்மேல் செல்லாதும் இருக் கும் துறவி முடவன் என்னப்படுவன். எறு.

இதுவுமது. "తిష్ఠతోవ్రజతోవాపి యస్యచక్షుర్నదూరగం। చతుర్యుగాంభువంముక్త్వా పరివ్రాట్సోన్ధఉచ్యతే" நின்றாலும் நடந்தாலும் யாவனுடைய கண்எட்டுக் கோலைக்கடவாது நிற்குமோ அந்தச்சந்நியாசி குருட னென்னப்படுவன். எறு. கோல் = நான்குமுழம்.

இதுவுமது. "హితాహితంమనోరామం వచశ్శోకావహంయత్తు। శ్రుత్వా యోనశృణోతీవ బధిరస్సప్రకీర్తితః" = விருப்பமாக வாவது வெறுப்பாக வாவது மனத்திற்குக் களிப்பாக வேனும் துயரமாக வேனும் கேள்விப்பட்ட சொற்கள் கேளாதவனே யானவன் செவிட்டுத் துறவியெனப்படும். எறு.

இதுவுமது. "సాన్నిధ్యేవిషయాణాంయ స్సమర్థో౽పిజితేంద్రియః। సుప్తవద్వర్తతేనిత్యం సధీరోమూఢఉచ్యతే" = விடயங்கள் பக்கத்திருப்பினும் அனுபவிக்கும் வல்லமை யிருந்தும், அனுபவியாமலே புலன்களை வென்று எப்போதும் உறங்கு மவனைப்போலும் சும்மாவிருக்குந் துறவி பேதை யென்னப்படுவன். எ-று. பேதை = மூடன்.

பிச்சை விதி.

மனு. మనుః॥ "ఏకకాలంచరేద్భైక్షం నప్రసజ్జేతవిస్తరే। భైక్షప్రసక్తోపియతిర్విషయేష్వపిసజ్జతి। విధూమేసన్నముసలే వ్యంగారేభుక్తవర్జితే। వృత్తేశరావసంపాతే భిక్షాంనిత్యంయతిశ్చరేత్। అలాభేనవిషాదీస్యా ల్లాభేచైవనహర్షయేత్। ప్రాణయాత్రికమాత్రస్స్యా న్మాత్రాసంగాద్వినిర్గతః" = ஒருபோதே உயிர் தரித்தற்பொருட்டுப்பலியேற்கவேண்டும். அதற்குமேல் பலியைத் தேடிவைத்தலாகாது. ஏனெனில்! உணவு அதிகமாக முக்கியமானதாதுவிருத்தியாவதால் மாதர் முதலிய விடயங்களிலும் மனஞ்செல்லும். எப்போதும், சமைத்த அடுக்களை புகை தணிந்தும், குத்துமுலக்கைச் சத்தமின்றும், சமைத்த தீயாறியும், யாவருமுண்டொழித்துக் கலங்களை வெளியிட்ட பின் துறவி பிச்சைக்குச் செல்லவேண்டும். (எனவே பகல் நான்காம் யாமத்திற் பிச்சைக்குச் செல்லவேண்டுமென்பது) பிச்சை கிடையாவழித் துன்புறலாகாது. கிடைத்தவழி மகிழலாகாது. எவ்வாறுயினும் உயிரைக் கழியாது காத்தலேசாலும். விடயங்களை விட்டொழித்தவனாகவே யிருத்தல் வேண்டும். எ-று.

இயமனும். యమోపి॥ "స్నాత్వాశుచిశ్శుచౌదేశే కృతజప్యస్సమాహితః। భిక్షార్థీప్రవిశేద్గ్రామం రాగద్వేషవివర్జితః। చరేన్మాధూకరంభైక్షం యదిమ్లేచ్ఛకులాదపి। ఏకాన్నంనతుభుంజీతబృహస్పతిసమోయతిః। మేధ్యంభైక్షంచరేన్నిత్యం సాయాహ్నేవాగ్యతశ్శుచిః। ఏకవాసావిశుద్ధాత్మా మందగామీయుగాంతదృక్। యథాలబ్ధంతథాశ్నీయా దాజ్యసంస్కారవర్జితం। భైక్షంమాధూకరంనామ సర్వపాపవినాశనం" = நீராடிச்சுத்தனாய்க் குற்றமற்ற விடத்தில் அமைதியோடு செபத்தினைச்செய்துகொண்டு பிச்சைவேண்டுமாயின் ஊரினுட்புகுந்து விருப்புவெறுப்பற்றவனான துறவி மாதூகரமென்னும் பிச்சையை யேற்கவேண்டுவது. மிலேச்சனிடத் திருந்தாயினும் பிச்சை பெறலாமன்றி யொருவன் சோற்றினையே உண்ணலாகாது. துறவி அறி

வினுற் பிரகற்பதியோ டொத்தவனுய் நாடோறும் சுத்தமாக உரையாடுவது ஒழித்துச் சாயுங்காலத்தில் குற்ற மற்ற பிச்சையைத் தேடிக்கொள்ளவேண்டுவது. ஒற்றையாடையை யுடுத்தவனும், களங்கமற்ற அறிவினையுடையவனும், தாழ்ந்த நடையையுடையவனும், புருவ நடுவணையிற்குறிப்பு வைத்தலுடையவனும், எவ்வாறு கிடைத்ததோ அவ்வாறே கொண்டுவந்து அந்தப்பலிச் சோற்றினுக்கு நெய்ச்சுத்தமில்லாமலே புசித்தல் வேண்டும். எல்லாப்பாவங்களையு மொழிக்கும் மாதுகரமென்னும்) பிச்சை யிதுவே யாம். எ௭. (மாதுகாம் என்புழி, மதுகாம் என்பது வண்டு. அது பலமலர்களினும்அவற்றிற்கு நோயின்றிச் சிறிது சிறிதாகத் தேனைப்பெறுகின்றது. அதுபோல எவ்வில்லறத்தானுக்கும் துன்பம்பாரமின்றிப் பல மனைக்கணின்றும் சிறிது சிறிதாகக் கொடுவந்து சிறுக வண்டு திருத்தியடைவது என்னும் பொருளாம்).

போதாயனரும். బోధాయనోపి॥ "విధూమే సన్నముసలే వ్యంగారే భుక్తవజ్జనే। కాలే పరాహ్ణభూయిష్ఠే భిక్షాటనమథాచరేత్। ఊర్ధ్వం జానోస్త్వధో నాభేః పరిధాయ్యైకమంబరం। ద్వితీయమంతరం వాసః పాత్రీ దండీ సవాగ్యతః। సవ్యేనాదాయపాత్రం తు త్రిదండం దక్షిణే కరే। ఉపతిష్ఠేత సూర్యం తు ధ్యాత్వా చైవ స్వమాత్మనా। ఉక్త్వా విరాజసం మంత్రమాదిత్యస్థేన ప్రదక్షిణం। కృత్వా పునర్జపిత్వా వ పరిపంథాన ఇత్యపి। యోసావిష్ణ్వాఖ్య ఆదిత్యే పురుషోంతస్సూర్యబిస్థితః। సోహం నారాయణో దేవ ఇతి ధ్యాత్వా ప్రణమ్యతం। భిక్షాపాత్రవిశుద్ధ్యర్థ మపముచ్యాపుప్యపానహౌ। తతోగ్నిమంత్రపఠనం యుగమాత్రావలోకనః। ధ్యాయన్ స్మరంశ్చ తచ్చిత్తే ఇదం చ సముదీరయేత్। విష్ణుస్తిర్యగధోర్ధ్వం మే వైకుంఠో విదిశం దిశం। పాతుమాం సర్వతో రామో ధన్వీ చక్రీ చ కేశవః। అభిగమ్య గృహాద్భిక్షాం భవత్పూర్వం ప్రచోదయేత్। గోదోహమాత్రం తిష్ఠేచ్చ వాగ్యతోధోముఖస్తతః। దృష్ట్వా భిక్షాం దృష్టిపూతాం పాదుకస్య కరసంస్థితాం। త్రిదండం దక్షిణే త్వంగే తతస్సంధాయ బాహునా। ఉత్పాటయేత్స్వకవచం దక్షిణేన కరేణ సః। పాత్రం వామకరే ఛిత్వా శ్లైషయేద్దక్షిణేన తు। ప్రాణయాత్రికమన్నం తు భిక్షేత విగతస్పృహః" = சமைத்தபுகை யடங்கிக்குத்துமுலக்கைநின்று நெருப்புமாறி உண்டுகலங்களை வெளியெறிந்தபின் அபரான்னகாலம் = மூன்றியாமத்திற்கு மேல் துறவிபலியேற்றல்வேண்டும். முழங்காலுக்குமேல் தொப்புளின்கிழ் ஓராடையுடுத்தல் வேண்டும். இரண்டாமாடையும்அதனுள் ளிருக்கலாம். (அதுகோவணம்) பாத்திரம், தண்டமுடையவனுய் மௌ

னத்தோடும் பிச்சைக்குச் செல்லவேண்டும். இடதுகையில் பிச்சையோட்டினையும் வலதுகையில் முக்கோலினையும் கொண்டு, சூரியனைநோக்கித் தன்னறிவோடும் ஒருமைத்தன்மையைத் தியானித்து, "వరాజసం" என்றதுமுதலிய மந்திரங்களை யோதி, "ఆక్సైన" என்றதுமுதலிய மந்திரத்தால் வலம்வந்து, "ఏతేపంథానః" என்ற மந்திரத்தினைமறுபடியும்செபித்துச்சூரியனிடத்தும்புருடர்களினுள்ளத்துள்ளு மிருக்குமவனெவன் அந்தநாராயணன் யான் என்றுதியானித்து, அவனைவணங்கிப்பலியோட்டின் சுத்தத்தின் பொருட்டுக் காலுக்குப்பாதுகையிட்டுப் பின்பு புருவ நடுவில் குறியிட்டு ஒருகோலளவே பார்ப்பவனாய் மெல்லவூரினுட் டிரிதல்வேண்டும். விஷ்ணுவைத் தியானஞ் செய்துகொண்டு, அவரிடத்தே மனமுடையவனாய், இந்தவுரை கூறவேண்டும். எனக்குக்கீழ்மேல் எல்லாம்விஷ்ணு விருக்கின்றார். அந்தவைகுந்தன் திக்குகளிலும் விதிக்குகளினும் என்னைக்காக்க. வில்லையுடைய விராமன் எல்லாவற்றிலும் என்னைக்காக்க. என்றுபின்பு மனைவாயிற்சென்று, ஒழுக்கவுரையாகிய "భవతీ"=தாங்கள், என்ற மொழியைமுதலிற்கூறிப்பிச்சையிடுமென்னுமேவல்வினைச்சொல்லைக் கூறவேண்டும். அப்பால் வாய்பேசாமலே தலைகவிழ்ந்து, பசுவின்பால் கறக்கும் போதளவு நின்றிருக்க வேண்டும். பலிகொண்டுவந்த ஆண்மகன் கைச்சோற்றினைத்தன் கண்ணுற்சுத்தஞ்செய்து வலக்கையிலுள்ள முக்கோலை வலப்பக்கத்துத்தோளிலிடுக்கிக்கொண்டு வலக்கரத்தால் பலியோட்டின் மேலிட்டமூடியைவாங்கி யிடக்கரத்து ஓட்டினை வலக்கரத்தாலும் பற்றிப் பிச்சையை வாங்கவேண்டும். ஆசையற்றவனாய் உயிர்தரித்தற்கு வேண்டுமளவே பலிசெய்யவேண்டும். எ - று.

பலியின்வகை.

பலியின் பேதத்தினை உசனர்கூறினர். ఉశనాః॥ "మాధూకరమసంక్లప్తం ప్రాక్ప్రణీతమయాచితం। తాత్కాలికంచోపపన్నం భైక్షంపంచవిధంస్మృతం" மாதூகரம், பிராக்குப்பிரணிதம், அயாசிதம், தாற்காலிகம், உபபன்னம் எனப்பிச்சை ஐவகைப்படும். எ - று.

இதுவுமது. "మనస్సంకల్పరహితా న్గృహాంస్త్రీంత్సప్తపంచవా న్। మధువదాహరణంయత్తు మాధూకరమితిస్మృతం" = மனத்து ளெண்ண மில்லாமல்,

மூன்று, ஐந்து, அல்லது ஏழுமனையில் தேனைத்தேடிவருவதுபோற் றேடிக்கொள்வது மாதுகர பிச்சையென்று கூறப்படும். எ-று.

இதுவுமது. "శయనోత్థాపనాత్ప్రైక్ష్యైః ప్రార్థితం భక్తిసంయుతైః। తత్ప్రాక్ప్రణీతమాఖ్యాతం భగవానుశనామునిః" = பத்தியுடையவர்கள் படுக்கையைவிட்டெழுமுன்வந்து பிச்சைக்குவரும்படி வேண்டிக்கொண்டால் அப்பிச்சைப் பிராக்குப்பிரணீதமென்று பகவரான உசன முனி கூறினர். எ-று.

இதுவுமது. "భిక్షాటనసముద్యోగాత్ప్రాక్కేనాప్యనిమంత్రితం। అయాచితంతుతద్భైక్షం భోక్తవ్యంమనురబ్రవీత్" = பிச்சைபெறப்படும்படி முயலுமுன்யாரோனும் பிச்சைக்கு வரவழைத்தால் அது அயாசிதமென்னும் இதவானபிச்சை. அதைப்புசிக்கத்தக்க தென்று மனுகூறினர். எ-று.

இதுவுமது. "ఉపస్థానేచయత్ప్రోక్తం భిక్షార్థంబ్రాహ్మణేనవా। తాత్కాలికమితిఖ్యాతం భోక్తవ్యంముముక్షుణా" = பிச்சைக்குப்போய் நின்றவளவில் யாரோனும் அந்தணன் பிச்சைக்கு வரக்கூறின் அதுதாற்காலிய பிச்சையென்று விளங்கக்கூறப் படுகின்றது. முத்திவிருப்பமுடையோன் அதைப்புசிக்க வேண்டுவது. எ-று.

இதுவுமது. "సిద్ధమన్నంభక్తజనైరానీతంయన్మఠంప్రతి। ఉపపన్నంతదిత్యాహుర్మునయోమోక్షకాంక్షిణః" = பத்தியுடையார் சோற்றினைச்சமைத்து சந்நியாசியிருக்கும் மடத்திற்கே கொண்டுவந்தால் அதுஉபபன்னபிச்சை யென்றுமுத்தியைவிரும்பிய முனிவர்கூறினர். எ-று.

பிச்சைச்சிறப்பு.

இயமன். యమః॥ "యశ్చరేత్సర్వవర్ణేషు భైక్షమభ్యవహారతః। నసకించిదశ్నీయాదాపోభైక్షమితిస్థితః" = யார் உண்டியின் பொருட்டு எல்லா வருணத்தும் பிச்சைக்குத் திரிவனோ அவன் எதனையுந் தின்னலாகாது. அவனுக்கு நீரோ பிச்சையாக விருக்கின்றது. எ-று. எனவே, தாழ்ந்த சாதியினிடத்திற் பிச்சைக்குச்செல்ல நேர்ந்தவழிப் பிச்சையைவிட்டுநீராக்குடித்துஇருக்கவேண்டு மென்பது கருத்து.

"అబ్బిందుంయఃకుశాగ్రేణ మాసిమాసేనరఃపిబేత్। న్యాయతోయస్తుభిక్షాశీ పూర్వస్మాత్పశ్చిమోవరః" = ஒருவன் தருப்பை நுதியால் நீர்த்துளியை ஒரு திங்கள் வரையிலாயினும் மூன்றுதிங்கள் வரையிலாயினுங்குடித்திருக்கின்றான். மற்றொருவன் முறையே பிச்சையேற்றுண்கின்றான். ஆயின் முன்னவனிலும் பின்னவன் சிறந்தவன். எ-று.

"తప్తకాంచనవర్ణేన గవాంమూత్రేణయావకం। పిబేద్ద్వాదశవర్షాణి నతత్భైక్షసమంభవేత్" = உருக்கிய பொன்னிறமுடைய பசுமூத்திரத்தினால் யவமென்னும் நெல்லரிசிக்கஞ்சிசெய்து குடித்துச்செய்யும் பன்னிரு வருடத்திய விரதமும் இந்தப் பிச்சையுண்டிக்கு இணையல்லவாம். எ-று.

"శాకభక్షాః పయోభక్షా యేచాన్యేయావకభక్షకాః। సర్వేభైక్షభుజస్తస్య కళాం నార్హంతిషోడశీం" = இலைக்கறி தின்பவர், பால்குடித்திருப்பவர், கஞ்சிகுடித் திருப்பவர் முதலிய விரத்தர் யாவரும் பிச்சைச் சோறுண்ணும் துறவியின் பதினாறிலொருபங்குக்கு நிகரானவரல்லராம். எ-று.

"నభైక్షంపరపాకాన్నం నచభైక్షంప్రతిగ్రహః। సోమపానసమంభైక్షం తస్మాద్భైక్షేణవర్తయేత్"=பிச்சைச்சோற்றுக்குவேற்றோர்சோறு, வேற்றோர் பாகம் என்னும் குற்றமில்லை. அதனைப்பெறுதலினால் தானமேற்றான் என்னுங் குற்றமுமில்லை. பிச்சைச்சோறுண்டல் வேள்வியில் சோமபானம் செய்வதோடொக்கும். ஆதலின் பிச்சையால் சீவிக்கவேண்டுவது. எ-று. எனவருமிந்த இயமனுரையில்சோறு கிடையாத ஆபத்திற் சிக்குண்ட துறவி எல்லாவருணத்தும் புசித்தற்பொருட்டுப் பிச்சையெடுக்கலாம் அவ்வாறுகொடுவந்து தின்றாலும் அவன் தாழ்ந்த வருணத்தான் கையுணவையுண்ட குற்றவாளி யாவதில்லை. ஏனெனில், அப்படிப்பட்ட ஆபற்காலத்திற் கொண்டுவந்த பிச்சைவருண வொழுக்கவகை தவறியிருப்பினும் நீர்போலும் சுத்தமுடையதாக விருக்கும் என்று சிலர் பொருள்கூறுவர். அதுமரபு அன்று. அப்படிப்பட்ட ஆபற்காலம் வந்தவழித் தாழ்ந்த சாதியாரால் சமைத்த சோறுபெறலாகாது. உயிர் தரித்தற்பொருட்டு நீரினை மாத்திரம் பெறலாமென்று சிலர் பொருளுரைப்பர். இவ்விடயத்தில் ஆபத்தின் சிறுமை

பெருமைத் தரத்திற்குத் தக்கபடி எல்லாவருணத்திலும் பிச்சை யேற்றுக் கொள்ளுந்திறத்தை நியமிப்பதுதக்கதாக விருக்கின்றது.

சருவவருணபிச்சை.

போதாயனர். బోధాయనః॥ "బ్రాహ్మణక్షత్రియవిశాం మేధ్యానామన్నమాహరేత్। అసంభవేతు శూద్రస్య వ్యవహిత్యోత్తరోత్తరం। సర్వేషామప్యభావేతు భక్తాన్స్వయమశ్నుతః। శుద్ధంశూద్రాదపిగ్రాహ్యం రక్ష్యేత్ప్రాణాన్విజానతా" — பரிசுத்த மானவர்களுடைய சோற்றினையே பிச்சை யேற்றுவரவேண் டும். ஆயின் வேதியன் மனையிற்றானே பிச்சையேற்றல் வேண் டும். அதுகிடையா விட்டால் பட்டினியால் உயிர்தரிப்பதில்லை யாயின் சுத்தனான க்ஷத்திரியனாற் பெறவேண்டும். அதுவுமரிதா யின் வசியனாற்பெறவேண்டும்.யாரிடத்தும் பெறக்கூடாத பெரிய வாபத்துவந்தவழி சுத்தனாயும் பத்தியுடையனாயும் தானுண்ணா மலுமிருக்கும் சூத்திரனிடத் திருந்தாயினும் பிச்சைபெறலாம். தெரிந்தவன் சோறில்லாமல் உயிரைப்போக் கடித்துக்கொள்ள லாகாது. எ - று. (இங்குகூறிய விசேடணங்களால் சுத்தமான வுணவைப்புசித்தல் வேண்டும். கெடுதியான வுணவைப் புசிக்க லாகாது. ஆகார மில்லாமையால் உயிர்போவதாக நேரிடும்பெ ரியஆபற்காலத்தில் கூடியவரையில் சுத்தமானவுணவைத் தேடிக் கொள்ள வேண்டும் எவ்வாற்றானும் சுத்தமானது கிடையாது உயிர்நில்லாவழி சத்தியுள்ள வரையிற் பொறுத்து முடிவுக்கு அசாதி பிச்சையாலாவது உயிரைக் காத்துக் கொள்ளவேண்டும். ஏனெனில் உயிரிருந்தால்கெடுதியானபிச்சைக் குற்றத்தையுமொ ழித்துக்கொண்டு முத்திச்சிறப்பினையும் பெறலாம். ஆகாரநியம மென்னும் ஒருவிரதத்தின் பொருட்டு உயிரைத் துறந்தால் அவ் வளவிற்கொத்த புண்ணியவுலகே யன்றிவீடுபேறு பெறுதற்குங் காலம்கடக்கும். என்பதுகருத்து. இதுநிமித்தம், மஹாபாரதத் துள் விசுவாமித்திர சண்டாளோ பாக்கியானத்துட் கூறுதல் காண்க.)

உபாதியில்லாப்பிச்சை.

பிச்சையின் பொருட்டு உற்பாதங்களைக் குறித்துச்சொல் வது, கிரகசாரப்பயன் கூறுவது, சகுனப்பயன்கூறுவது, சிற்பம், சாமுத்திரிகம், சாதகம், ஆருடம், அஞ்சனம்,வைத்தியம்,தருமம்,

நீதி, புராணம், கதை, உலகியல், தந்திரம், உபகாரம் முதலியவற்றுள் யாதானும் ஓர் உபாதையையுண்டுபண்ணிக்கொள்ளலாகாது. அது மனுவுங்கூறினர். మనుః॥ "నచోత్పాతనిమిత్తాభ్యాం ననక్షత్రాంగవిద్యయా। నానుశాసనవాదాభ్యాం భిక్షాంలిప్సేతకర్హిచిత్" = உற்பாத முண்டாதலைக்கூறுதல், சகுனங்களின் பயனைக்கூறல், நக்ஷத்திரமாகிய சோதிடம்கூறல், அங்கவித்தையாகி சாமுத்திரிகசிற்ப வைத்தியம் கூறல், தருமநீதிகூறல், சாத்திரப்பொருட் டிறம்பற்றிவாதித்தல் முதலிய இந்தவுபாயங்களால் எவ்விடத்தும் பிச்சையேற்றலாகாது. எ-று.

விலக்கத்தக்கபிச்சை.

அத்திரி. అత్రిః॥ "హితంమితంసదాశ్నీయాద్యత్సుఖేనైవజీర్యతి। ధాతుఃప్రకుప్యతేయేన తదన్నంవర్జయేద్యతిః। ఉదక్యాచోదితంచాన్నం ద్విజాన్నంశూద్రచోదితం। పాణ్యంగాదాయసెక్ల్తం తదన్నంవర్జయేద్యతిః। పిత్రర్థంకల్పితంపూర్వమన్నందేవాదికారణాత్। వర్జయేత్తాదృశీంభిక్షాం పరబాధాకరీంతథా" = என்றைக்கும் இதமானவுணவை அளவையோடு புசித்தல்வேண்டும். தன்னுடம்பில் எது இனிதாகச் சீரணிக்குமோ அதைப் புசித்தல்வேண்டும். எந்தவுண்டியால் வாதபித்த சிலேட்டுமநாடிகள் அதிகரிக்குமோ அந்த அன்னத்தைத் துறவி விட்டுவிடவேண்டும். பூப்பானவளால் ஏவப்பட்டு வந்த சோற்றினையும் விடவேண்டும். சூத்திரனால் ஏவப்பட்ட வேதியன் மனைச்சோறும் ஆகாது. கையாலாவது இரும்புபாத்திரங்களாலாவது அளந்தாவது கொண்டுவந்து படைத்த சோற்றினையும் துறவியுண்ணலாகாது. பிதிரர்பொருட்டாகக் குறித்துவைத்த சோற்றினையும், தேவர்களின் பொருட்டுக் குறித்துவைத்த சோற்றினையும், பிறர்க்குத் துன்பம்நேர்ந்துவந்த சோற்றினையும் விட்டொழிதல்வேண்டும். எ-று.

பிச்சைக்குப் போகலாத விடம்.

பிறர்க்குத்துன்ப முண்டாகாத கருத்தினைப்பற்றி மனுகூறினர். మనుః॥ "నతాపసైర్బ్రాహ్మణైర్వా వయోభిరపివాశ్వభిః। ఆకీర్ణంభిక్షుకైర్వాన్యై రగారముపసంవ్రజేత్" = தவத்தராகிய பிச்சையேற்போர், வேதியர், பறவை, நாய், ஏனையஇரவலர்கள் வாயிற்கடைத்தலை நின்றிருந்தால் அந்தமனைக்குத் துறவி பிச்சைக்குப் போகலாகாது. எ-று.

பிச்சையிடுவதற்குச் சத்தியுடையவனே யாயினும் நாத்திகத்தால் இடானுயின் அவன்மனைக்கும் போகலாகாதெனப்போதாயனர்கூறினர். బోధాయనః॥ "భిక్షాంనదద్యుర్యేపంచాహం సప్తాహంవాకథంచన। యస్మిన్గృహేజనామూర్ఖాస్తద్గృహంచాండాలవత్త్యజేత్"= ஐந்துநாளாயினும் ஏழுநாளாயினும் எந்த மனையி[லு]ள்ளவர்கள் மூர்க்கத்தனத்தாற் பிச்சையிடமாட்டார்களோ அந்தமனையைச்சண்டாளன்மனையை விட்டொழிந்தாற்போலும் விட்டொழிக. எ-று.

தக்கோன்மனைவிடுதற் குற்றம்.

பழிக்கப்படாத மனையை விடுதலிற் குற்ற முண்டாமென அவரேகூறினர். బోధాయనః॥ "సాధుంచాపతితంచైవ యోయతిఃపరివర్జయేత్। తస్యసుకృతంతస్యా దుష్కృతంప్రతిపద్యతే"= சாதுவாகவிருப்பவன், பதிதன் அல்லாதவன், இப்படிப்பட்ட வேதியனை எந்தத்துறவிவிட்டுவிடுவானே அந்தத் துறவி அவ்வேதியனுக்குப் புண்ணியத்தையளித்துப்பாவத்தைக் கொள்ளுகின்றுன். எ-று.

தக்கோனும்வறியனுனவழி.

யார்மிகவறியனுயினும் பத்திப்பற் றுண்டாதலால் தானேனும்பட்டினிகிடந்து பிச்சையிடவல்லனே அவன்பிச்சை வாங்கலாது என்பதனை பலசுருதிகூறிற்று. స్మృత్యంతరే॥ "ఆత్మానంపీడయిత్వాపి భిక్షాంయస్సంప్రయచ్ఛతి। సాభిక్షాహింసితాజ్ఞేయా నాదద్యాత్తాదృశీంయతిః"= தன்னைவருத்திக் கொண்டாயினும் பிச்சையிடுபவன் பிச்சை இமிசிதபிச்சையென்றுணர்க. துறவி அதனைப்பெற்றுக் கொள்ளலாகாது. எ-று.

ஒரே மனைப்பிச்சை.

பிச்சையின்பொருட்டு மனைகடோறுந்திரிதற்கு அஞ்சினேனைப்பற்றிப் போதாயனர்கூறினர். బోధాయనః॥ "ఏకత్రలోభాద్యోభిక్షుః పాత్రపూరణమిచ్ఛతి। దాతాస్వర్గమవాప్నోతి భోక్తాభుంజీతకిల్బిషం" = எத்துறவி ஒரேமனையிற்றுனே பெறவேண்டுமென்னும் இச்சையால் தன் பிச்சை ஒடு நிரம்ப இடும்படி விரும்புவானே? அத்துறவிக்குக் கொடுத்தவன் சுவர்க்கம்புகுவன். தின்றவன்பாவத்தை நுகர்வன் எ-று.

துறவியின் பிச்சையோடு.

துறவிக்கு வேண்டிய பிச்சைக்கலத்தை மனுவிதித்தனர். మనుః॥ "అతైజసానిపాత్రాణి తస్యస్యుర్నిర్వ్రణానిచ। తేషామద్భిస్స్మృతంశౌచం చమసానామివాధ్వరే। అలాబుందారుపాత్రంవా మృణ్మయంవైణవంతథా। ఏతానియతిపాత్రాణి మనుస్స్వాయంభువోఽబ్రవీత్"=ஒளிச்சம்பந்த முடையதாகாது. (எனவே பொன் முதலியவாகாது). இரணப்படாதது (எனவே பழுதாகாதது) முதலிய கலன்கள் துறவிக்கு ஆம். வேள்வியில், சமசையென்னும் பாத்திரத்திற்கு எவ்வாறோ? அவ்வாறே துறவியின் பாத்திரத்திற்கும் நீராற்கழுவுதலினாற் சுத்தியாம். சுரை, மரம், மண், மூங்கல், இந்நான்கினால் அமைந்தது, துறவிக்குக் கலமென்று பிரமன் சேயாகிய மனுகூறினர். எ-று.

இயமன். యమః॥ "హిరణ్మయానిపాత్రాణి కృష్ణాయసమయానిచ। యతీనాం తాన్యపాత్రాణి వర్జయేత్తాని భిక్షుకః" = பொன் இரும்புமுதலிய பாத்திரங்கள் துறவிகட்கு ஆகாது. பிச்சையேற்போன் அவற்றைவிட்டுவிடவேண்டும். எ-று.

போதாயனர். బోధాయనః॥ "స్వయమాహృత్యపర్ణేషు స్వయంశీర్ణేషువా పునః। భుంజీతనవటాశ్వత్థ కరంజానాంతుపర్ణకే। కుంభితిందుకయోర్వాపి కోవిదారార్కయోస్తథా। అపద్యపినకాంస్యేతు మలాశీకాంస్యభోజనః। సౌవర్ణేరాజతేతామ్రేమయేవాత్రపుసీసయోః" = மரங்களினின்றும் பழுத்துத் தானேயுதிர்ந்த இலைகளைத் துறவிதானே கொண்டுவந்து, அதிலுண்ணவேண்டுவது. ஆல், அரசு, காஞ்சம், = புன்கு, கும்பி, = தேக்கு, திந்துகம், = வெடிகருங்காலி, கோவிதாரம், = மந்தாரை, எருக்கு, இந்த இலைகளில் புசிக்கலாகாது. ஆபற்காலத்திலும் வெண்கலத்துள் புசிக்கலாகாது. வெண்கலத்துண்பவன்மலம்புசிப்பவனாம். பொன், வெள்ளி, செம்பு, தகரம், ஈயம், இந்த பாத்திரங்களிலும் ஆகாது. எ-று.

துறவியினுண்டி நியமம்.

துறவியுண்ணும் நியமத்தினைப் போதாயனர் கூறினர். బోధాయనః॥ "భిక్షాచర్యాదుపావృత్తో హస్తౌపాదౌప్రక్షాళ్య చమ్యాదిత్యస్యాగ్రేనివేదయన్నుదుత్యంచిత్రమితిబ్రహ్మ జజ్ఞానమితిచోద్వయం తమసస్పరీతిజపిత్వా భుంజీత" = பிச்சையேற்றுவந்து கைகாலலம்பி ஆசமனஞ்செய்து சூரியனுக் கெ

திரில் நிவேதனஞ்செய்து, "ఉదుత్యంచిత్రం" எனவும், "బ్రహ్మజజ్ఞానం" எனவும் "ఉద్వయంతమసస్పరి" எனவும் வரும் மூன்றுமந்திரங்களையும் செபித்து உண்ணவேண்டும். எ-று. காண்க.

நரசிங்கபுராணம். నృసింహపురాణే॥ "తతోనివర్త్య తత్పాత్రం సంస్థాప్యాచమ్య సంయమీ। చతురంగుళిమాత్రం హస్త్య గాత్రిసమాత్రం సమాహితః। సర్వంవ్యంజనసంయుక్తం పృథక్పాత్రే నివేదయేత్। సూర్యాదిదేవభూతేభ్యో దత్వాన్నం ప్రోక్ష్యవారిణా। భుంజీతపర్ణపుటకే పాత్రేవా వాగ్యతో యతిః। భుక్త్వాపాత్రంయతిర్నిత్యం క్షాళయేన్మంత్రపూర్వకం। నదుష్యేత్తస్యతత్పాత్రం యజ్ఞేషుచమసాఇవ। అథాచమ్యనిరుద్ధాసు రుపతిష్ఠేత భాస్కరం। జపధ్యానవిశేషేణ దినశేషంనయేద్బుధః। కృతసంధ్యస్తతో రాత్రింనయేద్దేవగృహాదిషు। హృత్పుండరీకనిలయే ధ్యాత్వాత్మానమకల్మషం। యతిధర్మరతశ్శాంతస్సర్వభూతసమోవశీ। ప్రాప్నోతిపరమంస్థానం యత్ప్రాప్య ననివర్తతే" = துறவி பிச்சையேற்றுவந்து உத்தமானவிடத்தில் வைத்து, ஆசமித்து, நாலுவிரலை யலம்பி, உண்ணத்தக்க வளவு வேறுபாத்திரத்திலெடுத்து வைத்து, சாறுமுதலிய பரிகரங்களோடும் அன்னத்தை வேறுபாத்திரத்தில் சூரியன் முதலிய தேவர்க்கு நிவேதனம் வைத்து, = உயிர்களுக்குக் கொடுத்துவிட்டு, மிக்க சோற்றினை நீராற்றெளித்து, இலையிலாயினும் பாத்திரத்திலாயினும் வாய்பேசாது உண்ணவேண்டும். துறவிதானுண்ட கலத்தினை நாடோறும் மந்திரங்கூறி நீராலலம்பிவைத்தல் வேண்டும். வேள்வியில் எவ்வாறுசமசைப் பாத்திரங்கட்கு எச்சிற்குற்றமில்லையோ அவ்வாறிதற்குமில்லை. பின்புஆசமனஞ்செய்துபிராணாயாமஞ்செய்துசூரியனைஉபஸ்தானம்=பிரார்த்தனைசெய்யவேண்டும். செபத்தினாலும் விசேடமான தியானத்தினாலும் அப்பகலின் சேடத்தைக் கழித்தல்வேண்டும். பின்னர்சந்தியா னுட்டானஞ்செய்து, தேவர்கோவில், மடமுதலியவிடங்களில் இராப்பொழுதினைக் கழித்தல் வேண்டும். உள்ளக் கமலமென்னும் மனையில்குற்றமற்ற ஆன்மாவைத்தியானித்து, துறவி நடத்தவேண்டிய தருமத்தில் இச்சையுடையவனாய், சாந்தவியற்கையுடையவனாய், பொறிகளையடக்கி, எல்லா வுயிர்களையும் ஒத்துப்பார்க்கும் அறிவுடையவன் மீளாக்கதியான பரமபதம்புகுகின்றான், எ-று.

கூர்மபுராணம், కూర్మపురాణే॥ "ఆదిత్యదర్శయిత్వాన్నం భుంజీతప్రాఙ్ముఖో యతిః॥ "హుత్వాప్రాణాహుతీఃపంచ గ్రాసానష్టౌ సమాహితః। ఆచమ్యదేవంబ్ర

ష్ఠేణం ధ్యాయీతపరమేశ్వరం। పూర్వరాత్రేపరరాత్రేచ మధ్యరాత్రేతథైవచ। సంధ్యాస్వహ్నివిశేషేణ చింతయేన్నిత్యమీశ్వరం" = துறவிபலிச்சோற்றைச் சூரியனுக்குக்காட்டிக் கிழக்குமுகமாக அமைதியோடும் ஐந்துவிசை பிராணாகுதிசெய்து, எட்டுக்கவளம் புசிக்கவேண்டும். பின் ஆசமனம்செய்து, பிரமனையும், பரமேச்சுரனையும் தியானிக்கவேண்டும். இரவின்முதற்பங்கு, நடுப்பங்கு, கடைப்பங்குமாகிய மூன்று காலமும், சந்தியாகாலமும், ஒரு தலையாகப்பகலுமாக நாடோறும் சிவத்தியானம் செய்யவேண்டும். எ-று.

துறவியுண்மூத்தோனிளையோன்முறைமை.

ஏனையதுறவி யொழுக்கங்களைக் கூறுதும். அவற்றினை அத்திரிவிளக்கினர். అత్రిః॥ "అతఃపరంప్రవక్ష్యామి హ్యాచారోయోయతేస్స్మృతః। అభ్యుత్థానప్రియాలాపౌ గురువత్ప్రీతిపూజనం। యతీనాంవ్రతవృద్ధానాం స్వధర్మమనువర్తినాం। విష్ణురూపేణవైకుర్యా న్నమస్కారంవిధానతః" = பின்னர் துறவியினொழுக்கம்கூறுதும். தன்னினும் விரதந்தொடங்கியகாலம் அதிகமாகவுடையவனைத் தன்னொழுக்கிற்றவறாதுநடக்கும்துறவியைக் கண்டால், மேலெழுதல் வேண்டும். இனியவை கூறவேண்டும். குருவைப் பூசித்தாற்போலும் அன்போடு பூசித்தல்வேண்டும். விஷ்ணுவின்வடிவம் என்றுநம்பி விதிப்படி நமஸ்காரம் செய்ய வேண்டும். எ-று.

மனுவுங்கூறினர். మనురపి॥ "కృత్తకేశనఖశ్మశ్రుః పాత్రీదండీకుసుంభవాన్। విచరేచ్చయతిర్నిత్యం సర్వభూతాన్యపీడయన్। కపాలంవృక్షమూలాని కుచేలమసహాయతా। సమతాచైవసర్వస్మిన్నేతన్ముక్తస్యలక్షణం। నాభినందేతమరణం నాభినందేతజీవితం। కాలమేవప్రతీక్షేత నిర్దేశంభృతకోయథా। దృష్టిపూతంన్యసేత్పాదం వస్త్రపూతంజలంపిబేత్। సత్యపూతాంవదేద్వాణీం మనఃపూతంసమాచరేత్। అతివాదాంస్తితిక్షేతనావమన్యేత కంచన। నచేమందేహమాశ్రిత్య వైరంకుర్వీతకేనచిత్। క్రుధ్యంతంనప్రతిక్రుధ్యే దాక్రుష్టఃకుశలంవదేత్। సప్తద్వారావకీర్ణాంచ నవాచమనృతాంవదేత్। అధ్యాత్మరతిరాసీనో నిరపేక్షోనిరామిషః। ఆత్మనైవసహాయేన సుఖార్థీవిచరేదిహ। సంరక్షణార్థంజంతూనాం రాత్రావహనివాసదా। శరీరస్యాత్యయేచైవ సమీక్ష్యవసుధాంచరేత్। అల్పాన్నాభ్యవహారేణ రహఃస్థానాసనేనచ। హ్రీయమాణానివిషయైరింద్రియాణినివర్తయేత్। ఇంద్రియాణాం నిరోధేన రాగద్వేషక్షయేనచ। అహింసయాచభూతానా మమృతత్వాయకల్పతే" = மயிர், நகம், மீசைமழித்தவனாய், பாத்திரம், தண்டு, செவ்

வாடையுடையனுய், துறவிஎவ்வுயிரையும்வருத்தாது நாடோறும் திரிதல்வேண்டும். ஒடு, மரத்தடி, கிழிந்தவாடை, துணையில்லாமை, எல்லாவற்றிலும் பொதுநோக்கு, என்னுமிவை வீடுபெற்றோனிலக்கணம். உவகையூட்டுவ தன்பாலுவப் புறலாகாது. பிழைத்திருப்பதனைப் பற்றிக்களிக்கலாகாது. பணிசெய்வோன் தலைவனுணையை யெதிர்பார்த்திருப்பது போலும் காலத்தையே யெதிர்பார்த்து நிற்றல்வேண்டும். பார்வையாற் சுத்தமுற்றவிடத்தேகால்வைத்தல்வேண்டும். ஆடையாற்சோதித்துச் சுத்தமடைந்த நீரைக்குடித்தல் வேண்டும். மெய்ம்மையாற் புனிதமடைந்த சொற்களைக்கூறவேண்டும் மனத்தாற்சுத்தமானதை யனுட்டிக்கவெண்டும். அதிகரித்தசொல்லைப் பொறுத்தல்வேண்டும். யாரையும் அவமானஞ் செய்யலாகாது. இவ்வுடம்பினை யடைந்து யாரோடும் பகை செய்யலாகாது. வெகுளி கொள்வோனுக்குஎதிரிற்றானும் வெகுளலாகாது. கோபிக்கச்செய்தாலுந்தான் இதவே செய்யவேண்டும். ஏழுவாயிலினுள் சிதறிவிடும் சொல்லேயாயினும் பொய் கூறலாகாது. தன்னுள்ளே புணர்பவனு யிருத்தல் வேண்டும். விருப்பமின்றி நுகரத்தக்க பொருளின்றித் தனக்குத் தானேவுதவுவோனுய் இன்பத்தின்பொருட்டு இவ்வுலகத்துத்திரிதல்வேண்டும். இரவாயினும் பகலாயினும் ஒழியாது பிராணிகளைக்காத்தலின்பொருட்டுத் தன்னுடம்பினுக்குத் துன்பம்வருமபோதும் நிலத்தினைநன்முக நோக்கி நடத்தல்வேண்டும். சிறிஉண்டியையுண்பதாலும், இரகசியவிடத்தில்தனியனுயிருத்தலினும், விடயப்பொருளினை விட்டொழிதலாலும், பொறிகளைத் தன்வயமாகத் திருப்பிக்கொள்ளவேண்டும். பொறிகளையடக்குதலாலும், விருப்புவெறுப்பினைக் கெடுத்தலாலும், உயிர்க்குத்துன்பஞ் செய்யாதிருத்தலாலும் சாவாநிலைமைக்குத் தக்கவனுகின்முன். எ-று.

தக்ஷர். దక్షః॥ "నాధ్యేతవ్యం న వక్తవ్యం న శ్రోతవ్యం కథంచన। ఏతైస్సర్వైస్సునిష్పన్నో యతిర్భవతి నేతరః" = ஓடத்தகுவதில்லை, சொல்லத்தக்கதில்லை எவ்விதத்தும் கேட்கத்தக்கதில்லை. இவ்வெல்லாவற்முலும் நன்முகத்தேர்ந்தவன் துறவியாகின்முன். ஏனையன் அல்லன். எ-று.

பிரகற்பதியும். బృహస్పతిః॥ "నకించిద్వేదజాతస్య దద్యాదాదంతధావనా। నాశ్రోత్రియకాలం తు భక్షయేదాత్మనాస్తథా। నైవాదదీత పాథేయం యతిః కించిం

నాపటు। సత్వమాపన్నగృహీయా ద్యాపదస్తోపయుజ్యతే। నతీర్థవాసీనిత్యంస్యా న్నోపవా సపరోయతిః। నచాధ్యయనశీలస్స్యా న్నవ్యాఖ్యానపరోభవేత్" = மருந்தொழிய பல்விளக்கினதுமுதல் உண்டியுண்ணும் வரையிலொன்றும் தின்னலாகாது. துறவி அலையாத மனமுடையவனு யிருத்தல்வேண்டும். ஆபத்தில்லாதபோது வழிநடைக்குஆகத்தக்க கட்டுச்சோறு கொள்ளலாகாது. ஆபத்துக்களில் ஒருபகலுண்டிக்கு ஆகத்தக்க பக்குவப்பண்டங்களைக் கொள்ளலாம். துறவி நித்தமும் தீர்த்தத் தலங்களில் வசித்தலாகாது. பட்டினி கிடத்தலே விசேடமாக வைத்துக்கொள்ளலாகாது. ஓதுவதே யியல்பாக வுடையவனுக லாகாது. நூற்பொருள் கூறுவதே தொழிலாகவைத்துக்கொள்ள லாகாது. எ-று.

படிக்கலாகாது, பொருள்கூறலாகாது என்றது கருமகாண் [illegible]ளைப்பற்றிக் கூறியது. அங்ஙனமல்லாக்கால், "ఉపనిషదమావ[illegible]త్"=உபநிடதவாக்கியங்களைப் பலகாலும்படித்தல் வேண்டும் என்னும்சுருதிமொழிக்கு மாறுகொளலாம். கேட்டலில்லை என்றதும் பிரமமீமாஞ்சை நூலொழிய வேறுநூல்களைப் பற்றியது. எங்ஙனமெனில் "శ్రోతవ్యోమంతవ్యో నిదిధ్యాసితవ్యః"=ஆன்மாகேட்கத் தக்கவன். அறியத்தக்கவன். சமாதிநிலையில்தெளியத்தக்கவன்என்று துறவிக்குச் செம்பொருளாராய்ச்சியை வேதம்விதித்தது. இதனல், தீர்த்தம், பட்டினி, இயற்றலாகாது. கருமகாண்டமோதலாகாது. அவற்றிற்குரை கூறலாகாது. எனவே, அவ்வகைப்பட்ட வேற்றுக்கொள்கையில் கருத்துண்டாதல் கூடாதென்று விலக்கிக் கூறுவது வழக்குடைமையாகவே யிருக்கின்றது. என்னெனின் ? கைவல்லிய நிலைமையாகிய சந்நியாசத்திற்கு உலககுடும்பத்து நின்றும் தப்பித்துக்கொள்ளும் விடுகைத்தொழிலே சிறந்ததாகவிருக்கின்றது. எவ்வாறெனின் (செம்பொருள்=பிரமம்).

பிரகற்பதி. బృహస్పతిః॥ "యస్మిన్వాచఃప్రవిశన్తి కూపేప్రాప్తాశ్శిలా ఇవ। నవక్తారంపునర్యాంతి సకైవల్యాశ్రమేవసేత్। యస్మిన్కామాఃప్రవిశంతి విషమౌ భోగ్యపసంహృతాః। విషయానపునర్యాంతి సకైవల్యాశ్రమేవసేత్। యస్మిన్కాంక్షితస్స మంయాంతి విఫలస్సమ్యగుత్థితః। ఆకాశేసిర్యథాతిష్ఠ స్సకైవల్యాశ్రమేవసేత్। అతీతాన్న స్మరేద్భోగాంస్తథైవానాగతానపి। ప్రాప్తాంశ్చనాభినందేత సకైవల్యాశ్రమేవసేత్। య

ప్రీణాంతిష్ఠతి కేవలం సత్యం సంతోష మార్జవం। అహింసాస్యమదంభశ్చ సవైవల్యాశ్రమేవ సేత్। వృథాప్రలాపిమౌనస్య న్యలోకానాధారతః। నాన్యవిద్యాధియుక్తశ్చ సవైవ ల్యాశ్రమేవసేత్। అంధవన్మూకవచ్చైవ బధిరక్లీబవచ్చయః। అన్తేప్రజాతిమౌనిత్యం సవైవ ల్యాశ్రమేవసేత్" — யார்செவியில் விழுந்த சொற்கள் கிணற்றிலிட்ட கற்போல முழுகிவிட்டு மீட்டுங் கூறவெளிவாராவோ அவன், யார் மனத்துட் புகுந்த எண்ணங்கள் விடயங்களை யிழுத்துக்கொண்டு வறளச்செய்து மீட்டும் வெளிப்படாவோ அவன், யாரிடத்தெழுந்த வெகுளி வெறுவெளியில் வீசியவாள்போல பயனற்றிருக்குமோ அவன், யார்கழிந்த போகங்களை யெண்ணுதவனே? உண்டாகாத போகங்களை நினையாதவனே? உண்டானதைப் பற்றிக் களிக்காதவனே? அவன், யாரிடத்துப்பொறுமை-மனச்சுத்தம்-பொறியடக்கல் - சுத்தவொழுக்கம்-சத்தியம் - மகிழ்ச்சி-கோணுமை - இருபற்றுப் பொருளுமில்லாமை - செருக்கில்லாமை யுண்டாயிருக்குமோ அவன், யார் வீணுகப்பேசானே? உலகத்தை எதிர்பார்த்திரானே? எல்லாவித்தைகளையும் பயிலாதிருப்பனே அவன், யார் குருடனைப்போலும் ஊமையைப்போலும், முடவனைப்போலும், செவிடனைப் போலும், பேடியைப்போலும், எப்பொழுதுஞ் செய்வானே அவன், வீட்டுநிலைமையி லிருப்பன். எ-று.

துறவியின்சிறப்பு.

மேற்கூறப்பட்ட தருமத்தோடு கூடியதுறவிச் சிறப்பினைத் தக்ஷர்கூறினர். దక్షః॥ "సంచింతయన్ గృహస్థస్య పాపమామరణాంతికం। నిర్దహిష్య త్యసర్వ మేకరాత్రోషితో యతిః। సన్న్యస్యంతం ద్విజం దృష్ట్వా స్థానాచ్చలతి భాస్కరః। ఏష మే మండలం భిత్వా పరం స్థానం ప్రయాస్యతి" = இல்லறத்தானுக்குச் சாந்துணையும்பாவமென்று நன்முக.ஆராய்ந்து ஓரிரவாவதுசந்நியாசியாக விருந்துஇறப்பவன், அவற்றையெல்லாம் சுட்டுவிடுகிறுன். துறவு பெற்றுக்கொள்ளும் வேதியனைச்சூரியன் பார்த்து இவன் என் மண்டலத்தைப் பிளந்துகொண்டு பரமபதத்தையடைவன் என்று பயந்து தன்னிடத்திருந்து அப்புறம்போகிறுன். எ-று.

துறவியல் முற்றிற்று.

ஆச்சிரமவேறுபாடு.

பிரமசரியமுதல் சந்நியாசம்வரையிலுமாக மேற்கூறப்பட்ட நால்வகையாச்சிரமத்துள்ளும், ஒவ்வொன்றில் வேறுவேறாக நன்னான்குவேறு பாடுண்டு. அதனைமகா பாரதத்துட் கூறப்பட்டது. మహాభారతే॥ "బ్రహ్మచారీగృహస్థశ్చ వానప్రస్థోథభిక్షుకః। చత్వారఆశ్రమాఃప్రోక్తా ఏకైకస్యచతుర్విధాః" = பிரமசாரி, கிரகத்தன், வானப்பிரத்தன், சந்நியாசி, என்னும் நான்கும் ஆச்சிரமமென்னப்படும். இவற்றுள் ஒவ்வொன்றும் நன்னான்கு வகையுடையன. எ-று.

பிரமசரியாபேதம்.

அந்நால்வகையின்விவரங்களை காத்தியாயன மிருதிகூறிற்று. కాత్యాయనస్మృతిః॥ "బ్రహ్మచారిగృహస్థ వానప్రస్థపరివ్రాజకాశ్చత్వారఆశ్రమాః షోడశధాభవంతి, తత్రబ్రహ్మచారిణశ్చతుర్విధాభవంతిగాయత్రో బ్రాహ్మణః ప్రాజాపత్యో బృహన్నిత్యుపనయనాదూర్ధ్వం త్రిరాత్రమక్షారలవణాశీ గాయత్రీమధీతే సగాయత్రో ష్టాచత్వారింశద్వర్షాణి వేదబ్రహ్మచర్యంచరేత్ప్రతివేదం ద్వాదశ ద్వాదశవాయావద్గ్రహణాంతంవా వేదస్య సబ్రాహ్మణః స్వదారనిరతః ఋతుకాలాభిగామీ సదాపరదారవర్జితస్సప్రాజాపత్య ఆప్రాయణాద్గురోరపరిత్యాగీ సనైష్ఠికో బృహన్నితి" = நான்கு ஆச்சிரமும் நன்னான்கு பிரிவுடைமையாற் பதினாறு வகைப்படுகின்றன. அவற்றுள் பிரமசரியர் நால்வகையர். அவர், காயத்திரியன், பிராமன், பிராஜாபத்தியன், பிரகன், எனப்படுவர். உபநயனமாயினபின்பு மூன்றுதினம் கார்ப்பு, உப்புச்; சுவையுண்ணாது காயத்திரி செபஞ்செய்தால் அது காயத்திரீய பிரமசரியாச்சிரமமாம். (க) நாற்பத்தெட்டு வருடம் வேதம் படித்துக்கொண்டு பிரமசரிய விரதஞ்செய்யவேண்டும். ஒவ்வொரு வேதத்திற்குப் பன்னிரண்டு பன்னிரண் டாண்டாக வாயினுமாக அல்லது எவ்வளவுகாலத்துள் எல்லாம்வரக் கூடுமோ அது வரையினுமாக, அவன்பிராமப் பிரமசாரி. (உ) மணம்புணர்ந்து தன்மனைவியிடத்து மாத்திரமே இருதுகாலங்களில் விதிக்கு மாறுபாடின்றிப் புணர்ந்து அயலவன்மனையின் புணர்ச்சியில்லாதவன் பிராஜாபத்

நியபிரமசாரியாம். (ங) உயிருள்ள வரையில் குருவனைவிட்டுப் போகாத நைட்டிகன். பிரஹ்தன், (எனவேபெரும் பிரமசாரி) (ச) எ-று.

கிரகத்தர்பேதம்.

இதுவுமது. "గృహస్థా అపి చతుర్విధా భవంతి వార్తాకవృత్తయశ్శాలీన వృత్తయో యాయావరా ఘోరసన్న్యాసికాశ్చేతి తత్ర వార్తాక వృత్తయః కృషిగోరక్షవాణిజ్యమగర్హితముపయుంజానాశ్శతసంవత్సరాభిర్యజంతఆత్మానం ప్రార్థయంతే. శాలీనవృత్తయో యజంతో నయాజయంతో ధీయానానాధ్యాపయంతో దదతో న ప్రతిగృహ్ణంతశ్శతసంవత్సరాభిః క్రియాభిర్యజంత ఆత్మానంప్రార్థయంతే. యాయావరా యజంతో యాజయంతోధీయానా అధ్యాపయంతో దదతిప్రతిగృహ్ణంత శ్శతసంవత్సరాభిః క్రియాభిర్యజంతఆత్మానం ప్రార్థయంతే. ఘోరసన్న్యాసికా ఉద్ధృతపరిపూతాభి రద్భిఃకార్యం కుర్వంతఃప్రతిదివస మాస్పృతోంఛవృత్తి ముపయుంజానాశ్శతసంవత్సరాభిః క్రియాభిర్యజంత ఆత్మానంప్రార్థయంతే." = இல்லறத்தாரும் நால்வகைப் படுவர். அவர், வார்த்தாக விருத்தியர், (எனவேதகுதியான வைசியஜீவனம்செய்பவர்) சாலீநவிருத்தியர் (எனவேபிறர்எவாத ஜீவனம் செய்பவர்) யாயாவர் (எனவேஎவற்றுனும்குறைவில்லாப்பிழைப்பினர்) கோரசந்நியாசியர் (எனவேகொடிய சந்நியாசிபோலும் வருந்திப்பிழைப்போர்) என. அவருள், வார்த்தாகவிருத்தி யுடையார், உழவுத்தொழில் செய்தல், பசுக்காத்தல், வாணிபஞ்செய்தல், இவற்றுள்பழிக்கப் படாததனைச்செய்து நாளுண்டுசெய்யத்தக்ககருமங்களால் பூசித்துத்தம்மையோம்புபவராம். (க) சாலீனவிருத்தியர், தாங்கருமஞ்செய்வர், பிறர்க்குப் புரோகிதராகார். ஓதுவர், ஓதுவிக்கமாட்டார். கொடுப்பர்,வாங்கார். இவ்வாறுநாளுண்டுசெய்யத்தக்ககருமஞ்செய்து பூசித்துத்தம்மையோம்புபவராம்.(உ) யாயாவர், வேட்பர், வேட்பிப்பர், ஓதுவர், ஓதுவிப்பர் கொடுப்பர், ஏற்பர் இங்ஙனநாளுண்டு செய்யத்தக்க கருமஞ்செய்துபூசித்துத்தம்மை யோம்புபவராம்.(ங)கோரசந்நியாசியர், அப்பொழுதுதான் முகந்துகொண்டு வரப்பட்டசுத்தமாகிய நீரினால் நாடோறும் செய்யத்தக்க கருமங்களைச் செய்பவராய்ப் பரப்பியவுஞ்ச விருத்தியையுடையவராய்நாளுண்டு செய்யத்தக்க கருமஞ்செய்து பூசித்துத்தம்மை யோம்புபவராம்.

வானப்பிரத்தர்பேதம்.

இதுவுமது. "వానప్రస్థా అపిచతుర్విధా భవంతి వైఖానసా ఔదుంబరా వాలఖిల్యాః ఫేనపాశ్చేతి. తత్రవైఖానసాః అకృష్టపచ్యౌషధివనస్పతిభిర్గ్రామబహిష్కృతాభిరగ్ని పరిచరణంకృత్వాపంచ మహాయజ్ఞాన్నిర్వర్తయంతఆత్మానం ప్రార్థయంతే. ఔదుంబరా బదరనీవారశ్యామాకైరగ్నిపరిచరణం కృత్వాపంచమహాయజ్ఞక్రియాం నిర్వర్తయంతఆత్మానం ప్రార్థయంతే. వాలఖిల్యాజటాధరా శ్చీరచర్మవల్కల పరివృతాఃకార్తిక్యాంపౌర్ణమాస్యాం పూర్వఫలముత్సృజంత శ్శేషానష్టౌ మాసాన్వృత్త్యుపార్జనంకృత్వాగ్నిపరిచరణంకృత్వా పంచమహాయజ్ఞ క్రియాంనిర్వర్తయంత ఆత్మానం ప్రార్థయంతే. ఫేనపాశ్శీర్ణపర్ణఫల భోజినోయత్రకుత్రవావసంతః"=வானப்பிரத்தரும் நால்வகையர். அவர், வைகாநசகர், ஔதம்பரர், வாலகில்லியர், பேனபர், என. அவருள், வைகாநசர், ஊர்க்கு வெளியில் பயிரிடாது தானே முளைத்த பயிர்களாலும் மரங்களாலும் பெறுவதால் தீயைப்பூசித்து, ஐம்பெரும்வேள்வி முற்றித்தம்மை யோம்புவர் (க) ஔதும்பரர், இலந்தை, நீவாரம் = தினையரிசி, சாமை இவைகளாற் றீயைப் பூசித்து ஐம்பெரும்வேள்வி முற்றித்தம்மை யோம்புவர். (உ) வாலகில்லியர், சடை தரித்து, சீரை, தோல், வற்கலை, உடுத்துக்கார்த்திகை மாதப்பூரணையில் பின்னிருந்த பலன்களை யெல்லாமொழித்து மற்றையெட்டுத் திங்களுக்குஞ் சீவனத்தைத்தேடிக்கொண்டு தீயைப்பூசித்து ஐம்பெரும்வேள்வி முற்றித்தம்மை யோம்புவர். (ங) பேனபரென்பவர், பழுத்துத்தாமே உதிர்ந்த இலைமுதலியவற்றினையுண்டு எங்கேனுமோரிடத்துவாழ்வர். எ-று.

சந்நியாசியர்பேதம்.

இதுவுமது. "పరివ్రాజకాఅపిచతుర్విధా భవంతికుటీచకాబహూదకాహంసాఃపరమహంసాశ్చేతి. తత్రకుటీచకాః స్వపుత్రగృహేషు భైక్షచర్యాం చరంతఆత్మానం ప్రార్థయంతే. బహూదకాస్త్రిదండ కమండలుజలపవిత్ర పాదుకాసనశిఖాయజ్ఞోపవీతకాషాయవేష ధారిణ స్సాధువృత్తేషుబ్రాహ్మణ కులేషుభైక్షంచరంతఆత్మానం ప్రార్థయంతే. హంసాఏకదండ ధరాశ్శిఖాయజ్ఞోపవీత ధారిణః కమండలుహస్తాగ్రామైకరాత్రవాసినో నగరేతీర్థేష్టౌచ పంచరాత్రం వసంతఏకరాత్రంద్విరాత్రంకృచ్ఛ్ర చాంద్రాయణాదిచరంతఆత్మానం ప్రార్థయంతే. పరమహంసానామైకదండధరాః కంథాకౌపీనవాససో వ్యక్తావ్యక్తలింగా అనున్మత్తా ఉన్మత్తవదాచరంతస్త్రిదండకమండలు శిక్యపద్మజలపవిత్రపా

మానసశ్చాయశ్రేష్ఠోపేతత్యాగినశ్శూన్యాగార దేవగృహనివాసినో నచైషాం ధర్మోనా ధర్మోనసత్యంనానృతంసర్వసహాస్సర్వ సమాస్సమలోష్ఠాశ్మకాంచనాయథోపపన్నచా తుర్వర్ణ్య భైక్ష్యచర్యం చరంత్యాత్మానంమోక్షయంతి"—சந்நியாசியரும் நால்வகையர். அவர்,குடீசகர், வெகூதகர், அமிசர், பரமஹமிசர், என. அவருள், குடீசகர்என்பவர்,தம்புதல்வர்மனையில் பயிக்கங்கொண்டெம்மை யோம்புவோர். (க) வெகூதகர்என்பவர், முக்கோல், கமண்டலம், சலபவித்திரம், பாதுகை, ஆசனம், குடுமி, பூணநூல், காஷாயவேடமும் பூண்டெல்லொழுக்கமுடைய வேதியர் மனையில் பயிக்கங் கொண்டு தம்மையோம்புவர். (உ) அமிசரென்பவர், ஒருதண்டு, சிகை, பூணநூல் தரித்து, கரகங்கையிற்பற்றி, ஒருரிலே ஓரிரவாகவும், பட்டணங்களில் எட்டுநாளாகவும் தீர்த்தக்கரையில் ஐந்துநாளாகவும் வாசஞ்செய்து ஏகராத்திரி விரதம், துவிராத்திரி விரதம், கிருச்சிரவிரதம், சாந்திராயண முதலியவிரதங்களை யனுட்டித்துத் தம்மையோம்புவர். (ங) பரமஹமிசரென்பவர், ஒருகோலைப்பிடித்துக் கவந்திகை, கோவணம், கற்றுடை, யுடையவராய் வெளிப் பட்டவராய் வெளிப்படாக் குறிகளையுடையவராய்ப் பித்தின்றியே பித்தரைப்போல் நடப்பவராய் முத்தண்டம், கரகம், உறி, பதுமபாத்திரம், சலபவித்திரம், பாதுகை, ஆசனம், சிகை, பூணநூல், இவற்றினை விட்டொழித்தவராய் யாருமற்ற பாழ்மனையிலாயினும் தேவர் கோட்டத்தாயினும்வசிப்பர். அவர்க்குத்தருமம் அதருமமில்லை,மெய்பொய் இல்லை. எல்லாவற்றையும்பொறுப்பர். எவற்றிலும் பொதுவாவர் ஓடும்பொன்னும் ஒக்கக்காண்பர். நால்வருணத்தும் பிச்சையேற்றுண்பர். தம்மைவிடுதலைச் செய்வர். எ-று.

நால்வகைநிலைமையின் தலைமைத்தொழில்.

"శాంతిర్యతేస్తపోధర్మోనియమోవనవాసినాం। దానమేవంగృహస్థానాం శుశ్రూషా బ్రహ్మచారిణాం" — சந்நியாசியர்க்குச் சாந்தமே சிறந்ததருமமாம். வானப் பிரத்தருக்கு நோன்பே தலைமைத் தருமமாம். இல்லறத்தாருக்குக் கொடுத்தலே யின்றியமையாத் தருமமாம். பிரமசாரிக்குக் குரு பணிவிடையே மேலான தருமமாம் எ-று. இவருள் துறவிக்கு வீடுபேறு, உண்மையான மெய்யறிவில் முற்றுகின்றது.

பரிவிராஜகர்என்பது.

பரிவிராஜகர் எனவே சந்நியாசியர் அவர்க்கு அப்பெயர் வருமாறு. பலமிருதி. స్మృత్యంతర॥ "పరితో ధాత్వరిచ్ఛేదా త్పరిపూర్ణావలోకనాత్। పరిపూర్ణఫలత్వాచ్చ పరివ్రాజకఉచ్యతే" = எல்லாவற்றினையும் நன்ருக வுணர்ந்ததாலும், எல்லாத்தொடர்பினையும் பற்றறுத்தலாலும், முழுப்பொருளைக் காண்டலாலும், முழுப்பயனை அடைந்ததாலும் பரிவிராஜகன் என்னப்படுவன். எறு. இப்பரிவிராஜகன் என்பதன் பொருளதே துறவிஎன்பதன் பொருளுமென்றுணர்க. இத்துறவு என்னும் பகுபதமுடிப்பினையும் பகுதியாக்கத்தினையுமோர்ந்து முடித்துக்கொள்க. இடம்பெற்றுழிவிரிப்பாம்.

இதுவுமது. "పరితో వ్రజతేనిత్యం పరంవాప్రజతేపునః। హిత్వాచైవాపరంజన్మపరివ్రాజకఉచ్యతే" = நாடோறும், எங்குந் திரிபவன், பரமபதஞ் செல்வன். அதனைவிட்டு மீட்டும் பிறவான் ஆதலால் பரிவிராஜக னென்னப்படுவன். எறு. இது துறவி யென்பதற்குமொக்கும்.

ஆதலால் இங்ஙனமாக இந்த அத்தியாயத்தின்முதலில் மூலமொழியுள் "చాతుర్వర్ణ్యాశ్రమాగతం" என்ற தொடரில் "ఆశ్రమ" என்ற மொழியான் ஞாபகப்பட்ட நான்காச்சிரமத்தின் தருமங்களும் கூறி முடிக்கப்பட்டது.

கழகத்துப்புலவ ரிவ் வத்தியாயம் பற்றிக் கூறிய செய்யுள்.

"ద్వితీయేత్వధ్యాయేస్ఫుటమభి హితోజీవనకృతే। రుపాయఃకృష్యాదిఃపునరథన మస్తాశ్రమగతాః। గరీయాంసోధర్మాఇతి మపివివృతాస్స్వాశ్రమపదాత్తుమేవం వ్యాకాషీన్మహితధిషణోమాధవవిభుః" = இரண்டாவது இவ் வத்தியாத்துள் உழவுமுதலிய பிழைப்புவகை தெளிவுறக் கூறப்பட்டது. அதுவுமன்றி எல்லா ஆச்சிரமங்களினுடைய பெருந்தருமமும் கூறப்பட்டன. அந்த ஆச்சிரம வகைகளும் சிறிது கூறப்பட்டன. பூசிக்கத்தக்க பெரியராகிய மாதவர் இவ்வாறு உரைத்தனர். எறு.

"ఇతి శ్రీమద్రాజాధిరాజ పరమేశ్వర వైదికమార్గ ప్రవర్తక శ్రీవీరబుక్క భూపాల సామ్రాజ్యధురంధరస్య మాధవామాత్యస్య కృతౌ పరాశరస్మృతి వ్యాఖ్యాయాం ద్వితీయోధ్యాయస్సమాప్తః.

இங்ஙனம் அரசர்க்கரசனும் பரமேச்சுரனைப்பற்றி வேதங் கூறிய ஒழுக்கவழியில் மன்பதையை நடத்துவோனும் திருவும் வீரமுமுடைய புக்கண்ணராயனுடைய இராயபாரத்தைத் தரித் திருக்கும் அமைச்சராகிய மாதாவாசிரியர் செய்த இப்பராசர மிருதி யுரையில் இரண்டாவதத்தியாயம்,

முற்றிற்று.

ஸ்ரீ

உ சிவகணபதயேநம:

பராசரம், ஆசாரகாண்டம்

மூன்றாவது,

அத்தியாயம்.

மாதவீய வுரை மொழி பெயர்ப்பு.

ஆசௌசவிதியும், இலக்கணமும்.

ஸூ॥ అశౌచేశుద్ధింప్రవక్ష్యామిజననేమరణేతథా.

என்பது. ஆசௌசவகையிதுவென்பதுணர்த்துகின்றது.

(இ-ள்.) அசுத்தமுடைமைத்தருமவுரிமையைத் தடுத்தலின் பிறத்தலிலும் அவ்வாறே இறத்தலிலும் உண்டாகத்தக்க சுத்தியைக் கூறுகின்றேன். எ-று.

மேலிரண்டு அத்தியாயங்களாலும் நான்கு வருணத்தின் ஒழுக்கங்கள் விளங்கக் கூறப்பட்டன. ஆச்சிரமதருமங்களும் குறிப்பிக்கப்பட்டன. அத்தருமங்களில் அனுட்டானத்திற்குச் சுத்தமானவனே யுரியனாயிருக்கின்றான். ஏனெனில், "శుచినాకర్మకర్తవ్యం" = சுத்தனானவனால் கருமஞ்செய்யத்தக்கது என்று மிருதிகூறுதலின். அந்தச்சுத்தி ஆண்மகனியற்கையி லுண்டாவதேயாம். ஆயினும், நடுவேயெப்போதாயினும் ஆசௌசமென்னுங்குற்றமுண்டாய், அவனது உடம்பு, மனமிவற்றில் ஓர்வகைவிசேடப்புதுமெய்ப்பாட்டினால் அவனுக்கு இயற்கையாகவுள்ள சுத்தம் சிலகாலம்வரையில் விளக்கமுறாது தடைபடுகின்றது. அங்ஙனமாவதுவே அசுத்தமுடைமை அதற்கே ஆசௌசமென்னும்பெயர். அது, இவ்வளவு என்னும் அளவினையுடையகாலத்தாலும், நிராடன் முதலிய வினையாலும் ஒழிக்கத் தக்கதாக விருக்கின்றது.

அதனால் இம் மூன்றாவது அத்தியாயத்துள் அதனை விளங்கக் கூறுவான் றொடங்கி முதற்கண்ணே, அவ்வகைப்பட்ட தடையொழிவதனால் வெளிப்பட்ட தூய்மையைக் கூறுவான் றுதலிப்புகுந்தார் (என்பது தோற்றுவாய்க்கருத்து). "అశుద్ధిం"—என்றபாதிசெய்யுளால் (இது உரை சொல்லப்புகுவார் முதற்கட்குறிக்கும் தொடக்கக்குறியிடு. வடநூலுள்பிரதிததாரணமென்ப) எதனால் பிறப்பிறப்பினிடத்தில் கரும உரிமைக்கு மாறான அசுத்தமுண்டாமோ அந்த நிமித்தத்தினால் அதற்கு விலக்காகும் உபாயத்தைச் சொல்வழிச் சுத்தியைக் கூறுதும். பிறப்பு இறப்பு அசுத்தத்தையுண்டாக்குகின்றதென்பது, மனுவாற்கூறப்பட்டது. మనుః॥ "దంతజాతేఽనుజాతే చ కృతచూడే చ సంస్థితే। అశుద్ధా బాంధవాస్సర్వే సూతకే చ తథో చ్యతే"—பற்கள் தோற்றினேனும், மயிர்வினை முடிந்தோனும் இறந்தவழிச் சுற்றத்தினர் யாவரும் அசுத்தராகின்றனர். பிறந்தபோதும் அங்ஙனம் கூறுகின்றது. எ-று. என்க.

మూ॥ త్రిరాత్రేణ విశుద్ధ్యంతి బ్రాహ్మణాః ప్రేతసూతకే ॥౧॥
క్షత్రియో ద్వాదశాహేన వైశ్యః పంచదశాహకైః
శూద్రః శుద్ధ్యతి మాసేన పరాశరవచో యథా. ॥౨॥

என்பன, நுதலிப்புகுந்த சுத்தத்தினை வருண முறைப்படி கூறுகின்றன.

(இ-ள்) பாராசரர் கூற்று எவ்வண்ணமுள்ளவோ அவ்வாறு, பிரேதசூதகத்தின்கண் வேதியர் மூன்றுநாளினுற் சுத்தராகின்றனர். வேந்தன் பன்னிருநாளினுலும், வைசியன் பதினைந்துநாளினுலும், சூத்திரர் ஒருதிங்களினுலும் சுத்தமடைகின்றனர். எ-று.

பூருவபக்கம்.

ஆயின், வேதியர் பிரேத சூதகத்தில் மூன்றுநாளினுற் சுத்தமடைவரென்ற விம்மொழி பலமிருதிகளுக்கும் முரணுகின்றது. என்னை?

தக்ஷர். దక్షః॥ "శుద్ధ్యేద్విప్రో దశాహేన ద్వాదశాహేన భూమిపః। వైశ్యః పంచదశాహేన శూద్రో మాసేన శుద్ధ్యతి" = வேதியன் பத்துநாளாலும், வேந்தன் பன்னிருநாளாலும், வைசியன் பதினைந்து நாளாலும், சூத்திரன் ஒரு திங்களாலும் சுத்தமடைகின்றான். எ-று. காண்க.

தேவலர். దేవలః॥ "దశాహం బ్రాహ్మణానాంతు క్షత్రియాణాం త్రిపంచకం। వింశద్రాత్రంతు వైశ్యానాం శూద్రాణాం మాసమేవతు" = வேதியர்க்குப் பத்திரவு, அரசர்க்குப் பதினைந்திரவு, வைசியருக்கு இருபதிரவு,சூத்திரர்க்கு ஒருதிங்களே. எ-று.

வசிட்டர். వసిష్ఠోపి॥ "బ్రాహ్మణో దశరాత్రేణ పంచదశరాత్రేణ క్షత్రియో వైశ్యో వింశతిరాత్రేణ శూద్రో మాసేన" = வேதியன்பத்திரவால், வேந்தன் பதினைந்திரவால், வேளாண்டொழிலோன் இருபதிரவால், சூத்திரனேர் திங்களால். எனவருமாறு காண்க.

சித்தாந்தம்.

இதுவமுவன்று. என்னை? வேதியரிடத்து, மூன்றிரவுசூதகம் சமானேதகர். என்பாரைப்பற்றியது. (எனவே, ஒத்த தருப்பண நீர்க்கொடையையுடையவர்). அங்ஙனம் மனுவுங் கூறினர். మనుః॥ "త్ర్యహాత్తూదకదాయినః" = நீரிணைக்கொடுப்போர் தருப்பணம் செய்வோர் மூன்றுநாளிற் சுத்தராவர் என்று. பத்திரவு ஆசூசமுள்ளதென்று மேற்கூறிய தக்ஷ தேவல வசிட்டவுரைகள் சபிண்டஞாதியரைக் குறித்தது. "దశాహం శావమాశౌచం సపిండేషు విధీయతే" சபிண்ட ஞாதியரிடத்துச் சாத்தீட்டுப்பத்திரவி லொழியத்தக்கதென விதிக்கப்படுவதென்று மனுமொழி கூறியது.

கூர்மபுராணம். కూర్మపురాణేపి॥ "దశాహం శావమాశౌచం సపిండేషు విపశ్చితః" சபிண்டஞாதியரிடத்து மரண ஆசூசம் அறிவுடையோனுக்குப் பத்திரவு. எ-று.

பிரகற்பதியும். బృహస్పతిరపి॥ "దశాహేన సపిండాస్తు శుద్ధ్యంతి ప్రేతసూతకే। త్రిరాత్రేణ సకుల్యాస్తు స్నాత్వా శుద్ధ్యంతి గోత్రజాః" = பிரேத சூதகத்தில் சபிண்டஞாதியர் பத்திரவினுல் சுத்தியடைகின்றனர். சகுல்வியஞாதியர் மூன்றிரவினுற் சுத்தியடைகின்றனர். கோத்திரஞாதியர் நீராடிச்சுத்தம் பெறுகின்றனர். எ-று.

(தன்கோத்திரத்துத் தன்னைத்தொட்டு எழுதலைமுறைவரையிலும் சபிண்டஞாதியர் என்னப்படுவர். அவரைக்குறித்துத்தன்னேடு ஒத்தசபிண்ட ஞாதியர்க்குத்தன்போலவே பத்துநாளில் ஆசூசமொழிந்து சுத்தமாகின்றது. எழுதலைமுறைக்குப்பின்மறு

படியும் எழுதலைமுறைவரையில் சகுல்யஞாதியர் என்னப்படுவர். அவரையே சமானோதகர்எனவும் கூறுப. அவர் பால்மூன்றிரவில் ஆசௌசமொழிகின்றது. பின்னர் எத்தனை நாளாயினும் கோத்திரஞாதியராகவே யிருக்கின்றனர். அவர்நீராட லொன்றினுனே சுத்தராகின்றனர். இவ்வண்ணம் சபிண்டஞாதியர், சகுல்யஞாதியர், சகோத்திரஞாதியர் என்னும் இம்மூவகையாருக்கும் முறையே பத்திரவுசூதகம், மூன்றிராத்திரி சூதகம், நீராடும் ஆசௌசம் என்னுமிவைநூல்களி னுடம்பாடானவை, இன்றும் வழக்கினுள்ளன. இவற்றுள் சகுல்யரைக்குறித்த மூன்றிரவின் சூதகத்தை யிங்குப் பராசரனுர் கூறினர். சபிண்டரைப் பற்றித்தசராத்திரிஆசௌசத்தினை தக்ஷர்முதலியோர் கூறினர்என்ற கருத்தினை விளக்குதலினுல் பராசரமொழிக்குப்பலமிருதி மாறுபாடில்லையெனச் சித்தாந்தம் கூறியவாருகக் கருத்தாகின்றது. சபிண்ட விசாரத்தினை விவாகவிதியில் முன்னரோ கூறப்பட்டுள்ளது).

பூருவபக்கம்.

ஆயின். "क्षत्रो द्वादशाहेन" = வேந்தன் பன்னிருநாளிற் சுத்தனுகின்முன். என்ற இப்பராசரமொழியும் பலமிருதிக்குமாறுபடுகின்றது. எங்ஙனமெனில் மேற்கூறிய வசிட்டமொழியிலும் தேவலமொழியிலும் அவ்வரசனுக்குப் பதினோந்துநாள் ஆசௌசம் கூறப்பட்டுள்ளது. இதுவுமன்றி.

சாதாதபர் அரசனுக்குப் பதினொருநாளில் சுத்தம்கூறினர். शातातपः॥ "एकादशाहाद्राजन्यो वैश्यो द्वादशभिस्तथा। शूद्रो विंशतिरात्रेण शुध्यते मृतसूतके" = பிரேதசூதகத்தில் அரசன் பதினொருநாளிலும், வைசியன் பன்னிருநாளிலும் சூத்திரன் இருபதுநாளிலும் சுத்தமடைகின்முன். எ-று.

விருத்தபராசரரும். वृद्धपराशरोऽपि॥ "क्षत्रियस्तु दशाहेन स्वकर्मनिरतः शुचिः। तथैव द्वादशाहेन वैश्यः शुद्धिमवाप्नुयात्" = தன்னுடைய வருணாச்சிரமங்களுக்குத் தக்ககருமத்தில் தவறாதுள்ள வேந்தனையின் பத்திரவினுலே சுத்தனுகின்முன். அவ்வாறே வேளாண்மக்களும் பன்னிரு நாளினுற் சுத்தம் பெறுவர். என்ற தென்னையெனின்.

சித்தாந்தம்.

ஈண்டுகூறுதும். வித்தை (அறிவு) தவம் (அனுட்டானம்) இவற்றின் ஏற்றக்குறைவு பாடுகளால் மாறுபாட்டினுக்கு உடன் பாடு செய்து கொள்ளற்பாற்று. எங்ஙனமெனில், வித்தையுந்தவ மும்எத்துணை யெத்துணைமேவிடுகின்றனவோ அத்துணை ஆசௌசம் குறைவுபடுகின்றது. இதுஆசௌச சுத்திவிடயத் துள்ள நியாயமாம். அதனானே, யாஞ்ஞவற்கியர், மரபுதவமுற்ற சூத்திரனுக்கும் கூறப்பட்ட ஆசௌசத்துட் பாதிபோதும் என்றுதவத்தகுதி பற்றி யாசௌசத்தைக் குறைத்தொழித்தனர்.

యాజ్ఞవల్క్యః॥ “క్షత్రస్య ద్వాదశాహాని విశః పంచదశైవతు। త్రింశద్దినాని శూద్రస్య తదర్ధం న్యాయవర్తినః” = வேந்தனுக்குப் பன்னிருநாளாசௌசம், வைசியன் பதினைந்துதினம், சூத்திரனுக்கு முப்பதுநாள் விதிக்கப் பட்டன. ஆயின் வழக்கிழுக்காது நடப்போனுக்கு அதிற் பாதி போதும். எ-று.

தேவலரும் இக்கருத்தானே வேதியர் முதலியோர்க்கு ஆசௌசத்தினைக் குறித்த ஏற்றக்குறைவு பாடுகளைக் கூறினர். దేవలః॥ “చత్వార్యధీతవేదానా మహాన్యాశౌచమిష్యతే। వేదాగ్నియుక్తవిప్రస్య త్ర్యహమాశౌచమిష్యతే। ఏతాభ్యాం శ్రుతయుక్తస్య దినమేకం విధీయతే। ఏతైస్సాకం కర్మయుక్త స్సద్యశ్శుచి రసంశయః। ఏతైర్యుక్తస్య రాజ్ఞస్తు ద్వాదశైకాదశా దశ। వైశ్యస్యైవం పంచదశ ద్వాదశైకాదశక్రమాత్। అర్ధమాసం తు శుశ్రూషోః శూద్రస్యాశౌచమిష్యతే” = வேதத்தினை ஓதியவர்க்கு நான்குபகலே ஆசௌசமாமென் றுடன்படப் பட்டது. வேதமோதி வேள்வித்தீக்கருமம் புரிந்தொழுகும் வேதியனுக்குமூன்றுநாளே சூதகமாம். இவ்விரண்டாலுங்கூடிய சுரோத்திரியனுக்கு ஒருநாள் விதிக்கப்படுகின்றது. அம்மூன்றும் நிரம்பியவனாய் ஒழுக்கஞ் சிறந்தோனாய் ஐயமற்றவனுக்கு அப்பொழுதேசுத்தியாம். இத்துணையும் வேதியர்விடயம். (ஓதியவன் ஒருவன் முதலாவான், ஓதியொழுக்கத்தினையும் உடையவன் இரண்டாவான், ஓதிய வொழுக்கத்தோடு அறிவினையுமுடையவன் மூன்றாவான், ஓதி யொழுகியறிவறிந்து ஐயமற்றவன் நாலாவான் இந் நான்குவகுப்பும் வேதியர்க்குள்ளன. ஏனையவிருவர்க்கு நாலாம் வகுப்பொழிய மற்றையமூன்று வகுப்புமுள்ளன என்பது ஈண்டையகருத்து. அவற்றுள் வகுப்பு முறைப்படியே வேதியனுக்கு

நாட்கள் நான்கு, மூன்று, ஒன்று, நீராடும் வரையில் என்று விதிக்கப்பட்டன.) வேந்தனுக்கானலோ? பன்னிரண்டு, பதினொன்று, பத்து. வேளாண்மாக்களுக்கோவெனில், பதினைந்து, பன்னிரண்டு, பதினொன்று. உத்தமவருணத்தர் பணிபுரியும் சூத்திரனுக்காயினோ? அரைத்திங்கள் (பதினைந்துநாள்) ஆசூசம் என்றுடன்படப்பட்டன. எ-று.

எவை, வேந்தன் முதலியோர்க்குப் பதினைந்துநாள் முதலிய ஆசூசங்கள் அவராற் கூறப்பட்டனவோ அவை, வித்தை தவமில்லாதாரைப்பற்றிக்கூறியது. எனெனில்? "ప్రాకృతానాంతువర్ణా నామాశౌచంసంప్రకీర్తితం" = வருணங்களில் மூடராயினோர்க்கு இந்தவாசூசங்கூறப்பட்டதென்று புறனடையால் உணரப்படுதலின்.

மரணாசூச வகைமை.

தக்ஷரும் பத்து வகையினை யெடுத்துக்கூறிக் குணங்களினேற்றக் குறைவினை வகுத்து விளக்கினர். దక్షః॥ "సద్యశ్శౌచంత థైకాహం త్ర్యహంచతురహంతథా। షడ్దశద్వాదశాహంచ పక్షోమాసస్తథైవచ। మర ణాంతంతథాచాన్య ద్దశపక్షాస్తుసూతకే" = அப்பொழுதே சுத்தமாதல், ஒருநாள், மூன்றுநாள், நான்குநாள், ஆறுநாள், பத்துநாள், பன்னிருநாள், ஒருபக்ஷம், ஒருதிங்கள், சாந்துணையும், அவ்வாறே யேனையவும் சூதகத்தில் இப்பத்துவகையுமுண்டாயிருக்கின்றன. எ-று.

தக்ஷர். దక్షః॥ "ఉపన్యాసక్రమేణైవ వేదస్యాధ్యయనం ద్విజః। మంత్రార్థంయో జానాతి వేదమంత్రైస్సమన్వితం। సకల్పంసరహస్యంచ క్రియావాంశ్చేన్నసూతకం" = அங்கங்களோடு வேதத்தினையும், அவற்றின் மந்திரங்களையும், அவற்றின் பொருளினையும், அவற்றினைச் செலுத்தும் வகைமையினையும், அவற்றினிரகசியங்களையும் யார்நன்குணர்ந்து நிரம்பிய கிரியானுட்டான முடையவனாகி விருப்பனோ அவனுக்கு ஆசூசமில்லை. எ-று.

இதுவுமது. "రాజర్త్విగ్దీక్షితానాంచ బాలదేశాంతరేతథా। వ్రతినాంసత్త్రి ణాంచైవ సద్యశ్శౌచంవిధీయతే" = அரசனுக்கும் இருத்துவிக்குகட்கும், தீக்ஷிதர்கட்கும், சிறுவர்க்கும், வேறுதேயஞ் சென்று தூரத்திருப்பவருக்கும், விரதநியமமுடையவர்க்கும், சத்திரயாகமுடை

யவருக்கும், அப்பொழுதே யாசூசம்வந்து அந்தக்கணமே சுத்தமாம். எ-று.

இதுவுமது. " ఏకాహాచ్ఛుధ్యతేవిప్రో యోఽగ్నివేదసమన్వితః " = எவ் வேதியன் வேள்வித்தீயினை அனுட்டிப்பவனும் வேதமோதுபவனும் இருப்பனோ அவன் ஒருதினத்தினாலே சுத்தனாகின்றான். எ-று.

இதுவுமது. " హీనేహీనతరేచాపి త్ర్యహశ్చతురహస్తథా। తథాహీనతమే చైవషడహఃపరికీర్తితః" = ஒருதினத்திற்றானே சுத்தனாதத்தக்க வேதியனிலும்சிறிதுதகுதிகுறைவு பட்டோனுக்கு மூன்றினாளினாற்சுத்தியுண்டாம். அவனிலும்குறைந்தோனுக்குநான்குநாளிற்சுத்தமுண்டாம். அவனிற் குறைந் தோனுக்கு ஆறுநாளிற்சுத்தி கூறப்பட்டது. எ-று.

இதுவுமது. "యేదశాహాదయఃప్రోక్తా వర్ణానాంయథాక్రమం "= நான்குவருணங்களிலும் யார்க்குப்பத்து நாண்முதலிய ஆசூசகாலங்கள் கூறப்பட்டுள்ளனவோ அவர்களுக்கு முறைப்படி தகுதிமுதலிய ஏற்றத்தாழ்வு களைப்பற்றி ஆசூசத்தின் மிகுதிகுறைகள் விதிக்கப்பட்டன. எ-று.

இதுவுமது. "అస్నాత్వాచాప్యహుత్వాచ అదత్వాశ్నంస్తథాద్విజః। ఏవం విధస్యవిప్రస్య సర్వదాసూతకంభవేత్" = இருபிறப்பாளன் ஆசூசமறிந்த பின்நீராடாது, ஹோமம்செய்யாது, தானஞ்செய்யாது, உண்டானயின் அப்படிப்பட்ட இருபிறப்பனுக்கு எப்பொழுதும் சூதகமேயாம். எ-று.

ஆசூச சித்தாந்தம்.

ஈண்டு, "చత్వార్యధీతవేదానాం"என்றதுமுதலியவாகஇதுகாறுங் கூறப்பட்ட மொழிகளால் ஆசூசத்தினைக் குறைத்திருப்பதுவேறு யுகவிடயமன்றி இக்கலியுகத்தில் தக்கபடியன்று. ஏனெனில்?

"వృత్తస్వాధ్యాయసాపేక్షమఘసంకోచనంతథా" = ஒழுக்கத் தினையும் கல்வியையும்பற்றி அதற்குத்தக்கபடி ஆசூசபாவங்களைக் குறைத்தல்வேண்டுமென்பது முதலியவற்றினை முறையேகூறி "కలౌ యుగేత్విమాన్ధర్మాన్వర్జ్యానాహుర్మనీషిణః " = கலியுகத்திலித்தருமங்களை

விட்டுவிடத்தக்க தென்று அறிவுடையோர் கூறுவர். என்றபலமிருதியில்கலியொழிப்புமுன்னமே கூறப்பட்டதனால். "దశాహేనైవ శుధ్యన్తి సపిండమరణే ద్విజాః। కల్పాంతరాణి కుర్వాణః కలౌ వ్యామోహపాతకీ"=சபிண்டஞாதிமரணமடைந்தால்வேதியனுக்குப்பத்துநாளேசூதகம்.வேறு கற்பங்களை அனுட்டித்தால் கலியுகத்தில் அறியாமலே பாவத்தை யடைந்தவனாகின்றான். என்று ஹாரீத மொழியு முள்ளதனாலும்.

சொல்லப்பட்ட விவ்வகையால் க்ஷத்திரியனுக்கும் வைசியனுக்கும் ஏனையமொழிகளால் உண்டாகும் குற்றத்தினை ஒழித்தல் வேண்டும். அங்ஙனமாயினும், வேதியனுக்குச் சமானோதக ஞாதியர்விடயத்தில் மூன்றுதினமும், சபிண்ட ஞாதியிடத்தில் பத்துநாளும், வேந்தன்முதலி யோர்க்குப்பன்னிரு நாள்முதலியவுமாக மூலமொழியில் எது கூறப்பட்டதோ அது ஒத்துள்ளதென்று உடன்படப்பட்டது.

ஆயின், வேந்தனுக்குப் பதினைந்துநாள், வைசியனுக்குஇருபதுநாள் என்று கூறப்பட்டிருத்தலின், க்ஷத்திரியனுக்குப் பன்னிருநாள், வேளாண்மாந்தர்க்குப் பதினைந்துநாள் என்றுவிதித்த மொழி ஆசௌசத்தைக் குறைத் திருத்தலினால் மாறுகோடலை யொழிக்கு மாறெங்ஙனமெனில்? குறைவாக ஆசௌசத்தினைக்கூறிய மொழி நற்குணஞ்சிறந்தோர்க்குப் பாவங்குறைவு என்றகருத்தினாற்கூறப்பட்டது. அவ்வாறேதேவலரும் குணமுடையாருக்கு ஆசௌசம் குறைக்கப்படுமென்று கூறியுள்ளனர். என்றவினாவுக்கு இடனுண்டாம்.

ஆயினும், சிட்டராகிய சான்றோர் ஒழுக்கமும், சிறந்துள்ள பலபலமிருதிகள் விதித்தலாலும் பெரியராயினர் விதித்து வகுத்தமையாலும் க்ஷத்திரியனுக்கும், வேளாண்டொழிலனுக்கும் இப்பாராசர மூலமொழியுட் கூறப்பட்டுள்ளனவே சிறந்தகற்பம் என்றுசித்தாந்தப் படுத்துகின்றோம். அதனானே, மனுமிருதி, கூர்மபுராணம், தக்ஷமிருதி, இம்மூன்றினும் ஒரேமொழியாகக் கூறப்பட்டுள்ளன. మనుస్మృతౌ॥ "శుధ్యేద్విప్రో దశాహేన ద్వాదశాహేన భూమిపః। వైశ్యః పంచదశాహేన శూద్రో మాసేన శుధ్యతి"=வேதியன் பத்துநாளாலும், அரசன் பன்னிருநாளாலும், வேளாண்மாந்தர் பதினைந்துநாளாலும், சூத்திரன் ஒருதிங்களாலும் சுத்தராகின்றனர். உ-று.

மார்க்கண்டேயரும். మార్కండేయః॥దశాహంబ్రాహ్మణస్తిష్ఠేజ్జపహోమాదివర్జితః। క్షత్రియోద్వాదశాహంతు వైశ్యోమాసార్థమేవచ। శూద్రస్తుమాసమాసీత నిజకర్మవివర్జితః" = வேதியன் செபத்தினையும் ஹோமத் தினையும் விடுத்துப்பத்துநா ளிருக்கவேண்டும். வேந்தன் பன்னிருநாள், வேளாண்டலைவன் அரைத்திங்கள். சூத்திரன் ஒருதிங்கள் தங் கருமத்தினை விட்டிருக்கக்கடவர். எ-று.

பிரகற்பதியும். బృహస్పతిః॥ "క్షత్రియోద్వాదశాహేన శుధ్యతేమృత సూతకే।వైశ్యఃపంచదశాహేన శూద్రోమాసేనశుధ్యతి" = வேந்தன் பன்னிரு நாளினால் மரணசூதகத்துச் சுத்தனவன். வேளாண் மைந்தன் பதினைந்து தினத்தாலும், சூத்திரன் ஒரு திங்களாலும் சுத்தம் பெறுவர். எ-று.

விஷ்ணுவும். విష్ణుః॥ బ్రాహ్మణస్యసపిండానాం జననమరణయోర్దశాహ మాశౌచం ద్వాదశాహంరాజన్యస్యపంచదశాహంవైశ్యస్య మాసశ్శూద్రస్య" = சபிண்டஞாதியர் பிறக்கினும் இறக்கினும் வேதியனுக்குப் பத்து நாள், அரசனுக்குப் பன்னிருநாள், வேளாண்டொழிலனுக்குப் பதினைந்துநாள், சூத்திரனுக்கு முப்பதுநாள், சூதககாலமாக விருக்கின்றது. எ-று.

வேந்தனுக்குப் பதினைந்துநாள், வைசியனுக்கு இருபது நாள் என்று கூறிய தேவல வசிட்ட மொழிகளும், உயிருள்ள வரையிலும் சூதகத்தைக்கூறும் தக்ஷமொழிபோலும் ஆசூசம் கெட்டது என்னும் பழிமொழியில் கருத்தினவாயினுமாக, வேறு யுகங்களி லென்றாயினுமாக அவற்றிற்கு உரை கூறவேண்டும்.

"పరాశరవచోయథా" = பராசரர் மொழியெவ்வாறோ, என்ற மூலமொழியில் பராசரர் தம்மதங்கூறிப்பிறர் மதத்தினும் பாவத் தினைக் குறைத்தும் ஏற்றியும்வரும் சூதக ஏற்றக்குறைவுமொழிக ளுள்ளனவென்று குறிப்பித்தனர். அம்மொழிகளெல்லாம் எம் மால் விளக்கஞ் செய்யப்பட்டன.

ஆசூசத்தில், சந்தியாவந்தன முதலியவற்றின் விதி.

మా॥ ఉపాసనేతువిప్రాణా మంగశుద్ధిశ్చజాయతే॥

என்பது, மேற்கூறிய மார்க்கண்டேய மொழியுள் ஆசூச காலத்துட் செபம் வேள்விமுதலிய கரும மாகாதென்று விளக்

கப்பட்டது. அந்த ஆசூசம் கருமவுரிமைக்கு மாறு கோடலே யுடைய தாமாகலின், சூதகமுடையவன் சந்தியாவந்தனமும், வேள்வித் தீக்கருமமும் விட வேண்டுமென்று மேல்வினு வந்தவழி அதற்குச் சித்தாந்தமாம்படி பிறிது விதி கூறுகின்றது.

இ-ள். வேதியர்க்கு அனுட்டானத்தில் அங்கசுத்தியுண்டாகின்றது. எ-று.

"ఉపాసనం"—என்பது, சந்தியாவந்தனம். தீக்காரியம் முதலிய நித்தகரும அனுட்டானங்களாம். அதனைச்செய்யவேண்டும் வழி, அப்போதைக்கு மாத்திரம் உடம்புச்சுத்தம் உண்டாகின்றது. அவ்வாறு கோபிலரும் கூறினர். గోభిలః॥ "అగ్నిహోత్రాది హోమార్థం శుద్ధిస్తాత్కాలికీస్మృతా। పంచయజ్ఞాన్నకుర్వీతహ్యశుద్ధఃపునరేవసః"—தீக்காரிய முதலிய ஹோமத்தின் பொருட்டு அப்போதைக்கே தக்க சுத்திகூறப்பட்டது. அதனைச் செய்து முடித்தபின் மீட்டும் அவன் அசுத்தனேயாவன். ஆதலின் ஐம்பெரும்வேள்வி செய்யலாகாது. எத்துணைக்காலம் தீக்காரியஞ் செய்து முடித்தற்கு வேண்டுமோ அத்துணைக்காலமே அவனுக்குச் சுத்தமாமன்றி மேலில்லை.

புலத்தியரும் கூறினர். పులస్త్యః॥ "సంధ్యామిష్టించరుం హోమం యావజ్జీవంసమాచరేత్। నత్యజేత్సూతకేవాపిత్యజన్గచ్ఛత్యధోద్విజః। సూతకేమృతకేచైవసంధ్యాకర్మనసంత్యజేత్। మనసోచ్చారయేన్మంత్రాన్ప్రాణాయామమృతేద్విజః"—காலை மாலை வந்தனம், வேள்விக்கருமம், சரு, ஹோமம், இவற்றினைப் பிழைத்திருக்கும் வரையில் அனுட்டிக்கவேண்டும். விடலாகாது, பிறந்த சூதகத்திலாயினும் இறந்த தீட்டிலாயினும் விட்டுவிட்ட இருபிறப்பன் அதோ கதிக்குச்செல்வன். இருபிறப்பாளன், பிறந்த தீட்டிலும் இறந்த தீட்டிலும் சந்தியாவந்தன கருமத்தினை விடலாகாது. எனவே, பிராணயாமமொழியமந்திரங்களை மனத்துள்ளேதானே உச்சரிக்கவேண்டுவது. எ-று. காண்க.

அருக்கியங்களை யிருகையாலும் கொடுக்கும்போதாயின், மந்திரங்களை வாயாரவிளங்கக் கூறவேண்டுமென்னுங் கருத்தோடு பைட்டீநசி கூறினர். పైఠీనసిః॥ "సూతకేసావిత్ర్యాంజలిం ప్రక్షిప్యప్రదక్షిణం కృత్వాసూర్యంధ్యాయన్నమస్కుర్యాత్"—ஆசூசகாலத்தில் சாவித்திரி மந்திரத்தால் அருக்கியாஞ்சலியை மேலிறைத்து வலம்வந்துசூரிய

தினைத்தியானித்து வணங்கவேண்டும். எ-று. மனத்துள் உச்சரிப்பது நீராமேற்றெளித்துக்கொள்ளும் மந்திரங்களில் நேரிடுகின்றது. அருக்கியத்தில் விசேடவிதியால் வாசகமந்திரபடனமென்று கருத்தாகின்றது.

ஆயின், "ఉభయత్రదశాహాని కులాస్యాన్నంనభుంజతే। దానంప్రతిగ్రహోహోమ స్స్వాధ్యాయశ్చనివర్తతే" = இருவகைத்தீட்டிலும் குலத்துட் பிறந்தார் பத்துநாள் சோறுண்ணுதலைச் செய்யார். தானம், தானமேற்றல், வேள்வி, வேதமோதலும் விட்டொழியும், என்று மனுவால் கூறப்பட்டுள்ளது.ஸ்மார்த்த கருமத்துள் வைசுவதேவ முதலியவற்றைப் பற்றினது. அதனை ஜாதுகண்ணர் கூறினர், జాతుకర్ణః॥ "పంచయజ్ఞవిధానంచ నకుర్యాన్మృత్యుజన్మనోః" = இறக்கினும்பிறக்கினும் ஐம்பெரும் வேள்வியைச் செய்யலாகாது. எ-று.

ஆயினும், "సంధ్యాకర్మమహాయజ్ఞ నైత్యకంస్మృతికర్మచ। తన్మధ్యేహాపయే దేవ మాశౌచాంతేహితత్క్రియా" = சந்தியாவந்தனம், ஐம்பெரும் வேள்வி, ஸ்மார்த்தமாகிய நித்தகருமம் இவைகளை யெல்லாம் சூதகத்தின்னடுவேவிட்டுவிடவேண்டுவதே அந்தச்சூதகமொழிந்தபின்பு அக்கிரியை யெல்லாம் செய்யத்தகும். என்று சாபாலி மொழியிருத்தலால் ஆசூசகாலத்தில் சந்திமுதலிய நித்தகருமங்களையெவ்வாறு செய்யலாமெனில்?

அம்மொழியால் உணரவரும் விலக்கு,வாயினாற் கூறத்தக்க மந்திரமுடைய சந்தியாவந்தனத்தைக் குறித்தது. ஆதலால், மனத்துள்ளே மந்திரத்தைச்சிந்தித்துச் செய்யுஞ் சந்தியாவந்தனத்தைப் பற்றியதல்ல. ஸ்மார்த்தநித்தகருமங்கூடாதென்ற விலக்கானுலோதான்னேரோ செய்தலைக்குறித்தது. ஆதலின் வேறொருவனால் செய்விப்பதற்குத் தடையாவதல்ல. அங்ஙனம் பிரகற்பதி கூறினர். బృహస్పతిః॥ "సూతకేమృతకేచైవ హ్యశక్తౌశ్రాద్ధభోజనే। ప్రవాసాదినిమిత్తేషు హావయేన్నతుహాపయేత్" = பிறந்த தீட்டிலும், இறந்ததீட்டிலும், தேகத்திற்கு வலிமை குறைவு நேர்ந்தபோதும், சிராத்தத்தின் பொருட்டு நிமித்திரனையுண்டிருக்கும் பொழுதும், வேற்றிடஞ் சென்றிருத்தல் முதலிய நிமித்தத்திலும் ஓமம்செய்விக்கவேண்டுமேயன்றி விட்டுவிடலாகாது. எ-று.

சாதூகண்ணரும், జాతుకర్ణః॥ "సూతకేతుసముత్పన్నే స్మార్తంకర్మకథంభవేత్। పిండయజ్ఞంచరుంహోమ మసగోత్రేణకారయేత్" = ஆசுசம் வந்த வழி ஸ்மார்த்தகருமம் எவ்வாறும்? எனில், பிண்டவேள்வியும், சருவும், ஹோமமும், வேறு கோத்திரத்தாரால் செய்வித்தல் வேண்டும். எ-று. மூலமொழியுள், விப்பிரனென்று கூறிய சொல் லின் உபலக்கணத்தால் அரசர் முதலியோருமெனப் பொருள் கொள்க. (உ௭)

சூதகத்துள் பரிசித்தலும் பரிசிக்காமையும்.

సూ॥ జాతీనాంప్రసూతౌతు దేహస్పర్శోవిధీయతే. ॥౭॥

என்பது. கருமவுரிமையறுதல், தொடத்தகாவனாதல் என் னுமிருவகை யாசுசமும்பிறந்த நிட்டிலும் சுத்தமுண்டாமென் பதனை உணர்த்துகின்றது.

(இ-ள்.) பிறந்தநிட்டில் வேதியர்க்கு உடம்பைத்தொடுவது விதிக்கப்படுகின்றது. எ-று.

பிறந்த நிட்டில், சபிண்ட ஞாதியர்க்கு எல்லாக்காலத்தும் உடம்பைத்தொடுதல் கூடும். இறந்த நிட்டில் கருமகாலத்துள் மாத்திரம்போலவல்ல. அதனுனே. அங்கிரசு கூறினர். అంగిరాః॥ "సూతకేసూతికావర్జం సంస్పర్శోననిషిధ్యతే। సంస్పృశ్యసూతికాయాస్తు స్నానమేవవిధీయతే" = பிறந்தநிட்டில், மகவைப் பெற்றமாதொழிய ஏனைய சூதகத்தினரைத் தொடலாகாதென்னும் விலக்கிலலே. மகப்பெற் றிருக்கும் மாதினைத்தொட்டால் நீராடலேசெய்யவேண்டும் எறு. காண்க.

கூர்மபுராணம். కూర్మపురాణే॥ "సూతకేతుసపిండానాం సంస్పర్శోనైవదుష్యతి" = பிறந்தநிட்டில் சபிண்டஞாதியரைத் தொட்டாற்குற்ற மில்லை. எறு.

பைட்டீநசி. పైఠీనసిః॥ "జననేసపిండాశ్శుచయో మాతాపిత్రోస్తుసూతకం। సూతకంమాతురేవస్యా దుపస్పృశ్యపితాశుచిః" = பிறந்தவளவில் சபிண்ட ஞாதியர் சுத்தமுடையவராகவே யிருக்கின்றனர். தாய் தந்தை யர்க்காயின் ஆசுச முள்ளது. அவருள் தாய்க்கே ஆசுசம். தந்

தைநீராடிச் சுத்தனுகின்றான். எ-று. எனவே பிறந்த தீட்டில் தாய் தந்தையரையொழியச் சபிண்ட ஞாதியரனைவரும் தொடத் தக்கவராக விருக்கின்றனர். தாய்தந்தையர் தொடற்பாலரல்லர். அவருள்ளும் தந்தைநீராடலாற் றொடத்தக்கவனுகின்றான். தாய் பத்துநாள் தொடத்தக்கவளல்லள்.

அதனைவசிட்டர் கூறினர். వశిష్ఠః॥ "నాశౌచంవిద్యతేపుంస స్సంసర్గం చెన్నగచ్ఛతి। రజస్తత్రాశుచిజ్ఞేయం తచ్చపుంసినవిద్యతె" = சம்பந்தமில்லாவழி புருடனுக்கு ஆசூசமில்லை. அவ்விடத்து, இரஜசுவே அசுத்த மென்றுணரற்பாலது. அது ஆண்மகனிடத்தில்லை. எ-று. இரஜசு சோணிதம்.

சம்வர்த்தர். సంవర్తః॥ "జాతేపుత్రేపితుస్స్నానం సచేలంతువిధీయతె। మాతాశుధ్యేద్దశాహేన స్నానాత్తుస్పర్శనంపితుః" = மகன் பிறந்தால் பிதாதரித்த ஆடையோடு நீராடவேண்டும். நீராடலாற்றந்தைக்குத் தொடுந் தகுதியுண்டாம். தாய் பத்துநாளானபின் நீராடலாற் சுத்தமுறு வள். எ-று. (௯)

பிறந்ததீட்டின்சுத்தி.

మూ॥ "జాతేవిప్రోదశాహేన ద్వాదశాహేనభూమిపః
వైశ్యఃపంచదశాహేన శూద్రోమాసేనశుధ్యతి. ॥౪॥

என்பது. இறந்த சூதகத்தில் வருணமுறைப்படி சுத்திகூறி யவாறு, பிறந்தசூதகத்தும் வருணமுறைப்படி சுத்திகூறுகின்றது.

இ-ள். பிறந்ததீட்டில் வேதியன் பத்துநாளாலும், அரசன் பன்னிருநாளாலும், வைசியன் பதினைந்து நாளாலும், சூத்திரன் திங்களாலும் சுத்தராவர். எ-று.

"జాతె" = பிறந்ததில். ஏனையவெளி.

இந்தச்சுத்தி கருமாதிகாரியைப்பற்றியது. ஏனெனில் மேற் கூறியமொழியால் தொடுபவனைப்பற்றிய சுத்தி குறிக்கப்பட்டது ஆகலின்.

மகப்பிறந்தநாள்தீட்டியல்.

பிறந்தநாளில், கொடை முதலியவற்றுள் அசுத்தமில்லை, மனு. మనుః॥ "జాతెకుమారేతదహని కామంకుర్యాత్ప్రతిగ్రహమ్। హిరణ్యధాన్యగో

నాహ స్త్రీణాంగుడసర్పిషః"=புதல்வன் பிறந்தபோது, அந்தத்தந்தை யிடத்து எனையவேதியர் அன்றையபகலில் பொன், நெல்வகை, பசு. ஆடை, எள், வெல்லம், நெய், இந்தத்தானங்களில் வேண்டு வதைப் பெறலாம். எ-று.

சங்கலிகிதர். శంఖలిఖితౌ॥ "కుమారప్రసవేనాభ్యామచ్ఛిన్నాయాంగుడతి లలవణవస్త్రహిరణ్యప్రావరణధాన్యానాం ప్రతిగ్రహోప్యదోషస్తదహరిత్యేకే" = மக னைப் பெற்றபோது, தொப்புட்கொடி யறுப்பதன்முன் வெல் லம், எள், உப்பு, ஆடை, பொன், போர்வையாடை, தானியம், இவைகளைப் பெற்றுக்கொண்டாற் குற்றமில்லை. அன்றையபகலி லுள் என்று சிலர் கூறுவர். எ-று.

விருத்த யாஞ்ஞவற்கியர். వృద్ధయాజ్ఞవల్క్యః॥ "కుమారజన్మదివసే విప్రైః కార్యః ప్రతిగ్రహః। హిరణ్యభూగవాశ్వాజ వాసశ్శయ్యాసనాదిషు। తత్రస ర్వంప్రతిగ్రాహ్యం కృతాన్నంతు నభక్షయేత్। భక్షయిత్వాతు తన్మోహాద్ద్విజశ్చాంద్రా యణంచరేత్" = பிள்ளைபிறந்த தினத்தில் மற்றையவேதியர் தானம் வாங்கத்தன, பொன், நிலம், யானை, குதிரை, ஆடை, படுக்கை, ஆசனம், முதலிய எல்லாமுமாம். சமைத்தசோற்றினை மாத் திரம் உண்ணலாகாது. அறிவின்மையால் அதனையுண்டால் இரு பிறப்பன் சாந்திராயண விரதத்தினைச் செய்தல்வேண்டும். எ-று.

போதாயனர். బోధాయనః॥ "గుడతైలహిరణ్యానాం గోధాన్యానాంచవా ససాం। తస్మిన్నహనిదానేన విప్రైః కార్యః ప్రతిగ్రహః। ప్రాఙ్నాభిచ్ఛేదనాద్గ్రాహ్యమిత్యేతా న్యిత్యపరేజగుః" = வெல்லம், எண்ணெய், பொன், ஆனிரை, நெல்வரு க்கம், ஆடை இவைகளைப் பிள்ளைபிறந்த பகலிற்றனே தானஞ் செய்யவேண்டும். மற்றையவேதியர்கள் அதனைப் பெறலாம், தொப்புளறுப்பதற்கு முன்பு அவற்றைப் பெற்றுக்கொள்ளலா மென்று சிலர் கூறினர். எ-று.

பிறந்ததிட்டின் சுத்திக்கெய்தியதன்மேற் சிறப்பு.

"జన్మదాః" = பிறப்பைத் தருவது. என்னும் பெயரினையு டைய, அச்சூதகமனைக்கபிமானிதேவதைகளை ஒன்று, ஆறு, பத்து, என்ற நாட்களில் பூசிப்பதற்கு அசுத்தமில்லை என்பதனை வியாசர் கூறினர். వ్యాసః॥ "సూతికావాసనిలయా జన్మదానామదేవతాః। తా సాంయాగనిమిత్తంతు శుద్ధిర్జన్మనికీర్తితా। ప్రథమేదివసేషష్ఠేదశమేచైవసర్వదా। త్రిష్వే

తేషునకుర్వీత సూతకంపుత్రజన్మని ” = மகப்பெற்றமனையில், சன்மதை யென்னும் தெய்வம் உள்ளன. அவைகளின் பூசைப்பொருட்டு மூன்று, ஆறு, பத்தாவது நாட்களில் ஆண்மகவின் வீட்டாயின் ஆசுசமில்லையாம். எ-று.

மார்க்கண்டேயர். మార్కణ్డేయః॥ “రక్షణీయాంతథాషష్ఠీనిశాతత్ర విశేషతః। రాత్రౌజాగరణంకుర్యా జ్జన్మదానాంతథాబలిం। పురుషాశ్శస్త్రహస్తాశ్చ నృత్తగీతైశ్చయోషితః। రాత్రౌజాగరణంకుర్యు ర్దశమ్యాంచైవసూతకే” = பிறந்த வீட்டில் ஆறுநாள் காக்கவேண்டும். இரவில் உறங்காதிருத்தல்வேண்டும். ஆறு, பத்தாநாள் இரவில் ஆடல், பாடல் முதலியவற்றோடு மாதரும், ஆயுதங்களைத் தரித்து ஆடவர்களும் உறக்கத்தினை யொழித்துக் காத்தல்வேண்டும், சன்மதையென்னும் தெய்வத்திற்குப் பலி தரவேண்டும். எ-று.

ஆயின். “నాశౌచంసూతకేప్రోక్తంసపిండానాంక్రియావతాం” = கருமநிட்டராகிய சபிண்டஞாதியர்க்குப் பிறந்த சூதகமில்லையென்று ஆங்கிரசரால் கூறப்பட்டதே. எனில்? அது முன்னமே கூறப்பட்டுள்ள அக்கினிஹோத்திர முதலிய கருமஞ்செய்யுங் காலத்துண்மாத்திரம் சுத்தமுண்டாமென்றுவது, சன்மதை தேவதைகளுக்குப் பலிகொடுக்கும்போது ஆசௌச மில்லையென்றுவது கொண்டகருத்தோடு கூறியவா றுணரத்தக்கது. அங்ஙனமல்லாக்கால். “జాతౌఽవిప్రోక్షాశాహాన” என்ற இம்மூலமொழிக்கு விடயமில்லையாய் முடியும். (௪)

ஆசுசக்குறைவின்வகை.

మూ॥ ఏకాహాచ్ఛుధ్యతేవిప్రోయోఽగ్నివేదసమన్వితః।
త్ర్యహాత్కేవలవేదస్తుద్విహీనోదశభిర్దినైః. ॥౫॥

என்பது, கூறப்பட்ட பிரேதசூதகத்திற்கும் சிற்சிலவிடங்களில் நாட்சுருக்கங் கூறுகின்றது.

இ-ள். அக்கினிஹோத்திரத்தினோடும் வேதத்துடனும் கூடியிருக்கும் வேதியன் ஒருதினத்தினனே சுத்தனாகின்றான். வேதமொன்றனையே யுடையவன் மூன்றுநாளிற் சுத்தனவன். அவ்விரண்டுமில்லாதவன் பத்துநாளிற் சுத்தமடைகின்றான். எ-று.

ரண்டு. "అగ్ని" என்றமொழியால் ஆகவனீயம் முதலியன கொள்ளப்படுகின்றன. அவற்றால், அவற்றிற்கு உதவியாகிய தரிச வேள்வி, பூரணமாசவேள்வி முதலிய கருமம் உபலக்கணத்தாற் பெறப்படுகின்றன. "తద్ధీనః" தீ, வேதம், இவ்விரண்டாலும் குறைந்தவன்.

இந்தவாசுசச்சுருக்கம், வேதமோதும்போதுமந்தவுணர்ச்சியுடையவனுக்குப் பலஞாதிய ரிருந்தவழியும், பிழைப்புவகை சுருங்கியுள்ளவனுக்குத் தான மேற்றலிலும், கொள்ளத்தக்கது. அன்றி எல்லாருக்கும் எல்லாவழியிலும் அல்லவென்றுணர்க. அதனைக் கௌதமர் கூறினர். గౌతమః॥ "బ్రాహ్మణస్యస్వాధ్యాయానివృత్త్యర్థం" = வேதியனுக்கு வேதமோதல் தப்பாமையின் பொருட்டு. எறு. எனவே, வேதியனுக்கு முழுச்சூதகநாளையுடன் படும்வழி வேதமோதல் ஒழியும். அது கூடாதென்று "స్వాధ్యాయానివృత్త్యర్థం" என்று கூறப்பட்டது, "స్వాధ్యాయ" என்றமொழிதானம் வாங்குதற்கும் உபலக்கணமாகின்றது. அங்ஙன மல்லாக்கால், மறுநாள் பிழைக்கும்வகையற்றசுருக்கத் தொழிலாளனுக்குமுழுச் சூதகத்தைக் கொண்டால் பிழைப்பேயில்லையாம். இங்ஙனம்கூறியதால், ஒருநாளோடு சுத்தமாவது அடுத்த நாளிற் பிழைப்பில்லாதவனைக் குறித்தது. மூன்றுநாட் சூதகமென்பது மூன்றுநாளினவனைப்பற்றியது. பிழைப்புச்சுருக்க மில்லாதவனுக்கோவெனிற் பத்துநாட் சூதகமென்று துணிவுபடுகின்றது. இவ்வாறே கூறிய வகையால் மேல் தக்ஷமிருதியா லுணரப்படுகின்றனவாகிய, அப்பொழுதே யாசுசமொழிவது முதலிய பக்கங்களெல்லாம் விவகரித்துத் துணியத்தக்கன.

சீவனத்தொழிற்சுருக்கத்தால் சூதகச்சுருக்கத்தைச் சங்கிரககாரர்கூறினர். సంగ్రహకారః॥ "శిలోంఛాయాచవృత్తిభ్యాం సద్యశ్శుద్ధ్యేద్ద్విజోత్తమః" சிலவிருத்தி, உஞ்சவிருத்தி யிவைகளாற் பிழைத்துவரும் உத்தமவேதியன் அந்தப்பொழுதிற்றனே சுத்தனுவான். எறு.

ஆனல், அறிவுடையோன் விடயத்தில் இந்த சூதகச் சுருக்கம் ஏன் உடன்படலாகாது? "యోఽగ్నివేదసమన్వితః" = வேதத்தோடு கூடியவன் என்ற விசேடண மொழியினுற்றலால் அங்ஙன முடன்படலாமே எனில்? அங்ஙனமன்று. ஆசிரியர்கள் உடன்பட

வில்லை அன்றியும் வழக்கினுள்ளும் அவ்வாறில்லை. அல்லதூஉம், "దశాహం శావమాశౌచం సపిండేషువిధీయతే"=சபிண்டஞாதியர்க்குப் பத்திரவு மரணாசௌசமென்று மனுவாற்சிறப்புவிதி கூறப்பட்டுள்ளது.

ஆயின், அனைவர்க்கும் பொதுவாகவந்த பத்துநாளைய ஆசௌசத்திற்கு அறிவுடையோன் விடயத்தின்மாத்திரம் வாதையுண்டாகலாகாதாவெனின். அங்ஙனமும் வினவலாகாது. விதிக்கு வாதை யுண்டாகவேண்டுமாயின் அதற்குக் காரணமாகத் தடையிருத்தல் வேண்டும். எவ்வளவு பொருளினை வாதியாத வழித் தடையொழியாதோ அவ்வளவு பொருளினையன்றோ வாதித்தல் வேண்டும். ஈண்டு, வேதமோதலுக்கும், தானம் வாங்குவதற்கு மாத்திரம் வாதையில்லாதபடி பத்திரவு சூதகத்திற்கு வாதைகளைக் கூறி யதனானே ஒரு இரவின் சூதகத்தினை விதிப்பதற்கு நிலைமை தகுதியுள்ளனவாயிருத்தலின் ஒருநாள்முதலிய ஆசௌசவிதிக்குத் தடைதீர்க்கவேண்டிய கடனில்லாமையின் அனைவர்க்கும் எல்லாக்கருமத்திலும் பத்துநாட் சூதக விதிக்கு வாதை சொல்லவேண்டிய அவசியக மில்லையாயிற்று. "అగ్నివేదసమన్వితః"=தியோடும் வேதத்தோடும் கூடியவன் என்றமொழி அவ்வளவு தகுதியை யுடையவனா யிருப்பவனுக்கு நாளைய வுண்டிக்கு இல்லாத பக்கத்தில் விதிக்கவேண்டிய ஒருதினத்துச் சூதகம்விதிப்பதனைப்புனைந்துரைக்க வெழுந்தவாறன்றி ஒருநாள்முதலிய ஆசௌசச் சுருக்கவிதிக்கு அவன் அதிகாரியென்னும் கருத்தால் அவனுக்கு அதுகூறிய சிறப்படையன்று.

"ఉభయత్రదశాహానికుల స్యాన్నంనభుజ్యతే। దానంప్రతిగ్రహోహోమ స్స్వాధ్యాయశ్చనివర్తతే" = என்று மேலெடுத்துக்காட்டப்பட்டுள்ள மனுமொழியால் தானம் பெறுதல் முதலியன ஆகாதென்று விலக்கப்பட்டுள்ளதன்றோ அது, சீவனச் சுருக்கமில்லாம லிருப்பவனைப்பற்றியது. அல்லது, கூறப்பட்ட அபவாதத்திற்குப் பிரதிப்பிரசவக் கருத்தோடாயினும் சம்பந்தப்படுத்திக் கொள்ள வேண்டும். (அபவாதம் = விலக்கு. பிரதிப்பிரசவம்=ஒருசாருடன்பாடு.) (ரு)

மூ॥ జన్మకర్మపరిభ్రష్టస్సంధ్యోపాసనవర్జితః
నామధారకవిప్రస్తుదశాహంసూతకీభవేత్. ॥௬॥

என்பது, பிழைப்புத்தொழில் சுருக்கமும் சுருக்கமின்மையுமே ஆசூசச்சுருக்கத்திற்கும் விரிவுக்கும் ஏதுவானுல் அக்குறை சிறிதுமில்லாதவனும், குணமற்றவனுயு மிருப்பவனுக்கு சாந்தனையும் சூதகமேயுண்டாயிருக்கு மன்றோ என்ற வினுத்தோற்றுவித்துக் கொண்டு அச்சூதகத்தின் காலவெல்லையை வகுக்கின்றது.

(இ-ள்.) பிறந்தது முதலாக நடத்தத்தக்க கருமங்கள் தவறிவிட்டவனும், சந்தியாவந்தனம் வேள்வித் திக்காரியம் விட்டவனுமாகி, வேதியன் என்ற பேரளவிலே நின்றவன் பத்துநாள் சூதகமுடையவனு யிருப்பன். எ-று.

"జన్మకర్మపరిభ్రష్టః" = கருப்பாதான முதலிய திருத்த கருமங்களில்லாதவன், "సంధ్యోపాసనవర్జితః" = நித்தநைமித்திக கருமங்கள் செய்யாதவன். அதனுனே யவன் பேர்மாத்திரம் வைத்திருக்கும் வேதியனுவான். அவனுக்கும் பத்துநாளே ஆசூசமாம் என்றபடி. எனவே ஆசூசத்தினை நெடுநாள்வரையில் விரித்து வைத்திருக்கலாகாதென்பது கருத்து.

பேரளவில் வேதியனுவான்.

இவனிலக்கணத்தை வியாசர் கூறினர். వ్యాసః॥ "బ్రహ్మబీజసముత్పన్నో మంత్రసంస్కారవర్జితః। జాతిమాత్రోపజీవీచ సభవేన్నామధారకః" = வேதியவித்தாற் பிறந்து மந்திரகரும திருத்தமில்லாமல் சாதிப்பேரொன்றனையே கூறிப் பிழைத்திருப்பவன், பேர்தரித்தவன். எறு.

இதுவுமது, "గర్భాధానాదిభిర్యుక్తస్తథోపనయనేనచ। నకర్మవిన్నచాధీతే సభవేన్నామధారకః" = கருப்பாதானமுதலிய திருத்தகருமமும் உபநயநமும் இல்லாதொழிந்தவனும், கருமமே இதுவென அறியாதவனும், வேதமோதாதவனு யிருந்தால் அவனும் பேர்தரித்தவனே யாவன். எறு.

பூர்வபக்கம்.

அற்றேல், திருத்த கருமமில்லாது வேதியனென்ற நாமந் தரித்தவனுக்கும் பத்துநாளே ஆசூசமென்பது பிரமாணங்களுக்கு மாறுபாடாகவிருக்கின்றது அவனுக்குப் பிழைத்திருக்

கும் வரையி லாசூசமேயென்று கூர்மபுராணத்துட் கூறப்பட்டது. కూర్మపురాణే॥ "క్రియాహీనస్యమూర్ఖస్య మహారోగిణఏవచ। యథేష్టాచరణస్యాహుర్మరణాంతమశౌచకం" = கருமங்கெட்டவனுக்கும், மூர்க்கனுக்கும், பெருநோயாளனுக்கும், மனஞ்சென்றவழிநடப்போனுக்கும் சாந்துணையும் சூதகமென்று பெரியர் கூறுவர். எறு.

தக்ஷரும் கூறினர். దక్షః॥ "వ్యాధితస్యకదర్యస్య ఋణగ్రస్తస్యసర్వదా। క్రియాహీనస్యమూర్ఖస్య స్త్రీజితస్యవిశేషతః। వ్యసనాసక్తచిత్తస్య పరాధీనస్యనిత్యశః। శ్రాద్ధకర్మవిహీనస్యభస్మాంతంసూతకంభవేత్। నాసూతకంకదాచిత్స్యా ద్యావజ్జీవంతు సూతకం" = தீராதநோயாளன், அதிகவுலோபன், என்றுங் கடனால் விழுங்கப்பட்டவன், பிறந்து திருத்தகருமமே யில்லாதவன், பெரியர்சொற் கேளாத கயவன், மிகமாதரால் வெல்லப்பட்டவன், சூதாடல் முதலிய வியசனங்களிலே தானே விருப்பமுடையவன், என்றும்பிறனொருவன்ஏவலுட்டானேயுள்ளவன், சிராத்தகரும மில்லாதவன் இவரனைவர்க்கும் சாம்பலாமளவும் ஆசூசமுள்ளதாம். ஆசூசமில்லாதநாள் அவர்களுக்கு என்று மில்லை. உயிருள்ளவரையில் ஆசூசமாகவே யிருக்கும். என்று கூறியிருத்தலின் எவ்வாறுபத்தேநாளென வரம்பறுத்தலாமெனில்.

சித்தாந்தம்.

இம்மொழிகள், அத்தகுதியற்ற முயற்சிகளைச் செய்யலாகாதென்று இகழ்வதன்கண்ணே உண்டாகிய அருத்தவாதமொழியாயிருத்தலின் அவற்றிற்குத் தன்னுரைப்பொருளிற் பிரமாணமாதலுடைமையில்லையா மாதலின் உயிருள்ளவரையில் ஆசூசத்தினை விதிப்பது அம்மொழிகளின் கருத்தல்லவாம். அங்ஙனமல்லாக்கால் "నామధారకవిప్రస్తు దశాహంసూతకీభవేత్" = என்ற பராசர மூலமொழிக்கு மாறுபடுதலுண்டாம். (௬)

அநுலோமர்வேற்றுக்குலச்சூதகம்.

மூ॥ ఏకపిండాస్తుదాయాదాః పృథగ్దారనికేతనాః
జన్మన్యపివిపత్తౌచ తేషాంతత్సూతకంభవేత్. ॥౭॥

என்பது, நால்வருணருக்கும் சூதகத்தினைக் கூறிமுடித்து, ஈண்டு உயர்வருணத்தாற் முழ்ந்தவருணத்திற்கு உயர்ந்த வருண

சம்பந்தமுடைய பிறப்பிலும் இறப்பிலும் உள்ள ஆசூசம் கூறுகின்றது.

(இ-ள்.) ஒரே பிண்டமுடையவர்களால் வேறுவேறு தாய் வயிற்றுப்பிறந்த மைந்தருக்குப் பிறப்பிலும் இறப்பிலும் அதே ஆசூசமாம். எ-று.

"ఏకపిండాః" = ஒரு உயர்வருணனே தந்தையாகவுடையவர். "పృథగ్దారనికేతనాః" = வேறுவேறு தாழ்வருண மாதரைப் பிறப்பிடமாக வுடையவர்கள். "దాయాదాః" புதல்வர். இவர்களுக்கு உத்தமவருண சம்பந்தமான பிறப்பேனும் இறப்பேனும் நேர்ந்தவழி அவ்வுயர்வருண ஆசூசமே யுண்டாமென்றபடி.

மனுவுங் கூறினர். మనుః॥ "సర్వేషామేవవర్ణానామాశౌచంకుర్యురావృతాః। తద్వర్ణవిధిదృష్టేనస్వస్వాశౌచంస్వయోనిషు" = தாழ்ந்த வருணத்தினர் யாவரும் உயர்குலச் சம்பந்தமாகிய பிறப்பிலும் இறப்பிலும் அவ்வுயர் வருண விதிப்படி பத்துநாள் முதலிய ஆசூசத்தினைச் செய்வர். தம் வருணத்தில் சனனத்தாயினும் மரணத்தாயினும் தமக்குரிய ஆசூசத்தினையே செய்வர். எ-று.

கூர்மபுராணமும். కౌర్మే॥ "శూద్రవిట్క్షత్రియాణాంతు బ్రాహ్మణేసంస్థితే సతి। దశరాత్రేణశుద్ధిస్స్యాదిత్యాహకమలోద్భవః" = சூத்திரன், வேளாண் மைந்தன், வேந்தன், இம்மூவர்க்கும் வேதியனிறந்தால் பத்து நாளிற் சுத்தமாமென்று பிரமன் கூறினர். எ-று.

தேவலரும். దేవలః॥ "సర్వవర్ణేషుదాయాదా యేస్యుర్విప్రస్యబాంధవాః। తేషాందశాహమాశౌచం విప్రాశౌచంవిధీయతే" = எல்லா வருணத்துள்ளும் வேதியனுக்குப் புதல்வராவார், எங்கிருக்கினும் அவர்கட்குப்பத்துநாளே சூதகம். சுற்றத்தினர் யாவரோ அவர்களுக்கு வேதியனுக்கெவ்வளவோ அவ்வளவே சூதகம் விதிக்கப்படுகின்றது. எ-று. இந்தத் தீட்டு பிரித்துக்கொள்ளாத ஞாதியரைப் பற்றியது.

அங்ஙனம் ஆபத்தம்பருங் கூறினர். ఆపస్తంబః॥ "క్షత్రవిట్శూద్రజాతీనాం యదిస్యుర్విప్రసూనవః। తేషాంతుపైతృకాశౌచం విభక్తానాంస్వపైతృకం" = வேதியன் மக்களாகிய அரசவைசிய சூத்திரர்க்குப்பிறந்த தீட்டு

இறந்த தீட்டுண்டாமாயின் அவர்கள் பிரியாதவர்களாயின் தந்தை சாதிசூதகமாம்: பிரிந்தவர்களாயின் தந்தைச்சாதியது ஆகாது. எ-று. எனவே தந்தை யிறந்தால் தாய்சாதிக்குரிய ஆசூசநாளே யனுட்டிக்கவேண்டும். என்றபடி.

அநுலோமத்திற்குயர்வருணராசூசம்.

தாழ்ந்தவருண சம்பந்தமான பிறப்பிறப்புக்களில் உயர்வருணர்க்கு எவ்வளவு ஆசூசமென்பதனைக் கூர்மபுராணம் கூறிற்று. కూర్మపురాణే॥ "షడ్రాత్రంస్యాత్త్రిరాత్రంస్యా దేకరాత్రంక్రమేణతు। వైశ్యక్షత్రియ విప్రాణాం శూద్రేష్వాశౌచమిష్యతే" = சூத்திரன் பிறப்பினு மிறப்பினும் அவனுக்குச் சபிண்டனாகிய வைசியனுக்கு ஆறுநாள், வேந்தனுக்கு மூன்றுநாள், வேதியனுக்கு ஒருநாள் தீட்டுடன்படப்படுகின்றது. எ-று.

விஷ்ணுவுங்கூறினர். విష్ణురపి॥ "బ్రాహ్మణస్యక్షత్రియ విట్ఛూద్రేషుష డ్రాత్రత్రిరాత్రైకరాత్రైః, క్షత్రియస్యవిట్ఛూద్రేషు సపిండేషుషడ్రాత్ర త్రిరాత్రాభ్యాం, వైశ్యస్యశూద్రేషు షడ్రాత్రేణ" = வேந்தன், வசியன், சூத்திர சபிண்ட ஞாதியராய்ப் பிறக்கினு மிறக்கினும் முறையே வேதியனுக்கு ஆறு, மூன்று, ஒன்று என்னுந் தொகைநாள் ஆசூசமாம். வைசியசூத்திரர் அங்ஙனமானல் முறையே வேந்தனுக்கு ஆறு, மூன்று, நாள் ஆசூசமாம். சூத்திரர் அவ்வாறாயின் வைசியனுக்கு ஆறுநாளாசூசமாம். எ-று.

பிரகற்பதி வேறுவகையாக ஆசூசம் கூறினர். బృహస్పతిః॥ "దశాహాచ్ఛుధ్యతేవిప్రో జన్మహాన్యోస్స్వయోనిషు। సప్తపంచత్రిరాత్రైస్తుక్షత్రవిట్ఛూద్రయోనిషు" = பிறத்தலினும் இறத்தலினும் வேதியன் தன்சாதியார் மட்டில் பத்துநாளோடு சுத்தனவன். வேந்து வசிய சூத்திரவிடயமாயின் நிரலே எழு, ஐந்து, மூன்று, நாளால் சுத்தனாகின்றான். எ-று.

ஈண்டு, ஆறு, மூன்று, ஒன்று, என்றது விஷ்ணுமதம்; எழு, ஐந்து, மூன்று, என்றது பிரகற்பதிமதம், அதுவோ இதுவோ வென்ற ஐயமுண்டாயின், எதுவேனுமாம். ஆயின் நட்புமுதலிய நெருக்கமிகுதியானல் தீட்டும் அதிகரிக்கும் என்றவழக்கினல் அவ்விருவகை விதியுந் தீர்மானமாகின்றது. (எ)

సూ॥ ఆసత్త్యన్యాతిసంగోత్రె చతుర్థపురుషేణ. ॥எரு॥

என்பது, கூறப்பட்ட வேற்றுச்சாதியைக் குறித்த ஆசௌசம், தன்சாதியைப் பற்றிய வாசௌசம்போலும் எழு தலைமுறையினுந் தொடருமோ வெனிலதற்காவதோர் காலவெல்லை கூறுகின்றது.

(இ-ள்) அந்தச்சூதகம், கோத்திரத்தில் மூன்றுதலைமுறை யாகும்வரையில் தொடர்ந்துவரும். நான்காம் புருடனால் விட்டொழியும். எ-று.

“సత్త్యతిం”—வேறு சாதிமாதரிடத்துண்டாகிய சந்ததிவிடய மாகக்கூறப்பட்ட திட்டு “ఆసత్”—எதுவரையில் மூன்றுதலை முறையாமோ அதுவரையும். (தொடர்ந்துவரும்) நான்காந்தலை முறையானாலெனின் விட்டொழிகின்றது. எனவே, அச்சபிண்ட சம்பந்தம் அவ்வளவில் விட்டுவிடும்.

அங்ஙனம் விருத்தபாராசரும் கூறினர். వృద్ధపరాశరః॥ “సప్తమే పాతుపురుషే సపిండత్వం నివర్తతే। సజాతీయేషు సర్వేషు చతుర్థే భిన్నజాతిషు”—ஏழாம் புருடனிடத்தில் சபிண்ட சம்பந்தம்விட்டொழிகின்றது. இது தன் சாதி விடயமானது. வேறுசாதியிடத்தாயின் நான்காம் புரு டனிடத்தில் விட்டொழிகின்றது. எ-று.

சாதாதபர். శాతాతపః॥ “యద్యేకజాతా బహవః పృథక్క్షేత్రాః పృథగ్జనాః। ఏకపిండాః పృథక్శౌచాః పిండస్త్వావర్తతే త్రిషు” = ஒருவனிடத்தினின்றும் வேறு வேறு மாதரிடத்துப் பிறந்த பலர்பிரித்துக்கொண்டுவேறு வேறுஆசௌசம் அநுட்டித்தலையுடையவராகவிருப்பினும்அவர்கள் சபிண்ட ஞாதியராகியே யிருக்கின்றனர். ஆயின், அவர்கள்சபிண் டசம்பந்தம் மூன்றுதலைமுறைக்குவிட்டொழிகின்றது.எ-று.(எஉ)

సూ॥ దాయాద్విచ్ఛేదమాప్నోతి పంచమో వాత్మవంశజః. ॥அ॥

என்பது, தன் வருணத்தருள்ளும் ஐந்தாந் தலைமுறையாருக் குள்ள சூதக ஏற்றக்குறைவு கூறுவதற்குச் சபிண்ட மொழிவத னைக் கூறுகின்றது.

(இ-ள்.) தன்மரபிற் பிறந்த ஐந்தாவானும் தாயத்தினின்றும் விடுதலையடைவன். எ-று.

தாயம் என்றதனுற் பிண்டம் கொள்ளப்படுகின்றது. அதனுல் விட்டொழிதலையடைகின்றது. எனவே, சபிண்ட சம்பந்தத்தினைப் பற்றறுத்துக் கொள்ளுகின்முன். "వా" = என்றதனுல் ஆருவானேனும் எழாவானேனும் சபிண்ட சம்பந்தத்தால் முற்றும் விட்டொழிகின்முன். என்றபடி.

அங்ஙனம் கௌதமர் கூறினர். గౌతమః॥ "పిండనివృత్తిః పంచమే సప్తమేవా" = சபிண்ட சம்பந்தம் விட்டொழிதல், ஐந்தாந்தலைமுறையிலேனும் எழாந்தலைமுறையிலேனும் ஆம். "వా" என்றதனுல் ஆருந்தலைமுறையினுமாம். எ-று. (அ)

మూ॥ చతుర్థే దశరాత్రం స్యాత్ షణ్ణిశాః పుంసి పంచమే
షష్ఠే చతురహాచ్ఛుద్ధిః సప్తమే తు దినత్రయాత్. ॥౯॥

என்பது, எதன்பொருட்டுச் சபிண்டத்தொடர்பையொழிப்பது கூறப்பட்டதோ அதனை யிங்கு கூறுகின்றது.

(இ-ள்.) ஆண்சந்ததியிலே, நாலாந் தலைமுறையிற் பத்து நாள், ஐந்தாந்தலைமுறையிலாறுநாள், ஆருந்தலைமுறையில் நான்குநாள். எழாந்தலைமுறையில் மூன்றுநாள், சூதகமாம். பின்பு சுத்தம். எழுதலைமுறையு மானபின் நீராடலோடு சுத்தமாம். எ - று.

பிதிர் பக்கத்துள் கூடத்தனை மூலபுருடன் முதற்கொண்டு கணக்கிடுவதில் நான்காவானிடத்தில் பத்திரவு, ஐந்தாவானிடத்தில் ஆறிரவு, ஆருவானிடத்தில் நான்கிரவு. எழாவானிடத்தில் மூன்றிரவு. என்றபடி.

பூருவபக்கம்.

ஆயின், சபிண்ட சம்பந்தம் எழாந்தலைமுறைவரையில் ஒழியத்தக்கதல்லவன்றே சபிண்டஞாதியர் விடயத்தில் தலைமுறை விசேடமின்றியாவர்க்கும் பத்துநாளாசூசம் விதிக்கப்பட்டிருத்தலின் சூதகத்தினைக் குறைத்து விதிப்பது ஒத்தபடியன்று.

சபிண்டசம்பந்தம் எழுதலைமுறைவரையில்விடாது என்ற கருத்து மச்சபுராணத்துட் கூறப்பட்டது. మత్స్యపురాణే॥ "లేపభాజశ్చ

కర్తాద్యాదిపిత్రాద్యాః పిండభాగినః। సప్తమః పిండదస్త్వేషాం సాపిండ్యం సాప్తపూరుషం” நாலாவான்முதலியோர் பூச்சுத்தொடர்படைந்தவர்கள். தந்தை முதலியோர் பிண்டபாகமுடையவர். இவர்க்குஎழாவான் பிண்டம் கொடுப்பவன் சபிண்டத்தொடர்பு எழுபுருடர்வரையிலுள்ளதாம். எ-று.

மனுவும். మనుః॥ “సపిండతాతుపురుషే సప్తమేవినివర్తతే। సమానోదకభావస్తు జన్మనామ్నోరవేదనే” = சபிண்டத்தொடர்பானது எழாந்தலைமுறையில் விட்டொழிகின்றது. தருப்பணத்தொடக்கு, பிறப்பும் பேரும் அறியாவிட்டாலொழிகின்றது. என்றதென்னெனில்?

சித்தாந்தம்!

ஆம்உண்மையதே. ஆயினும், ஐந்தாவான் முதலியோரிடத்துச் சபிண்டசம்பந்தமொழிவது விகற்பத்தினால் மிருதிகளிற் கூறப்பட்டிருத்தலின் அந்தப்பிரமாணங்களைப்பற்றி ஆசூசத்தினைக்குறைத்து, விதிப்பது அங்குமாகலாமென்னும் விகற்பத்தாற்பெறப்படுகின்றது. அதன்பொருட்டு “పిండనివృత్తిస్సప్తమేపంచమేవా” என்ற கௌதமமொழி மேலெடுத்துக் கூறப்பட்டேயுள்ளது.

பைட்டீநசியும் கூறினர். పైఠీనసిః॥ “త్రీనతీత్యమాతృతః పంచాతీత్యపితృతః” = தாய்பக்கத்தினின்று மூன்றுதலைமுறைவிட்டு தந்தைபக்கத்தில் ஐந்துதலைமுறைகடந்து. எ-று. காண்க.

மேல்வினா.

ஆயின், ஐந்தாவான்முதலியோர்சமானோதகர், எனவேதருப்பணத்தொடர்புமாத்திர முடையவராமாதலின் “త్ర్యహాత్తూదకదాయినః” = என்றுமேற் கூறப்பட்டமொழியால் அவர்க்குமூன்றுநாள் சூதகம் உண்டாக வேண்டியிருக்க மூலத்துள் ஆறுநாள் விதித்திருப்பது ஒத்தவாறல்ல என்றவினாவுண்டாம்எனில்?

விடை.

உண்மையே, ஐந்தாவான் முதலியோர்க்கு மூன்றுநாளைய சூதகமே உண்டாகத்தக்கதாகத் தோன்றுகின்றது. ஆயினும் ஆறுநாளைய சூதகம் விசேடவிதியாக விருத்தலின், அந்தப்பொது

விதி, அபவாதவிதி—இல் விதியாக விருக்கின்றது. விசேடவிதிக்கு எதுவிடயமோ அதுவொழிய வேறுவிடயங்களைப் பொதுநூல் விதிக்கின்றதென்பது ஒத்தவாறாக விருக்கின்றது. (கூ)

தற்காலசுத்தி.

మూ॥ భృగ్వగ్నిమరణేచైవ దేశాంతరమృతేతథా
బాలేప్రేతేచసన్యస్తేసద్యశ్శౌచంవిధీయతే. ॥౧౦॥

என்பது, மேற்குறித்த பிரேதாசூசத்திற்குச் சிலவிடங்களில் எய்தியது விலக்குகின்றது.

(இ-ள்.) மலையேறிவிழுதல், தீப்பாய்தல், பரதேயஞ்சென்று இறத்தல், மிகவிளமையி லிறத்தல், சந்நியாசம் பெற்றிறத்தல் முதலியவற்றின் ஆசூசம் அப்பொழுதே ஒழிவதாக விதிக்கப் படுகின்றது. எறு.

பொச்சாப்பு முதலியவற்றானன்றி மனமறிந்து வரைபாய்ந்தாவது, தீப்பாய்ந்தாவது, மற்றெவ்விதத்தாலாவது துன்மரணமடைந்தால் பிராயச்சித்தஞ் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட நிமித்த மரண முண்டானபோது அவனது சம்பந்தமுடைய சபிண்டஞாதிய ரனைவர்க்கும் அப்பொழுதே ஆசூசமொழிந்து சுத்தமுண்டாகின்றது. பத்துநாளாசூசமில்லை. பொச்சாப்பு—மறதி.

துன்மரணவிடயம்.

அங்ஙனம், யாஞ்ஞவற்கியரும் கூறினர். యాజ్ఞవల్క్యః॥ "హతానాంనృపగోవిప్రై రన్వక్షంచాత్మఘాతినాం" = பட்டாபிடேகனுப் அரசாளும் வேந்தனாலும், ஆனிரை முதலியவற்றினாலும், வேதியன் முதல் சண்டாளன் வரையிலும் கொடியரா யுள்ள மானுடராலும், கொல்லபட்டவர்களுக்கும், விதியின்றித் தற்கொலைபுரிந்துகொள்பவருக்கும், தொடர்புள்ள சபிண்டஞாதியர்க்கும் அப்பிணத்தினைப் பார்த்திருக்கும் வரையிற்றான் ஆசூசம். சுடுதல், அல்லது. புதைத்தல் கருமம் முடிந்து நீராடியபின் வேறுசூதகமில்லை பத்துநாளும் காத்திருத்தல் வேண்டா. எ-று.

துன்மரண மடைந்தவர்க்கு நீர்த்தருப்பணமுமில்லை. அங்ஙனம் மனுகூறினர். మనుః॥ "చండాలాదుదకాత్సర్పాద్బ్రాహ్మణాద్వైద్యుతాదపి। దంష్ట్రిభ్యశ్చ పశుభ్యశ్చ మరణం పాపకర్మణాం। ఉదకం పిండదానం చ ప్రేతేభ్యో యత్ప్రదీయతే। నోపతిష్ఠతి తత్సర్వ మంతరిక్షే వినశ్యతి। నాశౌచం నోదకం నాశ్రు న దాహాద్యంత్యకర్మ చ। బ్రహ్మదండహతానాం చ న కుర్యాత్కటధారణం" = சண்டாளன் முதலிய கொடுமைக் குணமுடையவராலும், நீராலும், பாம்பினாலும், நெருப்பாலும், இடியாலும், பற்கள் - கோடுகள் - நகம்- முதலியவையுடைய ஜெந்துக்களாலும் பாவகருமமுடையவர்க்கு மரணமுண்டாம். சிறிது மகா பாவியர்க்கு வேதியனாலும் மரணமுண்டாம். அப்படிப்பட்ட பிணங்களுக்குத் தருப்பணமாவது பிண்டக்கொடையாவது செய்தால் அதுசெல்லாது. அந்தரத்தேயழிந்துவிடுகின்றது. ஆதலின் அவர்களைப்பற்றி யாசூச மிருத்தலாகாது. தருப்பணம் செய்யலாகாது. அழலாகாது. சுடுதல் முதலிய இறுதிக்கடன் முற்றலாகாது. வேதியன் சாபத்தாலாயினும், சூனியமுதலிய மந்திர தந்திரப் பிரயோக கருமத்தாலாயினும் இறந்தவர்களுக்குத் தகன கருமஞ் செய்வதற்குத் தகுதியானபாய் பரப்பியவரிச்சலின் (ஆசந்தி) மீதேற்றுவித்தல் முதலிய கருமஞ் செய்யலாகாது. எ-று.

தற்கொலை.

ஆபத்தம்பரும் கூறினர். ఆపస్తంబః॥ "వ్యాపాదయేద్య ఆత్మానం స్వయమగ్న్యుదకాదిభిః। విహితం తస్య నాశౌచం నాగ్నిర్నాప్యుదకక్రియా" = யார்நெருப்பு நீர்முதலியவற்றால் தன்னைத்தானே கொலைசெய்துகொள்வானோ அவனுக்கு ஆசூசம் விதிக்கவில்லை. தருப்பண கருமமுஞ் செய்யலாகாது. எ-று. இதுமனமறிந்த மரணத்தினைப்பற்றியது.

அதனுனேகௌதமரும், గౌతమోపి॥ "గోబ్రాహ్మణహతానామన్వక్షం రాజక్రోధాచ్చాయుద్ధే ప్రాయానాశన శస్త్రాగ్నివిషోదకోద్బంధన ప్రపతనైశ్చేచ్ఛతాం" = பசு, வேதியனிவர்களால் கொலைப்பட்டவர்க்கும், அரசன் கோவத்தாலும், குதிரைப்போராலும், பிராயோப வேசத்தாலும், வலிதின் மஹாப்பிரத்தான விரதஞ் செய்தலாலும் படைகளாலும், நெருப்பாலும், நீராலும், விடத்தாலும், உறிவிட்டுக் கொள்ளுதலாலும், விழுதலாலும், பிறவற்றாலும் மரணமடைந்தவர்க்கும். எ - று. எனவே, மஹா பிரஸ்தானத்

திற்குச் சென்று விழுதல், சோறில்லாமலொழிதல், மலைச்சருவில் விழுதல்முதலியவற்றால் மனமறிந்து இறந்தவர் சபிண்டஞாதியர்க்கும் பார்த்திருக்கும் அவ்வளவே யாசூசம் என்பது பொருள்.

இதனாற் போந்ததென்னெனில்; பாம்பைப் பிடித்ததற்குச் சென்று அதனாற் கடிக்கப்பட்டிறந்தாலும், சண்டாளர் முதலியோரோடு போருக்குச்சென்று அவராற் கொல்லப்படினும், அவனுக்குப் பிண்டங் கொடுத்தல் முதலியன கூடாது. இவ்வாறே கொடிய பன்முதலிய வுடைய ஜெந்துக்களைப் பற்றச்சென்று அவற்றா லிறக்கினும், அரசனுக்குப்பகைசெய்து அவனால் கொல்லப்படினும், கருவிகளைவிட்டுக் கையால் நீந்துவதற்கு வல்லாமைசெய்து நீரி லிறக்கினும் ஆசூசமுதலியனவில்லை. இவ்வாறாகவே அந்தநிமித்தங்களை யெல்லாம் தக்கவழியாலுய்த் துணர்ந்து கொள்க.

அதனானே பிரமபுராணத்துள்ளும். బ్రహ్మపురాణే॥ "శృంగిదంష్ట్రినఖివ్యాళ విషవహ్నిమహాజలైః। సుదూరాత్పరిహర్తవ్యః కుర్వన్క్రీడాం మృతస్తుయః। నాగానాం విప్రియంకుర్వన్దగ్ధశ్చాప్యథవిద్యుతా। నిగృహీతశ్చయోరాజ్ఞా చౌరదోషేణ కుత్రచిత్। పరదారాన్రమంతశ్చ రోషాత్తత్పతిభిర్హతాః। అసమానైశ్చసంకీర్ణైశ్చండాలాద్యైశ్చవిగ్రహం। కృత్వాతైర్నిహతాస్తద్వచ్చండాలాదీన్సమాశ్రితాః। క్రోధాత్ప్రాయంవిషంవహ్నిం శస్త్రముద్బంధనంజలం। గిరివృక్షప్రపాతంచ యేకుర్వంతినరాధమాః। మహాపాతకినోయేచ పతితాస్తేప్రకీర్తితాః। పతితానాంనదాహఃస్యాన్నాంత్యేష్టిర్నాస్థిసంచయః। నచాశ్రుపాతఃపిండోవా కార్యంశ్రాద్ధాదికంక్వచిత్" = கோடுள்ளது. கோரைப்பற்களுடையது, நகமுள்ளதுமாகிய வுயிர்கள், பாம்பு, விடம், நெருப்பு, பெருநீர், இவற்றினோடு பழகி யாரிறப்பாரோ அவன் தூரத்தே விடத்தக்கவன். பாம்பின் துன்பமடைந்தவன், இடியாற்சுடப்பட்டவன், களவுசெய்து அரசனாற் றண்டிக்கப்பட்டவன், பிறனில்லாளை விழைந்து அம்மாதர் கணவராற் கொல்லப்பட்டவன், தன்னோடு ஒப்பாகாதவர் கையிலும் கலவைக்கூட்டத்தாராலும் புலைஞர்முதலியோராலும்கலகஞ்செய்து கொல்லப்பட் டிறந்தவன், சண்டாளரை யடுத்திருப்பவன், கோபத்தாற் றற்கொலைபுரிந்தவன், வைராகத்தினால் பிராயோபவேசஞ்செய்து உயிர் துறந்தவன், விடமுண்டவன், தீயிலிறந்த

வன், படைக்கலத்தா லிறந்தவன், கழுத்திற்கயிறுமாட்டிக்கொண் டிறந்தவன், நீரில் விழுந்தவன், மலையேறிவிழுந்தவன், மரத்தி னின்றும் விழுந்தவன், மஹாபாதகஞ்செய்தவன் முதலிய அகருமமாளுடரும் பதிதர் என்னப்படுவர். அப்பதிதர் இறந்தால் தகனமாகாது, அந்தியேட்டிகருமம் கூடாது, எலும்பைச் சஞ்சயனம்செய்யக்கூடாது. அவர்களைப்பற்றி அழலாகாது பிண்டம் போடலாகாது. சிராத்தம்செய்யலாகாது. ஆசௌசமாகாது. எ-று.

மேல்வினா.

அற்றேல், சண்டாளர் முதலியோராற் கொலையுண்டவர்க்குத் தீக்கருமமாகாதென்ற விலக்குவிதிகள் ஏனையோரைப்பற்றியதன்றி, ஆஹிதாக்கினியைப் பற்றினவல்ல. ஆஹிதாக்கினிவிடயத்தில் ஆயின், வேதம். 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃॥ "𑌆𑌹𑌿𑌤𑌾𑌗𑍍𑌨𑌿𑌮𑌗𑍍𑌨𑌿𑌭𑌿𑌰𑍍𑌦𑌹𑌨𑍍𑌤𑌿 𑌯𑌜𑍍𑌞𑌪𑌾𑌤𑍍𑌰𑍈𑌶𑍍𑌚" = ஆஹிதாக்கினியை அக்கினியால் வேள்விப் பாத்திரத்தோடு தகனஞ்செய்யவேண்டும் என்று கூறுதலின் ஆஹிதாக்கினியைச்சுடாவிட்டால்வேள்விப் பாத்திர முதலியவற்றைப் பற்றினகருமங்கள் குறைந்துவிடுமே யெனில் ?

மேல்விடை.

அங்ஙனமன்று. பலஸ்மிருதியில் சண்டாளர் முதலியோராற் கொலையுண்ட ஆஹிதாக்கினிகட்குத் தொடர்புடைய தீயினுக்கும் வேள்விக்கலங்கட்கும் கருமமுடிவை விதித்துள்ளது. 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃॥ "𑌵𑍈𑌤𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑌿𑌪𑍇𑌦𑌪𑍍𑌸𑍁 𑌆𑌵𑌸𑌥𑍍𑌯𑌂 𑌚𑌤𑍁𑌷𑍍𑌪𑌥𑍇। 𑌪𑌾𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌤𑍁 𑌦𑌹𑍇𑌦𑌗𑍍𑌨𑍌 𑌯𑌜𑌮𑌾𑌨𑌂 𑌵𑍃𑌥𑌾𑌮𑍃𑌤𑌂॥ 𑌆𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌗𑌿𑌨𑌾𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌪𑌤𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌤𑌥𑌾 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾। 𑌤𑍇𑌷𑌾𑌮𑌪𑌿 𑌤𑌥𑌾 𑌗𑌂𑌗𑌾𑌤𑍋𑌯𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌂 𑌹𑌿𑌤𑌮𑍍" = வைதானம் என்னும் தீயினை நீரில் எறிந்து விடவேண்டும். தலைவன் வினையிறந்தால், அவசத்தியம் என்னும் தீயை நாற்றெருக்கூடும் சதுக்கத்தி லெறிந்து விடவேண்டும். வேள்விக்கலங்களை நெருப்பிற்சுட்டு விடவேண்டும். ஆன்மக்கொலை (தற்கொலை) செய்தவர்க்கும் அவ்வாறே பதிதர்க்கும் கருமமேயில்லை. அவர்களைக் கங்கை நீரிலெறிந்து விடுதலே நல்லது. எ-று. ஆதலால் துன்மரணமுடையா ரனைவர்க்கும் ஒரே வகையாகத் தகனமுதலிய கருமம் கூடாதென்பதன்றிச் சிலர்க்குண்டு; சிலர்க்கில்லை என்பதில்லையென வறிக.

துன்மரணர்க்குக் கருமகாலம்.

ஆசௌசம் சிராத்த முதலியன கூடாதென்ற விலக்கு ஒரு வருடம் நிறையுமளவேயாம். வருடமுடிந்தால் இறந்தவனுக்குச் சிராத்தம் முதலியன செய்வதற்குத் தகுதியுண்டாம்படி நாராயணபலி என்ற கருமஞ்செய்தபின் அபரகரும மெல்லாவற்றினையும் செய்யவேண்டுமன்றி விடலாகாது. அது ஷட்த்ரிம் சது மதத்துட் கூறப்பட்டது. షట్త్రింశన్మతే॥ "గోబ్రాహ్మణహతానాంచ పతితానాంతథైవచ। ఊర్ధ్వంసంవత్సరాత్కుర్యా త్సర్వమేవౌర్ధ్వదైహికం" = ஆனிரையாலும் அந்தணராலும் கொலைப் பட்டவர்க்கும் பதிதர்க்கும் வருடமானபின்பு இறுதிக்கடன் எல்லாவற்றினையும் செய்தல் வேண்டும். விடலாகாது. எ-று.

நாராயணபலி சிவபலி.

நாராயணபலி முதலியன பிரேதசுத்தியை உண்டாக்குகின்றனவென்று வியாசராற் கூறப்பட்டன. వ్యాసః॥ "నారాయణంసముద్దిశ్య శివంవాయత్ప్రదీయతే। తస్యశుద్ధికరంకర్మ తద్భవేన్నైతదన్యథా" = நாராயணனையேனும் சிவனையேனும் குறித்து எது கொடுக்கப்படுகின்றதோ அது அவனுக்குச் சுத்திதரத்தக்க கருமமாக முடியும். இதுவேறு வகையாக வாகாது. எ-று.

பாம்பு கடியுண்டோன் விடையம்.

பாம்புகடித் திறந்தவனுக்குச் சிலவிசேடமுள்ளது. என்னையெனின்? ஓர்வருடம் வரையில் பஞ்சமி திதிதோறும் சருப்ப பூசைசெய்து, வருடங்கழிந்தபின் நாராயணபலிசெய்து பொன்னாற்செய்தபாம்பின் உருவத்தினைத் தானங் கொடுக்கவேண்டும். நேரேபசுவைத் தானஞ்செய்யவேண்டும். அங்ஙனம் பவிஷியோத்தரபுராணத்துட் கூறப்பட்டது. భవిష్యోత్తరపురాణే॥ "సువర్ణాకారనిష్పన్నం నాగంకృత్వాతథైవగాం। వ్యాసాయదత్వావిధివ త్పితురానృణ్యమాప్నుయాత్" = பொன்னாற்பாம்பு வடிவத்தினைச்செய்து, அங்ஙனம் பசுவினையும் வியாசப்பிரீதியாக விதிப்படி தானஞ்செய்து, தந்தையின் கடனில்லாமையை யடைவன். எ-று.

மறந்திறந்தவன் மரணசூதகம்.

மறதியால்மரணம்வரிற்சூதகமுண்டாம். அதனை அங்கிரசுகூறினர். అంగిరాః॥ "యది కశ్చిత్ప్రమాదేన మ్రియేతాగ్న్యుదకాదిభిః। తస్యాశౌచం విధాతవ్యం కర్తవ్యా చోదకక్రియా" யாரேனும்மறந்தபடியாய்நீர்நெருப்புமுதலியவற்றால் இறந்தால் அவனுக்கு ஆசூசத்தினை அனுட்டிக்கவேண்டும். தருப்பணமுதலிய கருமங்களையும் செய்யவேண்டும். எ-று.

பிரமபுராணத்துங் கூறப்பட்டது. బ్రహ్మపురాణే॥ "ప్రమాదాదపి నిశ్శంక మకస్మాద్విధిచోదితాః। శృంగిదంష్ట్రినఖివ్యాళ విషవిద్యుజ్జలాగ్నిభిః। చండాలాద్యైర్వా చోరైర్వా నిహతో యత్ర కుత్రచిత్। తస్య దాహాదికం కార్యం యస్మాన్న పతితస్తు సః" மறதியாலும், ஐயந்தோன்றாது திடீரென்று ஊழாற்றூண்டப்பட்டும், கோடு, பல், நகமுடைய உயிர்களாலாவது, பாம்பு, விடம், இடி, நீர், நெருப்பு முதலியவற்றாலாவது, சண்டாளர் முதலியோராலாவது, வேறியாராலாவது, யாரேனும் எங்கேனும் கொல்லப்படினும் அவன்பதிதனாகாமையின் அவனுக்குச்சுடுதன்முதலியகருமஞ் செய்யத்தக்கதேயாம். எ-று. எனவே, அப்படிப்பட்ட மரணத்தினைத்தான் வேண்டுமென்று வருவித்துக் கொண்டவனல்லனாதலினவனுக்கு அக்குற்றமில்லை யென்பதுகருத்து.

வரைபாய்தலாதி விரதமரணமுற்றோர் ஆசூசம்.

விதிப்படி வரைபாய்ந் தாவது, தீப்பாய்ந்தாவது மரணமடைந்தவர்கள் விடயத்துச் சாதாதபர்கூறினர். శాతాతపః॥ "వృద్ధశ్శౌచక్రియాలుప్తః ప్రత్యాఖ్యాతభిషక్క్రియః। ఆత్మానం ఘాతయేద్యస్తు భృగ్వగ్న్యనశనాదిభిః। తస్య త్రిరాత్రమాశౌచం ద్వితీయే త్వస్థిసంచయః। తృతీయే తూదకం దత్వా చతుర్థే శ్రాద్ధమాచరేత్" = வயது முதிர்ந்தவனாய் சுத்தகருமங்களை யனுட்டிப்பதில் உண்டாகும் குறைவுகளைப் பொறுக்கலாற்றாது, வைத்தியர்செய்யும் உபசாரங்களை வெறுத்து விதிப்படி மலையேறிவிழுதல், தீயில்விழுதல், உண்டிவிட்டொழில், முதலியவற்றால் தற்கொலைசெய்து கொள்வானாயின், அவன் மரணத்தினுட் சபிண்டஞாதியர் மூன்றுநாளைய சூதக மிருத்தல்வேண்டும். அவற்றுள் முதல்நாள்தகனம், இரண்டாநாள்அஸ்திசஞ்சயனம்=பாற்றெளி, மூன்றாநாள் பிரேதோதக தருப்பணம், நான்காநாள்சிராத்தம், செய்தல்வேண்டும். எ-று.

வரைபாய்தல் முதலியவற்றின்விதி.

மலைமுதலியவற்றுள் பாய்ந்திறப்பதற்குரியவிதி ஆதித்திய புராணத்துட் கூறப்பட்டது. ఆదిత్యపురాణే॥ "దుశ్చికిత్స్యైర్మహారోగైః పీడి తస్తుపుమాన్యది। ప్రవిశేజ్జ్వలనందీప్తం కుర్యాదనశనంతథా। అగాధతోయరాశింవా భృగోఃపతనమేవవా। గచ్ఛేన్మహాపథంవాపితుషారగిరిమాదరాత్। ప్రయాగవటశాఖాయాం త్రివేణ్యాంవాతనుంత్యజేత్। ఉత్తమానాప్నుయాల్లోకా న్నాత్మఘాతీభవేత్క్వచిత్ "= மருந்தால் தீர்க்கமுடியாத பெரியநோயால் அடிபட்டுள்ளவன், ஆண்மகனாயின் மிகவும் எரிந்துகொண்டிருக்கும் தீயிலாயினும் புகவேண்டும், உண்டியில்லாப் பட்டினியாவது கிடக்கவேண்டும் அடியறியாத நீரினுளாயினும் விழவேண்டும். மலையேறிச்சாரலி லாயினும் பாய்தல்வேண்டும். "மகாபதம்" போதல்வேண்டும். இமயமலைக்காவது செல்லவேண்டும். பிரயாகையெல்லையில் வடவாலின் கிளைகளிலாயினும் உடலையொழிக்கவேண்டும். கங்கையமுனை சரச்சுவதி யாற்றின் கூடலாகிய திரிவேணியி லாயினும் தேகத்தை யொழித்தல்வேண்டும். அப்படிப்பட்டவன் சிறந்தவுலகம் புகுவன். எப்போதுமவன் தற்கொலைசெய்து கொண்டவனாகான். எ-று.

காசிமரணம்.

காசிப்பதியில் மரணமடைதலால் முத்தியுண்டாம் என்று சுருதிமிருதி புராணங்களால் விதிக்கப்பட்டது. శ్రుతిః॥ "అత్రహిజంతోఃప్రాణేషు ఉత్క్రమమాణస్య రుద్రస్తారకం బ్రహ్మవ్యాచష్టే। యేనాసావమృతీభూత్వా మోక్షీభవతీత్యాదికా "= இந்தக்காசியில் உயிரைத்துறக்கும் உயிர்க்குச்சிவன் தாரகப்பிரம வுபதேசத்தினைச் செய்கின்றார். எவன் எதனாலே சாவற்றவனாய் முத்தியையடைவனோ அதுவே அத்தாரகமாம். என்றது முதலியன.

மிருதி. స్మృతిః॥ "కాశ్యాంతుమరణాన్ముక్తిః శివసారూప్యలక్షణా "=காசியிலிறப்பதனால் சிவசாருப்பியமென்னு மிலக்கணமுடைய முத்திகிடைப்பது. எ-று.

ஆதித்திய புராணம். ఆదిత్యపురాణే॥ "వారాణస్యాంమృతోయస్తుప్రత్యాఖ్యాతవిమక్రియః। కాష్ఠపాషాణమధ్యస్థోజాహ్నవీజలమధ్యగః। అవిముక్తోన్ముఖస్తస్య క

ద్ధమాలకతో౽పివా। ప్రణవం తారకం బ్రూతే నాన్యథా కస్యచిత్క్వచిత్। మహిమ్నా తస్య క్షేత్రస్య సద్యస్తత్త్వం సమోష్యతా। శివత్వమాప్నుయాద్యేన తస్యకింకర్మణాభవేత్ ''— வாராணசிக் க்ஷேத்திரத்தில், வைத்தியர் மருந்தினை யொழித்து, கட்டைகள், கற்களிவற்றிடையே விழுந்தாயினும், கங்கைநீரிற் புரண்டு கிடந்தாயினும், மற்றெவ்விதத்தாயினும் தேகத்தினை யொழிப்பவனுக்கு, அந்த அவிமுக்த எல்லையின் பெருமையால் அப்பரமேச்சுரன் இறப்பவன்காதில் தாரகப்பிரமமாகிய தன்சொரூபத்தினையுணர்த்த வல்ல பிரணவ வெழுத்தின் இரகசியத்தை உபதேசிக்கின்றனர். அச்செல்வம் அவ்வாறன்றி வேறுவிதத்தால் மற்றெவ்விடத்தும் யார்க்கும் கிடைப்பதில்லையாம். அந்தமகிமையால் அவ்வுயிர் தேகத்தைவிட்டுச் சிவத்துவத்தினை யடையும். அப்படிப்பட்ட பிராணியைப்பற்றியாரும் அழவேண்டுவதில்லை. அவன் முத்தனாதலின். அந்நியர் இறுதிக்கடன் செய்வதனால் அவனுக்கு ஆகவேண்டுவது மில்லையாம். எ-று.

ஸ்காந்தபுராணம். స్కాందపురాణే॥ ''ఊషరం కర్మబీజానాం ముక్తావారణసీపురీ। మహాశ్మశానయోగేన క్షిప్త్వం టంకవిరాజితే। త్యజేచ్ఛివపురేతస్య ముక్తిస్సాక్షాద్భవేద్ధ్రువం। జ్ఞానాగ్నిదగ్ధదేహస్య నపిండం నోదకక్రియా। నాశౌచమపికర్తవ్యం తేననాస్యప్రయోజనం। పుత్రాదిభిస్తుకర్తవ్యాం తస్యకదీశ్వరార్పణం। స్థాలనంకర్మమార్గస్య తద్వం శస్త్రాపకంభవేత్। అన్యథాపతితో భూయాత్ పుత్రాదిర్నాత్రసంశయః'' களர்நிலத்தில் விதைத்தவிதை எவ்வாறுமுளைப்பதில்லையோ அவ்வாறே காசியிலிறக்கும் ஆன்மாக்களின் புண்ணியபாவகருமங்கள் மறுபடியும் பிறப்புக்கு வித்தாவதில்லை. ஈசுவரன் முத்தலைச்சூலத்தின் மீதுஒளிவிட்டு, பெருமயானமென்று புகழ்பெற்ற சிவராஜதானியாகிய அவிமுத்தக் காசி எல்லையில் உடம்பைவிட்டவன் அப்பொழுதே கண்காண முத்தியையடைவனாதலின் அவனுக்கு ஞானத்தீயால் உடம்பு வெந்திருத்தலினால் பிண்டக்கொடையும் நீர்கொடையும் செய்யவேண்டுவதில்லை. ஆயின், புதல்வர்முதலியோர் அவனுக்குக் கருமஞ்செய்தலேவேண்டும். அந்தக்கருமம் சிவப்பிரீதியாம். மக்கண்முதலியோர் கருமமார்க்கத்தினை யனுட்டிப்பதால் அந்தச்சந்ததி பாவத்தைக்கடந்து போகின்றது கருமத்தைவிட்டால் மக்கள்நிலை கெட்டவராவர். எ-று.

பிரமகருப்பர். బ్రహ్మగర్గః॥ ''యోనుస్థాతుం నశక్నోతి మహావ్యాధ్యుపపీడితః। సో౽న్వాతిమహాయాత్రాం కుర్వన్నానుత్రదుష్యతి'' — யார் பெருநோயாலடி

பட்டவனுய்க் கருமானுட்டானஞ் செய்வதற்குச் சத்தியற்றவனு கின்றானே? அவன்றீப்பாய்ந்தாலும், கங்கைபாய்ந்தாலும், மஹா யாத்திரைசெய்து மரணமடைந்தாலும், அல்லது, காசிக்குச் சென்றாலும் மறுமையில் குற்றத்தையடைய மாட்டான். எ-று.

தேசாந்தரமரணசௌசம்.

மூலத்துள், "దేశాంతరమృతేథా" = என்று கூறப்பட்டது, சபிண்ட ஞாதியல்லாதவன் தேசாந்தரத்தில் மரணமடைந்தால் அப்பொழுதே சூதகமொழிந்து சுத்தமுண்டா மென்பது பொருள். அதனை மனுகூறினர். మనుః॥ "బాలే దేశాంతరస్థే చ పృథక్పిండే చ సంస్థితే। సవాసా జలమాప్లుత్య సద్య ఏవ విశుధ్యతి" = இளையவனுயினும், வேறுதேயத்துள்ளவனுயினும் பிண்ட பேதமுடையோன் (சபிண்டனுகாதவன்) இறந்தால் அவன்றொடர்பினர் அறிந்தவுடனே உடுத்த வாடையோடு நீரின்முழுகில அப்பொழுதே சுத்தராகின்றார். எறு. சபிண்டனேயாயினும் புறதேயத்திருந்தால் விசேடவிதியை யடைவன்.

தேசாந்தரவிலக்கணம்.

தேசாந்தர விலக்கணத்தை மனுகூறினர். మనుః॥ "మహానద్యంతరం యత్ర గిరిర్వా వ్యవధాయకః। వాచో యత్ర విభిద్యంతే తద్దేశాంతరముచ్యతే" = பெரியயாறு எங்குகுறுக் கிடுமோ? மலையாவது எங்கு எல்லைபிரித்திடுமோ? மக்களின்மொழி எங்குவேறுபடுமோ அதுதேசாந்தரமென்றுகூறப்படும். எறு. மொழியென்பதீண்டு பாஷை. (இதனுல் மனுவின்காலத்து முன்னமேதேய பாஷைக ளுண்டாயிருக்கிறதாக விளங்குகின்றது, மனுவின்காலம் சிருட்டியாதி என்று அறிக).

பிரகற்பதிதேய வேறுபாட்டிலக்கணத்தினைவேறுவகையாற் கூறினர். బృహస్పతిః॥ "దేశాంతరం వదంత్యేకే షష్టియోజనమాయతం। చత్వారింశద్వదంత్యన్యే త్రింశదన్యే తథైవ చ" = சிலர் அறுபதுகாதவெல்லையுள்ளபூமியை ஒருதேயமாக வைத்துக்கொண்டு ஏனையவற்றைப் பரதேயமென்பர். மற்றுஞ்சிலர் நாற்பதுகாத வெல்லை யென்பர். வேறுசிலர் முப்பதுகாத வெல்லையென்பர். எ-று.

காதமென்றத னளவு.

யோசனையிலக்கணம் மிருதியுட் கூறப்பட்டது. స్మృత్యంతరే॥ "యవస్యచోదరాణ్యష్టౌ యూకాన్యాహుస్తథా। ప్రమాణమంగుళస్యోక్తం వితస్తిర్ద్వా దశాంగులం। వితస్తిద్వయమరత్ని స్తన్మాత్రక్షు స్తథోదితః। ధనుస్సహస్రద్వే క్రోశ స్సుర్యోజనంక్రోశచతుష్టయం" — யவமென்ற தானியத்துள்ள மணியினைக் குறுக்காக வெட்டு வரிசைப்படச் சேர்த்திடினும், நெல்லினை உயரப்பட்ட அவ்வாறு வைப்பினும் எவ்வளவு ஆமோ அது "அங்குலத்தி" னளவையென்று கூறப்பட்டது. பன்னிரண்டங் குலத்திற்கு "ஒருவிதஸ்தி" என்னப்படும், இரண்டுவிதஸ்தி, "ஒரு அரத்தினி" என்னப்படும். இரண்டு அரத்தினி, ஒரு "கிஷ்க்கு" என்னப்படும், இரண்டுகிஷ்க்கு, "ஒருதனுசு,"என்னப்படும இரண்டாயிரம்தனு, "ஒரு குரோசமாம்". நான்கு குரோசம், "ஒருயோசனம்". என்னப்படும். எ-று.

பாலசௌசம்.

மூலத்துள். "బాలే" — என்று கூறப்பட்டது. ஈண்டுபாலன் - என்பது நாமகரணமில்லாக்குழவி என்றவாறு. அக்குழவி மரணமடைந்தால், சபிண்டஞாதியர்க்குச் சாத்திட்டு நீராடலான் அப்பொழுதே யொழிகின்றது. அங்ஙனம் சங்கர்கூறினர். శంఖః॥ "ప్రాక్నామకరణాచ్ఛుద్ధిః" — நாமகரணத்திற்கு முன் சிசுமரணமடைந் தால் ஞாதியர்க்கு அப்பொழுதே சுத்தியாம். எ-று.

காத்தியாயனரும் கூறினர். కాత్యాయనః॥ "అనిర్వృత్తే దశాహే తు పంచత్వం యది గచ్ఛతి। సద్య ఏవ విశుద్ధిస్స్యాన్న ప్రేతం నోదకక్రియా" — பிறந்தபத்து நாள்கழிப்பதன் முன்னமேகுழவி மரணமடைந்தால் ஞாதியர்க்கு அப்பொழுதே சுத்தியாம். பிரேத சமஸ்காரமாயினும், நீர்க்கருமமாயினும் இல்லையாம். எ-று. இதுதாய்தந்தை உடன் பிறந்தவரொழிய ஏனைஞாதியரைப்பற்றிக் கூறப்பட்டது.

அங்ஙனம்வியாக்கிரர் கூறினர். వ్యాఘ్రః॥ "బాలే మృతే సపిండానాం సద్యశ్శౌచం విధీయతే। దశాహేనైవ దంపత్యోస్సోదరాణాం తథైవ చ" — குழவி யிறந்தால் சபிண்ட ஞாதியர்க்கு அப்பொழுதே சுத்திவிதிக்கப் படுகின்றது. தாய்தந்தை யர்க்கும் உடன் பிறந்தவர்க்கும் பத்து நாளில் சுத்தமுண்டாம். எ-று. எனவேயிது நாமகரணமானபின் பத்துநாளினுட் கூறப்பட்டது.

மரித்துப்பிறந்தாலும்பிறந்துமரித்தாலும்.

பிறந்தவுட னிறந்தாலும், இறந்தேபிறந்தாலும் அந்தக்குழ வியைப்பற்றிச் சபிண்டர்க்கு அப்பொழுதே சுத்த முண்டாம். பிறந்தநாளில் சிறுபோது இருந்திறந்தால் தாய்முதலி யோர்க் குப்பத்துநாளோடு சுத்தியுண்டாம். அப்பத்துநாளினுள் சிலநாள் பிழைத்திருந் திறத்தால் மீதிநாளினேடு சுத்தியாம். அங்ஙனம் வியாக்கிரர் கூறினர். వ్యాఘ్రః॥ "అంతర్దశాహే జాతస్య శిశోర్నిష్క్రమణం యదా। సూతకేనైవశుద్ధిస్స్యాత్ పిత్రోరితి శాతాతపోఽబ్రవీత్" = பிறந்தது தொட்டுப் பத்துநாளினுட் குழவிபிறந்தால்தாய்தந்தையர்க்குப் பிறந்ததீட்டி னேடு இறந்ததீட்டு மொழியுமென்று சாதாதபர் கூறினர். எ-று.

பலமிருதி. స్మృత్యంతరే॥ "అంతర్దశాహేఽపరతస్య యస్య పుత్రాదీనాం మరణాశౌచం తత్సూతకాహోభిరితి"=பிறந்தபத்துநாளினுள் குழவிபிறந்தால் தந்தைமுதலியோர்க்கு இறந்ததீட்டுப் பிறந்ததீட்டி னுளினேடு ஒழிகின்றது. எ-று.

பிறந்ததின் பொருட்டுவந்த ஆசூசம் எல்லார்க்குமுள்ளது, தவருது. அங்ஙனம் ஹாரீதர் கூறினர். హారీతః॥ "జాతమృతే మృతజాతే వా సపిండానాం దశాహం" = பிறந்தவுடனே யிறந்ததும், கருவினுளிறந்தே பிறந்தது மானதீட்டில் சபிண்டஞாதியர்க்குப் பத்துநாளிற் சுத்தம். எ-று.

பிரகற்பதி. బృహస్పతిః॥ "దశాహాభ్యంతరే బాలే ప్రమీతే తస్య బాంధవైః। శావాశౌచం న కర్తవ్యం సూత్యాశౌచం సమాచరేత్" = பத்துநாளினுக்குள் குழந்தைபிறந்தால் சுற்றத்தினர் மரணசூசம் அனுட்டிக்கவேண்டாம். பிறந்ததீட்டொன்றினையே அனுட்டித்தல் வெண்டும். எ-று. (சுற்றமென்ப தீண்டு சபிண்டஞாதியர்). இதுதொப்புட் கொடி யறுத்தபின் பத்துநாளினுள் ளென்றுணர்க.

தொப்புளறுக்கும் வரையில் தீட்டில்லையென்று ஜைமினி கூறினர். జైమినిః॥ "యావన్న ఛిద్యతే నాళం తావన్నాప్నోతి సూతకం। ఛిన్నే నాళే తతః పశ్చాత్ సూతకం తు విధీయతే"= எதுவரையில் தொப்புட்கொடியறுக் கப்படுவதில்லையோ அதுவரையும் சூதகத்தையடையான், தொப் புளறுத்தபின் சூதகம் விதிக்கப்படுகின்றது. எ-று.

தொப்புளறுப்ப தற்குமுன்னைய காலத்தினைப்பற்றிப்பெரிய மனுகூறினர். బృహన్మనుః। "జీవన్జాతో యదితతో మృతస్సూత ఏవవా। సూతకం సకలం మాతుః పిత్రాదీనాం త్రిరాత్రకం" = உயிரோடு பிறந்தாலும் செத்துப் பிறந்தாலும் தாய்க்குப்பிறந்ததீட்டு முழுமையுமுள்ளது. தந்தை முதலியோர்க்கு மூன்றுநாள். எ-று.

ஆயின், பிரகற்பிரசேதரால் வேறுகூறப்பட்டது. బృహస్పతిః। "ముహూర్తం జీవితో బాలః పంచత్వం యదిగచ్ఛతి। మాతుశ్శౌచం దశాహం స్యాత్ సద్య శ్శౌచాస్సగోత్రిణః" = பிறந்தகுழவி ஒருமுகூர்த்தமாயினும் பிழைத்திருந்திறந்தால் தாய்க்குப்பத்துநாள் சூதகம். அந்தக்கோத்திரமுடையார்க்கு அப்பொழுதே சுத்தி. என்றதே எனில்? அது, வேள்வித் தீக்கரும முதலிய நித்தகரும அனுட்டானத்தின் பொருட்டு அப்பொழுதே யுண்டாம் சுத்தியைக்கூறவெழுந்தது. என்னை? "అగ్నిహోత్రార్థ స్నానార్థం స్నానోపస్పర్శనాత్తత్కాలశౌచం" = வேள்வித் தீக்கருமமுதலியவற்றினுடைய வனுட்டானத்தின்பொருட்டு அப்பொழுதேநீராடிப்பிராயச்சித்தத்தினலும் ஆசமனத்தினலும் சுத்தமுண்டு பண்ணிக்கொள்ளலாம் என்றுசங்கர்கூறினர்.

சந்நியாச மரணசௌசம்.

துறவினையடைந்தானயின்அவனதுசபிண்டஞாதியர்க்குஅப்பொழுதே சுத்தமுண்டாம். அங்ஙனம் வாமன புராணங்கூறிற்று. వామనపురాణే। "బాలే ప్రవ్రజితే చైవ దేశాంతరమృతే తథా। సద్య శ్శౌచం సమాఖ్యాతం విద్యుత్పాతమృతే తథా" = சூதகவறைச்சிறுவனயினும், சந்நியாசியாயினும், தூரதேயஞ்சென்றவனயினும் இறந்தால் ஞாதியர்க்கு அப்பொழுதே சுத்தமாம். இடிவிழுந்திறந்தானுக்கு மவ்வாறேயாம். எ-று.

பலமிருதியுள்ளும் கூறப்பட்டது. స్మృత్యంతరే। "సర్వసంగనివృత్తస్య ధ్యానయోగరతస్య చ। నతస్య దహనం కార్యం నాశౌచం నోదకక్రియా" = எல்லாத் தொடர்பினின்றும் வேறுபட்டுத்தியானயோக நிட்டனகிய யோகிக்குச் சுடுதற் கருமஞ்செய்யவேண்டா. சூதகமுமில்லை. நீர்க்கடனுமில்லை. எ-று. காண்க. (க0)

தேசாந்தரத்திலிறந்த சபிண்டன் சூதகம்.

మూ॥ దేశాంతరమృతః కశ్చిత్ సగోత్రశ్శ్రూయతే యది
న త్రిరాత్రమహోరాత్రం సద్యస్స్నానేన శుధ్యతి॥ ౧౧॥

என்பது தேசாந்தரஞ் சென்றிருந்த சபிண்டன் சூதகம் பற்றிப் பிரிதுவிதி கூறுகின்றது.

(இ-ள்.) சபிண்டஞாதி பரதேயஞ்சென்று இறந்தசெய்தி வருடமானபின்பு கேட்ட அவன் சபிண்டஞாதியர்க்கு மூன்று நாளுமில்லை. ஒருநாளுமில்லை. அப்பொழுதே நீராடலாற் சுத்த முண்டாகின்றது. எ-று.

அந்நியதேயஞ்சென்றிறந்த சபிண்டஞாதிஎன்று," சகோத்திரம்" என்பதனாற் கொள்ளப்பட்டது. கேட்டால் எனவே வருடமானபின் அவனது மரணச்செய்திகேட்டால் என்றபடி. அவன் சபிண்டஞாதியர்க்கு மூன்றிராத்திரி ஆசௌசமுமில்லை அஹோராத்திராசௌசம் = ஒருநாள்தீட்டுமில்லை. பிறவெனின் அப்பொழுதே நீராடலால் சுத்தனாகின்றான். (எனவே, செத்த பத்து நாளினுள் அறிந்தகாலந்தொட்டு நின்றுள்ள நாள்வரையில் ஆசௌசம். பத்துநாளானபின் மூன்றுபக்ஷத்தி னுள்ளானால் தெரிந்ததுமுதல் மூன்றுநாள்தீட்டு. அதற்கப்பால் ஆறுதிங்களி னுள்ளானால் தெரிந்ததுமுதல் பக்ஷிணியாசௌசம். அதற்குமேல் வருடநிரம்புதற்குள்ளானால் ஒருஇராப்பகல்தீட்டு. அல்லது ஒரு பகலளவே சூதகமுமாம். அப்பால் கேட்டவர்க்கு நீராடலான ப்பொழுதே சுத்தியென்பது கருத்து.)

இவ்விடயம் பற்றித்தேவலர் கூறினர். దేవలః॥ "అర్వాక్త్రిపక్షాత్త్రిరాత్రంస్యాత్పక్షిణ్యాషణ్మాసతః। పరమేకాహమావర్షాదూర్ధ్వంస్నాత్వావిశుధ్యతి" = மூன்றுபக்கமாகும் வரையில் மூன்றுநாள், ஆறுதிங்கள்வரையில் பக்ஷிணி, பின் வருடமாம்வரையில் ஒருபகல், அப்பால் நீராடிச் சுத்தனாவான். எ-று. பக்ஷிணியென்பது, முன்பகலும் பின்பகலுங் கூடியநடுஇராத்திரி. எனவே ஒன்றரைநாள். என்றால், அத்தமானமாகின்ற இரண்டு சூரியர்களை நோக்கிய இருபகல் நடுவிரா. என்க. உதாரணம் - ஞாயிறு பகற்பொழுதினுள் எப்போதாயினும் அடுத்ததிங்கட்கிழமைமாலைக்குப் பக்ஷிணிமுடிகின்றது. அன்றிரவாயின் அவ்விரவுபயனில்லையாய்ச் செவ்வாய்க்கிழமை மாலைவரையில் பக்ஷிணியாம். இது ஒருமதம். இந்நாட்டுப்பெரியர் வழக்கினுள் இரவேனும்பகலேனும் எப்போதாயினும் தெரியவந்

தால் மறுநாள் மாலைக்குப் பக்ஷிணிமுடிகின்றதாக விருக்கின்றது. "ఆగామివర్తమానాహర్యుక్తాయాం నిశి పక్షిణీ" = என்பது அமரநிகண்டு.

விஷ்ணுவும் கூறினர். "విష్ణుః। "అర్వాక్ త్రిపక్షాత్ త్రిరాత్రం షణ్మాసాభ్యంతరే దినం। అహస్సంవత్సరాదర్వాక్ దేశాంతరమృతేష్వపి" = மூன்று பக்கத்துள்ளே மூன்றுநாள். ஆறுதிங்களுள் ஒருபகலுமிரவும், வருடத்துள் பகல், வேறுதேயத்தி லிருந்தவர் விடயத்திலும். எ-று. ஈண்டு பகலுமிரவும் என்றதனுட் பகலென்பதற்கு இருபக லெனப் பொருள்கொள்க. "షణ్మాసాభ్యంతరే" என்றதேவலமொழியால் "திவாநிசம்" என்றவிஷ்ணு மொழிக்கு பக்ஷிணியென்று பொருள்படுகின்றது.

யாஞ்ஞவற்கியருங்கூறினர். యాజ్ఞవల్క్యః॥ "ప్రోషితే కాలశేషస్స్యాత్ పూర్ణే దత్వోదకం శుచిః" = பரதேயஞ் சென்ற சபிண்டன் இறந்த செய்திகேட்க நாளினுட்டானே கேட்டிருந்தால் அதுவரையிலும் செல்லாது நின்றகாலத்தோடுஞ் சுத்தியுண்டாம். வருடங்கழிந்தால் நீராடி. நீர்த்தருப்பணஞ் செய்துசுத்த னாகின்றான், எ-று.

மனுவுங்கூறினர். మనుః॥ "సంవత్సరే వ్యతీతే తు స్పృష్ట్వైవాపో విశుధ్యతి" வருடங்கடந்தால் நீரைத்தொட்ட வளவானே சுத்தமாம். எ-று. எனவே நீராடலாற் சுத்திஎன்றபடி.

வினா. "శ్రుత్వోర్ధ్వం దశరాత్రాత్ పక్షిణీ"=பத்தாநாளிரவு கழிந்த பின்கேட்டால் பக்ஷணியாசுச மெனக் கௌதமராற் கூறப்பட்டதே எனில்? விடை. அதுமூன்றுபக்கமுமானபின் ஆறுதிங்களினுள்ளென்ற கருத்துடையதாம். "షణ్మాసాభ్యంతరే" என்று தேவலமிருதிகூறியதால்.

"దేశాంతరస్థస్య మృతే ఊర్ధ్వం దశాహాచ్ఛ్రుత్వైకరాత్రం"=பரதேயத்துள்ளவனிறந்தால் பத்துநாள் கழிந்தபின்கேட்டு ஒரு இரவேசூதகமிருத்தல்வேண்டு மென்ற வசிட்ட வுரையும், "వ్యతీతే త్వాశౌచే సంవత్సరాంతస్త్వేకరాత్రేణాతఃపరం స్నానేన" = ஆசூசகாலங் கழிந்தால்வருடம்வரையில் ஒரு இரவோடு, பின்நீராடலோடு சுத்தம். என்ற விஷ்ணுவுரையும், செத்த ஆறுதிங்களான பின் வருடத்தினுள் கேட்டவர்க்கு ஒருபகலென்ற கருத்தினவாம். "షణ్మాసాహం వర్షాత్"

ஆறுதிங்களின்மேல் வருடத்தினுள் ஒருபகலென்றுதேவலமிருதி யிருத்தலின்.

"అతీతేదశరాత్రేతు త్రిరాత్రమశుచిర్భవేత్" = பத்திரவுகழிந்தால்பின் கேட்டவர்க்கு மூன்றிரவு அசுத்தம். என்ற சங்கருரை மூன்று பக்கத்தினுள்ள என்றகருத்தினது. "అర్వాక్త్రిపక్షాత్త్రినిశం" = என்ற விஷ்ணுமிருதியால்.

தந்தைமுலியோர் சூதகம்.

ஈண்டு, மூலமொழியுள், "సద్యస్స్నానేనశుధ్యతి" என்றுஅப்பொழுதே நீராடலாற்சுத்த முண்டாவதாக விதிக்கப்பட்டது, ஞாதியரைமாத்திரம் குறித்தது. தந்தைமுதலியோர் விடயத்தாயின் வேறுவிசேடமுள்ளது. அங்ஙனம்பைட்டீநசி கூறினர். పైఠీనసిః॥ "పితరౌచేన్మృతౌస్యాతాం దూరస్థోపిచపుత్రకః। శ్రుత్వాతద్దినమారభ్యదశాహంసూతకీభవేత్" = தந்தையேனும் தாயேனும் இறந்தால் மகன்தூரதேயத்திருப்பினும் செய்திகேட்ட நாள்முதல் பத்துநாள் வரையில் சூதகமுடையவனும். எ-று.

தக்ஷரும் கூறினர். దక్షోపి॥ "మహాగురునిపాతేతు ఆర్ద్రవస్త్రోపవాసినా। అతీతేబ్దేపికర్తవ్యం ప్రేతకార్యంయథావిధి" = இருமுதுகுரவர் இறந்தால்வருடங் கழிந்திருப்பினும் கேள்விப்பட்ட கருத்தன் பட்டினியோடு மீரவுடையுடுத்து விதிப்படி பிரேதகருமஞ்செய்தல் வேண்டும். எ-று. எனவே வருடங்கழிந்தபின்பும் முழுச்சூதகங்காத்து நீர்க்கடன்முதலிய கருமங்களைச் செய்தல்வேண்டுமென்றி யப்பொழுதே நீராடலாற் சுத்தமடையலாகாது. எ-று.

மாற்றுந்தா யிறந்தசூதகம்.

தன்னையீன்றவளையொழியத் தந்தையின்பத்தினி யிறந்தால் ஆவகையைத்தக்ஷராற் கூறப்பட்டது. దక్షః॥ "పితుఃపత్న్యామతీతాయాం మాతుర్వర్జ్యంద్విజోత్తమైః। సంవత్సరేవ్యతీతేపి త్రిరాత్రమశుచిర్భవేత్" = தந்தையின் பத்தினியிறந்தால் அவள்தன்றுயல்லாதபக்ஷத்தில் வேதியன்வருடங்கழிந்திருப்பினும் மூன்றுநாள்தீட்டுடையவனுயிருப்பன். எறு.

அதிக்கிராந்தாசூசம் = காலங்கடந்ததீட்டு.

இக்காலங்கடந்ததீட்டு உபநயநமானவன் இறந்ததைப்பற்றியது என்று வியாக்கிரபாதர் கூறினர். వ్యాఘ్రపాదః॥ "తుల్యంవయసి

ஸர்வேஷாமேவ வர்ணாநாம் ஸூதகே ம்ருதகே ததா" — வயதிலும் காலங்கழிந்ததிலும், தீட்டுயாவர்க்கும் ஒத்தவாறே, உபநயநமான வன் விடயத்திற் றுனேகாலங்கடந்த தீட்டுவேறுபாடுள்ளது, எ-று. "ஸத்யஶ்ஶௌசம் ..." — பன்முனேக்கும் வரையில் அப்பொழுதே சுத்தியென்றது முதலியமொழிகளால் ஆறுதிங்கள் முதலிய வயதுடையவன் விடயத்தில் விதிக்கப்பட்ட ஆசௌசம், வேதியன் முதலிய வருணத்தர் அனைவருக்கும் ஒத்தவாறு. எனவே, ஒருவர்க்கொருவர் ஏற்றத்தாழ்ச்சியில்லை. பத்துநாளிருக்கத்தக்க தீட்டு, பத்துநாள் கழிந்தபின்னுணரவந்தால்மூன்றுநாளொடுசுத்தி என்பதுமுதலியகாலங்கடந்தசூதகமும், வேதியன்முதலிய அனைவருக்கும் ஒத்தபடியே. உபநயநமானவனிறந்தால் பத்து, பன்னிரண்டு, பதினைந்து, என்றவாறாக வேறுபாடுள்ள சூதகம் வேதியன் முதலியோர்க்குக் காலங்கடந்த சூதகத்துளாம். "... ..." — உபநயநமானவ னிறந்தாலாவது, உபநயநமில்லாதவ னிறந்தாலில்லையென்று அதனுள்ளே கூறியிருத்தலின்.

பிறந்த விடயத்திற் காலங்கடந்தமை.

பிறந்த விடயத்தில், காலங்கடந்த தீட்டினை அனுட்டிக்க வேண்டுவதில்லை. அதனைத் தேவலர் கூறினர். தேவல:॥ "நாஶௌசம் ஸூதகே ... " — பிறந்த தீட்டில்நாள் கடந்திருந்தால் அசுத்தமில்லை. எ-று.

மனுவுங் கூறினர். மநு:॥ "நிர்தஶம் ஜ்ஞாதிமரணம் ஶ்ருத்வா புத்ரஸ்ய ஜந்ம ச। ஸவாஸா ஜலமாப்லுத்ய ஶுத்தோ பவதி மாநவ:" — ஞாதியினுடைய மரணத்தினையேனும் மகன்பிறந்ததையேனும் பத்துநாள்கழிந்தபின் உணர்ந்தால் மனிதன் கட்டியவாடையோடு நீராடிச் சுத்தனாகின்றான். எ-று. கண்டு புத்திரன் என்றமொழியை யெடுத்துக் கொண்டதனால் காலங்கடந்த பிறந்த தீட்டினும் தந்தைக்கு நீராடினாற்றான் சுத்தமுண்டாம். சபிண்டஞாதியர்க்குக் காலங்கடந்து பிறந்த தீட்டேயில்லை என்பது கருத்து.

பத்துநாளினுள்ளானால் சென்றனவொழிய நின்றநாளினாற் சுத்தனாகின்றான் எனச்சங்கர் கூறினர். ஶங்க:॥ "தேஶாந்தரகதஶ்ருத்வா ... । யச்சேஷம் தஶராத்ரஸ்ய தாவதேவாஶுசிர்பவேத்" — பரதே

யஞ் சென்றவன் பிறந்ததை யேனுமிறந்ததை யேனுங்கேட்டபின் பத்துநாளைக் கெவ்வளவு செல்லவேண்டுமோ அவ்வளவுநாளே இட்டு. பின்புசுத்தனுவன். எ-று.

புறதேயத்திறந்தவரும் இருவகைப்படுவர். சமஸ்காரமாகிய கடன் செய்துகழித்தவன் எனவும், மற்றொருவன் அஃதில்லாதவன், எனவுமாம். அவருள்சமஸ்க்காரக்கடன்முடிந்தவன் மரணத்தைக் கேட்டவழி வருடத்தினுள்ளும் பின்னும் காக்கத்தக்க இட்டு மேல்இருமொழிகளாற் கூறப்பட்டவாறாயிற்று. இனிசமஸ்காரக் கடனென்றுஞ் செய்யப்படாதவனுடைய மரணம்கேட்டவழி ஆசூசத்தினைப்பற்றுவதற்கும் பிண்டநீர் உதவுவதற்குங் காலத்தகுதியாராயப்படுகின்றது. ஸமஸ்காரகருமமில்லாதவரும். இருவகைப்படுவர். இன்னநாளிலிறந்தானென் றுணரப்பட்டானொருவன். அஃதறியாதவனொருவன். அவருள், யார் இறந்தநாள் தெரியத்தக்கதோ அவனுக்கு, பிரதியாப்திகம் = வருடசிராத்தத்தினை அந்நாளிற்றானே செய்யவேண்டும். ஆசூசத்தினைப்பற்றுவற்தற்கும் பிண்டங்கொடுப்பதற்கும் விலக்கப்படாத நக்ஷத்திரமுதலியவற்றை விசாரித்துக்கொண்டு நல்லபொழுதிற்றொடங்கிச்செய்ய வேண்டுவது. அங்ஙனம் சான்றோரொழுக்கம் வழங்கிவருதலின்.

இறந்தநாள் அறியாதவழி.

இனி யார் இறந்தநாள் அறியப்படவில்லையோ அவனைப்பற்றிக்கூறுதும். ஸ்மிருதிசாரம். స్మృతిసారే॥ "దేశాంతరగతోవిప్రప్రయాసాత్కాలచోదితాత్। దేహనాశమనుప్రాప్తస్తిథిర్నజ్ఞాయతేయది। కృష్ణాష్టమీత్వమావాస్యాకృష్ణాచైకాదశీచయా। ఉదకంపిండదానంచతత్రశ్రాద్ధంచకారయేత్" = தீர்த்தயாத்திரை முதலிய எந்தநிமித்தத்தினுலாவது புறத்தேயஞ்சென்றவேதியன் நெடுங்காலம்வரையில் பலநாட்டிலும் திரிதல்முதலியவற்றாலிளைப்புற்றுஎங்கேனுமோரிடத் திறந்தொழிந்தால்அவன்மரணதிதி நெடுந்தூரதேயத்திருக்கும் அவன் சந்ததியாருக்கு அறியாமற்போதலாமே; சிலநாள் கழிந்தபின் எப்போதாயினும் அச்சாவின்செய்திதெரியவந்தால் அவனைப்பற்றி ஆசூசம்பற்றுவதற்கும் எள்ளுந்தண்ணீரும்பிண்டமும் கொடுப்பதற்கும்தொடங்குவதற்கு, தேய்பிறையில் அட்டமிமுதலாகவாயினும், அமா

வாசை முதலாகவாயினும், மூன்றுதிதிக்குள்ளாகத் தனக்குவே ண்டியதோர் திதியில் செய்யத்தக்கது. அந்தத்திதியிற்றானே, “பிரதியாப்திக” சிராத்தமும் செய்யவேண்டுவது. எ-று.

ஆயின், இம்மொழியால் ஆசூசத்தினைப் பற்றுவது நேரே பொருந்திற்றில்லை யாயினும் முன்பின்னுள்ள மொழிகளால் ஆசூசவிடயத்தினைக் கூறியிருத்தலினாலும் நடுவிலுள்ள இம்மொழியும்அவ்விடயம்பற்றியதேயாமாதலினாலும் ஆசூசத்தினைப்பற்றும லேதிலோதக பிண்டப்பிரதானம் செய்வதற்கு ஆவதில்லையாதலினாலும், ஆசூசத்தினைப் பற்றுவதனையும் ஈண்டுகூறக் கருதிற்று. எனத்தோற்றுகின்றது. நீர்முதலாகச் செய்யவேண்டிய பலகருமங்களையும் எடுத்துக்கூறுதலினால் சிராத்தவகைமை யெல்லாம் தொகையாக இங்குகூறவேண்டிற்று. அங்ஙனம்தொகுக்கப்பட்ட அந்தப் பிரகாணத்தினை யாம் மேற்கூறுமவற்றுள் விரிக்கின் றாம். (கக)

பன்முளையாதவன் முதலியகுழவியைப் பற்றியதீட்டு.

మూ॥ అజాతదంతాయేబాలాయేచగర్భాద్వినిస్సృతాః।

నతేషామగ్నిసంస్కారోనాశౌచంనోదకక్రియా. ॥౧౨॥

என்பது, மேல்பேரிடப் படாதகுழவியின் மரணத்தில் சபிண்டஞாதியர்க்கு அப்பொழுதே சுத்தமுண்டாகும் வகைகூறி முடித்த வாறாயிற்று. ஈண்டு பேரிடப்பட்டுப் பல்முளைப்பதன் முன் மரணமடைந்த குழவிவிடயத்திலும் ஸமஸ்காரத்தோடு ஆசூசத்தினைவிலக்குகின்றது.

(இ-ள்.) எந்தக்குழவி பல்முளையாததோ? எதுகருவிலிருந்துநிரம்புறாதகாலத்துவெளிப்பட்டதோ? அந்தக்குழவிகட்குத் தீக்கடனில்லை. ஆசூசமில்லை. நீர்க்கடனுமில்லை. எ-று.

பேரிடப்பட்டு, பன்முளையாது இறந்ததற்கும், கருவழிந்து வெளிப்பட்டதற்கும் சபிண்டஞாதியர், இறுதித்தீக்கடன் முதலியகருமங்களைச் செய்யவேண்டுவ தில்லை. அங்ஙனம் பிரமபுராணங்கூறுகின்றது. బ్రహ్మపురాణే॥ “స్త్రీణాంతుపతితోగర్భః సద్యోజాతోమృతో థవా। అజాతదంతోమాసైర్వామృతఃషడ్భిర్గతైస్తథా। వస్త్రాద్యైర్భూషితంకృత్వానిక్షేప్త వ్యస్తుకాష్ఠవత్। ఖనిత్వాతుశనైర్భూమిం సద్యశ్శౌచంవిధీయతే” = எதுமாதரின்

கருவினின்றும்வழிஇ விழுந்ததோ ? எது பிறந்தபோதே யிறந்ததோ? எது ஆறுதிங்களாவதற்குள் ளிறந்ததோ? எதுஆறுதிங்கள் கடந்தும் பன்முளையாதிருந்ததோ? அந்தக்குழவியை ஆடை முதலியவேய்ந்து மரக்கட்டையைச் சுமந்துபோனாற் போலுஞ்சுமந்துசென்று, மெதுவாக நிலத்தினை யகழ்ந்துபுதைத்து விடவேண்டும். தாய் முதலியோரொழிய ஏனையசபிண்ட ஞாதியரனைவரும், அப்பொழுதே ஆசூசத்தினை நீக்கிக்கொள்ள வேண்டும். எ-று.

விஷ்ணு. విష్ణుః॥ "అజాతదంతేబాలేప్రేతేసద్యఏవస్నానంనసంస్కారోనోదకక్రియా" = பன்முளையாத ஆண்சிசுவிறந்தால் அப்பொழுதேதீட்டொழியும். தீக்கடனில்லை. நீர்க்கடனுமில்லை. எறு. (௧௨)

మూ॥ యదిగర్భోవిపద్యేతస్రవతేచాపియోషితః।
యావన్మాసంస్థితో గర్భోదినంతావత్తుసూతకం. ॥౧౩॥

என்பது, கருவழிந்தால் சபிண்டஞாதியர்க் குடனே சுத்தியென்றது. இங்குதாய்க்கு அந்தத்தொடர்பான ஆசூசம் கூறுகின்றது.

(இ - ள்.) கருவழிந்தாலும், கலங்கியொழிந்தாலும். எத்தனைத்திங்களின்கருவோ அத்தனைநாள் தாயாகிய அந்தமாதினுக்குப்பிறந்ததிட்டு. எறு.

அங்ஙனம்யாஞ்ஞவற்கியரும் கூறினர். యాజ్ఞవల్క్యః॥ "గర్భస్రావేమాసతుల్యానిశాఃశుద్ధేస్తుకారణం" = கருக்கலங்கி விழுந்தால்திங்களோடோத்திருக்கும் மிரவினளவே தீட்டு. பின்சுத்தம். எறு. இது, நாலாந்திங்களின் ளொட்டு ஏழாந்திங்களின் வரையுமென்றுணர்க. பின்னர், சாதி முறைப்படி மூன்றிரவு முதலிய வாசூசமுள்ளவாம்.

அங்ஙனம் மரீசிகூறினர். మరీచిః॥ "గర్భస్రుత్యాంయథామాసమచిరేతూత్తమేత్ర్యహం। రాజన్యేతుచతూరాత్రం వైశ్యేపంచాహమేవచ। అష్టాహేనతుశూద్రస్యశుద్ధిరేషాప్రకీర్తితా॥ అచిరేమాసత్రయే" = மூன்று திங்களானபின் கருவழிந்து வெளிப்பட்டால் வேதியர்க்கு மூன்றுநாள், அரசனுக்கு நான்குநாள், வைசியனுக்கு ஐந்துநாள், சூத்திரனுக்கு எட்டுநாள்கழிந்தாற் சுத்தமாம். எறு. அசிரம். மூன்றுமாதம்.

கௌதமர். గౌతమః॥ "గర్భమాససమారాత్రిస్స్రంసనే గర్భస్యత్ర్య హంవా" = கருப்பங்கெட்டொழிந்தால் எத்தனைதிங்களோ அத்தனைநாள்தீட்டு. அல்லாக்கால் மூன்றுநாள் தீட்டு. எ-று. ஈண்டு இருவகைவிதி விகற்பமாகக் கூறலின் துணிவாதல் வேண்டும்.

மூன்றுதிங்கள் நிரம்பும்வரையில் மூன்றுநாள். பின்பு எத்தனைமாசமோ அத்தனைநாள்என்பது துணிந்தவாறு. அங்ஙனம் ஆதித்தியபுராணத்துட் கூறப்பட்டது. ఆదిత్యపురాణే॥ "షణ్మాసాభ్యంతరే యావద్గర్భస్రావో భవేద్యది। తదా మాససమైస్తాసాం దివసైశ్శుద్ధిరిష్యతే" = ஆறுதிங்களுட் கருக்கெட்டால் மாதமெத்தனையோ அத்தனை நாளிற்சுத்தம். எ-று.

இக்கருக்கலங்கியழிதலின் நிமித்தமான தீட்டு தாய்க்குமாத்திரமேயுண்டு. கருவழிந்து விழ்ந்தால் தந்தை முதலியோர்க்கு முண்டு அங்ஙனமரீசிகூறினர். మరీచిః॥ "స్రావే మాతుస్త్రిరాత్రం స్యాత్సపిండాశౌచవర్జనం। పాతే మాతుర్యథామాసం పిత్రాదీనాం దినత్రయం" = கலங்கியொழிந்தால் தாய்க்கு மூன்றுநாள்தீட்டு சபிண்டர்க்கில்லை. அழிந்து விழுந்தால் தாய்க்குமாத்திரம் எத்தனைமாதமோ அத்தனைநாள். தந்தைமுதலியோர்க்கு மூன்றுநாள். எ-று.

வசிட்டரும் கூறினர். వసిష్ఠః॥ "ఊనద్వివర్షే గర్భపతనే వా సపిండానాం త్రిరాత్రం" = இரண்டுவருடத்திற்குக்குறைந்த குழவிபோனாலும், கருவிறந்து விழ்ந்தாலும் சபிண்டர்க்கு மூன்றிரவுதிட்டு. எ-று.

கருக்கலங்கியொழிந்ததில் விருத்தவசிட்டர் சிறப்புவிதிகூறினர். వృద్ధవసిష్ఠః॥ "గర్భస్రావే మాసతుల్యా రాత్రయః స్త్రీణాం స్నానమాత్రమేవ పురుషస్య" கருக்கலங்கி யொழிந்தால் மாதர்க்கு எத்தனை மாசமோ அத்தனைநாளே சூதகம். புருடர்க்கு நீராடன்மாத்திரமே. எ-று.

கருப்பம்கலங்கியொழிதல், இறந்துவிழுதல், பிறத்தல்.

మూ॥ ఆచతుర్థాద్భవేత్స్రావః పాతః పంచమషష్ఠయోః।
అత ఊర్ధ్వం ప్రసూతిస్స్యాద్దశాహం సూతకం భవేత్. ॥౧౪॥

என்பது. கருப்பம் வெளிப்படுதலின் வேறுபாடுகள் இவை என்பதும், அவற்றிற்குரிய சூதகமும்வகுக்கின்றது.

(இ-ள்) நாலுதிங்கள் நிரம்பும் வரையிலும் கருவெளிப்பட்டால். "சிராவம்" = கலங்கிவிழுதலாம். ஐந்தாவது ஆறாவது திங்களில் வெளிப்பட்டால் அது "பாதம்" இறந்துவிழுதலாம். பின்ஏழாவது திங்கள் முதல் எப்போது வெளிப்படினும் அது "பிரசவம்" = பிறத்தலாம். பிறத்தலில் தாய்க்குப்பத்துநாள் இட்டாம். எ-று.

ஆயின்சதுர்விம் சதிமதத்துள்ளும் "అథస్రావస్స్యాత్పూర్వమాసాత్సాచ్ఛుద్ధి స్స్యాత్పాతసమేకధం। మృతేజీవతివాతత్ర స్త్రీషు మాసాదిద్యాసహిసంఖ్యయా" = ஒன்பதாந்திங்களுக்குள், ஏழாந்திங்கள் முதலாகப் பிறந்தால் அந்தநிமித்தத்தினால் ஆசூசம்பெற்றமடந்தை யொழியஏனைய சபிண்டஞாதியர்க்கெல்லாம் எத்தனை மாதத்திய கருப்பமோ அத்தனைநாளென்று விதிக்கப்பட்டது. அதுபெற்றமாதினைக் குறித்ததாயின் எவ்வாறு எனிற்பத்துநாளாய்விதிக்கும்விதிவிரோதமாம்.எ-று. அங்ஙனமாயின். "జాతౌవిప్రోదశాహేన" என்று சபிண்டரனைவர்க்கும்பத்துநாள் பிறந்ததீட்டினை விதிக்கின்றஸ்மிருதி மொழிக்கும் முரணுதலுண்டாமேயெனில்?

அங்ஙனமன்று. அம்மொழி ஒன்பதாந்திங்களி லாயினும் பத்தாந்திங்களிலாயினும் பெறுவதைக் குறித்ததெனில் ஒத்துவிடுகின்றது. இல்லை, ஒரேவிடயத்தினைப் பற்றியதுஎன்ற பக்ஷத்திலும் அந்தவிதியேனுமாக இந்தவிதியேனுமாக என்னும்விகற்பத்தால்வகுக்கப்படும். (கசு)

பாலனுக்குத் தீக்க்ருமமுஞ் சூதகமும்.

మూ॥ దంతజాతేనుజాతేచ కృతచూడేచసంస్థితే।
అగ్నిసంస్కరణేతేషాం త్రిరాత్రమశుచిర్భవేత్. ॥౧౫॥

என்பது, சிறுவருக்குத்தீக்கருமஞ் செய்தாலாந் தீட்டினை வகுக்கின்றது.

இ-ள். பல்தோற்றினேனாயினும், தோற்றாதவனேயாயினும், மயிர்வினைக்கருமம் உற்றவனாயினும், இறந்தபின் அவர்கட்கு இறுதித் தீக்கடன்செய்தால் மூன்றுநாள் தீட்டு உண்டாம். எ-று.

"దంతజాతే" பிறந்த பல்லினையுடையவன், "అనుజాతే" அவனைத் தொடர்ந்து பின்பிறந்தவன், எனவே பல்பிறவாதவன். "కృతచూడే" மயிர்களை வினைசெய்யப்பட்டோன், இம்மூவர்க்கும் நீக்கடன் செய்தாலும், மூன்றாம் வருடத்தில் சூடா கருமமுடிந்தோனிறப்பினும் என்று "చ" என்றதனாற் கொள்ளப்பட்டது. அவர்கள் சபிண்ட ஞாதியர்க்கு மூன்றுநாள் சூதகமென்பது கருத்து.

அங்ஙனம், மயிர்வினையில்லாதவனையும் பல்தோன்றாதவனையும் சுடுவதில் மூன்றுநாட் சூதகம் ஆங்கிரசுவாற் கூறப்பட்டது. అంగిరాః॥ "యద్యప్యకృతచూడోవై జాతదంతస్తుసంస్థితః। దాహయిత్వా తథాప్యేన మాశౌచం త్ర్యహమాచరేత్" மயிர்களை வினையில்லாதவனேயாயினும் பல்தோற்றியவனிறந்தால், அவனைப் புதைக்கத்தக்கதேயாயினும் சுட்டு மூன்று நாளைய தீட்டிருக்கவேண்டும். எ-று.

புராணத்துள்ளும் கூறப்பட்டது. పురాణే॥ "అనతీతద్వివర్షస్తు ప్రేతో యత్రాపి దహ్యతే। అశౌచం బాంధవానాం తు త్రిరాత్రం తత్ర విద్యతే" = இரண்டு வருடம் நிரம்பாத வயதுடைய பிணம் எங்கு சுடப்படுமோ அங்கு சுற்றத்தினர்க்கு மூன்றுநாளைய தீட்டுண்டாம். எ-று.

ஆயின், "దంతజాతేప్యకృతచూడే త్వహోరాత్రేణ" = பல்தோற்றினானைப்பற்றியும், மயிர்வினை யில்லாதவனைப்பற்றியும், ஒருபகலிரவாற் சுத்தியாம். என்று விஷ்ணுவுரையு முள்ளதேயெனில்? அது, புதைக்கும் பக்ஷத்ததென்று உணரத்தக்கது.

பல்தோன்றாமலும், மயிர்வினையில்லாமலு மிறந்தவனைச்சுட்டால்மூன்றிராத்திரிசூதகமென்று ஷடுத்திரிம்சதுமதத்தில்கூறப்பட்டது. షట్త్రింశన్మతే॥ "యద్యప్యజాతదంతస్స్యాదకృతచూడస్తుసంస్థితః। తథాపి దాహయిత్వైనం త్ర్యహం త్వాశౌచమాచరేత్" = ஆயின்பல்லுந் தோற்றியதில்லை, மயிர்வினையு முடிந்ததில்லை அவ்வளவுசிறிய னிறந்தானாயினும் அவனைச்சுடுதலேவேண்டும். மூன்றுநாளைய ஆசுசத்தினைக் கைப்பற்றவேண்டும். எறு.

எந்தமொழி மனுவாற் கூறப்பட்டதோ அது, మనుః॥ "అజాతదంతే తనయే శిశౌ గర్భచ్యుతే తథా। సపిండానాం తు సర్వేషా మహోరాత్రమశౌచకం"

பல்முளையாதசேயே யாயினும் கருவினின்றும் நழுவிவிழுந்த சிசுவேயாயினும் இறந்தால் சபிண்டரானவர்க்கும் ஒருபகலுமிரவும்சூதகம். என்றது. அதுமயிர்களை யாதவனைப்பற்றியது.

அற்றேல், பல்முளையாதகாலத்தில் மயிர்வினைசெய்யவில்லையென்பது யாண்டையது. அவ்வினை மூன்றுமாண்டினுட் செய்யக்கடவதாமாதலின் அங்ஙனம்பொருள்கொள்வதற்கு ஏதுவில்லை என்று வினவலாகாது. "చూడాకర్మద్విజాతీనాం సర్వేషామేవధర్మతః। ప్రథమేబ్దే తృతీయేవాకర్తవ్యంశ్రుతిచోదనాత్ = வேதத்துள் ஆணையிடப்பட்டிருத்தலின் இருபிறப் பாளரானவர்க்கும் மயிர்களைவினையைத் தருமமாகவேமுதல்வருடத்தே யாயினும் மூன்றாம்வருடத்தே யாயினும் செய்யத்தக்கதே விதியென்று அந்தமனுவே விகற்பத்தால் முதல்வருடத்தினை மயிர்களைவினைக்குத்தக்ககாலமாக வகுத்திருக்கின்றனர்.

தீக்கடன் என்பதுவும் விகற்பவகையானே கூறப்பட்டது. பல்முளைத்தவனுக்கும், முளையாதவனுக்கும் இந்தவிதியாமன்றி மூன்றாம்வருடத்து மயிர்களைவினை செய்யப்பட்டுள்ளவன் விடயமன்று. என்னையெனில் அப்பொழுது தீக்கடனைத் தவறாது செய்ய வேண்டுமென்றே யொருதலையாக விதிக்கப்பட்டுள்ளது. அதற்குமுன்னே தீக்கடன்விகற்பவகையாகமனுவானே கூறப்பட்டது. మనుః॥ "నాత్రివర్షస్యకర్తవ్యాబాంధవైరుదకక్రియా। జాతదంతస్యవాకుర్యాన్నామ్నివాపికృతేసతి" = மூன்று வயதில்லாதவனுக்குச் சுற்றத்தினர் தருப்பணகருமத்தினை அல்லதுஜலாஞ்சலி கருமத்தினைச்செய்யலாகாது. பல்முளைத் திருந்தவனுக்கும் கூடாது. பேரிட்டிருந்தாலும் ஆகாது. இல்லை ஒருக்கால் செய்யினும்செய்க. எறு. ஈண்டு "వా" என்ற இடைச்சொல் விகற்பவிதியைக் காட்டுகின்றது. ஜலாஞ்சலி தானமென்ற வுபலக்கணத்தால் தீக்கருமத்தினையுங் பொருள்படுத்துகின்றது. (௧௫)

பருவத்தளவாசூசம்.

మూ॥ ఆదంతజన్మనస్సద్య ఆచూడాన్నైశికీక్రియా
త్రిరాత్రమావ్రతాదేశాద్దశరాత్రమతఃపరం. ॥౧౬॥

என்பது, வயதினளவு வேறுபாட்டால் ஆசூசம்வேறுபடுதலைக்குறிக்கின்றது.

(இ - ள்.) பல்முளைக்கும் வரையில் அப்பொழுதே சுத்தம். பின்புமயிர் களைவினை யாம்வரையில் ஒருபகலோரிரவு ஆசௌசம். அப்பால் உபநயனம் ஆகும்வரையில் மூன்றுநாள்தீட்டு. அதற்கு மேற்பத்துநாளாம். எ - று.

பல்முளைக்கும் முன்னிறந்தபாலகனது சபிண்டர்க்கு அப்பொழுதேசுத்தம். முளைத்தபின் மயிர்களைவதற்குமுன் இறந்தவன் சுற்றத்தினர்க்கு “నైశీ” = நைசி = இரவினிடத்தும் உள்ளது எனவே ஒருபகலிரவுதீட்டு. “వ్రతాదేః” உபநயநம்ஆவதற்குமுன் மயிர்களைந்தபின் இறந்தவன்ஞாதியர்க்கு மூன்றிரவுசூதகம். அதற்குமேல்பத்திரவு யென்றபடி.

இதனைச்சங்கிரககாரரும் கூறினர். సంగ్రహకారః॥ “నామ్నో దంతోద్గమాచ్చూడాయాస్సి తత్ప్రక్రమాత్। సద్యశ్శౌచమహస్త్రీణి హ్యహాని యతాగ్న్యుదకదః” = நாமகரணம், பல்முளைத்தல், மயிர்களைதல், உபநயநம் இவற்றிற்குமுன் முறையே, உடனே, ஒருநாள், மூன்றுநாள், ஆசௌசமாம். எனியர் தவறாது செய்யத்தக்க அக்கினிதானம், நீர்த்தானம் உண்டாயினவாம். எறு.

சங்கரும்கூறினர். శంఖః॥ “అజాతదంతే తనయే సద్యశ్శౌచం విధీయతే। అహోరాత్రాత్తథా శుద్ధిర్బాలే త్వకృతచూడకే। తథైవానుపనీతే తు త్ర్యహాచ్ఛుధ్యంతి బాంధవాః” = பல்முளைப்பதன்முன் அப்பொழுதே சுத்தி. மயிர்களையாவிட்டால்ஓரிரவு. உபநயநமில்லையேற்சுற்றத்தினர்க்கு, மூன்றுநாளிற்சுத்தி. எறு.

ஆயின், “బాలానామజాతదంతానాం త్రిరాత్రేణ శుద్ధిః”=பல்முளையாதசிறுவர்க்கு மூன்றுநாளிற்சுத்தியென்று காசிபர்மொழியுள்ளதேயெனில் ? அது தாய்தந்தையரைப் பற்றியது. அதனாேன மனு கூறினர். మనుః॥ “నిరస్య తు పుమాంఛుక్లముపస్పృశ్యైవ శుద్ధ్యతి। బైజికాదభిసంబంధాదనురుంధ్యాదఘం త్ర్యహం” = ஆடவன் தன் சுக்கிலத்தினை வெளிவிட்டால் நீராடிச் சுத்தமுறுகின்றான். வித்துச் சம்பந்தமுண்டானால் மூன்றுநாள் பாவம். எ-று. காண்க.

ஆயின், “ప్రాఙ్నామకరణాత్సద్య ఏకాహాద్దంతజన్మనః”=நாமகரணமாவதற்கு முன் அப்பொழுதே சுத்தி. பன்முளைத்தவனுக்கு

ஒருநாள் தீட்டு என்று வேறு மிருதிகூறிற்றே யெனில்? அது புதைத்து வைக்காததன்விடயம். புதைத்துவைக்கும் விடயத்தில் அப்பொழுதே சுத்தியாம். ஏனெனில்? “అజాతదంతే బాలే ప్రేతే సద్య ఏవ నాస్త్యగ్ని సంస్కారో నోదకక్రియేతి విష్ణుస్మరణాత్” = பன்முளையாச் சிறுவனிறந்தால் அப்பொழுதே சுத்தி. இறுதிக் கருமமில்லை நீர்க்கடனுமில்லை என்று விஷ்ணு மிருதிகூறி யிருத்தலால்.

ஆயின், “ఊనద్వివర్షే ప్రేతే గర్భపతనేవా సపిండానాం త్రిరాత్రం” = இரண்டு வருடத்தினுக்குக் குறைந்த வயதினன் இறந்தாலும், கருவழிவிழுந்தாலும், சபிண்ட ஞாதியர்க்கு மூன்றிரவு சூதகமென்று வசிட்ட வுரை கூறுகின்றதேயெனில்? அது பன்முளைத்தவனுக்குத் தீக்காரியம் செய்தால் பார்க்கத்தக்கது. என்க.

மேற்கூறிய வுரைகட்கெல்லாம் இங்ஙனம் அமைதிசெய்து கொள்க. நாமகரணமாவதற்கு முன்பு அப்பொழுதே சுத்தியாவதுஒருதலையாம். அதற்கு மாறுதலில்லை. இது ஞாதியர்க்கென்க. அதன்பின் பன்முளைத்தற்கு முன்பு தகனகருமஞ் செய்தால் ஒருநாட் சூதகம். இல்லையேல் அப்பொழுதே சுத்தி. பன்முளையாவிடினும் சூடா கருமமாயிருந்து சுட்டால் மூன்றுநாட் சூதகம் பன்முளைப்பதற்கு முன்னேனும் பின்னேனும் சூடாகரும மாவதன் முன் மரணமடைந்து புதைத்த தாயின் ஒருநாட் சூதகம். தகனகாரியமானல் மூன்றுநாள். சூடாகருமமான பின் உபநயநமாவதன் முன் மூன்றுநாள். உபநயநத்தின் பின் வேதியன் முதலியோர்க்குப் பத்து நாள் முதலியன ஆசூசமாம். இந்த முடிபு ஆண் சிசுவின் மரணத்தில் கொள்ளத் தக்கது.

கன்னியா மரண ஆசூசவகை.

பெண்மக விறந்தால் ஆவனவற்றை முதுமனு கூறினர். వృద్ధమనుః॥ “అప్రౌఢాయాంతు కన్యాయాం సద్యశ్శౌచం విధీయతే। అహస్త్వదత్తకన్యాసు దత్తాసుచత్ర్యహంతథా” “అప్రౌఢాయాం” = சூடாகருமஞ்செய்யப் படாதவள்என்றுபொருள்கொள்க. அவள்இறந்தாலப்பொழுதே சுத்தமாதல் விதிக்கப்படுகின்றது. “అచూడాయాంతుకన్యాయాం సద్యశ్శౌచం విధీయతే” என்று ஆபத்தம்பமிருதி கூறுதலின். “అదత్తకన్యాసు” வாக்குத் தத்தஞ் செய்யப்படாத கன்னிகையின் மரணத்தில்

ஒருபகலு மிரவும் சூதகம். வாக்குத் தத்தமானவள் விடயத்தில் மூன்றுநாட் சூதகம். எ-று.

அதனை மரீசியும் கூறினர். మరీచిః॥ "అహూఢాకరణేసద్య శ్శౌచం పరికీర్తితా నాదికాహః। ప్రాక్సంస్కారాత్ త్ర్యహం"=மயிர்களையும்வினையில்லாவழியப்பொழுதே சுத்தி. வாக்குத்தத்த மாவதன்முன் ஒருநாள். அதுவானல் மணமாவதன்முன் மூன்றுநாள். எ-று.

பிரமபுராணத்துள்ளும் கூறப்பட்டது. బ్రహ్మపురాణే॥ "ఆదన్తన స్యచౌలాంతం కన్యాయదివిపద్యతే। సద్యశ్శౌచంభవేత్తత్ర సర్వవర్ణేషునిత్యశః। తతోవాగ్దానపర్యంతం యావదేకాహమేవహి। తతఃపరంప్రవృద్ధాయాం త్రిరాత్రమితినిశ్చయః। వాక్ప్రదానేకృతేతత్ర జ్ఞేయంచోభయతస్త్ర్యహం। పితుర్వరస్యచతతో దత్తానాంభర్తురేవచ। స్వజాత్యుక్తమశౌచంస్యాత్సూతకేసూతకేతథా"=பிறந்ததுமுதல்மயிர்களையும்வரையில் கன்னிகை மரணத்தில் எல்லாவருணத் தார்க்கும் அப்பொழுதேசுத்தி. பின் மணமகனொருவனுக்கு வாக்குத்தானஞ்செய்யும் வரையில் ஒருநாள்தீட்டு. அதன்பின் மூன்றுநாள். வாக்குத்தத்தமா யிருந்தால் அக்கன்னிகையின் தந்தைக்கும், கணவனுக்கும், மூன்றுநாள்தீட்டு. அது அவரவர்குலத்திற்குத்தக்கபடி. மூன்றுநாளையகாலம் உண்டாயிருக்கும் கன்னிகை பிழைத்திருக்கையில் இருபக்கத்துள்ளும் பிறந்ததீட்டுமெவ்வாறே.

புலத்தியருங்கூறினர். పులస్త్యః॥ "సద్యస్త్వప్రౌఢకన్యాయాం ప్రౌఢాయాంవాసరాచ్ఛుచిః। ప్రత్తాయాంతుత్రిరాత్రేణ దత్తాయాం పక్షిణీభవేత్"=மயிர்களையாத கன்னியிறந்தால் சபிண்டஞாதிக்கு அப்பொழுதே சுத்தி. மயிர்களைந்திருந்தால் ஒருநாளோடுசுத்தி. வாக்குத்தானஞ்செய்திருந்தால் மூன்றுநாளிற்சுத்தி. மணமாயிருந்தால் ஒன்றரைநாட்சூதகம். எ-று.

மனுவுங்கூறினர். మనుః॥ "స్త్రీణామసంస్కృతానాంతు త్ర్యహాచ్ఛుధ్యంతిబాంధవాః। యథోక్తేనైవకల్పేనశుధ్యంతితుసనాభయః" = வாக்குத்தானமானகன்னிகைகட்கு மணமாவதற்குமுன் மரணம் நேர்ந்தால், அந்தத்தானம் பெற்ற கணவனுடைய சபிண்டஞாதியர் அக்கன்னிகைக்குப் பந்துவாக விருக்கின்றனர், ஆதலின் அவர்க்கு மூன்றுநாளிற் சுத்தி. அவள் தந்தையின் சபிண்டஞாதியர் அவளுக்கு சநாபர்களா யிருக்கின்றனர். அவர்க்கு மூன்றுநாளிற் சுத்தி. எ-று.

அதனானே மரீசியுங்கூறினர். మరీచిః॥ "అవాఙ్పూర్వం ప్రత్తాయ యా నైవ ప్రతిపాదితా। అసంస్కృతా మసాజ్జైయా త్రిరాత్రమశుభయోస్స్మృతం"=இட்டு நீர்வார்த்தலில்லாமலே வாக்குத்தத்தமாய மணமற்றகன்னிசமஸ்காரமில்லாதவளா யிருக்கின்றாள். அவளதுதந்தை மரபிலும் கணவன்மரபிலும் சபிண்டஞாதியர்க்கு மூன்றுநாள்தீட்டு. எ-று.

மயிர்களை வினையில்லாவிடின் அப்பொழுதே சுத்தியாயிருந்தால் ஒருநாள்தீட்டு என்றது தாய்தந்தைய ரொழிந்தசபிண்டரைப்பற்றியது. என்னை? "ప్రత్తాప్రత్తాసుయోషిత్సు సంస్కృతాసంస్కృతాసు చ। మాతాపిత్రోస్త్రిరాత్రంస్యాత్ ఇతరేషాంయథావిధి" = வாக்குத்தானமாயிருக்கினும் இல்லாதிருக்கினும், மணமாயிருக்கினும் இல்லாவிடினும் கன்னியின் மரணத்தில் தாய்தந்தையர்க்கு மூன்றுநாள் தீட்டு. ஏனையர்க்கு விதிப்படி எவ்வளவோ அவ்வளவென்று பல மிருதியுட் கூறியிருத்தலின். அன்றியும், "అజాతదంతాసుపిత్రోరేక రాత్రమితి" = பன்முளையாத பெண்கள் விடயத்தில் தாய்தந்தையர்க்கு ஒருநாளென்று சங்கமிருதியுள்ளும் கார்ஷ்ணாஜின மிருதியுள்ளும் விசேடவிதியாகக் கூறப்பட்டிருத்தலின் வாக்குத்தானமில்லாத மாதர்விடயத்தில் மூன்றிரவுவிதித்தது பன்முளைத்த கன்னிகையைக் குறித்தது. பன்முளையாதிருந்தால் ஒரேநாளென விதித்திருத்தலின். மணம் புரிந்தமாதர் விடயத்தில்தாய்தந்தையர்க்குமூன்றுநாளென்றது தாய்மனையி லிறந்தா லென்றுணரத் தக்கது.

அங்ஙனம் விஷ்ணுகூறினர். విష్ణుః॥ "సంస్కృతాసుస్త్రీషు నాశౌచంపితృపక్షేతత్ప్రసవమరణేచేత్ పితృగృహేస్యాతాం తదైకరాత్రం త్రిరాత్రంచ"= மணவினை முடிந்தமாது இறந்தால் தந்தையின் சபிண்டர்க்குச் சூதகமேயில்லை. ஆயின் அந்தமாது தந்தை மனையில் மகவைப் பெற்றாலும் இறந்தாலும் தந்தையின் சபிண்டர்க்கு ஒருநாளே சூதகம். தாய்தந்தையர்க்குமாத்திரம் மூன்றுநாள்தீட்டாம். எ-று.

பிரமபுராணத்தும் கூறப்பட்டது. బ్రహ్మపురాణే॥ "దత్తానారీపితుర్గేహేప్రసూయేతమ్రియేతవా। తద్బంధువర్గస్త్వేకేన శుచిస్స్యాజ్జనకస్త్ర్యహః" = மேற்கூறிய வாக்கியப்பொருளே யிதற்கும் என்க.

தாய் தந்தையரிறந்தால் மணம் புணர்ந்த மாதர்க்குரிய மூன்றுநாள் சூதகத்தை விருத்த மனுகூறினர். వృద్ధమనుః॥ "పిత్రోరు

పరమస్త్రీణాం మాతృర్ధాన్తరం తథైవ చ। త్రిరాత్రేణ విశుద్ధిస్స్యాదిత్యాహ భగవాన్మనుః" என்றது காண்க.

தௌஹித்திரன் = பெண்ணின்மகன், பாகினேயன்=உடன் பிறந்த மாதர்மகார், இவரிருவரும் உபநயநமில்லா திறந்தால் பக்ஷிணி ஆசூசமாம். உபநயநமாயிருந்தால் மூன்றுநாட் சூதகமாம். என்று விருத்த மனுகூறினர். వృద్ధమనుః॥ "అసంస్కృతే తు మృతే స్యా ద్దౌహిత్రే భాగినేయకే। సంస్కృతే తు త్రిరాత్రం స్యా దితి ధర్మో వ్యవస్థితః" = என்றது காண்க.

சூரவராசூசம்.

மாதாமகன் = தாயையீன்ற பாட்டன்முதலியோர் மரணத்துள், தௌஹித்திரன் முதலியோர்க்கு மூன்றுநாள் தீட்டு அதனைப் பிரகஸ்பதி கூறினர். బృహస్పతిః॥ "త్ర్యహం మాతామహాచార్య శ్రోత్రియేష్వశుచిర్భవేత్" = தாயின்தந்தை, ஆசாரியன் = சபிண்டனுகாது உபநயநமுதலிய கருமமுற்றினேன், சுரோத்திரியன்=ஒருவேத சாகையோதினவன், இன்னும் நண்புடைமை, உபகாரம் முதலியவற்றால் கூடியவனென்போன் இவர்கள் மரணத்தில் மூன்று நாள் சூதகம். எ-று.

விஷ்ணு. విష్ణుః॥ "ఆచార్యమాతామహే చ వ్యతీతే త్రిరాత్రేణ" இதுவுமது.

மனு. మనుః॥ "శ్రోత్రియే తూపసంపన్నే త్రిరాత్రమశుచిర్భవేత్" இதுவுமது.

இம் மூன்றிராத்திரி சூதகம் அன்னியர் தகனம் செய்தவழி. தானே தகனஞ் செய்திருந்தால் பத்துநாள் தீட்டாம். அதனை மனுவிசேட விதியாகக்கூறினர். మనుః॥ "గురోః ప్రేతస్య శిష్యస్తు పితృమేధం సమాచరన్। ప్రేతాహారైస్సమం తత్ర దశరాత్రేణ శుధ్యతి"=குருவுக்கு மாணாக்கன் பிரேத கருமஞ்செய்தால் பத்துநாளிற் சுத்தனுவான். எ-று.

தாயுடன் பிறந்தவர் முதலியோர் விடயத்திலும் மூன்றுநாள் தீட்டு. பிரசேதர். ప్రచేతాః॥ "మాతృష్వసృమాతులయోః శ్వశ్రూశ్వశురయోర్గురోః। మృతే చర్త్విజి యాజ్యే చ త్రిరాత్రేణ విశుధ్యతి"=தாயுடன்பிறந்தவள், அம்மான், பெண்கொடுத்த மாமன், மாமி, குரு, குலபரம்பரையாகவந்த இருத்துவிக்கு, அப்படிப்பட்ட புரோகிதன் இறந்தால் மூன்றுநாள் சூதகம். எ-று.

ஆயின், "గుర్వంతేవాస్యనూచానమాతులశ్రోత్రియేషుచ" என்ற யாஞ்ஞவற்கியமொழியும், "ఆచార్యపుత్రోపాధ్యాయమాతులశ్రోత్రియశ్వశ్రూశ్వశురసహాధ్యాయిశిష్యేష్వేకరాత్రేణ" என்றவிஷ்ணுமொழியும் மேற்கூறியமனு பிரசேதர் மொழிகளுக்கு மாறாக வொருநாளாசூசமென்று கூறுகின்றதேயெனில். அதற்குப் பொருள் இங்ஙனம் கொள்க. குரு = உபாத்தியாயன். அந்தேவாசி= வேறொருவனால் உபநயனஞ் செய்யப்பட்ட மாணாக்கன் இறந்தால் ஒருநாள்தீட்டு. தன்னாலுபநயனஞ் செய்யப்பட்ட மாணாக்கனிறந்தால், "శిష్యసతీర్థసబ్రహ్మచారిషు త్రిరాత్రమహోరాత్రమేకాహమితి"=மூன்றுநாள்தீட்டு. தன்னுடன்கற்றோனிறந்தால் ஒருபகலிரவுதீட்டு. தன்குரவனிடத்துக் கற்றவனிறந்தால் ஒருபகலேதீட்டு. என்றுபோதாயனராற் கூறப்பட்டிருத்தலின். அம்மான், சுரோத்திரியன், பெண் கொடுத்த மாமன், மாமி, உடன்கற்போனிவர்கள்தனக்குபகாரிகளல்லாமலாவது வேறுதேயத்திருப்பவராகவாவது இருந்திறந்தால் ஒருநாளேதீட்டு. உபகாரிகளும், அருகிலுள்ளவருமா யிருந்திறந்தால் மூன்றுநாள்தீட்டு. சிறிதுகாலமே யுடன்கற்றவனா யிருந்திறந்தால் ஒருபகல்தீட்டு. இதுவேமுடிபு.

ஆயின், "మాతులేపక్షిణీంరాత్రింశిష్యర్త్విగ్బాంధవేషుచ" என்றுமனு அம்மான்முதலியோர் விடயத்தில் பக்ஷிணிசூதகங் கூறினரோயெனில்? சிறிதேயுபகாரஞ்செய்த அம்மான், தன்னா லுபநயனஞ்செய்யப்படாவிடினும், தன்பால்வேதமுற்று மோதினவன் குலமுறையே தொடர்ந்தவ னல்லாவிடினும் தனக்கு எல்லாக் கருமங்களிலும் இருத்துவிக்கானவன், தன்றாய்தந்தையர்க்குச் சிறந்தசுற்றமானவர் இவர்விடயத்தில்பக்ஷிணியாசூசமென்று அதற்குப்பொருள் கொள்க.

ஔரசபுரத்தின் = தருமபத்தினி வயிற்றிற்றனக்குப்பிறந்தவன்அல்லாதவர்விடயத்திலும்மூன்றுநாளேதீட்டு; என்றுவிஷ்ணு முதலியோர் கூறினர். విష్ణుః॥ "అనౌరసేషుపుత్రేషు జాతేషుచమృతేషుచ। పరపూర్వాసుభార్యాసు ప్రసూతాసుమృతాసుచ"எம், ஆரிதர். హారీతః॥ "పరపూర్వాసుభార్యాసు పుత్రేషుకృతకేషుచ। మాతామహేత్రిరాత్రంస్యా దేకాహంతుసపిండతా" எம், சங்கர். శంఖః॥ "అనౌరసేషుపుత్రేషు భార్యాస్వన్యగతాసుచ। పరపూర్వాసు చస్వాసు త్రిరాత్రాచ్ఛుద్ధిరిష్యతే" எனவும்வரும் (இவற்றின் பொருள்)

பன்னிருவகைப் புதல்வருள், ஔரசபுத்திரனும் தத்தபுத்திரனு மொழிய க்ஷேத்திரஜன்முதலிய புதல்வர் பிறக்கினு மிறக்கினும் முன்னொருவனால் மணம்புரியப்பட்ட தன்மனைவியும், வியபசாரி யாகிய மனைவியும் மகப்பெற்றாலும் இறந்தாலும், அவர்கள் விஷயத்திலும் மூன்றுநாள் ஆசூசமாம். எ-று.

"అనౌరసేషు పుత్రేషు భార్యాస్వన్యగతాసు చ" = என்று கூறப்பட்டவர்விடயத்தில் ஒருநாள் தீட்டும் சிலமிருதிகளிற் கூறப்பட்டது. அது தன்னெதிரிலன்றி வேறிடத்தில் மரணமடைந்த பக்ஷம். அன்றியும், எதிரிலாயினும் தந்தையின் சபிண்டஞாதியர்க்கு ஒரோநாளென்று கருத்து. என்னை? "ఏకాహస్తు సపిండానాం త్రిరాత్రం యత్రవై పితుః" = தந்தைக்கு மூன்றுதினமானால் சபிண்டஞாதியர்க்கு ஒருநாளென்று மரிசி நிர்மாணித்தனர்.

ஆயின், "అన్యాశ్రితేషు దారేషు పరపత్నీసుతేషు చ। గోత్రిణః స్నానశుద్ధాస్స్యు త్రిరాత్రేణైవతత్పితా" = அந்நியனைப் புணர்ந்த மனைவிவிடயமாயும். பிறன்மனைவியிடத்துப் பிறந்த புதல்வர்விடயமாயும், கோத்திரமுடையார்க்கு நீராடலோடு சுத்தி, அவர்கள் தந்தைக்கு மூன்று நாளிற்சுத்தி.எ-று. நீராடலோடு சுத்தியென்றது சமானோதகரைப் பற்றியது. அல்லது, எதிரில்லாதுவேறு இடத்திலிறந்தவரைப் பற்றியதுமாம்.

ஒருதாயினிடத்துப் பலதந்தையர்க்குப்பிறந்தசகோதரருள் ஒருவனிறந்தால் மற்றொருவனுக்குமூன்றுநாட்சூதகமாம். ஆயின் அவர்வேறுபல கோத்திரமுடையராதல் வேண்டும். பிறந்ததீட்டேலொரோநாளாம் என்றுமரிசி கூறினர். మరీచిః॥ "మాత్రైకయా ద్విపిత్రౌ భ్రాతరావన్యగోత్రజౌ। ఏకాహంసూతకంతత్ర త్రిరాత్రంమృతకేతయోః"= என்றதுகாண்க.

கௌதமர். గౌతమః॥ "పక్షిణీమసపిండయోని సంబంధసహాధ్యాయిని చ" அசபிண்டாஞாதி, தாயுடன்பிறந்தவர்கள்மக்கள்முதலியோர், தன்னோடுவேதமுற்று மோதினவன், குரவன் பன்னிமுதலியோர் தன் மனைக்கு வந்திருந்து இறந்தால் பக்ஷிணியாசூசமாம். எ-று.

முதுமனு. వృద్ధమనుః॥ "మాతులే శ్వశురే మిత్రే గురౌ గుర్వంగనాసు చ। ఆశౌచంపక్షిణీంరాత్రిం మృతామాతామహీయది। శ్వశురయోశ్చభగిన్యాశ్చ మాతులా

స్యాంచమాతులే। పిత్రోస్స్వసరిభర్తృస్వశ్రూశ్వశురోపాధ్యాయమృతేషుచ"=அம்மான், பெண் கொடுத்தமாமன், நண்பன், குரு, குருபன்னியர், உடன்கற்ருேன், தாய்ப்பாட்டி, பெண்கொடுத்தமாமி, உடன்பிறந்தமாதர். அம் மான்மனைவி, நல்லத்தை, தாயுடன் பிறந்தவள் இவர்களெல் லாம் கண்காணுவிடத்தி லிறந்தால் பக்ஷிணிசூதகமாம். எ-று.

ஆயின், "అసపిండేస్వవేశ్మన్యృతేఏకరాత్రం" = சபிண்டஞாதி யல் லாதவர் தன்மனைக்கு வந்திருந்திறந்தா லொரு இரவே தீட்டு என்று விஷ்ணு கூறினுரோ எனில்? அது சிறந்த இல்லிடமில்லாத வன் விடயம்.

ஆயின், "గృహేయస్యమృతఃకశ్చి దసపిండఃకథంచన। తస్యాశౌచంతుకర్తవ్యం త్రిరాత్రంనాత్రసంశయః" = சபிண்டனல்லாதவன் தன்மனை வந் திறந்தால் மூன்றுநா ளாசூசமென்று ஆங்கிரசுகூறினுரோயெனில்! அதுசகோத்திர ஞாதிவிடயமாம்.

ஆயின், "భగిన్యాంసంస్థితాయాంచ భ్రాతర్యపిచసంస్థితే। మిత్రేజామాతరి ప్రేతే దౌహిత్రేభగినీసుతే। స్యాలకేతత్సుతేచైవ సద్యస్స్నానేనశుధ్యతి" = உடன் பிறந்தவள், உடன்பிறந்தவன், நண்பன், மருமகன், மகளுடைய மகன், நன்மருகன், மனைவியுடன்பிறந்த மைத்துனன், அவன் மகன், இவர்களில் யார் மரணமடையினும் அப்போதே நீராட லோடு சுத்தி என்று, பிருகன் மனுகூறினரோ எனில்? உடன் பிறந்தவள் முதலியோர் விடயத்தில் அப்பொழுதேசுத்தி தேசாந் தரமரணத்தைப் பற்றியது. மருமகன், மைத்துனன் மகன் முதலி யோர்விடயத்தில்எதிரிலிறந்தாலும் அப்பொழுதேசுத்தி. (ஈண்டு உடன் பிறந்தவன், என்றது தாரசம்பந்தமுடையன் போலும்).

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యః॥ "దివాసరాజనిప్రేతేదహశ్శుద్ధికారణం" அரசன்பகலிறந்தால் அந்நாட்டின்கணுள்ளா ரனைவர்க்கும் அன் றையபகன்முழுவதும் ஆசூசமாம். இரவேல் அவ்விரவொன்றே யாம். எ-று. மனுவுங்கூறினர். మనుః॥ "ప్రేతేరాజనిసజ్యోతిం యస్యస్యాద్విషయేస్థితః" = அரசனிறந்தால் பகல் சூரியன் காணும்வரையிலும், இரவு உடுக்கள்காணும்வரையிலும்நாட்டின்கணுள்ள குடிகளுக்கு ஆசூசமாம். எ-று.

விருத்தமனு. వృద్ధమనుః॥ "గ్రామమధ్యగతోయావ చ్ఛవస్తిష్ఠతికస్యచిత్। గ్రామస్యతావదాశౌచం నిర్గతే శుచితామియాత్" = கிராமத்துள்பிணமுள்ளவரையில் அங்குள்ளவர்க்கு ஆசூசமாம். எ - று.

இதுவுமது. "గ్రామేశ్వరే కులపతౌ శ్రోత్రియేచతపస్విని। శిష్యేపంచత్వమాపన్నే శుద్ధిర్నక్షత్రదర్శనాత్" = கிராமத்தலைவன், கூட்டத்தலைவன், அந்நியதேயத்துள்ள தவமுடைய சுரோத்திரியன், தன்மாணுக்கன் இறந்தால், உடுக்களைக்கண்ட வுடனேசுத்தி. (கசு)

ஆசூசமில்லாதவர்கள்.

మూ॥ బ్రహ్మచారిగృహేయేషాం హూయతేచహుతాశనః
సంపర్కంచనకుర్వంతి నతేషాంసూతకంభవేత్. ॥౧౮॥

என்னின், ஆசூசத்திற்கெய்தியதுவிலக்குகின்றது.

இ - ள். பிரமசாரியனுக்கும், வேள்வித்தீ மனைக்கண்ணே வைத்திருப்பவனுக்கும், பிறரைத்தொடுதல் செய்யாதவனுக்கும் ஆசூசம் என்றுமுண்டாகாது. எறு.

சூதகமனுட்டிக்கத் தக்கவருள்பிரமசாரி, தனக்கு உபகாரியாயும் நைட்டிகனாயு மிருந்தாலும், வேள்வித் தீக்கருமஞ்செய்வோன் அவ்வனுட்டானஞ் செய்யுங்காலமாயிருந்தாலும், அவர்கள் ஆசூசமுடையவர்களைத் தொடாதிருக்கும் பக்ஷத்தில், அவர்க்குஆசூசமில்லை யென்பதுகருத்து. இதனைக்கூர்ம புராணத்துட் கூறப்பட்டது. కూర్మపురాణే॥ "నైష్ఠికానాంవనస్థానాం యతీనాంబ్రహ్మచారిణాం। నాశౌచంకీర్తితంసద్భిః పతితేచతథామృతే"=எம், தேவலர், దేవలః॥ "నైష్ఠికానాంవనస్థానాంయతీనాంబ్రహ్మచారిణాం। నాశౌచంసూతకేప్రోక్తంశావేచాపితథైవచ" எனவும் வருமிவற்றின் பொருள். நிட்டையுடையவர்களாகிய வானப்பிரத்தருக்கும், துறவிகளுக்கும். பிரமசாரியர்க்கும், பிறந்ததீட்டுமில்லை இறந்ததீட்டுமில்லை. பதிதன் இறந்தாலும் அவ்வாறே ஆசூசமில்லையாம். எறு.

பிரகற்பதி. బృహస్పతిః॥ "స్వాధ్యాయనిరతాయేయత్ర హోమశ్చాభ్యయశారిణః। తేషాంసాయంప్రాతర్ర్ వైశ్వదేవంనతేషాం సూతకంభవేత్" = வேதமோதல், அக்கினிஹோத்திரம், வைசுவதேவமுதலிய கரும அனுட்டானம் இவற்றை யுடையவர்களுக்கு ஆசூசமுண்டாதலில்லை. எ - று. காண்க. (கஎ)

தொடுதலாற்றீட்டு.

మూ॥ సంపర్కాద్దుష్యతే విప్రో జననే మరణే తథా
సంపర్కాచ్చ నివృత్తస్య న పిత్ర్యం నైవ సూతకం. ॥౧౮॥

என்னின், ஆசௌசமென்பது தொடுவதனையுங்கருமவுரிமையையும் விலக்குகின்ற தாமாதலின் அதனையுடையாரைத் தொடுதலும் ஆசௌசத்தினையுண்டு பண்ணுகின்றதென்றுடன் பாட்டெதிர்மறைமுகத்தால் கூறுகின்றது.

இ - ள். பிறந்தாலுமிறந்தாலும் தொட்டால் வேதியனுக்குத்திட்டுக்குற்ற முண்டாம். தொடாதவனுக்குப்பிறந்த தீட்டுமில்லை. இறந்ததிட்டுமில்லை. எ-று. தொட்டாலுண்டு-அந்வயம். தொடாவிடில் இல்லை-வெதிரேகம். இவற்றால் ஆசௌசத்திற்குச் சம்பந்தங்காரணமாம். (கஅ)

சிலர்க்குஒருதலையான உடன்சுத்தி.

మూ॥ శిల్పినః కారుకా వైద్యా దాసీదాసాశ్చ నాపితాః।
రాజానశ్శ్రోత్రియాశ్చైవ సద్యశ్శౌచాః ప్రకీర్తితాః.॥౧౯॥

సవ్రతస్సత్రపూతశ్చ ఆహితాగ్నిశ్చ యో ద్విజః
రాజ్ఞశ్చ సూతకం నాస్తి యస్య చేచ్ఛతి పార్థివః. ॥౨౦॥

ఉద్యతో నిధనే దానే ఆర్తో విప్రో నిమంత్రితః
తథైవ ఋషిభిర్దృష్టం యథాకాలేన శుధ్యతి. ॥౨౧॥

என்பன. சிலர்க்குச் சில காரணத்தால் உடன் சுத்தியுண்டாய்ப்பின்காலம்பெறின்மீட்டுஞ் சூதகம்உண்டாமெனச் சிறப்புவிதிகூறுகின்றன.

இ - ள். "శిల్పినః" = சித்திர மெழுதுவோன் முதலியசிற்பர், "కారుకాః" = மடைத்தொழில் செய்யும்பாசகர் முதலியோர், வைத்தியர், தாசிகள், ஆண் அடிமையர், நாவிதர், அரசர், "శ్రోత్రియాః" "సద్యఃప్రక్షాళికాః" அப்பொழுதே யலம்பிக்கொள்வோர் (எனவே, வேதமந்திரசெபத்தின் மகிமையால் அவ்வப்பொழுதே பாவங்கழித்துக்கொள்வோ ரென்பதுகருத்து.) "సవ్రతః" சாந்திராயணமுதலிய விரதநியமத்தோடு கூடினவன், "సత్రపూతః"

கோசத்திரமுதலிய வேள்விகளின் அதிகாரத்தையடைந்து சுத்த னைவன், இவர்களுக்கும் ஆகிதாக்கினியான இருபிறப்பனுக்கும் தத்தங்கருமத்துள் அப்பொழுதே சுத்தியுண்டாம். அரசனுக்கும் அரசனால் விரும்பப் பட்டவனுக்கும் (எனவேமந்திரி, புரோகித தன்முதலிய சிறந்ததொழிற் சுற்றத்தினர்) ஆசௌசம் இல்லை. "ఉద్యతాస్త్రః, రణే," மரணத்திற்குஏதுவாகிய போர்செய்வதற்கு மேற்கொண்ட உத்தியோக முடையவன், அங்கதானத்திற்குத் தொடங்கினவன், ஆபத்தையடைந்தவன், சிராத்தவுண்டிக்குடன் பட்டவேதியன், இவர்கள் அப்போதைய தொழினிமித்தம் அப் போதே சுத்தத்தினை யடைகின்றார்கள். அந்தச்சுத்தி, பத்துநாள் முதலிய முழுத்தீட்டு நாள்வரையிலு மிருந்து சுத்தமடைந்தா லெப்படியோ அப்படிப்பட்டதெனமுனிவராற் குறிக்கப்பட்டது. ௭௮.

அங்ஙனம் ஆதித்தபுராணம் கூறிற்று. ఆదిత్యపురాణే॥ "శిల్పినశ్చిత్రకారాద్యాః కర్మయత్సాధయన్తివై। తత్కర్మనాన్యోజానాతి తస్మాచ్ఛుద్ధాస్స్వకర్మణి। సూపకారేణయత్కర్మ కరణీయంనరస్యహి। తదన్యోనైవజానాతి తస్మాచ్ఛుద్ధస్ససూపకృత్। చికిత్సకోయత్కురుతే తదన్యేననశక్యతే। తస్మాచ్చికిత్సకస్స్పర్శే శుద్ధోభవతినిత్యశః। దాస్యోదాసాశ్చయత్కించి త్కుర్వన్త్యపిబలీయసా। తదన్యోనక్షమఃకర్తుం తస్మాత్తే శుచయస్సదా। రాజాకరోతియత్కర్మ శ్వస్తదన్యస్యతత్కథం। ఏవంసతినృపశ్శుద్ధ స్సంస్పర్శేమృతసూతకే। యత్కర్మరాజభృత్యానాం హస్త్యశ్వగమనాదికం। తన్నాస్తియస్మాదన్యస్య తస్మాత్తేశుచయస్సదా:" = சிற்பன், சித்திரக்காரன், சமையல் செய்வோன், வைத்தியன், ஏவல்செய்வோர், பணிசெய்வோர், அரசன், அதிகாரி, கருமதவஞ்செய்வோர், துன்பத்துட் பட்ட வர், இவரனைவரும் அவரவர் செய்யத்தக்க தொழிலினை வேறு பிறரால் செய்யலாற்றாமையின் அவரவரே செய்யவேண்டுவதாக விருக்கின்றது. ஆகவே, ஒருதலையான தொழிலின் பொருட்டு அவரவர்க்கு அப்போதப்போதே சுத்தியை யுடன்படவேண்டும். (எனவே, அவர்க்கு ஆசௌசமிருக்கினும் தொழிற்காலத்தி லவ ளைத் தொட்டா லாசௌசகுற்ற மில்லையென்பது கருத்து.

விஷ்ணு. స్మృః॥ "ఆశౌచంనరాజ్ఞాంరాజకర్మణి నవ్రతినాంవ్రతే నసత్రిణాం సత్రేనకారూణాంకారుకర్మణి నరాజాజ్ఞాకారిణాంతదిచ్ఛయా" = அரசனுக்கு இராயபாரமினையில் ஆசௌசமில்லை. விரதமுடையானுக்கு விரத

மனுட்டித்தலில் ஆசூசமில்லை. இவ்வாறே அவரவர்க்கு முரிய தொழிலில் ஆசூசமில்லை. ஏனையவற்றி லாசூசமுண்டென்பது கருத்து. எ-று.

பிரசேதர். ప్రచేతాః॥ "కారవశ్శిల్పినోవైద్యా దాసీదాసాస్తథైవచ। రాజానోరాజభృత్యాశ్చ సద్యశ్శౌచాఃప్రకీర్తితాః" = மேற்கூறப்பட்ட பாகஞ் செய்வோன் முதலியோர்க்கு அப்பொழுதேசுத்தி. எ-று.

முதியபாராசரரும். వృద్ధపరాశరః॥ "రాజ్ఞాంతుసూతకంనాస్తి వ్రతినాంన చసత్రిణాం। దీక్షితానాంచసర్వేషాం యస్యచేచ్ఛతిపార్థివః। తపోదానప్రవృత్తేషు నాశౌచంమృతసూతకే" இதுவுமது.

பலஸ்மிருதி. స్మృత్యంతరే॥ "నిత్యమన్నప్రదస్యాపి కృచ్ఛ్రచాంద్రాయణాదిషు। ప్రవృత్తేకృచ్ఛ్రహోమాదౌ బ్రాహ్మణాదిషుభోజనే। గృహీతనియమస్యాపి నస్యాదన్యస్యకస్యచిత్। నిమన్త్రితేషువిప్రేషు ప్రారబ్ధేశ్రాద్ధకర్మణి। నిమంత్రితస్యవిప్రస్యస్వాధ్యాయనిరతస్యచ। దేహేపితృషుతిష్ఠత్సునాశౌచంవిద్యతేక్వచిత్॥ ప్రాయశ్చిత్తప్రవృత్తానాం దాతృబ్రహ్మవిదాంతథా" = நித்தமும் அந்நதானஞ் செய்வோனுக்கும், சாந்திராயணமுதலிய விரதஞ் செய்வோனுக்கும், ஹோமஞ் செய்துகொண்டிருக்கும் பொழுதும், வேதியர் நடுவுள் புசித்திருக்கும் பொழுதும், விரதநியமத்துள் ளிருக்கும்பொழுதும், சிராத்தபோசனத்திற் குடன்பட் டிருக்கும்பொழுதும், சிராத்த கருமந் தொடங்கி யிருக்கும்பொழுதும், விடாது வேதமோதுவோனுக்கும், மனையில் பிதிர்தேவர் வந்திருக்கும் பொழுதும், பிராயச்சித்தஞ் செய்துகொண் டிருக்கும்பொழுதும், தானஞ் செய்யும்போதும், பிரமஞானிகட்கும், ஆசூசமில்லையாம். எ-று.

மனு. మనుః॥ "నరాజ్ఞామఘదోషోస్తి వ్రతినాంనచసత్రిణాం। ఐంద్రంస్థానముపాసీనా బ్రహ్మభూతాహితేసదా। రాజ్ఞోమాహాత్మికేస్థానే సద్యశ్శౌచంవిధీయతే। ప్రజానాంపరిరక్షార్థమాసనంచాత్రకారణం" = அரசனுக்கு, விரதமுடையோனுக்கு, சத்திரவேள்வி செய்வோனுக்கு, ஆசூசகுற்ற மில்லை. அவர்கள் இந்திரபீடத்தினை உபாசித்து எப்பொழுதும் பிரமமாக விருக்கின்றனர். "ఇది=పరమైశ్వర్యే" = இந்திரன் = பரமேச்சுரன். ஐந்திரத்தானம் = பரமேச்சுரன் ஹமிசசந்நிதி. மன்பதையின்காப்பினுக்கும், பிழைப்புக்கும் அரசன்பீடம் காரணமானது.

அந்தப் பெரியவிடத்தில் ஆசூசம்வந்தால் அப்போதே சுத்தி விதிக்கப்படுகின்றது. எ-று.

யாக்ஞவற்கியர். యాజ్ఞవల్క్యః॥ "ఋత్విజాందీక్షితానాంచ యజ్ఞియం కర్మకుర్వతాం। సత్రివ్రతిబ్రహ్మచారి దాతృబ్రహ్మవిదాంతథా। దానేవివాహేయజ్ఞేచసంగ్రామేదేశవిప్లవే। ఆపద్యపిచకష్టాయాం సద్యశ్శౌచంవిధీయతే" = இருத்துவிக்குகள், வேள்வித்தலைவன், நிஷ்டை நியமத்துள்ளவன், வேள்விக்குரிய பணிசெய்வோர், சத்திரவேள்விசெய்வோர், விரதமுடையோன், பிரமசாரி, வள்ளல், பிரமவேத்தர் = துறவி = யோகி, இவர்க்காசூசமில்லை. (எனவே வினைப்பொருட்டு அப்பொழுதே சுத்தம்) தானம், மணம், வேள்வி, போர், தேயவுபாதி, கஷ்டமான ஆபத்து, இவற்றிலும்அப்பொழுதே சுத்திவிதிக்கப்படுகின்றது. எ-று.

ஹாரிதர். హారీతః॥ "సంగ్రామస్థస్యరాజన్యే వైశ్యస్యధ్యగవాంస్థితః। సత్రిబ్రాహ్మణస్యబ్రహ్మచారిణఏవచ" = வேள்விசெய்துகொண்டிருக்கும் வேதியன், போர்செய்துகொண்டிருக்கு மரசன், ஆனிரை நடுவணிருக்கும் வைசியன், பிரமசாரி, இவர்க்கு ஆசூசம்வந்தாலப்பொழுதே சுத்தியாம். எ-று.

பைட்டீநசி. పైఠీనసిః॥ "వివాహయజ్ఞసర్గేషుయాత్రాయాంతీర్థకర్మణి। నతత్రసూతకంతద్వత్కర్మయజ్ఞాదికారయేత్" = மணவினை, வேள்விவினை, முயற்சிவருத்தவினை, வழிநடை, தீர்த்தவிதி, இவற்றுள் ஆசூசமில்லையாம். செய்துகொண்டிருக்குந் தொழில்தடை புரியாது செய்யலாம். எ-று.

பிரமபுராணம. బ్రహ్మపురాణే॥ "అథదేవప్రతిష్ఠాయాం గణయాగాదికర్మణి। శ్రాద్ధాదౌపిత్రుయజ్ఞేచ కన్యాదానేచనోభవేత్" = தேவப்பிரதிட்டை, கூட்டத்தொழில், வேள்விக்கருமம், தென்புலத்தார் வேள்வி, கன்னியாதானம், நித்தகருமம், இவைசெய்யும்போதும் ஆசூசமில்லையாம். எ-று.

ஆங்கிரசர். అంగిరాః॥ "వివాహోత్సవయజ్ఞేషు త్రిష్వశౌచంనవిద్యతే। యజ్ఞే వాహే చ దేవయాగే తథైవచ' = வேள்வி, மணம், தேவயாகம், இம்மூன்றுவினையிலும் பிறந்ததீட்டும் இறந்ததீட்டுமில்லையாம். எ-று.

மேற்கூறிப்போந்தவற்றுள் மணமுதலியவினைகள் தொடங்கியபின் ஆசூசம்வந்தால் அப்போதேசுத்தி, முன்வருமாயிற்றேழில்தொடங்கலாகாது. அரசர் முதலியோர்க்கு அவர்களேசெய்யத்தக்கசிறந்த கருமங்களில் அப்பொழுதேசுத்தி. ஏனையவினையுள் ஆசூசந்தவருது.

பிரமபுராணம். బ్రహ్మపురాణే॥ "రాజ్యనాశస్తుయేనస్యాద్వినారాజ్ఞాస్వమండలం। ప్రయాస్యతశ్చసంగ్రామే హోమేపార్థానికేసతి। మంత్రాదితర్పణేవాపిప్రజానాంశాంతికర్మణి। గోమంగళాదౌవైశ్యానాం కృషికాలాత్యయేష్వపి। అశౌచంనభవేల్లోకేసర్వత్రాన్యత్రవిద్యతే" = அரசன், விசார முயற்சிவிட்டால் நாடெல்லாங்கெடும். ஆதலால், அரசன்போர்க்குப் புறப்படும்பொழுது செய்யத்தக்க ஹோமத்திலும், நாட்டுக்குடிகளுடைய சுகத்தின்பொருட்டுச் செய்யத்தக்க சாந்திகருமத்திலும், மந்திரபாராயணதருப்பண முதலியவற்றுள்ளும், அரசனுக்கு அப்பொழுதே சுத்தியாம். ஆனிரை, மங்கலப்பண்ட முதலியவற்றினுக்குரிய தொழிலிலும் வேளாண்மையாகிய வுழவுத் தொழிலில் போது அதிகரித்துப்போவதிலும், வைசியனுக்கு ஆசூசமில்லையாம். ஏனையகாலங்களில்உண்டு. எ-று. காண்க. (௨௧)

మూ॥ ప్రసవేగృహమేధీతు సకుర్యాత్సంకరంయది।
దశాహాచ్ఛుధ్యతేమాతాత్వవగాహ్యపితాశుచిః ॥౨౨॥

என்னின், தாய்தந்தையர்க்குப் பிறந்த சூதகமாமாறு கூறுகின்றது.

இ-ள். பிறப்பில் கிரகத்தன் = தந்தைசூதகப் பெண்ணோடு பரிசசம்பந்தஞ் செய்யாவிட்டால் நீராடலாற் சுத்தனாகின்றான். தாய்பத்துநாளோடு சுத்தமுடையளாகின்றாள். எ-று.

మూ॥ సర్వేషాంశావమాశౌచం మాతాపిత్రోస్తుసూతకం
సూతకంమాతురేవస్యాదుపస్పృశ్యపితాశుచిః ॥౨౩॥

என்னின், தந்தைக்குக்கருமத்து உரிமையற்ற விலக்கணமுடைய ஆசூசமுமில்லையாமே யெனின்மேற் கூறுகின்றது.

இ-ள். மரணசூதகம் எல்லார்க்குமுண்டு. சூதகம் தாய்தந்தையர்க்குமாத்திரமேயாம். அவருள்ளும் சூதகமுற்றும்தாய்க்கே. தந்தைநீராடிற் சுத்தனாவான். எ-று.

சபிண்ட ஞாதிய ரனைவர்க்கும் கருமவுரிமையைத் தப்புவிக்கும் ஆசௌசம் எப்படிநிறைந்துள்ளதோ? தந்தைக்கும் அப்படியேயாம். தொடலாகாதென்ற விலக்கணமுடைய தீட்டு தாய் தந்தையர்க்கு மாத்திரமே. அங்கும்பத்துநாள் தொடலாகாதென்னும் முழுத்தீட்டு தாய்க்குமாத்திரமே. நீராடும்வரையில் தந்தையை யொருவரும் தொடலாகாது.

அதனைபைட்டீநசி கூறினர். పైఠీనసిః॥ "జన్మసపిండాస్స్పృశయో మాతాపిత్రోస్తుసూతకం। సూతకంమాతురేవస్యా దుపస్పృశ్యపితాశుచిః" = பிறந்த ஞாதகம் வந்தபோது தாய்தந்தைய ரொழியச் சபிண்டஞாதிய ரனைவரையும் தொடலாம். தாய்தந்தையரைத் தொடலாகாது. ஆயின், நீராடிவிட்டால் தந்தையைத் தொடலாம். பத்துநாள் வரையிற் றாயைத் தொடலாகாது. எ-று.

வசிட்டர். వసిష్ఠః॥ "ఆశౌచంవిద్యతేపుంస స్సంసర్గంచేన్నగచ్ఛతి। రజస్తత్రాశుచిజ్ఞేయం తచ్చపుంసినవిద్యతే" = மகப்பெற்றமாதினைத் தொடாவிட்டால் புருடனுக்கு ஆசௌசமேயில்லை. (எனவே தொடுதலாகாதென்ற ஞாதகமில்லை) அவ்விடத்து அசுத்தத்திற்குக் காரணமாவது, இரஜசு. அது, ஆண்மகனிடத்தில்லையன்றோ. எ-று.

சம்வர்த்தர். సంవర్తః॥ "జాతేపుత్రేపితుస్స్నానం సచేలంతువిధీయతే। మాతుశ్శుద్ధిర్దశాహేన స్నానాత్తుస్పర్శనంపితుః" = மகன்பிறந்தால்தந்தை சசேலஸ்நாநம் செய்யவேண்டும். தாய் பத்துநாளிற் சுத்தமடைவள். நீராடியபின் றந்தையைத் தொடலாம். எ-று.

பிரகற்பதி. బృహస్పతిః॥ "తావాశౌచంతుసర్వేషాం సూతకంమాతురేవచ। స్నానంప్రకుర్యాత్తుపితా జ్ఞాతయోనసచేలినః" = மரணத்திட்டு, யாவர்க்கும் ஒத்தபடியே, பிறந்ததிட்டு தாய்க்குமாத்திரமே. தந்தை யுடுத்த வாடையோடு நீராடவேண்டும். ஞாதியர் செய்யவேண்டுவதில்லை. எ-று.

கௌதமர். గౌతమః॥ "మాతాపిత్రోస్సూతకము పస్పృశ్యపితా" = தாய் தந்தையர்க்கே பிறந்ததிட்டு, நீராடிற் பிதாசுத்தன்.

ஆதித்தியபுராணம். ఆదిత్యపురాణే॥ "సూతకేతుముఖందృష్ట్వాజాతస్య జనకస్తతః। కృత్వాసచేలంస్నానంతు శుద్ధోభవతితత్క్షణాత్" = பிறந்த திட்டில்

தந்தை பிறந்த மைந்தன்முகத்தினைப் பார்த்துக் கட்டிய ஆடையோடுநீராடி அப்பொழுதேசுத்தனாகின்றான். எ-று. காண்க. (௨௩)

மகப்பெற்றவள் சூதகம்.

మూ॥ యదిపత్న్యాంప్రసూతాయాం సంసర్గంకురుతేద్విజః
సూతకంతుభవేత్తస్య యదివిప్రష్షడంగవిత్. ॥౨౪॥

என்னின், சூதகமுடையவளைத் தொடுதலால் உண்டாம் சூதகத்தினைக் கூறுகின்றது.

இ-ள். மகப்பெற்ற மனைவியை இருபிறப்பன்தொட்டால்அவனுக்குப் பிறந்த தீட்டுண்டாம். அவன் ஆறு அங்கமு முணர்ந்தவனாயினும் பிறரால் தொடுகின்ற சுத்தமிலனாவன். (எனவே ஞானம், கருமம் என்னு மிரண்டினாலும் பெரியனாயினும் மகப்பெற்றவளைத் தொட்டால் அவனைப் பிறர் தொடலாகா தென்னின் ஏனையர் செய்தி கூறவேண்டுவ தென்னையுள்ளது).

அங்ஙனம், சுமந்துகூறினர். సుమంతుః॥ "మాతురేవసూతకంతాం స్పృశతశ్చనేతరేషాం" = பிறந்ததீட்டு தாய்க்கேயாம். அவளைத்தொட்டவனுக்குமாம். ஏனையர்க்கு இல்லை. எ-று. காண்க. (௨௪)

మూ॥ సంపర్కాజ్జాయతేదోషో నాన్యోదోషోస్తివైద్విజ
తస్మాత్సర్వప్రయత్నేన సంపర్కంవర్జయేద్బుధః. ॥౨౫॥

என்னின், மகப்பிறந்ததாற் றந்தையைத் தொடலாகாதென்றசூதகம், நீராடியபின் அது அவனுக்கு எவ்வாறில்லையாமெனின் மேற் கூறுகின்றது.

இ-ள். இருபிறப்பனுக்கு மகப்பெற்றவளைத் தொடுதலாற் குற்றமாமன்றி வேறுகுற்றமில்லை யாதலின், அறிந்தவன் எவ்வகைமுயன்றும் தொடாதிருத்தல்வேண்டும். எ-று.

பிறத்தலினால் கருமத்திற்கு உரிமையில்லையென்ற சூதகம் உண்டாகின்றது. அது. அதன்கால வெல்லை கடந்தாலொழிகின்றது. பிறர் தொடக் கூடாதென்ற தீட்டு ஞாதியர்க்கில்லை. நீராடினாற் றந்தைக்கு ஒழிந்தேவிடுகின்றது. ஆயின், மீட்டும் அந்த மாதினைத் தொட்டால் அப்போது தொடலாகாதென்ற

தோஷம் அவனுக்கு உண்டாகின்றது ஆதலின் அறிந்தவன் அவனைத் தொடுதலாகாது. எனவே, ஒன்றாகப் படுத்தல், ஒரேயிடத்திருத்தல், உண்டல், கையாற் பரிசித்தல், நீர்குடித் தல், பாக்கிலை தின்னல் முதலிய தொடர்புகளை யொழித்தல் வேண்டும்.

அதனைப்பிரகற்பதி கூறினர். బృహస్పతిః॥ "యస్తైస్సహసపిండోపి ప్రకుర్యాచ్ఛయనాసనం। బాంధవోవాపరోవాపి సదశాహేనశుధ్యతి" = யார்சபிண்டஞாதியேயாயினும் அவர்களோடு படுத்துறங்கல் முதலியசம்பந்தஞ் செய்யினும், சுற்றத்தானேனும் அன்னியனேனும் அவனும் பத்துநாளானபின்பே சுத்தமடைவன. எ-று.

விஷ்ணு. విష్ణుః॥ "బ్రాహ్మణాదీనామాశౌచే యస్సకృదేవాన్న మశ్నీయాత్తావదేవాశౌచం యావత్తేషామాశౌచవ్యపగమః" = வேதியன் முதலியோருள் யார் சூதகத்தில் ஒருவிசை புசிப்பனோ அவனுக்கு ஆசௌசம் முடியும்வரையில் அவ்வளவு தீட்டு முண்டாயிருக்கும். எனவே, ஆசௌசத்தான் வீட்டில் அன்னியன் புசித்தால் அந்தத் தீட்டு முடியும்வரையி லுண்டவனுக்கும் தீட்டாம். இது, தெரியாதாகவாயினும் மறந்தாயினும் ஒருக்காலுண்ட விஷயம். மனமறிந்து பலதடவையும் புசித்தாலதற்கு இன்னுஞ்சிறந்த சூதகமுண்டாம். எ-று.

அத்திரி. అత్రిః॥ "సంసర్గాజ్జాయతేదోషః పారదేశ్యమృతజన్మని। తద్వర్జనాత్పితా సద్యస్స్నాత్వైవంశుధ్యతి" = தொட்டால் குற்றம்பிறக்கிறது. வெளியிலேபெற்றாலும், அல்லது அங்கியரது ஆயினும், செத்த பிள்ளைபிறந்தாலும், தொடுவதற்கிட னில்லாமையால் அக்குழவியின்பிதாவுக்கும் அப்பொழுதே சுத்தி விதிக்கப் படுகின்றது. எ-று. காண்க. (௨௫)

குறித்துவைத்த திரவியங்களின்சுத்தி.

మూ॥ వివాహోత్సవయజ్ఞేషు త్వంతరామృతసూతకే
పూర్వసంకల్పితంద్రవ్యం దీయమానంనదుష్యతి. ॥௨௬॥

என்னின், ஆசௌசத்துள்ளே குறித்துவைத்த திரவியங்களுக்குச் சுத்தியா மாறுணர்த்துகின்றது.

இ-ள். மணம், திருவிழாக்கோள், வேள்வி இவற்றைத் தொடங்கியபொழுது நடுவேபிறந்ததீட்டாயினு மிறந்ததீட்டாயினுநேர்ந்தால் முன்னேகுறித்து வைத்த திரவியங்கள், தேவர்க்கும், வேதியர்க்குக் கொடுப்பதற்குக் குற்றமுடையவாவனவல்ல. எ-று. திரவியம் = பண்டங்கள்.

"விவாஹம்" என்ற வுபலக்கணத்தால் முன்னுகத்தொடங்கியசௌளம், உபநயநமுதலிய வற்றினையுந் தழுவியது. இனித் திருவிழா வென்பதும் தேவர்திருவிழா, பிரதிட்டை முதலிய வற்றினையும், வேள்வி யென்பதூஉம் சோதிட்டோம முதலிய வற்றினையுந்தழிஇயின.

கிருது. క్రతుః॥ "పూర్వసంకల్పితద్రవ్యం దీయమానం న దుష్యతి"=ஆருசம் வருவதற்குமுன்பே குறித்துவைத்த பொருளினை அவ்வாருசம் வந்தபின்பும் தானஞ்செய்தால் குற்றமில்லை. எ-று.

பக்குவ பதார்த்தங்களின் விடயத்துள் வேறு பாட்டினை மற்ருெருமிருதியுட் கூறப்பட்டது. స్మృత్యంతరే॥ "వివాహోత్సవయజ్ఞాదిష్వంతరా మృతసూతకే। శేషమన్నం పరైర్దేయం దాతౄన్భోక్తౄంశ్చ న స్పృశేత్"= மணம், விழா, வேள்விமுதலியவற்றுள் பிறந்த இறந்ததீட்டுவந்தால் மிகுந்திருந்த அன்னத்தினை அன்னியர் பரிமாறவேண்டுவது. தீட்டினையுடையவன், இடுவாரையும் உண்பாரையும்தொடலாகாது. எ-று.

ஆயின். "ద్రవ్యాణిస్వామిసంబంధా దఘానిశ్వాశుచీనిచ। స్వామినశ్శుద్ధ్యవధ్యం తేవారిణాప్రోక్షితాన్యపి." = பொருளெல்லாம் அவற்றினையுடைய தலைவன் சம்பந்தத்தால் பாவமும் அசுத்தமும் உடையதாயிருக்கின்றன. தலைவனுக்குச்சுத்தம் நேர்ந்தபின் நீரினுற் றெளிப்புண்டலால்சுத்தமாம். என்றுமற்ருெரு மிருதிகூறிற்றேயெனில் அதுமுன் குறித்து வையாத பண்டங்களைக் குறித்தது.

சிலபண்டங்கள் குறித்து வைத்ததே யாயினும் எப்போதைக்கும் அசுத்தமுடைய தாகவே யிருக்கின்றன. அதனைமரீசி கூறினர். మరీచిః॥ "లవణేమధుమాంసేచ పుష్పమూలఫలేషుచ। శాకకాష్ఠతృణేష్వప్సు దధిసర్పిఃపయస్సుచ। తైలౌషధ్యజినేచైవ పక్వాపక్వేస్వయంగ్రహః। పణ్యేషుచైవసర్వేషు

నాశౌచం ప్రసూతకే" — உப்பு, தேன், மது, ஊன், மலர், கிழங்கு பழங்கள், காய் கறி, விறகு, வைக்கோல், நீர், தயிர், நெய் பால் எண்ணெய், ஒடதிகள், தோல், இவைகள்பக்குவமா யிருக்கினும் அபக்குவமாயிருக்கினும் தீட்டினையுடையவன் பொருளாகவிருக்கும் பக்ஷத்தில் பெற்றுக்கொள்ளலாகாது. அந்தப்பண்டம் கடைகளில் உள்ளபக்ஷத்தில், அவற்றிற்குக் கிரய சுத்தியுண்டாவதால் ஆசுசக் குற்றமில்லையாம். (௨௯)

தீட்டினுள் வேறொருதீட்டு.

మూ॥ అంతరా దశాహస్య పునర్మరణజన్మనీ
తావత్స్యాదశుచిర్విప్రో యావత్తత్స్యాదనిర్దశం. ॥౨౮॥

என்னின், பல ஆசுசங்களினது நிமித்தங்கள் ஒரோகாலத்துள் ஒரோவிடத்திற்கூடுமாயின் ஒவ்வொரு நிமித்தத்திற்குநேரு நைமித்திகாசுசத்தினைப் பல்காலுமனுட்டிக்க வேண்டுமோவென்னுமையமகற்றுகின்றது.

இ-ள். பத்துநாளினுள் மறுபடியும்பிறந்த இறந்ததீட்டின், முன்னுண்டாகிய தீட்டின்பத்துநாளுமுடிவாதல்வரையுமே வேதியன் சூதகமுடையவனாவன். எ-று.

ஒருபத்துநாளைய தீட்டினுள் அதனோடொத்த அல்லது குறைந்த தீட்டுக்கு நிமித்தமாகிய பிறப்பிறப்பு நேருமாயின், அங்கு, முன்னிருந்த பத்துநாளையதீட்டு எதுவரையில் ஒழிவாகுமோ வேதியன் அதுவரையிற்றானே அசுத்தனாகி விருக்கலாமொழிய நடுவேவந்தசாக்காடு முதலியவேதுக்களையுடைய பத்துநாள்முதலிய ஆசுசங்களைப்பற்றி அதிகநாளை அனுட்டிக்க வேண்டாவென்பது.

அதனை மனுவுங்கூறினர். మను:॥ "అంతర్దశాహే స్యాతాం చేత్పునర్మరణజన్మనీ। తావత్స్యాదశుచిర్విప్రో యావత్తత్స్యాదనిర్దశం" = இதனுரையுமேலதே. பலதீட்டினுக் கொருமுழுக்கென்ற வுலகவழக்குமது.

யாஞ்ஞவற்கியர். యాజ్ఞవల్క్య:। "అంతరా జన్మమరణే శేషాహోభిర్విశుద్ధ్యతి" பத்துநாணடுவில் சனன மரணத்தீட்டுவரின் அது வரையிற்கழியவேண்டிய நாளோடு சுத்தியாம். எ-று.

விஷ்ணு. విష్ణుః॥ "జననాశౌచమధ్యే యద్యపరం జననం స్యాత్ తత్రపూర్వాశౌచవ్యపగమే శుద్ధిః మరణాశౌచ మధ్యేప్యేవం"= தீட்டினடுவே மற்றொரு தீட்டுவந்தால் முதற்றீட்டோடு மொழிகின்றது. மரணாசௌசத்து மவ்வாறேமரணனடுவில்வந்தபிறந்ததீட்டொழிவதில்லை. மரணாசௌச முதல் அந்தத்தீட்டினுக்குரிய பத்துநாள்வரையுமுள்ளது. எ-று.

அங்ஙனம் அங்கிரசுகூறினர். ఆంగిరాః॥ "సూతకే మృతకం చేత్స్యాన్మృతకే త్వథ సూతకం। తత్రాధికృత్య మృతకం శౌచం కుర్యాన్న సూతకం"=பிறந்ததீட்டில்மரண சூதகம்வரினும், மரணசூதகத்திற் பிறந்த தீட்டுவரினும் மரணசூதகத்தையே தலைமையதாகக்கொண்டு அனுட்டிக்கவேண்டுவது. எ-று.

ஷடுத்திரிமிசன்மதம். షట్త్రింశన్మతే॥ "శావాశౌచే సముత్పన్నే సూతకం తు యదా భవేత్। శావేన శుధ్యతే సూతి ర్న సూతిశ్శావశోధినీ" = செத்த தீட்டில்பிறந்த தீட்டுவந்தால் செத்ததீட்டுமற்றைய பிறந்ததீட்டினைச் சோதிக்கின்றது. எனவேதன்னோடு முடித்துவிடுகின்றது. பிறந்ததீட்டு செத்ததீட்டினை அவ்வாறுமுடியாது. என்றால், பிறந்த தீட்டுதீர்ந்தாலும் செத்ததீட்டுதீராது. என்றபடி. காண்க.

சதுர்விம்சதிமதம். చతుర్వింశతిమతే॥ "మృతజాతకయోర్యోగే యా శుద్ధిస్సా తు కథ్యతే। మృతేన శుధ్యతే జాతం న మృతం జాతకేన తు" = இறந்தபிறந்த சூதகம்சேர்ந்தபோது செத்ததீட்டினோடு பிறந்ததீட்டு மொழியும். பிறந்ததீட்டினோடு செத்ததீட்டுமாத்திரம் ஒழியாது. எ-று.

சிறுதீட்டில்பெருந்தீட்டுவருதல்.

சிறுதீட்டின்னடுவில்பெருந்தீட்டுவந்தால் முதற்றீட்டினோடு பின்றீட்டுக்குச் சுத்தமில்லை யென்று உசனர்கூறினர். ఉశనాః॥ "అల్పాశౌచస్య మధ్యే తు దీర్ఘాశౌచం భవేద్యది। న తు పూర్వేణ శుద్ధిస్స్యాత్ స్వకాలేనైవ శుధ్యతి" = சுருக்கமாகியதீட்டில் பெருத்த தீட்டுவரில் சிறியதால் பெரிதினுக்குச் சுத்தமில்லை. அப்பெரியது தனக்கு விதித்தகால அளவோடுசுத்தியாம். எ-று.

இயமனும். యమః॥ "అఘవృద్ధిమదాశౌచం పశ్చిమేన సమాపయేత్। యథా త్రిరాత్రే ప్రక్రాంతే దశాహం ప్రవిశేద్యది। ఆశౌచం పునరాగచ్ఛేత్ తత్సమాప్య శుధ్యతి"= பாவவிருத்தியுடைய ஆசுசமானதுபெரியதாம். எவ்வாறெனில்?

மூன்றுநாளையதிட்டு ஒழிவதனுள்பத்துநாளையதிட்டுவந்தால்அது பாவ்விருத்தியுடையதாம். அதுவேறாக வந்தாற்போலு மென்றுணர்க. அங்குமுடிவில்வந்த பெரியஆசூசத்தினை அதன்காலவெல்லையாற்றானே முடித்தல்வேண்டும். எனவேமுதலினேர்ந்தசிறிய ஆசூசமுடியுங்கால் இதனையு முடிக்கலாகாது. என்றபடி.

சங்கர். శంఖః॥ "సమానాశౌచసంపాతే ప్రథమేనసమాపయేత్। అసమానం ద్వితీయేన ధర్మరాజవచోయథా" = ஒத்தகாலமுடைய இரண்டு ஆசூசம் நேர்ந்தபோது முதல்நேர்ந்ததோடு இரண்டாவதனுக்கும் முடிவுண்டு. ஒவ்வாதனசேர்ந்த போது இரண்டாவதனோடு முடித்தல் வேண்டும். எனவே, இரண்டாவது பெரிதாயிருந்தால் அதன் காலமுடிந்தபின்னே முடியவேண்டும்என்று இயமன்கூறியபடியே இங்குமுடன் படப்பட்டது. என்றுணர்க.

ஹாரீதர். హారీతః॥ "రాత్రిశేషాశౌచయోస్తు పూర్వాశౌచేనశుధ్యతి। గురుణాలఘుశుద్ధ్యేత్తు నశుధ్యేల్లఘునాగురుః। అహ్నాంచయోగపద్యేతు జ్ఞేయాశుద్ధిర్గరీయసీ" பிணத்தின்றிட்டுநடுவேபிணத்திட்டுவந்தால் முதலாவதோடுசுத்தமாம். ஆனால்பெரிதோடு சிறியதொழிகின்றது. சிறிதோடு பெரிய தொழிவதில்லை. பாவமெல்லாம் ஒன்றுகூடியவழி பெரும்பாவமொழியும் பெருங்காலத்தினையே நோக்கவேண்டும். எ-று.

சிறிது பெரிது என்பன ஒத்தசாதியுடைய ஆசூசங்களின் காலத்தினைப்பற்றி யறியத்தக்கது. வேறுசாதியுடைய ஆசூசங்களை அதன்வடிவானே யறியத்தக்கது.

அதனை ஹாரீதர்கூறினர். హారీతః॥ "మరణోత్పత్తియోగేతు గరీయో మరణంభవేత్" = பிறப்பு இறப்பு இரண்டும்கூடியவழி சாவேபெரிதாம். எ-று.

சிலவிடங்களில் காலத்தாற் சிறிய ஆசூசநடுவேவந்த பெரியவாசூசத்திற்குப் பின்னையவாசூச வொழிவிற்றானே முடிதலுமுண்டு அதனைத்தேவலர் கூறினர். దేవలః॥ "పరతఃపరతోశుద్ధి రఘవృద్ధౌ విధీయతే। స్యాచ్చేత్పంచమాదహ్నః పూర్వేణైవ విశుధ్యతి" = எதிர்கால ஆசூசத்தினுடைய நடுவேதோன்றிய சனனமுதலியவற்றுள் எப்பொழுது அசுத்தவிருத்தியுடையநாள் நீட்டத்திட்டு வருமப்போதுபின்வந்தபிறந்ததிட்டுமுதலியதன்முதற்கொண்டு அசுத்தத்தின்

சுத்தி விதிக்கப்படுகின்றது. ஆயின், அம்முதல்வந்ததீட்டு ஐந்து நாள்கழிந்தபின் தொடர்ந்துவருவதா யிருந்தால் அப்பொழுது முதலாசூசத்தின் காலத்தானே பத்துநாளையதீட்டினுக்கும் சுத்தி விதிக்கப்படுகின்றது. எனவே, நடுவந்ததீட்டுநாள் அதிகத்தினை யுடையதாயினும் முன்வந்ததீட்டு முன்வருநாளில்பாதிக்குமேலா தலையுடையதாயின் முதல்வந்த அந்தச்சூதககாலத்தோடு தானே பின்வந்ததற்குஞ் சுத்த முண்டா மென்பது. உதாரணம். கரு வழுவி விழுந்ததனுலுண்டாகிய ஆறுநாளையதீட்டில் பத்துநாளைய தீட்டுவரின் அவ்வாறுநாள் முடிந்தவுடனே அப்பத்துநாளைய தீட்டும் ஒழிகின்றது. இவ்வாறேபாதி காலத்தினுக்கு மேலாக விருக்கும்விசேட ஆசூசத்தில் பெருங்காலத்தீட்டும் ஒழியுமென் றுணர்க. (இதுமுற்றும்பிறந்த தீட்டினைப்பற்றியது போலும்).

நடுவேவந்த ஆசூசத்திற்குப் பிறிதுவிதியாற் சுத்தியென்ற விடத்து வேறுவிதி கௌதமராலுங் கூறப்பட்டது. గౌతమః॥ "రాత్రిశేషేద్వాభ్యాం ప్రభాతేస్త్రిభిః" = இராத்திரிஎன்றதனுற்பகலிரவென இலக்கணையாற் கொள்ளப்படுகின்றது. ஒருநாள்செல்ல வேண் டியதீட்டில்வேறு ஆசூசம்வந்தால் அப்பொழுதுமுதலாசூசகால முற்றுமொழிந்தபின் இரண்டிராவோடு சுத்தமாம், அவ்வொரு தினத்திலும் இரவினதுநாலாவது யாமத்தில் சூரிய வுதயத்துக்கு முன்வேறு ஆசூசம்வந்தால் மூன்றுநாளோடு சுத்தி. முதலா சூசம் முடியுங்காலத்திலன்று. எ-று.

சங்கலிகிதரும். శంఖలిఖితౌ॥ " అథచేదంతరా మ్రియేత జాయేత వా శేషైరేవదినైశ్శుధ్యేత రాత్రిశేషేద్వాభ్యాం ప్రభాతేస్త్రిభిః" = தீட்டு வந்திருக்கும் போது நடுவில்பிறந்தாலு மிறந்தாலு செல்லவேண்டியநாளோடு சுத்தி. ஒருநாள்நிலுவையில்வந்தால் பின்னிரண்டு நாளோடு. உத யகாலையில்வந்தால் மூன்று நாளோடுசுத்தி. எ-று.

சாதாதபரும். శాతాతపః॥ "రాత్రిశేషేద్వ్యహాచ్ఛుద్ధిర్యామశేషేత్ర్యహాచ్ఛుద్ధిః" = பொருண்மேலையது.

போதாயனர். బోధాయనః॥ "అథయదిదశరాత్రస్సన్నిపాతేయురాద్యం దశరాత్రమాశౌచమానవమాద్దివసాత్" = பத்துநாட் டீட்டு இரண்டில் முதலாசூசத்தின் ஒன்பதுநாள் கழிவதனுள் இரண்டாவது வந்

தால் இரண்டுமொரோ நாளிலொழிகின்றது. ஒன்பதாநாள்முதல் இரண்டாமாசூசம் ஒழியாது. எனவே ஒன்பதாநாள் முடிவதனுள் வந்திருந்தால் இரண்டாவதுதீட்டு முதல்தீட்டினோடு ஒழிகின்ற தென்பதுகருத்து. இவ்விடத்து ஒன்பதாவது என்றது இலக்கணவகைமையால் ஈற்றயல்நாளை யுணர்த்துகின்றது அதனுல் வேந்தன் முதலியோர்க்கும் தீட்டின் முடிவில் வேறு தீட்டுவந்தால் இரண்டுநாள் அதிகம். தீட்டு ஒழியும் தருணத்தில் சூரியஉதயத்துக்குமுன்வந்தால்மூன்றுநாள் அதிகமென்றுணர்க.

தேவலர். देवलः॥ "[illegible] समागच्छति। दश[illegible] द्व्यहाच्छुद्धिः [illegible]। प्रभाते तु त्रिरात्रेण दशरात्रेष्वयं विधिः" இதன்பொருள் மேலையதே ஆயின் பத்தாநாள் என்றது இறுதிநாளென இலக்கணையாகின்றது. பத்துநாள் என்றது பன்னிரண்டு நாள் முதலியவற்றைக் குறிக்கின்றது.

பிணத்தீட்டு இரண்டு சேர்ந்தால் முதலாசூசநிலுவை நாளோடு இரண்டாவதற்கும் முடிவு என்றவிதிக்குச் சிலவிடங்களில் விலக்குவிதியுண்டு. சங்கர். शङ्खः॥ "मातर्यग्रे प्रमीतायामशुद्धौ म्रियते पिता। पितुः शेषेण शुद्धिः स्यान्मातुः कुर्यात्तु पक्षिणीम्"=தாய்முன்னிறந்திருக்கையில் அத்தீட்டினடுவில் தந்தையுமிறந்தால் முதல்தீட்டினோடு இரண்டாந்தீட்டுமுடிவதில்லை. தந்தையிறந்ததிட்டொழிந்தபின்பேசுத்தம்.தந்தையிறந்ததிட்டினுள்தாயிறந்தாலும்இவ்வாறேயாமாயினும் தந்தையாசூத்தினைமுடித்துத்தாய்க்குப்பக்ஷிணிஆசூசமேயிருத்தல் வேண்டும். இவைதம்முள் வேறுபாடு. (௨௭)

பத்துநாளைய தீட்டினொருமருங்கு விலக்கு.

மூ॥ ब्राह्मणार्थे विपन्नानां बन्दिगोग्रहणे तथा
आहवेषु विपन्नानामेकरात्रमशौचकम्. ॥௨௫॥

என்பது. கூறப்பட்ட ஆசூசங்களுக்கு எய்தியது ஒருமருங்கு விலக்குகின்றது.

இ-ள். வேதியரின்பொருட்டு ஆபத்தையடைந்தவன் மரணவிடயத்திலும், சிறைப் பட்டவர்களையும், துன்பத்துள் ளகப்பட்ட பசுவினையும், விடுவிப்பதன்பொருட்டு உயிர் விட்டவன்

விடயத்திலும், போரிலிறந்தவன் விடயத்திலும் சபிண்டஞாதியர்க்கு ஒருநாளே ஆசூசமாம். எ-று.

ஆயின், ஒருநாள்சூதகமேன், மனு அப்பொழுதே சுத்தியென்றுகூறினர். మనుః॥ "డింభాహవహతానాంచ విద్యుతాపార్థివేనచ। గోబ్రాహ్మణస్యచైవార్థే యస్యచేచ్ఛతిభూమిపః"=சிறுமைந்தராலும், போரினாலும், இடியாலும், அரசனாலும், கொல்லப்பட்டவர் விடயத்திலும், பசுப்பொருட்டும், வேதியர்பொருட்டும் இறந்தவர்விடயத்திலும், எவனுக்கு ஆசூசம் ஒழிக்கவேண்டுமென அரசன் விரும்புகின்றானோஅவன்விடயத்திலும் சபிண்டஞாதியர்க்கு அப்பொழுதே சுத்தியாம். என்றதே எனில்? இந்தமொழி எதிரில்லாத விடத்தில் நிகழ்ந்ததைப்பற்றியது. என்றுணர்க. (௨௮)

போர்மரணச் சிறப்பு.

మూ॥ ద్వావిమౌపురుషౌలోకే సూర్యమండలభేదినౌ
పరివ్రాడ్యోగయుక్తశ్చ రణేచాభిముఖోహతః. ॥௨௯॥

என்பது போரிலிறந்தவரின் சபிண்ட ஞாதியர்க்கு ஒருநாளேதீட்டென்ற விசேடத்தால் அப்போர்மரணச் சிறப்பினை ஒன்பதுசெய்யுட்களால் கூறுகின்றார். ஆகலின் இச்செய்யுள் துறவியினெடுத்துக் காட்டினால் அவர்பெறுங்கதியினை யிதுவென்று கூறுகின்றது.

இ-ள். யோகப்பயிற்சியால் கடவுளை யுபாசிக்கும் துறவி காலப்போக்கின்றி சூரியமண்டல மார்க்கத்தினால் பிரமலோகஞ் செல்லும்போது இடையிடையேவாயு, சூரிய, சந்திரமண்டலங்களைமுறையே யூடுருவிசென்றங் கவற்றிற்குமேலே உயர்ந்துள்ள துளைவழியே வெளிப்படு முறைமையினால் மின்னல் முதலியவுடையபுவனங்களில் சஞ்சரித்துக்கொண்டு பிரமவுலகத்தினையடையன். அவ்வாறேபோரில் பகைவனைஎதிர்த்து இறந்தவனும் பிரமவுலகத்தினையடைவன். இவ்விருவகை ஆண்மை மைந்தருஞ் சூரியமண்டலத்தினைப் பிளந்துகொண்டு செல்வோராம். எ-று.

துளைவழி நுழைந்துசெல்லுகை, சுக்கிலஎஜுர்வேதப் பிராமணத்துட் கூறப்பட்டது. వాజసనేయబ్రాహ్మణే॥ "సవాయుమాగచ్ఛతితస్మై స

తత్ర విజిహీతే యథా రథచక్రస్య ఖం తేన స ఊర్ధ్వ మాక్రమతే,స ఆదిత్యమాగచ్ఛతి తస్మై స తత్ర విజిహీతే యథా డుంబరస్య ఖం తేన స ఊర్ధ్వ మాక్రమతే,స చంద్రమసమాగచ్ఛతి తస్మై స తత్ర విజిహీతే యథా దుందుభేః ఖం తేన స ఊర్ధ్వ మాక్రమతే" = அந்தஆன்மா முதலிற்காற்றினுட்புகுவன் அம்மண்டலம் அவனுக்குவழி விடுகின்றது. அவ்வழி, தேர்வண்டிலுட்டுளை போலுமிருக்கும். அவ்வழியாற்புகுந்து வெளிப்படுகின்றான். பின்பவன் சூரியமண்டலம்புகுவன் அங்கவனுக்கு வழிவிடுகின்றது. அது அத்திக்காயினுள்ளேயிருக்கும் துளைபோலும் சிறுதுளையினை யுடையதாயிருக்கும். அவனதனுட்புகுந்துவெளிப்பட்டுச் சந்திரனையடைகின்றான்அவன் அவனுக்குவழிவிட்டுக்கொடுப்பன். அதுபேரிகைவாத்தியத்தினுள்ள துளைபோலுந் துளையுடையதா யிருக்கும், அவன் அவ்வாகாய வழியிற்புகுந்து வெளிப்படுவன். எ-று.

இந்தவேதமொழியால் பூகோளத்திறுக் கருகே வாயுமண்டலமென்றும் அதன்பின் சூரியமண்டல மென்றும் அதன்பின் சந்திரமண்டல மென்றும் கொண் டுணரக்கிடந்தது. இதனை யனுட்டித்து விஷ்ணுபுராணம், பாகவதம், முதலிய நூலுள்ளும் நிலவுலகத்திற்குச் சூரியமண்டலம் அருகுள்ளதென்றும் சந்திரமண்டலம் தூரத்துள்ளதென்றும் கூறுகின்றது. இதனைநோக்குழி எந்தச்சூரியன், எந்தச்சந்திர னென்பதனை யுணர்தலரியா தாகின்றது. சூரியன், சந்திரன், என்ற மொழிகட்கு அந்தந்த இடத்திற்கேற்றபடி வேதவாக்கியத்தினுற்றானே பொருளுணர்த்தப்பட்டுள்ளது. ("సూర్యోవైచక్షుః" சூரியனென்பது விழி. "సూర్యఆత్మా" சூரியனென்பது ஆன்மா "సూర్యోజ్యోతిః"=சூரியனென்பது ஒளி. "సూర్యోగ్నిః"=சூரியனென்பது அக்கினி. "విదాదిత్యః" = சூரியனென்பது அறிவு.) என்றிங்ஙனமாகப் பலபொருளுள்ளன. ("చంద్రమామనసః"=சந்திரனென்பது மனம். "సోమోవై మోదః"= சந்திரனென்பது களிப்பு. "అన్నగ్ంసోమమోషధీనాం" = சந்திரன் என்பது சோறு.) இங்ஙனம் பலபொருளுள்ளன. இவையே யன்றிப் பன்னிரு சூரியரெனவும், இரண்டேசூரியரெனவும், புராணங்களுள்ளுங் கூறப்பட்டுள்ளன. "చంద్రోజలమయోర్కోగ్నిః" = நீர்த் தத்துவஞ் சந்திரன், தீத்தத்துவஞ் சூரியன், என்று யோகநூலுள்ளும் சோதிடநூலுள்ளும் கூறப்பட்டுள்ளன. ஆதித்தன் எனவே அதிதிமகன் என்பது. "ఆదిత్యాజ్జాయతేవృష్టిః" = ஆதித்தனால் மழை தோன்றுகின்றது. என்று மிருதிகள் கூறுதலின் மழைக்குக்காரணமாவதே ஆதித்தமொழிப்பொருளென்று அறியப்படுகின்றது. దివి = ఆహ్లాద్నే—దీప్తౌచ. என்ற மொழியாக்கத்தினால், களிப்பைத்தருவோன், விளங்கு

வோன் சந்திரனென்றவா றுமிற்று. இங்கு உதாரணிக்கப்பட்ட வாஜசநே யச் சுருதியுள் கூறப்பட்ட ஆதித்தசந்திர மொழிகட்கு இவ்விடத்தில் தக்க பொருள் எளி துணரத்தக்கபடி யன்று. அதனுக்குப் பாடியகாரர்கள் வெளிப் படையாக வுள்ள சூரியசந்திரர்களையே பொருளாகக் கூறினர். அங்ஙன மாயின் பெருமுரணுகின்றது. என்னை ? வேதத்தினுக்குப் பொருட்டுணிவு செய்ய வல்ல கருவிகளில் அங்கநூல் சிறந்தனவாமாதலின் அவற்றுள்சூரிய சந்திரர் முதலியகிரக மண்டலநிலைகளை யுணர்த்தவல்லது சோதிநூலாம். அதனுள், காட்சிக்கணுள்ள கிரகணநக்ஷத்திர சமாகமம் முதலியகாலங்களை யுணர்த்தத்தக்க முடிவுபாகங்களே யன்றோ? கூறுவது.அவை, சூரியசித்தாந் தம், பிரமசித்தாந்தம், சோமசித்தாந்தம், வாசிட்டசித்தாந்தம், வியாசசித் தாந்தம். புலத்தியசித்தாந்தம், பார்க்கவசித்தாந்தம், உரோமகசித்தாந்தம் என்பன முதலிய விளக்கமுள்ளன. அவற்றுள், "శాస్త్రమాద్యం తదేవేదం యన్మయాయాహ భాస్కరః"—மயனுக்குச்சூரியன் எதனைக்கூறினரோ அம்முதனூ லேயிதுவென்று பிரமசித்தாந்தங்கூறிற்று. "సారోపనిషదేవాద్య"=உபநிஷத் து எனவேயிரகசியப்பொருளை விளக்குநூல். சூரியசம்பந்தமான உபநிடதமே முதலாவது என்றுசூரிய சித்தாந்தத்தினைச்சாகலிய சங்கிதை, பார்க்கவசங் கிதைமுதலிய அளவைநூல்சிறப்பித்துக் கூறுகின்றன. உலகத்துள்வேள்வி முதலியகருமங்கட்கு வேண்டுவனவாகிய காலநிச்சயங்கள் சூரியசித்தாந் தப்படியே துணியப்படுகின்றது. நேரோமாறுபடுதல் இல்லாமையின் வேறு நூல்களினும் சோதிடசித்தாந்தமே சிறந்தவளவையாக விருக்கின்றது. அத் தகைய சூரிய சித்தாந்தம் கோளாத்தியாயத்தினுள் "మందామరేజ్యభూపుత్ర సూర్యశుక్రేందుజేందవః। పరిభ్రమంత్యధోధస్థాః" = சனியின் கீழ்குரு அவன்கீழ் செவ்வாய், அவன்கீழ்ச் சூரியன், அவன்கீழ்ச் சுக்கிரன், அவன் கீழ் புதன், அவன் கீழ்ச் சந்திரன். அவன்கீழ் பூமியுமாகச் சுழல்கின்றன வென்று கூறப்பட்டுள்ளன. அம்முறையே காட்சியளவைக்கும் ஒத்துவரு கின்றது. அவ்வகையாக நோக்குமிடத்து நிலத்தினுக்குச் சந்திரமண்டலம் அடுத்துள்ளது. சூரியமண்டலம் தூரத்துள்ளது என்றவாறுமிற்று. அங் ஙனமாயின் சந்திரமண்டலத்தின்மேல் சூரியமண்டலமாகலின் யோகியா யிருந்து இறந்த ஆன்மாசந்திர மண்டலம் புகுந்து பின்பு சூரியமண்டலம் புகுமென்று கூறவேண்டிற்று. வேதமொழி அதற்கு மாறுபாடாகக் கூறிற்று. ஆதலின் அங்கி = முதலாகிய வேதத்திற்கும், அங்கம் = உறுப்பாகிய சோதிடநூலுக்கும் உண்டாகிய பொருள் மாறுபாட்டினுக்கு எந்தபாஷியக் காரரும் ஐயமகல வுரைவிரித்தாரில்லை.

சிலபாகங்களொழிய ஏனையபாகங்களெல்லாம் இந்துக்களின் சோதிட முடிவையேஅந்நியராகிய ஆங்கிலேயர் முதலியோருமுடன்பட்டுள்ளனர்.இன் னும்பலமதவாதியர் பலபடக்கூறுவர். இறந்தோருயிர் மேலுலகம் புகுமென்ற விடயத்தினை நம்புவது மிகுந்த விரகசியமானதாயும், அரும்பெருமுயற்சிய

தாயுமுள்ளது. அதனைப் பற்றி விரித்துரைக்கும் சாந்தோக்கிய வுபநிடத முதலிய சுருதிகளும், யோகயாஞ்ஞவற்கிய முதலிய மிருதிகளும், காந்த முதலிய புராணங்களும், பாரதமுதலிய விதிகாசங்களும், மிகுந்த மறைவாயும், சுருக்கமாயும், பொதுவாயும், சிலவிடயங்களினையே யுணர்த்திவிட்டுவிட்டன. அவற்றின்பாடியம் உரைமுதலியவற்றுள்ளும் உணரத்தக்கவர்களுக்குப்போது மானவரையில் திருத்தியாம்படி விடயமெல்லாவற்றினையும் முறையேயெடுத்துக்கூறிற்றில்லை. மேலுலகமென்பது ஒன்று உள்ளது. ஆன்மாவுக்குப்பாவ புண்ணியமுண்டு. தண்டம்காப்புமுள்ளன. கடவுளுண்டு உயிர்க்கிறைவன் மேலுலகம் புகுகின்றான் என்னும் நம்பிக்கையுடைய ஆத்திகமொன்றேநூல்களுக்கெல்லாம் ஆதாரமாயுள்ளது. ஆகலின் அம்முறையினை குருமுகத்தில் ஒருதலையாகவிசாரித் தறிதல்வேண்டும். இதனைப்பற்றி வேறு நூலும் யாமெழுதத் தொடங்கியுள்ளனம். (௨௧)

𑌶𑍍𑌲𑍋॥ 𑌯𑌤𑍍𑌰𑌯𑌤𑍍𑌰𑌹𑌤𑌶𑍍𑌶𑍂𑌰𑌃 𑌶𑌤𑍍𑌰𑍁𑌭𑌿𑌃𑌪𑌰𑌿𑌵𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌃
𑌅𑌕𑍍𑌷𑌯𑌾𑌁𑌲𑍍𑌲𑌭𑌤𑍇 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍𑌯𑌦𑌿𑌕𑍍𑌲𑍀𑌬𑌂 𑌨𑌭𑌾𑌷𑌤𑍇. ॥௩௮॥

என்பது, நெடுங்காலம்பெரு முயற்சியாற்பயின்ற யோகியோடு, போரிலிறந்தவனுக்கு ஒத்த கதியுண்டா மென்பது ஒத்தவாறன்று. போரிலிறப்பது சிறு போதைய சிறுமுயற்சியது என்றால், காலஞ்சிறிதே யாயினும் ஊக்கம்மிகப்பெரி துடைமையதாமாதலின் முயற்சிபெரிதேயென்பதனை யுணர்த்தவேண்டி "𑌰𑌣𑍇𑌽𑌭𑌿𑌮𑍁𑌖𑌹𑌤𑌃" = போரில் எதிர்த்திறந்தவன் என்று மேலையசெய்யுளுட்கூறியிருத்தலின், அக்கருத்தினையிங்குவெளிப்படுத்துகின்றது.

இ-ள். பகைவராற் சூழப்பட்டவீரன் ஆண்டன்மையில்லாதவுரையாடாவிட்டால் அவன் எவ்வெவ்விடத்துக் கொல்லப்படினும் அவ்வவ்விடத்தே அழியாதபுண்ணிய வுலகத்தினைப் பெறுகின்றான். எ-று.

உலகத்துள், ஆயுதங்களைக் கையிற்பிடித்து, வன்செய்கையோடு மேல்விழுந்துவரும்ஒருவனைப்பார்த்தளவேபெரியஉயிரச்சமுண்டாதல் மானுடர்க்குப் பொதுவானசெய்கை. போர்க்களத்துள் பகைவர் படையிலுள்ளார் அனைவரும் படைக்கலங்களைக்கையிற்பிடித்துக்கொல்லுவதற்குமுயற்சித்து ஒருவனைவந்து சூழ்ந்தால் அப்பொழுதவனுக் குண்டாம்அச்சத்தினுக்குஇவ்வளவென்பதொன்றில்லை. ஆகவேயந்த அச்சத்தினையும்மறந்து தன்

பகைவீரனுக்கெதிர்த்துச்செல்லும் வீரதருமமுடைய சூரனுடையவூக்கம் யோகியாற்றலினும் பெரியதேயன்றோ? யோகிக்கு இயமநியம முதலியவற்றுள் ஒவ்வோர்காலத் துயிரச்சமுண்டாதலுமுள்ளவாறேயாம். ஆகவே, நினைவவத்தையினுள்ளே பலவாண்டுகள் அனுபவத்திற்குரிய கருமபோகமொரு முகூர்த்தப்போதளவாயகனவில் எல்லாம் அனுபவித் தொழிந்தாற்போலும் ஓர் அனுபவம் எவ்வாறுலகத்துள்ளதோ அவ்வாறேபலகாலத்திற்குப்பின் கைபெறவல்லயோகியின் ஒப்பு, போரிலூக்கமுடையவனுய்ச் சிறுபோதினுட்டானே பெறவல்லவனுக்கு என்சொல்லலாகாது? ஊக்க மிகுத்துள்ளதனானே, போர்வீரன் யோகியையொப்பான் என்றவொப்புடைமை இங்குகூறக்கருதியது என்பதை யுணர்த்தவேண்டி "యదక్లీబంసభాషతే" = ஆண்டவன்மையில்லாதவுரையாடாவிட்டால் "என்றுகூறப்பட்டது. "క్లీబం"= நபுஞ்சகம்= அது அச்சத்தாலூக்கங்கெட்டிருத்தல். ஆகவே,பகைவன் படைக்கலத்தடி மேற்படும் போதேனும், பட்டவட னேனும், பின்வலிய நோயினாலேனும் பிராணபயத்தினைக் குறித்ததற்குரிய குறிப்பினைக்குறியாவிட்டால் யோகியோடவனுக்கு ஒப்புண்டாம் அத்தகைய அறப்போர்வீரன் பிரமலோகத்தினைச் சேர்ந்தவீரசுவர்க்கமுதலிய அவாந்திரவுலக வேறு பாட்டிற்சாலோக முதலிய புண்ணியபோகத்தானத்தினையடைவன் என்னுங்கருத்தால் அழியாவுலகைப் பெறுவனென்று கூறியபடியன்றி அவனுக்கும் மீட்டும் பிறத்தலொழியாது. யோகிபெறுவது அஃதல்ல. மிகப் பெரியதேயாம்.

யோகியான துறவியுவமையால் இவனும் சூரியமண்டலத்தினைக்கிழித்துச் செல்லுமாமென்று இந்தமிருதி ஒருசாருடன்படுகின்றது.

சூரியமண்டத்தினைக் கிழித்துச் செல்லுகை யென்பது. "సన్యస్తంబ్రాహ్మణందృష్ట్వా స్థానాచ్చలతిభాస్కరః। ఏషమేమండలంభిత్వా పరంస్థానంప్రయాస్యతి" = துறவுபூண்ட அந்தணனைநோக்கி இவன் என்மண்டலத்தினைப் பிளந்துகொண்டு மேலுலகம் புகுகின்றான் என்ற ஐயக்கோளினோடு சூரியன் றன்னிடத்திருந்து நடக்கின்றான் என்பதுமுதலியனவே அளவை யுரையாம். சூரியமண்டல மென்பது

வெம்மையுமொளியுமுள்ள அளவற்றகதிர்களின் கூட்டவடிவமே யன்றோ ? அதனைக் கிழித்துச் செல்லுதலால் சூரியனுக்குநோ யென்னுள்ளது ? ஒன்றுமில்லை. ஆயின் ஐயமென்னெனில் முன் மிகவிழிந்தநிலையிலிருந்தவனிப்போது மிகவுயர்ந்தநிலைக்குச்செல் வதுநோக்குவார்மனத்திற்குச்சிறிதுவேறுபாட்டெண்ணத்தினைத் தருவதற் கேதுவாகின்றது. தேகசம்பந்தமான இக்குற்றம் தேவர் க்குமுள்ளது. அதனுனே, “இவன் என்மண்டலத்தினைப் போழ் ந்து மேலுலகம் புகுமென்ற ஐயக்கோள் சூரியனுக்குக் கூறப் பட்டது.

இக்கருத்தானே வியாசருங்கூறினர். భారత॥ “ క్రియావద్భిర్హి కౌంతేయ దేవలోకస్సమావృతః। నచైతదిష్టం దేవానాం మర్త్యైరుపరివర్తనం ”=குந்தி மைந்த !! அறிதி, கருமசுத்தியுண்டானவராலன்றோ? தேவருலகு சூழப்பட்டுள்ளது. இங்ஙனம்மானுடர் மேல்வந்திருத்தலென்பது தேவர்க்குவிருப்பமான வகையன்று. எ-று. காண்க. (௩௰)

మూ॥ యస్తు భగ్నేషు సైన్యేషు విద్రవత్సు సమంతతః
పరిత్రాతాయదాగచ్ఛేత్సచక్రతుఫలంలభేత్. ॥౩౧॥

என்பது, விடுவிரும்பிய துறவியை நோக்கியவளவானே சூரியனுக்குண்டாகிய நடுக்கத்தினைப்புனைந்துரைத்ததால் யோகிக் குக் கூறப்பட்ட பயனெல்லாம் உண்டாமென்பது வற்புறுத் தப்பட்டது. அவ்வெடுத்துக்காட்டால், உவமிக்கப்பட்ட “ రణాభిముఖోహతః” என்ற போரிலெதிர்த்திறந்தவனுக்கு என்பது உப லக்கணத்தால் சிறந்த ஊக்கத்தின் சிறப்பு கூறுதலின், தானிறவா விடினும் அன்னியரைக்காத்தலின்பொருட்டுச்சென்ற வீரனுக்கு மேற்கூறிய பயனனைத்து முண்டாமென்பது கூறுகின்றது.

இ-ள். சேனைகளெல்லா மொழிந்து விடினும், வேதியனை யுடைய கூட்டம் ஒழிந்துவிடினும், காத்தலின்பொருட்டு யார் பகைமேற் செல்வானே அவனும் வேள்விப் பயனுகர்வன். எ-று.

கிரது வேள்வி. எனில் அசுவமேதத்தினையீண்டு குறித்த வாறு. என்னே? அது பிரமலோகத்தை யடையும் தரத்தினை யுண்டுபண்ணுகின்றது. என்பதனை, வாஜசநேயசாகையில்புஜ்ஜிய

பிராமணத்துட் கூறப்பட்டது. వాజసనేయశాఖాయాం భుజ్యబ్రాహ్మణే॥ "క్వన్నశ్వమేధయాజినోగచ్ఛన్తీతి" = பரிமேதவேள்வி செய்தோன் எங்கு செல்வன் என்பது முதலிய வினு விடையுரைகளால் தெளிவுறக் காணப்படுகின்றது. என்றுணர்க. (௩௧)

மூ॥ యస్యచ్ఛేదక్షతంగాత్రం శరముద్గరయష్టిభిః
దేవకన్యాస్తుతంవీరం హరంతిరమయంతిచ. ॥౩౨॥

என்பது, யார் பிறரைக் காத்தலின்பொருட்டு பகைமேற் செல்வனே அவனுக்கு அங்ஙனம் துணிவுகொண்ட அளவானே பரிமேத வேள்விப் பயனுறுமென்று கூறப்பட்டதன்றே இனிய வனுக்கு மரணம் நேராவிடினும் அவயவங்களிற் பழுதுகாய மாயினும் பட்டால் பயனுட் சிறப்புள்ளதென்று கூறுகின்றது.

இ-ள். அம்புமுதலிய படைக்கலத்தால் யார் உடம்பிற்கு ஊறுபாடுண்டாகின்றதோ? அந்த வீரனைச் சூரமாதர் அழைத்துச்சென்று புணருகின்றனர். எ-று.

గాత్రం = உடம்பு. ఛేదక్షతం = கைகால் முதலிய வுறுப்புக் குறைதலாற் றுன்பமடைவது. (௩௨)

மூ॥ దేవాంగనాసహస్రాణి శూరమాయోధనేహతం
త్వరమాణాఃప్రధావంతి మమభర్తామమేతిచ ॥౩౩॥

என்பது, பிறரைக்காத்தலின் முயன்றுனுக்கு உடம்புஊறு பட்டால் எத்துணைப் பயனே அதனினுமிக்க பயன் இறந்தாலுறு மென்ப துணர்த்துகின்றது.

இ-ள். போரிலிறந்த வீரனைப்பல்லாயிரம்தேவமாதர் இவன் என்கணவன் என்கணவன் என்று விரைந்து ஓடிவருகின்றனர். எ - று. (௩௩)

மூ॥ యంయజ్ఞసంఘైస్తపసాచవిప్రాః
స్వర్గైషిణోవాత్రయథైవయాంతి॥
క్షణేనయాంత్యేవహితత్రవీరాః
ప్రాణాన్సుయుద్ధేషుపరిత్యజంతః. ॥౩౪॥

என்பது, வேள்விக்கூட்ட முதலிய தருமமும், போரிலிறத்தலுமாகியவிரண்டும் ஒரே வகையான பயனுக்கு ஒத்த கருவியாம். ஆயினும் போர்ச்சாவில் சிறுபொழுதினுற்றுனே பயனுதலாக விருப்பது மனத்திற்கு வேறு பாடுண்டாகாமையின் இது சிறந்த கருவியா மென்பதுணர்த்துகின்றது.

இ-ள். வேதியர் பலவேள்வியாலும், தவத்தாலும், சுவர்க்க விருப்பால் எவ்விடஞ்செல்வரோ அந்த விடத்தினுக்கே நல்ல போரில் உயிர் துறந்த வீரரும் கணத்திற் செல்கின்றனர். எ-று.

விப்பிரர் எனவே பயன்விருப்ப மில்லாதவரென்ப தீண்டு கருத்து. அங்ஙனங்கூறின், "స్వర్గకామా" = சுவர்க்கத்தினைவிரும்பினேராகிய என்று இச்சை வேறுபாட்டினை யுணர்த்தும் "వా" என்ற இடைச்சொல் இங்கு தகுதியுறுகின்றது. புண்ணிய வுலகத்துள் எந்தப்புவன விசேடத்தினை யெவ்வாறு தேவமாதராற் சூழப்பட்டவராய்ச் செல்வரோ? தவத்தால் அடையத்தக்க அப்புவனத்தினை யவ்வாறே போரிலிறந்த வீரரும் கணத்திற்பெறுவர், ஈண்டு சிறுபோதிற்றுனே பெறுதலென்பது இவர்களுக்கு வியக்கத்தக்கபயனும். (௩௪)

మూ॥ జితేనలభ్యతేలక్ష్మీర్మృతేనాపిసురాంగనా
క్షణధ్వంసినికాయేఽస్మిన్కాచింతామరణేరణే. ॥౩౫॥

என்பது, காலம் சிறுமையதேனும் பிராணபயத்தினைத் தப்பித்துக்கொள்வது அரியதாமாதலின் போரில் ஊக்கமென்பது அரியவா யிருக்குமேயெனில்? ஆராய்ச்சியுள்ளவனுக்கு அந்த வூக்கம் எளிதிற் பெறப்படுமென்று கருதி யதனைக்குறிக்கின்றது.

இ-ள். வெற்றியடைந்தவனுல் இம்மையிற் செல்வ நுகரப்படுகின்றது. இறந்தவனுல் மறுமையில் தேவமாதர் நுகரப்படுகின்றனர். கணத்திலழியு மிவ்வுடம்பில் மரணமானு லென்னை கவலை. போரானுலென்னை கவலை. எ-று.

జితే = இது கருத்தாப்பொருளில் வந்த பிரத்தியயமுடையது. வெற்றியால் செல்வப்பயனுண்டாம். மரணத்தால் சூரா

மாதரைப் பெறுதலாம். எப்போதேனுந் தானகவொழியு முடம்புபோரி லிறந்தொழிந்தாற் கவலையில்லை. போருக்குச்சென்றவன் தோற்ருலும் வென்ருலும் பயனிருவகையாலு முண்டு. (௩௫)

సూ॥ లలాటదెశెమధిరంస్రవెద్యత్
యద్యాహవెతుప్రవిశెచ్చవక్త్రం
తత్సోమపానెనకిలాస్యతుల్యం
సంగ్రామయజ్ఞెవిధివచ్చదృష్టం. ॥௩௮॥

என்பது, உடம்புநீட்டித்திருக்க வேண்டுமென்னும் விருப்பத்தினல் வீரத்திருவைத் தேடுதலிலாயினும் தேவமாதரைத் தேடுதலிலாயினும் ஆராய்தலுக்கே வராதுசெல்லும். ஆயினும் அவனுக்குக் கிடைக்கத்தக்கதா யிருந்தபயனைவிட்டு ஒழிந்ததே பயனும். உடம்பு நெடுநாள் நில்லாதோ வெனின் அது எவ்வகையானு நெடுங்கால முறுவதல்ல. எவ்வுடம்பி னூழ்வினையாலெவ்வளவாயுள் நுகரத்தக்கதோ அவ்வளவாயுட்கே அவ்வுடம்பு வயப்பட்டொழியும். ஆதலின் உடம்பு கணத்தொழிவதென்று எண்ணுவதன்றி நம்பலாகாது. இங்ஙனமாக, அந்த நிரப்பாசை பயனுடையவல்ல. உதிரத்தைக் குடிப்பது உலகத்துள்மிகவிழிந்தது. போரில்தன்தலை இரத்தம் தன்வாயருகு வந்தால் மிகச்சிறந்த புண்ணியப்பயனகத் திரியும்போது புண்ணியவுலகமுண்டா மென்பது என்னைவியப்பு என்பதனைவிளக்குகின்றது.

இ-ள். போரினை மேற்கொண்டு எந்தமுகஞ் செல்லுகின்றதோ அதன் நெற்றியினின்றும் சோரி நீர் சொரிந்தாலதனைக் குடிப்பது வேள்யில்சோமபான முண்டாற்போலும். இதுபோர் வேள்வியில்விதிப்படி விளக்கப்பட்டது. எ-று.

போரினைவேள்வி யென்றுகூறும் நீதிநூல்முதலியவற்றுள் எதிர் முகத்திற்படும் அடியைப் பொறுப்பது வீரனிலக்கணமென்று சிறப்பிக்கப்பட்டுள்ளதாதலின் இங்குவிதிப்படி யென்று கூறப்பட்டது.

ஒன்பது செய்யுளால் ஆருசவிதியை வற்புறுத்த வேண்டிப் போரிலிறத்தலைச் சிறப்பிக்கப்பட்டது. போரிலிறந்தவன் மிகப்

புண்ணிய முடையவனாதலின் துறவிமாணத் தெப்படியோ அப்படியே நீட்டில்லையென்று கூறியது தக்கது. ஆதலின் இந்த ஒன்பதுசுலோகமும் ஆசுசவிதியுட்டானே வைத்தல்கூடும். அல்லது இவ்வொன்பது செய்யுளினையும் இவ்விடத்தினை விட்டொழித்து அரசதருமத்துட் கூறவேண்டும். போர் அவ்வேந்தன்றருமமாக விருக்கும். இங்ஙனம் ஓரிடத்துள்ளதனைப் பிறிதோரிடத்துவைத்தலாமேயெனில் ஆம். என்னை? வேதத்துள்தரிச பூரணமாச வேள்விகூறியவிடத்துள்ள கைவிலக்க மானமாதினுடையஒழுக்கவகை முதலிய வேள்விச் சம்பந்தமுடைய தல்லவாதலின் அவ்விடத்தினின்றும் விட்டொழித்து புருடார்த்தமாகப்பயன்கூறுமிடத்துச் சேர்த்துக் கூறப்பட்டுள்ளதுபோல இங்குமாம். (௩௬)

திக்கற்றபிணத்தினைச் சுமத்தல்.

శ్లో॥ అనాథం బ్రాహ్మణం ప్రేతం యే వహంతి ద్విజాతయః
పదే పదే యజ్ఞఫల మానుపూర్వ్యా ల్లభంతి తే.
న తేషా మశుభం కించి త్పాపం వా శుభకర్మణాం
జలావగాహనా త్తేషాం సద్యశ్శౌచం విధీయతే. ॥౩౮॥

என்பன, தருமத்தின்பொருட்டு, கருமத்தலைவனற்ற வேதியப்பிணத்தினைச் சுமத்தல்முதலிய உதவிசெய்வதால் அப்பொழுதேசுத்தமுண்டா கின்றனவென்று சிறப்பித்து விதிக்கின்றன.

இ - ள். கருமஞ்செய்வாரின்றி யிறந்தவேதியனை எந்தவிருபிறப்பாளர் சுமக்கின்றனரோ அவர்கள் நடக்கும் ஒவ்வொரு அடிக்கும் ஒவ்வொருவேள்விப் பயனைமுறையே பெறுவர். அப்படிப்பட்டநற்பயனைச் செய்பவருக்கு அமங்கலமாயினும் பாவமாயினும் சிறிதுமுண்டாகாது. அவர்கள் நீராடினாற் போதும். அப்பொழுதே அவர்களுக்குச் சுத்தமாகின்றது. எ-று.

అనాథం — நாதனில்லாவன். எனவே, சுற்றத்தினரோனும் சபிண்ட ஞாதியரோனும் இல்லாதவன். புண்ணியப் பொருட்டு, இறந்தவன்பொருளை விரும்பாது, அப்பிணத்தினை யெந்தவேதியர் சுமப்பரோ? தொடுவரோ? சுடுகின்றாரோ? அவர்கள்நடக்கும் ஒவ்வொரு அடிக்கும்வேள்விப்பயனை முறையே பெறுகின்றனர். அவர்க்கு, அமங்கலம், பாவமுதலியனவில்லை. நீராடலாற்றானேயவர்க்குச் சுத்தமாம்.

அதனை விருத்த பராசரர் கூறினர். వృద్ధపరాశరః॥ "ప్రేతస్పర్శన సంస్కారే బ్రాహ్మణో నైవదుష్యతి। వోఢా చైవాగ్నిదాతా చ సద్యస్స్నాత్వా విశుధ్యతి" இக்கற்றவேதியப் பிணத்தினைத் தொட்டாலும் தகனகருமங்களைச்செய்தாலும் வேதியனுக்குக்குற்றமில்லை. சுமந்தவன், நெருப்பினைக்கொடுத்தவன், நீராடியுடனே சுத்தமடைவர். எ-று.

ஆயின், ஹாரீதர். హారీతః॥ "ప్రేతస్పృశో గ్రామం న ప్రవిశేయురానక్షత్ర దర్శనాద్రాత్రౌ చేదాదిత్యస్య" = பகலிற்பிணத்தினைத் தொட்டவர்கள் உடுக்களைப்பார்க்கும் வரையிலும், இரவிற்றொட்டோர், சூரியனை நோக்கும்வரையிலும் ஊரினுள்வரலாகாது. என்றதும்.

தேவலரும். దేవలః॥ "అహ్నిచేత్స్వహనం కుర్యాదూర్ధ్వమస్తమయాద్ద్రవః। స్నాత్వా గృహం విశేద్విప్రో రాత్రౌ చేదుదయాద్ధ్రువః" = பகலிற்பிணத்தினைச் சுமந்தோர்சூரியன் அத்தமயமானபின்பு நீராடிமனைபுகுக. இரவிற்சுமந்தோர் சூரிய உதயமானபின்பு என்றது மென்னெனில், இவ்விரண்டுமொழியும் நட்புமுதலிய தொடர்பினாற்றாம் செய்யக்கடவதாகிய தொழிலென்று சுமந்தவர்களைப்பற்றியது. என்றுணரத்தக்கது. (௩௭)

வஹநாசூசம்.

మూ॥ అసగోత్రమబంధుంచ ప్రేతీభూతం ద్విజోత్తమం
వహిత్వాచ దహిత్వాచ ప్రాణాయామేన శుధ్యతి. ॥౩౮॥

என்பது. நீராடல் என வெய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது. வஹனம்=சுமத்தல்.

இ-ள். தன் கோத்திரத்துப் பிறந்த சபிண்ட ஞாதியரில்லாமலும் சுற்றத்தினரில்லாமலும் இறந்த உத்தமனான வேதியனைச் சுமந்தாலுஞ் சுட்டாலும் பிராணாயாமஞ் செய்தலாற் சுத்தனாகின்றான். எ-று.

நீராடல் பிராணாயாமஞ்செய்தலவ்வளவேசாலாது தீயைத் தொடுதலும் வேண்டுமென ஆங்கிரசர் கூறினர். అంగిరాః॥ "యదికశ్చిన్నిర్హరేత్ప్రేత మసపిండం కథంచన। స్నాత్వా సచేలం స్పృష్ట్వాగ్నిం తస్మిన్నేవాహ్ని శుచిః;"=தன்னுடைய சபிண்ட ஞாதியல்லாத பிணத்தினை யாரோ

னுஞ் சுமந்தால் அவன் உடுத்த ஆடையோடு நீராடித் தீயினைப் பரிசித்து அப்பகலிற்றானே சுத்தனாமென்றான். எ-று.

நட்பு முதலியவற்றால் பிணத்தினைச் சுமந்த அசபிண்டனுக்கு ஆசூசமுள்ளது என்று மனுகூறினர். మనుః॥ "అసపిండం ద్విజం ప్రేతం విప్రో నిర్హృత్య బంధువత్। విశుధ్యతి త్రిరాత్రేణ మాతురాప్తాంశ్చ బాంధవాన్। యద్యన్నమత్తి తేషాం తు దశాహేనైవ శుధ్యతి। అనదన్నన్నమహ్నైవ నచేత్తస్మిన్గృహే వసేత్" = சபிண்டஞாதியல்லாத வேதியனைச் சுற்றத்தானைப்போல எந்தவேதியனாவது சுமந்தால் மூன்றுநாளிற் சுத்தியடைவன். தாய்க்குச் சுற்றத்தினரையும், ஆத்தரையுஞ்சுமந்தாலு மவ்வாறே அவர்கள் சோற்றினை யுண்பவனாயின் பத்துநாளிற்சுத்தி, உண்ணாவிடின் ஒருநாளிற்சுத்தி. அவர்கள்மனையி லிருக்கலாகாது. எ-று. எனவேயார்பிணத்தைச் சுமந்துவிட்டு அம்மனையிலிருக்கிறானோ அவன் அவர்கள்சோற்றை யுண்ணாவிட்டால் அவனும் மூன்றுநாள்தீட்டு. யார் மனைக்சண்ணு மிருந்து சோறுமுண்பானோ அவனுக்குப்பத்துநாள். யார்பிணத்தினை மாத்திரஞ்சுமந்து அம்மனையினுறைவும் விட்டொழிப்பனோ அவனுக்கு ஒரோபகல்சுத்தம். என்பதுகருத்து. இதுதன்சாதியாரைப்பற்றியது.

அந்நியசாதிப்பிணஞ் சுமத்தல்.

தன்வருணமல்லாத பிணத்தினைச்சுமந்தால் அந்தச்சாதிக்குரிய ஆசூசத்தினை அநுட்டித்தல் வேண்டும் எனக்கௌதமர் கூறினர். గౌతమః॥ "అపరశ్చేద్వర్ణః పూర్వ వర్ణముపస్పృశేత్, పూర్వోవావర్ణోప రంతస్యతదుక్తమాశౌచం" = உத்தமவருணத்தினர்தாழ்ந்தவருணப்பிணத்தினைச் சுமந்தாலும் தாழ்ந்தவருணத்தினர் உத்தமவருணச்சவத்தினைச்சுமந்தாலும் அந்தச்சவத்தின் வருணத்திற்குத்தக்க ஆசூசத்தினை யநுட்டிக்கவேண்டும். எ-று. எனவேவேதியன் சூத்திரப்பிணத்தினைச் சுமந்தால் ஒருதிங்கள் ஆசூசம். சூத்திரன்வேதியபிணத்தினைச்சுமந்தால் பத்துநாள் ஆசூசம். பிறவுமன்ன. இது தயவின் குணவிசேடதருமம்.

பொருளாசை மிகுதியால்வேறு வருணப் பிணத்தினைச் சுமந்தால் மேற்கூறியவற்றிற் கிரண்டத்தனை யாசூசமென்று வியாக்கிரபாதர் கூறினர். వ్యాఘ్రపాదః॥ "ధనరశ్చేచ్ఛ్వవరంవర్ణం వహేద్వాస్య